# மாரநாதா!

## (இயேசு வருகிறார்!)

எழுதியவர்:

எலன் ஜி. ஒயிட்

தமிழாக்கம்:

திருமதி கமலா ஜெகதீசன்

திருமதி கீதா தேவராஜ்

திருமதி ஜெயராணி சுந்தர்சிங்

திரு. அருள் சண்முகநாதன்

பதிப்பாசிரியர்:

பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா

அ.பெ: 2; எஸ். டி. ஏ. தலைமைச் செயலகம்

ஓசூர், தமிழ்நாடு - 635 110.

ராகவி பதிப்பகம்

C-176, கோவிந்தசாமி தெரு, திருநகர்,

மதுரை-625 006, தமிழ்நாடு.

# Details:


Title :Maranatha!
(மாரநாதா! இயேசு வருகிறார்!)

Subject : Second coming of Jesus

Language : Tamil (From English)

Author : Ellen G. White

Edition : First, 5000 copies

Sopnsored By : Ellen, Kavitha, Rajan Joseph

Paper : Size 23*36

Pages : 8+32+736=776

Laser Printing : Raakavi Computers

Type Setting : Mrs. Chithra Somasundaram
Miss V.M. Dhanalakshmi Mohan
Miss K.J. Radha Jothiram

Publishing Editor: Pastor R. Albert Xechariah

Printed at : Vaigai Offset Printers, Madurai.


This book is not for sale;
For free distribution Only.

ஆண்டவர் அருளால்
இந்தப் புத்தகம் உங்களுக்கு
அன்பளிப்பாக வழங்கப்படுகிறது.
தாங்கள் வாசித்தபின், மற்றவர்களும்
வாசிக்கும்படியாகக் கொடுத்து உதவவும்.

## நூலாசிரியரைப்பற்றி...

**அன்புள்ள சகோதர—சகோதரிகளே!**

இந்த நூலானது எலன் ஜி. ஒயிட் அம்மையாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட, “Maranatha" என்ற தொகுப்பு நூலின் நேரடித் தமிழாக்கமாகும். இந்த நூல், அநேக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, உலகமெங்கும் உலவிவருகிறது. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவைகளை நாம் மிகவும் நன்றாக விளங்கிக்கொள்ளத்தக்கதாக உதவிசெய்கிறது. இந்தப் புத்தகத்தை எழுதிய திருமதி எலன் ஜி. ஒயிட் அவர்கள் உலகப் புகழ்பெற்ற 20 பெண் எழுத்தாளர்களிலும் சிறந்தவர் என்று ஒருவர் குறிப்பிடுகிறார்; அது உண்மைதான்; வெறும் புகழ்ச்சியல்ல. அனைத்தையும்விட, இந்த நூலின் ஆசிரியர் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது,

★ இயேசுவிடம் பேசியிருக்கிறார்!

★ தூதர்களிடம் பேசியிருக்கிறார்!

★ பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கிடம் பேசியிருக்கிறார்!

★ பிற உலக மக்களிடமும் பேசியிருக்கிறார்; மேலும்

★ “ஆண்டவர் எனக்குக் காண்பித்தது என்னவென்றால்”

★ “தூதன் எனக்குச் சொன்னார்”

★ “நான் பார்த்துக்கொண்டிருக்கையில்”

★ “நான் கண்டேன்” என்பதாக பல நூற்றுக்கணக்கான பக்கங்களில் குறிப்பிடுகிறார். எந்த பரிசுத்தஆவியானவர் வேதாகமம் வெளிவர உதவினாரோ, அதே ஆவியானவர்தாமே, வேதாகமத்தின் உயரிய செய்திகளை இவரது பல நூல்களின் வாயிலாகவும் வழங்கியிருக்கிறார். இறையருளால் எலன் ஜி. ஒயிட் அம்மையார் அவர்கள் 2000 பரம தரிசனங்களைக் காணுகின்ற பேரருளைப் பெற்றார்கள்; அது மாத்திரமல்ல, தான் கண்ட தரிசனங்களை அவ்வப்போது எழுதியும் வெளியிட்டார்க்ள.

அம்மையார் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 26; விசுவாசிகளுக்கும் உடன் ஊழியர்களுக்கும் சபைத் தலைவர்களுக்குமாக எழுதிய கடிதங்களின் எண்ணிக்கையோ கணக்கிட முடியாதது; ஏராளமானது! மேலும், “ரிவ்யூ அன்ட் ஹெரால்ட்” “சைன்ஸ் ஆப் தி டைம்ஸ்” போன்ற இதழ்களில் சத்தியத்தை

விளக்கிட, அம்மையார் எழுதிய கட்டுரைகளின் எண்ணிக்கை 5000—திற்கும் அதிகம்; அம்மையார் எழுதிய அனைத்தும் பல தொகுதிகளாக—கோடிக்கணக்கில்—பல மொழிகளில் கடந்த 150 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாக ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட எழுத்தாணியாக இருந்தார்கள். அம்மையார் எழுதிய புத்தகங்கள் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடப் புத்தகங்களாக்கப்பட்டு, சபைக்கும் சமுதாயத்திற்கும், வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, நித்தியத்திற்குரிய சத்தியத்தையும் வழங்கிவருகின்றன; விஞ்ஞானிகளுக்கும் அம்மையார் ஒரு விந்தையாக விளங்கினார்கள். மூன்றாவது வகுப்புவரை படித்தவர்கள்தான் என்றாலும், இறையருள் கைவரப்பெற்ற தன்னார்வ உழைப்பினாலும், பன்முகத்திறமையினாலும் இன்முகம் காட்டி, இறைப்பணியாற்றி, பெற்றோர்களுக்கு அன்பான மகளாகவும், கணவருக்கு அருமையான மனைவியாகவும், பிள்ளைகளுக்கு பண்பான தாயாகவும், சமுதாயத்திற்குச் சாட்சியாகவும், சபைக்கு வழிகாட்டியாகவும், ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாகவும் வாழ்ந்து. நித்திரைக்குச் சென்றிருக்கிறார்கள்! ஆவியானவரது ஏவுதலால், அவர் நமக்கு விட்டுச்சென்ற அவரது எழுத்துக்கள் நூல்வடிவம்பெற்று தொடர்ந்து பேசுகிறது—பேசுகிறது—பேசிக்கொண்டேயிருக்கிறது! படிப்போம்! பயன்பெறுவோம்! பண்படுவோம்! பரமனருள் பெற்றிடுவோம்!

**“மாரநாதா” என்றும்**
**இவ்வரிய, மிகச் சிறந்த**
**தொகுப்பு நூலை**
**வெளியிட அருட்கொடையளித்திட்ட**
**அன்பு உள்ளங்கள்**
**என்றும் வாழட்டும் என்று**
**நன்றிகூறி வாழ்த்துகிறோம்!**

★★★

***We Thank***
***The Loving Hearts***
***That Came Together***
***In Supporting To Publish***
***This Precious, Famous Book***
***"Maranatha"***
***Live Forever!.***

## மொழிபெயர்பாளர் பக்கம்:

வெகு சீக்கிரத்தில் 2007–ம் ஆண்டை நெருங்கித் தொட்டு விடுவோம். நமது வாழ்க்கையில் அநேக ஆண்டுகள் உருண்டோடி விட்டன. நமது நிலை என்ன? “அறுப்புக்காலம் சென்றது, கோடைகாலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை”(எரேமியா 8:20) என்ற அங்கலாய்ப்பில் காலத்தை முடிக்கப்போகின்றோமா?

ஆண்டவர் முன்னுரைத்த முடிவுகால சம்பவங்கள் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பஞ்சங்கள், யுத்தங்கள், மகா பூமியதிர்ச்சிகள், கொள்ளை நோய்கள், சீற்றத்தோடு பாய்ந்துவரும் பேரலைகள், கடல் கொந்தளிப்புகள், மோதியடிக்கும் புயல்கள், கொடிய சூறாவளிகள், $50^0$ செல்சியஸ் அளவிற்குச் சென்றுவிட்ட வெப்பநிலை, வெப்பக்காற்று, கொடிய வறட்சி, அடிக்கடி மக்களைச் சீரழிக்கும் வெள்ளங்கள், ஆர்டிக் பகுதியல் பனி உருகிவடிதல், ஓசோனில் ஏற்பட்டுள்ள மாற்றம், செங்குழம்பைச் சீறிக் கக்கிக்கொண்டிருக்கும் எரிமலைகள் ஆகியவை நமக்கு என்ன கூறுகின்றன?

தொற்றுநோய்போன்று பரவிவரும் கொடிய குற்றங்கள், கொலைகள், கொள்ளைகள், ஒழுக்கச் சீர்கேடுகள், இயற்கைக்கு மாறாக மக்கள் மத்தியிலே பரவிவரும் அருவருப்பான பாலுறவுகள், எண்ணிக்கைக்கு அடங்காத விவாகரத்துக்கள், விவாகமின்றி வெட்கமுமின்றி துணிந்து கூடிவாழும் ஆடவர்—பெண்டிர் கூட்டம், உல்லாசமான சிற்றின்ப வாழ்க்கைமீது ஏற்பட்டிருக்கும் பேராவல்கள், மதுவெறி, போதை, களியாட்டங்கள் ஆகியவை நமக்கு என்ன கூறுகின்றன?

பேருந்துகளில், இரயில்களில், கப்பல்களில், விமானங்களில், இரண்டு சக்கர—நான்கு சக்கர வாகனங்களில் நிமிடந்தோறும் நடைபெறுகின்ற கொடிய விபத்துக்கள், உயிர்ச்சேதங்கள், சந்து பொந்துகளில்—சாலைகளில்—உலகின் மாபெரும் நிறுவனங் களில் சர்வசாதாரணமாக நடைபெறும் குண்டுவெடிப்புகள், தற்கொலைப்படைகளின் வெறியாட்டங்கள், தீவிரவாதத்தின் கோரத்தாண்டவங்கள்—ஆகியவை நமக்கு என்ன கூறுகின்றன?

இலட்சக்கணக்கான உயிர்களை பலிவாங்கிக்கொண்டிருக்கும் எய்ட்ஸ் வியாதி, மக்களைக் கலக்கிக்கொண்டிருக்கும் டெங்கு காய்ச்சல், அன்றாடம் தோன்றி வைத்திய நிபுணர்களைத் திணறடிக்கும் புத்தம் புதிய வியாதிகள், நச்சுக்காற்று, சுற்றுச்சூழல்கேடு, வாழ்வதற்கு தகுதியற்ற நிலையில் செத்துக்கொண்டிருக்கும் நரகங்களாகிப்போன நகரங்கள்—ஆகியவை நமக்கு என்ன கூறுகின்றன?

“மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக” என்று வேதாகமத்தில் (2 தீமோத்தேயு 3:1) சொல்லப்பட்டிருக்கின்ற அந்தக் கொடிய காலங்களை நாம் இப்பொழுது கடந்துசென்றுகொண்டிருக்கிறோம்; இனியும் வரவிருக்கும் சம்பவங்கள் எவ்வளவு கொடியவை என்பதை இந்நூல் உங்களுக்கு விளக்கிக் காட்டுகிறது. தவணையின் கால (கிருபையின் கால) முடிவு பற்றியும், ஞாயிறு ஆசரிப்புச் சட்டம்பற்றியும், சாத்தான் இயேசுவைப்போன்று தோற்றங்கொடுத்து. உலகின் பெரும்பாலான மக்களைக் கொடிய வஞ்சகத்தில் ஆழ்த்தப்போவதுபற்றியும், அவன் நடப்பிக்கப்போகும் பொய்யான அற்புதங்கள்—அடையாளங்கள்பற்றியும், அநேகரைக் கவிழ்த்துப்போட்டுக்கொண்டிருக்கின்ற ஆவிமார்க்கம்பற்றியும், தேவனுடைய பிள்ளைகள் கடந்துசெல்லவேண்டியதிருக்கின்ற கொடிய இக்கட்டுக்காலம்பற்றியும், தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அனுபவிக்கப்போகின்ற ஏழு கொடிய வாதைகள் பற்றியும் இந்த நூல் தெளிவாக விவரிக்கின்றது.

இன்றைய தலைமுறைக்கு வேதாகமம் வாசிக்க நேரமில்லை, நல்ல நூல்களைப் படிக்க நேரமில்லை, சாட்சிகூற நேரமில்லை, ஆலயம் செல்ல நேரமில்லை, ஜெபக்கூட்டங்களில் பங்கெடுக்க நேரமில்லை, வியாதிப்பட்டோரைச் சந்திக்க நேரமில்லை, நித்திய வாழ்வுபற்றி சிந்திக்க நேரமில்லை; ஆனால்...

தொ(ல்)லைக்காட்சிப் பெட்டியருகில் மணிக்கணக்காக நேரம் செலவிடமுடியும்; ஆர்ப்பாட்டமான நிகழ்ச்சி நிரல்களைக் கண்டு இரசிக்க நேரமிருக்கிறது, இணையதளத்திற்குச் சென்று பலமணி நேரங்களில் பயனற்ற காரியங்களைப் பேசி, “சாட்டிங்”ல் ஈடுபட ஏராளமான நேரமிருக்கிறது, நண்பர்களோடு ஊர்சுற்ற—அரட்டையடிக்க நேரமிருக்கிறது, செல்போனில் பேசி தங்களது—மற்றவர்களது நேரத்தை பாழடிக்க இருக்கவே இருக்கிறது இரவின் மணி வேளைகள்! கிரிக்கெட் என்றால் சில மணிநேரங்கள் போதாது, சில நாட்களைக்கூடச் செலவிட முடியும்! ... உங்கள் நிலை என்ன

இந்த நூலை வாசிக்கின்ற நீங்கள் சிந்திக்க வேண்டும். நேரமெடுத்து, உயர்வுள்ள இதயத்தோடு அமர்ந்து சிந்திக்க வேண்டும். நீங்கள் பெற்றுக்கொள்ள காத்திருப்பது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா? அது உங்கள் கைகளில்தான் இருக்கிறது! இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம், மௌனமாயிருக்காதீர்கள்!

இவண்,
கிறிஸ்துவுக்குள் அன்பான உங்கள் சகோதரி
—திருமதி கமலா ஜெகதீசன்

## பதிப்பாசிரியர் பக்கம்...

**ஆ**ண்டவரின் பேரருளால் **எலன் ஒயிட் அம்மையாரது** மற்றுமொருநூல் வெளிவந்துள்ளது. ஆண்டவருடைய பிள்ளைகள்: **திருமதி கமலா ஜெகதீசன், திருமதி கீதா தேவராஜ், திருமதி ஜெயராணி சுந்தர்சிங், திரு. அருள் சண்முகநாதன்** ஆகியோர் இந்த நூலை தமிழாக்கஞ்செய்து இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. அனைவருக்கும் எனது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். **திருமதி கமலா ஜெகதீசன்** அவர்களது அருட்பணியால், **எலன் ஒயிட் அம்மையாரது** சில நூல்கள் தமிழாக்கஞ்செய்யப்பட்டு வெளிவந்துள்ளன. ஆண்டவரது சித்தப்படி, ஏற்ற காலத்தில் விசுவாசப்பிள்ளைகள் வழங்கிய அருட்கொடையால் இந்த நூல் அச்சிடப்படமுடிந்தது.

இந்த நூல் சிறப்புடன் வெளியிடப்பட, சிரமங்களைப் பொருட்படுத்தாமல் என்னுடன் நூற்றுக்கணக்கான மணி நேரங்களைச் செலவிட்ட அன்புச் சகோதரிகள்: **பிரிம்ரோஸ் ஆரோக்கியம், ஆலிவ் சடகோபன், செல்வி எஸ்தர், சில்வியா தேவசகாயம், தனலெட்சுமி மோகன், திருமதி சித்திரா சோமசுந்தரம், திருமதி எஸ்தா ஜோசப்,** ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டவர் தமது பேரருளால் அவர்கள் அனைவரையும் அதிகமதிகமாக ஆசீர்வதிப்பாராக.

இந்த நூலின் பெரும் பகுதியை (70%) **திருமதி கமலா ஜெகதீசன்** அவர்கள் தமிழாக்கம் செய்தது மாத்திரமல்ல, இந்த தொகுப்புநூலை **மூல நூலுடன்** (Maranatha) ஒப்பிட்டுநோக்கி, சமன்செய்வதற்காக, நூற்றுக்கணக்கான மணி நேரங்களை அர்ப்பணித்த அவர்களது பணியைப் பாராட்டாமலிருக்கமுடியாது. ஆண்டவர் தாமே அவர்களுக்கு சீரான உடல் நலத்தைத் தந்தருளி, மேலும் பல நூல்கள் சிறப்புடன் வெளிவர கிருபைசெய்வாராக. இந்த ஊழியம் சிறக்கவும் செழிக்கவும் ஜெபத்தின்மூலமாகத் தாங்கி, உங்களது ஆதரவை வழங்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக; வாழ்க நலம் சூழ! ஆமென். —பதிப்பாசிபரியர்.

# MARANATHA!

*Ellen G. White*

*Translated by*

**Mrs. Kamala Jagatheson**

**Mrs. Geetha Devaraj**

**Mrs. Jayarani Sundersingh**

**Mr. Arul Shanmuganathan**

*Publishing Editor*

**Pastor R. Albert Zechariah**

*SDA Head Office, Post Bos: 2, (HBF),*

*Hosur-635 110, Tamil Nadu, Indid.*

Raakavi Publishers

C-176, Govindhasamy Street,

Thirunagar, Madurai-625 006.

Tamilnadu, India.

Ph.: 0452-2484512

கர்த்தருடைய ஊழியக்காரி தீர்க்கதரிசி : எலன் ஜி. ஒயிட்

இளம் வயதில் இறையருளைப் பெற்றதினால்
எண்ணில்லா தரிசனங்கள் கண்டவராம்
வளமில்லாக் குடும்பத்தில் வாழ்ந்திடினும்
வறுமையிலும் செம்மையினைக் கொண்டவராம்!

அருளொளியால் இவர்யாத்த நூல்களெல்லாம்
அவனியில் அணையாத விளக்காய் நின்று
மருளிருளில் மயங்கிவாழும் மக்களுக்கு
மகிமைமிகு ஒளியாக இலங்கிநிற்கும்!

“அம்மையார்” என்று தமிழ் உலகினிலே
அட்வெந்து மக்களாலே அழைக்கப்படும்
செம்மைமிகும் சிறப்புகள் உடையவராம்
சிறப்பான நூல்கள்பல தந்தவராம்!

எத்தனையோ சிறப்புக்கள் உண்டிவர்க்கு
எடுத்துரைத்தல் எளிதல்ல எந்தனுக்கு!
முத்தனைய பெயருக்கு உரியவராம்
மூதாட்டியாய் வாழ்ந்த எலன் ஜி. ஒயிட்!

—பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா

# இயேசு பெருமானின் முதல் வருகை!

**“நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்”**

**—கலாத்தியர் 4:4,5.**

மீட்பரின் வருகை ஏதேனிலே முன்னுரைக்கப்பட்டது. ஆதாமும் ஏவாளும் முதன்முதலாக இந்த வாக்குத்தத்தத்தைக் கேட்டபொழுது, அதின் துரிதமான நிறைவேறுதலை ஆவலோடு எதிர்பார்த்தார்கள். தங்களது முதற்பேறான மகன்தான் வரப்போகின்ற விடுதலை வீரன் என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றார்கள். ஆனால் அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் தாமதித்தது. அந்த வாக்குத்தத்தத்தை முதலாவது பெற்றவர்கள் அதின் நிறைவேறுதலைக் காணாமலேயே மரணமடைந்தார்கள். ஏனோக்கின் நாட்களிலிருந்து முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகள் மூலமாக அவர் வெளிப்படும் நாளைக்குறித்த நம்பிக்கையை உயிரோட்டமானதாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கூறப்பட்டது. எனினும், அவர் வரவில்லை. தானியேல் தீர்க்கதரிசனம் அவரது முதலாம் வருகையின் காலத்தை வெளிப்படுத்தியது. ஆனால் அநேகர் இந்தத் தூதின் சரியான உட்பொருளை விளக்கிக்காட்டவில்லை. ஒவ்வொரு நூற்றாண்டாக கடந்துசென்றது. தீர்க்கதரிசிகளின் குரல்களும் அடங்கிப்போயின. ஒடுக்குகிறவனுடைய கரம் இஸ்ரவேல் மக்களை அழுத்தியது. “நாட்கள் நீடிக்கும், தரிசனம் எல்லாம் அவமாகும்” (எசேக்கியேல் 12:22) என்று அநேகர் வியப்புடன் கூறுவதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள்.

தங்களுக்கு நியமிக்கப்பட்ட மாபெரும் சுற்றுப்பயணத்திலே செல்லுகின்ற நட்சத்திரங்களைப்போன்று, தேவனுடைய நோக்கங்களில் எந்தவித அவசரமோ தாமதமோ கிடையாது. காரிருள் மற்றும் புகைகிற

சூளை ஆகிய அடையாளங்களின் மூலமாக இஸ்ரவேலர் எகிப்திலே அனுபவிக்கப்போகும் அடிமைத்தனத்தைக் குறித்து ஆபிரகாமிற்கு தேவன் வெளிப்படுத்தியிருந்தார். அவர்கள் அந்த இடைப்பட்ட காலத்தில், நானூறு ஆண்டுகள் அங்கே தங்கியிருக்கவேண்டுமென்றும், **“பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்” (ஆதியாகமம் 15:14)** என்றும் உறுதியுடன் கூறியிருந்தார். அந்த வார்த்தைக்கு எதிராக, இறுமாந்திருந்த பார்வோனின் அனைத்து சக்திகளும் ஒருங்கிணைந்து வீணாகப் போரிட்டன. தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி நியமிக்கப்பட்ட, “நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது”–யாத். 12:41. அதைப்போலவே, பரலோக ஆலோசனை மன்றத்திலே கிறிஸ்துவின் முதல் வருகைக்கான வேளை தீர்மானிக்கப்பட்டாயிற்று. காலத்தைக் காட்டும் அந்த மாபெரும் கடிகாரம் அந்த வேளையைச் சுட்டிக்காட்டியபோது, இயேசு பெத்லகேமில் பிறந்தார்.

காலம் நிறைவேறியபோது, தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். விடுதலை வீரரின் வருகையை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளத்தக்கதான பக்குவத்தை அடையும்வரை, இறைவனின் அருள் ஜாதிகளின் எழுச்சிகளையும், மானிட உந்துவேகம் செல்வாக்கின் ஏற்ற —இறக்கங்களையும் சீரமைத்து இயங்கச்செய்தது....

மனிதனிலே அவனைப் படைத்தவரின் சாயலை மீண்டும் புதுப்பிக்கத்தக்கதாக இயேசு வந்தார். பாவத்தினால் கெட்டுச் சீரழிந்துபோன குணநலன்களை கிறிஸ்து மாத்திரமே புதியதாக உருவாக்கமுடியும். சித்தத்தை அடக்கி ஆண்டுகொண்டிருந்த தீய சக்திகளை வெளியேற்ற அவர் வந்தார். குப்பையினின்று நம்மைத் தூக்கியெடுக்கவும், முற்றிலுமாகப் பாழ்பட்டுப்போன குணத்தைத் திருத்தியமைக்கவும், அந்தக் குணத்தை அவரது தெய்வீகக் குணத்தின் மாதிரியைப்போன்று அவரது சொந்த மகிமைக்கேற்ற அழகிலே சீர்படுத்தவும் அவர் வந்தார்! ★

# பெத்லகேம் கற்றுத்தந்த பாடம்!

**“கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்” —எபிரெயர் 9:28.**

கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்திலே, இறைவாக்கைக் காக்கின்ற பொறுப்பைப் பெற்றிருந்த பரிசுத்த பட்டணத்தின் ஆசாரியர்களும் வேதபாரகர்களும், காலங்களின் அடையாளங்களைத் தெளிவாகக் கண்டுணர்ந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரின் வருகையை கூறி அறிவித்திருந்திருக்கலாம். மீகாவின் தீர்க்கதரிசனம், இயேசு பிறக்கப் போகும் இடத்தையும், தானியேலின் தீர்க்கதரிசனம் அவரது முதலாம் வருகையின் காலத்தையும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தது. தேவன் இந்த தீர்க்கதரிசனங்களை யூத அதிகாரிகளுக்குக் கொடுத்திருந்தார். எனவே, மேசியாவின் வருகை வெகுசீக்கிரத்தில் இருக்கின்றது என்ற செய்தியை அறியாமலும், மக்களுக்கு அறிவிக்காமலும் இருந்திருந்தால், அதற்காக போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை. அலட்சியப்படுத்திய பாவமே அவர்களுடைய அறியாமைக்குக் காரணம்....

உலக இரட்சகரை முதன்முதலாக வரவேற்பவர்களின் கூட்டத்தில், தாங்கள் காணப்படவேண்டுமென்று அனைத்து மக்களும் விழிப்புடன் காத்துக்கொண்டிருந்திருக்கவேண்டும். ஆனால், அந்தோ, பரிதாபம்! நாசரேத்தின் மலைப்பாங்கான இடத்திலிருந்து வந்த, களைத்திருந்த அந்த இரு பயணிகளும் பெத்லகேமின் அந்த ஒடுக்கமான தெரு முழுவதும், குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்து, அந்த நகரின் கிழக்கு எல்லைவரை சென்று, இரவில் இளைப்பாறவும் தங்குவதற்கும் ஒரு பாதுகாப்பான இடத்தைத்தேடி, பயனின்றி வீணாக அலைந்துகொண்டிருந்தார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ள எந்தக் கதவும் திறந்திருக்கவில்லை. இறுதியில் ஆடுமாடுகளுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த—இழிவான

நிலையிலிருந்த—ஒரு தொழுவத்திலே புகலிடம் கண்டனர். அங்கேதான் உலக இரட்சகர் பிறந்தார்...!

கிறிஸ்து எதிர்பார்க்கப்படுகிறார் என்பதற்கான எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. ஜீவாதிபதியை வரவேற்க எந்த ஆயத்தமும் செய்யப்படவில்லை. வியப்பில் ஆழ்ந்தவராக இந்த வெட்கந்தரும் செய்தியோடு தூதன் பரலோகத்திற்கு திரும்பிச்செல்லுவதற்கு இருந்தான். அப்போது இரவிலே மந்தையை விழிப்போடு காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களின் குழாம் ஒன்றைக் கண்டான். இந்த மேய்ப்பர்கள், நட்சத்திரங்கள் மின்னுகின்ற வானத்தை பார்த்தபோது, பூமிக்கு வரவிருக்கின்ற மேசியாவைக்குறித்த தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொண்டவர்களாக, உலக மீட்பரின் வருகைக்காக ஏக்கத்தோடு இருந்ததைக் கண்டான். இங்கு ஒரு கூட்டம் பரலோகத்தின் தூதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது. அவர்கள் எதிர்பாராத நிலையில், மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் நற்செய்தியை அறிவித்தவனாக கர்த்தரின் தூதன் அவர்கள் நடுவே திடீரென்று தோன்றினான்....

ஆ! பெத்லகேமின் இந்த அற்புதமான வரலாற்றில், எத்தகைய பாடம் நமக்கு இருக்கின்றது! நமது அவிசுவாசத்தையும், பெருமையையும் சுயத்தின்மீது நாம் வைத்திருக்கும் மட்டில்லாத நம்பிக்கையையும், எத்தகையவிதத்தில் இப்பாடம் கண்டனம் செய்கிறது! ஓ என்ன அற்புதமான படிப்பினையை பெத்லகேமின் பாடம் கொண்டிருக்கிறது! நம்முடைய குற்ற இயல்புள்ள அக்கறையற்ற தன்மையினால், காலங்களின் அடையாளங்களைத் தெளிவாகக் கண்டறிந்துகொள்ள தவறி, அதினால் நம்மைச் சந்திக்கப்போகும் நாளை நாம் அறியாதவர்களாக இருந்துவிடாமல் விழிப்பாக இருக்கும்படி அது நம்மை எச்சரிக்கின்றது! ★

# இயேசு பெருமான் குழந்தையாகப் பிறந்தபொழுது...!

**"பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? ... என்றார்கள்" —மத்தேயு 2:1,2.**

மகிமையின் இராஜா மானிடனாவதற்காக, மிகவும் மதிப்பற்ற நிலைக்குத் தம்மைத் தாழ்த்தினார். பரலோக சேனை அனைத்தாலும் தொழப்படும்போது அவருடைய மாட்சிமையையும் மேன்மையையும் ஏற்கெனவே பரலோக மன்றங்களில் கண்டிருந்த தூதர்கள், மிகவும் அவலமான தாழ்நிலையில் தங்களது தெய்வீகத் தளபதியைக் கண்டபோது, ஏமாற்றமடைந்தார்கள்.

யூதர்கள் தங்களது துன்மார்க்கமான செயல்களினால் தேவனைவிட்டுப் பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டபடியினால், இரட்சகர் பாலகனாக வருகைதரப்போகும் செய்திகளை, தூதர்களால் அவர்களுக்கு அறிவிக்கமுடியாமற்போய்விட்டது. தேவன் தம்முடைய சித்தத்தைச் செயல்படுத்தத்தக்கதாக, கிழக்கிலுள்ள ஞானிகளைத் தெரிந்துகொண்டார்.

தாழ்மையான மேய்ப்பர்களுக்கு, கிறிஸ்துவின் வருகையைக் கூறியறிவித்த பரலோக சேனையைச் சூழ்ந்திருந்த வெளிச்சத்தினால் வானங்கள் ஒளிர்வதை ஞானிகள் கண்டார்கள்...

வெகுதூரத்தில் காணப்பட்ட—சுடரொளியாகப் பிரகாசித்த தூதர்களின் குழு, ஒரு ஒளிர்கின்ற நட்சத்திரம்போல் தோன்றியது. தாங்கள் இதற்குமுன் என்றும் கண்டிராத—வானங்களிலே ஓர் அடையாளம்போன்று தொங்கிக்கொண்டிருந்த—வழக்கத்திற்கு மாறாகத் தோற்றமளித்த—

அம்மாபெரும் பிரகாசமான நட்சத்திரம் அவர்களது கவனத்தை ஈர்த்தது... அந்த நட்சத்திரம் அவர்களை எங்கு வழிநடத்திச்செல்வதுபோலத் தோன்றிதோ, அந்த வழியிலே அந்த ஞானிகள் பயணித்தார்கள். எருசலேம் பட்டணத்தை அவர்கள் நெருங்கியபோது, அந்த நட்சத்திரம் இருளினால் மறைக்கப்பட்டுப்போனதால், அதன்பின்னர் அவர்களை வழிநடத்தவில்லை. மேசியாவின் வருகையான மாபெரும் சம்பவத்தைப்பற்றி, யூதர்கள் நிச்சயம் அறிந்திருக்கவேண்டுமென்ற முடிவிற்கு வந்து, எருசலேமின் சுற்றுப்புறங்களில் அவர்கள் அதைக்குறித்து விசாரித்தனர்.

மேசியாவின் வருகையைக்குறித்த காரியத்தில், வழக்கத்திற்கு மாறாக, எவ்விதமான ஆர்வமும் அங்கு காணப்படாததால், அதைக்குறித்து ஞானிகள் ஆச்சரியமடைகிறார்கள்.... கிறிஸ்துவின் வருகைபற்றிய இம்மாபெரும் சம்பவத்தின் வாய்ப்பு நலன்களைக் குறித்து, யூதர்கள் எவ்விதமான அக்கறையும் மகிழ்ச்சியுமின்றி இருப்பதைப்பார்த்து ஞானிகள் வியந்தனர்.

நமது காலத்திலுள்ள சபைகள் உலகப்பிரகாரமான செல்வாக்கை நாடித்தேடிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் முதலாம் வருகைக்குரிய காரியங்களில் யூதர்கள் எப்படியிருந்தனரோ அதே போன்று இப்பொழுது கிறிஸ்து சீக்கிரம் மறுபடியும் வரப்போகிறார் என்பதைக் காட்டுகின்ற தீர்க்கதரிசனங்களின் வெளிச்சத்தைக் காணவும், அவைகள் நிறைவேறியதற்கான ஆதாரங்களை ஏற்றுக்கொள்ளவும் மனதில்லாதிருக்கிறார்கள். எருசலேமிலே மேசியாவின் உலகியல் சார்ந்த வெற்றிவாகை சூடுகின்ற ஆளுகையை யூதர்கள் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். இக்காலத்திலிருக்கிற கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் சபையின் உலகப்பிரகாரமான வாய்ப்புவளங்களையும், இவ்வுலகின் மனந்திரும்புதலையும், இந்த உலகம் சார்ந்த ஆயிரம் ஆண்டுகளின் சந்தோஷத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

★

# இயேசுவின் இரண்டாம் வருகைபற்றிய நம்பிக்கை!

**“இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” – வெளிப்படுத்தல் 22:20.**

யுகங்கள் நெடுகிலும், ஆண்டவரின் இரண்டாம் வருகை அவரது உண்மையான பின்னடியார்களின் நம்பிக்கையாக இருந்தது. ஒலிவமலையிலே தம் சீடர்களைப் பிரிந்து பரமேறிச் செல்லும்போது, “மீண்டும் வருவேன்” என்ற இரட்சகரின் வாக்குத்தத்தம், சீடர்களின் எதிர்காலத்தைப் பொலிவுறச் செய்தது. துக்கம் தணித்துப்போடாதபடிக்கும், உபத்திரவங்கள் மங்கச்செய்துவிடாதபடிக்கும் அது அவர்களின் இதயங்களை மகிழ்ச்சியினாலும், நம்பிக்கையினாலும் நிறைத்தது. துன்பங்களுக்கும் உபத்திரவங்களுக்கும் மத்தியிலும், **“மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய”** பிரசன்னமாகுதலே அவர்களது பாக்கியமான நம்பிக்கையாக இருந்தது. ஆண்டவரின் வருகையைக் காண்போம் என்ற நம்பிக்கையிலிருந்த தெசலோனிக்கேயா பட்டணத்துக் கிறிஸ்தவர்கள், மரித்துப்போன தங்கள் பிரியமானவர்களைப் புதைக்கும்போது துக்கத்தால் நிறைந்தனர். அவர்களுடைய போதகரான பவுலார், மீட்பரின் இரண்டாம் வருகையிலே, நடைபெறப்போகும் உயிர்த்தெழுதலை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். **“அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள்**

**ஒருவரையொருவர் தேற்றுங்கள்”** (1 தெசலோனிக்கேயர் 4:16 –18) என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாதாளச் சிறையினின்றும், தூக்குமேடையிலும், கட்டிவைத்து எரிக்கப்படுகின்ற நிலையிலும் பரிசுத்தவான்கள், இரத்தசாட்சிகள் ஆகியோர் சத்தியத்திற்காகச் சாட்சிபகர்ந்தனர். இவ்வாறு, நூற்றாண்டுகள் நெடுகிலும் இத்தகையோரது விசுவாசம், நம்பிக்கை ஆகியவைகளைப்பற்றிய கூற்றுகளை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். **“அவரது தனிப்பட்ட உயிர்த்தெழுதலிலும், அதின் பயனான, அவரது வருகயையின்போது, அவர்கள் பெறப்போகிற தங்களுடைய உயிர்த்தெழுதலைக்குறித்தும் , உறுதி பெற்றவர்களாக மரணத்தைத் துச்சமாக எண்ணி, அதற்கும் மேற்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள்” —டேனியல் டி. டெய்லர்.** பூமியின்மீது கிறிஸ்துவின் ஆளுகை அல்லது யுகங்கள் அனைத்திலும் சபையின் குரல், பக்கம் 33. **“விடுதலைபெற்று உயிர்த்தெழத்தக்கதாக அவர்கள் கல்லறைக்குச் செல்ல விருப்பத்தோடு இருந்தார்கள்.” “நீதிமான்களுக்கு இராஜ்யத்தின் காலங்களை அறிவிக்கத்தக்கதாக”—“வானத்தின் மேகங்களிலே ஆண்டவர் தமது பிதாவின் மகிமையோடு வருவதைக்காண”** அவர்கள் வாஞ்சையோடிருந்தார்கள். வால்டென்சியர்களும் இதே விசுவாசத்தை நெஞ்சாரப்பேணி வளர்த்திருந்தனர். சபையின் நம்பிக்கையாக மீட்பரின் வருகையை விக்ளிப் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

கரடுமுரடான குன்றுகள் நிறைந்த பத்மு தீவிலே, அன்பான சீடன் என்றழைக்கப்பட்ட யோவான் **“மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்” என்ற வாக்குத்தத்தத்தைக் கேட்கிறான். அவனது ஏக்கம் நிறைந்த, “ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்”** (வெளிப்படுத்தல் 22:20) என்ற பதில், இப்பூவுலக யாத்திரைக்காலம் முழுவதும் சபையினால் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தைப் பிரதிபலிக்கிறது. ★

# வேத வாக்கியங்களின் அடிப்படைத் தத்துவம்!

**“என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்” —யோபு 19:25.**

அதிக பக்திவிநயமான, எனினும் மிகவும் மகிமையான சத்தியங்களுக்குள், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மாபெரும் மீட்பின் ஊழியத்தை நிறைவுசெய்கின்ற கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எனப்படும் சத்தியமும் ஒன்றாகும். பரலோகப் பயணத்தில் ஈடுபட்டுள்ள தேவனுடைய மக்கள் மரண நிழலின் பகுதியிலே நீண்டகாலம் தங்கியிருக்கும்படி விடப்பட்டார்கள். **“புறம்பே தள்ளப்பட்ட அவரது மக்களை மீண்டும் வீட்டிற்குக் கொண்டுவரத்தக்கதாக,” “உயிர்த்தெழுலும் ஜீவனுமாயிருக்கிற”** அவரது வருகையைப்பற்றிய வாக்குத்தத்தத்தில், அவர்களுக்கு ஒரு அருமையான மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வருகையே பரிசுத்த வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள உறுதியான— அடிப்படையான மூல உபதேசமாகும். அந்த முதல் தம்பதிகள் துக்கம் நிறைந்தவர்களாக ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேறிய அந்த நாளிலிருந்து, அழிப்பவனது (சாத்தான்) வல்லமையை உடைத்து, இழந்துபோன பரலோகத்திற்கு மீண்டும் அவர்களை கொண்டுவரப்போகிற வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவரின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்... ஏதேனில் வாழ்ந்திருந்தவர்களின் சந்ததியில், ஏழாம் தலைமுறையில் வந்த ஏனோக்கு தேவனோடு முன்னூறு ஆண்டுகள் சஞ்சரித்தான். அந்த விடுதலை வீரரின் (இயேசுவின்) வருகையைக் கண்ட ஏனோக்கு வெகுகாலத்துக்கு முன்னரே: **“இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், ... ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்”** என்று அறிவித்தான். நமது முற்பிதாவான யோபு, அவரது துயரமிகுந்த இருண்ட நாட்களிலே, அசைக்கமுடியாத நம்பிக்கையோடு: **“என் மீட்பர் உயிரோடிருக்கிறார்**

**என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்" (யோபு 19:25–27)** என்று கூறினான்.

அனைத்து கிருபைக்கும் தேவனானவர், நித்திய காரியங்களை விளங்கிக்கொள்ளத்தக்கதாக அறிவைத் தெளிவுபடுத்துவாராக. உங்களிடமுள்ள பல தவறுகள், அவைகள் காணப்படுகிற அதே நிலையிலேயே, சத்திய வெளிச்சத்தைக்கொண்டு உங்களுக்காக கண்டுபிடிக்கப்படவேண்டும். நித்திய வாழ்வை அளிக்கும் அந்த விலையேறப்பெற்ற—பயனைக் கொடுக்கக்கூடிய—கசப்பான கனியின் மூலம், இடம்பெற்றிருந்த தீமையை வெளியேற்றத் தேவையான முயற்சி எடுக்கப்படவேண்டும்.

இரங்கத்தக்க நிலையிலுள்ள, பெருமையான, சுயநீதியுள்ள உங்கள் இதயத்தை தேவனுக்குமுன்பாக தாழ்மைப்படுத்துங்கள். உங்களது பாவம் நிறைந்த நிலையில், முற்றிலும் நொறுங்கிப்போனவர்களாக, அவருடைய பாதத்தில் உங்களைத் தாழ்த்துங்கள். மிகவும் அதிகமாகத் தாழ்த்துங்கள். உங்களை ஆயத்தமாக்கும் பணியில் ஈடுபடுங்கள். என் மீட்பர் உயிரோடிருக்கிறார். அவர் உயிரோடிருப்பதினால், நானும் உயிரோடிருப்பேன் என்று மெய்யாகவே கூறக்கூடிய நிலையை எட்டும்வரை ஓயாதீர்கள்.

நீங்கள் பரலோகத்தை இழந்துவிடுகிறீர்களானால், எல்லாவற்றையும் இழந்துவிடுகிறீர்கள். நீங்கள் பரலோகத்தைப் பெற்றுக்கொள்கிறீர்களானால், எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறீர்கள். இந்தக் காரியத்தில் ஒரு தவறையும் செய்துவிடவேண்டாம் என்று நான் உங்களிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறேன். ஏனெனில் நித்தியம் சார்ந்த நலமான காரியங்கள் இங்கு சம்பந்தப்பட்டிருக்கின்றன. ★

# சீர்திருத்தவாதிகளின் விசுவாசம்!

**“பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்”**
**–1 கொரிந்தியர் 15:26.**

“வரப்போகும் முன்னூறு ஆண்டுகளுக்குள்ளாக நிச்சயமாக நியாயத்தீர்ப்பின் நாள் வந்துவிடும். இனியும் நீண்ட காலத்திற்கு இந்த துன்மார்க்கமான உலகத்தை தேவன் அனுமதிக்கமாட்டார். அனுமதிக்கமுடியாது” என்று மார்டின் லுத்தர் உறுதிபடக் கூறினார். “அருவருப்புகளின் இராஜ்யமாகிய இவ்வுலகம் வீழ்த்தப்படப்போகின்ற அந்த மகா நாள் நெருங்கிவந்து கொண்டிருக்கிறது” என்று—டேனியல் டி. டெய்லர். “பூமியின்மேல் கிறிஸ்துவின் ஆளுகை அல்லது அனைத்து யுகங்களிலும் சபையின் குரல்” என்ற புத்தகத்தின் 33–ம் பக்கத்தில் கூறுகிறார்.

“வயதேறிப்போன இவ்வுலகம் முடிவடைவதற்கான காலம் சமீபித்திருக்கிறது” என்றார் மெலாங்தன். “எல்லாச் சம்பவங்களையும்விட, கிறிஸ்துவின் வருகையின் நாளே மிகவும் சிறப்பானதென்று ஆர்வத்தோடு விரும்புவதற்குத் தயங்கவேண்டாம்” என கால்வின் கிறிஸ்தவர்களை வேண்டுகிறார். “மேலும் விசுவாசக் குடும்பங்கள் அனைத்துமே அந்த நாளைக் கருத்தில் கொண்டிருப்பார்கள்.” “நமது ஆண்டவர் தமது இராஜ்யத்தின் மகிமையை முற்றிலுமாக வெளிப்படச்செய்யப்போகின்ற அந்த மகா நாள் உதயமாகிறவரை கிறிஸ்துவை நாம் தேடவேண்டும். அவரை தியானிக்கவேண்டும். அவருக்காகப் பசியோடிருக்கவேண்டும்”—டேனியல் டி. டெய்லர் (பூமியின்மேல் கிறிஸ்துவின் ஆளுகை அல்லது அனைத்து யுகங்களிலும் சபையின் குரல், பக்கம் 158.)

“ஆண்டவராகிய இயேசு தமது மாம்சத்தோடு பரலோகத்திற்குச் செல்லவில்லையா?” “அவர் திரும்பவும் வரமாட்டாரா?” “அவர் நிச்சயமாக வருவாரென்றும், விரைவில் வருவாரென்றும்” நமக்குத் தெரியும் என்றார்

ஸ்காட்லாந்து நாட்டின் சீர்திருத்தவாதி **நாக்ஸ்**. சத்தியத்திற்காக உயிரைத் தியாகஞ்செய்த **ரிட்லியும், லாட்டிமரும்** ஆண்டவரின் வருகைக்காக விசுவாசத்தோடு நோக்கிப்பார்த்தார்கள். **“சந்தேகத்திற்கு இடமின்றி இவ்வுலகம் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. அதை நான் நிச்சயமாக நம்புகிறேன். எனவே, அதைக் கூறுகிறேன். 'வாரும், ஆண்டவராகிய இயேசுவே, வாரும்' என்று தேவனுடைய ஊழியக்காரனாகிய யோவானுடன் சேர்ந்து, மீட்பர் கிறிஸ்துவை நோக்கி நமது இதயங்களில் முழக்கமிடுவோம்”** என்ற ரிட்லி எழுதினார் – (பூமியின்மேல் கிறிஸ்துவின் ஆளுகை அல்லது அனைத்து யுகங்களிலும் சபையின் குரல், பக்கம் 145, 151.)

**“ஆண்டவரது வருகையைக்குறித்த நினைவுகள் எனக்கு மிகவும் இனிமையானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் இருக்கிறது” “அவர் வருகையை நேசிப்பதும், அந்த பாக்கியமான நம்பிக்கைக்காக எதிர்நோக்கியிருப்பதும் விசுவாசத்தின் கிரியையாகவும் அவரது பரிசுத்தவான்களின் குணமாகவும் இருக்கிறது. உயிர்த்தெழுதலின்போது, அழிக்கப்படவேண்டிய கடைசிச் சத்துரு மரணம் என்றால், அதன் முழுமையான இறுதி வெற்றி கிடைக்கும்போது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக விசுவாசிகள் எவ்வளவு ஊக்கத்தோடு—ஏக்கம் நிறைந்தவர்களாக ஜெபிக்கவேண்டும்” “அனைத்து விசுவாசிகளும் அவர்களது மீட்பிற்காகச் செய்யப்பட்ட அனைத்து ஊழியத்திற்கும், அவர்களது ஆத்துமாக்களின் அனைத்து விருப்பங்களுக்கும், பெருமுயற்சிகளுக்கும் ஒரு நிறைவேறுதல் என்று எண்ணியவர்களாக ஏக்கத்தோடும் நம்பிக்கையோடும் காத்துக்கொண்டிருக்கவேண்டிய அந்த நாள் இதுவே”** (இரண்டாம் வருகையின் நாளே). **“ஆ! ஆண்டவரே, அந்த பாக்கியமான நாளை துரிதப்படுத்துவீராக!”** என்று ரிச்சர்டு பேக்ஸ்டர் கூறுகிறார். (Works, vol. 17, p. 555, 500,182,183). அப்போஸ்தல சபை, **“வனாந்தரத்தில் இருந்த சபை,”** சீர்திருத்தவாதிகளின் சபை ஆகியவைகளின் நம்பிக்கையும் இப்படிப்பட்டதாகவே இருந்தது. ★

# வரலாற்றை திறக்கும் திறவுகோல்!

**“ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க; அதற்கு ஜாமக்காரன்: விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது; நீங்கள் கேட்க மனதானால் திரும்பிவந்து கேளுங்கள் என்று சொல்லுகிறான்” —ஏசாயா 21:11,12.**

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய நம்பிக்கையைக்குறித்து நாம் பெற்றுக்கொள்ளும் ஒரு நல்ல தெளிவான விளக்கமே, எதிர்காலத்தின் அனைத்துப் பாடங்களையும் விளக்குவதாகவும், அடுத்து வரப்போகும் வரலாற்றைத் திறக்கிற திறவுகோலாகவும் இருக்கிறது.

வருகைக்காகக் காத்திருப்பவர்களின் அணி நெடுகிலும் இப்பொழுது உண்மையான காவல்காரனின் குரல் கேட்கவேண்டியது அவசியமாகும். “விடியற்காலம் வருகிறது. இராக்காலமும் வருகிறது”. ஆண்டவருக்கான ஆயத்தத்தின் குறிப்பிட்ட தொனியைக் கொடுக்கவேண்டும்.

தீர்க்கதரிசனத்தில், சத்தியங்கள் ஒன்றோடொன்று இணைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் படிக்கும்போது, அவைகள் அன்றாட செயல்முறைக்கு ஏற்ற கிறிஸ்தவ சத்தியத்தின் ஒரு அழகான தொகுதியாக அமைந்திருக்கிறது. கொடுக்கின்ற அனைத்துப் பிரசங்கங்களும், நாம் தேவகுமாரனின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம், ஜெபித்துக்கொண்டிருக்கிறோம், உழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாக வெளிக்காட்டுவதற்காகவே. அவரது வருகையே நமது நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை, நமது அனைத்து வார்த்தைகளோடும், வேலைகளோடும், தோழமைகளோடும், உறவுகளோடும் இணைத்துக் கட்டப்பட்டிருக்கின்றது. மனுஷகுமாரனின் இரண்டாம் வருகைபற்றிய அற்புதமான கருத்து மட்டுமே மக்களுக்கு முன்பாக வைக்கப்படவேண்டிய

ஒன்றாகும். இந்தப் பொருளைப்பற்றி இங்கு நாம் காணும் தலைப்பு நமது உரைகளிலே விட்டுவிடப்படக் கூடாது. நித்தியத்தைப்பற்றிய உண்மைகள் மனக்கண் முன்பாக வைக்கப்படவேண்டும். உலகின் கவர்ச்சிகள் அவைகள் இருக்கின்ற அந்த நிலையில்தானே, மாயையைப்போன்று முற்றிலும் பலனற்றதாக இருக்கின்றன. உலகத்தின் மாயத் தோற்றங்கள் அதின் புகழாரங்கள் அதின் ஐசுவரியங்கள், அதின் மேன்மைகள் அல்லது அதின் களியாட்டுகள் ஆகியவற்றுடன் நமக்கு என்ன வேலை இருக்கிறது?

நமது மீட்பரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகைக்காக, அந்த பாக்கியமான நம்பிக்கைக்காகக் காத்துக்கொண்டும், நம்பிக்கொண்டும், ஜெபித்துக்கொண்டுமிருக்கிற அந்நியர்களும் பரதேசிகளுமாக நாம் இருக்கிறோம். இதை நாம் விசுவாசித்து, நமது அன்றாட வாழ்க்கையின் செயல்முறைக்குக் கொண்டுவருவோமானால், இந்த விசுவாசமும் நம்பிக்கையும் எத்தகைய ஆற்றல் நிறைந்த செயல்களை நம்மிலே தூண்டி எழுப்பும்! ஒருவருக்கொருவர் எத்தகைய ஆர்வம் நிறைந்த அன்போடு பழகுவோம்! தேவனுடைய மகிமைக்காக, எத்தனை அக்கறையுடைய பரிசுத்தமான வாழ்வு வாழ்வோம்! வெகுமதிக்கான கைமாறாக, நாம் எவ்வளவு மதிப்பைக் காட்டுவோம்! நமக்கும் உலகிற்கும் இடையே பிரிக்கும் எல்லைக்கோடு எவ்வளவு தெளிவாகக் காணப்படும்!...

ஒவ்வொரு உள்ளத்திலும் கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்கிற உண்மை வைக்கப்படவேண்டும். ★

# ஒத்திசைவான ஏமாற்றங்கள்!

**“இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென் கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; … கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே”**

**—யாக்கோபு 5:11.**

மானிடரின் கருத்துக்கள், பொய்யான உபதேசங்கள், பாரம்பரியங்கள் ஆகியவைகளால் மக்களது உள்ளங்கள், ஏன் தேவனுடைய ஊழியக்காரர்களுடைய உள்ளங்கள்கூட, அடிக்கடி குருடாகிவிடுகின்றன. எனவே, தேவன் தமது வசனங்களின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கும் மாபெரும் காரியங்களை அவர்களால் அரைகுறையாகமட்டுமே புரிந்துகொள்ளமுடிகிறது. இந்த பூமியில் இயேசு தமது சீடர்களோடு இருந்த காலத்திலுங்கூட, சீடர்களின் நிலை இப்படித்தான் இருந்தது. மேசியா உலகியல் சார்ந்த ஒரு அரசனாக வருவார் என்றும், மேலும் அவர் அகில இராஜ்யத்தின் சிங்காசனத்திற்கு இஸ்ரவேலை உயர்த்துவார் என்றும் மக்கள் கொண்டிருந்த பொதுவான—பிரபலமான கருத்துக்களில் அவர்களது உள்ளங்கள் ஊறிக்கிடந்தன. எனவே, அவர் தமது பாடு, மரணம்பற்றி முன்னுரைத்த வார்த்தைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை…

பிறந்ததிலிருந்து அவர்களது இதயங்கள் வரப்போகும் அந்த பூலோக இராஜ்யத்தின் மகிமைபற்றிய காரியங்களிலேயே நிலைத்திருந்தன. இது, அவர்களது புரிந்துகொள்ளும் ஆற்றலை மழுக்கி, மங்கலாக்கிவிட்டது…

இயேசுவின் முதலாம் வருகையின்போது **“இராஜ்யத்தின் சுவிசேஷத்தை”** பிரசங்கித்த சீடர்களின் அனுபவத்திற்கு சரிநிகராகவே இரண்டாம் வருகையிலே, அவரது தூதை அறிவித்தவர்களுடைய அனுபவமும் இருந்தது…

முதல் பன்னிரெண்டு (இயேசுவின்) சீடர்களைப்போலவே, வில்லியம் மில்லரும் அவருடைய தோழர்களும் தாங்கள் பிரசங்கித்து வந்த செய்தியின்

உட்பொருளைத் தாங்களே முழுமையாக விளங்கிக்கொள்ளவில்லை. தீர்க்கதரிசனத்தின் ஒரு முக்கியமான கருத்தின் சரியான விளக்கத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளாதபடி, ஏற்கெனவே நீண்டகாலமாக சபையில் நிலைநாட்டப்பட்டிருந்த தவறுகள் தடுத்துப்போட்டன. உலகத்திற்குக் கொடுக்கும்படியாக, தேவன் அவர்களிடத்தில் ஒப்படைத்திருந்த தூதை அவர்கள் கூறி அறிவித்தபோதிலும், அந்த தீர்க்கதரிசனத்தின் பொருளை தவறாகப் புரிந்துகொண்டதால், துன்பமடையத்தக்கதான ஏமாற்றத்தைச் அவர்கள் சந்திக்கவேண்டியதாயிற்று...

இயேசுவின் முதல் சீடர்களுக்கு நடைபெற்றதுபோலவே, இந்த விசுவாசிகளுக்கும், அவர்கள் துன்பமடைந்த மணிவேளையில் புரிந்துகொள்ளுதலுக்கு இருண்டு கிடந்ததைப்போன்று தோற்றமளித்த காரியங்கள், பின்பு தெளிவாக்கப்படும். **“ஆண்டவரது முடிவை”** அவர்கள் காணும்போது, துன்பங்கள் தாங்கள் செய்த தவறுகளின் விளைவாக வந்திருந்தபோதிலும், தேவன் தங்கள்பால் கொண்டிருந்த அன்பின் நோக்கங்கள் நிலையாக நிறைவேறிக்கொண்டிருந்தன என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள். **“மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரென்றும்”** (யாக்கோபு 5:11), **“கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்”** (சங்கீதம் 25:10) என்றும் ஒரு பாக்கியமான அனுபவத்தின் மூலமாக அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ★

# தாழ்மையான மனிதர்கள் தூதை கூறியறிவிக்கிறார்கள்!

**“அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்” –2 பேதுரு 1:19.**

வெளிப்படுத்தின விசேஷம் 14:6,7–ல் கூறப்பட்டுள்ள இந்தத் தூது, **“நித்திய சுவிசேஷத்தின்”** ஒரு பகுதியாக இருக்கிறதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியம், தூதர்களிடத்தில் ஒப்படைக்கப்படாமல், மனிதர்களிடத்தில்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலையை வழிநடத்துவதற்காக, பரிசுத்த தூதர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மனிதரின் மீட்பிற்காக உருவாகும் மாபெரும் இயக்கங்கள் தூதர்களது பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால், சுவிசேஷத்தை அறிவிக்கும் அந்த வேலை, கிறிஸ்துவின் ஊழியர்களால் இந்த பூமியில் செயல்படுத்தப்படுகின்றது.

தேவனுடைய ஆவியானவருக்கும், வேத வாக்கிய போதனைகளின் தூண்டுதலிற்கும் கீழ்ப்படிகின்ற உத்தமமான மனிதர்களே, உலகத்தை எச்சரிக்கும் இந்தத் தூதை அறிவிக்கவேண்டியதிருந்தது. **“அதிக உறுதியான”** தீர்க்கதரிசன வசனத்திற்கும், **“பொழுது விடிந்து விடிவெள்ளி இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற வசனத்திற்கும்”** (2 பேதுரு 1:19) கவனம் கொடுப்பவர்கள் அவர்கள். தேவனைப்பற்றிய அறிவின் **“வர்த்தகத்தை வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயத்தை பசும்பொன்னிலும்”** (நீதி. 3:14) மேலாக எண்ணி புதைக்கப்பட்டிருக்கிற எல்லா பொக்கிஷங்களுக்கும் மேலாக அதைத் தேடிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். எனவே இராஜ்யத்தைக்குறித்த மாபெரும் கரியங்களை ஆண்டவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். **“கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது;**

**அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"– சங்கீதம் 25:14.**

இந்த சத்தியத்தைப் புரிந்துகொண்டு, அதை அறிவிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள், கற்றறிந்த வேத அறிஞர்கள் அல்ல. அவர்கள் உத்தமமான காவற்காரர்களாக, ஊக்கத்தோடும் ஜெபத்தோடும் வேதவாக்கியங்களை ஆராய்ந்திருப்பார்களானால், அந்த இருண்ட நேரத்தைப்பற்றி நன்றாக அறிந்திருப்பார்கள். நடைபெறப்போகின்ற சம்பவங்களை அந்த தீர்க்கதரிசனங்கள் வெளிப்படையாகக் காட்டியிருக்கும். ஆனால் அவர்கள் அந்த பதவியை வகிக்கவில்லை. எனவே, தாழ்மையான மனிதர்களிடத்தில் அந்தத் தூது ஒப்படைக்கப்பட்டது. **"இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்"** (யோவான் 12:35) என்று இயேசு கூறினார். தேவன் கொடுத்த வெளிச்சத்தினின்று முகத்தைத் திருப்பிக்கொள்ளுபவர்கள் அல்லது தங்களுக்கு கிடைக்கக்கூடிய தூரத்தில் அந்த வெளிச்சம் இருக்கும்போது, அதைத் தேடாமல் அலட்சியஞ்செய்பவர்கள், இருளிலே விடப்படுவார்கள். **"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்"** (யோவான் 8:12) என்று நமது மீட்பர் உறுதியாகக் கூறுகின்றார். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வெளிச்சத்தை ஊக்கத்தோடு கவனத்தில்கொண்டு, தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு யாரெல்லாம் ஒரே நோக்கத்தோடு தேடுகிறார்களோ, அவர்கள் மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அந்த ஆத்துமாவை அனைத்து சத்தியங்களிலும் வழிநடத்தத்தக்கதாக, பரலோக ஒளிக்கதிரை பிரகாசிக்கின்ற நட்சத்திரம் அனுப்பப்படும். ★

# சத்தியமே வெல்லும்!

**“நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி: இனி காலம் செல்லாது; ... என்று ...ஆணையிட்டுச் சொன்னான்”**
**–வெளிப்படுத்தல் 10:5–7.**

“நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது” என்று வெளிப்படுத்தல் 14–ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தூது, முடிவுகாலத்தின் நேரத்திலே கொடுக்கப்படுகிறது. வெளிப்படுத்தல் 10–ம் அதிகாரத்தில் ஒரு தூதன் சமுத்திரத்தின் மேல் ஒரு காலையும் பூமியின் மேல் ஒரு காலையும் வைத்திருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்தத் தூது, தொலை தூரத்திலுள்ள நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்படும். சமுத்திரத்தையும் கடந்துசென்று அறிவிக்கப்படும் என்பதைக் காட்டுகிறது. கடைசி எச்சரிப்பின் தூதின் அறிவிப்பை கடல்களுக்கு இடையே உள்ள தீவுகளும் கேட்கும்...

**“சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி: இனி காலம் செல்லாது; வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்” (வெளிப்படுத்தல் 10:5–7)** என்கிற இந்தத் தூது, தீர்க்கரிசன காலக்கட்டங்களின் முடிவை அறிவிக்கிறது. 1844–ல் நமது ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு நிகழ்ந்த ஏமாற்றம், அவரது வருகைக்காக ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருந்தவர்களுக்கு நிச்சயமாகவே கசப்பாக இருந்தது. இந்த ஏமாற்றம் வரவேண்டும் என்பது தேவதிட்டத்தின் ஒரு ஒழுங்காக இருந்தது...!

சந்திக்க தேவன் ஆயத்தப்படுத்தாத எந்த ஒரு மேகமும் சபையின்மீது கடந்துசெல்லவில்லை. தேவனுடைய வேலைக்கு எதிராக வேலை செய்கின்ற எந்த எதிர்ப்புசக்தியும் அவர் முன்பார்த்திராமல்

எழும்பினதில்லை. அவரது தீர்க்கதரிசிகளின் மூலமாக, அவர் முன்னறிவித்தபடியே அனைத்துக் காரியங்களும் நடைபெற்றன. தேவன் தமது சபையை கைவிடப்பட்ட நிலையில் இருளிலே விட்டுவிடவில்லை. தீர்க்கதரிசன அறிவிப்புகளிலே என்ன சம்பவிக்கும் என்பதற்கான அடிச்சுவடுகளை அறிந்திருந்தார். அவரது முன்னறிவின் அருளினாலே, உலக சரித்திரத்தில் அதற்காக நியமிக்கப்பட்ட இடத்திலே, தீர்க்கதரிசிகள் மூலமாக, பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் முன்னறிவிப்பாகக் கூறப்பட்ட காரியத்தை நடைபெறச் செய்தார். அவரது அனைத்து நோக்கங்களும் நிறைவேற்றப்படும்—நிலைநாட்டப்படும். அவரது பிரமாணம் அவரது சிங்காசனத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மானிட சக்திகளோடு சாத்தானின் சக்திகளும் சேர்ந்துகொண்டாலுங்கூட அதை அழித்துப்போட முடியாது. சில சமயங்களில் சத்தியம் மறைக்கப்பட்டிருப்பதுபோலக் காணப்பட்டாலும், அது ஆவியானவரால் அருளப்பட்டு தேவனால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. சத்தியம் வாழ்ந்திருக்கும். சத்தியம் வெற்றிபெறும். பிரமாணம் குணத்திலே காட்டப்படுவதே கிறிஸ்துவின் சுவிசேஷமாகும். இதற்கு எதிராகச் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு வஞ்சகமும், பொய்யை நிலைநாட்டத்தக்கதாக பயன்படுத்தப்படும் ஒவ்வொரு உபாய தந்திரமும், சாத்தானின் சக்திகளால் போலியாக (உண்மைபோன்று) காட்டப்படும். ஒவ்வொரு பிழையும், முடிவிலே நித்தியமாக நொறுக்கப்பட்டுவிடும். நடுப்பகலில் பிரகாசிக்கும் சூரியனைப்போன்று சத்தியம் வெற்றியடையும். நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும். பூமி முழுவதும் அவரது மகிமையால் நிறைந்திருக்கும். ★

# கர்த்தரின் வருகையைத் துரிதப்படுத்துதல்!

**“அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்…” —ரோமர் 9:28.**

**“அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்”**(மத்தேயு 24:12–14) என்று எருசலேமைக்குறித்த தீர்க்கதரிசனத்திலே இயேசு கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் மீண்டும் நிறைவேறும். அந்நாளில் நடைபெற்ற திரளான அக்கிரமங்கள் இந்தத் தலைமுறையிலும் அதன் மறுபடிவத்தை (அதே நிலையை) காண்கிறது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதுகுறித்து முன்னறிவிக்கப்பட்டதும் இதைப்போன்ற நிலையையே உடையதாக இருக்கிறது. வருசலேமின் விழுகைக்குமுன், பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் பவுலார், “வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது” (கொலோ. 1:23) என்று அறிவித்தார். அதேபோன்று, மனுஷகுமாரனின் வருகைக்கு முன்னதாக நித்திய சுவிசேஷம், “சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத் தாருக்கும்” (வெளிப்படுத்தல் 14:6,14) பிரசங்கிக்கப்படவேண்டும். தேவன், “மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே … பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்”—அப்போஸ்தலர் 17:31. கிறிஸ்து எப்பொழுது அந்த நாள் வந்துசேருமென்று நமக்குக் கூறுகின்றார். உலகம் முழுவதும் மனந்திரும்புதலை அடையுமென்று இங்கு அவர் கூறுகிறதில்லை. ஆனால், “இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்” (மத்தேயு 24:14) என்று கூறுகிறார். உலகத்திற்கு

சுவிசேஷத்தைக் கொடுப்பதின்மூலம், ஆண்டவரின் வருகையைத் துரிதப்படுத்துவது நமது சக்திக்கு உட்பட்டதாயிருக்கிறது. தேவனுடைய நாள் வருவதற்காக எதிர்பார்த்துக்கொண்டுமட்டுமிராமல், அவருடைய வருகையைத் துரிதப்படுத்தவும் வேண்டும் (2 பேதுரு 3:12). ஆண்டவர் வகுத்துக் கொடுத்தபடி, கிறிஸ்துவின் சபை, அதற்கு நியமிக்கப்பட்ட வேலையைச் செய்துமுடித்திருக்குமானால், இந்த உலகம் முழுவதுமே இந்த நாளுக்கு முன்பாகவே எச்சரிக்கப்பட்டிருந்திருக்கும். ஆண்டவராகிய இயேசுவும் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் இந்தப் பூமிக்கு மீண்டும் வந்திருப்பார்.

ஆண்டவரது பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்பவர்களது மத்தியில் காணப்படுகின்ற அவிசுவாசமும், உலகப்பற்றும் அர்பணிக்காத நிலையும், பூசலுமே இந்தப் பாவமும் துக்கமும் நிறைந்த உலகத்தில், அநேக ஆண்டுகளுக்கு நம்மை இருக்கும்படியாகச் செய்துவிட்டது...

இஸ்ரவேல் புத்திரர் செய்ததைப்போலவே கீழ்ப்படியாமையினால், இந்த உலகத்தில் அநேக ஆண்டுகள் நாம் தங்கியிருக்க வேண்டியதிருக்கலாம். அவர்கள் தங்களது தவறான போக்கினால், அதின் விளைவை அனுபவித்துக்கொண்டு, அதே சமயத்தில் தேவனை அதினிமித்தம் குற்றஞ்சாட்டிக்கொண்டும் இருக்கிறார்கள். கிறிஸ்துவிற்காகவாவது, அவரது மக்கள் இத்தகைய குற்றத்தைச் சாட்டி, பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டாதபடி இருக்கவேண்டும். ★

# மூன்றாம் தூதனின் கடைசி எச்சரிப்புகள்!

**“இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று”**

**—வெளிப்படுத்தல் 18:1.**

மூன்றாம் தூதனின் தூதைக் கூறியறிவிக்கின்ற தூதனோடு, இணைந்து வேலைசெய்கின்ற தூதன், தனது மகிமையால் இந்த முழு உலகத்தையும் வெளிச்சமடையச்செய்யவேண்டியதிருந்தது. உலகம் முழுவதையும் உள்ளடக்கியதான ஒரு பணியும் வழக்கத்திற்கு மாறான வல்லமையும் இங்கே முன்னறிவிப்பாகக் கொடுக்கப்படுகிறது. 1840—1844–ல் ஏற்பட்ட அட்வெந்து இயக்கம், தேவனுடைய வல்லமையைக் காட்டும் ஒரு மகிமையான வெளிப்படுத்தலாகும். முதலாம் தூதனின் தூது, உலகிலுள்ள ஒவ்வொரு இறைப்பணித் தளத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டது. பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மதச் சீர்திருத்தக்காலத்திலிருந்து, மற்ற நாடுகளில் காணப்பட்டதுபோன்ற மாபெரும் மார்க்கசம்பந்தமான எழுச்சி சில நாடுகளில் காணப்பட்டது. ஆனால், மூன்றாம் தூதனின் இறுதி எச்சரிப்பிற்கடியில் வருகின்ற மாபெரும் வல்லமையுள்ள இயக்கம், மேற்கூறப்பட்டவைகள் அனைத்தையும் மிஞ்சிவிடும்...

சுவிசேஷத்தின் மாபெரும் பணி, அதின் ஆரம்பக்கட்டத்தில் காணப்பட்ட தேவனுடைய வல்லமையைவிட, முடிவுபெறும் வேளையில் எவ்வளவும் குறைந்திருக்காது. சுவிசேஷம் ஆரம்பமான காலத்கட்டத்திலே, பெய்த முன்மாரியின் பெருமழையின்போது, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதைப்போல, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதலின் முடிவுவேளையில் பெய்யும் பின்மாரியின் பெருமழையிலே, மீண்டும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்...

தேவனுடைய ஊழியக்காரர்கள் பரிசுத்த அர்ப்பணிப்போடு ஒளி நிறைந்த—பிரகாசமுள்ள முகத்தினராக, பரலோகத்தின் செய்தியை அறிவிக்க, இடம்விட்டு இடம் துரிதமாகச் சென்றார்கள். பூமி முழவதும் ஆயிரமாயிரம் குரல்களின் மூலமாக எச்சரிப்பு கொடுக்கப்படும். அற்புதங்கள் நடப்பிக்கப்படும். பிணியாளிகள் குணமடைவார்கள். அடையாளங்களும் அற்புதங்களும் விசுவாசிகளைப் பின்தொடரும். சாத்தானும் மனிதருக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணும் அளவிற்கு பொய்யான அற்புதங்களை நடப்பிக்கிறான் (வெளிப்படுத்தல் 13:13). இவ்வாறாக, பூமியின் குடிகள் ஒரு தீர்மானமெடுக்கும் நிலைக்குக் கொண்டுவரப்படுவார்கள்...

இறைப்பணியாளர்கள் மூலமாக, எங்கும் வழங்கப்பட்ட அச்சுப் பிரதிகள் அவைகளின் செல்வாக்கைப் பரப்பியிருந்தன. எனினும், மனதிலே உணர்த்தப்பட்ட அநேகர், சத்தியத்தை முழுவதுமாக விளங்கிக்கொள்வதினின்றும் அல்லது அதற்குக் கீழ்ப்படிவதினின்றும் தடுக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது, ஒளியின் கதிர்கள் எங்கணும் ஊடுருவிச் செல்கின்றன. சத்தியம் அதின் தெளிவான நிலையில் காணப்படுகின்றது. தேவனுடைய உண்மையான பிள்ளைகள் தங்களைக் கட்டிப்போட்டிருந்த தளைகளை அறுத்தெறிகிறார்கள். குடும்பத் தொடர்புகளும் சபைத் தொடர்புகளும் அவர்களைத் தடைசெய்யக்கூடாமல் சக்தியற்றுப்போயின. மற்றும் அனைத்துக் காரியங்களையும்விட, சத்தியத்திற்கு எதிராக அநேக சக்திகள் ஒருங்கிணைந்து நின்றபோதிலும், அநேகர் ஆண்டவரின் பக்கம் நிற்பதைத் தெரிந்துகொண்டார்கள். ★

# அவர் சதாகாலமும் அரசாளுவார்!

**“ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின”**

**–வெளிப்படுத்தல் 11:15.**

நீதியின் ஆளுகைக்கு இட்டுச்செல்லும் கிறிஸ்துவின் வருகையானது சிறப்புமிகுந்த... பரிசுத்த எழுத்தாளர்களின் கூற்றுகளை அருள் நிறைவால் தூண்டி எழுப்பியிருக்கிறது.... இஸ்ரவேல் இராஜாவின் இராஜரிகத்தையும் வல்லமையையும்பற்றி சங்கீதக்காரன் பின்வருமாறு பாடினான்... “வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக. நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும். அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்”– சங். 96:11–13.

தீர்க்கதரிசியாகிய ஏசாயா... “அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்” (ஏசாயா 25:8) என்று கூறினார்...

மீட்பர் தமது சீடர்களைவிட்டுப் பிரிந்துசெல்லவிருந்த வேளையிலே அவர், தாம் மீண்டும் வருவார் என்ற நிச்சயத்தை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களது துக்கத்திலே அவர்களைத் தேற்றினார். “உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள்

உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"—யோவான் 14:1–3.

கிறிஸ்து பரமேறியபின், ஒலிவமலையின்மீது தாமதித்து நின்றுகொண்டிருந்த தூதர்கள், அவர் மீண்டும் வருவார் என்ற வாக்குத்தத்தத்தை: "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்..." (அப்போஸ்தலர் 1:11) என்ற வார்த்தைகளில் திரும்பவும் சீடர்களுக்குக் கூறினார்கள். ஆவியின் ஏவுதலால் அப்போஸ்தலனாகிய பவுல்: "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்" (1 தெசலோனிக்கேயர் 4:16) என்று வலியுறுத்திக்கூறுகிறார். "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்" (வெளிப்படுத்தல் 1:7) என்று பத்மு தீவின் தீர்க்கதரிசி கூறுகிறார்.

"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" (அப்போஸ்தலர் 3:21) என்று கூறுவதைப்பற்றிய காரியங்களின் மகிமைகள் அவரது வருகையைப்பற்றியே சூழ்ந்து நிற்கின்றன. அப்பொழுது, தீமையின் நீண்டகால ஆட்சி நொறுக்கப்படும். "அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின"—வெளிப்படுத்தல் 11:15. ★

# எலியாவைப்பற்றிய தீர்க்கதரிசனம்!

**“இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.... அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்” –மல்கியா 4:5,6.**

கிறிஸ்துவின் முதலாம் வருகைக்காக, வழியை ஆயத்தம்பண்ணத்தக்கதாக எலியாவின் ஆவியோடு வந்த யோவான் ஸ்நானகனைப்போல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக வழியை ஆயத்தஞ்செய்பவர்கள் உத்தமமான எலியாவின் பெயரால் சுட்டிக்காட்டப்படுகிறார்கள்.

யோவான் ஸ்நானகனின் ஊழியமும் கடைசி நாட்களில் செய்யப்படும் ஊழியமும் உணர்வற்ற நிலையிலிருக்கும் மக்களை தட்டி எழுப்பத்தக்கதாக இருக்கும். இவர்கள் எலியாவின் ஆவியும் வல்லமையும் உடையவர்களாக புறப்பட்டுச் செல்வார்கள். அநேக வகைகளில் இந்த இரு கூட்டத்தாரும் ஒன்றுபோலவே காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வகையான வேலையே, இந்தக் காலத்தில் செய்யப்படவேண்டியதான அவரது வேலையாகும். இந்த உலகத்தை நீதியோடு நியாயந்தீர்க்க கிறிஸ்து இரண்டாம் முறை வரவேண்டியதிருக்கிறது.

இவ்வுலக இன்ப வாழ்க்கையினின்றும் நண்பர்களிடமிருந்தும் யோவான் விலகி இருந்தார். மிக எளிய முறையில் ஒட்டக மயிரை வைத்து நெய்யப்பட்ட உடையைத் தரித்துக்கொண்டிருந்தார். இக்காரியமானது, யூத ஆசாரியர்களுடைய, மற்றும் பொதுவாக அங்குள்ள மக்களுடைய வீண் ஆடம்பரத்திற்கும் பகட்டிற்கும் ஒரு நிலையான கண்டனம்போன்று காணப்பட்டது. காய்கறி, வெட்டுக்கிளி (ஒரு மரத்தின் காய்) மற்றும்

காட்டுத்தேன் அவரது உணவாக இருந்தது. இது எங்கணும் பரவலாகக் காணப்பட்ட பெருந்திண்டிக்கும் இன்சுவை உணவில் திளைத்திருக்கும் பழக்கத்திற்கும் எதிரான ஓர் கடிந்துகொள்ளுதலாயிருந்தது... ஒரு மாபெரும் சீர்திருத்தம் என்ற பொருளானது எங்கணும் கிளர்ந்தெழவேண்டும். பொது மக்களின் உள்ளங்கள் அசைக்கப்படவேண்டும். தேவனுடைய மக்களை விக்கிரக வணக்கத்திலிருந்தும் பெருந்திண்டியிலிருந்தும் உடைகள் மற்றும் காரியங்களில் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதினின்றும் விலக்குவதற்காக, தூதுடன் அனைத்துக் காரியங்கிளலும் இச்சையடக்கத்தோடு இருக்கவேண்டுமென்ற செய்தியும் சேர்த்துக் கொடுக்கப்படவேண்டும்.

சீர்கெட்டுப்போன இந்தக் காலத்தில், ஊதாரித்தனமாக ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பழக்கத்தோடு வாழ்கின்ற இத்தகைய மக்களின் வாழ்க்கைக்கு மாறாக, தேவன் சிறப்பாக ஆசீர்வதித்து நடத்திவருகின்ற நீதியின் வழியில் செல்லுகின்ற மக்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் சுயத்தை ஒறுத்தல், தாழ்மை, இச்சையடக்கம் ஆகிய குணங்கள் மேற்கூறப்பட்டவர்களின் முன்னிலையில் வைக்கப்படவேண்டும். எப்படி கரமானது உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கிறதோ அதேபோன்று, அவ்வளவு மிக நெருக்கமாக உடல்நலம் பற்றிய சீர்திருத்தமானது, மூன்றாம் தூதனின் தூதோடு இணைக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தேவன் எனக்குக் காட்டியிருக்கிறார்.

எப்படி யோவான் ஸ்நானகன்... மக்களின் கவனத்தை பத்துக்கட்டளைகளின் பக்கம் ஈர்த்தாரோ, அதுபோன்று, நிச்சயமான ஒரு தொனியோடு "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது" என்ற தூதைக் கொடுக்கவேண்டும். எலியா தீர்க்கதரிசியும் யோவான் ஸ்நானகனும் எத்தகைய தனிச்சிறப்புள்ள ஊக்கத்தோடு செய்தியைக் கொடுத்தார்களோ அதேபோன்று, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ண நாம் முயற்சிக்க வேண்டும். ★

# இயேசுவையே மையமாகவைத்து அவரையே உயர்த்துங்கள்!

**“நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்” —வெளிப்படுத்தல் 22:16.**

உலகத்தின் இறுதி நாட்களின் இன்னல்கள் நம்மீது படிகின்றன. மக்கள் எத்தகைய ஆபத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் அவர்களுக்கு நம்முடைய ஊழியத்தினால், எச்சரிக்கவேண்டும். தீர்க்கதரிசனம் வெளிப்படுத்தியிருக்கின்ற பக்திவிநயமான காட்சிகளை ஆராய்ச்சிசெய்யாமல் விட்டுவிடக்கூடாது. நமது மக்கள் அரை விழிப்போடாவது இருந்திருப்பார்களானால், வெளிப்படுத்தலிலே விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கின்ற சம்பவங்கள் எவ்வளவு சீக்கிரமாக நிறைவேறப்போகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்திருப்பார்களானால், நமது சபைகளிலே ஒரு சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கும். மேலும், அநேகர் இந்தத் தூதை விசுவாசித்திருப்பார்கள். இழப்பதற்கு இனி நமக்கு நேரம்கிடையாது... புதிய விதிமுறைகளை ஊக்குவித்து, தெளிவாக விளக்கப்பட்ட சத்தியங்களை நிறைத்து வையுங்கள். அது இருபுறமும் வெட்டுகின்ற ஒரு கருக்குள்ள பட்டயம்போல் இருக்கும். எதிர்வாதஞ்செய்கின்ற மனப்பாங்கை ஏற்பதற்கு ஆயத்தமாக இருக்காதீர்கள். அமைதியாக நின்று, நாம் தேவனுடைய இரட்சிப்பைக் காணவேண்டிய நேரங்களும் இருக்கலாம். தானியேல் பேசட்டும். வெளிப்படுத்தின விசேஷம் பேசட்டும். சத்தியம் என்னவென்று கூறப்படட்டும். பொருளின் தலைப்பில் எந்தப் பகுதியை நீங்கள் விளக்கிக்கொண்டிருந்தாலும் “தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிற” (வெளிப்படுத்தல் 22:16) இயேசுவையே நமது அனைத்து நம்பிக்கையின் மையமாக உயர்த்திக்காட்டவேண்டும்.

போதிய அளவிற்கு ஆழமாகச்சென்று நாம் சத்தியத்தை ஆராய்கிறதில்லை. நிகழ்கால சத்தியத்தை விசுவாசிக்கும் ஒவ்வொரு நபரும் அவர் தன்னிலே நிலைத்திருக்கின்ற அந்த நம்பிக்கைக்கான காரணத்தைக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் கொண்டுவரப்படுவார். தேவனுடைய மக்கள் இராஜாக்களுக்கும் இளவரசர்களுக்கும் ஆளுநர்களுக்கும் பூமியின் மாபெரும் மனிதர்களுக்கும் முன்பாக நிற்பதற்காக அழைக்கப்படுவார்கள். சத்தியமாவது என்ன என்பதைக்குறித்துத் தாங்கள் நிச்சயமாக அறிந்திருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் மனந்திரும்பிய ஆண்களும் பெண்களுமாக இருக்கவேண்டும். இவ்வுலகின் மாபெரும் மனிதர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்வதைவிட, தேவன் தமது பரிசுத்த ஆவியின் மூலமாக ஏராளமான காரியங்களை ஒரு கணத்தில் கற்றுக்கொடுத்துவிடுவார். பூமயின் மீது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போராட்டத்தை இந்த அண்டசராசரமும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது. வரம்பற்ற விலைக்கிரயத்தின்மூலமாக இரட்சிப்புக்கேற்ற ஞானவா னாகும்படி அறிந்துகொள்ளத்தக்கதான சந்தர்ப்பத்தை தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தை யார் தனக்காகப் பயன்படுத்திக்கொள்வாரென்பதை அறிய தூதர்கள் எவ்வளவு ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! தேவனுடைய மக்களுக்கு முன்பாக ஒரு தூது வைக்கப்படும்போது, அவர்கள் அதற்கு எதிராக எழும்பக்கூடாது. அவர்கள் வேதாகமத்தை எடுத்துவைத்துக்கொண்டு, அந்தத் தூதை வேதத்தோடும் (பிரமாணங்களோடும் சாட்சியாகமத்தோடும்) ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். அந்தத் தூதானது, இத்தகைய பரிசீலனையை தாங்கக்கூடாதிருக்குமானால், அது உண்மையான தூது அல்ல. நமது உள்ளங்கள் விரிவடையவேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். அவரது கிருபையை நம்மீது பொழிய விரும்புகின்றார். இந்த நல்ல காரியங்களை ஒவ்வொரு நாளும் நிறைவாக அனுபவித்து மகிழலாம். ஏனெனில் தேவன் பரலோகத்தின் அனைத்துப் பொக்கிஷங்களையும் நமக்காக திறந்துவைக்க முடியும். ★

# இந்த உலகமே நமது பணித்தளமாகும்!

**"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து..." —மத்தேயு 28:19.**

கலிபோர்னியாவில், 1874—ம் ஆண்டில் நான் இருந்தபோது, எனது உள்ளத்தில் ஆழ்ந்த எண்ணப்பதிவை உண்டாக்கத்தக்கதான ஒரு கனவு எனக்குக் கொடுக்கப்பட்டது.

கலிபோர்னியாவிலுள்ள அநேக சகோதரர்கள் ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் வரப்போகின்ற காலக்கட்டத்தில், பணிசெய்வதற்கான ஒரு சிறந்த திட்டத்தைப்பற்றி கவனமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். எனது கனவுகளிலே நான் அடிக்கடி கண்ட வாலிபன் அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்தான். பேசப்பட்ட வார்த்தைகளை ஆழ்ந்த ஆர்வத்தோடு உன்னிப்பாகக் கவனித்தான். பின்பு, முதிர்ந்த சிந்தனையோடும், அதிகாரத்தோடும் கூடிய உறுதியான நம்பிக்கையோடும் பின்வருமாறு கூறினான்:

"பட்டணங்களும் கிராமங்களும், தேவனுடைய திராட்சைத் தோட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கின்றன. அங்கு வாழ்பவர்களும் எச்சரிப்பின் செய்தியைக்கேட்டவேண்டும். தேவனுடைய சத்தியத்தினின்று, பொய்யான காரியங்களுக்கு மக்களின் மனதைத் திருப்பத்தக்கதாக, சத்தியத்திற்கு எதிராளியானவன் வெறியோடு போராடிக்கொண்டிருக்கிறான்... அனைத்துத் தண்ணீர்களுக்கு அருகிலும் நீங்கள் விதைக்கவேண்டும்.

உங்களது உழைப்பின் பலனை உடனடியாகக் காணமுடியாமல் இருக்கலாம். ஆனால், இக்காரியமானது உங்களை அதைரியப்படுத்தக்கூடாது. இயேசுவை உங்களுக்கு முன்மாதிரியாக வைத்துக்கொள்ளுங்கள்.

ஏராளமான மக்கள் அவருடைய அருளுரைகளைக் கேட்டார்கள். வெகு சிலரே பின்பற்றினார்கள்...”

அந்தத் தூதுவர் தொடர்ந்து:“இந்த காலத்திற்குரிய ஊழியம்பற்றி ஒரு வரையறைக்கு உட்பட்ட கருத்துக்களையே நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். உங்களது புயங்களால் அணைத்துக்கொள்ளத்தக்கதாக அதற்கு ஏற்ற பிரகாரம் திட்டமிட முயற்சிக்கிறீர்கள். உங்களது கருத்துக்கள் விசாலமானவைகளாக இருக்கவேண்டும். உங்களது வெளிச்சத்தைக் கட்டிலிற்கு அடியிலோ, மரக்காலிற்கடியிலோ மறைத்து வைத்துக்கொள்ளக்கூடாது. வீட்டிலிருக்கும் அனைவருக்கும் வெளிச்சம் கிடைக்கத்தக்கதாக, ஒரு விளக்குத் தண்டின்மேல் வைக்கவேண்டும். உங்களது இல்லமே உலகம்...”

“அநேக நாடுகளிலுள்ள மக்கள், ஆண்டவர் அவர்களுக்காக வைத்திருக்கிற மிகவும் மேலான வெளிச்சத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களது விசுவாசம் எல்லைக்குட்பட்டு மிகவும் குறைவாக இருக்கிறது. ஊழியத்தைக்குறித்த உங்களது கருத்து இன்னும் மிகப் பெரிய அளவில் விரிவாக்கப்படவேண்டும்... முன்னேறிச்செல்லுங்கள். தேவனுக்கு முன்பாக எல்லாத் தாழ்மையோடும் நடந்துகொள்வீர்களானால், தேவன் மாபெரும் வல்லமையோடு கிரியை செய்வார். செயல்படுத்தக்கூடாத காரியங்களென்று அவைகளைக்குறித்துப் பேசிக்கொண்டிருப்பது விசுவாசமல்ல. தேவனால் முடியாத காரியம் எதுவும் இல்லை. தேவனுடைய பிரமாணம் கட்டுப்படுத்துகிறது என்ற கோரிக்கைபற்றிய வெளிச்சமானது உலகத்தைச் சோதிப்பதற்காகவே...”

நேரம் மிகக் குறைவாகவே இருக்கிறது. இந்தத் தூதை விசுவாசிக்கின்ற அனைவரும், ஒரு பயபக்தியான கடமை தங்கள் மீது வைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, தன்னலமற்ற ஊழியர்களாக இருந்து, சரியான பக்கத்தில் தங்களது செல்வாக்கை பயன்படுத்தவேண்டும். தேவனுடைய ஊழியம்பற்றிய காரியங்களை முன்னேற்றிச்செல்ல முயல்பவர்களுக்கு விரோதமாக வார்த்தையிலாவது, அல்லது செயலிலாவது எதிர்த்து நிற்கும் அணியில் ஒருபோதும் காணப்படக்கூடாது... இந்த சத்தியம் உலகமக்களுக்குமுன்பாக வைக்கப்படுவது காணப்பட்டாலொழிய, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வெளிச்சம் அந்த பயனைக் கொடுக்கமுடியாமற்போய்விடும். ★

# தேசத்தில் தேவனின் நியாயத்தீர்ப்புகள்!

**“பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்”**

**—லூக்கா 21:26.**

இப்பொழுது விக்கிரக வணக்கத்திலே ஏறக்குறைய முற்றிலும் மூழ்கிக்கிடக்கும் அநேகமாயிரம் பட்டணங்களுக்கு வரப்போகும் அழிவைக்குறித்து தேவனுடைய மக்களுக்கு ஒரு உணர்வு இருந்ததானால், எவ்வளவு நலமாயிருக்கும்...!

அண்மையிலே மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதான ஒரு காட்சி என்முன் கடந்துசென்றது. ஒரு மாபெரும் நெருப்புக் கோளமானது, சில அழகான மாளிகைகளுக்கு மத்தியிலே விழுந்தது. உடனே, அந்த மாளிகைகள் அழிந்துபோயின. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் பூமியின்மீது வரப்போகிறது என்பது எங்களுக்குத் தெரியும்.... ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்பது எங்களுக்குத் தெரியாது என்று ஒருவர் சொல்வதை நான் கேட்டேன். “உங்களுக்குத் தெரியுமா? அப்படியானால் ஏன் எங்களுக்குச் சொல்லவில்லை. எங்களுக்குத் தெரியாதே” என்று மற்றவர்கள் கூறினார்கள். இத்தகைய வார்த்தைகள் எங்கும் சொல்லப்படுவதை நான் கேட்டேன்.

நாடுகளுக்கு மத்தியில் பொறுக்கமுடியாத துன்பந்தரும் சம்பவங்கள் நடைபெறும். இயேசு கிறிஸ்துவின் வருகைமட்டும் இத்தகைய துன்பங்கள் தொடரும். இதுவரை ஒருபோதும் காணப்படாத அளவிற்கு நாம் நெருக்கமாக இணைந்து வேலை செய்யவேண்டியது அவசியம். அனைவர்மீதும் ஆளுகை நடத்தப்போவது அவரது அரசாங்கமே. பரலோகத்தில் சிங்காசனத்தை ஆயத்தம் செய்துவைத்திருக்கிற அவரையே சேவிக்கவேண்டும். தேவன் தமது மக்களை கைவிடவில்லை. அவரை விட்டுவிடாமல் இருப்பதில்தான் நம்முடைய வலிமை இருக்கிறது.

உலகிலே தேவனால் கொடுக்கப்படும் தண்டனைகள் காணப்படுகின்றன. யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளும், நெருப்பினாலும் வெள்ளங்களினாலும் ஏற்படும் அழிவுகளும் உலகின் முடிவுவரை அதிகரித்துக்கொண்டேவரும். அந்த இக்கட்டுக்காலம் வெகு அருகில் வந்துவிட்டது என்பதை தெளிவாகக் கூறுகிறது. இழப்பதற்கு இனி நேரமில்லை. யுத்தவெறியானது உலகைக் கலக்கிக்கொண்டிருக்கிறது. தானியேல் 11–ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள், அவைகளின் இறுதி நிறைவேறுதலை ஏறக்குறை எட்டிப்பிடித்துவிட்டன.

கடந்த வெள்ளிக்கிழமையன்று காலையில் நான் விழித்தெழுவதற்குச் சற்றுமுன்னர், மனதில் ஆழமாகப் பதியத்தக்கதான காட்சி ஒன்று எனக்கு முன்பாக வைக்கப்பட்டது. நான் நித்திரையினின்று விழிப்பதுபோன்று காணப்பட்டேன். ஆனால், அப்பொழுது நான் என் வீட்டில் இல்லை. எனது ஜன்னலின் வழியாக பேரழிவை உண்டாக்கும் பயங்கரமான நெருப்புப் பிளம்பை காணமுடிந்தது. மிகப்பெரிய நெருப்புக் கோளங்கள் வீடுகளின்மேல் விழுந்தன. இந்த நெருப்புக் கோளங்களிலிருந்து தீ நாக்குடைய அம்புகள் எல்லாத் திசைகளிலும் பறந்து பாய்ந்தன. தூண்டிவிடப்பட்ட நெருப்புகளை கட்டுப்படுத்துவது கூடாமற்போயிற்று. அநேக இடங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. மக்கள் அனுபவித்த துன்பத்தின் பயங்கரமானது விவரிக்கமுடியாத நிலையிலிருந்தது.

உலகின் நாடுகளிலுள்ள பட்டணங்கள், கண்டிப்பாக தண்டனைகளைச் சந்திக்கும். எனினும், தேவ கோபத்தின் உச்சக்கட்ட நிலையில் அவைகள் தண்டனை பெறாது. ஏனெனில், சில ஆத்துமாக்கள் எதிரியின் வஞ்சகப்பிடியை உடைத்துக்கொண்டு வெளியேறி, பாவத்தை உணர்ந்து மனந்திரும்புவார்கள். பெருந்திரளான மக்கள் அந்த கோபாக்கினையின் நாளிற்கெதிராக, மேலும், கோபாக்கினையை பொக்கிஷ வைப்பாகச் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். ★

ஜனவரி 18

# சிறப்புடைய
# ஓர் மேன்மையான வழி!

**"உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, ... ஓயுங்கள்; நன்மைசெய்யப் படியுங்கள்" —ஏசாயா 1:16,17.**

மடமை, களியாட்டுகளின்மீதுள்ள ஆசை, பாவம் நிறைந்த பழக்கவழக்கங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையும் குணத்தையும் கெடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்த உலகம் முழுவதும் தீயொழுக்கம் எனப்படும் தொழுநோயால் நிறைந்திருக்கிறது. சாவிற்கேதுவான தீயொழுக்கம் எனப்படும் மலேரியா ஜுரம் ஆயிரமாயிரம் மக்களை அழித்துக்கொண்டிருக்கிறது.

அநேகர் பாவத்தில் மூழ்கியிருக்கிறார்கள். அநேகர் கடுந்துயர் அனுபவிக்கிறார்கள். துன்பம், இல்லாமை, அவிசுவாசம், நம்பிக்கையின்மை போன்ற காரியங்களால் நெருக்கப்படுகிறார்கள். உடலிலும் ஆன்மாவிலும் வகைவகையான ஒவ்வொரு வியாதியினாலும் துன்பமடைகிறார்கள். தங்களது துன்பங்களிலிருந்து விடுதலையும் ஆறுதலும் பெற ஏங்குகிறார்கள். ஆனால், சாத்தான் அழிவிற்கும் மரணத்திற்கும் இட்டுச்செல்லுகின்ற பலவிதமான இச்சைகளையும், சிற்றின்பங்களையும் நாடித்தேடி அலையும்படி அவர்களை சோதிக்கிறான். அவர்கள் வாயில் இருக்கும்பொழுதே சாம்பலாகிப்போகத்தக்கதான, சோதோமின் கனியை அவர்களுக்கு வழங்குகிறான்.

உலகத்தின் பயங்கரமான நிலைபற்றிய ஒரு சித்திரம் எனக்கு முன்பாக வைக்கப்பட்டது. ஒழுக்கக்கேடு எங்கும் பெருகி வழிகின்றது. இழிந்த காமவெறி இந்தக் கடைசிநாட்களில் காணப்படுகின்ற ஒரு தனிப்பட்ட, மிக முக்கியமான பாவமாகும். ஒழுக்கக்கேடானது, அதின் சிதைந்த— அருவருப்பான தலையை இந்த காலத்தில் உயர்த்தி இருப்பதுபோன்று,

ஒருபோதும் துணிகரமாக உயர்த்தியது கிடையாது.... பெருகிவழியும் அக்கிரமமானது அவிசுவாசியிடமும், கேலிசெய்பவனிடமும் மாத்திரமல்ல, எங்கும் ஏராளமாகக் காணப்படுகிறது. காரியம் இப்படி இருக்குமானால், இப்படித்தான் காணப்படும். ஆனால், காரியம் அப்படியல்ல. கிறிஸ்துவின் மார்க்கத்தில் இருப்பவர்கள் என்று கூறிக்கொள்பவர்களாகிய அநேக ஆண்களும் பெண்களும் இத்தகைய பாவத்தில் இருக்கிறார்கள். அவரது வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்பவர்கள், சாத்தானைவிட எந்தவிதத்திலும் அந்த நிகழ்ச்சிக்காக ஆயத்தமாக இல்லை. இத்தகைய அருவருப்புகளிலிருந்து தங்களைக் கழுவிக்கொள்ளவில்லை. அவர்கள் நீண்டகாலமாக இச்சைக்கு அடிமைப்பட்டு சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இக்காரியமானது இயல்பான தன்மையாக மாறிவிட்டது. அவர்களது சிந்தனைகள் தூய்மைகெட்டதாகி, அவர்களது எண்ணங்களின் படைப்புத்திறனே கேடடைந்துவிட்டது. எப்படியெனில், நயாகரா அருவியின் போக்கை மாற்றி, அதன் மேற்றிசையில் கொட்டச்செய்வது எவ்வளவு கடினமோ, அதுபோன்று இப்படிப்பட்டவர்களின் உள்ளங்களை பரிசுத்தமான—தூய்மையான காரியங்கள்மீது நாட்டங்கொள்ளச்செய்வது கூடாத காரியமாகும்.... ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனது இச்சைகளைக் கட்டுப்படுத்தி, கொள்கையினால் அடக்கி ஆளப்படவேண்டும்....

சத்தியத்தை அறியாதவர்களாக, தேவனுடைய வசனத்தில் காணப்படும் கொள்கைகளால் அடக்கியாளப்பட மறுக்கிறவர்கள் மத்தியில் இழிந்த சிற்றின்ப வேட்கை, தூய்மைக்கேடு, விபசாரம், தீய செயல்கள், கொலைவெறி ஆகியவை அன்றாடம் காணப்படும். இந்த நிலையிருக்குமானால், தாங்கள் கிறிஸ்துவின் பின்னடியார்களென்று சொல்லிக்கொள்ளுகிற வகுப்பாரைப்போன்று தேவனோடும், அவரது தூதர்களோடும் நெருக்கமாக இணைந்திருப்பதுபோன்று இருப்பவர்கள், சிறப்பான மேலான வழியை அவர்களுக்குக் காட்டவேண்டியது எவ்வளவு முக்கியமான காரியமாகும்? மிருக இச்சைகளால் அடக்கியாளப்படும் வகுப்பினருக்குமுன்பாக, பளிச்சென்று தெரியத்தக்கதாக கற்போடும் ஒழுக்கத்தோடும் காணப்படவேண்டியது எவ்வளவு முக்கியமான காரியமாகும். ★

# உரத்த சத்தம் தொனிக்கும்பொழுது...!

**“நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படிநடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது” –ரோமர் 13:11.**

இரவிலே ஒரு திருடன் சப்தமின்றி எவரும் அறியாவண்ணம் தந்திரமாக அணுகுவதுபோன்று, உலகமுடிவானது நெருங்கிக் கொண்டிருக்கிறது. மற்றவர்கள் நித்திரைசெய்வதுபோன்று நாமும் நித்திரை செய்யாதபடி, தெளிவான அறிவோடிருக்க ஆண்டவர் அருள்செய்வாராக. சத்தியமானது வெகுசீக்கிரத்தில் மகிமையோடு வெற்றி சிறக்கும். தேவனோடு உடன் ஊழியர்களாக இருப்பதை இப்பொழுது தெரிந்துகொள்ளும் அனைவரும் அந்த சத்தியத்துடன் இணைந்து வெற்றி பெறுவார்கள். காலம் குறுகிவிட்டது. ஒரு மனிதனும் வேலை செய்யக்கூடாத இரவு சீக்கிரமாக வருகிறது....

சீடர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்ட பிறகு, பெந்தெகொஸ்தே நாளில் எத்தனைபேர் மனந்திரும்புதலை பெற்றுக்கொண்டார்களோ, அதேபோன்று, ஒரே நாளில் அநேகர் மனந்திரும்பக்கூடிய நேரம் வந்துகொண்டிருக்கிறது....

சுவிசேஷ அழைப்பு கிடைத்தபோது, அநேகர் அக்கறைகாட்டாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் பரிசீலிக்கப்பட்டு கடுஞ்சோதனைக்கு உட்படுத்தப்பட்டாயிற்று. மலைபோன்ற தடைகள் அவர்களது முகங்களுக்குமுன்பு தெளிவற்றுத் தோன்றி, அணி வரிசையில் அவர்கள் முன்னேறிச்சென்றுவிடாதபடி தடைசெய்கின்றது. விசுவாசம், விடாமுயற்சி, தைரியம் ஆகியவைகள் மூலமாக அநேகர் இந்தத் தடங்கல்களை எதிர்த்துச் சமாளித்து, அந்த மகிமையான வெளிச்சத்தை நோக்கி நடந்துசெல்வார்கள்.

ஏறக்குறை அறியாத உணர்வற்ற நிலையில் நெருக்கமான ஒடுக்கமான பாதையில் தடைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பாதையிலே இடறிவிழத்தக்கதான தடைக்கற்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் உருட்டித்தள்ளப்படும். பொய்யான மேய்ப்பர்கள் தங்களது மந்தைகளைச் சுற்றிலும் போட்டிருக்கின்ற பாதுகாப்புகள் ஒன்றுமில்லாமற்போய்விடும். அநேகமாயிர மக்கள் வெளியேறி, வெளிச்சத்தை ஏற்றுக்கொள்வார்கள். மேலும் வெளிச்சத்தைப் பரப்புவதற்கான ஊழியத்திலும் ஈடுபடுவார்கள். மானிடப் பிரதிநிதிகளோடு சேர்ந்து, பரலோகத்தின் தூதர்களும் இணைந்து வேலைசெய்வார்கள். இவ்வாறு ஊக்கம்பெற்று, சபை நிச்சயமாகவே தனது பரிசுத்த சக்திகளை எல்லாம் போராட்டத்தில் ஈடுபடுத்தி, எழும்பிப் பிரகாசிக்கும். இவ்வாறு தேவனுடைய திட்டமானது நிறைவேற்றப்படுகிறது. இழக்கப்பட்ட முத்துக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

உரத்த சத்தம் (Loud Cry) தொனிக்கும் காலக்கட்டத்திலே, தேவனுடைய செயலாள் உயர்த்தப்பட்ட ஆண்டவரது தலையீட்டால், சபை உதவிபெற்று, மீட்பரைப்பற்றிய அறிவை எங்கணும் மிக ஏராளமாக பரவச்செய்வதின்மூலமாக, ஒவ்வொரு பட்டணத்திற்கும், நகரத்திற்கும் வெளிச்சம் கொடுக்கப்படும். உலகம் முழுவதும் மீட்பைப்பற்றிய அறிவினால் நிறையும். மிகத் தீவிரமான சுறுசுறுப்போடு ஊழியஞ்செய்யும் சக்திகள் தேவ ஆவியின் புதுமலர்ச்சியினால் முடிசூட்டப்பட்டு வெற்றியடைகின்றன. அதின் பயனாக, நிகழ்கால சத்தியமானது, எங்கணும் பளிச்சென்ற ஒளியுடன் பிரகாசிப்பதைக் காணலாம். ★

# உத்தம விசுவாசிகள் விழுந்துபோகமாட்டார்கள்!

**“தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்” —வெளிப்படுத்தல் 14:12.**

வேதவாக்கியங்களை வாசிப்பதற்கும், ஆராய்வதற்கும், மானிட ஞானத்திற்கும் மேலான ஞானம் இப்பொழுது நமக்கு அவசியமாகும். தாழ்மையான இதயங்களோடு தேவனுடைய வார்த்தையை நாம் அணுகுவோமானால், இந்த உலகின் கட்டுப்பாடற்ற சக்திகளுக்கு எதிராக நமக்கு அவர் ஒரு கொடியை உயர்த்துவார். நமது நம்பிக்கையின் ஆரம்பத்தை இறுதிவரை உறுதியாகப் பிடித்துக்கொள்வது மிகவும் கடினமான காரியமாகும். இது சம்பந்தமான காரியத்தில் சாத்தானின் பக்கத்தில் எதிரிடையாக வேலைசெய்கின்ற வேறொரு சக்தி தொடர்ந்து மறைவாக அதின் செல்வாக்கைப் பயன்படுத்துவதால், நெருக்கடி மேலும் அதிகரிக்கிறது. உபத்திரவம் இல்லாமல் இருக்கும்பொழுது சந்தேகிக்க இடமின்றி நல்ல உறுதியான கிறிஸ்தவர்கள் போன்று காணப்படுகிறவர்கள் நமது அணியில் இணைந்துகொள்கிறார்கள். ஆனால், இத்தகையோர் உபத்திரவங்கள் எழும்போது, நம்மைவிட்டு வெளியேறிவிடுவார்கள். நெருக்கடியான நேரத்திலே, தங்களது உள்ளங்களிலே செல்வாக்கு பெற்ற நம்பக்கூடிய தோற்றமளிக்கின்ற வாதத்திற்கு ஒத்த காரியங்களில் ஏதோ ஒரு சக்தி இருப்பது போன்று காண்கிறார்கள். சாத்தான் பலதரப்பட்ட உள்ளங்களுக்கு ஏற்றவாறு, பலவிதமான கண்ணிகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறான். தேவனுடைய பிரமாணமானது பயனற்றதாக ஆக்கப்படும்பொழுது, சபையானது பல கொடுமையான உபத்திரவங்களினால் சலிக்கப்படும். நாம் இப்பொழுது எதிர்பார்க்கிறதைவிட ஏராளமான மக்கள் வஞ்சிக்கும் ஆவிகளுக்கும், பிசாசுகளின் கொள்கைகளுக்கும் செவிசாய்ப்பார்கள். இக்கட்டான இடங்களில் கொண்டுவரப்படும்போது, பலப்படுவதற்குப்

பதிலாக, உண்மையான திராட்சைச்செடியின் ஜீவனுள்ள கொடிகளாக தாங்கள் நிலைத்திருக்கவில்லை என்பதை நிரூபித்துவிடுவார்கள்...

தேவனுடைய பிரமாணத்தை இந்த உலகமானது பயனற்றதாகச் செய்யும்போது, உண்மையாகவே கீழ்ப்படிதலிலும், நீதியிலும் வாழும் மக்கள்மீது எத்ததைய விளைவை ஏற்படுத்துகிறது. இந்தத் தீய சக்தியின் பலமானபோக்கிலே அடித்துச்செல்லப்பட்டு விடுவார்களா? இருளின் பிரபுவாகிய சாத்தானின் கொடியின்கீழ் அநேகர் அணிவகுத்து நிற்பதால், தேவனுடைய பிரமாணத்தை கைக்கொண்டு நடக்கும் மக்கள் பற்றுறுதியிலிருந்து விலகி விடுவார்களா? ஒருபோதும் விலகமாட்டார்கள்! கிறிஸ்துவிலே நிலைத்திருக்கும் ஒவ்வொருவரும் தவறவும் மாட்டார்கள். விழுந்துபோகவும் மாட்டார்கள். அவரது பின்னடியார்கள் உலகத்தில் ஆட்சிசெய்யும் எந்த அரசர்களுக்கும் தாழ்ந்து பணிவதைவிட, அதற்கும் மேலான அதிகாரத்திற்கு (தேவனுக்கு) கீழ்ப்படிதலோடு வணக்கஞ்செலுத்துவார்கள். தேவனுடைய பிரமாணங்கள் இகழ்ச்சி செய்யப்படும்போது, அநேகர் சத்தியத்தை அடக்கி, மட்டுப்படுத்தி குறைந்த மதிப்பையே காட்டுவார்கள். ஆனால் உத்தமமான மக்கள் அதிக ஊக்கத்தோடு தனிச்சிறப்புள்ள மென்மையான சத்தியங்களை உயர்த்திப்பிடிப்பார்கள். நாம் நமது போக்கிற்கு, தனித்து விடப்படுவதில்லை.... தாழ்மையான இதயங்களோடு அவரது வசனத்தை ஆராய்ந்து, அவருடைய ஆலோசனையைக்கேட்டு, நமது சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு விட்டுக்கொடுக்கவேண்டும். தேவனுடைய உதவியின்றி நம்மால் எதையும் செய்யமுடியாது. ★

# ஒரு ஆத்துமாவையாவது ஆதாயஞ்செய்திட பாடுபடுங்கள்!

**“உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?” —லூக்கா 15:4.**

ஒரு ஆத்துமாவின் மனந்திரும்புதலிற்காக அனைத்து வழிமுறைகளையும் இயலும் அளவிற்கு வலிய பயன்படுத்தவேண்டும். கிறிஸ்துவிற்காக ஒரு ஆத்துமா ஆதாயப்படுத்தப்படும்பொழுது, ஆதாயஞ்செய்பவரைச் சுற்றிலும் பரலோகத்தின் வெளிச்சம் பளிச்சிடும். மேலும் இவ்வெளிச்சம் தீயொழுக்கமாகிய இருளை ஊடுருவிச்சென்று, அநேக ஆத்துமாக்களை இரட்சிக்கும். காணாமற்போன ஒரு ஆட்டைக் காப்பாற்றுவதற்காக கிறிஸ்து தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு வருவாரானால், நாம் அதைவிடக் குறைவாகச் செய்துவிட்டு, சரியாகத்தான் செய்கிறோம் என்று நம்மை நாமே நிரூபித்துக்காட்டமுடியுமா? கிறிஸ்து ஊழியம் செய்ததைப்போன்றும் தியாகம் செய்ததைப்போன்றும் நாம் செய்யாமல், அதை அலட்சியஞ்செய்வோமானால், அது ஒரு பரிசுத்த நல்லெண்ணத்திற்கு எதிரான மறுதலித்தலாக இருக்காதா? தேவனுக்கு எதிரான ஒரு நிந்தனையாக இருக்காதா?

உலகம் முழுவதிலும் ஒரு அபாய அறிவிப்பை முழக்குங்கள். ஆண்டவரின் வருகையின் நாளானது வெகு சமீபம் என்றும் மிகவும் துரிதமாக வந்துகொண்டிருக்கிறது என்றும் மக்களுக்குச் சொல்லுங்கள். ஒருவரையும் விட்டுவிடாதபடி அனைவருக்கும் எச்சரிப்பைக் கொடுங்கள். தவறுகளிலே நிலைத்திருக்கும்— இரங்கத்தக்க நிலையிலிருக்கும் ஆத்துமாக்களிடத்தில் நாம் இருந்திருக்கலாம். நாகரீகமற்ற—முரட்டுத்தன்மை வாய்ந்த மக்கள்

மத்தியிலே வைக்கப்பட்டிருக்கலாம். சத்தியத்தின்படி நோக்கிப்பார்ப்பின் மற்றவர்களைவிட நாம் அதிகமான செய்திகளைப் பெற்றிருக்கிறோம். அதே சத்தியங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்துவழங்குவதற்கு நாம் கடனாளிகளாக இருக்கிறோம்.

இழப்பதற்கு நமக்கு நேரமில்லை. முடிவு வெகு சமீபம். சத்தியத்தைச் சொல்வதற்கு இடம்விட்டு இடம் செல்லும் வழிகள் வலதுபுறத்திலும், இடது புறத்திலும் வெகு சீக்கிரத்தில் ஆபத்துகளால் சூழப்பட்டு அடைக்கப்பட்டுவிடும். தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு ஊழியஞ்செய்வதற்குச் சாதகமாக இருக்கின்ற நிலை மாறி, அவர்கள் ஊழியஞ்செய்யக்கூடாதபடிக்கு அவர்கள் வழிகள் அனைத்திலும் தடங்கல்கள் வைக்கப்படும். நமது ஊழியத்தை நேர்மையான விதத்தில் நாம் நோக்கிப்பார்த்து, முனைந்து போராட்டத்தில் ஈடுபடத்தக்கதாக எவ்வளவு சீக்கிரத்தில் முன்னேறவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரமாக முன்னேறவேண்டும். தேவனால் எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தின்படி, பதுங்கியிருந்துகொண்டு, தீவிரமிக்க ஆற்றலோடு இருளின் சக்திகள் வேலைசெய்துகொண்டிருக்கிறதை நான் அறிவேன். எப்படி ஓநாய் தனக்கான இரையைப் பிடிக்கின்றதோ, அதைப்போன்று இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கிறவர்களை நோக்கி சாத்தான் தந்திரமான சூழ்ச்சி நடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறான். இப்பொழுது கொடுக்கத்தக்கதான எச்சரிப்புகள் நமக்கு உண்டு. நாம் செய்யவேண்டியதான வேலையும் நமக்கு உண்டு. ஆனால் சீக்கிரத்தில் நாம் கற்பனைசெய்யும் அளவிற்கும் மேலாக ஊழியஞ்செய்வது மிகவும் கடினமானதாக மாறிவிடும். தேவனே, எங்கள் தலைவரான இயேசுவின்மீது எங்களது கண்களைப் பதித்தவர்களாக பொறுமையோடும் விடாமுயற்சியோடும் வெற்றியைப் பெறுவதற்காக முன்னேறிச்செல்ல வெளிச்சத்தின் வழியிலே எங்களை நாங்கள் வைத்துக்கொள்ள உதவிசெய்யும்.

நமக்கு இந்த பூமிக்குரிய—பாவத்தின் எல்லைக்குட்பட்ட வாழ்க்கையாக நமது வாழ்வு இருந்தபோதிலும், செய்யும் சேவையிலே மிக மேலான மகிழ்ச்சியும் உயர்வான கல்வியும் இருக்கிறது. எதிர்காலத்து நிலைமையிலே பாவம் நிறைந்த மானுடத்தின் குறைபாடுகளால் தடைசெய்யப்படாமல், சேவைசெய்வதிலே நம்முடைய உன்னத மகிழ்ச்சியும் நமது உயர்தரமான கல்வியும் காணப்படும். ★

ஜனவரி 22

# தானியேல், வெளிப்படுத்தல் புத்தகங்களைப் படியுங்கள்!

**"இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைவாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது"**

**—வெளிப்படுத்தல் 1:3.**

சபைகளைத் தட்டி எழுப்பக்கூடிய ஒரு தூதானது கூறி அறிவிக்கப்படவேண்டும். வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக அனைத்து முயற்சிகளும் செய்யப்படவேண்டும். நமது மக்களுக்கு மாத்திரமல்ல, உலகம் முழுவதற்கும் கொடுக்கப்படவேண்டும். தானியேல், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய இரு புத்தகங்களிலுமுள்ள தீர்க்கதரிசனங்கள் தேவையான விளக்க விவரங்களோடு சின்னஞ்சிறு புத்தகங்களாக அச்சிடப்பட்டு, உலகம் முழுவதற்கும் அனுப்பப்படவேண்டும். தெளிவான வரிகளில், நமது சொந்த மக்கள் முன்னிலையில் வைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

தேவகுமாரனின் மாம்சத்தைப் புசித்து, அவரது இரத்தத்தை பானம்பண்ணும் தேவப் பிள்ளைகள், தானியேல், வெளிப்படுத்தின விசேஷங்கள் ஆகிய புத்தகங்களிலே ஆவியானவரால் தூண்டப்பட்டு எழுதப்பட்ட சத்தியங்களை எடுத்துக்கொடுப்பார்கள். அடக்கி ஒடுக்கப்படாத சக்திகளை அவர்கள் செயல்படுத்தத் துவங்குவார்கள். மக்களின் உள்ளங்களுக்கு இதுவரை மறைத்துவைக்கப்பட்டிருந்த இரகசியமான காரியங்களைத் கூறியறிவிக்கத்தக்கதாக, பாலகர்களின் வாய்கள் திறக்கப்படும்.

அநேக தீர்க்கதரிசனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக—துரிதமாக நிறைவேறும். வல்லமையின் ஒவ்வொரு மூலக்கூறும் வேலைசெய்வதற்காகக் கூட்டி இணைத்து அமைக்கப்படவிருக்கிறது. பழைய வரலாறு மீண்டும் திரும்பும். பழைய போராட்டங்கள் ஒரு புதிய வாழ்விற்காக மீண்டும் எழும்பும். ஆபத்துகள் அனைத்துப் பக்கங்களிலும் தேவனுடைய

மக்களை இடறுதலுக்கு உட்படுத்தும். உச்சக்கட்ட வேகமானது, மானிடக் குடும்பங்களை அடக்கியாள ஆரம்பித்துக்கொண்டிருக்கிறது. இந்த வேதமானது, உலகிலுள்ள அனைத்தையும் ஊடுருவிச் செல்கின்றது....

தானியேல் புத்தகத்தை வெளிப்படுத்தலோடு இணைத்து படிக்கவும். ஏனெனில், வரலாறு மீண்டும் திரும்பும்.... நமக்கு மார்க்க சம்பந்தமான அனைத்து அனுகூலங்களும் இருக்கின்றன. நாம் அறிந்திருக்கிறதைவிட, மேலும் மிக அதிகமாக கண்டிப்பாக அறிந்திருக்கவேண்டும். செய்த பாவத்திற்காக மனம் நொந்து, தேவனுடைய வசனத்தைத் தேடி, அவர் மாத்திரமே கொடுக்கக்கூடிய மிகவும் நீளமான அகலமான—ஆழமான—உயரமான சத்திய அறிவிற்காக ஜெபித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த சத்தியங்கள் விளக்கி வெளிப்படுத்தப்படுவதைக் காண தூதர்கள் விருப்பத்தோடு இருக்கிறார்கள். உலக சரித்திரத்தின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில், இறுதிநாட்களைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நாம் படிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்திலுள்ள வேத வாக்கியங்கள் சத்தியத்தால் நிறைந்திருக்கிறது. சாத்தான் அநேக ருடைய உள்ளங்களை குரு ட்டுத்தனத்திற்குள்ளாக்கியிருக்கிறான். எனவே, வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்காமலிருப்பதற்கு ஏதாவது சாக்குப்போக்குச் சொல்வதில் மகிழ்சி அடைந்திருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்து தமது ஊழியக்காரனாகிய யோவான் மூலமாக கடைசி நாட்களில என்ன நடக்கப்போகிறது என்பதை உறுதியாகக் கூறியிருக்கிறார். “இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைவாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.” ★

# சகிப்புத்தன்மை இல்லாத நிலையும் உபத்திரவமும்!

**“அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்” —யோவான் 15:20.**

எவ்வளவு காலம் சாத்தான் நிலைத்திருக்கிறானோ, எவ்வளவு காலம் கிறிஸ்தவம் உயிர்த்துடிப்பான வல்லமையோடு நிலைபெற்றிருக்குமோ, அவ்வளவு காலத்திற்கு உபத்திரவமானது அதின் பலதரப்பட்ட வடிவங்களில் முன்னேற்றமடைந்த ஒரு கொள்கையாக இருக்கும். இருளின் சேனைகளுக்கு எதிரான அணியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாத எந்த நபரும் தேவனைத் சேவிக்க முடியாது. தீய தூதர்கள் தங்கள் கரங்களில் பற்றிப்பிடித்திருக்கும் இரையை, இத்தகைய நபரின் செல்வாக்கு பறித்துக்கொண்டுவிடுமோ என்ற பயந்து குழப்பமடைந்து, அந்த நபரைத் தாக்குகிறார்கள். தீய மனிதர்கள் அந்த நபரின் முன்மாதிரியினால் கண்டனஞ்செய்யப்பட்ட நிலையில் தீய தூதர்களுடன் இணைந்து. கவர்ச்சியான சோதனைகளைக் கொடுத்து தேவனிடமிருந்து அந்த நபரைப் பிரித்துவிட முயற்சிப்பார்கள். இவர்கள் வெற்றியடையாத நிலையில், மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு வல்லமையானது பயன்படுத்தப்படும்.

இயேசு மனிதனுக்காக, பரிந்துபேசுபவராக பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருக்கும்வரை, பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்படுத்தும் செல்வாக்கானது ஆளுகைசெய்வோராலும், மக்களாலும் உணரப்படுகிறது. மேலும் ஆவியானவர் நாட்டின் சட்டங்களை ஓரளவிற்கு இன்னும் அடக்கியாளுகிறார். இந்த சட்டங்கள் மட்டும் இல்லாதிருக்குமானால்,

இப்பொழுது இருப்பதைவிட உலகம் மேலும் படுமோசமான நிலையில் இருக்கும். நம்மை ஆளுகைசெய்பவர்களில் அநேகர் சாத்தானின் சுறுசுறுப்பான எடுபிடிகளாக இருந்து செயல்படும்போது, நாட்டைத் தலைமை தாங்கி நடத்துபவர்கள் மத்தியில் தேவனுக்காகச் செயல்படத்தக்கதாக சில முக்கியமான பிரதிநிதிகள் இருக்கிறார்கள். எதிராளி தேவனுடைய வேலையைத் தடைசெய்யத்தக்கதாக, அவனுக்காக உழைப்பவரின் மனதை ஏவி, சில நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, அவைகளை எடுத்துக்கூறச் செய்கிறான். ஆனால், தேவனுக்குப் பயப்படுகின்ற அரசியல் வல்லுநர்கள் பரிசுத்த தூதர்களால் தூண்டப்பட்டு, எவரும் பதில்கூறமுடியாத அளவிற்கு, விவாதங்களை நடப்பித்து அவ்வாறு முடிவுசெய்யப்படும் கருத்துக்களை எதிர்க்கிறார்கள். இவ்வாறாக வல்லமையோடு கிரியைசெய்யும் தீய சக்திகளின் போக்கை, ஒரு சில மனிதர்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துவிடுவார்கள். மூன்றாம் தூதனின் தூது அதின் வேலையைச் செய்யத்தக்கதாக, சத்தியத்தின் விரோதிகளால் கொண்டுவரப்படும் எதிர்ப்புகள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்படும். இறுதி எச்சரிப்பு கொடுக்கப்படும்போது, தலைமை தாங்கி நடத்தும் எந்த முக்கிய தலைவர்களைக்கொண்டு ஆண்டவர் இப்பொழுது ஊழியத்தை நடப்பிக்கின்றாரோ, அந்த முக்கியத் தலைவர்களது கவனமானது ஈர்க்கப்படும். அவர்களில் சிலர் அந்தத் தூதை ஏற்றுக்கொண்டு, இக்கட்டுக்காலம் நெடுகிலும் தேவனுடைய மக்களோடு இணைந்து நிற்பார்கள்.

"சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்" –யோவேல் 2:23.

"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 2:17,21) என்று தேவன் உரைத்திருக்கிறார்.

இந்த மாபெரும் சுவிசேஷ ஊழியம், அதின் ஆரம்பக்கட்டத்தில் தேவனுடைய வல்லமையோடு காணப்பட்டதைவிட, அது முடிவுபெறும்வேளையில், அதிகமான வெளிப்பாட்டோடு காணப்படும். ★

# சபை வீழ்ச்சியடையாது!

**“இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” —மத்தேயு 16:18.**

தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்பவர்கள், வலுசர்ப்பம் மற்றும் அவனது சேனையின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். இந்த உலகத்தில் உள்ளவர்களை தனது குடிமக்களாக சாத்தான் எண்ணியிருக்கிறான். விழுந்துபோன சபைகள் அனைத்தையும் அடக்கி ஆண்டு கொண்டிருக்கிறான். ஆனால் அங்கு ஒரு சிறுகூட்டம் அவனது ஆதிக்கத்தை எதிர்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களை இந்தப் பூமியிலிருந்தே அவன் அழித்துப்போடக்கூடுமானால் அவனது வெற்றி நிறைவடைந்துவிடும். இஸ்ரவேல் புத்திரரை அழிப்பதற்கு எப்படி அஞ்ஞான ஜாதிகளை அவன் தூண்டிவிட்டானோ, அதைப்போன்று, வருங்காலத்தில் வெகுசீக்கிரத்தில் தேவனுடைய மக்களை அழிப்பதற்காக, துன்மார்க்க சக்திகளைத் தூண்டிவிடுவான்.... அவர்களது ஒரே நம்பிக்கை தேவனுடைய இரக்கத்தில்தான் இருக்கிறது! ஜெபம் மாத்திரமே அவர்களது ஒரே பாதுகாப்பாக இருக்கும்.

எஸ்தர் இராணியின் நாட்களிலே, தேவனுடைய மக்களுக்கு வந்த கொடிய அனுபவங்கள், தனிப்பட்ட விதத்தில் அந்தக் காலத்திற்குமட்டும் உரியதல்ல. காலங்கள் நெடுகிலும், உலகின் முடிவுநேரம்வரை உற்றுநோக்கின வெளிப்படுத்தின விசேஷகன் “வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று” (வெளிப்படுத்தல் 12:17) என்று உறுதியாகக்

கூறினார். இப்பொழுது உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிற சிலர் அந்த வார்த்தைகளின் நிறைவேறுதலைக் காண்பார்கள்.

சாத்தானுக்கு அவனுடைய காலம் குறுகிக்கொண்டிருக்கிறதால் அவனுடைய கோபத்தின் உக்கிரம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அவனுடைய வஞ்சகத்தின் அழிவின் வேலைகள் இக்கட்டுக்காலத்திலே உச்சக்கட்டத்தை அடையும்.

மக்களை வஞ்சிப்பதற்காக சாத்தான் தன்னுடைய அற்புதங்களை நடப்பிப்பான். அவனது மேலாண்மையே மிகவும் உயர்ந்தது எனக்காட்டி நிலைநாட்டுவான். சபை விழுந்துபோகப் போவதுபோல் தோன்றும். ஆனால் விழுகிறதில்லை. சீயோனிலுள்ள பாவிகள், அருமையான கோதுமை மணியினின்று பதர் நீக்கப்படுவதுபோல், சலிக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள். சபை நிலைத்திருக்கும். இது ஒரு பயங்கரமான–கடுமையான–சோதனை நேரமாகும். எனினும், இக்காரியம் நடைபெற்றே ஆகவேண்டும். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே தொடர்ந்து வெற்றி சிறந்தவர்களே இரட்சிக்கப்படுவார்கள். இவர்களது சாட்சியின் வசனமானது உண்மையும் உத்தமமுமாக இருக்கும். பாவத்தின் மாசு கறையின்றி இவர்கள் காணப்படுவார்கள். அவர்களது வாய்களில் கபடம் இருப்பதில்லை.

ஒரு தாய்கூட தன் பாலகனை மறக்கலாம். ஆனால் “நான் உன்னை மறப்பதில்லை” என்று தேவன் கூறுகிறார். தேவன் தமது பிள்ளைகளை மென்மையான—உள்ளார்ந்த—ஆர்வமுள்ள அக்கறையோடு நினைத்துப்பார்க்கிறார். அவரது பராமரிப்பில் இருக்கும் பிள்ளைகளை ஒருபோதும் மறக்காமல் இருக்கத்தக்கதாக, தனக்கு முன்பாக ஒரு ஞாபகப் புத்தகத்தை வைத்திருக்கிறார். ★

# போலியான ஓர் எழுப்புதல்!

**“மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப் பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், துஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், ... தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு”**

**–2 தீமோத்தேயு 3:1,2,4.**

பூமியின்மீது தேவன் அனுப்பப்போகும் நியாயத்தீர்ப்புகள் (தண்டனைகள்) இறுதியாக மக்களைச் சந்திப்பதற்கு முன்னர், அப்போஸ்தலர் காலத்திற்கு பின்னான காலங்களிலிருந்து இன்று வரை காணப்படாத அளவிற்கு ஆண்டவருடைய மக்கள் மத்தியிலே எழுப்புதலோடுகூடிய ஆரம்பகாலத்தில் இருந்த தேவ பக்தி காணப்படும். ஆவியும், தேவனுடைய வல்லமையும் அவரது பிள்ளைகளின்மீது ஊற்றப்படும். இவ்வுலகத்தின்மீதுகொண்ட அன்பானது, தேவன்மீதும் அவரது வசனத்தின்மீதும் கொண்டிருந்த அன்பை அகற்றிப்போட்டது. எனவே, அப்படிப்பட்ட சபைகளினின்று அநேகர் அந்தச் சமயத்தில் விலகிக்கொள்வார்கள். ஆண்டவரது இரண்டாம் வருகைக்காக ஒரு ஜனத்தை ஆயத்தம்பண்ணவேண்டிய அச்சமயத்தில், கூறியறிவிக்கவேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருந்த மாபெரும் சத்தியங்களை அநேக ஊழியர்களும், மக்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஆத்துமாக்களுக்கு விரோதியான சாத்தான் இந்த வேலையைத் தடைசெய்ய விரும்புகிறான். இத்தகைய இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படும் முன்னரே, ஒரு போலியை அறிமுகப்படுத்தி அந்த வேலையைத் தடைசெய்ய அவன் முயற்சிப்பான். தனது வஞ்சகமிக்க வல்லமைக்கடியில் தான் கொண்டுவருகின்ற

சபைகளில் தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதம் ஊற்றப்பட்டதுபோன்று தோற்றமளிக்கச் செய்வான். ஒரு மாபெரும் மார்க்க சம்பந்தமான எழுப்புதல் ஏற்பட்டதுபோன்று எண்ணப்பட்டு, வெளியரங்கமாகக் காட்டப்படும். திரளான கூட்டத்தார் தேவன் தங்களுக்காக அற்புதமான முறையில் கிரியை செய்கிறார் என்று எக்களிப்பார்கள். ஆனால் அந்த வேலையோவெனில் வேறொரு ஆவியினால் ஏற்பட்டதாகும். மார்க்கசம்பந்தமான மாறுவேடத்திற்கு அடியில், கிறிஸ்தவ உலகத்தின்மீது சாத்தான் தனது செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிப்பான்.

கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட அநேக எழுப்புதல்களில் சாத்தானின் இதே செல்வாக்கானது பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ பயன்படுத்தப்பட்டுவந்தது. எதிர்காலத்தில் மிகப் பரவலான இயக்கங்களில் இக்காரியம் வெளிப்படும். அந்தக் கூட்டங்களில் உணர்ச்சிகளின் எழுச்சி காணப்படும். பொய்யோடு உண்மையானது கலந்துகிடக்கும். இவ்வாறு தவறான வழியில் நடத்துவதற்காக நன்கு பொருத்தமாக அமைத்துக் காட்டப்படும். எனினும் எவரும் ஏமாற்றமடையத் தேவையில்லை. தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்திலே இத்தகைய இயக்கங்களின் தன்மைகளைத் தீர்மானிப்பது கடினமல்ல. எங்கெல்லாம் வேதாகம சாட்சியை மக்கள் அலட்சியப்படுத்துகிறார்களோ, எங்கெல்லாம் உலகப்பற்றைத் துறந்து தன்னலத்தை அறவே வெறுக்கும்படி வேண்டுகின்ற மிகத்தெளிவான ஆத்தும பரிசீலனை செய்கின்ற சத்தியங்களினின்று மக்கள் விலகிவிடுகிறார்களோ, அங்கெல்லாம் தேவனுடைய ஆசீர்வாதம் பொழியப்படாது என்று நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளலாம். மேலும் கிறிஸ்து தாமே கொடுத்த கட்டளையின்படியே: “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்”(மத்தேயு 7:16) என்ற வசனத்தின்படி இந்த இயக்கங்கள் அனைத்தும் தேவ ஆவியினால் நடைபெறுபவையல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. ★

# துணிகரமான—அக்கறையற்ற தாமதம்!

**“இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்”**

**—வெளிப்படுத்தல் 16:15.**

பொல்லாத ஊழியக்காரன், “என் ஆண்டவன் வர நாள் செல்லும்” என்று தன் இருதயத்தில் செல்லிக்கொள்ளுகிறான். கிறிஸ்து வரமாட்டார் என்று அவன் சொல்லுகிறதில்லை. அவரது இரண்டாம் வருகையைக்குறித்து கேலிசெய்கிறதுமில்லை. ஆனால் அவனது இதயத்திலும் மற்றும் அவனது செயல்கள், வார்த்தைகள் மூலமாகவும் ஆண்டவரின் வருகை தாமதமாகும் என்று உறுதியாகத் தெரிவிக்கிறான். ஆண்டவர் சீக்கிரமாக வருகிறார் என்பதைக்குறித்து மற்றவர்கள் மனதிலே உறுதியாகக் கொண்டிருக்கும் கருத்தை அகற்றிப்போடுகிறான். அவனுடைய செல்வாக்கு துணிகரமான அக்கறையற்ற தாமதத்திற்கு மனிதரை வழிநடத்திச்செல்லுகிறது.... அவன் உலகத்தோடு கலந்திருக்கிறான்.... இது ஆபத்தான நிலையில் உலகத்தோடு ஒன்றிப்போகுதலாகும். உலகத்தோடு அவனும் சேர்ந்து கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளுகிறான். “நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்”—வெளிப்படுத்தல் 3:3. கிறிஸ்துவின் வருகை பொய்யான போதகர்களை அதிர்ச்சியடையச்செய்யும். அவர்கள் “சமாதானம், சௌக்கியம்” என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எருசலேமின் விழுகைக்கு முன்பாக இருந்த ஆசாரியர்களையும், போதகர்களையும் போல, உலகத்தின் செழுமையையும் மகிமையையும் அனுபவிக்கத்தக்கதாக சபையை நோக்கிப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காலங்களின் அடையாளங்கள் இதை முன்னறிவிக்கின்றன. ஆனால் வேதவசனம் இதைக்குறித்து என்ன கூறுகிறது? “...அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்” (1 தெசலோனிக்கேயர் 5:3) என்று கூறுகிறது. பூமியில் வாசஞ்செய்யும் அனைவர்மேலும், இந்த

உலகத்தை தங்களது வீடாக வைத்துக்கொண்டிருக்கிறவர்கள்மேலும் தேவனுடைய நாள் ஒரு கண்ணியைப்போல வரும்.... கலகம் நிறைந்த—தேவனுக்கு சம்பந்தமில்லாத—களியாட்டங்கள் நிறைந்த—இந்த உலகம் நித்திரையிலிருக்கிறது. இம்மைக்குரிய பாதுகாப்போடு நித்திரையில் ஆழ்ந்திருக்கிறது. மனிதர் ஆண்டவரின் வருகையை வெகுதூரத்திற்கு தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறார்கள். எச்சரிக்கைகளைக்குறித்து அவர்கள் நகைக்கிறார்கள். "சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்"–2 பேதுரு 3:4. "நாளையத்தினம் இன்றையத்தினம்போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள்"–ஏசாயா 56:12. மேற்கூறப்பட்ட வசனங்களைக்கூறி, பெருமையுடன் தற்புகழ்ச்சிசெய்கிறார்கள். சிற்றின்ப வேட்கையிலே மேலும் ஆழமாகச் செல்வோம் என்கிறார்கள். ஆனால் "இதோ, திருடனைப்போல் வருகிறேன்" என்று கிறிஸ்து கூறுகிறார். அவர் வருவார் என்கிற வாக்குத்தத்தம் எங்கே என்று உலகத்தார் ஏளனஞ்செய்கின்ற அந்த நேரத்திலேயே, அடையாளங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. "சமாதானம், சௌக்கியம்" என்று உரத்தசத்தமிடும்பொழுது அழிவு சடுதியாக வந்துகொண்டிருக்கிறது. சத்தியத்தைத் தள்ளிவிடுகிற கேலிசெய்கின்ற அந்த நபர் துணிகரமடையும்பொழுது, கொள்கைக்கு எந்த மதிப்பும் கொடுக்காமல், பலவிதமான பணம் சம்பாதிக்கும் வழிகளிலே வேலைகள் அதினதின் போக்கிலே தொடர்ந்து செய்யப்படும்பொழுது, மாணவன் வேதாகமத்தைத்தவிர, மற்ற அனைத்துக் காரியங்களைப்பற்றிய அறிவையும் ஆர்வத்தோடு தேடும்பொழுது, கிறிஸ்து திருடனைப்போல் வருகிறார்! ★

# வெற்றியுடன் பெற்றுக்கொள்ள ஒரு பரலோகம்!

**“ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்” —லூக்கா 21:36.**

நாம் வாழுகின்ற இந்நாட்கள் முக்கியமான பக்திவிநயமான நாட்களாகும். இவ்வுலகினின்று தேவனுடைய ஆவியானவர் படிப்படியாக, ஆனால் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்....

இவ்வுலகக் காரியங்களின் நிலை, துன்பம் மிகுந்த காலங்கள் நம்மீது நேராக வந்துவிட்டன என்பதைக் காட்டுகிறது. அன்றாடச் செய்தித்தாள்கள், வெகு சீக்கிரத்தில் பயங்கரமான ஒரு போராட்டம் நடைபெறவிருக்கிறது என்பதை முழுக்க முழுக்க சுட்டிக்காட்டுகின்றன. துணிகரமான கொள்ளைகள் அடிக்கடி சம்பவிக்கும் நிகழ்வுகளாக இருக்கின்றன. வேலை நிறுத்தங்கள் என்பது ஒரு சாதாரண காரியமாகிவிட்டது. கொலைகளும், களவுகளும் எங்கும் நடைபெறுகின்றன. பிசாசுபிடித்த மனிதர்கள், ஆண்கள் பெண்கள் சின்னஞ்சிறார்களுடைய உயிர்களைப் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். மனிதர்கள் தீமையின் சக்தியில் மயங்கியவர்களாக அத்துடன் ஒன்றுபட்டிருக்கிறார்கள். தீமையின் ஒவ்வொரு வகைப்பிரிவும் நிலைபெற்றிருக்கின்றது.

உலகிலுள்ள அனைத்தும் ஒரு குழப்பத்திலிருக்கிறது. காலத்தின் அடையாளங்கள் பேரிடர்களை முன்னறிவிக்கின்றன. இனி நடைபெறப்போகும் சம்பவங்கள் முன்னரே அவைகளின் நிழல்களைப் படியவைத்துக்கொண்டிருக்கின்றன. தேவ ஆவியானவர் இவ்வுலகினின்று எடுத்துக்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார். கடலிலும், தரையிலும்

பயங்கரச் சம்பவங்கள் ஒன்றையொன்று பின்தொடர்ந்துவருகின்றன. புயல்கள் நிலநடுக்கங்கள், நெருப்புகள், வெள்ளங்கள், கொலைகள் ஆகியவை அனைத்துத் தரங்களிலும் காணப்படுகின்றன. மனிதர் தாங்கள் தெரிந்துகொண்ட கொடிக்கு அடியில் தாங்களாகவே அணிவகுத்து நிற்கின்றார்கள். பரபரப்போடு தாங்கள் தெரிந்துகொண்ட இயக்கங்களின் தலைவர்களுக்காக விழிப்புடன் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது ஆண்டவரின் வருகைக்காக விழிப்புடன் காத்துக்கொண்டு உழைத்துக்கொண்டிருக்கிற ஒரு கூட்டம் உண்டு. இன்னொரு கூட்டம் முதன்முதலாக மருளவிழுந்துபோன அந்த படைத்தலைவனுக்கடியில் அவர்கள் வரிசையை நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். வெகுசிலரே தங்களது இதயத்தோடும், ஆத்துமாவோடும் "அறவே வெறுத்துத்தள்ளவேண்டிய நரகம் ஒன்று உண்டு, பெற்றுக்கொள்ளவேண்டிய பரலோகம் ஒன்று உண்டு" என்று விசுவாசிக்கிறார்கள்.

நாம் அறியாத நிலையில் அந்த நெருக்கடி நேரம் மெல்ல மெல்ல நம்மீது வந்துகொண்டிருக்கிறது. சூரியன் வழக்கம்போல வானத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.... மனிதர்கள் இன்னும் புசித்துக்கொண்டும், குடித்துக்கொண்டும், நாட்டிக்கொண்டும், கட்டிக்கொண்டும், பெண்கொண்டும், பெண் கொடுத்தும் இருக்கிறார்கள். வியாபாரிகள் இன்னும் வாங்கிக்கொண்டும், விற்றுக்கொண்டும் இருக்கிறார்கள். மனிதர் ஒருவருக்கொருவர் விரோதமாக முட்டி மோதிக்கொண்டு உயர்ந்த இடத்தைப் பெறுவதற்காகப் போட்டிபோட்டு போராடிக்கொண்டிருக்கிறார்கள். சிற்றின்ப விரும்பிகள் சினிமா கொட்டகைகளிலும், குதிரைப் பந்தயங்களிலும், சூதாட்ட நரகங்களிலும் இன்னும் கூடிக் குவிந்துகொண்டிருக்கிறார்கள். அங்கு அதிகமான பரபரப்பு காணப்படுகிறது. ஆனால் தவணையின் வேளை துரிதமாக முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது. உலகிலுள்ள ஒவ்வொருவருடைய காரியமும் நித்தியமாகத் தீர்மானிக்கப்படப்போகிறது. ஒலிவ மலையினின்று ஆண்டவரால் கூறப்பட்ட, நூற்றாண்டுகள் நெடுகிலும் பக்திவிநயத்தோடு நம்மை வந்து சேருகின்ற, எச்சரிப்பின் வார்த்தைகள்: "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாத படிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 21:34) என்று கூறுகிறது. ★

# விழிப்போடிருப்பவர்கள்மீது பொழியப்படும் ஆசீர்வாதங்கள்!

**"எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்" —லூக்கா 12:37.**

வரப்போகும் நியாயத்தீர்ப்புகளைக்குறித்து (தண்டனைகளைக் குறித்து) தேவன் எல்லாக் காலங்களிலுமுள்ள மனிதருக்கு எச்சரிப்பு கொடுத்திருக்கிறார். யாரெல்லாம் தாங்கள் வாழ்ந்த காலத்திற்கேற்ற அவரது தூதிலே விசுவாசம் வைத்திருந்தார்களோ, யாரெல்லாம் அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தவர்களாக அந்த விசுவாசத்தை செயல்படுத்தினார்களோ, அவர்கள் அனைவரும் கீழ்ப்படியாதவர்கள்மேலும், அவிசுவாசிகள்மேலும் விழுந்த தண்டனைகளிலிருந்து தப்பித்துக்கொண்டார்கள். "கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" (ஆதியாகமம் 7:1) என்றார். நோவா கீழ்ப்படிந்தான். இரட்சிக்கப்பட்டான். "நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்றான்"—ஆதியாகமம் 19:14. இவ்வாறு லோத்திற்கு செய்தி கிடைத்தது. லோத்து பரலோக தூதர்களின் பாதுகாப்பிற்கடியில் தன்னை வைத்துக்கொண்டான். இரட்சிக்கப்பட்டான். இதைப்போன்று எருசலேமின் அழிவைக்குறித்து சீடர்களுக்கு எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. வரப்போகும் அழிவிற்கான அடையாளத்தை விழிப்போடு கவனித்துக்கொண்டிருந்தவர்கள் பட்டணத்தினின்று ஓடி, அழிவிற்குத் தப்பிவிட்டார்கள். அதேபோன்று, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றியும், இந்த உலகத்தின்மேல் வரப்போகின்ற அழிவைப்பற்றியும் இப்பொழுது எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. இந்த எச்சரிப்பைக்குறித்து அக்கறையோடு கவனஞ்செலுத்துபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

அவரது வருகையின் சரியான நேரத்தை நாம் அறியாதிருப்பதால், விழிப்போடு இருக்கவேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர் களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்"—லூக்கா 12:37. ஆண்டவரின் வருகைக்காக விழிப்போடு காத்துக் கொண்டிருப்பவர்கள் வீணாக—விருதாவாக காத்துக்கொண்டிருக்க வில்லை. கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்குதல், ஆண்டவருக்கும், மீறுதலின் தண்டனைக்கும் மனிதரைப் பயப்படச்செய்யவே. அவர் காட்டும் இரக்கத்தைத் தள்ளிப்போடுகின்ற, அந்த மாபெரும் பாவத்தைக் காணும்படி அவர்களை விழிப்படையச்செய்யவே. ஆண்டவரின் வருகைக்காக விழிப்போடு காத்திருக்கிறவர்கள், சத்தியத்திற்கு கீழ்ப்படிவதின்மூலமாக தங்களது ஆத்துமாக்களை தூய்மைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எச்சரிப்புள்ள விழிப்போடு ஊக்கமுள்ள உழைப்பையும் அவர்கள் இணைத்துக்கொள்கிறார்கள். ஆண்டவர் வாசலருகே வந்துவிட்டார் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறதால், ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்யும் ஊழியத்திலே தெய்வீக அறிவுஜீவிகளோடு ஒத்துழைப்பதில் அவர்களது ஆர்வம் துரிதமாகச் செயல்படுகிறது. இவர்களே ஆண்டவருடைய குடும்பத்தினருக்கு, "தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி" (லூக்கா 12:42) காணப்படுகின்ற விசுவாசமும், ஞானமும் நிறைந்த பணிவிடைக்காரர்கள் ஆகும். இப்பொழுது சிறப்பாக பயன்படத்தக்க சத்தியத்தை அவர்கள் கூறியறிவிக்கின்றார்கள். ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், மோசே ஆகிய ஒவ்வொருவரும் தங்களது காலத்திற்கான சத்தியத்தைக் கூறியறிவித்ததுபோல, கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் இந்த அவர்களது தலைமுறைக்கான விசேஷ எச்சரிப்பை இப்பொழுது கொடுப்பார்கள். ★

# அனைத்துப் பக்கங்களிலுமிருந்தும் உபத்திரவங்கள்!

**"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்"**

**—செப்பனியா 2:3.**

இயேசுவின் இரத்தத்தினால் விலைக்கிரையமாக வாங்கப்பட்டவர்கள் .... சுவிசேஷத்தில் தங்களுக்கு கிருபையாக அனுப்பப்பட்ட தூதுகளை ஏளனஞ்செய்யத்தக்கதான நிலையை அடைந்து, கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலித்து, எல்லைக்குட்பட்ட தங்களது சொந்த பகுத்தறிவின்மீதும் அடித்தளமில்லாத விவாதங்கள் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதைக் காண்பதைவிட, மிகவும் துக்கமான வேறொரு காட்சி கிடையாது. துன்பத் துயரங்களினால் சோதிக்கப்படும்போது, மரணத்தை முகமுகமாகச் சந்திக்கும் நிலைக்குக் கொண்டுவரப்படும்பொழுது, அவர்கள் இதுவரை நெஞ்சார நேசித்த தவறான வாதங்களெல்லாம் சூரியனுக்கு முன்னர் இருக்கும் உறைபனிபோன்று உருகி ஓடிப்போகும்.

தெய்வீக இரக்கத்தின் வேண்டுகோள்களை தள்ளிப்போட்ட ஒருவரை வைத்திருக்கும் சவப்பெட்டிக்கு முன்பாக நிற்பது எவ்வளவு பயங்கரமான ஒரு காரியம்! நித்தியத்தை இழந்துபோன ஒருவன் என்று சொல்வது எவ்வளவு பயங்கரமானது! உன்னத நிலையை எட்டிப்பிடித்து, நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள வேண்டிய தகுதிக்கு வந்திருக்கவேண்டியவர்— அவர் ஆனால் தமது வாழ்வை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்து, மனிதரின் வீணான தத்துவங்கள் என்ற கண்ணியில் அகப்பட்டு, தீயவனின் கரங்களிலுள்ள ஒரு விளையாட்டுப்பொருளாகிவிட்டார்! கிறிஸ்தவனின் நம்பிக்கை, ஆத்துமாவிற்கு நங்கூரமாயிருக்கிறது. நமக்காக, நமது முன்னோடியாகிய கிறிஸ்து திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். அந்த

இடத்திற்கு இந்த நம்பிக்கை செல்லுகிறது. நமக்கு முன்னாக இருக்கும் அந்த மாபெரும் சம்பவங்களைச் சந்திக்கும்படி ஆயத்தமாகத்தக்கதாக நாம் செய்யவேண்டிய தனிப்பட்ட வேலை ஒன்று உண்டு.

வாலிபர்கள் அதிக ஊக்கத்தோடு தேவனைத் தேடவேண்டும். புயல் வந்துகொண்டிருக்கிறது. பாவத்தைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்தவர்களாக, அந்தப் புயலின் சீற்றத்தைச் சந்திக்க நாம் ஆயத்தமாக வேண்டும். ஆண்டவர் இந்த பூமியை பயங்கரமாக அசைக்கத்தக்கதாக எழும்புவார். எல்லாப் பக்கங்களிலிருந்தும் இன்னல்கள் எழும்புவதைக் காணலாம். ஆயிரக்கணக்கான கப்பல்கள் கடலின் ஆழத்திற்குள் அமிழ்ந்துபோகத்தக்கதாக தூக்கி எறியப்படும். கப்பற்படைகள் அமிழ்ந்துபோகும். இலட்சக்கணக்கான மக்கள் பலியாவார்கள். எதிர்பாராதவிதத்தில் நெருப்புகள் பற்றியெரியும். எந்தவிதமான மானிட முயற்சியாலும் அவைகளை அணைத்துவிட முடியாது. நெருப்பின் கோரத்தாண்டவத்தால் இவ்வுலகிலுள்ள அரண்மனைகள் அழிக்கப்பட்டு இல்லாமற்போய்விடும். இரயில் விபத்துக்களினால் அடிக்கடி அழிவு ஏற்படும். குழப்பமும் கடும் மோதல்களும் ஒரு கணநேர எச்சரிப்புமின்றி நடக்கும். மரணங்கள் மிகப் பெரிய பிரயாண வழித்தடங்களில் ஏற்படும். முடிவு சமீபம் தவணையின் காலம் முடிவடைந்துகொண்டிருக்கிறது. ஆ! தேவனை கண்டடையத்தக்க சமயத்தில் நாம் தேடுவோமாக. அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுவோமாக.

“தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்”—செப்பனியா 2:3. ★

# ஆத்துமாக்களுக்காக பரிந்து மன்றாடும் ஜெபங்கள்!

**“உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” —மத்தேயு 18:19.**

வெளிச்சத்தைக் காணாமல் இருளில் இருப்பவர்களுக்காகவும் மனந்திரும்பாதவர்களுக்காகவும், பேட்டில்கிரீக் என்னுமிடத்தில் மனப்பாரத்தோடிருந்த மக்களை நான் நினைத்துப்பார்க்கிறேன். தேவனுடைய வல்லமையை தங்களுடைய வல்லமையாகப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜெபக்கூட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு காரியத்திலும் இந்த முயற்சிகளிலே பரலோகத்தின் தூதர்கள் இணைந்து உழைத்தார்கள். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டன.

சபையிலே ஒரு பெருங்கூட்டமான மக்கள் இருப்பார்களானால் அந்த அங்கத்தினர்களை சிறுசிறு குழுக்களாக அமைக்கவேண்டும். அந்தக் குழுக்கள் சபைக்காக மாத்திரம் அல்ல் அவிசுவாசிகளுக்காகவும் உழைக்க வேண்டும். ஒரு இடத்திலே சத்தியத்தை அறிந்த இரண்டு அல்லது மூன்றுபேர் இருப்பார்களானால், அவர்கள் தங்களை ஒரு ஊழியக்குழுவாக அமைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்களது ஐக்கிய உறவை உடைந்துபோகாமல் காத்துக்கொள்ளட்டும். அன்பிலும் ஐக்கியத்திலும் நெருக்கமாக இணைந்து, ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு தைரியமூட்டி, மற்றவர்களின் உதவியினால் பலத்தையும் தைரியத்தையும் பெற்றுக்கொள்ளட்டும். கிறிஸ்துவைப்போன்று அருளும், இரக்கமும் பொறுமையும் உடையவர்களாக, அவசரப்பட்டு வார்த்தைகளைக்

கொட்டிவிடாமல், மிக உன்னதமான பரிசுத்த விசுவாசத்திலே ஒருவரையொருவர் கட்டத்தக்கதாக பேச்சுத்திறமையை பயன்படுத்தட்டும். திருச்சபைக்கு வெளியே இருக்கும் மக்களுக்காக கிறிஸ்து காட்டும் அன்பைப்போல, அன்புகாட்டி உழைக்கட்டும்.... இவ்வாறு கிறிஸ்துவின் நாமத்திலே ஜெபித்து உழைக்கும்போது, சபையின் எண்ணிக்கை உயரும்.

உள்நாட்டிலேயே செய்யப்படவேண்டிய வேலையைக்குறித்த முறையீட்டை நாம் கேட்கிறோம். ஏராளமான பாவமும், உழைப்பிற்கான தேவையும் நமது சொந்த நாட்டிலேயே இவ்வளவு அவசியமாக இருக்கும்போது, ஏன் வெளிநாட்டு வேலைபற்றிய விஷயத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டப்படவேண்டும். இந்த உலகமே நமது பணித்தளம் என்று நான் இதற்கு விடைகூறுகிறேன்.... நமது மீட்பர் தம்முடைய சீடர்களை தங்களது வேலையை எருசலேமில் துவங்கவேண்டுமென்றும், பின்னர் யூதேயாவிற்கும் சமாரியாவிற்கும் பூமியின் கடையாந்தரங்கள் மட்டும் செல்லவேண்டுமென்றும் வழிநடத்தினார். ஒரு சிறு கூட்டத்தார் மாத்திரமே வேதக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டார்கள். எனினும் தூதுவர்கள் துரிதமாக இடம்விட்டு இடம்சென்று நாடுவிட்டு நாடுசென்று அருகிலுள்ள தூரத்திலுள்ள உலகின் அனைத்து இடங்களிலும் சுவிசேஷக்கொடியை உயர்த்திப் பிடித்தார்கள். ஆனால் இதற்காக முன்னதாக பயிற்சி அளித்து, ஆயத்தமாக்குகின்ற ஓர் வேலையுண்டு. “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, ... எனக்கு சாட்சிகாளக இருப்பீர்கள்” என்பது மீட்பரின் வாக்குத்தத்தமாகும். யாரெல்லாம் தங்களது சொந்த சித்தத்தையும் விருப்பங்களையும் பின்பற்றாமல், ஆண்டவருடைய ஆலோசனையை நாடுகிறார்களோ, அவர்கள் ஊக்கமற்ற படிப்பாளிகளாக இருக்கமாட்டார்கள். ஏனெனில் ஆண்டவர் தாமே அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பார். ★

# அழுவதா அல்லது மகிழ்வதா?

**"அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை" —எரேமியா 8:20.**

முடிவு மிகச் சமீபமென்று நிறைவேறிக்கொண்டிருக்கும் காலங்களின் அடையாளங்கள் மிகத் தெளிவாகக் கூறுகின்றன. இவைகளை புறக்கணிக்கவேண்டாமென்று சபையின் அங்கத்தினர்களை நான் வேண்டிக்கொள்கிறேன். ஆ! தங்களின் ஆத்துமாக்களின் இரட்சிப்பைக்குறித்து அக்கறையற்றிருக்கும் எத்தனை ஆத்துமாக்கள், "அறுப்பும்சென்றுவிட்டது. கோடைகாலமும் முடிந்துவிட்டது, நாமோ இரட்சிக்கப்படவில்லை" என்று வெகு சீக்கிரத்தில் கசந்த உள்ளத்தோடு புலம்புவார்கள்.

இந்த வாரத்தில் நீதிமன்றத்தில் நமது வழக்கு எடுக்கப்பட்டு, அதின் முடிவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது என்று நாம் நினைவுகூருவோமானால், ஆ! அது எத்தனை நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். தங்குதடையற்ற சிற்றின்பங்களில் திளைப்பதையும், எல்லாப் பெருமையையும், அனைத்து சுயநலத்தையும் உதறித்தள்ளுவதற்காக விழித்திருந்து ஜெபிக்கும் வேளை இதுவே. வீணாக்குவதைவிட மோசமான நிலையிலே அருமையான காலம் விரையமாக்கப்படுகிறது. அத்தகைய நேரங்கள் ஜெபத்திலும் தியானத்திலும் செலவிடப்பட வேண்டும். தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறோம் என்று சொல்லிக் கொள்பவர்களில் அநேகர் கடமையைச் செய்வதற்குப்பதிலாக, மனவிருப்பத்தின்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, அவர்கள் இருக்கும் நிலையில் நித்திய ஜீவனுக்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய கவலையற்ற அக்கறையில்லாத நபர்களிடம் நான் கூறுவது: "உங்கள் வீணான சிந்தைகளும், உங்களது இரக்கமற்ற வார்த்தைகளும், உங்களது சுயநலம் நிறைந்த செயல்களும் பரலோகப் புத்தகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" என்பதாகும். பெல்ஷாத்ஷாரின் விக்கிரக வணக்கத்தோடுகூடிய கேளிக்கை விருந்திலே, அவர்கள்

முன்னால் நின்றுகொண்டிருந்த அதே தூதர்கள், நீங்கள் உங்கள் மீட்பரை அவமதிப்பதைப் பார்த்தவர்களாக, உங்களுக்கு அருகில் நிற்கிறார்கள். இவ்வாறு இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைந்து, பகிரங்கமாக நீங்கள் அவரை அவமானப்படுத்துவதைக் கண்டு, வேதனையடைந்து, துக்கம் மிகுந்தவர்களாக திரும்பிச் சென்றுவிடுகிறார்கள்.

கிறிஸ்து முடிசூட்டப்படும் அந்த நாளிலே, கறை—திரைகளை சுமந்தவர்களாக செல்லும் எவரையும் தம்முடையவர்கள் எனக்கூறி ஒப்புக்கொள்ளமாட்டார். அவர்கள் தமது உத்தமமான பிள்ளைகளுக்கு மகிமையுள்ள ஜீவகிரீடத்தைத் தருவார். தங்கள்மீது அவர் ஆளுகை செலுத்துவதை விரும்பாதவர்கள், மீட்கப்பட்டோரின் சேனை அவரைச் சூழ்ந்து நிற்பதையும் அவர்களில் ஒவ்வொருவரும் "நமது நீதியாய் இருக்கிற கர்த்தர்" என்ற ஒரு அடையாளத்தைப் பெற்றிருப்பதையும் காண்பார்கள். ஒரு காலத்தில் முள்முடி சூட்டப்பட்டிருந்த அந்த சிரசிலே, மகிமையின் ஒரு மணிமுடி சூட்டப்பட்டிருப்பதைக் காண்பார்கள்.

அந்நாளிலே மீட்கப்பட்டோர் பிதாவின் மகிமையோடும், அவரது குமாரனின் மகிமையோடும் ஒளிர்ந்து பிரகாசிப்பார்கள். பரலோகத்தின் தூதர்கள் பொற்சுரமண்டலங்களைப் பிடித்தவர்களாக இராஜாவையும், அவரோடுகூட, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் தோய்த்து வெண்மையாக்கப்பட்டு, அவரது வெற்றியின் சின்னங்களாக அவருடன் நிற்கின்ற மீட்கப்பட்டோரையும் வரவேற்பார்கள். வெற்றியின் ஒரு கீதமானது, பரலோகம் முழுவதையும் நிரப்பினது. கிறிஸ்து வெற்றி சிறந்தார். அவரது பாடுகள், தற்தியாகம் ஆகிய குறிக்கோளுடைய பணித்திட்டம் வீணாகப்போய்விடவில்லை என்று சாட்சிபகரக்கூடிய அந்த மீட்கப்பட்டோர் கூட்டம் புடைசூழ பரலோக மன்றத்தில் கிறிஸ்து பிரவேசிக்கிறார். ★

# நெருக்கடியான ஒரு நேரம்...!

**"அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்" —மல்கியா 3:2.**

தேவன் தமது நியாயப்பிரமாணத்தைப் பறைசாற்ற (சீனாய்) மலையின்மேல் இறங்கினபொழுது, தங்களது பாவத்தன்மையின் காரணமாக இஸ்ரவேலர்கள், மலையை நெருங்கிவராதபடிக்குத் தடைசெய்யப்பட்டிருந்தார்கள். அல்லது அவர்கள் தேவனுடைய சுட்டெரிக்கும் மகிமையால் அழிக்கப்பட்டுப்போயிருப்பார்கள். தேவன் தமது பிரமாணத்தை பறைசாற்றும்பொழுதே, அவரது வல்லமை இவ்வளவாக வெளிப்படுத்தப்பட்டதென்றால், அந்தப் புனிதமான பிரமாணத்தை நிறைவேற்றவரும்பொழுது, அவரது நியாயசங்கம் இன்னும் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும்! அவரது விதிமுறைகளை (நியாயப்பிரமாணத்தை) மிதித்துப்போட்டவர்கள் நியாயத்தீர்ப்பு நாளில் அவரது மகிமையை எப்படித் தாங்கிக்கொள்ளுவார்கள்?

தெய்வீகப் பிரசன்னம் சீனாய் மலையிலே வெளிப்படுத்தப்பட்டபொழுது, கர்த்தருடைய மகிமை பட்சிக்கிற அக்கினியைப்போன்று காணப்பட்டது.... ஆனால் கிறிஸ்து தமது பரிசுத்த தூதர்களோடு மகிமையிலே வரும்பொழுது, உலகம் முழுவதும் அவரது பிரசன்னத்தின் பயங்கரமான ஒளியினால் பற்றியெரியும்.

சீனாய் மலையில் பிரமாணம் பறைசாற்றப்பட்டபொழுது வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக வல்லமைக்கு ஒப்பான அவரது வல்லமையை, மனிதன் தான் சிருஷ்டிக்கப்பட்டதுமுதல், வேறு எப்பொழுதும் கண்டதில்லை.... இயற்கையின் மிகப் பயங்கரமான சீற்றத்திற்கு மத்தியிலும் தேவனுடைய குரல், ஒரு எக்காளத்தைப்போல் மேகத்தினின்று தொனித்தது. அந்த மலை அஸ்திவாரத்திலிருந்து உச்சிவரை அசைக்கப்பட்டது. இஸ்ரவேலர்கள், அச்சத்தால் வெளிரியவர்களாகவும் நடுங்கியவர்களாகவும் பூமியின்மேல்

முகங்குப்புற விழுந்தார்கள். தமது குரலால் பூமியை அசைத்த அவர், **“இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்”** என்றார்.

மோசே நியாயப்பிரமாணப் பலகைகளோடு அந்த மலையிலிருந்த தெய்வீகப் பிரசன்னத்திலிருந்து வந்தபோது, பாவம் நிறைந்த இஸ்ரவேலர்களால், அவனது முகத்தை மகிமைப்படுத்திய ஒளியைத் தாங்கிக்கொள்ளக்கூடாதிருந்தது. அப்படியானால், பிரமாணத்தை மீறினவர்களையும், பாவமன்னிப்பைப் புறக்கணித்தவர்களையும் நியாயந்தீர்க்கத்தக்கதாக தேவகுமாரன் தமது பிதாவின் மகிமையோடு பரலோகத்தின் தூதர்கள் சூழ தேன்றும்போது, பாவிகள் அவரது முகத்தை எவ்வாறு கண்ணோக்குவார்கள்....

தெய்வீக நியாயத்தீர்ப்பின் புயலின் மத்தியிலும் தேவப்பிள்ளைகள் பயப்படத் தேவையில்லை. **“கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்”–யோவேல் 3:16.** தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு அச்சத்தையும் அழிவையும் கொண்டுவரும் அந்த நாள், பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவோருக்கு “சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தை” கொண்டுவரக்கூடியதாயிருக்கும். ★

# உயர்ந்த ஓர் படித்தரம்!

**"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன்" —லேவியராகமம் 20:26.**

இக்கட்டுக்காலத்தில், ஆசரிப்புக்கூடாரத்தில் பரிந்துபேச **பிரதான ஆசாரியர்** இல்லாதிருக்கும் நிலையில், கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக வாழ, தாங்கள் எப்படி இருக்கவேண்டுமென பலர் உணராதிருப்பதை நான் கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்கிறவர்களும், இக்கட்டுக்காலத்தில் பாதுகாக்கப்படுகிறவர்களும் கிறிஸ்துவின் சாயலை முழுமையாகப் பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய நாளில் நிலைநிற்கவும், அவர் பார்வைக்குமுன் ஜீவிக்கவும் தகுதிபெறத்தக்கதான புத்துணர்ச்சியை அடைவதற்கும், பின்மாரியின் காலத்திற்குக் காத்திருக்கும் அநேகர், அதற்கு மிகவும் அவசியமான ஆயத்தத்தை புறக்கணித்துக்கொண்டிருப்பதை நான் கண்டேன். ஆ! எத்தனை பேர் இக்கட்டுக்காலத்தில் ஒரு அடைக்கலமில்லாதிருக்கிறார்கள்! அவர்கள் மிகவும் அவசியமான ஆயத்தத்தைப் புறக்கணித்துவிட்டபடியினால், பரிசுத்த தேவனின் கண்களுக்குமுன் வாழ—தகுதிபெற—தேவையான பின்மாரியை பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். சத்தியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து தங்கள் ஆத்துமாவை பரிசுத்தப்படுத்தத் தவறியவர்கள்.... வாதைகளின் காலத்தில், கட்டிடத்தில் சரியாக பொருத்தப்பட, தாங்கள் இன்னும் செதுக்கப்படவேண்டும் என்பதைக் காண்பார்கள். ஆனால், அவர்களுக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேச மத்தியஸ்தர் இருக்கமாட்டார். அதற்கு முன்பே, "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என்கிற மிக முக்கிமானதும் பயங்கரமுமான அறிவிப்பு கொடுக்கப்பட்டாயிற்று.

பெருமையையும், சுயநலத்தையும், உலக இச்சையையும், தவறான ஒவ்வொரு சொல்லையும், ஒவ்வொரு செயலையும் முழுமையாக வென்றாலொழிய அந்த இளைப்பாறுதலை ஒருவரும் பகிர்ந்துகொள்ள முடியாது எனக் கண்டேன். எனவே, நாம் கர்த்தருக்கு மிகவும் சமீபமாக இழுத்துக்கொள்ளப்படவும், கர்த்தருடைய நாளின் யுத்தத்தில் உறுதியாக நிற்கவும் அவசியமான ஆயத்தமுள்ளவர்களாயிருக்கும்படி, உண்மையுடனும் ஆர்வமுடனும் முயற்சிசெய்யவேண்டும். தேவன் பரிசுத்தமானவர் பரிசுத்தர்களேயன்றி வேறொருவரும் அவரது பிரசன்னத்தில் சஞ்சரிக்கமுடியாது என்பதை அனைவரும் நினைவிற்கொள்ள வேண்டும்.

இன்று நாம் சொல்லாலும் செயலாலும் தீங்கு செய்துவிடாமல் இருப்பதற்கு மிகவும் கவனமாயிருக்கவேண்டும். தேவனை நாடி, அவரது பிரசன்னம் இல்லாமல் திருப்தியடைந்து ஓய்ந்திருக்கமாட்டோம் என்று தீர்மானஞ்செய்யவேண்டும். இதுதான் நமக்குக் கொடுக்கப்படும் கடைசிநாள் என்பதுபோல, நாம் விழிப்போடிருந்து, உழைக்கவும் ஜெபிக்கவும் வேண்டும். அப்படியானால், நமது வாழ்க்கை எவ்வளவு அதிக உண்மையுள்ளதாயிருக்கும்! அனைத்து வார்த்தைகளிலும் செயல்களிலும் நாம் எவ்வளவு நெருக்கமாக இயேசுவை பின்பற்றுவோம்! ★

# நிறுக்கப்படும் நேரம்!

**“கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ?” –1சாமுவேல் 2:3.**

தேவனுடைய மக்களுடைய, குறிப்பாக இளைஞர்களுடைய எண்ணங்களையும் விருப்பங்களையும் நிறுக்கக்கூடிய தராசை கையில் பிடித்தவனாக ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டிருக்கிறேன். அந்தத் தராசின் ஒரு பக்கத்தில் பரத்தை நோக்கிய சிந்தைகளும் விருப்பங்களும், அடுத்த பக்கத்தில் இவ்வுலகை நோக்கிய சிந்தைகளும் விருப்பங்களும் வைக்கப்பட்டன. அந்த தராசில் கதை புத்தகங்கள் வாசித்தலும், ஆடை மற்றும் ஆடம்பர எண்ணங்களும், வீணான செயல்களும், பெருமை முதலிய அனைத்தும் வைக்கப்பட்டன. ஆ! எத்தகைய ஒரு பயங்கரமான நேரம் அது! உலகிற்கு மரித்தவர்களும் தேவனுக்கென்று பிழைத்தவர்களுமென்று உரிமைகோரி, அவரது பிள்ளைகளென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களின் சிந்தைகளை நிறுத்தவர்களாக, தராசுடன் தேவதூதர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். இவ்வுலகச் சிந்தைகள், வீண்செயல், பெருமை ஆகியவைகள் வைக்கப்பட்ட தராசின் பக்கம் பாரத்திற்குமேல் பாரம் அதிகமாகி, தாங்கமுடியாமல் சீக்கிரம் கீழே சென்றது. பரலோக வாஞ்சைக்குரிய எண்ணங்கள் வைக்கப்பட்ட பக்கமோ, முந்தினது எவ்வளவு சீக்கிரம் கீழே சென்றதோ அவ்வளவு சீக்கிரமாக மேலே சென்றது. ஆ! அது எவ்வளவு இலேசானதாக இருந்தது. நான் கண்ட சாட்சியை அப்படியே என்னால் கூறிவிட முடியும். ஆனால் அந்தத் தூதன் தேவ மக்களின் விருப்பங்களையும் எண்ணங்களையும் நிறுத்துக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டபோது, என் மனதில் பதிந்த, பயபக்தியுடன் கூடிய ஆழ்ந்த உணர்ச்சியை என்னால் ஒருபோதும் விவரிக்க இயலாது. “இப்படிப்பட்டோர் மோட்சத்திற்குள் பிரவேசிக்க முடியுமா? ஒருக்காலும் முடியவே முடியாது. அவர்கள் இப்பொழுது கொண்டிருக்கும் நம்பிக்கை வீண். அவர்கள் சீக்கிரம் மனந்திரும்பி, இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டால் ஒழிய அவர்கள் அழிந்துபோவர்கள் என்று கூறுவாயாக” என்று கூறினான்.

பலர் தங்களைத் தாங்களே, தங்கள் மத்தியிலுள்ள மற்றவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு மதிப்பீடுசெய்கிறதை நான் கண்டேன். அது அப்படி இருக்கக்கூடாது. கிறிஸ்துவைத் தவிர வேறொருவரும் நமக்கு உதாரணமாகக் கொடுக்கப்படவில்லை. நமது வாழ்க்கை அமைப்பின் உண்மையான மாதிரி கிறிஸ்துவே. அவரைப் பிரதிபலிப்பதில் சிறந்து விளங்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும்.

சுயத்தை வெறுத்தல் அல்லது தியாகம் செய்தல் என்பதையோ அல்லது சத்தியத்தினிமித்தம் துன்பப்படுவது என்பதையோ சிலர் இன்னும் அறியவில்லை என்பதையும் நான் கண்டேன். ஒருவரும் தியாகஞ்செய்யாமல் பரலோகத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். சுயத்தை வெறுக்கும் ஆவியும் தியாக மனப்பான்மையின் ஆவியும் நம்மால் நெஞ்சார நேசிக்கப்படவேண்டும். சிலர் தங்களையும் தங்களது சொந்த சரீரங்களையும் தேவனுக்கென்று அவரது பலிபீடத்தில் தியாகபலியாக ஒப்புக்கொடுக்கவில்லை. தேவனுடைய ஊழியத்தைக்குறித்து அக்கறையின்றி, பலர், தங்களுக்கு உடனே தோன்றும் பரபரப்போடு மனக்கிளர்ச்சிகளுக்கு இடங்கொடுத்து, பசியார்வங்களைத் திருப்திசெய்து, தங்கள் சுயவிருப்பத்தை நிறைவேற்றுவதில் திளைக்கின்றனர். நித்திய ஜீவனுக்காக எந்த தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருப்பவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள். நித்திய ஜீவனுக்காக பாடுபடுதல், சுயத்தை சிலுவையில் அறைதல், ஒவ்வொரு விக்கிரகத்தையும் தியாகஞ்செய்தல் ஆகியவைகள் ஏற்புடைய தகுதிவாய்ந்தவைகளாகும். இவையனைத்திலுமுள்ள அதிகமான எல்லையற்ற நித்திய மகிமை, இவ்வுலக சுகங்கள் அனைத்தையும் மறைத்து, அவைகள் எல்லாவற்றையும் விழுங்கிவிடும். ★

# கடுஞ்சோதனை வேளையில் நீ நிலைநிற்பாயா?

**"உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" —உபாகமம் 8:2.**

1844—ல் கூறியறிவிக்கப்பட்ட தூது நம்மில் பலர் எண்ணுவதுபோல, குறுகிய காலக்கட்டத்திற்குள் நிறைவேறுமானால், அவர்கள் தங்கள் குணங்களை முன்னேற்றுவித்துக்கொள்ள காலம் இருக்காது.... இதை தேவன் தம் மக்களுக்கு நிரூபித்துக்காட்டுவார். அநேகர் மன உயர்வுகளினால் உந்தப்பட்டார்களேயொழிய, கொள்கை, விசுவாசம் ஆகிய இலட்சியங்களால் உந்தப்படவில்லை. இந்த பக்திவிநயமான—பயங்கரமான தூது அவர்களைக் கிளர்ந்தெழச்செய்தது. அவர்களுடைய உணர்வுகளிலே அது கிரியைசெய்து, அவர்களது பயங்களைத் தூண்டிவிட்டது. ஆனால் அந்தத் தூது என்ன செய்யவேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருந்தாரோ, அந்த வேலையை நிறைவேற்றவில்லை....

தேவன் தமது ஜனத்தைப் படிப்படியாக வழிநடத்துகிறார். தங்கள் இருதயத்திலுள்ளதை அவர்கள் வெளிப்படுத்தும்படி வெவ்வேறு இடங்களுக்கு அவர்களை அவர் கொண்டுசெல்கிறார். சிலர் ஒருசில இடங்களில் நிலைநிற்கின்றனர். ஆனால், மற்றொன்றில் விழுந்துவிடுகின்றனர். ஒவ்வொரு இடத்தையும் கடக்கும்பொழுது, இருதயம் சோதிக்கப்பட்டு, இன்னும் சிறிது தேர்ச்சியடைகிறது. ஒருவேளை தேவனுடைய ஜனங்கள் என்று தங்களைப்பற்றி சொல்லிக்கொள்பவர்கள் இந்த நேர்வழிக்கு எதிராக தங்கள் இருதயத்தைக் கண்டார்களேயாகில், அதை மேற்கொள்ளும் பணி அவர்களுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.... சிலர் ஒருசில காரியங்களை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், தேவன்

மற்றொன்றை கொண்டுவரும்பொழுது, தங்கள் மனதில் ஊன்றி வளர்ந்துள்ள சில விக்கிரகங்களை அது தாக்குவதைக்கண்டு, அதிலிருந்து பின்வாங்கிவிடுகின்றனர். இயேசுவை வெளியே வைத்து, மனதை அடைத்துக்கொள்ளும்படியான எந்தெந்த காரியங்கள் தங்கள் இருதயத்தில் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ள, அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. சத்தியத்திற்கும் மேலாக மற்றொரு காரியத்தை மதிப்பிட்டதினால், இயேசுவை ஏற்றுக்கொள்ள அவர்கள் தங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்தவில்லை. ஒவ்வொரு தனிநபரும் குறிப்பிட்ட காலம்வரை சோதிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் விக்கிரகங்களை தியாகஞ்செய்கிறார்களோ அல்லவோ என்று நிரூபிக்கப்படுவர். ஒவ்வொரு நிலையையும் கடந்து, ஒவ்வொரு சோதனையிலும் நிலைநின்று, அதற்கான விலை எதுவாயிருப்பினும் அனைத்தையும் மேற்கொள்பவர்களே மெய்சாட்சியாகிய தேவனுடைய ஆலோசனைகளைக் கவனித்து எச்சரிக்கையுடன் நடந்துகொள்பவர்கள். அவர்களே பின்மாரியைப்பெற்று, மறுரூபமாவதற்குத் தகுதிபெறுவார்கள்.

தேவன் இவ்வுலகிலுள்ள தம் மக்களைச் சோதித்து நிரூபிக்கிறார்.... இவ்வுலகில் எந்த சக்தி தங்கள் இருதயங்களை பாதித்து, தங்கள் செய்கைகளை அடக்கியாளுகின்றன என்பதை கடைசிக்காலத்தில் வெளிப்படுத்துவார். அது தெய்வீக சத்தியத்தின் வல்லமையாக இருப்பின், நல்ல செய்கைகளுக்கு வழிநடத்தும். தன்னை பெற்றுக்கொள்வோரை அது உயர்த்தி, தங்கள் புனிதமானவராகிய கர்த்தரைப்போன்றே மேன்மையான இருதயமுள்ளவர்களாகவும் பெருந்தன்மையுடையவர்களாகவும் அவர்களை மாற்றும்....

இளைஞர்களே, முதியோர்களே, தேவன் இப்பொழுது உங்களைச் பரிசோதித்துக்கொண்டிருக்கிறார். நித்தியத்திற்கான உங்கள் முடிவை நீங்களே தீர்மானித்துக்கொண்டிருக்கிறீர்கள். ★

# தவறு செய்யாத ஓர் வழிகாட்டி!

**"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" —யாக்கோபு 1:22.**

தேவன் தமது சித்தத்தை அறிந்தவர்களை அவருடைய வார்த்தையின்படிச் செய்கிறவர்களாக இருக்கும்படி அழைக்கிறார். பலவீனம், அரைகுறையான மனம், தீர்மானமெடுப்பதில் தயக்கம் ஆகியவைகள் சாத்தானின் தாக்குதல்களைத் தூண்டுகிறது. இந்த இயல்புகளை வளர அனுமதிப்போர், சோதனையின் மாபெரும் அலைகளால் எத்தகைய உதவியுமின்றி அடித்துச்செல்லப்படுவர். கிறிஸ்துவின் நாமத்தை உரிமைகொண்டாடும் ஒவ்வொருவரும் கிறிஸ்தவனின் ஜீவனுள்ள தலையான கிறிஸ்துவின் முழு வளர்ச்சியை எட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது.

மணல்திட்டு, அல்லது பாறைகள் நிறைந்த நதியில் ஒரு கப்பல் பயணிக்கு எவ்வாறு மாலுமி அவசியமாயிருக்கிறாரோ, அவ்வாறே நம் அனைவருக்கும் வாழ்வின் நெருக்கமான அநேக இடங்களினூடாக கடந்துசெல்வதற்கு ஒரு வழிகாட்டி அவசியப்படுகிறார். இத்தகைய வழிகாட்டியை எங்கே கண்டுபிடிப்பது? வேதத்தையே... நாங்கள் உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறோம். தேவனால் ஏவப்பட்டு, பரிசுத்த மனிதர்களால் எழுதப்பட்டு, முதியோர்களும் இளைஞர்களும் செய்யவேண்டியிருப்பதை அது மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் சுட்டிக்காட்டுகிறது. அது சிந்தனையை உயர்த்தி, இருதயத்தை மென்மைப்படுத்தி, ஆவிக்கு மகிழ்ச்சியையும் பரிசுத்தமான சந்தோஷத்தையும் அளிக்கிறது. பூரணமான உயர்ந்த தன்மையுள்ள குணாதிசயங்களை வேதாகமம் வழங்குகிறது. அது வாழ்க்கைப் பயணத்தின் முடிவுபரியந்தமும், எல்லா சூழ்நிலைகளிலும் நிச்சயமான வழிகாட்டியாக இருக்கிறது. உங்களது ஆலோசகராகவும், உங்கள் அன்றாட வாழ்க்கயின் சட்டதிட்டங்களாகவும் அதை எடுத்துக்கொள்ளுங்கள்....

வேதவாக்கியங்களில் ஆயிரமாயிரம் முத்துக்களும் சத்தியங்களும் மேலோட்டமாகத் தேடுவோருக்குப் புலப்படாமல் மறைந்துகிடக்கின்றன. சத்தியத்தின் சுரங்கம் ஒருக்காலும் தீர்ந்துபோவதில்லை. தாழ்மையான இருதயத்துடன் நீங்கள் வேதத்தில் எவ்வளவிற்கு அதிகமாக ஆர்வத்தோடு தேடுகிறீர்களோ, அவ்வளவிற்கு அதிகமாக அதில் நாட்டங்கொண்டு, "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப் படாதவைகள்!" என்று பவுலுடன் சேர்ந்து ஆச்சரியப்பட வேண்டியதுபோல் எண்ணுவீர்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் வேதாகமத்திலிருந்து ஏதேனும் புதிதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதில் மறைந்திருக்கும் பொக்கிஷங்களைத் தேடுங்கள். ஏனெனில் அவைகள் நித்திய ஜீவனுக்கான வார்த்தைகளைக்கொண்டுள்ளது. இந்தப் பரிசுத்த எழுத்துக்களைப் புரிந்துகொள்ளத்தக்கதாக ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்வதற்காக ஜெபியுங்கள். நீங்கள் இதைச் செய்வீர்களாகில், தேவனுடைய வார்த்தைகளில் புதிய மகிமைகளைக் கண்டடைவீர்கள். சத்தியத்தோடு இணைக்கப்பட்ட தலைப்புகள் பற்றி—எளிதில் பெற்றுக்கொள்ள முடியாத—புதிய ஒளியைப் பெற்றுக்கொண்டதாக உணர்வீர்கள். மேலும் உங்கள் மதிப்பீட்டில் வேதவாக்கியங்கள் புதிய மதிப்பைத் தவறாமல் பெற்றுக்கொண்டேயிருக்கும்....

உங்கள் குணம் மாற்றப்படத்தக்கதாகவும், கிறிஸ்து இயேசுவிற்குள் முழுமைபெற்றவர்களாக வளரத்தக்கதாகவும், அவரது கிருபையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள சுறுசுறுப்பும் கவனமும் உள்ளவர்களாக இருங்கள். ★

# பதில் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருத்தல்!

**"கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" –1 பேதுரு 3:15.**

நிகழ்கால சத்தியத்தைக்குறித்த அறிவு தங்களுக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளும் பலர், தாங்கள் நம்புகிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களென்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. தங்கள் விசுவாசத்திற்கான ஆதாரங்களை அவர்கள் புரிந்துகொள்ளுவதில்லை. தற்போதைய பணிகளை அவர்கள் சரியாக மதிப்பிடவில்லை. இப்பொழுது மற்றவர்களுக்கு பிரசங்கித்துக்கொண்டிருப்பவர்கள், இக்கட்டுக்காலத்தில் தாங்கள் கொண்டிருக்கும் நிலையில் சோதிக்கப்பட்டு, பல காரியங்களுக்கு திருப்திகரமான பதிலளிக்க முடியாத நிலையிலிருப்பதை கண்டுகொள்வார்கள். அவர்கள் இவ்வாறு சோதிக்கப்படும்வரை, தங்களது மாபெரும் அறியாமையை உணர்ந்துகொள்ளமாட்டார்கள். தாங்கள் நம்புகின்றதைப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் பலர் சபையில் இருக்கின்றனர். ஆனால் முரண்பாடு தோன்றும்வரைக்கும் தங்களது சுய பெலவீனத்தை அறியார்கள். தங்களைப்போன்ற விசுவாசமுடையவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாக தனித்துநின்று, தங்கள் நம்பிக்கையை விளக்கவேண்டிய கட்டாயம் வரும்போது, தாங்கள் சத்தியம் என்று ஏற்றுக்கொண்ட கொள்கைகள் எவ்வளவு குழப்பமுடையவைகள் எனக் கண்டு ஆச்சரியமடைவார்கள்....

தேவன் தமது மக்களை எழுப்புவார். மற்ற வழிகள் தோல்வியுறும்பொழுது, முரண்பட்ட கோட்பாடுகள் அவர்களுக்கு மத்தியில் தோன்றி, அவர்களைச் சலித்து, கோதுமையினின்று பதரைப் பிரித்தெடுக்கும். தமது வார்த்தையை நம்பும் அனைவரையும் தேவன் நித்திரையினின்று

எழுப்புவார். இந்தக் காலத்திற்கேற்ற விலையுயர்ந்த ஒளி வந்தது.... சத்தியத்தைக்குறித்த சில யூகங்களிலும், சரியான விளக்கமில்லாத கொள்கைகளிலும் விசுவாசிகள் ஓய்ந்துவிடக்கூடாது. சோதனைக் காலத்தில் அவர்கள் தங்கள் விசுவாசத்திற்கு பதிலளிக்குமாறு விசாரணை மன்றத்திற்குக் கொண்டுசெல்லப்படும் போது, அடக்கத்தோடும் அச்சத்தோடும் தங்களுடைய நம்பிக்கைக்கு காரணம் தரக்கூடிய வகையில், அவர்களது விசுவாசம் தேவ வாத்தையின்மேல் திடமாகக் காணப்படவேண்டும்.

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தங்கள் விசுவாசத்தினால் இக்கட்டிற்கு உட்படும்போது, ஒரு பிரசங்கத்தை ஆயத்தப்படுத்த வேண்டுவதில்லை. அவர்கள் தேவ வார்த்தையின் சத்தியத்தை பொக்கிஷமாக இருதயத்தில் இருத்தி, கிறிஸ்து கற்பித்தவைகளை உட்கொண்டு, ஜெபத்தினால் தங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தி, ஒவ்வொருநாளும் ஆயத்தப்படவேண்டும். பின்பு அவர்கள் இக்கட்டிற்குட்படும்போது, அவர்கள் பேசவேண்டிய, கேட்போரின் இருதயம் வரை ஊடுருவிச் செல்லக்கூடிய மெய்யான சத்தியத்தை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு நினைப்பூட்டுவார்.

வேதத்தை ஊக்கமாகத் தேடி ஆராய்ந்து அவர்கள் பெற்றுக்கொண்டவைகளை, தேவைப்படும் வேளையில் ஒரு மின்னலைப்போல தேவன் நினைப்பூட்டுவார். ★

# திருப்தியளிக்கக்கூடிய அந்த விருந்து!

**"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" —மத்தேயு 5:6.**

ஒவ்வொரு முகமும் மகிழ்ச்சியினாலும் அன்பினாலும் நிறைந்துள்ள, பூரணமும் பரிசுத்தமும் உயர்ந்ததுமான பரலோகத்தைக் காணத்தக்கதாக, குறைவுபட்டதும் ஊனமுற்றதுமாயிருக்கிற—தங்களுடைய தெய்வீகக் காரியங்களில் மனநிறைவுகொள்ளுகிற ஒவ்வொரு ஆத்துமாவும், திடீரென்று கொண்டுசெல்லப்பட்டால், அவர்கள் பரலோக கூட்டத்துடன் கலந்திருக்கவோ, அவர்களது பாடல்களில் பங்குகொள்ளவோ, அல்லது தேவனிடமிருந்தும் ஆட்டுக்குட்டியானவரிடமிருந்தும் புறப்படுகிற பரிசுத்தமும் உயர்ந்ததும், ஊடுருவிச்செல்லக்கூடியதுமான மகிமையை எதிர்கொள்ளவோ முடியுமா? ஆ! அது முடியாது!....

ஆவிக்குரிய காரியங்களில் மகிழ்ச்சிகொள்ளும்படி தங்கள் மனதைப் பழக்கினவர்கள் மாத்திரமே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அவர்களே அதின் கற்பனைக்கெட்டாத மகிமையினாலும், பரிசுத்தத்தினாலும் மூழ்கடிக்கப்பட்டுவிடமாட்டார்கள். நீங்கள் நல்ல கலை அறிவு உள்ளவர்களாயிருக்கலாம். நீங்கள் அறிவியல் அறிமுகம் உள்ளவர்களாயிருக்கலாம். நீங்கள் இசையில் சிறந்து விளங்கலாம். நல்ல எழுத்தாளராயிருக்கலாம். உங்கள் நடத்தை உங்களைச் சேர்ந்தவர்களுக்கு இனிமையாயிருக்கலாம். ஆனால் பரலோகிற்கு ஆயத்தப்படுவதில் இவைகளுக்கு என்ன பங்கு இருக்கிறது? தேவனின் நியாயாசனத்தின்முன் நிற்க நீங்கள் ஆயத்தப்படுவதில் அவைகள் என்ன பங்கு வகிக்கின்றன?

மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மை பரியாசம்பண்ணவொட்டார். பரிசுத்தமேயன்றி வேறொன்றும் உங்களை பரலோகிற்கு ஆயத்தப்படுத்துவதில்லை. உண்மையுள்ள, நடைமுறைப்படுத்தப்பட்ட தேவபக்தி மாத்திரமே உங்களுக்கு தூய்மையான மேம்பட்ட குணநலன்களை

வழங்கி, ஒருவரும் சேரக்கூடாதிருக்கிற ஒளியில் வாசஞ்செய்கிற தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ளவர்களாக்கும். பரலோகக் குணாதிசயத்தை இந்த பூமியிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது.

நற்குணம், உண்மையான பரிசுத்தம் ஆகியவைகளை வாஞ்சித்து முயற்சி எடுக்கும்வரை சரிதான். ஆனால் அத்துடன் நின்றுவிட்டால் அதில் ஒரு பயனுமில்லை. நல்ல நோக்கங்கள் சரிதான். ஆனால், அவைகள் தீர்மானத்துடன் நடைமுறைப்படுத்தப் படாவிட்டால், அவைகள் பலன் ஒன்றும் அளிக்கப்போவதில்லை. பலர் கிறிஸ்தவர்களாக வாழ வாஞ்சித்து காத்திருக்கும்போதே தொலைந்துபோய்விடுவர். அவர்கள் அதற்கென்று எந்தவித உண்மையான முயற்சியும் எடுக்கவில்லை. எனவே, அவர்கள் தராசில் நிறுக்கப்பட்டு குறையக் காணப்படுவார்கள். சித்தமானது சரியான வழியில் செல்படுத்தப்படவேண்டும். முழுமனதுடைய கிறிஸ்தவர்களாயிருப்போம். பூரண அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவைகளை அறிந்துகொள்வோம்.

“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்” என்னும் இயேசுவின் வார்த்தைகளுக்கு மிகவும் கவனமாகச் செவிகொடுங்கள். நீதியின்மேல் பசிதாகமுள்ள ஆத்துமாக்களை திருப்தியாக்க கிறிஸ்துவால் அதிகமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ★

# ஒழுக்கநிலையில் சுதந்திரம்!

**"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" —2 கொரிந்தியர் 6:17,18.**

இந்தக் காலத்தில் அநேகர் தங்களது முகங்களிலே திரைகளை அணிந்திருக்கிறார்கள். இந்த முகத்திரைகள் உலகத்தாரின் பழக்கவழக்கங்களுக்கும், நடைமுறைகளுக்கும் ஒத்துப்போகின்றன. இம்முகத்திரைகள் ஆண்டவருடைய மகிமையை அவர்களுக்கு மறைத்துவிடுகின்றன. இந்த உலகத்தின் காரியங்களுக்கு நமது கண்கள் மறைக்கப்படத்தக்கதாக, நமது கண்கள் அவர்மீது பதிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

சத்தியமானது அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்தப்படும் பொழுது, வேதாகமத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு நமது படித்தரமானது மிகவும் அதிகமதிகமாக உயர்த்தப்படவேண்டும். எனவே, உலகப்பிரகாரமான நவநாகரிங்கள் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றிற்கு எதிராகச் செயல்படுவது அவசியமாயிருக்கும். கடலின் அலைகளைப்போன்று, உலகப்பிரகாரமான செல்வாக்குகள், கிறிஸ்துவின் பின்னடியார்களை அவரது கிருபை சாந்தம் ஆகிய உண்மையான கொள்கைகளினின்று அடித்துச்செல்லத்தக்கதாக, அவர்களுக்கு எதிராக மோதியடிக்கும். என்றாலும், நாம் கொள்கைக்காக ஒரு கன்மலையைப்போன்று திடமாக நிற்கவேண்டும். இவ்வாறு செய்வதற்கு ஒழுக்கரீதியான தைரியம் தேவைப்படுகிறது. நித்திய கன்மலையாகிய அவர்மீது (இயேசுவின்மீது) யார் யாருடைய ஆத்துமாக்கள் உறுதியாக இணைக்கப்படவில்லையோ, அவர்கள் உலகப்பிரகாரமான போக்கிலே அடித்துச்செல்லப்படுவார்கள். தேவனிலே நமது ஜீவன் கிறிஸ்துவுடன் மறைந்திருக்குமானால் மாத்திரமே,

நாம் உறுதியாக நிற்கமுடியும். உலகத்தை எதிர்த்துநிற்கும்போது, ஒழுக்க சுதந்திரம் முற்றிலுமாக அதின் இடத்திலிருக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலுமாக இசைந்திருப்பதின்மூலம், நாம் அனுகூலமான நிலையிலே வைக்கப்படுகிறோம். உலகத்தின் பழக்கவழக்கங்களிலிருந்தும், நடைமுறைகளினின்றும் தீர்மானமாக விலகியிருத்தலின் அவசியத்தைக் காண்போம். நமது படித்தரத்தை உலகப்படித்தரத்திற்கு சற்று அதிகமாகமாத்திரம் உயர்த்திவைத்துக்கொள்வது கூடாது. உலகப்படித்தரத்திற்கும் நமது படித்தரத்திற்குமுள்ள வேறுபாடு தெளிவாக—தீர்மானமாகத் தெரிய வேண்டும்....

விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வது ஒரு சுலபமான காரியம் அல்ல. எவரும் இதைச்செய்துகொண்டு, உலகத்தின் போக்கிலே மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருக்க முடியாது. உலகத்தினின்று வெளியேவந்து தனித்திருக்கவேண்டும். அசுத்தமானதைத் தொடக்கூடாது. உலகத்தின் போக்கிலே கீழாக அடித்துச்செல்லப்படாமல் உலகத்தாரைப்போல ஒருவரும் நடந்துகொள்ளமுடியாது. தீவிர விடாமுயற்சியில்லாமல் ஒருவரும் மேல்நோக்கி முன்னேற முடியாது. வெற்றிபெறவேண்டும் என்று இருப்பவர், கிறிஸ்துவை பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். அவர், பின்னிட்டுப்பாராமல், கண்களை எப்பொழுதும் மேல்நோக்கிப் பதித்தவராக, கிருபையின்மேல் கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட விழிப்புணர்வானது பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்படும் விலையாகும்.

அனைத்துக் காரியங்களின் முடிவும் சமீபமாக இருக்கிறது. தேவனுக்காகப் போரிட போர்கவசம் பூண்டு, தகுந்த ஏற்பாட்டுடன் ஆயத்தத்தோடிருக்கும் மனிதரே இன்றைய தேவையாயிருக்கிறது. ★

# இங்கே விக்கிரகங்கள் ஏதாவது இருக்கின்றனவா?

**“பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக....” –1 யோவான் 5:21.**

தேவனுடைய உண்மையான ஒவ்வொரு பிள்ளையும் கோதுமையைப்போல புடைக்கப்படும். அவ்வாறு புடைக்கப்படும்போது, தேவனிடமிருந்து நம்மைத் திசைதிருப்பக்கூடிய, இனிமையாகத் தோன்றுகின்ற ஒவ்வொரு சிற்றின்பமும் தியாகம் செய்யப்படவேண்டும். பல குடும்பங்களில் அலமாரிகளும், நிலைகளும், மேசைகளும், அலங்காரப்பொருட்களாலும் படங்களாலும் நிறைந்துள்ளன.... இவ்வாறு தேவன்மேலும் பரலோகத்தின்மேலும் இருக்கவேண்டிய நம் சிந்தை, சாதாரணக் காரியங்களுக்குக் கொண்டுவரப்படுகிறது. இது விக்கிரக ஆராதனையின் ஒருவகையல்லவா? இவ்வாறு செலவிடப்பட்ட பணங்கள் மனிதனின் ஆசீர்வாதத்திற்கும், துன்புறுபவர்களின் விடுதலைக்கும், உடையில்லாதவர்களை உடுத்துவிக்கவும், பசியுள்ளோருக்கு ஆகாரம் கொடுக்கவும் பயன்படுத்தப்படலாம் அல்லவா? அவரது காரியங்களைத் துரிதப்படுத்தவும், பூமியில் அவரது இராஜ்யத்தை ஸ்தாபிக்கவுந்தக்கதாக அவைகளை கர்த்தருடைய பொக்கிஷ அறையில் வைக்கலாம் அல்லவா?

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும். உங்களை விக்கிரக ஆராதனையின் பாவத்திலிருந்து காத்துக்கொள்ள, இது வலியுறுத்துவதாக இருக்கிறது. “என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்” என்று இஸ்ரவேலின் பரிசுத்தரால் சொல்லப்பட்ட இவ்வார்த்தைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். தங்கள் வீடுகளை நிறைத்துள்ள தேவையில்லாத அலங்கரிப்புகளுக்காக தங்கள் நேரத்தையும் சிந்தனையையும் செலவிட்டு, தேவையில்லாத கவலைகளையும் மனஉளைச்சல்களையும் பலர் வருவித்துக் கொள்கிறார்கள். எந்த நோக்கத்தின்படி பார்த்தாலும் அது விக்கிரக

ஆராதனைதான்! இவைகள் மேலுள்ள ஈடுபாட்டிலிருந்து விடுபட்டு வருமாறு எழுப்பப்படுவதற்கு தேவ வல்லமை அவசியமாயிருக்கிறது.

இருதயத்தை ஆராய்கிறவர் தம் மக்கள் எல்லா வகையான விக்கிரக ஆராதனைகளினின்றும் வெற்றிசிறக்க வாஞ்சிக்கிறார். வீணான அலங்காரப் பொருட்களால் நிறைந்துள்ள மேசைகள், ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவ புத்தகமாகிய தேவனுடைய வார்த்தையினால் நிறைக்கப்படட்டும். நிகழ்கால சத்தியத்திற்கடுத்தவைகளைக் குறித்து உங்கள் மனதை தெளிவிக்கக்கூடிய நூல்களை வாங்குவதற்கென்று உங்கள் பொருளைச் செலவிடுங்கள்.... எண்ணிலடங்கா ஞானம், அன்பு ஆகிய பொக்கிஷங்களைப்போல, கர்த்தரது வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள். பரலோகத்திற்குச் செல்லும் வழியைச் சுட்டிக்காட்டும் வழிகாட்டி இதுவே....

ஆ! ஜெப சிந்தையோடுகூடிய இதயமுள்ளவர்களாகவும், தேவனிடம் சரணடைந்த ஆவியுள்ளவர்களாகவும், நீங்கள் வேதத்தை ஆராய்ந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்கள் இருதயங்களை எரிகின்ற மெழுகுவர்த்தியைக்கொண்டு ஆராய்ந்து, தேவனிடமிருந்து மனதைத் திசைதிருப்பும்—உலகப்பழக்கங்களுடன் உங்களை இணைக்கும்—மிகவும் மென்மையான நூல்களையும் (வுாசநயன) அகற்றிப்போட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! தேவனிடமிருந்து உங்கள் சிந்தனையையும் பிணைப்பையும் பின்னிழுக்கும் ஒவ்வொரு செய்கையையும் வெளிப்படுத்திக்காட்டும்படி அவரிடம் கெஞ்சி மன்றாடுங்கள். தேவன் மனிதனுக்கு தமது பரிசுத்த பிரமாணத்தை—குணத்தை அளக்கும் அளவுகோலாகக் கொடுத்துள்ளார். இந்தப் பிரமாணத்தின்மூலமாக உங்கள் குணத்தில் காணப்படுகிற ஒவ்வொரு குறையையும் கண்டறிந்து, அதை நீங்கள் மேற்கொள்ளலாம். ஒவ்வொரு விக்கிரகத்திடமிருந்தும் உங்களைப் பிரித்து, சத்தியம், கிருபை என்னும் தங்கச்சங்கிலியால் தேவனது சிங்காசனத்துடன் உங்களை நீங்களே இணைத்துக்கொள்ளலாம். ★

# நீங்களே உங்கள் இருதயத்தை ஆராய்ந்துபாருங்கள்!

**“நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்” –2 கொரிந்தியர் 13:5.**

பாவத்தின் ஏமாற்றும் தன்மையைக்காட்டிலும் மிகவும் வஞ்சனை நிறைந்தது வேறொன்றுமில்லை. வஞ்சித்து, குருடாக்கி, அழிவிற்கு வழிநடத்தக்கூடிய இவ்வுலகின் தேவன் அதுவே. சாத்தான் வெளிப்படையாகத் தனது சோதனைகளின் தொகுப்புகளோடு நுழைவது கிடையாது. அவன் இச்சோதனைகளுக்கு நன்மைக்கொத்த வேஷந்தரித்து விடுகிறான்.... அதின் கவர்ச்சியினால் ஏமாற்றப்பட்ட ஆத்துமாக்கள், ஒரு அடி எடுத்துவைத்த பின்பு அடுத்ததற்கும் ஆயத்தமாகின்றன.... ஆ! தனது கண்ணியில் இவ்வளவு சீக்கிரம் அகப்படுகிறதையும், தான் ஆயத்தப்படுத்திய வழியில் ஆத்துமாக்கள் நடப்பதையும் காண சாத்தான் எவ்வளவு கவனமாக உற்றுநோக்கிக்கொண்டிருக்கிறான்!....

மிகவும் நுணுக்கமான சுய பரிசோதனை மிக இன்றியமையாததாயிருக்கிறது. “எனது இருதயம் ஆரோக்கியமாயிருக்கிறதா அல்லது கெட்டுப்போயிருக்கிறதா? நான் கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறேனா அல்லது வெளியில் புதிய வஸ்திரம் தரித்துக்கொண்டு, இருதயத்தில் குற்றமுள்ளவனாயிருக்கிறேனா?” என தேவ வார்த்தையின் ஒளியிலே கவனமாக ஆராய்ந்திடவேண்டும். தேவனது நியாயாசனத்தின்முன்பாக உங்களை நிறுத்தி, அவரது ஒளியிலே உங்களிடம் ஏதேனும் இரகசிய பாவமோ, அநீதியோ, விக்கிரகமோ இன்னும் தியாகஞ்செய்யப்படாமல் இருக்கிறதா என்று பாருங்கள். சாத்தானது கருவிகளால் வஞ்சிக்கப்படாதபடிக்கும், அக்கறையின்றி, அஜாக்கிரதையினால் உங்கள் ஆவி வீணாகப் போகாதபடிக்கும் இதுவரை

ஒருக்காலும் ஜெபித்திராத அளவிற்கு ஜெபியுங்கள்.... கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் தேவனைவிட, சிற்றின்பத்தையே அதிகம் விரும்புவார்கள் என்பது கடைசிக்கால அடையாளமாகிய ஒரு பாவமாகும். உங்கள் ஆத்துமாக்களுக்கு உண்மையுள்ளவர்களாகச் செயல்படுங்கள். கவனமாக ஆராயுங்கள். உண்மையான சோதனைக்குப் பிறகு பரத்தை நோக்கி, "நான் தேவனை நேசிப்பதைவிட சிற்றின்பங்களை அதிகம் விரும்புகிறவனல்ல" என்று கூறக்கூடியவர்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறார்கள்! "நான் உலகத்திற்கு மரித்திருக்கிறேன்.... எனது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நானும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவேன்" என்று கூறக்கூடியவர்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறார்கள்!

ஆ! தேவனுடைய அன்பும் கிருபையும் எத்தகையது! ஆ! மிகவும் அருமையான கிருபை! பசும்பொன்னிலும் மகிவும் மதிப்பு வாய்ந்தது! மற்ற எல்லாக் கொள்கைகளுக்கும் மேலாக அது ஆவியை உயர்த்தி மேன்மைப்படுத்துகிறது. நம்மைச் சுற்றியிருப்போர் வீணான இவ்வுலகக் காரியங்களிலும், சுகபோகத்தை நாடுவதிலும், அறிவற்ற செயல்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, நமது மீட்பர் வருவார் என்று எதிர்நோக்கிக்கொண்டிருக்கிற அந்த பரலோகத்தின்மீது நமது இதயத்தையும் பாசங்களையும் நிலைப்படுத்துகிறது. மன்னிப்பிற்காகவும், சமாதானத்திற்காகவும், நீதிக்காகவும், மெய்யான பரிசுத்தத்திற்காகவும் நமது ஆத்துமா தேவனை நோக்கிச்சென்று கொண்டிருக்கும். தேவனோடு உரையாடுவதும், பரத்திற்கான காரியத்தைப்பற்றி தியானஞ்செய்வதும் நமது ஆத்துமாவை கிறிஸ்துவைப்போன்ற சாயலுக்கு மாறச்செய்யும். ★

# உள்ளத்தை ஊடுருவி ஆராய்கின்ற கேள்விகள்!

**"யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே"**

**—சங்கீதம் 24:3,4.**

கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கிற ஆத்துமா.... ஒவ்வொரு மீறுதலிற்கும் பாவத்தின் அணுகுமுறைக்கும் எதிராகப் போராடும். அவன் ஒவ்வொரு நாளும் அதிகமாகப் பிரகாசிக்கிற ஒளியைப் போலவும், அதிகமாக வெற்றிபெறுகிறவனாகவும் இருப்பான். அவன் பெலத்தினின்று பெலத்திற்குச் செல்வானேயன்றி பெலவீனத்தினின்று பெலவீனத்திற்கு அல்ல.

இந்தக் காரியத்தில் ஒருவரும் தன் ஆத்துமாவை வஞ்சிக்கவேண்டாம். வீண் பகட்டு, பரிசுத்தமில்லாத குறிக்கோள், முறுமுறுப்பு, திருப்தியின்மை, கசப்பு, தீமையைப் பேசுதல், வஞ்சகம், அவதூறு ஆகியவைகளை நீங்கள் கொண்டிருக்கும்போது, கிறிஸ்து உங்கள் இருதயத்தில் வசிக்கமுடியாது. நீங்கள் உறுதியான கிறிஸ்தவ குணத்தைப் பெற்றிருக்க வேண்டும்....

சத்தியத்தை நம்புகிறோமென்று உரிமைகோருபவர்கள் மத்தியில் முழுமையான மனந்திரும்புதல் காணப்படவேண்டும். அல்லது அவர்கள் சோதனைக் காலத்தில் விழுந்துபோவார்கள். தேவ மக்கள் ஒரு உயர்ந்த நிலையை அடையவேண்டும். அவர்கள் பரிசுத்த ஜாதியாகவும் அவருக்குச் சொந்தமான ஜனமாகவும், தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும், நன்மைசெய்யத் துடிப்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். நீங்கள் இவ்வுலக

மக்களின் ஆசை, நாட்டம், குணம் ஆகியவைகளைக் கொண்டிருக்கும்படி கிறிஸ்து உங்களுக்காக மரிக்கவில்லை.

மகிமையின் வாசலை நோக்கி, தன் இருதயத்தை வைக்கிறவனேயன்றி, வேறொருவனும் அதற்குள் பிரவேசிப்பதில்லை. அப்படியானால் பின்வரும் கேள்விகளைக் கேட்டுப்பார்ப்போம். நீங்கள் உலகக் காரியங்களுக்காக அக்கறை செலுத்துகிறீர்களா? உங்கள் சிந்தனைகள் தூய்மையாக இருக்கின்றனவா? நீங்கள் பரலோகத்தின் காற்றை சுவாசிக்கிறீர்களா? மாசுபட்ட புகையை உங்களுடன் கொண்டுசெல்கிறீர்களா?.... நீங்கள் ஊக்கமுள்ளவர்களாகவும், ஒப்புக்கொடுத்தவர்களாகவும் தூய்மையுடனும் பரிசுத்தத்தின் அழகுடனும் தேவனை சேவிக்கிறீர்களா? "நான் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறேனா—இல்லையா?" என்று உண்மையாக உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள்.

நம்முடைய அனைத்து சபைகளிலும் முழுமையான சீர்திருத்தம் தேவைப்படுகிறது. மனதை மாற்றும் தேவனுடைய வல்லமை நமது சபைக்குள் வரவேண்டும்.... ஆயத்தப்படவேண்டிய நாளை தள்ளி வைக்காதீர்கள். விளக்கில் எண்ணெயின்றி ஆயத்தமில்லாத நிலையில் தூக்கங்கொள்ளாதிருங்கள்.... ஆபத்தான நிச்சயமற்ற நிலையில் ஐயமுடன் தரித்திருக்கவேண்டாம். "நான் இரட்சிக்கப்பட்ட கூட்டத்தில் இருக்கிறேனா—இல்லையா?" என்று உங்களை நீங்களே உண்மையோடு கேட்டுப்பாருங்கள். "நான் உறுதியாக நிற்பேனா—அல்லது மாட்டேனா?" என வினவுங்கள். சுத்தமான கைகளையும் தூய இருதயத்தையும் உடையவனே அந்த நாளில் நிலைத்துநிற்க முடியும்.

ஒவ்வொரு கணமும் மெய்கிறிஸ்தவனாக இருப்பது ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் கிடைத்த பாக்கியமாகும். அப்பொழுது, பரலோகம் முழுவதுமே அவன் பக்கத்திலிருக்கும். ★

# தனித்தன்மையோடு வித்தியாசமானவராக இருக்க உங்களுக்குத் துணிவு உண்டா?

**“நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” –1 பேதுரு 2:9.**

“மனுஷகுமாரன் சீக்கிரம் வானத்தின் மேகத்தில் வரவிருக்கிறார்” என்கிற எச்சரிக்கை பலருக்கு ஒரு நன்கு அறியப்பட்ட பழங்கதையாக இருக்கிறது. அவர்கள் காத்திருத்தலையும் எதிர்நோக்கியிருத்தலையும் விட்டுவிட்டனர். அவர்கள் இருதயத்தின் எண்ணமாகிய, “எனது கர்த்தர் அவரது வருகையை தாமதிக்கிறார்” என்பதை அவர்களது சுயநலமும், வாழ்க்கையில் அவர்களால் செயல்படுத்தப்படுகிற இவ்வுலக ஆவியும் வெளிப்படுத்துகிறது....

சுயநலம், இவ்வுலகிற்குரிய பழக்கவழக்கங்கள் ஆகியவைகளின் ஆவி, நோவாவின் நாட்களில் இருந்ததுபோல, நமது நாட்களிலும் இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளும் பலர், தாங்கள் கூறுவது பொய் என்பதுபோல, உலகிற்கு அடுத்த காரியங்களில் மிகவும் அதிகமாக பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் தங்கள் கிருபையின் காலம் முடியும் வரைக்கும் “திட்டமிட்டும், கட்டடங்களை எழுப்பியும், வாங்கியும், விற்றும், புசித்தும், குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும்” கிருபையின் கால முடிவின் கடைசி நொடிப்பொழுதுவரை இப்படி செயல்பட்டுக்கொண்டிருப்பார்கள். நமது சொந்த மக்கள் பலரின் நிலை இதுதான்....

நம் மத்தியிலுள்ள ஆவிக்குரிய நிலையில் காணப்படும் குறைவை காணும்போது, எனது ஆத்துமா பாரத்தால் நிறைகிறது. இவ்வுலகின் நாகரீகப் பழக்கங்கள், பெருமை, பொழுதுபோக்கில் நாட்டம், கண்காட்சி, உடை, வீடு, நிலம் ஆகியவைகளிலுள்ள ஆடம்பரமான காரியங்கள்—இவைகளெல்லாம் தேவனுடைய பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டு, சத்திய ஒளியை உலகிற்கு அனுப்புவதற்குரிய பணத்தை தங்கள் சுயத்தைத் திருப்தி செய்வதற்காக திருப்பிவிடுகின்றன....

ஒளியின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாகிய இவர்களைச் சுற்றிலும் அநீதியின் ஊழியக்காரர்களைச் சூழ்ந்திருக்கும் இருளும், இரவின் நிழலும் காணப்படக்கூடாது. மாறாக, ஒளியைப் பிடித்திருப்பவர்கள் விசுவாசத்துடன் நிலைநின்று, தங்கள் கடமையை நிறைவேற்றும்வண்ணம், தேவனிடமிருந்து ஒளியைப் பெற்று, அதை இருளிலிருப்பவர்கள்மீது பிரகாசிப்பிக்க வேண்டும். தமது பிள்ளைகள் தங்கள் நேர்மையைப் பாதுகாத்துக்கொள்ளவும், இறையுணர்வு இல்லாதவர்களைப்போன்று பாவனை செய்யாமல் இருக்கவும் தேவன் வேண்டுகிறார்.

கிறிஸ்தவர்கள் தங்களை, "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும்" இருப்பார்கள். இந்த ஒளி, நிறைவான அந்த நாள் மட்டும் மங்காமல் அதிகமதிகமாகப் பிரகாசிக்க வேண்டும். "கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" என்று நம் காதில் தொனித்துக்கொண்டிருக்கும் வியப்பான சத்தியமானது நாம் அந்தத் தூதை முதன் முதலில் கேட்டதைக்காட்டிலும், எவ்விதத்திலும் குறைவுபட்டுக் காணப்படவில்லை. குறைந்த உண்மையுள்ளதாகவும் இருக்கவில்லை. ★

# ஒவ்வொரு சந்தேகத்தையும் வேரோடு பிடுங்கு!

**“ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.... நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்” —எபிரெயர் 10:35–39.**

நாம் இப்பொழுது அசைக்கப்படும் காலத்திலிருக்கிறோம். கிறிஸ்துவின் கையிலிருந்து ஆத்துமாக்களைப் பறித்து, தேவனுடைய குமாரனை பாதத்தின் கீழே மிதித்துப்போட வகைசெய்யும்படிக்கு சாத்தான் தன் முழுவல்லமையோடும் கிரியை செய்துகொண்டிருக்கிறான் என்பதை நான் கண்டேன்....

குணம் வளர்க்கப்படுகிறது. தேவதூதர்கள் நமது ஆன்மீகத் தகுதியை நிறுக்கிறார்கள். தேவன் தமது மக்களை சோதித்து நிரூபிக்கிறார். “சகோதரரே, நீங்கள் அவிசுவாசத்தின் தீய இருதயத்தைக் கொண்டவர்களாயும், ஜீவனுள்ள தேவனை விட்டுப்பிரிந்துசெல்லுபவர்களாயும் இராதபடி, அனுதினமும் விழித்திருங்கள். ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தித் தாங்குங்கள், அல்லது பாவத்தின் வஞ்சகத்தால் கடினப்பட்டுப்போவீர்கள். ஏனெனில், நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்” என்று தூதனால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

தேவ கிருபையின் மகத்துவத்தை அறிந்த அவரது மக்கள் அவிசுவாசமான வார்த்தைகளை பேசி, அதன்மூலம் பிசாசின் கருத்துக்களை மற்றவர்களுக்கு பரப்பும் கருவியாக செயல்படுவதை தேவன் விரும்புவதில்லை. அவிசுவாசம், தீமை ஆகிய விதைகள் விதைக்கப்பட்டபின், அவற்றைப் பிடுங்கி எறிவது எளிதல்ல. சாத்தான் ஒவ்வொரு மணிநேரமும்

அதற்கு ஆதரவளித்து ஊக்கப்படுத்துவதால், அவைகள் ஓங்கிவளர்ந்து பலமுள்ளதாகிறது. விதைக்கப்படுகின்ற நல்ல விதையானது உரம்போட்டு, நீர்ப்பாய்ச்சி, நேர்த்தியாக கவனிக்கப்படவேண்டியது அவசியம். ஏனெனில் அதன் வளர்ச்சியைத் தடுத்து, அதைச் சாகடிக்கும்வண்ணம் ஒவ்வொரு தீமையான செல்வாக்கும் அதன்மேல் படிகின்றது. தான் மற்றவர்களை வஞ்சிப்பதற்கு தனக்குக் குறுகிய காலமே உள்ளது என்று சாத்தான் அறிந்திருக்கிறதால், அவனது முயற்சிகள் என்றுமில்லாத அளவிற்கு, மிகவும் அதிக வல்லமையுடன் இந்தக் காலங்களில் காணப்படுகின்றன....

தானிய மணியிலிருந்து பதர் பிரிக்கப்படும்வரை தானியம் சுளகினால் புடைக்கப்படுவதுபோல, தேவ மக்கள் புடைக்கப்படுவார்கள். நாம் கிறிஸ்துவை முன்னுதாரணமாகக்கொண்டு, அவரது தாழ்மையின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும்....

பரிசுத்தர்களின் வெகுமதியாகிய நித்திய சுதந்திரம் எனக்குக் காண்பிக்கப்பட்டது. பின்பு, தேவமக்கள் சத்தியத்தினிமித்தம் எவ்வளவாக பாடனுபவித்தனர் என்பதும் எனக்குக் காட்டப்பட்டது. அவர்கள் பரலோகத்தை மிகவும் எளிதாக பெற்றுக்கொண்டதாகவே கருதினர். அவர்கள் இக்காலத்தின் பாடுகளை, பரலோகத்தின் மகிமையோடு ஒப்பிட முடியாது என உணர்ந்திருந்தனர். இந்த நாட்களில் தேவ மக்கள் சோதிக்கப்படுவர். ஆனால், சீக்கிரம் அவர்களது சோதனைகள் முடிவுக்கு வரும். பின்பு அவர்கள் நித்திய ஜீவனாகிய பரிசைப் பெற்றுக்கொள்வார்கள். ★

# ஆவிக்குரிய வாழ்வில் நீங்கள் வல்லமையுடையவரா? அல்லது பெலவீனரா?

**“இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்”**

**–2 கொரிந்தியர் 7:1.**

ஆண்டவர் அவரது பிரமாணத்தைக் கைக்கொள்கிறோம் என்று (பெயரளவில்) சொல்லிக்கொள்கிற மக்களைக் கடிந்துகொள்ளுகிறார் திருத்துகிறார் அவருக்குப் பயப்படும் பயத்திலே பரிசுத்தத்தை பூரணப்படுத்தும்படிக்கும், ஆண்டவரிலே மரிக்கவும் அல்லது பரலோகத்திற்கு மறுரூபமாக்கப்படவும் ஆயத்தப்படும்படிக்கும், அவர்களிலிருந்து பாவத்தையும் துன்மார்க்கத்தையும் அகற்றவேண்டுமென்று விரும்புவதினாலே அவர்களது பாவங்களைச் சுட்டிக்காட்டி, அவர்களது அக்கிரமத்தை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறார்.

பரிசுத்தத்தையும் தூய்மையையும் தவிர வேறு எதையும் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். குணத்திலுள்ள ஒரு கறை—ஒரு திரை—ஒரு குறை—பரலோகத்தையும் அதின் மகிமைகள் பொக்கிஷங்கள் அனைத்தையும் என்றைக்குமாக பெற்றுக்கொள்ள முடியாதபடி தடுத்து நிறுத்திப்போடும்.

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகருக்கு தாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய வல்லமையைப்பற்றி எத்தகைய அறிவுமில்லை. இந்த வாழ்க்கையின் அற்பமான— அழிந்துபோகின்ற காரியங்களுக்காக, பேராவலோடும் தீவிரமான ஆர்வத்தோடும் விடாமுயற்சியோடும் இருப்பதுபோன்று, தெய்வீக காரியங்களைப்பற்றி

ஒரு அறிவைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற திரளான மக்கள் கூட்டத்தார் ஆவிக்குரிய நிலையில் குள்ளர்களாயிருப்பதிலேயே திருப்தியடைந்திருக்கிறார்கள். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டியதே தங்களது நோக்கமாக இருக்கவேண்டும் என்ற மனநிலை அவர்களுக்கு இல்லை. எனவே, கடவுட்பற்று அவர்களுக்கு மறைந்திருக்கும் ஒரு இரகசியமாகவேயிருக்கிறது. அதை அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறதில்லை. அனுபவ அடிப்படையின்மூலமாக கிறிஸ்துவை அறியும் அறிவைப் பெற்றுக்கொள்ளவில்லை.

தேவனுக்குப் பயப்படும் பயத்திலே, பரிசுத்தத்தை நிறைவாக்க செய்யப்படும் முயற்சியிலே, நேர்மையாக, ஊக்கமாக, முன்யோசனையோடு உழைக்கும் அனைவருக்காகவும் ஏராளமான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மீட்பின் சுதந்தரவாளிகளுக்காக பணிவிடைசெய்யும் தூதர்களால் கொண்டுவரப்படும்படி, கிறிஸ்துவின் மூலமாக வல்லமையும், கிருபையும் மகிமையும் அருளப்பட்டிருக்கின்றது. தங்களது பாவங்களை அகற்றிப்போட்டு அக்கிரமத்தின் போக்கை நிறுத்தியவர்களாக, ஜீவனுள்ள தேவனிடத்திற்கு முழுமையான நோக்கங்கொண்டவர்களாக திரும்புவார்களானால், வல்லமையையும் பரிசுத்தத்தையும் நீதியையும் அவர்களுக்காக மரித்த இயேசுவில் கண்டுபிடிக்கமுடியாத அளவிற்கு எவரும் இழிவாகவும் கேடுநிறைந்தவர்களாகவும் தீயவர்களாகவும் இருக்கவில்லை. பாவத்தினாலே அழுக்கேறி, கறை படிந்திருக்கும் அவர்களது ஆடைகளை களைந்துபோட்டு, நீதியின் பிரகாசமான வெண்ணங்கியை அணிவிப்பதற்காக அவர் காத்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் மரிக்காமல் பிழைத்திருக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கூறுகிறார். அவரிலே அவர்கள் வளம் பெறலாம். அவர்களது கொடிகள் உலர்ந்துபோவதுமில்லை. கனியற்றிருப்பதுமில்லை. அவர்கள் அவரில் நிலைதிருப்பார்களேயானால், அவரிடமிருந்து உயிர்ச்சாற்றையும் ஊட்டச்சத்தையும் பெற்றுக்கொள்ளலாம். அவரது ஆவியினால் நிறைந்தவர்களாக அவர் நடந்ததுபோல தாங்களும் நடந்து, அவர் வெற்றிபெற்றதுபோல தாங்களும் வெற்றிபெற்று, அவரது சொந்த வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்படலாம். ★

# நீங்கள் ஞானமுள்ளவரா? அல்லது மதியீனமுள்ளவரா?

**“அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக்கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர் களுமாயிருந்தார்கள்” —மத்தேயு 25:1,2.**

கிறிஸ்துவின் சாயலில் நாம் உறுதிபெற்றிருக்கிறோம் என்ற அத்தாட்சியைக் கொடுக்காதபட்சத்தில், இன்னும் நமது பழைய குணங்களைப் பற்றிக்கொண்டிருக்கும்பட்சத்தில், உலக சிந்தைகள் பழக்கங்களாகிய நூல்களைக்கொண்டு நமது துணியை நெய்துகொண்டிருக்கும்பட்சத்தில்.... சபை அங்கத்தினர்களாக இருப்பதினால் இரட்சிக்கப்பட்டுவிடுவோம் என்ற எண்ணத்தில் ஓய்ந்திருக்கக்கூடாது.

இப்பூமியின் வரலாற்றின் மாலைவேளையிலே, பத்து கன்னிகைகள் கவனித்து எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர். அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று உரிமைபாராட்டுகின்றனர். அனைவருக்கும் ஒரு அழைப்பும் ஒரு பெயரும் ஒரு விளக்கும் இருக்கிறது. அனைவரும் தேவனுக்கு ஊழியம் செய்துகொண்டிருப்பதாக உரிமை கோருகின்றனர். அனைவரும் அவரது வருகையை எதிர்நோக்கியிருப்பது போன்று வெளிப்படையாகக் காணப்படுகின்றனர். ஆனால் ஐவர் குறையக் காணப்படுகின்றனர். ஐவரும் விருந்து சாலையின் வெளியே அதிர்ச்சியும் அச்சமும் உடையவர்களாகக் காணப்படுவார்கள்.

நாம் புத்தியுள்ள கன்னிகைகள் அல்லது புத்தியில்லாத கன்னிகைகளால் சுட்டிக்காட்டப்படுகிறோம். இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரைக்குறித்து அறிந்துகொள்ளாமல் பலர் இருக்கின்றனர். அவரது வழிகளை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவர் வருகைக்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை. அவர்கள் தங்கள் கர்த்தருக்காகக் காத்திருப்பதாக

ஒரு பாவனையை உருவாக்கியுள்ளனர். அன்பால் இயங்கக்கூடியதும், ஆத்துமாவை சுத்திகரிக்கக்கூடியதுமான விசுவாசத்துடன் அவர்கள் எதிர்பார்த்திருக்கவும் ஜெபிக்கவும் இல்லை. அவர்கள் கவனமில்லாத ஒரு வாழ்வை வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் சத்தியத்தைக் கேட்டும் ஏற்றுக்கொண்டுமிருக்கிறார்கள். ஆனால் அதை அவர்களது நடைமுறை வாழ்வினில் ஒருக்காலும் கொண்டுவரவில்லை. அவர்களது விளக்குகளை கிருபையின் எண்ணெய் எரியவைக்கவில்லை. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பிரவேசிக்க ஆயத்தப்படவில்லை.

கிறிஸ்துவின் கட்டளைகளைப் பின்பற்றாமல் இருந்துகொண்டு, தேவனது வாக்குத்தத்தங்கள் தங்களுக்காக அருளப்பட்டவை என எடுத்துக்கொள்ளும் புத்தியில்லாத கன்னிகைகளைப்போல இருக்கவேண்டாம். வெளித்தோற்றம் ஒன்றுமில்லை என கிறிஸ்து கற்பிக்கிறார். "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்கிறார்....

சுத்தப்படுத்துகிற, தூய்மைப்படுத்துகிற செயல்முறையான தேவனுடைய சோதனையில் நிலைநிற்கும்பொழுது, சூளையின் அக்கினியால் கழிவுகள் எரிக்கப்பட்டு, பரிசுத்தமான தன்மையுள்ள உண்மையான தங்கம் வெளிப்படும்போது, பவுலோடுகூட நாமும் சேர்ந்து, "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் ... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று கூறுவோம். ★

# இப்பொழுது...
# இப்பொழுதே தான்!

**"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையை யாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" —மத்தேயு 25:13.**

கிறிஸ்துவின் வருகை அனைவரும் நித்திரைசெய்து கொண்டிருக்கிற நடுராத்திரியில் நிகழ்வதுபோல இருக்கும். சூரிய அஸ்தமனத்திற்குமுன்பே தன் கணக்கு வழக்குகளைச் செவ்வைப்படுத்திக்கொண்டவனுக்கு அது நன்றாகவே இருக்கும். தனக்கும் தன் சக மனிதர்களுக்குமிடையேயுள்ள அவனது எல்லாக் கிரியைகளும் சரியானதாகவும், நடத்தைகள் நியாயமானதாகவும் இருக்கவேண்டும். அனைத்து நேர்மையற்ற செயல்களும் பாவம் நிறைந்த நடவடிக்கைகளும் வெகுதூரத்திற்குப் புறக்கணித்துத் தள்ளப்படவேண்டும். நமது விளக்குகளுடன் நமது கிண்ணங்களில் கிருபையின் எண்ணையுங்கூட இருக்கவேண்டும். தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலிக்கக்கூடிய, அவரது சாயலும் மேலெழுத்தும் இல்லாத நிலையிலும் கிறிஸ்துவை நோக்கி கர்த்தாவே என்று கூப்பிடுகிற ஆத்துமாவின் நிலை, உண்மையிலேயே கவலைக்கிடமானதாகத்தான் இருக்கும்.

தேவன் கிருபையாக ஒரு தவணையின் நாளையும், சோதனை உபத்திரவம் ஆகிய ஒரு காலக்கட்டத்தையும் வழங்கியிருக்கிறார். "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்" (ஏசாயா 55:6) என்று அவர் அழைப்புக்கொடுக்கிறார்....

இரக்கத்தின் குரல் அழைத்துக்கொண்டிருக்கிறது. இயேசு மனிதர்களை அவரது அன்பின் கயிறுகளால் கட்டி இழுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் வெஞ்சினத்தின் ஆடையை இயேசு அணியும் நாள் வரும்.... உலகில் துன்மார்க்கம் ஒவ்வொரு நாளும் பெருகிக்கொண்டிருக்கிறது. அது ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட்டை அடையும்போது, பதிவேடு மூடப்பட்டு,

கணக்கு வழக்குகளெல்லாம் முடிக்கப்படும். இனி பாவத்திற்காக பலி, தியாகம் எதுவும் இல்லை. கர்த்தர் வருகிறார். இரக்கமானது இந்தப் பாவ உலகை நோக்கி, அன்பின்—சகிப்புத்தன்மையின்—நீடிய பொறுமையின் ஒரு கரத்தை நீண்டகாலமாக நீட்டிவைத்திருக்கிறது. "எனது பெலத்தை பற்றிக்கொள்ளக்கடவன்...." என்ற அழைப்பு கொடுக்கப்பட்டாயிற்று. ஆனால் மனிதர்கள் அவர் இரக்கங்காட்டுகிறார் என்றெண்ணி துணிகரங்கொண்டு, அவரது கிருபையை மறுத்துவிட்டார்கள்.

கர்த்தர் ஏன் தமது வருகையை இவ்வளவு தாமதித்துள்ளார்? காணாமற்போன இவ்வுலகிற்காக இக்கடைசிப் பணியைச் செய்துமுடிக்க, பரலோகத்தின் அனைத்து சேனைகளும் காத்துக்கொண்டிருந்தும் இந்த ஊழியம் தொடர்ந்து காத்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில் விளக்குகளுடன் கிருபையின் எண்ணெய் தங்கள் கிண்ணங்களில் இருக்கிறது எனக் கூறுகின்ற சிலர் உலகில் எரிந்து பிரகாசிக்கிற ஒளியாக மாறவில்லை. வெகு சில மிஷனரிகளே உள்ளனர்....

ஒவ்வொரு வாரமும் நியாயத்தீர்ப்பிற்கு நியமிக்கப்பட்டிருக்கிற காலத்தில் ஒரு வாரத்தைக் குறைக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு நாளுக்குச் சமீபிக்கிறது. அந்தோ, பலர் உணர்ச்சிகளை சார்ந்திருக்கிறதும், மனக்கிளர்ச்சிகளால் ஆளப்படுகின்ற ஒரு மார்க்கத்தை, அதாவது நிலையற்ற ஒரு மார்க்கத்தை கொண்டிருக்கின்ற ஒருபரிதாபமான நிலையிலும் காணப்படுகின்றனர். "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்"—மத்தேயு 10:22. எனவே உங்கள் இருதயங்களில் கிருபையின் எண்ணெய் உள்ளதா என்பதைப் பாருங்கள். அதை உடைமையாகக் கொண்டிருத்தலே நியாயத்தீர்ப்பில் உங்கள் நிலைமையைத் தீர்மானிக்கும். ★

பிப்ரவரி 17

# கடைசிவரை விழிப்பாயிருத்தல்!

**"அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்" —மாற்கு 13:35,36.**

ஒரு மக்கள் கூட்டம் எனக்கு முன்பாக காண்பிக்கப்பட்டது.... அவர்கள் கண்கள் பரலோகத்தை நோக்கியிருந்தது. "நான் உங்களுக்குச்சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்கிறேன், விழித்திருங்கள்" என்கிற ஆண்டவருடைய வார்த்தைகள் அவர்களது உதடுகளின்மேல் இருந்தன.... இறுதியாக, காலை விடிவதற்கு முன்னர், கர்த்தர் ஒரு தாமதத்தை தெரிவிக்கிறார். ஆனாலும் தாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு சீக்கிரமாக அவர்கள்மேல் பகல் உதிக்காததால், அவர்கள் சோர்வுற்று உண்மையாக விழித்திருத்தலிலிருந்து ஓய்ந்திருக்க அவர்களை விடுகிறதில்லை....

நம் பிணைப்புகளையும் ஆசைகளையும் இவ்வுலகிற்கடுத்த காரியங்களிலும் செல்வங்களைச் சேர்ப்பதிலும் வைத்துக்கொண்டு, நமது இரட்சகரின் கட்டளைக்கிணங்க விழித்திருப்பதும் காத்துக்கொண்டிருப்பதும் முடியாத காரியம் எனக் கண்டேன். "அவர்கள் ஏதேனும் ஒரு உலகத்தை சுதந்தரித்துக்கொள்ளலாம். பரலோகப் பொக்கிஷங்களை அடைவதற்கு அவர்கள் இந்த உலகத்திற்குரியவைகளைத் தியாகம்செய்ய வேண்டும். அவர்கள் இரு உலகங்களையும் பெற்றுக்கொள்ளமுடியாது" என்று தூதன் கூறினான்.

கடந்த காலங்களில் தொடர்ந்து விழித்திருந்ததை கண்டேன். இதனால் எச்சரிக்கை குறைவுடன் இன்று காணப்படலாமா? இல்லவே இல்லை! இடைவிடாமல் விழித்திருத்தல் மிகவும் அவசியமாயிருக்கிறது. ஏனெனில், முதலாம் காவல் முடிவடைவதற்குமுன் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது நேரம் குறைவாகவே காணப்படுகிறது.... அப்போது தணியாத

எச்சரிக்கையுடன் விழித்திருப்போமானால், இரண்டாம் காவலில் இரண்டு மடங்கு எச்சரிக்கை அவசியமல்லவா? இரண்டாம் காவல் கடந்துபோய், நாம் மூன்றாவதற்குள் கொண்டுவந்திருக்கிறது. இப்பொழுது நமது எச்சரிப்பைத் தணிப்பது மன்னிக்கமுடியாததாகும். மூன்றாம் காவல் மூன்றுமடங்கு ஊக்கத்திற்கு அழைக்கிறது. இப்பொழுது பொறுமையை இழந்தால், நமது அனைத்து முயற்சிகளும் இதுவரை காத்திருந்ததும் வீணாகப்போய்விடும். இந்த நீண்ட இருண்ட இரவு துன்பமானதுதான். ஆனால் இரக்கத்தின் நிமித்தமாகவே காலைப்பொழுது தள்ளிப்போடப்பட்டுள்ளது. ஏனெனில், இப்போது ஆண்டவர் வந்தால், பலர் அதற்கு ஆயத்தமின்றிக் காணப்படுவார்கள். இந்த நீண்ட தாமதத்திற்கு "தேவன் தமது ஜனங்கள் அழிவதை விரும்புவதில்லை" என்பதே காரணமாகும்.

உலகத்தை நேசிப்பவர்களுக்கும், கிறிஸ்துவை நேசிப்பவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம், நாம் தவறாகப் புரிந்துகொள்ளமுடியாதபடி மிகவும் தெளிவாக உள்ளது. இவ்வுலகத்தின் பிள்ளைகள் உலக ஆஸ்திகளைச் சவதரித்துக்கொள்ளத்தக்கதாக மிகவும் ஊக்கமாகவும் பேராவலுடனும் செயல்படுகின்றனர். ஆனால் தேவ மக்கள் இவ்வுலகத்தோடு இணங்கினவர்களல்ல. மாறாக, ஊக்கத்தோடும் விழிப்புடனும் காத்திருக்கிறவர்களாகக் காணப்படுவதினாலே, மறுரூபமடைந்தவர்களாகவும், தங்கள் வீடு இந்த உலகத்திலில்லை—மேலான பரமதேசத்தையே நாடிப்போகிறார்கள் என்பதையும் காண்பிக்கிறார்கள். ★

# ஒரே ஒரு பாதுகாப்பான வழி!

**“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” —மத்தேயு 26:41.**

தேவனுடைய மீதியான மக்கள் விழித்தெழத்தக்கதாக நான் என்ன சொல்வேன்?.... கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிடுகிறவர்கள், நியாயத்தீர்ப்பிற்கு முன்கூட்டியே ஆயத்தமாயிருக்கவும், நமது செயல்களைப் பதிவுசெய்கின்ற தேவதூதன் அவர்கள் பெயருக்கு எதிரில் மன்னிக்கப்பட்டது என்று எழுதவுந்தக்கதாக தங்களைத் தாங்களே மிகவும் கவனமாகச் சோதனையிட்டு, தங்களது அனைத்துப் பாவங்களையும் முழுமையாக அறிக்கையிடுமாறு நான் எச்சரிக்கிறேன். எனது சகோதரனே! எனது சகோதரியே! இந்த விலைமதிப்பில்லாத கிருபையின் காலத்தை பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், சாக்குப்போக்கிற்கு இடமில்லாமல் விடப்படுவீர்கள். நீங்கள் விழித்தெழுவதற்கு விசேஷ முயற்சியெடுக்காமல், மனந்திரும்புவதற்கு துடிப்புடன் செயல்படாமல் இருந்தால், இந்த பொன்னான மணித்துளிகள் சீக்கிரம் கடந்து போகும். பின்பு நீங்கள் தராசில் நிறுக்கப்பட்டு, குறையக் காணப்படுவீர்கள்.

“விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” என்ற எச்சரிப்பில், இயேசு பாதுகாப்பான ஒரே வழியை நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். விழித்திருப்பது அவசியமாயிருக்கிறது. நமது சொந்த இருதயம் வஞ்சகமுள்ளது. நாம் மனிதனுக்குரிய நலிவு பெலவீனம் ஆகியவற்றுடன்தான் இருக்கிறோம். சாத்தான் நம்மை அழிக்க நோக்கமாயிருக்கிறான். நாம் சில வேளைகளில் பாதுகாப்பற்று இருக்கலாம். ஆனால் நமது எதிராளி ஒருபோதும் சோம்பலாக இருப்பதில்லை. அவனது சோர்ந்துபோகாத எச்சரிக்கையுள்ள தன்மையை அறிந்திருக்கிற நாம், மற்றவர்களைப்போல நித்திரையாயிருந்துவிடாமல், “தெளிந்த புத்தியுள்ளவர்களாய் விழித்திருக்கவேண்டும்.” உலகத்தின் ஆவி செல்வாக்கு ஆகியவைகளை நாம் சந்திக்கவேண்டும். ஆனால், அவை நம் மனதையும் இருதயத்தையும் ஆண்டுகொள்ள அனுமதிக்கக்கூடாது.

நித்திய ஒளியில் காண்பதுபோன்று உங்கள் இருதயத்தை கவனமாகச் சோதனையிடுங்கள். உங்கள் சோதனையினின்று ஒன்றையும் மறைக்க வேண்டாம். ஆராயுங்கள்! நீங்கள் உயிர்பிழைக்கத்தக்கதாக ஆராயுங்கள். உங்களை நீங்களே நியாயம்விசாரித்து தீர்ப்பளித்துக்கொள்ளுங்கள். பின்பு விசுவாசத்தினால் உங்கள் கிறிஸ்தவ குணத்திலிருக்கும் கறைகளை அகற்ற, கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் இரத்தத்தை உரிமைகொண்டாடிப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களை நீங்களே புகழ்ந்துகொண்டு, சாக்குப்போக்குச் சொல்லிக்கொள்ளாதீர்கள். உங்கள் ஆத்துமாவோடு உண்மையுடன் செயல்படுங்கள். பின்பு உங்களை நீங்கள் ஒரு பாவியாகக் காணும்போது, நொறுங்கியவர்களாக சிலுவையின் முன்பாக விழுங்கள். மாசுபட்டிருக்கும் உங்களை இயேசு ஏற்றுக்கொள்வார். தமது இரத்தத்தால் உங்களைக் கழுவி, அனைத்து மாசுகளினின்றும் சுத்திகரித்து, பரிசுத்தமும் ஒற்றுமையும் நிறைந்த பரலோகத்தின் தேவதூதர்களின் சமுதாயத்தில் அங்கம் வகிக்கத்தக்கதாக தகுதிப்படுத்துவார். எவ்வித முரண்பாடோ, கருத்து வேறுபாடோ அங்கு இல்லை. அங்கே இருப்பதெல்லாம் ஆரோக்கியமும் சந்தோஷமும் மகிழ்ச்சியுமே.

இவ்வுலகம், அந்த உயர்ந்த பள்ளிக்குச் செல்வதற்கான ஒரு பயிற்சிக்கூடம். வரப்போகும் வாழ்விற்கு ஆயத்தமாவதற்கே இந்த வாழ்வு. பரலோகமன்றங்களில் பிரவேசிக்க ஆயத்தப்படவே இங்கு நாம் இருக்கின்றோம். ஒளியின் பரிசுத்தர்களின் குடும்பத்தில் அங்கம்வகிக்க ஆயத்தமாகும்வரை, சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதை நம்பி நடைமுறைப்படுத்தவே, நாம் இங்கு இருக்கின்றோம். ★

# செயலில் காட்டப்படும் விசுவாசம்!

**"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" –1 பேதுரு 4:7.**

அனைத்துக் காரியங்களுக்கும் முடிவு சமீபமாயிருக்கிறது. பூமியின் வரலாற்றின் எல்லாக் காட்சிகளும் சீக்கிரம் முடியப்போகிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியிருந்தால், உங்கள் விசுவாசத்தை உங்கள் கிரியைகளின்மூலம் வெளிப்படுத்துங்கள். ஒரு மனிதன் தான் கொண்டுள்ள எல்லா விசுவாசத்தையும் வெளிப்படுத்துவான். சிலர் தங்களிடம் அதிக விசுவாசம் உள்ளதாக எண்ணிக்கொள்கின்றனர். அப்படியே இருந்தாலும் அது கிரியைகளினாலே நிலைநிறுத்தப்படாததால் செத்ததாகவே இருக்கிறது. "விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்." ஆத்துமாவை சுத்திகரிக்கும் அன்பினால் கிரியைசெய்யும் உண்மையான விசுவாசத்தை வெகுசிலரே கொண்டுள்ளனர். நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ளப் பொருத்தமானவர்கள் என்று கூறப்படுபவர்கள் அதற்கு ஒரு ஆன்மீகத் தகுதியைப் பெறவேண்டும். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." இதுவே உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் பணியாகும்....

நீங்கள் சுயத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கும் அனுபவத்தைப் பெறவேண்டும். "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்த துண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்." சுயத்தைக்கொண்டு நாம் முடிவெடுக்கக்கூடாது. பெருமை, சுயத்தின்மீதான பற்று, தன்னலம், பேராசை, இச்சை, உலக ஆசை, வெறுப்பு, சந்தேகம், பொறாமை, தீய சிந்தை ஆகிய

அனைத்தும் அடக்கப்பட்டு, என்றைக்குமாகத் தியாகஞ்செய்யப்படவேண்டும். கிறிஸ்து தோன்றும்போது, இந்தப் பாவக்காரியங்களெல்லாம் திருத்தப்பட்டு நாம் தகுதிப்பட்டுக்கொண்டிருக்க முடியாது. இந்த ஆயத்தங்களெல்லாம் அவரது வருகைக்கு முன்னதாகவே முடிந்திருக்க வேண்டும். "இரட்சிக்கப்பட நாம் என்ன செய்யவேண்டும்?" தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்டவர்களாக காணப்பட, நமது நடத்தை எப்படி இருக்கவேண்டும் என்பவைகளையே நாம் சிந்தித்து—படித்து—ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டும்.

முறுமுறுக்கும்படியாக—கண்டனஞ்செய்யும்படியாக—எரிச்சலடையும்படியாக—உங்கள் சுற்றத்தாருக்கு தீங்கு விளைவிக்கும்படியாகவும், அதன்மூலம் உங்களுக்கு நீங்களே தீங்கு விளைவித்துக்கொள்ளும்படியாகவும் சோதனைவரும்போது, நீங்கள் ஆழ்ந்த உண்மையுடனும் ஏக்கத்துடனும் உங்கள் ஆத்துமாவிடம் "நான் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக குற்றமற்றவனாக நிற்பேனா?" எனக் கேளுங்கள். குற்றமற்றவர்கள் மட்டுமே அங்கு இருப்பார்கள். பூமியின் குப்பைகளால் இருதயம் நிறைந்திருக்கும்பொழுது, ஒருவரும் பரலோகிற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள். நமது குணங்களில் காணப்படுகிற ஒவ்வொரு குறையும் முதலில் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொரு கறையும் கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் இரத்தத்தால் அகற்றப்பட்டு, விரும்பப்படத்தகாத குணங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படவேண்டும். ★

# சாத்தானுடைய பிரதிநிதிகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

**“ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே ... சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்” –1 தீமோத்தேயு 4:1.**

1844–ம் ஆண்டின் காலம் கடந்துபோனபின்பு, நாம் பலவிதமான கொள்கை வெறிகளைச் சந்தித்தோம்.... முற்காலத்தின் அனுபவங்களே மீண்டும் அரங்கேறும். வருங்காலங்களில் சாத்தானுடைய மூடநம்பிக்கைகள் பல, புதிய உருவங்களைப் பெற்றுக்கொள்ளும். தவறுகள்—இனிமையானதாகவும், பொய்— கவர்ச்சியுடையதாகவும் நம்முன் வைக்கப்படும். ஒளியின் அங்கி தரிப்பிக்கப்பட்டு, தவறான கொள்கைகள் தேவ மக்கள் முன்பாக வைக்கப்படும். கூடுமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க, சாத்தான் முயலுவான். மிகவும் விசனப்படுத்தக்கூடிய ஆதிக்க சக்திகள் ஈடுபடுத்தப்படுகின்றன. நம் மனது வசீகரிக்கப்படுகின்றது.

நோவாவின் காலத்து மக்கள் மத்தியில் காணப்பட்ட எல்லாவித அருவருப்பான ஒழுக்கக்கேடுகளும், நம் மனதை கவர்ந்திழுக்கத்தக்கதாகக் கொண்டுவரப்படும். இயற்கையை தேவனுக்கு நிகராக உயர்த்துதல், மனிதனின் சித்தத்திற்கு தடையில்லாமல் அனுமதி, தேவனற்றவர்களின் செல்வாக்கிற்கடியில் ஆலோசனை ஆகியவைகளைச் சாத்தான் தனது பிரதிநிதிகளாகக் கொண்டு, குறிப்பிட்ட சில நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகிறான். அவன் தனது திட்டங்களைச் செயல்படுத்த, “மனதின்மீது (மற்றவர்களது) மனதிற்குள்ள சக்தியை” பயன்படுத்துகிறான். இவையனைத்திலும் மிகவும் வருத்தத்திற்குரிய சிந்தனை என்னவெனில், சாத்தானுடைய வஞ்சகமான மனிதர்கள் தேவனுடன் உண்மையாக எந்தத்

தொடர்பும் இல்லாமல் இருக்கும்போதும், ஒரு போலியான தேவபக்தியின் வேஷத்தைப் பெற்றிருப்பர். நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்த ஆதாம் ஏவாளைப்போன்று இன்றும் பலர், வஞ்சகத்தின் தவறான உணவைப் புசித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஏதேன் தோட்டத்தில் நம் ஆதிப் பெற்றோரிடம் சாத்தான் தன் உருவத்தை மறைத்து, சர்ப்பத்தின்மூலமாகப் பேசியவண்ணம், இன்றும் சாத்தானின் பிரதிநிதிகள் தவறான கொள்கைகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான ஆடை உடுத்துவிக்கின்றனர். இப்பிரதிநிதிகள் உண்மையில் மனிதனின் மனதில் சாவிற்கேதுவான தவறுகளை புகட்டுகின்றனர். தேவனுடைய எளிமையும் தெளிவுமான வார்த்தைகளைத் தவிர்த்துவிட்டு, இனிமையாகத் தோன்றும் கட்டுக்கதைகளுக்குத் திரும்புவோர்மீது சாத்தானின் வசியம் நிறைந்த செல்வாக்கு தங்கும்.

சாத்தான் அதிக வெளிச்சம் பெற்றவர்களை கண்ணியில் சிக்கவைக்கவே அதிக ஈடுபாடு காட்டுகிறான். அவர்களை வஞ்சிக்கமுடிந்தால், அவர்கள் அவன் கட்டுப்பாட்டிலிருந்துகொண்டு, பாவத்திற்கு நீதியின் உடையைத் தரிப்பித்து, பலரையும் தவறான பாதையில் வழிநடத்துவார்கள் என்று அறிந்திருக்கிறான்.

விழிப்பாயிருங்கள். ஏனெனில், சாத்தான் ஒளியின் தூதனைப்போல கிறிஸ்துவின் ஊழியர்களின் ஒவ்வொரு கூட்டத்திலும், ஒவ்வொரு சபையிலும் உலாவிவந்து, தன் பக்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்க முயன்றுவருகிறான் என்று அனைவருக்கும் கூறிக்கொள்கிறேன். "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7) என்ற எச்சரிப்பை தேவ மக்களுக்கு அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ★

# மாறுவேடத்திலிருக்கும் சோதனைகள்!

**"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" –அப்போஸ்தலர் 20:29,30.**

தேவன் தமது சத்தியத்தை வெளிப்படுத்தத்தக்கதாக இங்கொருவரும் அங்கொருவருமாக ஒரு சிலரைமட்டும் தகுதியுள்ளவர்களாக தெரிந்தெடுத்துவிட்டு கடந்துசென்றுவிடவில்லை. ஏற்கெனவே நிலைநாட்டப்பட்ட சத்தியத்திற்கு முரண்பாடான புதிய வெளிச்சத்தை ஒரு மனிதனுக்கும் கொடுக்கிறதில்லை. ஒவ்வொரு சீர்திருத்தத்தின்போதும் மனிதன் இந்த கொள்கையை முன்வைத்தே எழுச்சியடைந்துள்ளான்....

சத்தியத்திற்கு மாறாகத் தோன்றாத சில புதிய அடிப்படையான கருத்துக்களை சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். அழகானதும் முக்கிமானதுமாக ஆடையணிவிக்கப்பட்டிருப்பதாக ஒருவனுக்குத் தோன்றும்வரை அந்த நபர் அதில் கருத்தூன்றியிருக்கிறான். ஏனெனில் இத்தகைய மாயத் தோற்றத்தைக் கொடுக்க சாத்தான் வல்லவனாக இருக்கிறான். இறுதியில் அது அனைத்தையும் கவருகின்ற தலைமைக் கருத்தாகவும், அனைத்திற்கும் மையமாக விளங்கும் மிகப்பெரிய காரியமாகவும் உருவாகிவிடும். சத்தியம் இருதயத்திலிருந்து பிடுங்கப்பட்டுவிடுகிறது....

சத்தியத்திலிருந்து மனதைத் திசைதிருப்பும் தன்மையுள்ள இக்காரியத்தைக்குறித்து விழிப்புடன் இருக்கும்படி நான் உங்களை எச்சரிக்கின்றேன். தவறுகள் ஒருபோதும் கேடு விளைவிக்காமல் இருக்காது. அது ஒருபோதும் பரிசுத்தப்படுத்தாது. ஆனால் எப்பொழுதும் குழப்பத்தையும் முரண்பாட்டையுமே எப்பொழுதும் கொண்டுவருகிறது....

ஆயிரக்கணக்கான சோதனைகள் வேஷந்தரிக்கப்பட்டு, சத்தியத்தை உடையவர்களுக்கென்று ஆயத்தமாயிருக்கிறது. எனவே அனுபவமிக்க சகோதரர்களுக்குமுன் வைக்காமல் எத்தகையதொரு புதிய உபதேசத்தையும் புதிய வேத விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதே நம் அனைவருக்கும் ஒரே பாதுகாப்பு. தாழ்மையாகவும்—கற்றுக்கொள்ளும் ஆவியுடனும்—ஊக்கமான ஜெபத்துடனும் அவர்கள் முன்பாக அதை வையுங்கள். அவர்கள் அதில் எத்தகைய வெளிச்சத்தையும் காணாவிடில், அவர்களது தீர்வுக்கு அடிபணிந்துவிடுங்கள்.

சாத்தான் தனது பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளான். ஆனால் அவனது செயற்பாடுகளையும், தந்திரங்களையும் அறிந்திருப்பவர்கள் வெகுசிலரே. இந்தத் தந்திரமான எதிராளியின் முன்பு நிலைநிற்க தேவ மக்கள் ஆயத்தப்படவேண்டும். இந்த எதிர்ப்பிற்கே சாத்தான் அஞ்சுகிறான். அவனது சக்தியின் எல்லையையும், எதிர்த்துநின்று சந்தித்தால் எவ்வளவு எளிதாக அவனை நாம் வீழ்த்திவிடலாம் என்பதையும், அவன் நம்மைவிட நன்றாக அறிந்திருக்கிறான். மிகவும் பெலவீனமான பரிசுத்தவான்கூட, தேவ வல்லமையைக் கொண்டிருக்கும்பொழுது, சாத்தானும், அவனது எல்லாத் தூதர்களும் அவனுக்கு நிகரல்ல. அவன் சோதிக்கப்பட்டால் தான் உயர்ந்த வல்லமையைக்கொண்டிருப்பதை நிரூபிப்பான். எனவே, சாத்தானுடைய நடவடிக்கைகள் சத்தமில்லாததாகவும், அவனது இயக்கங்கள் மறைவானதாகவும், அவனது உந்துசக்திகள் முகமூடி அணிந்ததாகவும் இருக்கும். அவன் வெளிப்படையாகத் தன்னைக் காட்டிக்கொள்வதில்லை. கிறிஸ்தவனின் தூங்கிக்கொண்டிருக்கும் வல்லமை உசுப்பிவிடப்பட்டு, அவன் தேவனோடு ஜெபத்தில் இணைந்துவிடாதபடி, சாத்தான் தன்னை வெளியரங்கமாகக் காட்ட முயற்சிக்கிறதில்லை. ★

பிப்ரவரி 22

# கிறிஸ்து தமது வருகையை ஏன் தாமதிக்கிறார்?

**“மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்ன வெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால்,...” –1 கொரிந்தியர் 7:29.**

தேவதூதர்கள் மனிதர்களுக்கான தங்கள் தூதுகளில் காலத்தை மிகவும் குறுகியதாகக் காட்டுகின்றனர். அப்பொழுதும் எனக்கு அவ்வாறே காட்டப்பட்டது. இத்தூதின் ஆரம்பகாலத்தில் நாம் எதிர்பார்த்ததைவிட காலம் நீண்டு தொடர்ந்தது உண்மைதான். நமது இரட்சகர் நாம் எதிர்பார்த்த அளவு சீக்கிரம் வரவில்லை. கர்த்தருடைய வார்த்தை பொய்த்துவிட்டதா? ஒருக்காலும் இல்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும், ஆபத்து வருமெனக்கூறி கொடுக்கப்படும் எச்சரிக்கைகள் ஆகிய இரண்டுமே நிபந்தனைக்குட்பட்டவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தேவன் தம் மக்களுக்கு இப்பூமியில் நிறைவேற்ற ஒரு வேலையைக் கொடுத்துள்ளார். மூன்றாம் தூதனின் தூது கொடுக்கப்பட வேண்டும். தம் மக்களுக்குப் பாவநிவாரணம் செய்யத்தக்கதாக கிறிஸ்து பிரவேசித்துள்ள பரலோக ஆசரிப்புக் கூடாரத்திற்கு நேராக விசுவாசிகளின் மனம் திருப்பப்படவேண்டும். ஓய்வுநாள் சீர்திருத்தம் முன்னே கொண்டுசெல்லப்படவேண்டும். நிறைவேற்றப்படாமல் இருந்த தேவனுடைய பிரமாணத்தில் ஏற்பட்டுள்ள திறப்பானது அடைக்கப்படவேண்டும். பூமியின் குடிகளெல்லாம் எச்சரிக்கையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, இந்தத் தூது மிகவும் சத்தமாக பறைசாற்றப்பட வேண்டும். தேவ மக்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதின்மூலம் தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரித்து, அவரது வருகையின்போது, குற்றமற்றவர்களாக அவர்முன் நிற்பதற்கு ஆயத்தப்படவேண்டும்.

அட்வெந்து மக்கள் (இரண்டாம் வருகைக்குக் காத்திருப்போர்) 1844–ன் மாபெரும் ஏமாற்றத்திற்குப்பிறகு (great disappointment), தங்கள் விசுவாசத்தைப்பற்றிக்கொண்டு வெளிப்படும் தேவனின் அருட்செயலிற்காக ஒன்றுபட்டு இணைந்தவர்களாக முன்னேறி, மூன்றாம் தூதனின் தூதைப்பெற்று அதை பரிசுத்த ஆவியின் வல்லமையைக்கொண்டு இவ்வுலகிற்குப் பறைசாற்றியிருந்திருப்பார்கள் என்றால்… கர்த்தர் அவர்களது முயற்சிகளோடுங்கூட வல்லமையாகக் கிரியைசெய்திருப்பார். இந்த வேலை முடிவடைந்திருக்கும். கிறிஸ்து தம் மக்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பலனளிக்க இதற்கு முன்னரே வந்திருப்பார்.

அந்த மாபெரும் ஏமாற்றத்தைப் பின்தொடர்ந்து, சந்தேகம் நிறைந்த, நிச்சயமற்ற காலக்கட்டத்திலே, அநேக அட்வெந்து விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிட்டனர்…. இவ்வாறாக, தேவனுடைய ஊழியம் தாமதப்படுத்தப்பட்டு, உலகம் இருளில் விடப்பட்டது….

அவிசுவாசம், முறுமுறுப்பு, கலகம் ஆகியவைகள் ஆதி இஸ்ரவேலர்களை கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமுடியாதபடி நாற்பது ஆண்டுகாலம் தடுத்துவிட்டது. அதே பாவங்களே தற்போதைய இஸ்ரவேலர்கள் பரலோகக் கானானுக்குள் பிரவேசிப்பதைத் தாமதப்படுத்தியிருக்கிறது. இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் எந்தத் தவறுமில்லை. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் அவிசுவாசம், உலகப்பற்று, ஒப்புக்கொடாதிருத்தல், கலகம் ஆகியவைகளே நம்மைப் பாவமும் துன்பமும் நிறைந்த இவ்வுலகில் இத்தனை நீண்டகாலம் வைத்துள்ளது. ★

# அடையவேண்டிய ஓர் இலக்கு!

**"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக"–1 தெசலோனிக்கேயர் 5:23.**

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக" என்று பவுல் கூறும்பொழுது, அவர் தமது சகோதரர்களால் எட்டமுடியாத ஒரு படித்தரத்தை வைக்க முற்படவில்லை. தேவனுக்குச் சித்தமில்லாத ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றுக்கொள்வதற்காக அவர் ஜெபிக்கவில்லை. கிறிஸ்துவை சமாதானத்துடன் சந்திக்க தகுதியுடையோர் அனைவரும் தூய்மையும் பரிசுத்தமுமான குணலட்சணங்களைக் கொண்டிருக்கவேண்டும் என அவர் அறிந்திருந்தார்.

ஏழாம் நாள் அட்வெந்து மக்கள் தாங்கள் நம்புவதாகக் கூறுகின்றவைகளை கடைபிடிப்பவர்களாயிருந்திருந்தால், உண்மையான ஆரோக்கிய சீர்திருத்தவாதிகளாயிருந்திருந்தால், உலகமும் தேவதூதர்களும் மனிதர்களும் உற்றுநோக்கத்தகுந்த ஒரு காட்சிப்பொருளாக அவர்கள் நிச்சயமாகவே இருந்திருப்பார்கள். மேலும் சத்தியத்தை அறியாதவர்களின் இரட்சிப்பிற்காக அதிகத் துடிப்புடன் செயல்படுபவர்களாகவும் இருந்திருப்பர்கள்.

கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்குக் காத்திருப்போர் எனக் கூறுபவர்களின் மத்தியில், பெரிய சீர்திருத்தங்கள் காணப்பட வேண்டும். நம் மக்கள் மத்தியில் செய்யப்படாமலிருக்கும் ஒரு பணி அதாவது ஆரோக்கிய சீர்திருத்தப்பணி செய்யப்படவேண்டும். மிருகத்தின் இறைச்சியை உட்கொண்டு, அதனால் தங்கள் சரீர—மன—ஆன்மீக ஆரோக்கியத்தை ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டிருப்பவர்கள், புலால் உணவின் அபாயத்தைக் குறித்து விழித்துக்கொள்ளவேண்டும். புலால் உணவுகுறித்த கேள்வியில்

அரைகுறையாக மனந்திருந்தியிருக்கும் பலர், தேவ மக்களோடு நடக்காதபடி அவர்களை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவர்.

உணவுக் கட்டுப்பாடின்மை ஆயிரமாயிரம் பேர்களின் அழிவிற்குக் காரணமாயிருக்கும். அவர்கள் இந்த ஒரு காரியத்தில் வெற்றிகொண்டிருப்பார்களேயானால், சாத்தானின் மற்ற அனைத்து சோதனைகளையும் ஜெயங்கொள்ளத்தக்க ஒழுக்கத்தின் மேலான வல்லமையைப் பெற்றிருப்பர். ஆனால், உணவிற்கு அடிமைகளாயிருப்போர், கிறிஸ்தவ குணத்தில் பூரணமடையத் தவறிவிடுவர். ஆறாயிரம் ஆண்டுகளாக மனிதனின் தொடர்ச்சியான மீறுதல்களே சுகவீனம், வேதனை, மரணம் ஆகிய விளைவுகளைக் கொண்டுவந்திருக்கிறது. மேலும் நாம் காலத்தின் முடிவை நெருங்கும் போது, உணவைக்குறித்த சாத்தானின் சோதனை மிகவும் வல்லமையானதாகவும், மேற்கொள்வதற்குக் கடினமானதாகவும் இருக்கும்.

மனிதன் பூமியில் இயற்கையாக விளையக்கூடியவைகளையே உட்கொள்ளத்தக்கதாக, தேவன் தமது பழைய அமைப்பிற்கு நம்மை படிப்படியாக வழிநடத்துவதாக எனக்கு மறுபடியும் மறுபடியும் காண்பிக்கப்பட்டது. கர்த்தரின் வருகைக்குக் காத்திருப்போர் மத்தியில், புலால் உணவு இறுதியாக அகற்றப்பட்டுவிடும். இனி அவர்களது உணவின் ஒரு பகுதியாக இறைச்சி இருப்பதில்லை. நாம் எப்பொழுதும் இந்த முடிவை நம் கண்முன் வைத்து, அதை அடைய விடாமுயற்சியுடன் முன்செல்லவேண்டும்.
★

# சாத்தானுக்கு வேலைசெய்வதற்காக நேரத்தை செலவிடாதீர்!

**“இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிற படியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்” –2 பேதுரு 3:11,12.**

தங்கள் ஆத்துமாக்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது எது? நீதியின் எதிரியுடன் பங்குகொண்டு, நம்மையுமறியாமல் அவனது வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறோமா அல்லது கிறிஸ்துவுடன் பிணைக்கப்பட்டு, அவரது பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோமா என்று ஒவ்வொருவரும் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்....

ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை பலவீனப்படுத்தி, சத்தியத்தை விசுவாசிக்கிறோமென்று சொல்லிக்கொள்பவர்கள் மத்தியிலே முரண்பாடான காரியங்களை விதைக்கும் வேலையில் யாரானாலும்—எந்த ஒருவரானாலும் அவனது கூட்டாளியாகுவதில் சாத்தான் மகிழ்ச்சியடைவான். கிறிஸ்துவின் வழியில் நடந்து செயல்படாமல், ஆனால் கிறிஸ்துவின் நண்பர்கள் எனக் கூறுபவர்கள்மூலமாக சாத்தான் தனது நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்கின்றான்....

கர்த்தரின் வருகைக்கான ஆயத்தநாள் இதுவே. நம்பிக்கையற்றுப் பேசுவதற்கோ, சாத்தானின் வேலையைச் செய்துகொண்டிருப்பதற்கோ நமக்கு நேரமில்லை. வெறுப்பு, பொறாமை, வேற்றுமை ஆகிய விதைகளை விதைத்து, மற்றவர்களின் விசுவாசத்தை நிலைகுலையச் செய்யாதபடிக்கு, ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஏனெனில், தேவன் நமது வார்த்தைகளைக் கேட்டு, ஆம், இல்லை என்று நாம் கூறும்

அழுத்தமான பதிலினால் நம்மை நியாயந்தீர்க்காமல், நமது செயல்களின் கனியைக்கொண்டு நியாயந்தீர்க்கிறார்....

தேவ ஊழியர்கள் தங்கள் நெற்றிகளில் முத்திரிக்கப்படும் வரை, பூமியின் நான்கு காற்றுகளும் பிடிக்கப்பட்டிருக்கிறது. பின்பு பூமியின் சக்திகள், தங்கள் படைகளை கடைசியான மாபெரும் யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்தும். மீதமுள்ள கிருபையின் சிறிது காலத்தை நாம் எவ்வளவு கவனமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்! நம்மை நாமே எவ்வளவு உண்மையுடன் சோதித்து ஆராயவேண்டும்!....

கீழ்ப்படிதலுள்ள ஆவியும், சுத்தமான இருதயமும் சிந்தனையுமே அவசியமாயிருக்கிறது. ஆச்சரியப்படவைக்கத்தக்க தாலந்து, திறமை அல்லது அறிவு ஆகியவைகளைக்காட்டிலும் இது அதிக மதிப்புள்ளது. "கர்த்தர் இப்படியாகக் கூறுகிறார்" என்று கீழ்ப்படியப் பழக்குவிக்கப்பட்ட சாதாரண மனம், திறமைகள் இருந்தும் அவைகளை சரியாகப் பயன்படுத்தாதவர்களைக்காட்டிலும், தேவனுடைய வேலையைச்செய்ய அதிகத் தகுதியுள்ளது.... மனிதர்கள் தங்கள் உலக அறிவைக்குறித்து மேன்மைபாராட்டலாம். ஆனால், வழியும், சத்தியமும், ஜீவனுமாகிய கிறிஸ்து எனப்பட்ட மெய்யான தேவனைக்குறித்த அறிவு இல்லாவிடில் அவர்கள் வருந்தத்தக்க அறியாமையில் இருக்கிறார்கள். அவர்களது அறிவும் அவர்களோடு சேர்ந்து அழிந்துபோம். இவ்வுலக அறிவு சக்திகொண்டதுதான். ஆனால் வார்த்தையாகிய கிறிஸ்துவைக்குறித்த அறிவு மனிதனின் மனதை மாற்றத்தக்க வல்லமையுடையதும் அழிவில்லாததுமாக இருக்கிறது. ★

பிப்ரவரி 25

# இறுதிப் போராட்டத்திற்கான சாத்தானின் முயற்சி!

**"பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்" –1 யோவான் 2:18.**

சத்துருவானவன் சபைக்கு எதிராகத் தனது கடைசிப் போராட்டத்திற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறான். அப்படி ஒருவன் இருக்கிறான் என்பதையே பலர் நம்பமுடியாதபடி, அவன் தன்னைத்தான் மறைத்துக்கொண்டிருக்கிறான். வியப்புறச்செய்யும் அவனது செயல்களையும் வல்லமையையுங்குறித்து மற்றவர்களை நம்பச்செய்வது முடியாத காரியமாக இருக்கிறது....

மனிதன் சாத்தானின் அடிமையாகவும், இயற்கையாகவே அவனது ஆலோசனைகளைப் பின்பற்றுகிறவனாகவும், அவனது கட்டளையின்படி செய்கிறவனாகவும் இருக்கின்றான். தீமையை தீவிரமாக எதிர்க்கும் வல்லமை அவனுக்கு இல்லை. விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்து அவனுள் வாசஞ்செய்வதால் மட்டுமே அவன் இத்தகைய பயங்கரமான எதிரியைத் துணிவுடன் எதிர்க்கமுடியும். மற்ற தற்காப்பு வழிகள் அனைத்துமே முற்றிலும் வீண். கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே சாத்தானின் வல்லமை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அனைவரும் புரிந்துகொள்ளவேண்டிய அதிமுக்கியமான உண்மை இதுவே. சாத்தான் ஒவ்வொரு கணமும் எவனை விழுங்கலாமென்று பூமியில் முன்னும் பின்னும், மேலும் கீழும் சுறுசுறுப்பாக சுற்றித்திரிந்துகொண்டிருக்கிறான். ஆனால் விசுவாசமுள்ள ஊக்கமான ஜெபம், அவனுடைய பலமான முயற்சிகளைத் தோல்வியடையச் செய்யும்....

பூமியின்மேல் வந்துகொண்டிருக்கிற பெரிய அழிவிலே தேவனுடைய மீதமான மக்களை ஆயத்தஞ்செய்யத்தக்கதாக, சாத்தான் எதிர்பார்த்து

நம்பிக்கையோடிருக்கிறான். கிறிஸ்துவின் வருகை அருகில் நெருங்க நெருங்க, அவன் தேவ மக்களை விழத்தள்ளும் தனது முயற்சிகளில் அதிகத் தீர்மானத்தோடும் உறுதியோடும் இருப்பான். சகோதரர்களும் சகோதரிகளும் தங்களுக்கு சில புதிய வெளிச்சங்களும் சில புதிய வெளிப்படுத்தல்களும் கிடைத்ததாகக் கூறிக்கொள்வர். ஆனால் அவைகளின் குணமோ பழைய விசுவாசத்தை கலங்கடிப்பதுதான். அவர்களது மூல உபதேசங்கள் தேவ வார்த்தையுடன் ஒத்துப்போவதில்லை. ஆனாலும், ஆத்துமாக்கள் வஞ்சிக்கப்படுவார்கள். தவறான செய்திகள் பரப்பப்பட்டு, அந்தக் கண்ணியில் சிலர் விழுவார்கள்.... எல்லாவகைத் தவறுகளுக்கும் எதிராக எச்சரிக்கையோடு விழித்திருப்பது நம்மால் கூடாத காரியம். ஏனெனில், சாத்தான் மனிதர்களை சத்தியத்தினின்று இழுத்துக்கொள்ள, தொடர்ந்து முயற்சித்துக்கொண்டிருக்கிறான்....

சிலர் திடமான குணம் இல்லாதிருக்கின்றனர். வேண்டுகிற உருவத்திற்கு மாற்றிக்கொள்ளக்கூடிய மெழுகுப் பந்தைப்போல அவர்கள் இருக்கிறார்கள்.... இத்தகைய பெலவீனம், தயக்கம், இயலாமை ஆகியவைகள் மேற்கொள்ளப்படவேண்டும். உண்மையான கிறிஸ்தவனின் குணாதிசயங்களை எத்தகைய மோசமான சூழ்நிலையும் உருமாற்றவோ, மங்கச்செய்யவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. மனிதன் ஆவிக்குரிய வாழ்க்கையில் முதுகெலும்பு உடையவனாகவும், முகஸ்துதிக்கு மயங்காத—விலைக்கு வாங்கப்படக்கூடாத—அஞ்சாத—உறுதியுள்ள—நேர்மையுடையவனாக இருக்க வேண்டும்....

சாத்தானால் கடக்கமுடியாத வரம்புகளை தேவன் வைத்திருக்கிறார். நமது பரிசுத்தமான விசுவாசமே அந்தத் தடையரண் ஆகும். நம்மை நாம் விசுவாசத்திற்குள் கட்டிக்கொள்ளும்போது வல்லவராகிய தேவனுக்குள் பாதுகாப்பாக இருப்போம். ★

பிப்ரவரி 26

# பரலோகத்தின் வாசல்களின் வழியாக...!

**"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்"**

**—எபிரெயர் 11:5.**

நாம் மிகவும் தீமை நிறைந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.... அக்கிரமம் பெருகுவதால், அநேகருடைய அன்பு தணிந்துபோகின்றது. ஏனோக்கு தேவனுடன் முந்நூறு ஆண்டுகள் சஞ்சரித்தான். இப்பொழுதுள்ள காலத்தின் குறுகிய தன்மை, நாம் நீதியை அடைவதற்கு நம்மைத் துரிதப்படுத்துவதாகத் தோன்றுகிறது. நாம் சரியான செயல்களைச் செய்வதற்கு நம்மை கட்டாயப்படுத்தத்தக்கதாக தேவனுடைய நாளின் பயங்கரங்கள் நம்முன்னால் வைக்கப்படவேண்டியது அவசியந்தானா? ஏனோக்கின் காரியம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அவன் தேவனோடு சஞ்சரித்தான். அவன் மிகவும் துன்மார்க்கமான காலத்தில் வாழ்ந்தான். அவனைச் சுற்றியிருந்த ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் மாசுபட்டிருந்தது. ஆயினும், அவன் தூய்மையை நேசிக்கவும், அன்பான காரியங்களில் ஈடுபடவும் தன் மனதைப் பழக்கப்படுத்திக்கொண்டான். அவனது உரையாடல் பரலோகத்தைக் குறித்ததாகவே இருந்தது. இந்த மார்க்கத்தில்(வழியில்) ஓடத்தக்கதாக தன் மனதிற்கு கற்பித்திருந்ததோடு தெய்வீகத்தின் சாயலை உடையவனாகவும் இருந்தான்....

நம்மைப்போன்றே ஏனோக்கிற்கும் சோதனைகள் இருந்தன. நம்மைச் சூழ்ந்திருக்கும் சமூகத்தைக்காட்டிலும் அதிகமாக நீதியை நேசிக்கும் சமுகம் அவனைச் சூழ்ந்திருக்கவில்லை. நம்மைப்போன்றே அவனும் பாவத்தாலும் அக்கிரமத்தாலும் கறைபட்ட காற்றையே சுவாசித்தான். ஆனாலும் அவன் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தான். அவன் வாழ்ந்த காலத்தில்

நிலவிய பாவங்களினால் அவன் மாசுபடாதிருந்தான். அதுபோல நாமும் தூய்மையாகவும் கெட்டுப்போகாமலும் இருக்கலாம். கடைசிக்காலத்தின் துன்மார்க்கத்திற்கும் ஆபத்திற்கும் மத்தியில் வாழும் பரிசுத்தவான்களின் ஒரு பிரதிநிதியாக அவன் இருக்கிறான். தேவனை விசுவாசித்து கீழ்ப்படிந்ததால், அவன் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். அதைப்போலவே உயிரோடிருக்கும் விசுவாசிகளும் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” பரலோகத்துடன் ஒத்திருக்கத்தக்கதாக ஏனோக்கு முந்நூறு ஆண்டுகளாக சுத்தமுள்ள இருதயத்தை நாடித் தேடினான். மூன்று நூற்றாண்டுகள் அவன் தேவனோடு சஞ்சரித்திருக்கிறான். ஒவ்வொரு நாளும் அவன் அவரோடு மேலும் நெருக்கமான ஐக்கியத்திற்காக ஏங்கி, மேலும் நெருக்கமாக உரையாடி, இறுதியில் அவரால் பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். நித்திய உலகின் வாசலுக்கருகில் அவன் நின்றுகொண்டிருந்தான். ஆசீர்வதிக்கப்பட்டோரின் தேசத்திற்கும் அவனுக்குமிடையே ஒரேயொரு அடிதான் இருந்தது. இப்பொழுது, வாசற்கதவுகள் திறக்கப்பட்டன. பூமியில் நீண்டகாலமாக தொடர்ந்து கொண்டிருந்த “தேவனோடு சஞ்சரித்தல்” மேலும் தொடர்ந்தது. அவன் பரிசுத்த நகரத்தின் வாசல்களைக் கடந்த மனிதர்களில் முதலாமவனாக அங்கு பிரவேசித்தான்....

இத்தகைய ஐக்கியத்திற்கு தேவன் நம்மை அழைக்கிறார். கர்த்தரின் இரண்டாம் வருகையின்போது, இரட்சிக்கப்படும் மனிதர்களது குணங்களின் பரிசுத்தத்தன்மை, ஏனோக்கினுடையதைப்போல இருக்கவேண்டும். ★

# அதிக உறுதியான தரிசனம்!

**“குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை”**
**—ஆபகூக் 2:3.**

ஆபகூக்கையும், ஆழ்ந்த சோதனையின் காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களையும் நீதிமான்களையும் பெலப்படுத்திய அதே விசுவாசந்தான் இன்றைக்கும் தேவமக்களை தாங்கிக்கொண்டு இருக்கிறது. இருண்ட மணிவேளைகளிலும், மிகவும் எதிரிடையான சூழ்நிலைகளிலும், கிறிஸ்தவ விசுவாசி தன் ஆத்துமாவை எல்லா வெளிச்சத்திற்கும் வல்லமைக்கும் உறைவிடமாகிய தேவனில் பாதுகாப்பாக வைக்கலாம். ஒவ்வொரு நாளும் அவன் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தின்மூலம் அவனது நம்பிக்கையும், தைரியமும் புதுப்பிக்கப்படலாம்.... தேவனுக்கு ஊழியஞ்செய்வதில் சோர்வோ, தடுமாற்றமோ, அச்சமோ இருக்கவேண்டிய அவசியமில்லை. கர்த்தரில் உறுதியாக நம்பிக்கை வைத்தோரின் உயர்ந்த எதிர்பார்ப்புகளுக்கும் மேலாக அவர் நிறைவுசெய்வார். அவர்களது பலதரப்பட்ட—தேவைகளுக்கேற்ற ஞானத்தை அவர் அவர்களுக்குக் கொடுப்பார்.

சோதிக்கப்படும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் திரளான காரியங்களைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் வல்லமையான சாட்சிபகருகிறார். “என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” என்ற தெய்வீக வாக்குத்தத்தம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. நன்றியுடனும், நம்பிக்கையுடனும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தேவ ஊழியராகிய பவுலார். “அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்” (2 கொரிந்தியர் 12:9,10) என்று அதற்குப் பதிலுரைக்கிறார்.

தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் சாட்சி பகர்ந்த விசுவாசத்தை—தேவ வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு, அவர் குறித்த காலத்திலும் வழியிலும் தரும் விடுதலைக்காகக் காத்திருக்கும் விசுவாசத்தை—நாம் நம் மனதில் பேணி போற்றி வளர்க்கவேண்டும். இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும், நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து மகிமையோடு வரும்பொழுது, நிச்சயமாக தீர்க்கதரிசனத்தின் ஒவ்வொரு வார்த்தையும் நிறைவேறும். நாம் காத்திருக்கும் காலம் நீண்டதாகத் தோன்றலாம். சோர்வடையச் செய்கின்ற சூழ்நிலைகளால் ஆத்துமாக்கள் நசுக்கப்படலாம். ஆதியில் நம்பிக்கைகொண்டிருந்த பலர் வழியில் விழுந்துபோகலாம். ஆனால், ஒப்பிட்டுப்பார்க்கமுடியாத அளவிற்கு மருளவிழுந்துபோன அந்தக் காலத்தில், யூதேயா நாட்டை உற்சாகப்படுத்த முயற்சித்த தீர்கதரிசியோடு சேர்ந்து: "கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது" என்று நம்பிக்கையோடும் உறுதியாகவும் நாமும் அறிக்கையிடுவோம்.

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை ... தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்னும் உற்சாகமூட்டும் தூதை நினைவுகூர்ந்து, அதை என்றும் பற்றிக்கொண்டிருப்போம். ★

பிப்ரவரி 28

# பாதுகாப்பான ஒரு புகலிடம்!

**“இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்” —ஏசாயா 26:21.**

ஏறத்தாழ அனைத்து பட்டணத்துவாசிகளும், முழுமையாக— பாவத்திற்குள் நிச்சயமாக—வேகமாக விழுந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது துணிகரமான பாவம் சீராக உயர்ந்துகொண்டிருக்கிறது. அங்கு நிலவிவரும் ஊழல், ஒரு மனிதனின் எழுதுகோலின் விவரிக்கும் சக்திக்கும் அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் புதுப்புது கலகம், இலஞ்சம், மோசடி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது. இதயத்தைப் பாதிக்கின்ற வன்முறை, ஒழுங்கின்மை, மனிதர்களின் துன்பத்தில் அக்கறையின்மை, கொடூரமான—மனிதநேயமற்ற—அசுரத்தனமான முறையில் மனித உயிர்கள் அழியும் காரியங்கள் தினந்தினம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

நம் தேவன் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார். அவர் தமது பிரமாணத்தை மீறுபவருடன், நீடிய பொறுமையுடனும் மிகுந்த பரிவுடனும் போராடுகிறார். கர்த்தர் மனிதனுடனும், நகரங்களுடனும் மிகவும் பொறுமையாயிருந்து, தெய்வீகக் கோபத்திலிருந்து அவர்களைத் தப்புவிக்கத்தக்கதாக, இரக்கமுடன் எச்சரித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பரிந்துபேசும் குரல் இனி ஒருபோதும் கேட்கக்கூடாத காலம் வரும்....

சமுதாயத்தில், குறிப்பாக தேசங்களின் பெரும் நகரங்களில் நிலவிவரும் சூழல், தேவ நியாயத்தீர்ப்பு வருகிறது என்றும், உலகத்தின் முடிவு சமீபமாயிருக்கிறது என்றும் இடிமுழக்கம்போல பறைசாற்றுகிறது. முடிவுகாலத்தின் துவக்கத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். அக்கினி, வெள்ளம், பூமியதிர்ச்சி, யுத்தம், இரத்தம் சிந்துதல் என்பதுபோன்ற தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக துரிதமாகத் தொடர்ந்துவரும்....

தேவ ஆக்கினையின் புயல் திரண்டுவந்துகொண்டிருக்கிறது. அவரது இரக்கத்தின் அழைப்பை ஏற்று ... தெய்வீக அரசரின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமடைந்தவர்கள் மட்டுமே அந்தப் புயலில் நிலைநிற்க முடியும். அந்த அழிவு கடந்துபோகுமட்டும் நீதிமான்கள் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைத்துக் காக்கப்படுவார்கள்.

வேறு எந்தப் புகலிடமும் எனக்கு இல்லை
உதவியற்ற எனது ஆத்துமா
உம்மையே சார்ந்திருக்கிறது.

என்னைத் தனியே விட்டுவிடாதேயும்;
தொடர்ந்து எனக்கு ஆதரவு கொடுத்துத் தேற்றும்.
மறைத்துக்கொள்ளும்,
ஆ! என் மீட்பரே! மறைத்துக்கொள்ளும்.

வாழ்வின் புயல் கடந்துசெல்லும்வரை
பாதுகாப்பான அந்தப் புகலிடத்திற்குச் செல்ல
எனக்கு வழிகாட்டும்;
ஆ! இறுதியிலே என்னை ஏற்றுக்கொள்ளும். ★

# நெருக்கடியான ஓர் நேரம் விரவிருக்கின்றது!

**“அந்த நாளினிமித்தம் ஐயோ! கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது சங்காரம்போலச் சர்வ வல்லவரிடத்திலிருந்து வருகிறது” –யோவேல் 1:15.**

கடந்தகால, வருங்கால நித்தியத்தை இணைக்கும் சம்பவங்களின் சங்கிலியை ஒவ்வொரு கண்ணியாக இணைத்து, “இருக்கிறவராக இருக்கிறேன்” என்று சொல்லுகிற அந்த மாபெரும் தேவன், தமது வார்த்தையிலே அநேக தீர்க்கதரிசனங்களைக் கொடுத்திருக்கிறார். அத்தகைய காலங்களின் தொகுதியிலே இன்று நாம் எந்த இடத்திலே இருக்கிறோம் என்று கூறுகிறார். மேலும் வரப்போகின்ற காலத்திலே, எதை எதிர்பார்க்கலாம் என்றும் கூறுகிறார். நிகழ்காலம்வரை நிறைவேறுதலை அடையுமென்று முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசன வரலாற்றின் பக்கங்களிலே அத்தனைக்கும் தடம் கண்டறியப்பட்டாயிற்று. இனி நடைபெறப்போகும் காரியங்களும் அதினதின் ஒழுங்கின் போக்கிலே நிறைவேறுதலை அடையும் என்பதுகுறித்து நாம் நிச்சயத்தோடிருக்கலாம்.

மாபெரும் பக்திவிநயமான சம்பவங்களின் நுழைவாயிலிலே, நாம் நின்றுகொண்டிருக்கிறோம் என்பதை, “இன்று நான் காண்கிற காலங்களின் அடையாளங்கள்” உறுதியாகக் கூறுகின்றன. நம்முடைய இந்த உலகத்திலே அனைத்தும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறது. அவரது வருகைக்கு முன்பாக நடைபெறுகின்ற சம்பவங்களைப்பற்றிய மீட்பரின் தீர்க்கதரிசனம், நமது கண்களுக்கு முன்பாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. “யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும்,

கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்”– மத்தேயு 24:6,7.

உலகில் உயிர்வாழும் அனைவருக்கும் நிகழ்காலமானது தீவிர உணர்ச்சி நிறைந்த—ஆர்வம் மிகுந்த காலமாக இருக்கிறது. ஆளுகை செய்வோரும், அரசியல் வல்லுநர்களும் , நம்பிக்கைக்குரிய அதிகாரம் நிறைந்த பணிகளில் அமர்ந்திருப்போரும், அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த சிந்திக்கும் திறனுடைய ஆண்களும் பெண்களும் தங்களைச் சுற்றிலும் நடைபெறும் சம்பவங்களிலே கவனத்தைப் பதித்தவர்களாக இருக்கின்றனர். நாடுகளுக்கு இடையே நிலவுகின்ற உறவுகளை விழிப்போடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். பூலோகத்தில் காணப்படும் ஒவ்வொரு மூலகமும் எவ்வளவு உச்ச வேகத்தை தன்னுள்ளே அடக்கிவைத்திருக்கிறது என்பதை உன்னிப்பாக கவனிக்கின்றனர். மாபெரும் முடிவை எதிர்நோக்கும் ஏதோ ஒரு காரியம் நடைபெறப்போகிறது என்பதைக்கண்டு, மனதிலே உணருகிறார்கள். மிகப் பெரிய நெருக்கடியின் விளிம்பிலே உலகம் இருக்கிறது என்று மனதிலே எண்ணுகிறார்கள்.

“வேதாகமம்—வேதாகமம் மாத்திரமே” என்ற காரியம்மட்டுமே, இவை அனைத்திற்கும் ஒரு சரியான தகவலைக் கொடுக்கிறது. வேதாகமத்தில் உலக சரித்திரத்தின் மாபெரும் கடைசிக்காட்சிகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன எனக்காட்டும் ஓசையானது பூமியை நடுங்கச்செய்கிறது. பயத்தினால் மனிதரின் இதயம் சோர்ந்துபோகிறது. தவறே செய்யாத அவர் தமது கையில் பிடித்திருக்கும் தூக்குநூலால், இக்காலத்து மனிதர்களை மட்டுமின்றி, நாடுகளையும் சோதித்துக்கொண்டிருக்கிறார். அனைவரும் தங்களது தெரிந்தெடுப்பின்மூலமாக, தங்களது முடிவைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அனைத்தையும் அடக்கியாள்கிறார். அனைத்தையும் திணறடிக்கக் கூடியதான அதிர்ச்சியைப்போல உலகத்தின்மீது சீறி வெடிக்கப்போகின்ற காரியத்திற்காக, கிறிஸ்தவர்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கவேண்டும். தேவனுடைய வசனத்தை ஆழ்ந்த ஆராய்ச்சியோடு படித்து, அதின் கொள்கைகளுக்கு ஏற்றபடி தங்களது ஜீவியங்களை ஒத்திசைவாக அமைக்க முயற்சிசெய்து ஆயத்தஞ்செய்ய வேண்டும். ★

மார்ச் 2

# பாவ நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு குணம்!

**"...தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" —ஏசாயா 1:5,6.**

பாவ நோய் பிடித்த ஆத்துமாவிற்கு பரிகாரம் ஒன்று உண்டு. அந்தப் பாரிகாரம் இயேசுவில்தான் உண்டு. அருமையான மீட்பர்! மிகவும் பெலவீனமான ஆத்துமாவிற்கு அவரது கிருபை போதுமானது. மிகவும் வலிமைவாய்ந்த நபருக்கும் கிருபை தேவை அல்லது அவர் அழிந்துவிடுவார்.

இந்த கிருபையை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பதை நான் கண்டேன். உள்ளறைக்குச் சென்று, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" என்று தனிமையில் தேவனிடத்தில் மன்றாடுங்கள். ஊக்கத்தோடு, உண்மையாக ... யாக்கோபைப்போல ஜெபத்திலே போராடுங்கள். கடுந்துயரோடு ஜெபியுங்கள்.... இதற்காக ஒரு முயற்சியை நீங்கள் கண்டிப்பாகச் செய்யவேண்டும்....

முழு மனதோடு ஆண்டவரைத் தேடுங்கள். விருப்பமுள்ள ஆர்வத்தோடு அவரிடம் வாருங்கள். தேவனுடைய உதவியின்றி நாம் அழிந்துபோவோம் என்பதை நீங்கள் உண்மையிலேயே உணருவீர்களானால், மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, அவரை நோக்கி வாஞ்சித்துக் கதறுவீர்களானால், அப்பொழுது அவர் உங்களை வெகுவிரைவில் பலப்படுத்துவார். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் எட்டாத சமாதானத்தைப்

பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் இரட்சிப்பை எதிர்பார்க்கிறீர்களானால், கண்டிப்பாக ஜெபிக்கவேண்டும். நேரமெடுத்து ஜெபியுங்கள். அவசர அவசரமாகவும் கவனக்குறைவோடும் ஜெபிக்காதிருங்கள். ஆவியின் கனிகள் உங்களிலே நிலைபெற்றிருக்கத்தக்கதாகவும், உலகத்திலே விளக்குகளைப் போன்று பிரகாசிக்கத்தக்கதாகவும் உங்களிலே ஒரு முழுமையான சீர்திருத்தம் கொண்டுவர தேவன் கிரியை செய்யவேண்டுமென்று கெஞ்சி மன்றாடுங்கள். தேவனுடைய ஊழியத்திற்கு தடையாகவோ, அல்லது சாபமாகவோ இருக்காதீர்கள். நீங்கள் உதவியளிப்பவராக, ஒரு ஆசீர்வாதமாக இருக்கலாம். நீங்கள் இரட்சிப்பை முழுமையாகவும் சுதந்திரமாகவும் அனுபவிக்க முடியாது என்று சாத்தான் உங்களிடத்தில் கூறுகின்றானா? அவனை நீங்கள் நம்பவேண்டாம்.

தேவனுடைய ஆவியானவரின் ஆழமான அசைவாடுதலை அனுபவிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புரிமை என்பதை நான் கண்டேன். ஒரு இனிமையான பரலோக சமாதானம் உங்களது உள்ளத்தை நிரப்பும். நீங்கள் விருப்பத்தோடு தேவனைப்பற்றியும் பரலோகத்தைப்பற்றியும் தியானஞ்செய்வீர்கள். அவரது வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள மகிமையான வாக்குத்தத்தங்களை சிந்தனை செய்து, மன நிறைவோடு மகிழ்ச்சியடைவீர்கள்....

கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்கள் உலகத்தைவிட இயேசுவை மிகவும் அதிகமாக நேசிப்பார்களானால், அவர்களது மேலான உள்ளன்பு மையங்கொண்டிருக்கின்ற சிறந்த நண்பரான இயேசுவைக்குறித்துப் பேசுவதை விரும்புவார்கள். அவர்கள் தாங்களது இழக்கப்பட்டுப்போன அழிந்துபோய்க்கொண்டிருந்த நிலையை உணர்ந்தபோது அவர்களுக்கு உதவிசெய்யத்தக்கதாக அவர் வந்தார். பாவத்தால் பாரஞ்சுமந்து நொந்துபோனபோது, அவர்கள் அவரை நோக்கிப்பார்த்தார்கள். அவர்களது பாவம் குற்றம் ஆகியவைகளின் பாரத்தை அவர் அகற்றிப்போட்டார்.... அவர்களது பாசம் முழுவதும் அவரிடமாகத் திரும்பியது. அவர்கள் முன்பு நேசித்த காரிங்களை இப்பொழுது வெறுக்கிறார்கள். முன்பு வெறுத்த காரியங்களை இப்பொழுது நேசிக்கிறார்கள். இந்த மாபெரும் மாறுதல் உங்களில் ஏற்பட்டிருக்கிறதா? ★

# ஒரு புதிய வாழ்க்கை!

**"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.... நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்" —யோவான் 3:5–7.**

பிரமாணத்தைக் கைக்கொள்வதின்மூலம் தங்களது சொந்தக் கிரியைகளினாலே பரலோகத்தை அடைய முயற்சித்துக் கொண்டிருப்பவர் செய்வதற்கு அரிதான காரியத்தைச் செய்ய முயன்றுகொண்டிருக்கிறார். ஒரு சட்டப்பூர்வமான மார்க்கத்தையும், தேவ பக்தியின் ஒருவகையான வேஷத்தையும் வெறுமனே கொண்டிருப்பவர்களுக்கு அதில் பாதுகாப்பு இல்லை. பழைய வாழ்க்கையிலே ஏற்படும் மேம்பட்ட ஒரு நிலையோ அல்லது மாற்றப்பட்ட நிலையோ அல்ல—ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை. அது இயல்பிலேயே ஏற்படும் முழுமையான மாற்றமாகும். சுயத்திற்கும் பாவத்திற்கும் ஒரு மரணம் ஏற்படவேண்டும். முற்றிலுமாக ஒரு புதிய வாழ்க்கை ஏற்படவேண்டும். இந்த மாற்றமானது, பரிசுத்த ஆவியின் செயல்திறம்வாய்ந்த ஊழியத்தின்மூலமாக மாத்திரமே கொண்டுவரப்பட முடியும்....

ஒரு நபர், தனது மனந்திரும்புதலிற்கான வழிமுறையிலே குறிப்பிட்ட நேரம், அல்லது இடம் அந்த சூழ்நிலைக்குக் கொண்டுசென்ற தடங்கல் ஆகியவற்றைக் கூறமுடியாமல் இருக்கலாம். இக்காரியத்தினால், அவர் மனந்திரும்பவில்லை என்று நிரூபித்துவிட முடியாது. கண்ணிற்குத் தெரியாத காற்றைப்போன்ற ஒரு செயல்துணை மூலமாக கிறிஸ்து இருதயத்தின்மீது தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறார். கொஞ்சங்கொஞ்சமாக, ஒரு வேளை அதைப் பெற்றுக்கொண்டவரே அறியாத நிலையில் ஏற்படுத்தப்பட்ட எண்ணப்பதிவுகள், ஆத்துமாவை கிறிஸ்துவண்டை கொண்டுவர உதவுகிறது.... திடீரென பரிசுத்த ஆவியானவர் நேரடியாக அதிகமாக அழைக்கும்போது, ஆத்துமா மகிழ்ச்சியினால் தன்னை இயேசுவிடம் ஒப்படைத்துவிடுகிறது. இதை திடீர் மனந்திரும்புதல் என்று

அநேகர் அழைக்கின்றனர். இது தேவனுடைய ஆவியானவர் நீண்டகாலமாக அன்பு நயம் காட்டியதினால் ஏற்பட்ட விளைவே ஆகும். அதாவது ஒரு பொறுமையான—நீண்டகாலமாக தொடர்ந்த வழிமுறையாகும்.

காற்று கண்ணிற்குத் தெரியாமல் இருந்த போதிலும், பார்க்கக்கூடிய, உணரக்கூடிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. இவ்வாறு, ஆத்துமாவின் மீது கிரியைசெய்யும் பரிசுத்த ஆவியின் வேலை, அந்த நபர் இரட்சிப்பின் வல்லமையை உணர்ந்திருப்பதினால், அவரது ஒவ்வொரு செயலின்மூலமாகவும் வெளிப்படும். தேவனுடைய ஆவியானவர் இதயத்தைத் தமது உடைமையாக நிரப்பும்பொழுது, அது வாழ்க்கையில் மாறுதலை ஏற்படுத்துகிறது. பாவமுள்ள நினைவுகள் வெளியேற்றப்படுகின்றன. தீய செயல்கள் முற்றிலும் கைவிடப்படுகின்றன. கோபம், பொறாமை, கலகம் ஆகியவை இருந்த இடங்களை அன்பு, தாழ்மை, சமாதானம் ஆகியவை பிடித்துக்கொள்ளுகிறது. துக்கத்திற்குப் பதிலாக மகிழ்ச்சி இடம் பெறுகிறது. அந்த நபரின் முகத்தோற்றம் பரலோக வெளிச்சத்தைப் பிரதிபலிக்கிறது. பாரத்தை எடுத்துப்போட்ட கரத்தை யாரும் பார்க்கிறதில்லை. அல்லது பரலோக மன்றங்களிலிருந்து இறங்கிவருகின்ற வெளிச்சத்தை யாரும் காண்கிறதில்லை. விசுவாசத்தினாலே ஆத்துமா தன்னை தேவனிடத்திற்கு ஒப்படைக்கும்பொழுது, ஆசீர்வாதம் வருகிறது. பின்னர் எந்த மானிடக் கண்ணும் காணாத அந்த வல்லமை, தேவனுடைய சாயலில் ஒரு புதிய நபரை உருவாக்குகிறது.

எல்லைக்குட்பட்ட உள்ளங்களால் இரட்சிப்பின் வேலையைப் புரிந்துகொள்வது கூடாதகாரியமாகும். அதின் இரகசியம் மானிட அறிவிற்கும் அப்பாற்பட்டது. எனினும், மரணத்திநின்று ஜீவனுக்குள் பிரவேசிக்கிற ஒவ்வொருவரும் இது ஒரு தெய்வீக உண்மைநிலை என்பதை நன்றாக விளங்கிக்கொள்வார்கள். இரட்சிக்கப்படுதலின் ஆரம்பத்தை நமது தனிப்பட்ட—சொந்த அனுபவத்தின்மூலமாக, இங்கு நாம் அறியலாம். அதின் பலன்கள் நித்தியகாலமாக—யுகங்களினூடாகத் தொடர்ந்து காணப்படுகிறது. ★

# வாழ்க்கையில் எதற்கு மிகவும் முக்கிய முன்னுரிமை கொடுக்கவேண்டும்?

**“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” —மத்தேயு 6:33.**

பரலோக இராஜ்யமும் கிறிஸ்துவின் நீதியுமே முதல் மாபெரும் இலக்காகும். அடைந்துகொள்ளவேண்டிய மற்ற இலக்குகள் இரண்டாந்தரமானவைகளே.

பரிசுத்தத்தின் பாதையை கடினமானதுபோன்றும், உலக சிற்றின்பங்களின் பாதையையோ மலர் தூவப்பட்டதுபோன்றும் சாத்தான் நமக்குமுன் காட்டுவான். பொய்யான—பகட்டான வண்ணங்களில் உலகத்தையும் அதைச் சார்ந்த சிற்றின்பங்களையும் சோதனைக்காரன் உங்களுக்கு முன்பாக வரிசையில்வைத்துக் காட்டுவான். நமது கீழ்த்தரமான குணங்களில் வீண் பெருமையானது, வலிமையான பண்புக்கூறுகளில் ஒன்றாகும். அந்தக் குணத்தின்மூலமாக கவர்ந்து வெற்றிகொள்ளமுடியும் என்பது அவனுக்குத் தெரியும். அவனுடைய பிரதிநிதிகள் மூலமாக உங்களை முகஸ்துதி செய்வான். உங்களது வீண்பெருமையை திருப்திப்படுத்தி, பெருமையையும் சுயமதிப்பையும் வளரச்செய்யும் புகழ்ச்சியை நீங்கள் பெற்றுக்கொண்டு, உலகத்திலே இத்தகைய அனுகூலங்களும் கவர்ச்சியான காரியங்களும் இருக்கும்போது, இவைகளைவிட்டு வெளியேறி பிரிந்துவந்து ஒரு கிறிஸ்தவனாக மாறுவது உண்மையிலேயே மிகவும் பரிதாபத்திற்குரிய காரியம் என்று நினைக்கலாம்.... ஆனால் இந்த உலகத்தின் சிற்றின்பங்களுக்கு ஒரு முடிவு உண்டு என்பதையும், எதை விதைக்கிறீர்களோ அதை கண்டிப்பாக அறுக்கவும்வேண்டும் என்பதையுங்குறித்து ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். உங்களது தனிப்பட்ட கவர்ச்சிகளும், திறமையும்

அல்லது தாலந்தும், நீங்கள் ஜீவனோடிருப்பதற்கு ஆரம்பமாக ஆதியாக இருக்கிற, ஒவ்வொரு கணமும் உங்கள்மீது அக்கறைகொண்டு விழிப்புடன் உங்களைப் பாதுகாக்கிற தேவனுக்கு பக்திசெலுத்தக்கூடாத அளவிற்கு, அவ்வளவு மதிப்பானவைகளா? உங்களது தகுதிச்சான்றுகள் அவருக்கு அர்ப்பணிக்கக்கூடாத அளவிற்கு அவ்வளவு விலையேறப்பெற்றவைகளா?

தங்களுக்கு எழுச்சியூட்டவும் தங்களது உள்ளத்தின் போக்கை மாற்றவும் ஏதாவது ஒன்று அவசியமென வாலிபர்கள் வற்புறுத்துகிறார்கள். கடின உழைப்பில் ஒரு மகிழ்ச்சி உண்டென்பதையும், பயனுள்ள வாழ்க்கையைத் தொடர்வதிலும் ஒரு திருப்தி இருக்கிறதென்பதையும் நான் கண்டேன். கடுமையான வேலைகளுக்கு மத்தியில் பாரத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் புத்துணர்ச்சி பெறுவதற்கும் மனதைத் திசைதிருப்புவதற்கு ஏதோ ஒன்று கண்டிப்பாக வேண்டுமென்று சிலர் தொடர்ந்து வற்புறுத்துகிறார்கள். எது தேவைப்படுகிறதோ, அதுமட்டுமே ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கையாகும். மார்க்கம் ஒரு விசுவாசிக்கு தேற்றரவாளனாகவும் உண்மையான மகிழ்ச்சியின் ஊற்றிற்கு வழிநடத்தும் உறுதியான ஆலோசகராகவும் இருப்பதை மெய்ப்பித்துக்காட்டும். வாலிபர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து படிக்கவேண்டும். தங்களை ஜெபத்திலும், தியானத்திலும் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். மீதமான நேரங்களை இதைவிட சிறந்தமுறையில் பயன்படுத்த முடியாது என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள்.

வாலிப நண்பர்களே, நீங்கள் தேவனுடைய அன்பில் நிலைத்திருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு நீங்களே நிரூபித்துக்காட்ட நேரம் செலவிடுங்கள். உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக்கொள்ள கடுமையாக முயற்சி செய்யுங்கள்.

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அதையே உங்களது வாழ்க்கையில் முதலாவதாகவும் கடைசியானதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். யாரை அறிந்துகொள்வது நித்திஜீவனோ அவரை அறிவதற்காக அதிக ஊக்கமாக முயற்சி செய்யுங்கள். கிறிஸ்துவும் அவருடைய நீதியுமே ஆத்துமாவின் இரட்சிப்பாகும். ★

# பரலோகத்தின் பழுதற்ற முத்து!

**“மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்” —மத்தேயு 13:45,46.**

கிறிஸ்து தாமே மாபெரும் விலைமதிப்புள்ள ஒரு முத்து ஆவார்.... ஒரு தூய்மையான—வெண்மையான— முத்தைப்போன்ற கிறிஸ்துவின் நீதியிலே ஒரு பழுதும் இல்லை. கறையும் இல்லை. மாபெரும் விலையேறப்பெற்ற தேவனுடைய ஈவை மனிதனின் எந்தப் பணியும் மேம்பாடு அடையச்செய்ய முடியாது. அது பழுதற்ற ஒன்றாகும். கிறிஸ்துவிலே, “ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது”—கொலோசெயர் 2:3. அவர் “அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்”—1 கொரிந்தியர் 1:31. இந்த உலகத்திற்காகவும் வரப்போகும் உலகத்திற்காகவும் மனித ஆத்துமாவின் ஏக்கங்களையும் தேவைகளையும் திருப்திசெய்யக்கூடிய அனைத்தும் கிறிஸ்துவிலே காணப்படுகிறது. நமது மீட்பரே அத்தகைய விலையேறப்பெற்ற முத்து ஆவார். அவருடன் ஒப்பிடும்போது, அனைத்துக் கரியங்களும் நட்டமென்று கணக்கிடப்படும்....

உவமையிலே, முத்தானது ஒரு ஈவாக குறிப்பிடப்படவில்லை. தனக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்து அந்த வியாபாரி அதை விலைக்கு வாங்கினான். வேதவாக்கியங்களிலே கிறிஸ்து ஒரு ஈவாக சுட்டிக்காட்டப்பட்டிருப்பதால், அநேகர் இதன் பொருளைக்குறித்து கேள்விகேட்கின்றனர். எதையும் ஒதுக்கிவைக்காதபடி தங்களது ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் தத்தஞ்செய்பவர்களுக்கு மாத்திரமே, அவர் ஒரு ஈவாக விளங்குகிறார். அவருடைய எதிர்பார்ப்புகளுக்கு எல்லாம் மனதாரக் கீழ்ப்படிந்து வாழத்தக்கதாக நம்மை நாம் அவருக்கு ஒப்படைக்கவேண்டும். நாம் முழுமையாகவும், நம்முடைய தாலந்துகள், திறமைகள் அனைத்தும் ஆண்டவருடைய அவருடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்படும்படி

அவருடையவைகளே. இவ்வாறு நாம் நம்மை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணஞ்செய்யும்பொழுது, கிறிஸ்து தமது பரலோகப் பொக்கிஷங்கள் அனைத்தோடும் தம்மைத் தாமே நமக்கு அளிக்கிறார். மாபெரும் விலையேறப்பெற்ற முத்தைப் பெற்றுக்கொள்கிறோம்....

தெய்வீக இரக்கமானது மேலாண்மை செலுத்தி நடத்துகின்ற அந்த வாணிகக்களத்திலே, அந்த அருமையான முத்து பணமுமின்றி விலையுமின்றி வாங்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வாணிகக்களத்திலே பரலோகப் பொக்கிஷங்களை அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். சத்தியம் எனப்படும் மாணிக்கக்கற்கள் இருக்கும் பொக்கிஷசாலை அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது.... மீட்பரின் குரல் ஆர்வத்தோடும் அன்போடும் "நீ ஐசுவரியவானாகும் படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் ... என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும் ... உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளிப்படுத்தல் 3:18) என்று நம்மை அழைக்கிறது. தரித்திரரும் ஐசுவரியவான்களைப் போலவே மீட்பை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். ஏனெனில் எவ்வளவு உலக ஐசுவரியத்தாலும் அதைப் பெற்றுக்கொள்ளமுடியாது. விருப்பமுள்ள கீழ்ப்படிதலினால், கிறிஸ்துவால் விலைக்கு வாங்கப்பட்ட சொந்த உடமையைப்பேன்று நாம் நம்மை முற்றிலுமாக அர்ப்பணிப்பதினால்மட்டுமே அது பெற்றுக்கொள்ளப்படுகிறது.

நாம் மீட்பைச் சம்பாதிக்க முடியாது. அதற்காக இந்த உலகத்திலுள்ள அனைத்தையும் உதறித் தள்ளிவிடுவதுபோன்று அதிக ஆர்வத்தோடும் விடாமுயற்சியோடும் நாடித்தேட வேண்டும். ★

# கிறிஸ்துவே நமது ஒரே மீட்பர்!

**“இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது”-- கொலோசெயர் 1:13,14.**

நீங்கள் யாராயிருந்தாலும்சரி, உங்களது வாழ்க்கை இதுவரை எப்படிப்பட்டதாக இருந்திருப்பினும் சரி, தேவன் நியமித்திருக்கும் வழியின்மூலமாக மாத்திரமே நீங்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும். நீங்கள் மனந்திரும்பவேண்டும். உதவியற்ற நிலையில், கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவின்மீது விழவேண்டும். கிறிஸ்துவின் இரத்தமே பாவத்திற்கான ஒரே பரிகாரம் என்றும் உங்களுக்கு ஒரு வைத்தியர் தேவை என்றும் நீங்கள் கண்டிப்பாக உணர வேண்டும். தேவனிடமாக மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைப்பதின்மூலமாக மாத்திரமே இந்தப் பரிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.... அவரது இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமை தங்களுக்குத் தேவை என்று உணருபவர்களுக்கு மாத்திரமே அது கிடைக்கும்.

தெய்வீக இரக்கத்தின்மீது நாம் எந்தவிதமான உரிமையும் கோரமுடியாமல் இருந்தபோது, நமது மீட்பின் காரியத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ள கிறிஸ்து விருப்பங்கொண்டது எத்தகைய அளவுகடந்த அன்பும் தாழ்மையும்! நமது மாபெரும் வைத்தியர் ஒவ்வொரு ஆத்துமாவிடமும் எதிர்பற்ற ஒப்படைப்பை எதிர்பார்க்கிறார். நமது சொந்த வழக்கிற்காக நாமே ஒருபோதும் சிபாரிசு செய்யமுடியாது. நமது சித்தம் செயல் அனைத்திற்குமான முழு மேலாண்மையும் கிறிஸ்துவிடம் இருக்கவேண்டும்.

இதுவரை எங்களது ஒழுக்க நிலைசார்ந்த பண்புகள் சரியாகவே இருந்திருக்கிறது. எனவே ஒரு சாதாரண பாவியைப்போன்று தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்தவேண்டிய அவசியமில்லை என்று நாம் நம்மைப்பற்றி புகழ்ந்து உயர்த்திப் பேசலாம். ஆனால் பாவிகளிலும் பிரதான

பாவியைப்போலவே அதே வழியில் ஜீவனுக்குள் பிரவேசிக்க திருப்தியோடு இருக்கவேண்டும். நமது சொந்த நீதியை விட்டுவிட்டு, கிறிஸ்துவின் நீதி நம்மேல் வைக்கப்படுவதற்காக நாம் கெஞ்சி மன்றாடவேண்டும். நமது வல்லமைக்காக கிறிஸ்துவையே முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டும். சுயம் கண்டிப்பாக சாகவேண்டும். நாம் வைத்திருப்பதெல்லாம் தெய்வீகக் கிருபையின் திரளான ஐசுவரியங்களிலிருந்தே என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். "எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்" என்பதே நமது இதயங்களின் மொழியாக இருக்கட்டும்.

தூய்மையான விசுவாசத்தை அன்பு பின்தொடரும். அன்பை கீழ்ப்படிதல் பின்தொடரும். மனந்திரும்பிய மனிதனின் அனைத்து சக்திகளும் ஆசைகளும் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டிற்கடியில் கொண்டுவரப்படும். தம்மைப் பெற்றுக்கொள்ளும் அனைவரையும் தெய்வீக சாயலிற்கு மாற்றும் ஒரு புதுப்பிக்கும் வல்லமையாக அவரது ஆவியானவர் இருக்கிறார்.

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்"–1 யோவான் 3:9. தான் கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கிரயமாக கொள்ளப்பட்டவன் என்றும், தேவனுக்குச் சொந்தமான அவனுடைய சரீரத்தினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவதாக, தான் எடுத்துக்கொண்ட மிகவும் பக்திவிநயமான வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறான் என்பதையும் அவன் உணருகிறான். பாவத்தின்மீதும் சுயத்தின்மீதுமுள்ள ஆசை அவனிலே அடங்கிப்போய்விட்டது. "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்"இ "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று ஒவ்வொரு நாளும் கேட்கிறான். ★

# நீங்களே ருசித்துப்பாருங்கள்!

**"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" —சங்கீதம் 34:8.**

தேவன் நல்லவர் என்பதையும், அவரது அன்பையும் நமக்கு நாமே எப்படி அறிந்துகொள்வது? கேள்விப்பட்டு அறிந்து கொள்ளுங்கள் வாசித்து அறிந்துகொள்ளுங்கள் அல்லது விசுவாசித்து அறிந்துகொள்ளுங்கள் என்று கூறாமல், "தேவன் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" என்று சங்கீதக்காரன் கூறுகிறார். இன்னொருவரது வார்த்தையில் நம்பிக்கை வைப்பதைவிட, நீங்களாகவே ருசித்துப்பாருங்கள்.

பரிசோதனையினின்று பெற்றுக்கொள்ளும் அறிவே அனுபவ மாகும். அனுபவத்தை அடிப்படையாகக்கொண்ட மார்க்கமே இன்று நமக்குத் தேவைப்படுகிறது.... சிலருக்கு—ஆம், அநேகருக்கு—மார்க்க சம்பந்தமான சத்தியங்கள், ஏட்டளவில் இருக்கும் ஒரு அறிவாகவே இருக்கிறது. அவர்களது சொந்த இருதயங்களில் தெய்வீகக் கிருபையின் புதுப்பிக்கும் வல்லமையை அவர்கள் ஒருபோதும் உணர்ந்ததில்லை.... தேவனது உக்கிர கோபத்தைப்பற்றிய காரியத்தை நம்புகிறார்கள். ஆனால் அதினின்று தப்புவதற்காக எத்தகைய ஊக்கமான முயற்சிகளையும் எடுக்கிறதில்லை. பரலோகம் ஒன்று உண்டு என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் அதைப் பெற்றுக்கொள்வதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்கிறதில்லை.... பாவத்திற்காக ஒரு பரிகாரமுண்டு என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனால் அதைப் பயன்படுத்துவதில்லை. சரியானது எது என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனால் அதில் எத்தகைய விருப்பமோ, ஈடுபாடோ கிடையாது. அவர்களது அத்தனை அறிவும் அவர்களுக்கு தண்டனையைத்தான் அதிகரிக்கச் செய்யுமே தவிர, வேறு எந்த பலனுமில்லை. தேவன் நல்லவர் என்பதை அவர்கள் ஒருபோதும் ருசித்ததுமில்லை, அனுபவத்தின்மூலமாகக் கற்றுக்கொண்டதுமில்லை.

கிறிஸ்துவின் சீடனாக வேண்டுமானால் சுயத்தை வெறுத்து, நன்மை தீமை ஆகியவைகளினூடே கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லவேண்டும்.... ஒவ்வொரு சிற்றின்பத் திளைப்பும், அது எவ்வளவு பிரியமானதாக இருந்தாலும், மார்க்கசம்பந்தமுள்ள வாழ்க்கைக்குத் தடங்கல் செய்தால், நமது வாழ்க்கையினின்று முற்றிலுமாக அகற்றப்படவேண்டும். நாம் அடையவேண்டிய இலக்கின் தகுதிக்கு ஏற்றபடி, அதே விகித அளவிற்கு முயற்சிகள் எடுத்து தியாகங்கள் செய்வோமா?

நாம் அமைக்கின்ற ஒவ்வொரு தோழமையும் எவ்வளவுதான் அது ஒரு வரையறைக்கு உட்பட்டிருந்தாலும், நம்மீது அதின் செல்வாக்கை ஏற்படுத்தத்தான் செய்கிறது. அந்த செல்வாக்கிற்கு நாம் எந்த அளவிற்கு கட்டுப்படுகிறோம் என்பதை, உறவு நெருக்கத்தின்—கூட்டுறவின் உறுதி, அவர்களிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பு மற்றும் ஆழ்ந்த மதிப்பு ஆகியவையே தீர்மானஞ்செய்யும். இவ்வாறாகவே, கிறிஸ்துவோடு நாம் கொண்டிருக்கும் அறிமுகம் மற்றும் தோழமையின்மூலம் பழுதற்ற "முன்மாதிரியாக" இருக்கின்ற அவரைப்போல ஆகமுடியும். கிறிஸ்துவோடு நாம் கொள்ளும் ஆன்மீக உறவு சொல்லொண்ணாத அளவிற்கு எத்தனை அருமையானது! அத்தகைய உறவை நாம் தேடுவோமானால், அதைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக எந்தவிதமான தியாகத்தையும் செய்வோமானால், அந்த ஆன்மீக உறவு நாம் அனுபவிக்கத்தக்க சிறப்புரிமையாக இருக்கும்.

எனவே, ஒவ்வொருவரும் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலமாக "தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்"– யோவான் 3:33; "எனக்கு உதவி தேவையாக இருந்தது. அந்த உதவியை இயேசுவில் நான் கண்டடைந்தேன். ஒவ்வொரு தேவையும் வழங்கப்பட்டது. எனது ஆத்தும பசி திருப்தியாக்கப்பட்டது.... நான் இயேசுவை விசுவாசிக்கிறேன். ஏனெனில் அவர் எனது தெய்வீக மீட்பராயிருக்கிறார். நான் வேதாகமத்தை விசுவாசிக்கிறேன். ஏனெனில், வேதாகமம் எனது ஆத்துமாவிற்கான தேவனின் குரலாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்திருக்கிறேன்" என்று உறுதியாகக் கூறமுடியும். ★

# பரலோகத்தின் குடிமக்கள்!

**"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்" —எபேசியர் 2:19,20.**

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று இயேசு கூறுகிறார். இந்த வார்த்தைகளை எப்பொழுதும் நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஆண்டவரின் வருகை சீக்கிரமாக இருக்கிறது. நாம் இந்த பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்று நிச்சயமாக நம்புகிறதுபோல் நடந்துகொள்ளவும் வேண்டும். தேவ அன்பு ஆத்துமாவில் மென்மேலும் பெருகத்தக்கதாக, கிருபையின் ஒவ்வொரு வழிவகையும் கடுமையாக உழைத்து விருத்திசெய்யப்பட வேண்டும். "தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி;" "...நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலில்லாதவர்களாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்." உங்களது கிறிஸ்தவ வாழ்க்கை உயிரோட்டத்துடனும், மன உரத்தோடும் அமைந்திருக்கட்டும். வேதாகமத்தின்மூலமாக உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற உயர்ந்த படித்தரத்தை முயன்று அடையமுடியும். தேவனுடைய பிள்ளைகளாக இருப்பீர்களானால், நீங்கள் இதைச் செய்யவேண்டும். அசையாமல் நின்றுகொண்டிருக்கக்கூடாது முன்னேறிச் செல்லவேண்டும் அல்லது பின்வாங்கிப்போகவேண்டும்.... கிறிஸ்தவ வளர்ச்சியிலே குறைந்து காணப்படுவீர்களா? அல்லது தெய்வீக வாழ்க்கையிலே ஆரோக்கியமான முன்னேற்றத்தை அடைவீர்களா? எங்கு ஆவிக்குரிய ஆரோக்கியம் உண்டோ, அங்கு வளர்ச்சியும் இருக்கும். தேவனுடைய பிள்ளை கிறிஸ்துவில் முழு மனிதனாக—மனுஷியாக வளருகிறார். அவர் அடைகிற மேம்பாட்டிற்கு எல்லை எதுவும் கிடையாது....

கிறிஸ்துவிலே பலமாக நிலைநாட்டப்படுபவர்களாக இருக்கவேண்டிய சிலர், தேவனுடைய ஆவியானவரின் ஊழியங்களைக்குறித்த காரியத்தில்,

அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவிலும், உணரும் திறத்திலும் குழந்தைகளாக இருக்கிறார்கள். அநேக ஆண்டுகளின் அனுபவத்திற்குப் பின்னரும், கிறிஸ்தவ மார்க்கத்தை அமைத்து உருவாக்கியுள்ள மாபெரும் விசுவாசம் மற்றும் மூலக்கோட்பாடுகளுடைய அமைப்பிலிருக்கின்ற ஆரம்பக் கொள்கைகளை மாத்திரமே புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். நன்றாகச் செய்தாய் என்ற பாராட்டைப் பெறக்கூடிய அளவிற்கு அப்படிப்பட்ட குணத்தின் பரிபூரணத்தை அவர்கள் புரிந்துகொள்கிறதில்லை. நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய மாபெரும் வெற்றிகள் உண்டு. அந்த வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், இழக்கவேண்டிய ஒரு பரலோகமும் உண்டு. உலகப்பிரகாரமான மாம்ச இதயம் சிலுவையில் அறையப்படவேண்டும். ஏனெனில் அதன் போக்கு ஒழுக்கச் சீர்கேடுடையதாயிருக்கிறது. அதன் முடிவு மரணமே.... பரிசுத்த ஆவியானவரின் மாபெரும் வல்லமைகளுக்காக ஜெபியுங்கள். முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆத்துமாவிலே ஒரு மின்சாரத் தாக்குதல்போன்று மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஆவியானவர் ஊற்றப்பட ஜெபியுங்கள். இவ்வாறு, ஒவ்வொரு நரம்பும் புதிய வாழ்க்கையின் துடிப்பைப் பெறத்தக்கதாக மரித்துப்போன, பூமிக்கடுத்த சிற்றின்பத்தில் தோய்ந்துபோன நிலையினின்று ஆவிக்குரிய முழுமையான நிலைமையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜெபியுங்கள். இவ்வாறு, நீங்கள் தெய்வீக இயல்பிற்குப் பங்காளிகளாக மாறுவீர்கள்.... அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமடைகிறீர்கள். அவரது சாயல் உங்கள் ஆத்துமாக்களிலே பிரதிபலிக்கும். ★

மார்ச் 9

# தேவனைப்பற்றிய ஓர் முழுமையான அறிவு!

**"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" –யோவான் 17:3.**

இங்கு நாம் தேவனை அறிந்துகொள்வதின்மூலமே அவரது வருகையின்பொழுது, அவரைச் சந்திக்க ஆயத்தப்படமுடியும்.... ஆனால், கிறிஸ்துவில் தாங்கள் விசுவாசம் வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிற அநேகர், தேவனை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் காணப்படுவது ஒரு மேற்பரப்பான மார்க்கமே. தேவனை அவர்கள் நேசிக்கவில்லை. அவரது குணத்தைப்பற்றி படிக்கிறதில்லை. எனவே, நம்பிக்கைவைப்பது எப்படி என்பதும், அவரை நோக்கிப்பார்த்து வாழ்வது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. இளைப்பாறுதலிற்கு உகந்த அன்பு என்றால் என்ன என்பதுபற்றியும், அல்லது விசுவாசித்து நடத்தல் என்பதின் பொருள்பற்றியும் அவர்களுக்குத் தெரியாது.... மற்றவர்களை ஆவிக்குரிய பிரகாரம் வளமடையச்செய்யத்தக்கதாக, தாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டியது தங்களது கடமை என்பதை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. உலகமானது ஞானத்தின்மூலம் தேவனை அறிகிறதில்லை. அநேகர் அவரைக்குறித்து சாதுர்ய நயத்தோடு பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்களது செயல்விளக்கவாதங்கள் மனிதரை அவரிடத்திற்கு வெகு சமீபமாகக்கொண்டுவர முடிகிறதில்லை. ஏனெனில், அவர்கள் தாங்களே ஆண்டவரோடு உயிரோட்டமுள்ள தொடர்புள்ளவர்களாக இருக்கவில்லை. தங்களைத் தாங்களே ஞானவான்கள் என்று சொல்லிக்கொண்டு மதியீனர்களாகின்றார்கள். தேவனைப்பற்றிய அவர்களது அறிவு குறைவுள்ளது.

தேடுவதின்மூலம் நாம் தேவனைக் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிற குமாரன்மூலமாக அவர் தம்மை

வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனைப்பற்றிய ஒரு அறிவை நாம் பெற்றுக்கொள்ள விரும்பினால், கிறஸ்துவைப்போல ஆகவேண்டும்.... சொந்த இரட்சகரைப்போன்று கிறிஸ்துவின் மூலமாக தூய வாழ்க்கை வாழ்வதின்மூலம் தேவனைப்பற்றிய உயர்ந்த—தெளிவான கருத்து விசுவாசிக்குக் கிடைக்கும்.

தேவனைப்பற்றி முழுமையான வெளிப்பாடே, கிறிஸ்துவாகும். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." கிறிஸ்துவை அறிவதின்மூலமாகவே தேவனை அறியமுடியும். நாம் அவரை நோக்கிப்பார்க்கும்பொழுது அவருடைய சாயலாக மாற்றப்படுவோம் அவரது வருகையிலே அவரைச் சந்திக்க ஆயத்தப்படுத்தப்படுவோம்.

ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தப்படும் காலம் இதுவே. அவரைச் சந்திக்கும் ஆயத்தத்தை ஒரு நொடியிலே பெற்றுவிட முடியாது. பக்திவிநயமான அந்தக் காட்சியைக் காண ஆயத்தமாகத்தக்கதாக ஊக்கமான உழைப்போடு விழிப்பாகக் காத்திருக்கும் ஜாக்கிரதையும் இணைந்திருக்கவேண்டும். இப்படித்தான் தேவனுடைய பிள்ளைகள் அவரை மகிமைப்படுத்துகிறார்கள். வாழ்வின் பரபரப்பான காட்சிகளுக்கு மத்தியில் விசுவாசமான, நம்பிக்கையூட்டுகிற, தைரியப்படுத்தும் வார்த்தைகள் அவர்களது குரல்களின் மூலமாகக் கேட்கப்படும். அவர்களுக்குள்ள அனைத்தும், அவர்களும் எஜமானனின் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு தங்களது ஆண்டவரைச் சந்திக்க ஆயத்தப்படுகிறார்கள். அவர் வரும்பொழுது, மகிழ்ச்சியுடன்: "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்" என்று சொல்லுவார்கள். ★

# மிகவும் உயர்ந்தவகையான தியானம்!

**"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்;..." –1 யோவான் 3:1.**

என்ன அன்பு! பாவிகளும் அந்நியருமாயிருக்கிற நாம் தேவனிடத்தில் மீண்டும் கொண்டுவரப்பட்டு, அவருடைய குடும்பத்தின் பிள்ளையாக சுவீகாரஞ்செய்யப்படத்தக்கதான அவரது அன்பு எத்தகைய ஈடு இணையற்ற அன்பு! "எங்கள் பிதாவே" என்று மிகவும் விருப்பமான நாமத்தினாலே நாம் அவரைக் கூப்பிடலாம்.

மானிட இதயங்கள் என்னும் வாய்க்கால்மூலமாக தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகின்ற தகப்பனின் அனைத்து அன்பும், மானிட ஆத்துமாக்களில் திறக்கின்ற மென்மையான ஊற்றுகள் அனைத்தும், வற்றாத—எல்லையற்ற—பரந்து விரிந்து கிடக்கும் சமுத்திரம்போன்ற—தேவனின் அன்போடு ஒப்பிடும்பொழுது, வெறும் சிற்றோடைகளே. அந்த அன்பைக்குறித்து நாவினால் விவரிக்கமுடியாது. பேனாவினால் விவரமாக விளக்கிக்காட்ட இயலாது. உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் அந்த அன்பைக் குறித்து தியானிக்கலாம். அந்த அன்பை விளங்கிக்கொள்ளத்தக்கதாக தீவிர முயற்சிசெய்து, வேத வாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கலாம். பரலோகப் பிதாவின் பரிவையும் அன்பையும் புரிந்துகொள்ளத்தக்கதான முயற்சியிலே, நீங்கள் தேவன் கொடுத்த ஒவ்வொரு வல்லமையையும் ஆற்றலையும் வரவழைத்துக்கொள்ளலாம். எனினும், எல்லையற்ற நித்தியம் அதற்கும் அப்பால் இருக்கிறது. யுகம் யுகமாக நீங்கள் அந்த அன்பைக்குறித்து படிக்கலாம். எனினும் இந்த உலகத்திற்காக மரிப்பதற்கென்று தமது ஒரே குமாரனை தத்தஞ்செய்த, தேவனுடைய அன்பின் நீளத்தையும் அகலத்தையும் ஒருபோதும் நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. நித்தியத்தாலுங்கூட ஒருபோதும் முழுமையாக

வெளிப்படுத்திக்காட்ட முடியாது. எனினும் நாம் வேதாகமத்தை வாசித்து, கிறிஸ்துவின் வாழ்க்கையைக்குறித்தும் அவரது மீட்பின் திட்டத்தைக்குறித்தும் தியானஞ்செய்யும்பொழுது, ஆய்விற்கான இந்தப் பொருள் அதிகமதிகமாக புரிந்துகொள்ளத் தக்கதாக தெளிவடையும்.

அன்பான—முழுவதும் இரக்கமே உருவான—கனிவுள்ள—பரிவுள்ள ஒரு தேவனை இவ்வுலகத்திற்குக் காட்டவே, கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்.

மாட்டுத்தொழுவத்தில் பிறந்ததிலிருந்து கல்வாரிச் சிலுவையில் அடிக்கப்பட்டது வரையிலுள்ள கிறிஸ்துவானவரின் வாழ்க்கையைப் பற்றி தினமும் ஒரு மணிநேரம் சிந்தனைசெய்வது நல்லது. ஒவ்வொரு பகுதியாக மிகத் தெளிவானவிதத்தில் கற்பனைசெய்து, ஒவ்வொரு காட்சியையும் குறிப்பாக பூமியில் அவர் நடத்திய வாழ்க்கையின் கடைசிக்காட்சிகளை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவரது போதனைகளையும் அவர் பட்டபாடுகளையும் மானிட இனத்தின் மீட்பிற்காக அவர் செய்த எல்லையற்ற தியாகத்தையும் இவ்வாறாகத் தியானஞ்செய்வதின்மூலம் நமது விசுவாசத்தைப் பலப்படுத்திக் கொள்ளலாம். நமது அன்பை உயிர்ப்பித்துக்கொள்ளலாம். நமது மீட்பரைத் தாங்கி ஊக்கமளித்த அந்த ஆவியானவரால் இன்னும் ஆழமாக—உள்ளார்ந்து இயக்குவிக்கப்படலாம். இறுதியிலே இரட்சிப்பை அடையவேண்டுமானால், சிலுவையின் பாதத்தருகே பாவத்திற்காக மனம்வருந்துதல் மற்றும் விசுவாசம் ஆகிய பாடங்களை நாம் அனைவரும் கற்றுக்கொள்ளலாம்.... சிலுவையின்மீது ரொதங்கிய கிறிஸ்துவை தியானிப்பதின்மூலமாக, மனிதனிலுள்ள மேன்மையான பெருந்தன்மையுள்ள ஒவ்வொரு குணமும் செயலூக்கமடையும். ★

# வெண்ணுடை தேவைப்படுகிறது!

**“விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்” —மத்தேயு 22:11,12.**

உவமையில் சொல்லப்பட்ட கலியாண வஸ்திரம் கிறிஸ்துவின் உண்மையான பின்னடியார்கள் சொந்தமாக வைத்திருக்கும் தூய்மையான கறைதிரையற்ற குணமாகும். சபைக்கு, “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாத”இ “சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது”—வெளிப்படுத்தல் 19:8, (எபேசியர் 5:27) . வேதவாக்கியங்களில் மெல்லிய வெண்வஸ்திரம் என்று கூறப்பட்டிருப்பது “பரிசுத்தவான்களுடைய நீதியே”. அவரைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும், விசுவாசத்தின்மூலமாக, அவரது சொந்த—பழுதற்ற குணமாகிய கிறிஸ்துவின் நீதி கொடுக்கப்படுகிறது.

பரிசுத்த ஏதேன் தோட்டத்திலே, நமது முதல் பெற்றோர் தேவனால் குடிவைக்கப்பட்டபோது, மகிமையின் வெண்வஸ்திரத்தை அவர்கள் அணிந்திருந்தார்கள்.... ஆனால் பாவம் பிரவேசித்தபொழுது, தேவனோடு கொண்டிருந்த தொடர்பை முற்றிலும் அறுத்துப்போட்டார்கள் அவர்களைச் சுற்றியிருந்த வெளிச்சம் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று.... குற்றமற்ற அந்த வஸ்திரத்திற்குப்பதிலாக மனிதன் எதையும் ஏற்பாடு செய்யமுடியாது.... கிறிஸ்து தாமே கொடுத்த மேற்போர்வை மாத்திரமே (ஊழஎநசபைெ), தேவனுடைய பிரசன்னத்தில் நாம் காணப்பட நம்மைத் தகுதியுள்ளவர்களாக மாற்றும்.

இந்த மேற்போர்வையாகிய அவரது சொந்த நீதியின் வஸ்திரத்தை, மனந்திரும்பி விசுவாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கிறிஸ்து அணிவிப்பார்.... பரலோகத் தறியிலே நெய்யப்பட்ட இந்த வஸ்திரத்திலே, மானிட ஆலோசனையின்படி உருவாக்கப்பட்ட ஒரு நூல் இழையும் இருக்காது.

கிறிஸ்து தமது மானிடத்திலே எந்த ஒரு பூரண குணத்தை உருவாக்கி வைத்திருக்கிறாரோ, அந்தக் குணத்தை நமக்கு வழங்க முன்வருகிறார். நமது "நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது"–ஏசாயா 64:6. நாம் நாமே செய்கின்ற அனைத்தும் பாவத்தால் சீர்கேடு அடைந்திருக்கிறது. ஆனால் தேவகுமாரன் "நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை"–1 யோவான் 3:5.

அவர் தமது பூரணமான கீழ்ப்படிதலினாலே ஒவ்வொரு மானிடனும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதை சாத்தியமாக்கி வைத்திருக்கிறார். கிறிஸ்துவிற்கு நாம் சரணடையும்பொழுது நமது இதயம் அவரது இதயத்தோடு இணைகிறது. நமது சித்தம் அவரது சித்தத்தோடு இரண்டறக் கலந்துவிடுகிறது. நமது உள்ளம் அவரது உள்ளத்தோடு ஒன்றாகிவிடுகிறது. நமது சிந்தனைகள் அவருக்குள் கட்டுப்பட்டுவிடுகிறது. அவரது வாழ்க்கையை நாம் வாழ்கிறோம். அவருடைய நீதியின் வஸ்திரத்தால் உடுத்துவிக்கப்படுதல் என்பதன் பொருள் இதுவே. அதன்பின்னர், தேவன் நம்மை நோக்கிப்பார்க்கும்போது, அத்தி இலையினால் செய்யப்பட்ட உடையை அல்ல. பாவத்தின் நிர்வாணத்தையும் அங்கவீனத்தையும் அல்ல. யேகோவாவின் பிரமாணத்திற்கான பூரண கீழ்ப்படிதல் எனப்படும் அவருடைய சொந்த நீதியின் உடையையே காண்கிறார். ★

# கீழ்ப்படிதலினால் ஏற்படும் மகிழ்ச்சி!

**"கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலா யிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி" —சங்கீதம் 119:174.**

கிறிஸ்துவின் நுகம் தனது கழுத்தை பாரப்படுத்துகிறதென்று உண்மையான கிறிஸ்தவன் ஒருபோதும் சொல்லமாட்டான். இயேசுவிற்குச் செய்யும் சேவையை உண்மையான விடுதலை என்று எடுத்துக்கொள்கிறான். தேவனுடைய பிரமாணம் அவனுடைய மகிழ்ச்சியாக இருக்கிறது. தெய்வீகப் பிரமாணங்களை தனது குறைபாடுகளுக்கு ஏற்றாற்போல் இறக்கிவிடாமல், அந்தப் பிரமாணங்களின் பூரண நிலைக்கு ஏற்றாற்போல் உயரவேண்டுமென்று அவன் தொடர்ந்து முயற்சிக்கிறான்.

தேவனுடைய அந்த நாளில் நாம் நிற்பதற்கு ஆயத்தமாக வேண்டுமானால், அத்தகைய அனுபவம் நம்முடையதாகவேண்டும். தவணையின் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கும் இதுவே, கிருபையின் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும் இந்தப்பொழுதே, நமது பாவங்களை விட்டொழிக்கும் தருணம்....

ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நாம், எக்காரியத்திலும் குறைவுபட்டுக் காணப்படாமல், அவரது கிருபையிலே நிறைவுபெற்றவர்களாக நிற்கத்தக்கதாக போதிய காரியங்களை தேவன் நமக்கு முன்னேற்பாடாகச் செய்துவைத்திருக்கிறார். நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? கலியாண வஸ்திரத்தை தரித்துக்கொண்டிருக்கிறீர்களா? வஞ்சித்தல், தூய்மையற்ற நிலை, ஊழல் அல்லது மாய்மாலம் போன்ற காரியங்களை இந்த வஸ்திரம் ஒருபோதும் மூடிமறைக்காது. தேவனுடைய கண் உங்கள் மீது வைக்கப்பட்டுள்ளது.... மனிதரின் கண்களுக்கு நமது பாவங்களை நாம் மறைத்துவைத்துக் கொள்ளலாம். ஆனால் எதையுமே நம்மை உண்டாக்கியவரிடத்தில் மறைத்து வைக்கமுடியாது.

தேவன் நமது பாவங்களுக்காக, தமது சொந்தக்குமாரனென்றும் பாராமல், அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, நாம் நீதிமான்களாகத் தக்கதாக, அவரை உயிரோடெழுப்பினார். கிறிஸ்துவின் மூலமாக, அந்தக் கிருபையின் சிங்காசனத்தண்டையில் அவர் முன்னிலையில் நமது விண்ணப்பங்களை வைக்கலாம். தகுதியற்ற நிலையிலும், நாம், அவர்மூலமாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம். நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவரிடத்தில் வருகின்றோமா?

அவரது பரிசுத்த பிரமாணத்தின் கொள்கைகளிலே தேவனுடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணத்தின் கொள்கைகளே பரலோகத்தின் கொள்கைகளாகும். தேவனுடைய சித்தத்தை அறிவதைவிட, பரலோகத்தின் தூதர்கள் வேறு எந்த உயர்ந்த அறிவையும் பெற்றுக்கொள்கிறதில்லை. அவர்களது வல்லமைகளை உயர்ந்த சேவையில் ஈடுபடுத்திக்கொள்வதே அவரது சித்தத்தைச் செய்வதாகும்.

ஆனால் பரலோகத்தில் சட்டத்திற்குக் கீழ்ப்படியவேண்டும் என்கிற ஆவியிலே எந்த வேலையும் நடக்கிறதில்லை. சாத்தான் யேகோவாவின் பிரமாணத்திற்கு எதிராகக் கலகஞ்செய்தபோது, பிரமாணம் என்ற ஒன்று இருக்கிறது என்ற சிந்தனை, இதுவரை நினைத்திராத காரியத்தைக் குறித்து, ஏறக்குறைய ஒரு திடீர் விழிப்பை ஏற்படுத்தியதைப்போலிருந்தது. தேவதூதர்கள் தங்களது ஊழியத்திலே வேலைக்காரர்களைப்போல் இல்லாமல், குமாரர்களைப்போல் இருக்கிறார்கள்.... கீழ்ப்படிதல் அவர்களுக்கு அடிமை வேலையைப்போல் இருக்கவில்லை. தேவனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அன்பு, அவர்களது சேவையை மகிழ்ச்சியான ஒரு காரியமாக மாற்றுகிறது. மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்து வாழுகின்ற ஒவ்வொரு ஆத்துமாவிலும் "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்கிற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கிறது. ★

# தேவனுடைய தொழிற்பட்டறையில் வடிவடைக்கப்படல்!

**"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"**

**–1 கொரிந்தியர் 6:19,20.**

நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. மிக அதிகமான விலைக்கிரயத்தால் கொள்ளப்பட்டிருக்கிறோம். தேவகுமாரனுடைய பாடும் மரணமுமே அந்தக் கிரயம். இதை நாம் புரிந்துகொள்வோ மானால், முற்றிலும் தெளிவாக விளங்கிக்கொள்வோமானால், நம்மீது ஒரு மாபெரும் பொறுப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்வோம். அதாவது தேவனுக்கு முழுநிறைவான சேவை செய்யத்தக்கதாக, ஒரு சிறந்த ஆரோக்கிய நிலையிலே நாம் நம்மை வைத்துக்கொள்வோம்....

எவ்வித சந்தேகமுமின்றி கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.... இன்று நாம் கடைபிடிக்கும் கொள்கைகள்தான் நிகழ்கால சத்தியம் என்பதிலும், நியாயத்தீர்ப்பை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதிலும் பல ஆண்டுகளாக நமக்கு ஒரு சந்தேகமுமில்லை. உத்தமமாகவும் நீதியாகவும் இருக்கிறவர்களுக்கு சாவாமை என்னும் அந்த இறுதிப் பங்கைக் கொடுப்பதற்காக, பரிசுத்த தூதர்களின் பரிவாரத்தால் சூழப்பட்டு வானத்தின் மேகங்களிலே வரவிருக்கின்ற அவரைச் சந்திக்க, நாம் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் வரும்போது, நமது பாவங்களினின்று நம்மைச் சுத்திகரிக்கவோ, நமது

குணங்களிலுள்ள குறைவுகளை அகற்றவோ, நமது மனப்போக்குகளிலும் குணங்களிலுமுள்ள குறைபாடுகளைச் சரிப்படுத்தவோ மாட்டார். இவைகள் செய்யப்பட்டே ஆகவேண்டுமானால், அந்த வேலை அதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டு முடிந்திருக்கும்.

ஆண்டவர் மீண்டும் வரும்பொழுது, பரிசுத்தமாயிருப்பவர்கள் இன்னும் பரிசுத்தமாயிருப்பார்கள். தங்களது சரீரங்களையும் குணங்களையும், தூய்மையிலும் பரிசுத்தத்திலும் மேன்மையிலும் காத்துக்கொண்டவர்கள், இறுதியில் சாவாமை எனப்படும் அந்தத் தொடுதலில் பங்கடைவார்கள். ஆனால் அநீதியுள்ளவர்களாகவும், பரிசுத்தமற்றவர்களாகவும், தீட்டுள்ளவர்களாகவும் இருந்தவர்கள் என்றைக்கும் (அழிக்கப்படும்வரை) அப்படியே இருப்பார்கள். அவர்களுடைய குணங்களில் காணப்படும் குறைவுகளை நீக்கவும், பரிசுத்த குணங்களை அவர்களுக்கு வழங்கவுந்தக்கதாக எந்த வேலையும் அப்போது நடைபெறுவதில்லை.... அவை அனைத்தும் இந்தத் தவணையின்கால மணிவேளைகளிலே செய்யப்படவேண்டும். இப்பொழுதே நமக்காக அந்த வேலை நிறைவேற்றப்பட வேண்டும்.

நாம் இப்பொழுது தேவனுடைய தொழிற்பட்டறையிலே இருக்கின்றோம். நம்மில் அநேகர் கல்குவாரியிலிருந்து எடுக்கப்பட்ட கரடுமுரடான கற்களைப்போலிருக்கின்றோம். ஆனாலும் தேவனுடைய சத்தியத்தை பற்றிப்பிடித்துக்கொள்வோமானால், அதின் செல்வாக்கு நம்மிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நம்முடைய ஒவ்வொரு குற்றங்களையும் பாவங்களையும் அவைகள் எப்படிப்பட்ட தன்மையுடையவைகளாயிருந்தாலும் நம்மிடமிருந்து அகற்றிப்போட்டு நம்மை உயர்த்துகிறது. இவ்வாறாக, நாம் இராஜாவை அவரது அழகிலே பார்ப்பதற்கும் மகிமையின் இராஜ்யத்திலே பரலோகத்தின் பரிசுத்த தூதர்களோடு இறுதியில் இணைந்துகொள்வதற்கும் ஆயத்தமாக்கப்படுகிறோம். நமது சரீரங்களும் குணங்களும் சாவாமையைத் தரித்துக்கொள்ளத்தக்கதான இந்த வேலை, இந்த உலகத்திலே நமக்காக நிறைவேற்றப்பட வேண்டும். ★

மார்ச் 14

# உடல் ஆரோக்கியமும் மேன்மையான சிந்தனையுமி!

**“பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமா யிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி…” –1 பேதுரு 2:11.**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தை அநேகர் ஒரு இழிவான சிற்றின்பப் பழக்கத்திற்கு எதிரான எச்சரிப்பு என்றே கருதுகின்றனர். ஆனால் இந்த வசனத்திற்கு ஒரு விரிவான பொருளுண்டு. ஒவ்வொரு கேடுபயக்கும் பசிநாட்டத்தையும் அல்லது இச்சையையும் இது தடைசெய்கிறது. ஒவ்வொரு முரண்பாடான கோணலான நாட்டமும், போராடுகிற ஒரு இச்சையாக மாறுகிறது. பசி ஒரு நல்ல நோக்கத்திற்காக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. “ஆத்துமாவிற்கு எதிராகப் போரிடுகின்ற இச்சை”யாக கோணலாக்கப்பட்டு சாவைக் கொடுப்பதற்காக அல்ல. பேதுருவின் எச்சரிப்பு, வெறியை ஊட்டுகின்ற ஊக்கிகள் மற்றும் மயக்க மருந்துகள் அனைத்திற்கும் எதிரான நேரடியான பலவந்தப்படுத்துகிற கடிந்துரையாக இருக்கிறது. இத்தகைய இன்பத் தோய்வுகள் ஒழுக்கப்பண்புகளிலே பெரும் கேடுபயக்கின்ற ஒருசெல்வாக்கை ஏற்படுத்துகின்ற இச்சைகளாக வகுக்கப்பட்டிருக்கிறது.

தேவபக்தியோடு இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற எவரும் தங்களது உடலின் ஆரோக்கியத்தைப்பற்றி அக்கறையற்றவர்களாக, தன்னடக்கமின்மை ஒரு பாவமல்ல என்றும் அது தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாதிக்காது என்றும் பாராட்டிக்கொள்ளவேண்டாம். உடலின் தன்மைக்கும் ஒழுக்கத்திற்கும் இடையே நெருக்கமான ஒரு உணர்ச்சி ஒருமைப்பாடு உண்டு. ஒழுக்கத்தின் படித்தரம், உடல்சார்ந்த பழக்கவழக்கங்களால் உயர்வடையலாம் அல்லது இழிநிலை அடையலாம். மிகச் சிறந்த உணவானாலும் அதை மிதமிஞ்சி உண்ணும்பொழுது, ஒழுக்க உணர்வுகளிலே நோய்சார்ந்த ஒரு நிலையை உருவாகும். உண்ணப்படும் ஆகாரம் மிகச்சிறந்த உடல்நலத்திற்கு ஏற்ற ஆகாரமாக இல்லாவிடில், அதின் விளைவு மேலும் அதிகக் கேடுபயக்கக்கூடியதாகவே

இருக்கும். உடல்நலத்திற்கு ஏற்ற செயலை மனித உடலில் மேம்படுத்தாத எந்தப் பழக்கமும் மிக உயர்வான—மேன்மையான சக்திகளை இழிநிலையடையச்செய்து விடுகிறது.... இன்சுவைக் கவர்ச்சியில் திளைப்பது, மிருக வெறியைப் பலப்படுத்தி, உள்ளத்தின் மற்றும் ஆவிக்குரிய சக்திகளுக்கு மேலாக உயர்ந்து, அவைகளை அடக்கியாள்கிறது.

பசியார்வத்தில் திளைப்பவர்களுக்கான சோதனையின் வலிமை வனாந்தரத்தில் நமது மீட்பர் மேற்கொண்ட நீண்ட உபவாசத்தின்போது, அவர் அடைந்த விவரிக்கமுடியாத கடுந்துயரை வைத்துத்தான் அளவிடப்படவேண்டும். முரண்பாடான பசியார்வத்தில் திளைப்பது, பரிசுத்த காரியங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாதபடி மனிதனின் புலன் உணர்வுகளை மறத்துப்போகச் செய்துவிடுகிறது. மனித இனத்தின்மீது இன்சுவை ஆர்வத்தில் திளைக்கும் வல்லமை அதிக பலத்தோடு பற்றிக்கொண்டிருக்குமாயின் அதன் பிடியை உடைத்தெறிவதற்காக, மனிதன் சார்பாக தேவகுமாரன் ஏறக்குறைய ஆறு வாரங்கள் உபவாசம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கிறிஸ்தவனுக்கு முன்பாக எத்தகைய ஒரு பணி வைக்கப்பட்டுள்ளது! எனினும், போராட்டம் எவ்வளவு பெரிதாக இருப்பினும், அவன் அதை மேற்கொள்ள முடியும். சாத்தானால் கண்டுபிடிக்கமுடிந்த கொடிய சோதனையையும் மேற்கொண்ட அந்த தெய்வீக வல்லமையின் உதவியினால், அவனும் தீமைக்கு எதிரான போராட்டத்தில் முற்றிலுமாக வெற்றியைப் பெற்றுக்கொள்ளமுடியும். இறுதியில் தேவனுடைய இராஜ்யத்திலே வெற்றி பெறுவோர் அணியும் கிரீடத்தை அணிந்துகொள்ள முடியும். ★

# வாழ்க்கையில் விதைப்பதும் – அறுப்பதும்!

**“அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகி யோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளு கிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு” –2 தீமோத்தேயு 2:22.**

அன்புள்ள இனிய நண்பர்களே! உங்களது இளமைப் பருவத்தின் இன்பக் களியாட்டுக்களில் செலவிடப்படும் சிறிதளவு நேரம் உங்களது வாழ்க்கை முழுவதையும் கசப்பாக மாற்றத்தக்க விளைவுகளைக் கொண்டுவந்துவிடும்.சிந்தனையற்ற விதத்தில் செலவிடப்பட்ட ஒரு மணி நேரம், சோதனைக்கு ஒரே ஒரு முறை இசைந்துகொடுத்தல் ஆகியவை உங்களது வாழ்க்கையின் முழு போக்கையுமே மாற்றி, தவறான வழியில் செலுத்திவிடும். நீங்கள் வாலிபப் பருவத்தை அனுபவிப்பது ஒருமுறை மாத்திரமே. அதை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் அந்தப் பகுதியை கடந்துசென்றுவிட்டீர்களானால், உங்களது தவறுகளைச் சரிப்படுத்தத்தக்கதாக மீண்டும் ஒருபோதும் திரும்பிவரத் தேவையில்லை.

சாத்தான் ஒளியின் தூதனுடைய வேடத்தைத் தரித்துக்கொண்டு தனது பகட்டான சோதனைகளோடு வாலிபர்களிடத்திற்கு வந்து, அவர்கள் தங்களது கடமையைச் செய்யாதபடி, படிப்படியாக அவர்கள்மீது வெற்றிகொள்கிறான். அவன் குற்றஞ்சாட்டுகிறவன் வஞ்சிக்கிறவன் பொய்யன் உபத்திரவங்கொடுக்கிறவன் கொலைபாதகன் என்று வருணிக்கப்படுகிறான்.... உங்களைச் சோதிப்பது சாத்தானின் செயல். ஆனால் அதற்கு விட்டுக்கொடுப்பது உங்களது சொந்தச்செயலே ஆகும். சோதிக்கப்படும் ஒருவனை மீறுதலிற்குட்படுத்த, சாத்தானின் சேனை அனைத்தினாலும் முடியாது. பாவஞ்செய்வதற்கு எந்தச் சாக்குப்போக்குமே கிடையாது. சோதனை ஒரு பாவம் அல்ல. இயேசு பரிசுத்தமாகவும் தூய்மையாகவும் இருந்தார். அவரும் நம்மைப்போல எல்லா வகைகளிலும் சோதிக்கப்பட்டார்.

மேலும் மனிதன் ஒருபோதும் அவ்வாறு சகிக்கப்பட அழைக்கப்படாத அளவிற்கு, அத்தகைய பலமும் வல்லமையுமுள்ள சோதனைகளால் சோதிக்கப்பட்டார். நாம் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போகத்தக்கதாக நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியை விட்டுச்சென்றிருக்கிறார். நாம் சுயத்தின்மீது நம்பிக்கைவைத்து, அல்லது சுயநீதியுடையவர்களாகவே இருப்போமானால் அந்த சோதனைக்கடியில் விழும்படி விட்டுவிடப்படுவோம். ஆனால் இயேசுவை நோக்கிப்பார்த்து, அவரில் நம்பிக்கை வைப்போமானால் யுத்த காலத்திலே எதிரியை மேற்கொண்ட வல்லமையை நமது உதவிக்கு அழைத்துக்கொள்வோம். அவர் ஒவ்வொரு சோதனையோடும் அதினின்று தப்பித்துக்கொள்வதற்கான வழியையும் ஏற்படுத்திக்கொடுப்பார். ஒரு வெள்ளத்தைப்போன்று சாத்தான் வருகின்றபோது, ஆவியின் பட்டயத்தோடு அவனுடைய சோதனைகளை நாம் சந்திக்கவேண்டும். இயேசு நமக்கு உதவியாளராக இருந்து, அவனுக்கு எதிராக ஒரு கொடியை உயர்த்துவார்.

நம்மிலுள்ள ஒரு தவறான குணக்கூறு, நெஞ்சார நேசிக்கப்பட்ட பாவம் நிறைந்த ஒரு விருப்பம், சுவிசேஷத்தின் அனைத்து வல்லமையையும் இறுதியிலே பயனற்றதாகிவிடும்.... கடமையின் வேதனைகள், பாவத்தினால் கிடைக்கும் சந்தோஷங்கள் ஆகிய கயிறுகளால் சாத்தான் மனிதரை தனது கண்ணிகளில்கட்டி வைக்கிறான். ஒரு தவறான செயலைச் செய்வதைவிட மரிப்பதே நல்லது எனத் தெரிந்துகொள்பவர்கள் மாத்திரமே உத்தமமானவர்களாக இருப்பார்கள்.

சாத்தானின் மாபெரும் சக்தியுள்ள சோதனைகள்கூட வாலிபர் களை தங்களது பற்றுறுதியினின்று இழுத்துக்கொள்ளாத அளவிற்கு வாலிபர்கள் திடமான கொள்கையுடையவர்களாக இருக்கலாம். ★

# பரலோகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் குணம்!

**“உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு”**
**–1 தீமோத்தேயு 4:12.**

பரலோகத்தின் இராஜரீகத்தை உடையவரான இயேசு வாலிபருக்கு ஒரு முன்மாதிரியை வைத்துப்போயிருக்கிறார். அவர் தமது அன்றாட அப்பத்திற்காக நாசரேத்திலுள்ள தச்சுப்பட்டறையில் வேலைசெய்தார். அவர் தமது பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருந்தார். அவர் தமது சொந்த நேரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ அல்லது தமது சுயசித்தத்தைப் பின்பற்றவோ விரும்பவில்லை. கவலையற்றவிதத்தில் இன்பத்தோய்வுகளில் திளைத்து வாழும் வாழ்க்கையின் மூலமாக, ஒரு வாலிபன் ஒரு மனிதனாக அல்லது ஒரு கிறிஸ்தவனாக உண்மையான மேன்மையை ஒருபோதும் அடையமுடியாது. தேவன் தமது சேவையிலே நமக்கு ஒரு சிக்கலற்ற நிலையையோ, மேன்மையையோ, செல்வத்தையோ வாக்குப்பண்ணவில்லை. ஆனால் “உபத்திரவங்களோடு” தேவையான எல்லா ஆசீர்வாதங்களும், வரப்போகிற உலகிலே நித்தியஜீவனும் கிடைக்குமென உறுதியளிக்கிறார். அவரது சேவைக்கு கொஞ்சமும் குறையாத முழுமையான அர்ப்பணிப்பை மாத்திரமே கிறிஸ்து ஏற்றுக்கொள்கிறார். நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவே....

திடமான—மார்க்கசம்பந்தமான—கொள்கையின் தாங்கிப்பிடிக்கும் வல்லமையைப்பற்றிய சில குறிப்பான எடுத்துக்காட்டுகள் நமக்கு இருக்கின்றன.... வாய் பிளந்திருந்த சிங்கங்களின் குகைகளால் தானியேலின் அன்றாட ஜெபங்களைத் தடுத்துநிறுத்த முடியவில்லை. நேபுகாத்நேச்சார் நிறுத்திவைத்த சிலைக்கு முன்பாக சாத்ராக்கும் அவனது தோழர்களும் விழுந்து பணியத்தக்கதாக அந்த எரிகிற அக்கினிச்சூளை

அவர்களைத் தூண்டவுமில்லை. திடமான கொள்கைகளையுடைய வாலிபர்கள், களியாட்டுக்களைத் தவிர்ப்பார்கள். வேதனைகளைச் சகித்து, தைரியமாக எதிர்த்து நிற்பார்கள். தேவனுக்கு உண்மையற்றவர் களாகக் காணப்படுவதைவிட, சிங்கங்களின் குகைக்கும், சூடாக்கப்பட்ட அக்கினிச் சூளைக்கும் எதிராக தைரியமாகப் போராடுவார்கள். யோசேப்பின் குணத்தைக் கூர்ந்து கவனியுங்கள். அவனது ஒழுக்கம் கடுமையாகச் சோதிக்கப்பட்டது. ஆனால் அதன் வெற்றி முழுமையாக இருந்தது. ஒவ்வொரு வகையிலும் அந்த மேன்மையான வாலிபன் சோதனையைச் சகித்தான். ஒவ்வொரு உபத்திரவத்தின்போதும் அதேபோன்ற மிகவும் உயர்ந்த— வளைந்துகொடுக்காத கொள்கை காணப்பட்டது. தேவன் அவனோடிருந்தார். அவரது வசனம் பிரமாணமாக இருந்தது.

வேதாகமத்தைப் படிப்பவர்கள், தேவனோடு ஆலோசனை கொள்பவர்கள் கிறிஸ்துவின்மீது சார்ந்திருப்பவர்கள் எல்லாச் சமயங்களிலும் அனைத்துச் சூழ்நிலையிலும் ஞானமாக நடந்துகொள்ளமுடியும். நடைமுறை வாழ்க்கையிலே நல்ல கொள்கைகள் தெளிவாகத் தெரியும். இந்தக் காலத்திற்குரிய சத்தியம் மாத்திரம் இதயக்கனிவோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, குணத்திற்கான அடித்தளமாக மாறட்டும். அதினால் நோக்கத்தில் ஒரு உறுதி ஏற்படும். சிற்றின்பங்களின் கவர்ச்சிகளும், நிலையற்ற பழக்கங்களும், உலகப்பற்றுடையவர்களது இகழ்ச்சியும், சுயமாக இன்பத்தில் திளைப்பவர்களது வற்புறுத்தல்களும் செல்வாக்கைப் பயன்படுத்த முடியாதபடி சக்தியற்றுப் போய்விடும். முதலாவது மனசாட்சி ஒளியூட்டப்பட வேண்டும். சத்தியத்தின்மேலும் நீதியின்மீதும் கொண்டுள்ள வாஞ்சை ஆத்துமாவில் ஆளுகைசெய்ய வேண்டும். பரலோகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் குணம் காணப்பட வேண்டும். ★

# பேதுருவின் ஏணியில் ஏறுதல்!

**"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர் களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமை யையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" –2 பேதுரு 1:5–7**

பேதுருவின் எட்டு சுற்றுப்படியை இளைஞர்களுக்குச் சுட்டிக்காட்டுங்கள். மிக உச்சத்திலிருக்கிற சுற்றில் பாதங்களைப் பதிக்காமல் தாழ்வாக அடியிலிருக்கின்ற படியில் வைக்கச் சொல்லுங்கள். மேலும் ஊக்கத்தோடு பரிவுடன் உச்சத்திலிருக்கும் படிவரையிலும் ஏறிச்சென்றடையும்படி அவர்களை வற்புறுத்துங்கள்.

கிறிஸ்து... அந்த ஏணியாக இருக்கிறார். அதின் அடித்தளம் அவருடைய மானுடத்தில் திடமாக பூமியின்மீது ஊன்றப்பட்டிருக்கிறது. உச்சத்திலிருக்கும் ஏணியின் சுற்று அவரது தெய்வீகத்தின்மூலமாக அவரது சிங்காசனத்தைத் தொடுகின்றது. கிறிஸ்துவின் மானுடம் விழுந்துபோன மனுக்குலத்தை அணைத்துக்கொள்ளுகிறது. அவரது தெய்வீகமோ தேவ சிங்காசனத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவை நோக்கிப்பார்த்தவர்களாக, அவரைப் பற்றிப்பிடித்துக்கொண்டவர்களாக, கிறிஸ்துவின் உயரத்தை அடையத்தக்கதாக ஏணியின் ஒவ்வொரு சுற்றிலும் ஏறி, படிப்படியாகச் செல்லும்போது, நாம் இரட்சிக்கப்படுகிறோம். இவ்வாறாக, அவர் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக ஆக்கப்பட்டார். விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவ பக்தி, சகோதர சிநேகம், அன்பு ஆகியவைகளே இந்த ஏணியின் சுற்றுப்படிகளாகும். இந்த அனைத்து கிருபைகளும் கிறிஸ்தவ குணத்திலே வெளிப்படவேண்டும். "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்"–2 பேதுரு 1:11.

மேற்கூறப்பட்ட கிருபைகளில் ஒன்றை பூரணப்படுத்திக் கொண்டபிறகுதான் அடுத்த கிருபையை வளர்க்க முயற்சிசெய்ய

வேண்டுமென்று நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை. இல்லவே இல்லை. அனைத்துக் கிருபைகளும் சேர்ந்து ஒன்றாக வளரவேண்டும்.... கிறிஸ்துவின் குணத்திலே முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட பாக்கியமான அத்தனை குணங்களையும் நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளிலும் பூரணப்படுத்திக்கொண்டிருக்க வேண்டும்.

உங்களது வாழ்நாளிலே நீங்கள் செய்யவேண்டிய இந்த மாபெரும் அளவிலான வேலையைக்குறித்து திகைப்படையவேண்டாம். ஏனெனில், இவை அனைத்தையும் செய்துமுடிக்கவேண்டுமென்று உங்களிடம் ஒரேயடியாகக் கோரப்படவில்லை. உங்களது உடலின் ஒவ்வொரு சக்தியும் ஒவ்வொரு நாளின் வேலைக்காகச் செலவிடப்படட்டும். கிடைக்கும் ஒவ்வொரு அருமையான சந்தர்ப்பத்தையும் முன்னேற்றமடையச் செய்யுங்கள். தேவன் கொடுக்கும் உதவிகளை மதித்துப்பாராட்டுங்கள். முன்னேற்றம் என்ற அந்த ஏணியிலே ஒவ்வொரு படியாக முன்னேறுங்கள். ஒரு சமயத்தில் ஒரு நாள்மட்டுமே நீங்கள் வாழவேண்டும். தேவன் உங்களுக்கு ஒரு நாள் கொடுத்திருக்கிறார். அந்த நாளிலே உங்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் எப்படி மதிப்பீடுசெய்தீர்கள் என்பதை பரலோகத்தின் பதிவேடுகள் காட்டும். தேவனால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நாளையும் இவ்வாறாக முன்னேற்றமடையச் செய்வீர்களாக. இறுதியிலே, "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று உங்கள் எஜமானர் சொல்வதை நீங்கள் கேட்கலாம். ★

# ஆத்துமாவின் உயிர்மூச்சு!

**“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்” –1 தெசலோனிக்கேயர் 5:17**

ஜெபம் ஆத்துமாவின் மூச்சாக, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் வாய்க்காலாக விளங்குகிறது. மனந்திரும்பிய ஆன்மா ஜெபிக்கும்பொழுது, தேவன் அதின் மனப்போராட்டங்களையும், அயராத அரும்பாடுகளையும் அதின் உத்தமமான நிலையையும் கூர்ந்து கவனிக்கிறார். அந்த ஆன்மாவின் நாடியில் விரலைவைத்து, அதின் துடிப்பு ஒவ்வொன்றையும் கவனித்து குறித்துக்கொள்கிறார். அவருக்குத் தெரியாமல் அந்த ஆன்மாவை எந்த எண்ணமும் எழுச்சியடையச்செய்யவோ, எந்த உணர்வும் அதின் அமைதியைக் குலைக்கவோ, எந்தத் துக்கமும் அதை நிழலிடவோ, எந்தப் பாவமும் கறைப்படுத்தவோ, எந்த சிந்தனையோ அல்லது நோக்கமோ அசைக்கவோ முடியாது. அந்த ஆத்துமா எல்லையற்ற ஒரு கிரயத்தால் வாங்கப்பட்டது. மேலும், மாற்றமுடியாத ஒரு ஆழ்ந்த ஈடுபாட்டுடன் நேசிக்கப்பட்டதாகும்.

ஆன்மா குணமாகுதலைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, மாபெரும் சிறந்த வைத்தியராகிய அவரிடம் ஏறெடுக்கப்படும் ஜெபம் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. ஜெபம் நம்மை ஒருவரோடொருவர் இணைத்து, பின்னர் தேவனோடு இணைக்கிறது. ஜெபம் இயேசுவை நமக்கு அருகில் கொண்டுவருகிறது. சோர்ந்து திகைத்திருக்கும் ஆத்துமாவிற்கு புதிய பலத்தையும் கிருபையையும் வழங்குகிறது....

நம்மைப்போல கிறிஸ்து எல்லா வகைகளிலும் சோதிக்கப்பட்டார். எனினும், பாவமற்றவராக இருந்தார். அவர் மானிடத் தன்மையை எடுத்துக்கொண்டார். மானிட மரபுவழித்தன்மைக்கு இசைவாக உருவாக்கப்பட்டார். அவரது தேவைகள் எல்லாம் ஒரு மனிதனுடைய தேவைகளாக இருந்தன. உடல் சம்பந்தமான தேவைகள் அவருக்கு அளிக்கப்படவேண்டியதிருந்தன. உடலின் களைப்பினின்று விடுபடவேண்டியதிருந்தது. அவர் தமது பிதாவினிடத்தில் ஜெபித்தே கடமைகளைச் செய்வதற்கும் சோதனைகளைச் சந்திப்பதற்கும் ஏற்ற

மனஉரம் பெற்றார். ஒவ்வொரு நாளும் தமது பணிமுறை வழக்கத்தின்படி ஆத்தும இரட்சிப்பின் வேலையைத் தொடர்ந்தார்.... சோதனையில் அகப்படும் மக்களுக்காக, இரவுகள் அனைத்தையும் ஜெபத்திலே செலவிட்டார்.

பின்வரும் நாட்களிலே சந்திக்கவேண்டிய சோதனைகளுக்கு தாம் ஆயத்தமாகத்தக்கதாக மலையில் அல்லது வனாந்தரத்தில் ஜெபத்திலே தரித்திருக்கவேண்டியது அவருக்கு அவசியமாயிற்று. சாத்தானின் சோதனைகளைச் சந்திக்கத்தக்கதாக உடலிலும் ஆன்மாவிலும் எழுச்சியையும் புத்துணர்ச்சியையும் பெறவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார். அவரது வாழ்க்கையைப்போன்று வாழுவதற்கு முயற்சி செய்துகொண்டிருப்பவர்கள், அதைப்போன்ற தேவையை உணர்வார்கள்....

" ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24) என்று அவர் நம்மிடம் கூறுகிறார். "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" (மத்தேயு 11:29) என்று கிறிஸ்து கூறும்பொழுது, அதற்கான மறுமொழி கொடுக்கத் தகுதியுள்ளவர்களாக நம்மை ஆக்க அவரால் மாத்திரமே முடியும். ஒவ்வொரு நாளும் சுயம் மறுக்கப்படவேண்டும் என்பதே இதன் பொருள். அந்த மேன்மையான மனத்துணிவையும், பாடனுபவிக்கத்தக்க சித்தத்தையும், விடாமுயற்சியுடன்கூடிய சக்தியோடு போராடுவதற்கான பெலத்தையும் கிறிஸ்து நமக்குக் கொடுக்கமுடியும். பெலவீனமான ஆத்துமாகூட தெய்வீகக் கிருபையின் துணையோடு வெற்றியாளருக்கும்மேலாக வல்லமையைப் பெற்றுக்கொள்ள முடியும். ★

# முன்னேறுவதற்கான இரகசியம்!

**“ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்” —சங்கீதம் 62:8**

தெய்வீக வாழ்க்கையிலே நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அதிகமாக ஜெபத்தில் தரித்திருக்கவேண்டும். சத்தியத் தூது முதன்முதலாகக் கூறியறிவிக்கப்பட்டபொழுது, நாம் எவ்வளவு அதிகமாக ஜெபித்தோம்! வீட்டிலுள்ள அறையிலும், தானியம் சேர்த்துவைக்கப்பட்டிருந்த இடங்களிலும், பழத்தோட்டங்களிலும், சோலைகளிலும் மற்றவர்களுக்காகப் பரிந்து ஜெபிக்கும் மன்றாட்டின் குரல் எவ்வளவாக அடிக்கடி காதுகளில் தொனித்தது. அடிக்கடி இரண்டு மூன்று பேராக இணைந்து வாக்குத்தத்தத்தின் உரிமையைக் கோரி, மணிக்கணக்காக ஊக்கமான ஜெபத்தில் ஈடுபட்டோம். அடிக்கடி அழுகையின் குரல் காதுகளில் தொனித்தது. பின்னர், நன்றி செலுத்துதலின் குரலும் துதியின் குரலும் கேட்கப்பட்டது. நாம் இந்த சத்தியத்தை முதலாவது விசுவாசித்த நாட்களைவிட தேவனுடைய நாள் இன்னும் அதிகமாக நெருங்கிவிட்டது. அந்த ஆரம்பநாட்களைவிட, இன்னும் அதிக ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் விருப்பத்தோடுகூடிய ஆர்வத்தோடும் நாம் காத்திருக்கவேண்டும். நமக்கு வரவிருக்கின்ற ஆபத்துக்கள் முன்பைவிட மிகவும் பயங்கரமாக இருக்கின்றன.

இயேசு தமது பூலோக வாழ்வின் காலத்திலே, தனித்து ஜெபித்த மணிவேளைகளில்தான் ஞானத்தையும் வல்லமையையும் பெற்றார். நமது வாலிபர்கள் அதிகாலையிலும் மாலையிலும் இந்த அமைதியான மணிவேளைகளில் நேரம் கண்டுபிடித்து, இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, தங்களது பரலோகப் பிதாவுடன் ஆன்மீக உறவுகொள்ளவேண்டும். நாள் முழுவதும் தங்களது இதயங்களை தேவனிடத்திற்கு உயர்த்தட்டும்.

நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியிலும் அவர் நம்மை நோக்கி: "உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன்" (ஏசாயா 41:13) என்று கூறுகிறார். நமது பிள்ளைகள் தங்களது வாழ்வின் ஆரம்பகாலங்களிலே, இந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டால், எத்தகைய புத்துணர்வும் வல்லமையும் எத்தகைய மகிழ்ச்சியும் இனிமையும் அவர்களது வாழ்க்கையிலே காணப்படும்!

ஜீவனுள்ள தேவனுக்காக, உங்கள் இதயம் கொண்டிருக்கும் ஏக்கத்தினால், அது உடையட்டும். மானுடமானது தெய்வீகத் தன்மைக்குப் பங்காளியாவதின்மூலம் என்ன செய்யமுடியுமென்பதை கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்குக் காட்டியிருக்கிறது. தேவனிடமிருந்து கிறிஸ்து பெற்றுக்கொண்ட அனைத்தையும், நாமும் பெற்றுக்கொள்ள முடியும். அப்படியானால் கேளுங்கள். பெற்றுக்கொள்ளுங்கள். யாக்கோபின் விடாப்பிடியான விசுவாசத்தோடும், எலியாவின் விட்டுக்கொடுக்காத உறுதியான பிடிவாதத்தோடும், தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் அனைத்தையும் உரிமைகோரி மன்றாடுங்கள்.

தேவனைப்பற்றிய மகிமையான கருத்துக்களை உங்கள் உள்ளம் உடைமையாக வைத்திருக்கட்டும். இயேசுவின் வாழ்க்கையோடு உங்களது வாழ்வின் அந்தரங்கமான இணைப்புகள் பின்னிப்பிணைந்திருக்கட்டும். இருளிலிருந்து வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது என்று கட்டளையிட்ட தேவன், உங்களது இதயத்திலும் பிரகாசிக்க விருப்பத்தோடு இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமைபற்றிய அறிவின் வெளிச்சத்தைக் கொடுக்க விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய காரியங்களை எடுத்து உங்களுக்குக் காட்டுவார்.... எல்லையற்ற பரம்பொருளின் நுழைவாயிலிற்கு கிறிஸ்து உங்களை நடத்திச்செல்லுவார். திரைக்கு அப்பாலுள்ள மகிமையை நீங்கள் காணலாம். நமக்காகப் பரிந்துபேசத்தக்கதாக என்றும் வாழ்கின்ற அவர் போதிய தகுதியை உடையவர் என்று மனிதருக்கு வெளிப்படுத்தலாம். ★

# அசைக்கமுடியாத விசுவாசம்!

**"...அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" –யாக்கோபு 1:6.**

ஜெபமும் விசுவாசமும் மிக நெருக்கமாக இணைந்தவைகளாகும். இவ்விரண்டையும் நாம் இணைத்தே கற்றுக்கொள்ளவேண்டும். விசுவாசமுள்ள ஜெபத்திலே தெய்வீக அறிவியல் பாடம் ஒன்று உண்டு. வாழ்க்கையின் பணியை வெற்றியுள்ளதாக்க நினைக்கும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டிய ஒரு அறிவியல் பாடமாகும். "ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" (மாற்கு 11:24) என்று கிறிஸ்து கூறுகிறார். நாம் கேட்பது தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கவேண்டுமென்பதைத் தெளிவாகக் காட்டுகிறார். அவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணிய காரியங்களை நாம் கேட்கவேண்டும். நாம் பெற்றுக்கொள்வது எதுவானாலும், அவரது சித்தத்தைச் செய்வதற்கே பயன்படுத்த வேண்டும். இந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், வாக்குத்தத்தம் தெளிவாக இருக்கும்.

பாவமன்னிப்பிற்காக, பரிசுத்த ஆவியானவருக்காக, கிறிஸ்துவைப்போன்ற குணத்திற்காக, அவரது வேலையைச் செய்வதற்கான ஞானத்திற்காக வல்லமைக்காக, அவர் வாக்குத்தத்தஞ்செய்த எந்த ஈவுக்காகவும் நாம் கேட்கலாம். அதன் பின்னர், பெற்றுக்கொள்ளுகிறோம் என்று விசுவாசிக்கவேண்டும். மேலும் பெற்றுக்கொண்டதற்காக தேவனுக்கு நன்றியைச் செலுத்தவேண்டும். அந்த ஆசீர்வாதம் கிடைத்துவிட்டதற்கான வெளிப்டையான ஆதாரத்தை நோக்கிக்கொண்டிருக்கவேண்டாம். அந்த ஈவு அந்த வாக்குத்தத்தத்தில் இருக்கிறது. தேவன் வாக்குத்தத்தம் பண்ணிதைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்ற நிச்சயத்தோடு நாம் நமது வழக்கமான கடமைகளைச் செய்து கொண்டிருக்கலாம். மேலும் ஏற்கெனவே நம்மிடத்தில் இருக்கும் அந்த ஈவு நமக்கு மிக அதிகமாக அவசியப்படும்போது கைகூடிவரும்.

இவ்வாறு, தேவனுடைய வார்த்தையின்படியே வாழ்வதின் பொருள் நமது முழு வாழ்க்கையையும் அவருக்கு ஒப்படைப்பதாகும். அவர் நமக்குத் தேவை என்றும், நாம் அவரைச் சார்ந்திருக்கவேண்டும் என்றும் நம்மால் தொடர்ச்சியாக உணரப்படும். நமது இதயம் தேவனை நோக்கி இழுக்கப்படும். ஜெபம் ஒரு கட்டாயமான தேவையாகும். ஏனெனில் அதுவே ஆத்துமாவின் உயிராக இருக்கிறது. குடும்ப ஜெபம், பொது ஜெபம் ஆகியவைகளுக்கான இடம் உண்டு. ஆனால் ஆண்டவரோடு நாம் கொள்ளும் அந்தரங்க ஆன்மீக உறவே ஆத்தும ஜீவனைத் தாங்கிப்பிடிக்கிறது....

ஒருபோதும் இல்லாத அளவிற்கு இந்த உலகத்தை ஒரு கடுமையான தீவிரநிலை ஆட்கொண்டுவருகிறது. கேளிக்கைகளிலும் பணம் சம்பாதிப்பதிலும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற போட்டிகளிலும் உலகில் உயிரோடு நிலைத்திருப்பதற்காகச் செய்யும் போராட்டத்திலும், ஒருவித பயங்கரமான சக்தி சரீரத்தையும் மனதையும் ஆத்துமாவையும் முழுவதுமாக ஈர்த்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய வெறியூட்டும் வேகத்தாக்குதல்களுக்கு மத்தியில் தேவன் பேசிக்கொண்டிருக்கிறார். தனித்துவந்து, அவரோடு ஆன்மீக உறவுகொள்ளும்படி அழைக்கிறார். “நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்”—சங்கீதம் 46. 10

அவரது பிரசன்னத்தில் ஒரு கணம் சற்று நிற்பதல்ல. கிறிஸ்துவோடு தனிமையில் தொடர்புகொள்ளவேண்டும். அவரோடு அமர்ந்திருந்து தோழமைகொள்ளவேண்டும். அதுவே நமது தேவையாகும். ★

# இதயத்திலும் வாழ்விலும் தூய்மை!

**"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" —மத்தேயு 5:8.**

தேவ பட்டணத்திற்குள் தீட்டுப்படுத்துகிற எதுவும் பிரவேசிக்காது. அங்கே வாழப்போகின்ற அனைவரும் இப்பூமியில் இருக்கும்பொழுதே இதயத்தில் சுத்தமுள்ளவர்களாகிவிடுவார்கள். இயேசுவைப்பற்றி கற்றுக்கொண்டிருக்கும் ஒரு நபருக்கு, அக்கறையற்ற மனப்பாங்குகளிலும், பண்பற்ற மொழிநடைகளிலும், கரடுமுரடான சிந்தனைகளிலும் ஒருவகையான வெறுப்பு வளர்வது வெளிப்படையாகத் தெரியும். கிறிஸ்து இதயத்தில் வாசஞ்செய்கிறபோது, சிந்தனையிலும் நடைமுறையிலும் தூய்மையும் பரிசுத்தமும் காணப்படும்.

இயேசுவின் வார்த்தைகளிலே.... ஒரு ஆழமான பொருள் பொதிந்திருக்கிறது. தூய்மை என்ற வார்த்தையை, இழிந்த புலன் நுகர்ச்சிகளிலிருந்தும் இச்சைகளினின்றும் விலகி இருப்பது என்று, உலகம் விளங்கிக்கொள்ளும்விதத்தில் அல்ல, மாறாக, ஆத்துமாவில் மறைந்து கிடக்கும் நோக்கங்கள் உட்கருத்துக்கள் ஆகியவைகளில் சுத்தமாகவும், பெருமை, சுயநலத்தை வாஞ்சித்துத் தேடுதல் ஆகியவற்றிற்கு விலகி, சுத்தமுள்ளவர்களாகவும் தாழ்மையாகவும் சுயநலமின்றியும் சிறு பிள்ளையைப்போலவும் இருக்கவேண்டும் என்பதாகும்.

ஒத்ததே ஒத்ததைப் பாராட்டிப் போற்றமுடியும். நீங்கள் உங்களது சொந்த வாழ்க்கையிலே அவரது குணத்தின் கொள்கையாக இருக்கிற சுயத்தைத் தியாகஞ்செய்யும் அன்பின் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டாலொழிய தேவனை அறிய முடியாது....

கிறிஸ்து தமது மகிமையிலே இரண்டாம் வருகையில் வரும்பொழுது, துன்மார்க்கரால் அவரது பிரசன்னத்தை தாங்கிக்கொள்ளமுடியாது.

அவரை நேசிப்பவர்களுக்கு ஜீவனாயிருக்கிற அவரது பிரசன்னத்தின் ஒளி துன்மார்க்கருக்கு மரணமாயிருக்கும்.... அவர் காணப்படும்பொழுது, தங்களை மீட்பதற்காக மரணத்தைச்சந்தித்த அவரது முகத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்ளும்படி அவர்கள் வேண்டிக்கொள்ளுவார்கள்.

பரிசுத்த ஆவியானவர் வாசஞ்செய்வதினால் பரிசுத்தமடைந்த இதயங்களுக்கு, அனைத்தும் வேறாயிருக்கும். இவர்கள் தேவனை அறியமுடியும். ஆண்டவரின் மகிமை மோசேக்கு வெளிப்பட்டபொழுது அவன் பாறையின் பிளவிலே மறைத்துவைக்கப்பட்டிருந்தான். நாம் கிறிஸ்துவிலே மறைத்துவைக்கப்பட்டிருக்கும்பொழுது தேவனுடைய அன்பைக் காண்கிறோம்....

விசுவாசத்தினாலே நாம் அவரை இங்கேயே இப்பொழுது பார்க்கிறோம். நமது அன்றாட அனுபவத்திலே, அவரது தெய்வீக அருட்செயல்களின் வெளிப்பாட்டின்மூலமாக, அவர் நல்லவர் என்பதையும், அவரது பரிவுள்ள குணத்தையும் தெளிவாக அறிந்துகொள்கிறோம். அவரது குமாரனின் குணத்திலே நாம் தேவனைக் கண்டறிந்துகொள்கிறோம்.

இதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தங்களது மீட்பராக ஒரு புதிய—மிகவும் அன்பான உறவிலே காண்கிறார்கள். அவரது குணத்தின் பரிசுத்தத்தையும் தூய்மையையும் தெளிவாக அறியும்பொழுது, அவரது சாயலைப் பிரதிபலிக்கவேண்டுமென்று ஏங்குகிறார்கள். மனந்திரும்பி வருகின்ற மைந்தனைக் கட்டித்தழுவவேண்டுமென்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு பிதாவைப்போல காண்கிறார்கள். அவர்களது இதயங்கள் விவரிக்கக்கூடாத மகிழ்ச்சியினாலும் மகிமையினாலும் நிரம்புகின்றன.

இதயத்தில் சுத்தமுள்ளவர்கள், தேவன் இந்த உலகத்திலே தங்களுக்குக் கொடுத்திருக்கும் நாட்களிலே அவரது நேரடியான பிரசன்னத்திலிருப்பதுபோன்று வாழ்கின்றார்கள். ஏதேன் தோட்டத்திலே ஆதாம் தேவனோடு நடந்ததைப்போல இதயத்தில் சுத்தமுள்ளவர்களும் எதிர்காலத்தில் நித்தியஜீவனைப் பெற்றுக்கொண்டு அவரை முகமுகமாகத் தரிசிப்பார்கள். ★

# வேதாகமத்தின்படி பரிசுத்தமாகுதல் என்பதின் பொருள் விளக்கப்படுதல்!

**“உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்” –யோவான் 17:17.**

சத்தியத்தின்மூலமாக பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் அந்த சத்தியத்தின் வல்லமையை எடுத்துச் சொல்லுகின்ற உயிரோட்டமுள்ள பரிந்துரைகளாகவும் உயர்த்தெழுந்த ஆண்டவரின் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் மார்க்கமானது விருப்பத்தை மேம்படுத்தி, தீர்மானங்களைப் பரிசுத்தப்படுத்தி, ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தி, உயர்த்தி மேன்மையடையச் செய்கிறது. அத்துடன், பரலோகத் தூதர்களின் கூட்டுறவிற்கு கிறிஸ்தவனை மேலும்மேலும் தகுதியுள்ளவனாக்குகிறது.

“அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர் களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்”–யோவான் 17:19. “ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்”–1 பேதுரு 1:22. “இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்”–2 கொரிந்தியர் 7:1.

இங்கு வேதாகமத்தின்மூலமாக பரிசுத்தமாக்கப்படுத்துதலைக் காண்கிறோம். இது வெறுமனே ஒரு காட்சியல்ல, அல்லது வெளிப்படையாக நடைபெறும் பணியுமல்ல. மாறாக சத்திய வாய்க்காலின்மூலமாகப்

பெற்றுக்கொண்ட பரிசுத்தமாகுதலாகும். இதயத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாழ்க்கையிலே செயல்முறைப்படுத்தப்பட்ட சத்தியமாகும்.

சத்தியத்தின் ஒரு பகுதியை பின்புறமாகத் தள்ளிப்போடுகிறவர் களுக்கு வேதாகமத்தின் மூலமாக பரிசுத்தமாகுதல் கிடைப்பதில்லை. தேவனுடைய வார்த்தையிலே போதுமான வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே எவரும் தவறுசெய்ய அவசியமில்லை. ஒரு மனிதனாக எண்ணிப்பார்க்கப்பட்ட இயேசு பூரணராக இருந்தார். எனினும், கிருபையில் வளர்ந்தார். "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்"—லூக்கா 2:52. மிகவும் பூரணமான ஒரு கிறிஸ்தவனுங்கூட தேவனைப்பற்றிய அறிவிலும் அன்பிலும் தொடர்ந்து பெருக முடியும்.... பரிசுத்தமாக்கப்படுதல் ஒரு கணத்திலோ ஒரு மணி நேரத்திலோ அல்லது ஒரு நாளிலோ நடைபெறுகின்ற வேலை அல்ல. அது கிருபையிலே தொடர்ந்து வளரும் வளர்ச்சியாக இருக்கிறது.... சாத்தானும் உயிரோடிருந்து சுறுசுறுப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறதினால், அவனை எதிர்த்துப் போராடத்தக்கதாக ஒவ்வொரு நாளும் உதவியை நாடி, தேவனிடத்தில் ஊக்கமாக மன்றாடி கதறவேண்டும். சாத்தான் ஆளுகைசெய்யும் காலம்வரை, நம்மால் அடக்கப்படவேண்டிய சுயமுமுண்டு, மேற்கொள்ளப்படவேண்டிய தொடரும் பாவங்களும் உண்டு. இந்த முயற்சிகளையெல்லாம் இங்கு நிறுத்திவிடலாம் என்று சொல்லத்தக்கதான இடமும் கிடையாது; நாம் முற்றிலும் தேறிவிட்டோம் எல்லாம் அடைந்தாயிற்று என்று துல்லியமாகச் சொல்லத்தக்கதான ஒரு அளவிற்கான படிநிலையும் கிடையாது....

கிறிஸ்தவனின் வாழ்க்கை, நிலையாக—தொடர்ந்து, அணியிலே முன்னேறிச் செல்வதைப்போன்றதாகும். இயேசு தமது மக்களைப் புடமிடுபவராகவும் சுத்திகரிக்கிறவராகவும் இருக்கிறார். அவர்களிலே தமது சாயல் முழுமையாகப் பிரதிபலிக்கும்பொழுது, அவர்கள் பூரணராகவும் பரிசுத்தராகவும் உயிர்த்தெழுதலைப்பெற ஆயத்தமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ★

# சாத்தானின் உபாய தந்திங்களைக்குறித்து விழிப்போடிருங்கள்!

**“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே” –1 பேதுரு 5:8,9.**

ஒவ்வொரு ஆத்துமாவும் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும். நமது வழித்தடத்தில் எதிராளி வந்துகொண்டிருக் கிறான். ஊன்றிய கவனத்துடன் நன்கு மறைத்துவைக்கப்பட்ட தேர்ச்சி நலம் வாய்ந்த ஒரு கண்ணியை வைத்து, நீங்கள் எதிர்பாராத நிலையில் உங்களைப் பிடித்துக்கொள்ளாதபடி, எச்சரிக்கையுடன் தீவிர முயற்சியோடுகூடிய விழிப்புள்ளவர்களாக இருங்கள். மெத்தனமாகவும் அக்கறையற்றும் இருக்கிற நபர்கள் இரவிலே வருகின்ற திருடனைப்போல கர்த்தரின் நாள் தங்கள்மேல் வந்துவிடாதபடி, எச்சரிக்கையோடு இருக்கட்டும். அநேகர் கிறிஸ்துவின் நுகத்தைப் புறம்பே தள்ளிப்போட்டு, தாழ்மையின் பாதையைவிட்டு விலகி, அலைந்து திரிந்து, வழக்கத்திற்கு மாறான பாதைகளில் நடப்பார்கள். குருட்டுத்தனமுடையவர்களாக—தடுமாறிய நிலையில்—தேவபட்டணத்திற்கு அழைத்துச்செல்லுகின்ற அந்த ஒடுக்கமான பாதையைவிட்டு விலகிச்சென்றுவிடுவார்கள்....

மேற்கொள்கின்ற எந்த நபரும் விழிப்போடிருக்கவேண்டும். உலகப்பற்று நிறைந்த சிக்கல்கள், பிழைகள், மூடப்பழக்கங்கள் ஆகியவைகளைக்கொண்டு சாத்தான் கிறிஸ்துவின் பின்னடியார்களை அவரிடமிருந்து தன்பக்கம் இழுக்க முயற்சிக்கிறான். வெளிப்படையாகத் தெரிகின்ற ஆபத்துகளையும் ஒவ்வாத ஆபத்தான நடக்கைகளையும் தவிர்த்துவிடுவது போதாது. சுயத்தை வெறுக்கும், தியாகஞ்செய்யும்

பாதையில் நடந்துகொண்டு, கிறிஸ்துவின் பக்கத்தில் நம்மை நெருக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு சத்துருவின் நாட்டிலே நாம் இருக்கிறோம். பரலோகத்தில் இருந்து தள்ளிவிடப்பட்டவன் மகா வல்லமையோடு கீழே இறங்கி வந்திருக்கிறான். எண்ணிப்பார்க்கமுடிந்த ஒவ்வொரு சூழ்ச்சியின் மூலமும் உபாயத்தின் மூலமும் ஆத்துமாக்களை சிறைபிடிக்கும்படி அவன் தேடியலைகின்றான். தொடர்ந்து நாம் விழிப்போடு இல்லாவிடில், அவனது எண்ணிலடங்காத வஞ்சகங்களுக்கு எளிதில் இறையாகிவிடுவோம்.

இப்போது அனைத்தும் ஒரு பக்திவிநயம் என்னும் உடையை அணிந்துகொண்டிருக்கிறது. இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தை விசுவாசிக்கின்ற அனைவரும் இதை நுணுக்க விபரங்களுடன் விளங்கிக்கொள்ளவேண்டும். தேவனுடைய நாள் என்ற காரியத்தில் தொடர்புவைத்தவர்களாக நாம் செயலாற்றவேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் (அனுப்பும் தண்டனைகள்) இந்த உலகின்மீது விழவிருக்கின்றன. நாம் இந்த மகா நாளிற்காக ஆயத்தமாகிக் கொண்டிருப்பது அவசியமாகும்.

நமது காலம் மிகவும் விலையேறப்பெற்றது. எதிர்கால நித்திய வாழ்விற்காக ஆயத்தமாவதற்கு நமக்கு மிகமிகக் குறைவான நாட்களே தவணையின் காலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்செயலாக நிகழ்கின்ற இயக்கங்களிலே செலவிட நமக்கு நேரமில்லை. தேவனுடைய வார்த்தையை மேலோட்டமாகப் படிப்பதற்கு நாம் பயப்படவேண்டும். (ஆழ்ந்து படிக்கவேண்டும்).

உங்களது முழு ஆர்வமும் சத்தியத்திலும், இந்தக் காலத்திலே செய்யப்படவேண்டிய ஆயத்தப்பணியிலும் இருக்குமானால், சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்படுவீர்கள். சாவாமைக்கான தகுதியையும் பெற்றுக்கொள்வீர்கள். பிழையின்றி, கறையின்றி, திரையின்றி அல்லது அதைப்போன்ற எதுவுமின்றி தேவசிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும்வரை சத்தியத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவரிடமும் முழுமையான வேலை நடைபெறவேண்டும். தூய்மைப்படுத்துகின்ற அந்த வழிமுறைக்கு நீங்கள் ஒப்புக்கொடுப்பீர்களானால், தேவன் உங்களைச் சுத்திகரிப்பார். ★

# ஒவ்வொரு சோதனைக்கும் எதிரான விளக்கச்சான்று!

**"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது"**

**—ரோமர் 6:13,14.**

ஒரே ஒரு வல்லமை மாத்திரமே மனிதனின் இருதயங்களில் இருக்கும் தீமையின் பிடியை உடைக்கமுடியும். அது, இயேசு கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய வல்லமை.... நமது விழுந்துபோன தன்மைகளை எதிர்த்துக் கீழ்ப்படுத்த அவரது கிருபை மாத்திரமே நமக்கு பெலன் தரமுடியும்.

நமது மீட்பிற்குத் தேவைப்பட்ட தியாகத்தின் எல்லையற்ற மதிப்பு, பாவம் எவ்வளவு பேரச்சம் கொடுக்கக்கூடிய தீமை என்பதை வெளிப்படுத்துகிறது. பாவத்தினாலே முழு மானுடமும் ஒழுங்கு குலைந்து, உள்ளம் தாறுமாறாகி, மனதின் சிந்தனை சீர்கெட்டுப்போயிற்று. ஆத்தும சக்திகளை பாவம் கீழ்த்தரமாக்கிப்போட்டது. வெளியே இருக்கும் சோதனைகள் இதயத்தினின்று ஒத்திசைவான பதில் தொனியைப் பெறுகின்றது. உணர்விழந்த நிலையிலுங்கூட பாதங்கள் தீமையை நோக்கித் திரும்புகின்றன. நமக்காகச் செய்யப்பட்ட தியாகம் எப்படி முழுமையானதோ அதைப்போன்று, பாவ அழுக்குகளினின்று நாம் மீட்டெடுக்கப்படுவதும் முழுமையானது. பிரமாணம் மன்னிக்கிற எந்த துன்மார்க்கச் செயலும் கிடையாது. அதின் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளுகிற எந்த அநீதியும் கிடையாது. கிறிஸ்துவின் வாழ்க்கை பிரமாணத்தின் ஒவ்வொரு கொள்கையின் முழு நிறைவேறுதலாகவும் இருந்தது. "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10) என்று இயேசு கூறினார். கிழ்ப்படிதலிற்கும் சேவைக்குமான நமது படித்தரம் அவரது வாழ்க்கையே.

நமது பற்றுறுதிக்குப் பதிலாக இந்த உலகின் இராஜ்யங்களை அளிக்க முன்வந்து, கிறிஸ்துவின் முன்னால் வைத்த அதே சோதனைகளை இன்று நமக்கு முன்பாகவும் சாத்தான் வைக்கிறான். நாம் ஆனால் விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமான இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது, சாத்தானின் சோதனைகள் வல்லமையற்றுப் போகின்றன. நம்மைப்போல எல்லாவகைகளிலும் சோதிக்கப்பட்டும் பாவமற்றவராக இருந்த அவரது புண்ணியங்களை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ளும் நபரை அவன் பாவஞ்செய்யவைக்க முடியாது.

பாவத்தை வெளியேற்றுவது ஆத்துமா தன்னில்தானே செய்யும் ஒரு செயலாகும். சாத்தானின் கட்டுப்பாட்டிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ளத்தக்கதான எந்த வல்லமையும் நம்மிடத்தில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் பாவத்தினின்று விடுபடவேண்டுமென்று நாம் வாஞ்சிக்கும்பொழுது, நமது அந்த மாபெரும் தேவையை உணர்ந்து, நம்மில் இல்லாத—நமக்கு மேலே இருக்கின்ற—அந்த வல்லமைக்காக மன்றாடிக் கதறும்போது, ஆத்துமாவின் வல்லமைகள் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக சக்தியினால் நிறையப்பெறுகிறது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக, அந்த சித்தத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறது.

சீர்கேடு அடைந்த இந்தக் காலத்தின் அருவருப்புகளுக்கு மத்தியில், திடமாக நின்று நற்கிரியைகளைச் செய்கின்ற மிகுந்த ஆர்வமுள்ள ஒரு மக்கள் கூட்டம் தேவனுக்காக இருக்கும். தெய்வீக வல்லமையை பற்றிப்பிடித்திருக்கும் அனைத்துச் சோதனைகளுக்கும் எதிராக, விளக்கச்சான்றுகளாக நிற்கும் ஒரு கூட்டம் இருக்கும். ★

# தவணையின் காலம் முடிவடையாமல் ஏன் தாமதித்து நிற்கின்றது?

**“தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்” –2 பேதுரு 3:9.**

கிறிஸ்துவின் சாயலுக்குப் பதிலாக, ஒரு கூட்டமாக உலகத்தோடு உலகமாக ஒன்றிப்போகின்ற ஆபத்தில் நாம் இருக்கிறோம் என்பது எனக்குக் காட்டப்பட்டது. இப்பொழுது, நிததியமான உலகின் அந்த எல்லையோரத்திற்கு அருகிலே இருக்கின்றோம். ஆனால் ஆத்துமாக்களின் எதிராளியான சாத்தான் உலக முடிவின் நேரத்தை மேலும் அதிகமாகத் தள்ளிப்போடத்தக்கதாக நம்மை வழிநடத்துகிறான். மகா வல்லமையோடும மகிமையோடும் வானத்தின் மேகங்களிலே இரண்டாம் வருகையிலே காணப்படப்போகின்ற மீட்பருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்றும், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறோம் என்றும் சொல்லிக்கொண்டிருப்பவர்களை நாம் எண்ணிப்பார்க்கக்கூடிய எத்தகைய வழியிலாவது கடும் முயற்சியோடு சாத்தான் தாக்குகிறான். அந்த தீய நாளை மேலும் தள்ளிப்போடவும், உலகத்தின் ஆவியைப்பெற்று அதன் வழக்கங்களை பிரதிபலிக்க எத்தனை பேரை நடத்த முடியுமோ அத்தனைபேரையும் நடத்துவான். சத்தியத்தை அதிகமாகப் பின்பற்றுகிறவர்களாகத் தங்களை சொல்லிக்கொண்டிருக்கும் மக்களது இதயங்களையும் சிந்தனைகளையும் உலகத்தாரின் ஆவி அடக்கியாண்டு கொண்டிருப்பதை நான் கண்டபோது அதிர்ச்சியடைந்தேன்.

மிகக் குறுகிய காலமே உள்ளது என்பதை சிந்தித்தவர்களாக, ஒரு மக்கள் கூட்டமாக நாம் விழிப்போடு ஜெபிக்கவேண்டும். நமக்கு முன்பாக இருக்கும் அந்த மாபெரும் சம்பவத்திற்கான ஆயத்தமாகும் பக்திவிநயமான பணியினின்று விலகிச்செல்லத்தக்கதாக எக்காரணத்திலும் நாம் நம்மை

அனுமதிக்கக்கூடாது. காலம் நீட்டிக்கப்பட்டதுபோன்று தோற்றம் அளிப்பதால் அநேகர் தங்களது வார்த்தைகளைக்குறித்தும் செயல்களைக்குறித்தும் அக்கறையற்றவர்களாக மாறிவிட்டார்கள். தங்களது ஆபத்தை அவர்கள் இன்னும் உணரவில்லை. எதிர்காலத்திலே பெறப்போகும் அந்த நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி தங்களது குணங்களைச் சரியாக அமைக்க நேரம் கொடுக்கும்படி தேவனுடைய இரக்கத்தினால் தவணையின் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து புரிந்துகொள்ளக்கூடாத நிலையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு கணமும் மிகவும் உயர்ந்த மதிப்பு உடையது. தங்களுக்கான இன்பத்தைப்பற்றி ஆராய்வதற்கும், இந்தப் பூமியிலே சஞ்சரிப்பவர்களாக மாறுவதற்கும் அந்நேரம் கொடுக்கப்படாமல், தங்களது சொந்த குணங்களிலுள்ள ஒவ்வொரு குறையையும் மேற்கொள்ளவும், மற்றவர்கள் பரிசுத்தத்தின் அழகைக் காண, தங்களது முன்மாதிரியினாலும் சொந்த முயற்சியினாலும் அவர்களுக்கு உதவும்படிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. துரிதமாக நிறைவேறிக்கொண்டிருக்கிற தீர்க்கதரிசனங்களின் வழித்தடங்களை அறிந்த பரிசுத்த விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள ஒரு மக்கள் கூட்டம் தேவனுக்கு இந்த பூமியிலே உண்டு. கிறிஸ்து இரண்டாம்முறை வானத்திலே தோன்றும்போது, கலியாண வஸ்திரம் இல்லாதவர்களாகக் காணப்படாதபடி இத்தகைய மக்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து தங்களது ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்துபவரை நாடித்தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

தீர்க்கதரிசனத்திலே முன்னுரைக்கப்பட்ட அடையாளங்கள் நம்மைச் சுற்றிலும் துரிதமாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. இந்தக் காரியம் ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்துவின் பின்னடியாரையும் மிகவும் ஆர்வத்தோடு செயலில் ஈடுபடத்தக்கதாக விழிப்படையச்செய்ய வேண்டும். ★

# உங்களது வழக்கு விசாரணைக்கு வரப்போகின்றது!

**"மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்"**

**–வெளிப்படுத்தல் 14:7.**

நமது மகா பிரதான ஆசாரியர் பரலோக ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் 1844–ல் நுட்ப நியாய விசாரணையை ஆரம்பிக்கத்தக்கதாக பிரவேசித்தார்.

நியாயத்தீர்ப்பின்போது, குறித்துவைக்கப்பட்டிருக்கும் பதிவேடுகள் திறக்கப்படும் வேளையில், இயேசுவில் விசுவாசம் வைத்திருந்த அனைவருடைய பெயர்களும் பரிசீலனைக்கு வரும். நமது வழக்கறிஞராகிய இயேசு, பூமியின்மீது முதன் முதலில் வாழ்ந்திருந்த மக்களிலிருந்து ஆரம்பித்து, ஒவ்வொரு தலைமுறையையும் சார்ந்த மக்களை வரிசையின்படிப் பார்த்து, இறுதியில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மிடத்தில் தமது பரிசீலனையின் வேலையை முடிப்பார். ஒவ்வொரு பெயரும் உச்சரிக்கப்படுகிறது. ஒவ்வொருவருடைய காரியமும் மிகவும் நுணுக்கமாக ஆராயப்படுகிறது. பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெயர்கள் தள்ளிவிடப்படுகின்றன. மனந்திரும்பாத—மன்னிக்கப்படாத பாவங்கள் எவர்களுடைய பதிவேட்டிலாவது இன்னும் மீந்திருந்தால் அவர்களது பெயர்கள் ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டுப்போகும்.

நாம் இப்பொழுது பாவ நிவாரண நாள் எனப்படும் அந்த மகா நாளிலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நிழலான அந்த ஆராதனையில், மகா பிரதான ஆசாரியர் இஸ்ரவேலருக்காகப் பாவ நிவாரணஞ் செய்துகொண்டிருக்கும்பொழுது, மக்கள் தங்கள் ஜனத்தின் மத்தியிலிருந்து அறுப்புண்டுபோய்விடாதபடி, ஆண்டவருக்குமுன்பாக தங்களைத்தாழ்த்தி,

மனந்திரும்பத்தக்கதாக தங்களது ஆத்துமாக்களை ஒடுக்கவேண்டியது அனைவருக்கும் அவசியமாயிருந்தது. அதைப்போலவே ஜீவ புத்தகத்திலே தங்களது பெயர்கள் நீக்கப்படாமல் இருக்கவேண்டும் என்று நினைக்கிற ஒவ்வொருவரும், அவர்களது தவணையின் காலத்தில், மீந்திருக்கும் சில நாட்களுக்குள்ளாக, உண்மையான மனந்திரும்புதலினால் பாவத்திற்கு மனம் வருந்தி, தேவனுக்கு முன்பாகத் தங்களது ஆத்துமாக்களை ஒடுக்கவேண்டும். இதயத்தை மிகவும் உத்தமமாக ஆழ்ந்து உய்த்து ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம்.... ஆளுகை செய்வதற்காக முயன்றுகொண்டிருக்கும் தீய மனப்பாங்குகளை அடக்கியான விரும்புபவர்களுக்கு முன்பாக ஊக்கமாக நடைபெறவேண்டிய ஒரு போராட்டம் உண்டு. ஆயத்தமாகின்ற வேலை ஒவ்வொருவருக்கும் உரிய தனிப்பட்ட வேலையாகும். நாம் குழுக்களாக இரட்சிக்கப்படுகிறதில்லை. ஒரு நபருடைய பரிசுத்தமும் தேவ பக்தியும், இத்தகைய குணங்கள் இல்லாதிருக்கின்ற வேறொருவருடைய நிலையை ஈடுசெய்துவிடாது ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டு, கறைதிறை எதுவுமில்லாதவர் களாகக் காணப்படவேண்டும்.

பாவத்திற்காக உண்மையிலேயே மனவேதனை அடைந்து தங்களுக்கான பாவ நிவாரண பலி கிறிஸ்துவின் இரத்தமே என்பதை விசுவாசத்தின்மூலமாக உரிமை கோருபவருடைய பெயர்களுக்கு எதிராக, பரலோகப் பதிவேடுகளிலே மன்னிப்பு என்ற வார்த்தை எழுதப்பட்டிருக்கும். கிறிஸ்துவுடைய நீதிக்குப் பங்காளியாக இருக்கிறபடியால், தேவனுடைய பிரமாணத்திற்கு ஒத்திசைவாக அவர்கள் குணங்கள் காணப்படுகின்றன. அவர்களுடைய பாவங்கள் கிறுக்கப்பட்டுப்போகும். அவர்கள் நித்தியஜீவனைப் பெறத் தகுதியுடையவர்களென எண்ணப்படுவார்கள். “நான் நானே உன் மீறுதல்களை என்னிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்” என்று ஆண்டவர் உறுதியாகக் கூறுகின்றார். ★

# நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு படித்தரம்!

**"நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" —எபேசியர் 6:11.**

தேவனுடைய ஊழியத்தில் நடைபெறும் ஒவ்வொரு எழுப்புதலிலும் தீமையின் பிரபு விழிப்படைந்தவனாக மிகவும் தீவிரத்துடன் செயல்படுகின்றான். கிறிஸ்துவிற்கும் அவரது பின்னடியார்களுக்கும் எதிராக இருக்கின்ற ஒரு இறுதிப் போராட்டத்தில் முடிகின்ற அளவிற்கு இப்பொழுது முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். வெகுசீக்கிரத்தில் அவனது கடைசி மாபெரும் வஞ்சகம் வெளிப்படவிருக்கிறது. அந்திக்கிறிஸ்து அவனது அற்புதமான செயல்களை நமக்கு முன்பாக நடத்திக்காட்டுவான். உண்மையும் பொய்யும் ஏறக்குறைய ஒன்றுபோலக் காணப்படுவதால் இரண்டிற்குமுரிய வேறுபாட்டைப் பிரித்துக் கண்டறிவது கடினம். வேதவாக்கியங்களைக்கொண்டு மாத்திரமே வேறுபாட்டைக் கண்டறிய முடியும். ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு அற்புதமும் அவைகள் கொடுக்கும் சாட்சியின்மூலமாக பரிசோதிக்கப்பட வேண்டும்....

தங்களது உள்ளங்களை வேத சத்தியத்தால் உரமூட்டி வலுப்படுத்திக்கொண்டவர்கள் மாத்திரமே அந்தக் கடைசி மாபெரும் போராட்டத்தினூடாக நிலைத்துநிற்க முடியும். ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் பின்வரும் ஆராய்ச்சியைச் செய்கின்ற பரீட்சை வந்து சேரும். மனிதனுக்குக் கீழ்ப்படிவதைவிட நான் தேவனுக்குக் கீழ்ப்படிவேனா? தீர்மானிக்கவேண்டிய வேலை இப்பொழுதே நெருங்கி வந்துவிட்டது. தேவனுடைய மாற்றமுடியாத—நிலையான வார்த்தை என்னும் கன்மலையின்மீது நமது பாதங்கள் ஊன்றப்பட்டிருக்கிறதா? தேவனுடைய கற்பனைகளுக்கும்

இயேசுவின் மேலுள்ள விசுவாசத்திற்கும் பாதுகாப்பாக திடமாக நிற்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா?....

வேதவாக்கியங்களினின்று எது சத்தியம் என்பதைக் கற்றறிந்து, பின்னர் அந்த வெளிச்சத்திலே நடந்து, தனது முன்மாதிரியை மற்றவர்களும் பின்பற்றத்தக்கதாக உற்சாகமூட்டுவதே பகுத்தறிவுள்ள ஒவ்வொரு நபரும் செய்யவேண்டிய முதலான—தலையாய கடமையாகும். வேதத்தைத் தீவிர முயற்சியோடு ஒவ்வொரு நாளும் படிக்கவேண்டும். வேதவாக்கியங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு சிந்தனையை மதிப்பீடு செய்யவேண்டும். தேவனுக்கு முன்பாக நாம் நமக்காக உத்தரவு சொல்லவேண்டியதிருப்பதால் நமக்கான கருத்துக்களை நாம் தெய்வீக உதவியோடு அமைக்கவேண்டும்....

இயேசு தமது சீடர்களுக்கு: "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26) என்று வாக்குறுதி கொடுத்தார். ஆபத்தான கட்டத்திலே தேவனுடைய ஆவியானவர் நமது ஞாபகத்திற்குக் கொண்டுவரத்தக்கதாக கிறிஸ்துவின் போதனைகள் முன்னரே நமது மனதில் சேமித்துவைக்கப்பட்டிருக்க வேண்டும்....

சோதனை நேரம் வரும்பொழுது, தேவனுடைய வார்த்தையை தங்களது வாழ்விற்கான சட்டமாக வைத்திருந்தவர்கள் இன்னார் என்பது வெளிப்படும்.... உபத்திரவம் கிளறிவிடப்படும்பொழுது அரைமனதோடு இருப்பவர்களும் மாயக்காரர்களும் தடுமாறி விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்தவன் கன்மலையைப்போல் திடமாக நிற்பான். செழிப்பான நாட்களைக் காட்டிலும், அவனது விசுவாசம் வலுவானதாகவும் அவனது நம்பிக்கை பிரகாசமானதாகவும் இருக்கும். ★

மார்ச் 28

# வேதவாக்கியங்களே நமது பாதுகாப்பு!

**“இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?” —எபிரெயர் 1:14.**

தேவனுடைய மக்கள் அவர்மீது கொண்ட உறுதிப்பாட்டை எவ்வளவு காலம்வரை பாதுகாத்துக்கொள்கிறார்களோ, எவ்வளவு காலம்வரை ஜீவனுள்ள விசுவாசத்தோடு இயேசுவைப்பற்றிப் பிடித்துக்கொள்கிறார்களோ, அவ்வளவு காலத்திற்கு அவர்கள் பரலோக தூதர்களின் பாதுகாப்பிற்கடியில் இருப்பார்கள். அவர்களுக்கு அழிவை உண்டுபண்ணத்தக்கதாக சாத்தான் நரக வித்தைகள் அனைத்தையும் அவர்கள்மீது செயல்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டான். ஆனால் பாவத்தினாலே கிறிஸ்துவிடமிருந்து தங்களை விலக்கிக்கொள்பவர்களோ மாபெரும் ஆபத்தில் இருக்கிறார்கள்....

இதற்கு முன்னால் இருந்த காலங்களைவிட, ஆத்துமாக்ககளுக்கான வாழ்க்கை என்னும் விளையாட்டில் சாத்தான் அதிகத் தீவிரமாக ஈடுபட்டு விளையாடிக்கொண்டிருக்கிறான். நாம் தொடர்ந்து நிலையான முறையில் எச்சரிக்கையாக இராவிட்டால், பெருமை, சுயத்தின்மீது நேசம், உலக ஆசை, மற்றும் பலவித தீயகுணங்களை நமது உள்ளத்தில் நிலைநாட்டிவிடுவான். மேலும், ஒவ்வொரு சாதகமான உபாய தந்திரங்களையும் பயன்படுத்தி, தேவனிடத்திலும் அவரது வார்த்தையில் காணப்படும் சத்தியங்களிலும் கொண்டிருக்கும் விசுவாசத்தை நிலைகுலையச்செய்துவிடுவான். தேவனுடைய காரியங்களிலே ஆழ்ந்த அனுபவம் நமக்கு இராவிட்டால், அவரது வார்த்தையைப்பற்றிய முழுமையான அறிவு நமக்கு இராவிட்டால் எதிராளி கொண்டுவரும் பிழையான காரியத்தினாலும் போலியான வாதங்களினாலும் நாம் அழிந்துபோகத்தக்கதாக ஏமாற்றப்பட்டு விடுவோம். பொய்யான கொள்கைகள் அநேகரது அஸ்திவாரத்தையே ஆட்டங்காணச் செய்துவிடும். ஏனெனில் அவர்கள் பிழையினின்று சத்தியத்தை தெளிவாகக் கண்டறியக் கற்றுக்கொள்ளவில்லை. வேதவாக்கியங்களைத் தீவிர

முயற்சியெடுத்துப் படிப்பதிலும், நமது விசுவாசத்திற்கான காரணத்தை அறிவுப்பூர்வமாக நன்றாகப் புரிந்துகொண்டிருத்தலிலும், தெரிந்த ஒவ்வொரு கடமையையும் உண்மையும் உத்தமமுமாகச் செய்வதிலுந்தான் சாத்தானின் சூழ்ச்சிகளுக்கு எதிரான ஒரே பாதுகாப்பு இருக்கிறது. தெரிந்த ஒரு பாவத்தில் உழன்றுகொண்டிருப்பது பெலவீனத்தையும் இருளையும் ஏற்படுத்தி, நம்மைக் கொடிய சோதனைக்கு ஆளாக்கிவிடும்....

இயேசுவிற்கு நமது இதயக் கதவைத் திறந்துகொடுத்து, சாத்தான் நுழையாதபடி ஒவ்வொரு வழியையும் அடைத்துக்கொண்டிருக்கிறோமா? நாம் கிறிஸ்துவின் நீதியிலே நிற்கத்தக்கதாக தெளிவான வெளிச்சத்தையும் மிகப்பெரும் வல்லமையையும் ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொண்டிருக்கிறோமா? அனைத்து தன்னலங்களையும் எடுத்துப்போட்டு, இதயங்களை வெறுமையாக்கி, பரலோகத்தினின்று பின்மாரியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக சுத்திகரித்து, ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோமா?....

வெற்றிகொள்வது என்பது ஒரு மாபெரும் பணியாகும். அந்தப் பணியை ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் எடுத்து நடத்துவோமா? அவ்வாறு செய்யாவிடில் நமது "அழுக்கான உடைகள்" நம்மைவிட்டு அகற்றப்படாது. அவைகள் நம்மிடமிருந்து வன்முறையிலே கிழித்து எடுக்கப்படுமென்று நாம் ஒருபோதும் எதிர்பார்க்கத் தேவையில்லை. அவைகள் நம்மைவிட்டு அகற்றப்படவேண்டும் என்ற ஒரு விருப்பத்தை நாம் முதலாவதாகக் காட்டவேண்டும். கிறிஸ்துவின் இரத்தத்தின் புண்ணியங்களைச் சார்ந்தவர்களாக நம்மைவிட்டு பாவத்தை அகற்ற முயற்சி செய்யவேண்டும். அப்போது, அந்த இக்கட்டு வருகின்ற நாளிலே சத்துரு நம்மை நெருக்கும்போது, நாம் தூதர்கள் மத்தியிலே நடப்போம். ★

# பாதுகாப்பிற்காக தேவன் கொடுக்கும் வாக்குறுதி!

**“கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்” –2 பேதுரு 2:9.**

நமக்கு முன்பாக இருக்கின்ற இக்கட்டுக்காலத்திலே தேவனுடைய பொறுமையின் வார்த்தையைக் காத்துக்கொண்ட அனைவர்மேலும் தேவன் கொடுக்கும் பாதுகாப்பின் சின்னம் வைக்கப்படும். தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு மேகஸ்தம்பமானது உக்கிரகோபத்தையும் பயங்கரத்தையுமே எடுத்துக்கூறும். ஆனால் அவரது கற்பனையை கைக்கொண்டவர் களுக்கோ அது ஒளியும் இரக்கமும் விடுதலையுமாக இருக்கும். “கலகக்குணம் உடையவர்களை அடிக்கின்ற அதே பலத்த புயம், உத்தமமானவர்களை விடுதலைசெய்யத்தக்க வல்லமையுள்ள புயமாக இருக்கும்.” அனைத்து உத்தமமான நபர்களும் நிச்சமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்....

உலக வரலாற்றின் இறுதிக் காட்சிகளிலே நீங்கள் என்ன பகுதியை ஏற்றுச் செயல்புரியப்போகின்றீர்கள்.... பரலோகத்திலும் பூலோகத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாபெரும் ஆயத்தப்பணியை உணருகிறீர்களா?... நம்முடைய உலகின் ஒவ்வொரு துன்பத்திற்கும் காரணமாக இருக்கும் பாவத்தில் ஒருவரும் இப்பொழுது தலையிடவேண்டாம்.... உங்களது ஆத்துமாவின் முடிவு நிச்சயமற்ற ஒன்றின்மீது தொங்கிக்கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் முற்றிலும் ஆண்டவரின் பக்கத்தில் இருப்பதை அறியுங்கள். உத்தமமான இதயங்களினின்றும், நடுங்கும் உதடுகளினின்றும் “யார் நிலைநிற்கக்கூடும்” என்ற கேள்வி வெளிவரட்டும். தவணையின் காலத்தில் அருமையான இந்தக் கடைசி மணிவேளையில் உங்கள் குணம் என்னும் கட்டிடத்தில் மிகச் சிறந்த மூலப்பொருட்களை வைத்து, கட்டிக்கொண்டிருக்கிறீர்களா?

ஒவ்வொரு கறையினின்றும் உங்கள் ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா? வெளிச்சத்தின்படி நடக்கிறீர்களா? நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு இசைவாக உங்களது செயல்கள் இருக்கின்றனவா?

தேவனுடைய கிருபையின் மென்மைப்படுத்துகின்ற அடக்கியாளுகின்ற செல்வாக்கு உங்களில் செயல்புரிந்து கொண்டிருக்கிறதா?... தங்கள் பாவங்களிலே அழிந்துகொண்டிருக்கிற ஜனங்களுக்கு உங்களது ஒளியைப் பரவச்செய்து, வெளிச்சமடையச் செய்கிறீர்களா? பிரமாணங்களை தங்களது கால்களின்கீழ்போட்டு மிதித்துக்கொண்டிருப்பவர்களுக்குமுன்பாக, அந்த பிரமாணங்களின் பாதுகாப்பிற்காக, ஆதரவு கொடுப்பதற்காக, உறுதியாக நிற்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரிகின்றதா?

ஓரளவிற்கு முறைப்படியான ஓர் விசுவாசியாக இருந்து கொண்டே, நித்திய ஜீவனை இழந்துபோகத்தக்கதான குறையுடைய வர்களாகவும் இருப்பது சாத்தியமே. வேதாகமத்தின் சில கட்டளைகளின்படி நடந்து கிறிஸ்தவர்களாக மதிக்கப்பட்டிருந்தாலும் கிறிஸ்தவ குணத்திற்கு அவசியமான தகுதிகள் குறைவாகக் காணப்பட்ட காரணத்தால் அழிவைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படுவது சாத்தியமே.... இரக்கம் இன்னமும் தாமதித்து நிற்கும்பொழுது, நமக்காக மீட்பர் பரிந்துபேசிக்கொண்டிருக்கும் பொழுது, நித்தியத்தை அடைந்துகொள்ளத்தக்கதான முழுமையான பணியைச் செய்வோம்.

அந்த மாபெரும் நெருக்கடி நேரம் நமக்கு முன்பாக இருக்கிறது. அந்த காலக்கட்டத்தின் துன்பங்களையும் சோதனைகளையும் சந்திக்கவும் அதற்கான கடமைகளைச் செய்யவும் விடாமுயற்சியோடுகூடிய விசுவாசம் தேவைப்படுகிறது. அப்போதுதான், மகிமையாக வெற்றிசிறக்க முடியும். விழிப்போடிருக்கின்ற, ஜெபித்துக்கொண்டிருக்கின்ற, வசுவாசத்தோடிருக்கின்ற, ஒரு ஆத்துமாவை சத்துருவால் கண்ணியில் அகப்படுத்தமுடியாது. ★

# ஆழமான—உயிர்த்துடிப்புள்ள ஓர் அனுபவம்!

**"முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்... இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்" —எபிரெயர் 2:3,4.**

ஆண்டவரின் வருகையை நாம் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கக்கூடாது என்பதை நான் கண்டேன். "பூமியின்மீது வந்துகொண்டிருக்கிற காரியங்களுக்காக ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள். உங்களது விசுவாசத்திற்கு ஏற்றபடி உங்கள் செயல்கள் இருப்பதாக" என்று தூதன் சொன்னான். நமது மனம் தேவனில் நிலைத்திருக்கவேண்டும். நமது செல்வாக்கு தேவனுக்காகவும் அவரது சத்தியத்திற்காகவும் பேசுவதாக அமையவேண்டும் என்பதை நான் கண்டேன். நாம் கவனக்குறைவுடன் அக்கறையற்றவர்களாக இருந்துகொண்டு, தேவனை கனம்பண்ண முடியாது.... நமது மீட்பைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றவர்களை இரட்சிப்பதற்கும் நாம் ஊக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். அனைத்து முக்கியத்துவமும் இதற்காகவே அளிக்கப்படவேண்டும். இதைத்தவிர, அனைத்துக் காரியங்களும் இரண்டாவது இடத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

பரலோகத்தின் அழகை நான் கண்டேன். தூதர்கள் இயேசுவிற்கு துதியையும் கனத்தையும் மகிமையையும் செலுத்தி, மகிழ்ச்சி பொங்கப் பாடுவதை நான் கேட்டேன். அப்பொழுது, தேவகுமாரனின் ஆச்சரியமான அன்பைப்பற்றி ஓரளவு விளங்கிக்கொள்ள முடிந்தது. அவர் பரலோகத்தில் தனக்கிருந்த அனைத்து மேன்மைகளையும் மகிமையையும் விட்டுவந்தார். அவர் நமது இரட்சிப்பிலே மிகுந்த அக்கறை கொண்டிருந்தபடியால் மனிதன் அவர்மீது சுமத்திய எல்லா அவமானத்தையும் அவமதிப்பையும் பொறுமையோடு சகித்துக்கொண்டார். அவர் நமக்காக காயப்பட்டு அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டார். நாம் அவரது இரத்தத்தால் கழுவப்பட்டு, நமக்காக அவர் ஆயத்தஞ்செய்து கொண்டிருக்கிற மாளிகையிலே

அவரோடுகூட பிழைக்கும்படி உயிர்ப்பிக்கப்பட்டு, பரலோகத்தின் மகிமையையும் ஒளியையும் அனுபவிக்கவும் தூதர்களின் பாட்டைக் கேட்கவும் அவர்களோடு பாடவுந்தக்கதாக, நம்மை மரணத்தினின்று காப்பாற்றுவதற்காக, கடுந்துயரோடுகூடிய மரணத்தை அடையத்தக்கதாக கல்வாரிச் சிலுவையிலே நமக்காக அடிக்கப்பட்டார்.

பரலோகம் முழுவதுமே நமது இரட்சிப்பில் ஆர்வங்கொண்டிருக்கிறது என்பதை நான் கண்டேன். நாம் அக்கறையற்றவர்களாக இருக்கமுடியுமா? நாம் இரட்சிக்கப்படுவதும், அழிந்துபோவதும் ஏதோ ஒரு அற்ப காரியம் என்பதுபோல நினைத்து கவலையற்று இருக்கலாமா? நமக்காகச் செய்யப்பட்டிருக்கிற அந்த தியாகத்தை நாம் அலட்சியப்படுத்தலாமா?....

இந்த இருண்ட உலகத்தின் ஆபத்துகளினூடாகச்சென்று, பரலோகத்தை அடையத்தக்கதாக நமது பாதங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்கு நமக்கு ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தேவனுடைய உக்கிர கோபத்திலிருந்து நாம் எப்படி தப்பலாம் என்று நமக்குச் சொல்லுகிறது. மேலும் கிறிஸ்து நமக்காகப்பட்ட பாடுகளைப்பற்றியும் நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய சமூகத்தில் என்றென்றும் மகிழ்ச்சியை அனுபவிக்கத்தக்கதாக அவர் செய்த மாபெரும் தியாகத்தைப்பற்றியும் கூறுகிறது.

தேவ பக்தியின் ஒரு வேஷம் எவரையும் இரட்சிக்காது. அனைவரும் ஆழமான—ஜீவனுள்ள அனுபவமுடையவர்களாக இருக்கவேண்டும். இந்த அனுபவம் மாத்திரமே இக்கட்டுக்காலத்தில் அவர்களைக் காப்பாற்றும். பின்னர் அவர்களது பணி எந்த வகையைச் சார்ந்தது என்று பரிசோதிக்கப்படும். அது பொன்னாகவோ— வெள்ளியாகவோ—விலையேறப்பெற்ற கற்களாகவோ இருந்தால், தேவனுடைய கூடாரத்தின் மறைவிலே பாதுகாத்து வைக்கப்படும்.
★

# ஆயத்தமாகு! ஆயத்தமாகு!! ஆயத்தமாகு!!!

**"ஆகையால் இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" —ஆமோஸ் 4:12.**

இன்று கிறிஸ்து வானத்தின் மேகங்களின்மீது தோன்றுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவரைச் சந்திக்க... யார் ஆயத்தமாக இருப்பார்கள்? நாம் இப்பொழுது என்ன நிலையில் இருக்கின்றோமோ அதே நிலையில் மறுரூபமாகி பரலோக இராஜ்யம் போகின்றோம் என்று வைத்துக்கொள்வோம். தேவனுடைய பரிசுத்தவான்களோடு நாம் இணைந்திருக்க ஆயத்தமாக இருப்போமா? பரலோக இராஜாவின் பிள்ளைகளாக அவருடைய இராஜரீகக் குடும்பத்தோடு இசைந்துவாழ நாம் ஆயத்தமாக இருப்போமா? நியாயத்தீர்ப்பைச் சந்திக்க நீங்கள் என்ன ஆயத்தங்கள் செய்திருக்கிறீர்கள்? தேவனோடு ஒப்புரவாகிவிட்டீர்களா? நீங்கள் தேவனோடு சேர்ந்து ஊழியம் செய்துகொண்டிருக்கிறீர்களா? உங்களைச் சுற்றிலும் வாழ்பவர்கள், உங்களது வீட்டிலிருப்பவர்கள், உங்களது அண்டை அயலகத்தார் நீங்கள் சந்திக்க நேருகின்ற தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாத மக்கள் ஆகியோருக்கு உதவி செய்ய நாடுகின்றீர்களா? ... இராஜாவைச் சந்திக்க நாம் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறோமா?....

நாம் இருக்கும் இதே நிலையில் பரலோகத்திற்குள் அனுமதிக்கப்படுவது சாத்தியமானால் நம்மில் எத்தனைபேர் தேவனை நோக்கிப்பார்க்கமுடியும்? நம்மில் எத்தனைபேர் கறைதிறை எதுவுமில்லாதவர்களாக இருக்கிறோம்? நம்மில் எத்தனைபேர் ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களாக இருக்கிறோம்?.... "பதவி ஒருவனை மனிதனாக்குகிறதில்லை; உள்ளே உருவாகியிருக்கும்

கிறிஸ்துவே வாடாத ஜீவ கிரீடத்தைப் பெறுவதற்கு, ஒரு மனிதனை தகுதியுள்ளவனாக்க முடியும்.”

பூமியில் இருக்கும் மீதியானவர்கள் எனக்கு சுட்டிக்காட்டப்பட்டார்கள். ஏழு வாதைகளினின்று தப்பித்துக் கொள்வீர்களா?.... அப்படியானால் நீங்கள் வாழ்வதற்காகச் சாகவேண்டும். ஆயத்தமாகுங்கள்! ஆயத்தமாகுங்கள்!! ஆயத்தமாகுங்கள்!!! இப்பொழுது செய்திருப்பதைவிட, நீங்கள் ஒரு மாபெரும் ஆயத்தமுடையவர்களாக இருக்கவேண்டும். அனைத்தையும் ஆண்டவருக்கு தியாகஞ்செய்யுங்கள். சுயம் சொத்து அனைத்தையும் ஜீவ பலியாக அவரது பலிபீடத்தின்மேல் வையுங்கள். மகிமைக்குள் பிரவேசிக்க அனைத்தையும் கொடுக்கவேண்டும்.

கிறிஸ்து வல்லமையோடும் மகா மகிமையோடும் வரப்போகின்றார். அவர் தமது மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் வரப்போகின்றார்.... துன்மார்க்கர் அவரது பிரசன்னத்தை விட்டு விலகி ஓடும்பொழுது கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் இயேசுவைப் பார்த்து களிகூருவார்கள்.... அவரது உத்தமமான பின்னடியார்களுக்கு மிகத்தெரிந்த நண்பனாகவும், அன்றாட தோழனாகவும் இருந்திருக்கிறார். அவர்கள் நெருங்கிய தொடர்பும் நிலையான உறவும் கொண்டவர்களாக தேவனோடு வாழ்ந்திருக்கிறார்கள். ஆண்டவரின் மகிமை அவர்கள்மீது உதித்திருக்கிறது.... இராஜா தமது இராஜரீகத்தின் மகிமையிலும் மங்காத பிரகாசத்திலும் இருப்பதைக்கண்டு, இப்பொழுது அவர்கள் களிகூருகிறார்கள். பரலோக ஆன்மீகக் கூட்டுறவிற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்களது இருதயங்களிலே பரலோகத்தை வைத்திருக்கிறார்கள்.

நீங்கள் தேவனோடு எல்லாக் காரியத்திலும் சரியாக இருப்பீர்களானால் இன்று கிறிஸ்து வந்தாலும் ஆயத்தமாக இருப்பீர்கள். ★

# உலகிலுள்ள மாபெரும் ஊழியம்!

**"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" —மாற்கு 16:15**

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதுவே கிறிஸ்து தமது பின்னடியார்களுக்குக் கொடுத்த கட்டளையாகும். இதன் பொருளை சாதாரணமாக நோக்குமிடத்து எல்லாரும் போதகர்களாகவோ அல்லது இறைப்பணியாளர்களாகவோ அழைக்கப்படவில்லை எனத் தெரியும். எனினும், தங்களுடைய உடன்மனிதர்களுக்கு "நற்செய்தியைக்" கொடுப்பதில் ஆண்டவரோடு சேர்ந்து அனைவரும் ஊழியக்காரர்களாக இருக்கலாம். பெரியோர் அல்லது சிறியோர், கற்றவர்கள் அல்லது கல்லாதவர்கள், முதியோர்கள் அல்லது வாலிபர்கள் அனைவருக்குமாக இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தை அறிந்திருக்கிற ஒவ்வொருவர்மீதும் இந்த சத்தியத்தை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற பொறுப்பு தங்கியிருக்கிறது. இந்த உலகத்தின் இரட்சிப்பிற்கும் அதின் உயர்நிலைக்கும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களே அதிக அளவில் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்களைக் கொண்டுவரும் ஊழியத்திலே தேவனோடு அவர்கள் உடன் வேலையாட்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்துவே—சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே, ஒரு பாவியின் இடத்தைக் கவர்ந்திழுக்கின்ற ஆய்வுப்பொருளாக இருக்கின்றார். கல்வாரிச் சிலுவையின்மீது இணையற்ற அன்புள்ளவராக இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டவராக நிற்கிறார். பசியோடிருக்கும் திரள்கூட்டத்தினருக்கு இவ்வாறே அவரை முன்னிலைப்படுத்துங்கள். அவரது அன்பின் வெளிச்சம் மனிதரை இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், மீறுதலிலிருந்து கீழ்ப்படிதலிற்கும்

உண்மையான பரிசுத்தத்திற்கும் வெற்றிகொள்ளும். வேறு எதுவுமே செய்யக்கூடாத அளவிற்கு, கல்வாரி சிலுவையில் இயேசுவைப் பார்ப்பது, பாவத்தின கொடுமையான தன்மையைக் காணத்தக்கதாக மனசாட்சியை விழிப்படையச்செய்கிறது.

தங்களது நித்திய வாழ்விற்கான நம்பிக்கைகள் மையங்கொண்டிருக்கிற, சிலுவையில் அடிக்கப்பட்ட உயிர்த்தெழுந்த இரட்சகர்மீது நமது சபை அங்கத்தினர்கள் தங்களது கண்களை வைக்கமாட்டார்களா? இதுவே நமது தூது, நமது விவாதம், நமது கொள்கை, மனந்திரும்பாதவர்களுக்கு நமது எச்சரிப்பு, துக்கத்திலிருப்போருக்கு நாம் காட்டும் உற்சாகம், ஒவ்வொரு விசுவாசிக்கும் நாம் கொடுக்கும் நம்பிக்கையாகும். மனிதர்களின் மனங்களில் ஒரு ஆர்வத்தை எழுப்பி, அதின்மூலமாக கிறிஸ்துவின்மீது தங்களது கண்களைப் பதிக்கத்தக்கதாகச் செய்யக்கூடுமானால், நாம் சற்றே விலகி நின்று, தொடர்ந்து தேவஆட்டுக்குட்டியின்மீதே கண்களைப் பதிக்கத்தக்கதாக அவர்களைக் கேட்கவேண்டும்.... இயேசுவின்மீது கண்களைப் பதித்தவர் எல்லாவற்றையும் விட்டுவிடுவார். சுயநலத்திற்கு அவர் மரித்துப்போய்விடுவார். மிகவும் மகிமையாகவும் அற்புதமாகவும் கிறிஸ்துவிலே உயர்த்தப்பட்ட தேவனுடைய வார்த்தை அனைத்திலும் அவர் விசுவாசம் வைத்திருப்பார்.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டுமட்டும் இருக்காமல் வருகையைத் துரிதப்படுத்துவதே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமுரிய சிறப்புரிமையாகும். அவரது பெயரைக்கொண்டிருக்கிற அனைவரும், அவரது மகிமைக்கான கனியைக்கொடுப்பார்களானால் எவ்வளவு விரைவாக நற்செய்தியின் விதை உலகம் முழுவதும் விதைக்கப்பட்டுவிடும்! கடைசி அறுவடை எவ்வளவு துரிதமாக முதிர்ச்சியடையும்! எவ்வளவு சீக்கிரத்தில் கிறிஸ்து வந்து, தமக்கு அருமையான தானியத்தைக் கூட்டிச்சேர்த்துக்கொள்வார்! ★

# சிலுவையின் தூது!

**“நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்” —கலாத்தியர் 6:14**

தேவன் தமது மக்களுக்காக என்னிடம் ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறார்.... நீங்கள் ஒரு விலைக்கிரயத்தினால் கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, உங்களுக்கு என்ன உடைமைகளெல்லாம் இருக்கிறதோ அவை அனைத்தும் தேவனுடைய மகிமைக்காகவும் உங்களுடைய சக மனிதர்களின் நன்மைக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். பாவத்திலே அழிந்துகொண்டிருக்காதபடி, இந்த உலகத்தை இரட்சிக்க கிறிஸ்து சிலுவையில் மாண்டார். இந்த வேளையில் உங்களது ஒத்துழைப்பை அவர் கேட்கிறார். அவரது உதவும் கரமாக நீங்கள் இருக்கவேண்டும். ஊக்கமான தளராத முயற்சியோடு இழந்துபோனவர்களை இரட்சிக்க நீங்கள் நாடவேண்டும்....

தேவனுடைய சேனைக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கின்ற ஒருவனை கிறிஸ்துவின் கிருபையின் மாற்றியமைக்கும் வல்லமை வடிவமைக்கிறது.... தன்னைச் சுற்றிலும் அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களைப்பற்றி அக்கறையற்றவனாக அவன் ஒருபோதும் இருக்கமுடியாது.... பாவத்தின் அடிமைத்தனத்தினின்று தன்னை மீட்டெடுத்த கிறிஸ்துவிற்கே தனது உடலின் ஒவ்வொரு பகுதியும் சொந்தமானது என்பதையும், அவனது எதிர்காலத்தின் ஒவ்வொரு கண நேரமும் தேவனுடைய ஒரேபேறான குமாரனின் விலையேறப்பெற்ற ஜீவ இரத்தத்தால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டது என்றும் அவன் தெளிவாக விளங்கிக்கொள்கிறான்.

ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகின்ற வேலைக்குக் கீழாகத்தான் வேறு ஒவ்வொரு ஆர்வமுள்ள காரியமும் வைக்கப்படவேண்டுமென்று விரும்பும் அளவிற்கு, கல்வாரியிலே செய்யப்பட்ட அந்த தியாகத்தைக்குறித்து, அதிக ஆழமான மதிப்பீடு உங்களுக்கு இருக்கிறதா? பாவிகளை

மீட்கவேண்டுமென்பதில் எத்தகைய ஆழ்ந்த விருப்பம் மீட்பரின் வாழ்வில் முக்கியமாகக் காணப்பட்டதோ, அதேபோன்ற விருப்பம் அவரது உண்மையான பின்னடியாரின் வாழ்விலே குறிப்பாகக் காணப்படும். சுயத்திற்காக வாழ்வதற்கு கிறிஸ்தவனுக்கு விருப்பமே கிடையாது. தன்னையும் தனக்குண்டான எல்லாவற்றையும் தனது எஜமானரின் சேவைக்காக அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சியடைகிறான். கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்யவேண்டுமென்ற விவரிக்கமுடியாத விருப்பத்தோடு அவன் இயங்குகிறான்....

படைப்பினாலும் மீட்பினாலும் அவருக்குச் சொந்தமான நான் எத்தகைய சிறந்த முறையில் அவரை மகிமைப்படுத்தமுடியும்? இதுவே நாம் நம்மைக் கேட்கவேண்டிய கேள்வியாகும். உண்மையான மனந்திரும்புதலை அடைந்த ஒரு நபர், சாத்தானின் பிடியில் இன்னும் இருப்பவர்களைக் காப்பாற்றத்தக்கதாக ஆர்வமுள்ள—உள்ளார்ந்த கவலையோடு தேடியலைவார்.

நித்தியத்திற்காக ஆயத்தப்பட இப்பொழுது நமக்கு ஒரு சிறிதளவு நேரம் மாத்திரமே இருக்கிறது.... மக்களுக்கு சத்தியம் தேவையாக இருக்கிறது. ஊக்கமான—உத்தமமான முயற்சியோடு சத்தியம் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஆத்துமாக்களுக்காக தேடி அலையவேண்டும். ஜெபிக்கவேண்டும். உழைக்கவேண்டும்....

உலகத்திற்கு வரப்போகின்ந அழிவைக்குறித்த எச்சரிப்பைக் கொடுக்கவேண்டிய அந்த மேன்மையான பெறுப்பு, நம்மீது வைக்கப்பட்டிருக்கிது.... எழும்பி வல்லமையைத் தரித்துக்கொள்ளும் படியாக தேவன் தமது சபையை அழைக்கிறார். நித்திய கிரீடங்கள் வெற்றிகொள்ளப்படவேண்டும். பரலோக இராஜ்யம் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். மடமையில் அழிந்துகொண்டிருக்கின்ற இந்த உலகம் அறிவுறுத்தப்படவேண்டும். ★

ஏப்ரல் 3

# அன்பினால் தூண்டப்படுதல்!

**“தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்” –1 யோவான் 4:21.**

கடவுள் பற்றுக்கான அடித்தளம் அன்பே. ஒரு மனிதனுடைய சமய நம்பிக்கை எதுவாயிருப்பினும், அவனுடைய சகோதரனிடத்தில் சுயநலமற்ற அன்பு இருந்தாலொழிய தேவனிடத்தில் அவனுக்கு தூய்மையான அன்பு இருக்கமுடியாது. அதாவது ஒரு மனிதன் தனது சகோதரனை சுயநலமற்ற அன்போடு நேசித்தால் மாத்திரமே அவன் தேவனிடத்தில் காட்டும் அன்பு தூய்மையாக இருக்கமுடியும்.... சுயம் கிறிஸ்துவிலே கலந்துவிடும்போது, அன்பு இயல்பாகவே ஊற்றாகப் பெருக்கெடுத்து வெளிப்படுகிறது. மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும், மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்ற உந்துதல் இதயத்திலிருந்து நிலையாகப் பெருக்கெடுத்து வரும்பொழுது, கிறிஸ்தவ குணத்தின் முழுநிறைவையும் அடையமுடிகிறது. அந்த சமயத்தில் பரலோக ஒளி இதயத்தை நிரப்பி முகத்திலே வெளிப்படுகிறது....

கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறதால் அன்பெனும் சங்கிலியின் பொற்கண்ணிகளால் நமது உடன்மனிதரோடு நாம் இணைக்கப்பட்டிருக்கின்றோம். அப்பொழுது கிறிஸ்துவில் காணப்படும் பரிவும் இரக்கமும் நமது வாழ்க்கையில் வெளிப்படையாகத் தெரியும். தேவையிலிருப்போரும் வாழ வசதியற்றவர்களும் நம்மிடத்திற்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று நாம் காத்திருக்கமாட்டோம். மற்றவர்களின் துன்ப—துயரங்களை உணர்ந்துகொள்ளத்தக்கதாக நம்மை யாரும் கெஞ்சிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. கிறிஸ்து எங்கணும் நன்மைசெய்பவராக எப்படி இயல்பாகவே சுற்றித்திரிந்தாரோ, அதேபோன்று, தேவையிலிருப்பவர்களுக்கும் துன்பம் அனுபவிப்பவர்களுக்கும் உதவிசெய்வது நமக்கு ஒரு இயல்பான குணமாக இருக்கும்....

விழுந்துபோனவர்களைத் தூக்குவதிலும் துயரத்தில் இருப்போரைத் தேற்றுவதிலுமே பரலோகத்தின் மகிமை காணப்படுகிறது.... நாடு, இனம் அல்லது ஜாதிபோன்ற வேறுபாடுகளை தேவன் எவ்விதத்திலும் அங்கிகரிப்பதில்லை.... சிருஷ்டிப்பினாலே அனைவரும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள், மீட்பினாலே ஒரே குடும்பத்தார். பிரிக்கும் ஒவ்வொரு சுவரையும் இடித்துத் தகர்க்கவும், ஆலயத்தின் ஒவ்வொரு அறையையும் திறந்து ஒவ்வொரு ஆத்துமாவும் தாராளமாக தேவனிடத்திற்குச் செல்வதற்கான உரிமையைத் தரவுமே கிறிஸ்து வந்தார். அவரது அன்பு மிக விசாலமானதாகவும் மிகவும் ஆழமானதாகவும் அதிக நிறைவோடும் இருப்பதால், அந்த அன்பு எங்கணும் ஊடுருவிச்செல்கிறது. சாத்தானின் வஞ்சகங்களால் அவனது வளையத்திற்குள் இருக்கின்ற எளிய ஆத்துமாக்களை தூக்கி வெளியே கொண்டுவருகிறது. தேவ சிங்காசனத்தை—வாக்குத்தத்தம் எனப்படும் வானவில்லால் சூழப்பட்டிருக்கும் சிங்காசனத்தை எட்டும் தூரத்தில் அவர்களைக் கொண்டுவந்து வைக்கிறது.

கிறிஸ்து பிதாவோடு ஒன்றாக இருப்பதுபோல, நாமும் அவரோடு ஒன்றாக இருக்கத்தக்கதாக அவர் அனைவரும் தம்மோடு தோழமைக்கொள்ளத்தக்கதாக உயர்த்தப்படும்படி, நாடித் தேடிக்கொண்டிருக்கிறார். நமது தன்னலத்தினின்று நம்மை வெளியேற்றுவதற்கான அழைப்பைக் கொடுப்பதற்காக துன்பங்களையும் பேரிடர்களையும் சந்திக்கத்தக்கதாக நம்மை அனுமதிக்கிறார். இரக்கம், கனிவு மற்றும் அன்பு ஆகிய அவரது குணநலக்கூறுகளை நம்மிலே பெருகும்படிச் செய்ய விரும்புகிறார்....

“...நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல்காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்” (சகரியா 3:7) என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். பரலோக தூதர்கள் பூமியில் செய்கின்ற ஊழியத்திற்கு நாம் ஒத்துழைப்பு தருவதின்மூலமாக, பரலோகத்தில் அவர்களது தோழமையைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். ★

# சாட்சிகூறுதலை ஆரம்பிக்கவேண்டிய இடம்!

**“அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப் போலவும் இருப்பார்கள்” —சங்கீதம் 144:12.**

கிறிஸ்துவிற்காக நாம் செய்யும் பணி, வீட்டிலுள்ள குடும்பத்தாரிடம் ஆரம்பிக்கவேண்டும். இதைவிட மிகவும் முக்கியமான பணித்தளம் வேறு எதுவும் கிடையாது. தேவனுடைய வாக்குத்தத்தங்களும் அவருடைய கட்டளைகளும் குழந்தையிடத்தில் நன்றியையும் பயபக்தியையும் விழிப்படையச்செய்யத்தக்கதாக, எந்தப் பெற்றோர்களின் ஜீவியங்கள் தெய்வீகத்தின் ஒரு உண்மையான பிரதிபலிப்பாக இருக்கிறதோ, அந்தப் பெற்றோர்கள் மகிழ்ச்சி உடையவர்கள். தேவனுடைய அன்பையும் நீதியையும் நீடிய பொறுமையையும் எந்தப் பெற்றோர்களது மென்மையான குணமும் நீதியும் நீடிய பொறுமையும் செயல்படுத்திக்காட்டுகின்றதோ அந்தப் பெற்றோர்கள் மகிழ்ச்சியுடையவர்கள். எந்தப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் தங்களை நேசிக்கவும் நம்பவும் தங்களுக்குக் கீழ்ப்படியவும் கற்றுக்கொடுத்து, அதன்மூலமாக, பரலோகத்திலிருக்கிற பிதாவை நேசிக்கவும் நம்பவும் அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டுமென்று கற்றுக்கொடுக்கிறார்களோ, அவர்கள் மகிழ்ச்சியுடையவர்கள். இத்தகைய அன்பளிப்பை ஒரு குழந்தைக்கு வழங்குகின்ற பெற்றோர்கள் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற செல்வத்தைவிட மிகவும் அருமையான ஒரு பொக்கிஷத்தை அதற்குக் கொடுக்கிறார்கள். அதாவது, நித்தியத்தைப்போல என்றும் நிலைத்திருக்கும் ஒரு பொக்கிஷமாகும்.

ஒவ்வொரு சிறிய குழந்தையும் அவருடைய பிள்ளையாக— அவரது குடும்பத்திற்குள் சுவீகாரம்பெற்ற பிள்ளையாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவர்கள் இளைஞர்களாக இருந்தாலும் அத்தகைய வாலிபர்கள் விசுவாச வீட்டாரின் அங்கத்தினராக இருந்து மிக அருமையான

அனுபவத்தை அடையலாம். இயேசுவிற்கான அன்பிலும் நம்பிக்கையிலும் நிறைந்த இருதயங்களால் அவர்கள் ஈர்க்கப்பட்டு, நிலைத்திருக்கும் எண்ணப்பதிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். நம்பிக்கையோடு அவர்களது இதயங்கள் ஈர்க்கப்பட்டு, இயேசுவின்மீதுகொண்ட அன்பினால் அத்தகைய மீட்பருக்காக வாழலாம். கிறிஸ்து அவர்களை சிறிய இறைப்பணியாளர்களாக உருவாக்குவார். பாவம், துய்த்து மகிழத்தக்கதான ஒரு காரியமாகத் தோன்றாமல் வெறுத்து விட்டொழிக்கத்தக்கதான ஒரு காரியமாக மாறும்படியாக, அவர்களது சிந்தனையோட்டம் முழுவதுமே மாற்றமடையலாம்.

பெற்றோர்கள் தங்களது முன்மாதிரியின்மூலமாகவும் போதனைகளின்மூலமாகவும் மனந்திரும்பாதவர்களுக்காக ஊழியஞ்செய்ய தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். பிள்ளைகளும் முதியோர்களிடமும் துன்பத்தில் இருப்பவரிடமும் பரிவுகாட்டவும், ஏழைகள் மற்றும் வேதனையிலிருப்பவர்களுடைய துன்பங்களை போக்கவும் கற்றுக்கொடுக்கப்படவேண்டும்.... தேவனோடு உடன் வேலையாட்களாக இருக்கத்தக்கதாக... கிறிஸ்துவின் ஊழியம் முன்னேறுவதற்காகவும் மற்றவர்களுடைய நன்மைக்காகவும் சுயமறுப்பும் தியாகமும் செய்ய சிறுவயதிலிருந்தே அவர்கள் மனதிலே ஆழமாகப் பதியவைக்கப்படவேண்டும்....

பூமியிலுள்ள குடும்பங்களனைத்தும், பரலோகக் குடும்பத்திற்கான ஒரு அடையாளமாக இருக்கவேண்டுமென்று தேவன் திட்டமிடுகிறார். தேவனுடைய திட்டத்திற்கு இசைந்தாற்போல கிறிஸ்தவக் குடும்பங்கள் நிலைநாட்டப்பட்டு நடத்தப்படுமானால் கிறிஸ்தவக் குணம் அமைவதற்கும் தேவனுடைய ஊழியத்தின் முன்னேற்றத்திற்கும் மிகவும் ஆற்றல்வாய்ந்த முகவர்களைப்போல இருக்க முடியும். ★

ஏப்ரல் 5

# தேவையிலிருக்கும் இந்த உலகம்!

**"...வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம், இதோ, இருள்; பிரகாசத்துக்குக் காத்திருந்தோம், ஆனாலும் அந்தகாரத்திலே நடக்கிறோம்" —ஏசாயா 59:9.**

அநேகர் வேதவாக்கியங்களின் உண்மையான உட்பொருளை விளங்கிக்கொள்ளாமல் வாசித்துக்கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதிலும் ஆண்களும் பெண்களும் பரலோகத்தை ஆவலோடு நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வெளிச்சத்திற்காகவும் கிருபைக்காகவும் பரிசுத்த ஆவிக்காகவும் ஏக்கத்தோடிருக்கும் ஆத்துமாக்களின் ஜெபங்களும் கண்ணீரோடும் கேள்விகளோடும் மேலே சென்றுகொண்டிருக்கின்றன. கூட்டிச்சேர்க்கப்படத்தக்கதாக மாத்திரமே அநேகர் இராஜ்யத்தின் விளிம்பிலே காத்திருக்கிறார்கள்.

தங்களிடம் இல்லாத ஏதோ ஒன்றிற்காக எங்கணும் அநேக இருதயங்கள் கதறிக்கொண்டிருக்கின்றன. பாவத்தின்மேல் வெற்றிதரும் வல்லமைக்காக—தீமையின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கக்கூடிய வல்லமைக்காக—ஆரோக்கியத்தையும் ஜீவனையும் சமாதானத்தையும் கொடுக்கக்கூடிய வல்லமைக்காக—அவர்கள் ஏங்குகிறார்கள். தேவனுடைய வார்த்தையின் வல்லமையை முன்பு அறிந்த அநேகர் தேவனைப்பற்றிய அங்கீகாரமற்ற இடங்களிலே வாழ்ந்திருக்கிறார்கள். அத்தகையோர் தெய்வீகப் பிரசன்னத்திற்காக ஏங்குகிறார்கள்.

பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு (இந்த வார்த்தைகள் போன நூற்றாண்டில் எழுதப்பட்டவை) இந்த உலகிற்கு தேவையாயிருந்த—கிறிஸ்துவின் வெளிப்பாடு இன்றும் இவ்வுலகின் தேவையாக இருக்கிறது. ஒரு மாபெரும் சீர்திருத்தம் மிகவும் அவசியமாக இருக்கிறது. கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக மாத்திரமே சரீர—மன—ஆவிக்குரிய காரியங்களில் மீட்பின் வேலை நிறைவேற்றப்பட முடியும்.

மக்களைச் சென்றடைவதற்கு கிறிஸ்து மேற்கொண்ட வழிமுறை மாத்திரமே உண்மையான வெற்றியைக் கொடுக்கக்கூடும். மனிதருக்கான நன்மையை விரும்பிய ஒருவராக மீட்பர் அவர்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்தார். அவர்களுக்குப் பரிவுகாட்டினார். அவர்களது தேவைகளுக்காக உழைத்தார். அவர்களது நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டார். பின்பு அவர்களை நோக்கி: "என்னைப் பின்பற்றுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்.

தனிப்பட்ட சொந்த முயற்சியின்மூலமாக மக்களிடம் நெருங்கி வருவது தேவையாயிருக்கிறது.... அழுகிறவர்களோடு நாம் அழவேண்டும். களிகூருபவர்களோடு சேர்ந்து களிகூரவேண்டும். இணங்கவைக்கத்தக்கதான வல்லமை, ஜெபத்தின் வல்லமை, தேவனுடைய அன்பின் வல்லமை ஆகிய வல்லமைகளையும் இணைத்துக்கொண்டவர்களாக இந்த வேலையைச் செய்யும்பொழுது, நிச்சயமாக பலனில்லாமல் இருக்காது—பலனில்லாமலிருக்கவும் முடியாது.

மனிதர் எப்படிப்பட்டவர்களாக மாறமுடியுமென்றும், தெய்வீகத்தோடு மானுடம் இணைவதின்மூலமாக அழிவிற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிக்க எத்தகைய காரியங்கள் நிறைவேற்றப்பட முடியுமென்றும், உலகிற்கு வெளிப்படுத்துவதற்காக பரலோகத்தின் அறிவு ஜீவிகள் மானிட ஏதுகரங்களோடு இணைந்து செயலாற்றக் காத்திருக்கிறார்கள். சுயத்தை ஒதுக்கி, பரிசுத்த ஆவியானவர் வேலை செய்வதற்காக தனது இதயத்தில் இடங்கொடுத்து, தேவனுக்கென்று முற்றிலுமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கின்ற நபரால் ஏற்படும் பயனுக்கு எல்லையே கிடையாது. ★

ஏப்ரல் 6

# வீடுவீடாகச்சென்று போதித்தல்!

**“பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி....” —அப்போஸ்தலர் 20:20.**

வீடுவீடாகச்சென்று அச்சடித்த பிரதிகளைக் கொடுத்து, வேத பாடங்கள் கொடுக்கும் ஊழியம் நமது சபை அங்கத்தினர்களுக்கு மத்தியிலே அதிகமாக இருக்கவேண்டும்.... எல்லா தண்ணீர்களுக்கருகிலும் நாம் விதைக்கும்பொழுது, “பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்” என்ற காரியத்தை தெளிவாகப் புரிந்துகொள்வோம்.

கிறிஸ்துவின் பிள்ளைகளென்று உரிமைபாராட்டிக் கொண்டிருப்பவர்களால், கிறிஸ்துவின் முன்மாதிரி பின்பற்றப்பட வேண்டும். உங்களது சக மனிதர்களுடைய சரீர சம்பந்தமான தேவைகளை நிறைவேற்றுங்கள். அப்பொழுது அவர்களது நன்றி உணர்வு, தடைகளை உடைத்து அவர்கள் இதயத்தைச்சென்றடைய உங்களுக்கு உதவிசெய்யும்.... பெண்களும் ஆண்களும் இந்த வேலையில் ஈடுபடலாம்.... உள்ளான அவர்களது ஜீவியத்தைச் சென்றடையக்கூடிய ஒரு வேலையை, அதாவது ஆண்களால் செய்யக்கூடாத ஒரு வேலையை, இவர்கள் இணைந்து குடும்பங்களிலே செய்யக்கூடும். ஆண்களால் சென்றடைய முடியாத இதயங்களுக்கு அருகிலே இவர்கள்(பெண்கள்) வரமுடியும். பெண்கள் செய்கின்ற வேலை அவசியமாக இருக்கின்றது. காலமறிந்து செயலாற்றுகின்ற தாழ்மையான பெண்கள், மக்களை அவர்களது வீடுகளிலே சந்தித்து, சத்தியத்தை விளக்கிக்கூறுகின்ற ஒரு நல்ல வேலையைச் செய்யமுடியும். தேவனுடைய வார்த்தை இவ்வாறு விளக்கப்படும்பொழுது புளிப்பேற்றும் பணியாகிய உள்ளிருந்து ஊடுருவும் அதின் வேலையைச் செய்யமுடியும்.... அனைத்துக் குடும்பங்களும் மனமாற்றமடையும்.

குடும்பத்தினரிடையே, உங்களது அண்டை வீட்டுக்காரரின் அடுப்பிற்கு அருகே, பிணியாளியின் படுக்கைக்குப் பக்கத்திலே, அமைதியான முறையில் வேதவாக்கியங்களை வாசித்து, இயேசுவிற்காகவும் சத்தியத்திற்காகவும் ஒரு வார்த்தை பேசலாம். முளைத்தெழும்பி பலன்கொடுக்கும் அருமையான விதைகள் இவ்வாறு விதைக்கப்படலாம்.

நம்பிக்கையற்ற அநேக இடங்களில் செய்யப்படவேண்டிய இறைப்பணி உண்டு. எந்த இடங்களில் எந்த வழிமுறைகளில் வேலை செய்யவேண்டும் என்ற எண்ணமே நமக்கு இல்லாதிருந்ததோ, எந்த வகுப்பினருக்காக வேலைசெய்யவேண்டுமென்று நாம் திட்டமிடவில்லையோ, அந்த வகுப்பினரை நாம் சென்றடையத் தக்கதாக, இறைப்பணியின் ஆவி நம்முடைய ஆத்துமாக்களை இறுகப்பற்றி ஊக்குவிக்கவேண்டியது அவசியம். சுவிசேஷ விதையை விதைக்கும் திட்டம் ஆண்டவரிடம் இருக்கிறது. அவரது சித்தத்திற்கேற்ப விதைக்கும்பொழுது, சத்தியத்தை ஒரு போதும் கேட்டிராத அநேகமாயிரம்பேரை அவரது வார்த்தை சென்றடையும்படி அந்த விதையை நாம் ஏராளமாகப் பெருகச் செய்வோம்.

கிறிஸ்துவின் வருகைக்கு ஒரு மக்கள் கூட்டம் ஆயத்தமாக்கப்படத்தக்கதாக தேவன் அபரிதமாகக் கொடுத்திருக்கின்ற வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக நமது சபை அங்கத்தினர்களோடு சேர்ந்து பணிபுரிய, ஆயிரம் பதினாயிரமாக தேவதூதர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நமது சகோதரிகளும், வாலிபர்களும், நடுவயதினரும் மற்றும் வயது முதிர்ந்தோரும் உலகம் முடிவடையும் தருவாயில் இருக்கும் இந்தக் காலத்திற்கான பணியில் ஒரு பங்கு வகிக்கலாம். சந்தர்ப்பம் வருகிறபொழுது இதைச் செய்வதின்மூலமாக தங்களுக்காக மிகவும் உயர்ந்த மதிப்புடைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்வார்கள். சுயத்தை மறந்த அந்த நிலையில்தான் அவர்கள் கிருபையிலே வளருவார்கள். ★

ஏப்ரல் 7

# ஒருவருக்கொருவர் சாட்சிபகர்தல்!

**“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்”**

**—யோவான் 3:16.**

இந்த மாபெரும் இரட்சிப்பை இனியும் நீண்டகாலம் அலட்சியம் செய்யாதிருக்கும்படி, தங்களது அண்டை அயலகத்தார்களுக்கும் தோழர்களுக்கும் அறிவுறுத்தும் வேலையை, தேவனை நேசிக்கிறோம் என்று உரிமைகோரும் அனைவரும் ஏன் செய்யாமலிருக்கிறார்கள்? ஒரு அவமானம் நிறைந்த, கடுந்துயரொடுகூடிய மரணத்திற்கு கிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்தார். அழிந்துகொண்டிருப்பவர்களை இரட்சிக்க, இதன்மூலம் தமது ஆத்துமத்தின் மாபெரும் வருத்தத்தை வெளிப்படுத்தினார். ஆ! யாரெல்லாம் அவரிடத்திற்கு வருகிறார்களோ, அவர்களை இரட்சிக்க கிறிஸ்து ஆற்றலுடையவராயிருக்கிறார். கிறிஸ்து விருப்பத்தோடிருக்கிறார்; கிறிஸ்து ஏக்கத்தோடிருக்கிறார்.

ஆபத்திலிருக்கும் ஆத்துமாக்களிடம் பேசுங்கள். மன்னிக்கும் தகுதியடைவதற்காக சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருக்கிற இயேசுவை நோக்கிப்பார்க்கத்தக்கதாக அவர்களைத் தூண்டுங்கள். கிறிஸ்துவின் மென்மையான—பரிவுள்ள அன்பு உங்களுடைய சொந்த இதயத்தில் நிரம்பி வழியும் நிலையில் பாவியினிடத்தில் பேசுங்கள். அங்கு ஓர் ஆழ்ந்த ஊக்கம் காணப்படட்டும். ஒரு ஆத்துமா இயேசுவை நோக்கிப்பார்த்து வாழத்தக்கதாக, அந்த ஆத்துமாவை வெற்றிகொள்ள முயற்சிக்கின்ற நபரிடமிருந்த வரும் வார்த்தைகள் கரடுமுரடான உரத்த சத்தத்தில் இருக்கக்கூடாது.

முதலாவதாக, உங்களது சொந்த ஆத்துமா தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்படவேண்டும். பரலோகத்தில் நமக்காகப்

பரிந்துபேசிக்கொண்டிருப்பவரை நோக்கிப்பார்க்கும்பொழுது உங்களது இருதயம் நொறுக்கப்படட்டும். அதன்பின்னர் மென்மையாக்கப்பட்டவர்களாக அடங்கிய தொனியில், மீட்பின் வல்லமையை உணர்ந்தவர்களாக மனந்திரும்புகின்ற பாவிகளிடம் பேசலாம். விசுவாசத்தினாலே சிலுவையின் பாதத்தருகே அவர்களைக் கொண்டுவந்து, அந்த ஆத்துமாக்களோடு சேர்ந்து ஜெபியுங்கள். உங்களது உள்ளத்தோடு அவர்களது உள்ளங்களை எடுத்துச்செல்லுங்கள். நீங்கள் நோக்கிப்பார்க்கிற இடத்திலே பாவத்தைச் சுமக்கிற இயேசுவின்மீது விசுவாசக்கண்ணைப் பதியுங்கள். தங்களது இரங்கத்தக்க பாவ நிலையை நோக்கிப்பார்க்காமல், மீட்பரை நோக்கிப்பார்க்கும்படிச்செய்யுங்கள். அப்பொழுது நிச்சயமாக வெற்றி பெறப்படும். இந்த உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக அவரைத் தாங்களே காண்பார்கள். வழியையும் சத்தியத்தையும் ஜீவனையும் அவர்கள் காண்கிறார்கள். நீதியின் சூரியனானவர் தமது பிரகாசமான ஒளியின் கதிரை இதயத்தில் படியச்செய்கிறார். மீட்கும் அன்பின் அந்த ஆற்றல்மிகுந்த நீரோட்டம், வறண்டு—தாகத்தோடிருக்கும் ஆத்துமாவிற்குள் பாய்கின்றது. இவ்வாறு இயேசு கிறிஸ்துவிடத்தில் பாவி இரட்சிப்பை அடைகிறான்.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றி பேசுங்கள். ஜெபியுங்கள், பாடுங்கள். இக்காரியம் இதயங்களை உடைத்து வெற்றிகொள்ளும். இதுவே கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்களைக் கூட்டிச்சேர்ப்பதற்கான தேவனுடைய வல்லமையும் ஞானமுமாகும். முறைப்படியான, நிலைத்திருக்கின்ற சொற்றொடர்கள், வெறுமனே தர்க்கரீதியாக முன்வைக்கப்படும் தலைப்புகள் அதிக நன்மையைக் கொடுப்பதில்லை. ஊழியர்களுடைய இதயத்திலிருக்கும் உருக வைக்கும் தேவ அன்பு அவர்கள் யாருக்காக உழைக்கிறார்களோ அவர்களால் கண்டறியப்படும். ஜீவ தண்ணீர்களுக்காக ஆத்துமாக்கள் தாகத்தோடிருக்கிறார்கள். நீரற்ற வெறுந்தொட்டிகளாக இருக்காதீர்கள். கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவீர்களானால் தாகத்தோடும் பசியோடும் இருக்கும் ஆத்துமாக்களை நீங்கள் இயேசுவினிடத்திற்கு வழிநடத்தலாம். அவர் அவர்களுக்கு ஜீவ அப்பத்தையும் இரட்சிப்பின் தண்ணீரையும் கொடுப்பார். ★

# ஒரு அபாய அறிவிப்பை முழங்குங்கள்!

**“சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது”**
**–யோவேல் 2:1.**

நமது நித்தியவாழ்வின் நலம்பற்றின காரியங்களே இப்பொழுது நமது கவனத்தை ஈர்க்கவேண்டும். பரலோகக் காரியங்களுக்கு இனியும் இரண்டாவது இடத்தைக் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. உலகத்தின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் (தண்டனைகள்) வந்திருக்கின்றன. இந்த நியாயத்தீர்ப்புகளின் பக்திவிநயமான எச்சரிப்பின் வார்த்தைகளை: “நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்” (மத்தேயு 24:44) என்று கூறுகின்றன.

நமது சபைகளிலே அநேகமநேகம்பேர் நிகழ்காலத்திற்குரிய சத்தியத்தின் உண்மையான பொருளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். முடிவு சமீபமென்று தெளிவாக சொல்லிக் கொண்டிருக்கும் காலங்களுடைய அடையாளங்களின் நிறைவேறுதலை புறக்கணிக்கவேண்டாம் என்று அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். ஆ! தங்கள் ஆத்தும இரட்சிப்பை நாடித்தேடாத அநேகம்பேர் வெகு சீக்கிரத்தில்: “அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை” ( எரேமியா 8:20) என்று மனங்கசந்து அழுது புலம்புவார்கள்.

இப்பூமியின் வரலாற்றினுடைய கடைசிக் காட்சிகளின் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தீர்க்கதரிசனம் துரிதமாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது. தவணையின் மணிநேரங்கள் விரைவாகக் கடந்துசென்றுகொண்டிருக்கின்றன. நமக்கு நேரமில்லை—இழப்பதற்கு ஒரு கண நேரங்கூட கிடையாது. காவல் காக்கும்பொழுது தூங்குகிறவர்களாக

நாம் காணப்படக்கூடாது. "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்று ஒருவரும் தங்களது இருதயத்திலோ தங்களது கிரியைகளின் மூலமாகவோ சொல்லாதிருக்கட்டும். ஊக்கமான எச்சரிப்பின் வார்த்தைகளிலே கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின் செய்தி முழங்கட்டும். வரப்போகின்ற கோபாக்கினையினின்று தப்பும்படியாக எங்கனும் சென்று ஆண்களிடமும் பெண்களிடமும் மனந்திரும்பும்படி இணங்குவதற்காக நாம் பேசுவோம். உடனே ஆயத்தமாகும்படி நாம் அவர்களை விழிப்படையச்செய்யவேண்டும். நமக்கு முன்பாக வரப்போகின்ற காரியங்களைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஊழியர்களும் சபையாரும் முதிர்ந்துகிடக்கிற வயல்களிடத்திற்குச் செல்லட்டும்....

ஆண்டவர் சீக்கிரம் வரவிருக்கின்றார். சமாதானத்தோடு அவரைச் சந்திக்க நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்க நமது வல்லமைக்குட்பட்ட அனைத்துக் காரியங்களும் செய்யப்பட வேண்டுமென்று நாம் தீர்மானிப்போம். நாம் துக்கத்தோடிருக்க வேண்டியதில்லை. உற்சாகமாக இருக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசுவை நமக்கு முன்பாக எப்பொழுதும் வைத்திருக்கவேண்டும். அவரது வருகைக்காக நாம் ஆயத்தமாகிக் காத்திருக்கவேண்டும். ஆ! அவரைக் கண்டு, அவரது மீட்கப்பட்ட மக்களாக வரவேற்கப்படுவது எவ்வளவு மகிமையான ஒரு காரியம்! நாம் நீண்டகாலமாகக் காத்திருந்துவிட்டோம். இதனால் நமது விசுவாசம் பெலவீனமடையக்கூடாது. நமது இராஜாவை அவரது அழகிலே காணக்கூடுமானால் நாம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்போம். "வீட்டை நோக்கிச் செல்லுகிறோம்" என்று உரத்த சத்தமிடவேண்டும் என்பதுபோன்று நான் உணர்கிறேன். அவரது மீட்கப்பட்டோரை, அவர்களது நித்திய வீட்டிற்கு அழைத்துச் செல்லத்தக்கதாக வல்லமையோடும் மகா மகிமையோடும் கிறிஸ்து வருகின்ற அந்த நேரத்தை நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம். ★

ஏப்ரல் 9

# இன்றைக்கு தேவன் கொடுக்கும் சிறப்புமிகுந்த ஓர் தூது!

**"இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்" —ரோமர் 13:12.**

இதைப்போன்ற ஒரு நேரத்தில் நமது எண்ணத்தில் ஒரே ஒரு நோக்கம் மட்டுமே இருக்கவேண்டும். மனிதரின் மனதிலே சத்தியம் நிலைநாட்டப்படத்தக்கதாக தேவன் நமக்கு வழங்கியிருக்கிற அனைத்து வழிவகைகளையும் பொருளாதாரத்தையும் பயன்படுத்த வேண்டும்.... சத்தியத்தின் அறிவை எங்கணும் பரவச்செய்வதற்காக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனது ஆற்றலின் உச்சகட்ட நிலை அளவிற்கு முயற்சி செய்யவேண்டியது அவனது கடமையாக இருக்கிறது.

தேவன் நீண்டகாலம் காத்திருந்துவிட்டார். படைப்பினாலும் மீட்பினாலும் அவருக்குச் சொந்தமானவர்களாக இருக்கிறவர்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து, அவரது அன்பான பணிவுள்ள பிள்ளைகளாக அவருக்கு அருகில் இருப்பதை விரும்பி, அவரது முகத்தின் ஒளி தங்கள்மீது பிரகாசிக்க விரும்புகிறவர்களாக அவருக்குக் கீழ்ப்படியுங்கள். மூன்றாம் தூதனின் தூதை உலகத்திற்கு எடுத்துச்சென்று, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குவதற்கு எதிராக எச்சரித்து, "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும்" காத்துக்கொள்ளுகிறவர்களுடைய வரிசையிலே இடம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாம் அவர்களை நடத்த வேண்டும். இந்தத் தூது எப்பொழுது முடிவடையும் அல்லது தவணையின் காலம் எப்பொழுது முடிவடையும் என்பதை தேவன் நமக்கு வெளிப்படுத்தவில்லை.... விழிப்போடு உழைத்து, காத்திருந்து, அழிவிற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற

மனிதர்களின் ஆத்துமாக்களுக்காக ஒவ்வொரு கணமும் உழைக்கவேண்டியது நமது கடமையாகும்....

இப்பொழுது, இப்பொழுதுதானே நாம் விழிப்புள்ளவர்களாக உழைத்துக் காத்திருக்கவேண்டிய நேரம்.... அனைத்துக் காரியங்களின் முடிவும் சமீபித்துவிட்டது.... கிறிஸ்துவின் பின்னடியார்களென்று செல்லிக்கொள்பவர்கள் மற்றவர்களுக்கு கொடுக்கத்தக்கதான ஒரு பரிசுத்தமான புனிதமான மகிழ்ச்சியையுடையவர்களாக இருக்கத்தக்கதாக, ஏவப்பட்டு அருளப்பட்ட வார்த்தையின் சத்தியத்தை நமது ஆத்துமாவிலே பதிக்கத்தக்கதாக தேவனுடைய ஆவியானவர் கிரியைசெய்கிறார்....

சத்தியத்தின் வல்லமையிலே ஒரு ஆழமான—ஆற்றல் நிறைந்த—அதிகமாக நெருக்கி ஏவுகின்ற—சாட்சி அவசியமாக இருக்கிறது. இத்தகைய சாட்சி இதை நம்புகிறோம் என்று சொல்லுகிறவர்களுடைய நடைமுறையிலிருக்கும் கடவுட்பற்றிலே காணப்படுகின்றது. சத்தியம் நமது இதயங்களிலே நிலைநாட்டப்பட்டிருக்கவேண்டும். அந்த சத்தியத்தை, இயேசுவில் காணப்பட்டதைப்போன்று மற்றர்களுக்கும் போதிக்கவேண்டும். உலகம் மிகவும் பக்திவிநயமான ஒரு காலக்கட்டத்தில் இருக்கிறது. ஏனெனில் தங்களது நித்தியத்திற்கான முடிவு என்னவாயிருக்கும் என்று ஆத்துமாக்கள் தீர்மானித்துக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணத்தைச் செல்லாமற்போகச்செய்வதற்காக, சாத்தானும் அவனுடைய தூதர்களும் தொடர்ந்து மறைவானவிதத்தில் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். பாவத்தின் கொடுமையிலே மனிதரின் ஆத்துமாக்களை அடிமைப்படுத்த இவ்வாறு முயற்சிக்கிறார்கள். பூமியை மூடியிருக்கிற இருள் இன்னும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. தேவனிடத்தில் தாழ்மையாக நடப்பவர்கள் பயப்படத் தேவையில்லை. ★

# தீர்மானமெடுக்கவேண்டிய நேரம்!

**"...யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்..."**
**—யோசுவா 24:15.**

இந்த உலகம் மதிகெட்டுப்போயிருக்கிறது. ஆண்களும் பெண்களும் பித்துப்பிடித்தவர்களைப்போன்று நித்திய அழிவை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறார்கள். அனைத்து சிற்றின்பத்தோய்வுகளும் பரவிக்கிடக்கின்றன. மனிதர் இழிவான பாவத்தினால் வசீகரிக்கப்பட்டவர்களாக மாறியிருக்கின்றனர். அவர்கள் எச்சரிப்புகளுக்கும் அல்லது வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்கமாட்டார்கள்.

"...யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்..." (யோசுவா 24:15) என்று பூமியின் குடிகளைநோக்கி ஆண்டவர் கேட்கிறார். இப்பொழுது அனைவரும் தங்களுக்கான நித்தியத்தின் முடிவைத் தீர்மானித்துக்கொண்டிருக் கிறார்கள். மானிடருக்குக் கொடுக்கப்பட்ட தவணையின் காலம் முடிவுபெறவிருக்கின்றது. அவருடைய வருகையின் நாள் சமீபித்திருக்கிறது. பயபக்தியான இந்தக் காலத்தைக்குறித்து தெளிவாக அறிந்துகொள்ளத்தக்கதாக மனிதரை விழிப்பூட்டவேண்டியது அவசியம். இந்த பூமியின் வரலாறு முடிவடைவதற்கு 5 ஆண்டுகளுக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு தேவன் எவருக்கும் ஒரு தூதைக் கொடுக்கிறதில்லை. அவருடைய வருகையையோ அல்லது ஆயத்தத்தையோ தாமதப்படுத்துவதற்கான எந்த ஒரு சாக்குப்போக்கையும் பூமியில் வாழ்கின்ற எந்த நபருக்கும் கொடுப்பதில்லை. "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்று உண்மையற்ற ஊழியக்காரன் சொன்னதுபோல யாரும் சொல்வதை அவர் விரும்புகிறதில்லை. இக்காரியம் அந்த மகா நாளிற்காக நாம் ஆயத்தப்படுவதற்கு நமக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் துணிச்சலான முறையில் அலட்சியஞ்செய்வதற்கு வழிநடத்துகிறது. தேவனுடைய ஊழியக்காரன்

என்று உரிமைகோரிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், வேலைசெய்கின்ற ஒவ்வொரு நாளிலும் இதுவே கடைசிநாள் என்று எண்ணுவதைப்போன்று அவருடைய ஊழியத்தைச் செய்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறார்....

வானத்து மேகங்களின்மீது வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வரவிருக்கின்ற மனுஷகுமாரனுடைய துரித வருகையைக்குறித்துப் போசுங்கள். அந்த நாளைத் தள்ளிப்போடாதீர்கள்....

ஒவ்வொருவரும் சுமந்து செல்லவேண்டிய ஒரு மாபெரும் பாரம் இங்கு இருக்கிறது. என்னுடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டிருக்கின்றனவா? பாவப்பாரத்தைச் சுமக்கிற இயேசு கிறிஸ்து என்னுடைய பாவத்தை எடுத்துப்போட்டுவிட்டாரா? கிறிஸ்துவின் நீதியினாலே தூய்மையாக்கப்பட்ட ஒரு சுத்தமான இருதயம் எனக்கிருக்கிறதா? கிறிஸ்துவிலே ஒரு அடைக்கலத்தைத் தேடிக்கொண்டிராத எந்த ஆத்துமாவிற்கும் ஐயோ! ஊழியத்தினின்று மனதை விலகச்செய்து, ஆத்துமாக்களை ஜாக்கிரதையற்றவர் களாக்கச் செய்கிற அனைவருக்கும் ஐயோ!....

மனம் சிதறாமல் காத்துக்கொள்ளவேண்டிய மாபெரும் வேலை— தேவனுடைய பார்வையில் தனிப்பட்டவிதத்தில் நாம் எவ்வாறு நிற்கிறோம் என்பதை கவனத்தில் கொள்வதுதான். யுகங்களின் கன்மலைமீது நமது பாதங்கள் பதிக்கப்பட்டிருக் கின்றனவா? ஒரே அடைக்கலமாகிய அவரில் நம்மை நாம் மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறோமா? இரக்கமற்ற சீற்றத்தோடு புயல் வந்து கொண்டிருக்கிறது. அதைச் சந்திக்க நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? கிறிஸ்து பிதாவுடன் ஒன்றாக இருக்கிறதுபோல நாம் கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்கிறோமா? நாம் தேவனுடைய சுதந்திரவாளிகளும் கிறிஸ்துவிற்கு உடன் சுதந்திரவாளிகளுமாயிருக்கிறோமா?....

கிறிஸ்துவின் பண்பு நலனே நம்முடைய பண்பு நலனாக இருக்கவேண்டும். நம்முடைய இதயங்கள் புதுப்பிக்கப்படுகிறதினாலே நாம் மாறுதலையடையவேண்டும். இங்குதான் நம்முடைய ஒரே பாதுகாப்பு இருக்கிறது. ஒரு உயிர்த்துடிப்புள்ள கிறிஸ்தவனை எதுவும் தேவனிடமிருந்து பிரிக்க முடியாது. ★

# மற்றவர்களை இரட்சிப்பதற்காக வாழ்தல்!

**“பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்” —லூக்கா 9:23.**

மிகவும் அதிகமாக உச்சகட்ட அளவில் திளைக்கப்படுகின்ற, தேவனிடமிருந்த நம்மைப் பிரித்து, மற்றவர்களையுந்தொற்றி ஆவிக்குரிய சீர்குலைவுகளை உண்டாக்கக்கூடிய பாவம்—தன்னலமே! சுயத்தை மறுத்தாலன்றி நாம் தேவனிடத்திற்குத் திரும்பமுடியாது. நாம் எதையுமே நாமாகச் செய்யமுடியாது. ஆனால் தேவன் நம்மை பலப்படுத்துவதின்மூலமாக மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காக வாழலாம். அந்த வழியிலே தன்னலம் என்ற தீமையை ஒழித்துவிடலாம். பயனுள்ள தன்னலமற்ற வாழ்க்கையின்மூலமாக அனைத்தையும் தேவனுக்கு அர்ப்பணிக்கவேண்டுமென்ற விருப்பத்தை வெளிப்படுத்த, அஞ்ஞான நாடுகளுக்கு நாம் செல்லவேண்டிய அவசியமில்லை. தன்னலமற்ற இந்த ஊழியத்தைக் குடும்பத்தினரிடையே—சபையிலே—நாம் பழகுகிறவர்கள் மத்தியிலே—மற்றும் யாரோடு தொழில்செய்கின்றோமோ அவர்களிடத்திலே செய்யவேண்டும். அன்றாட வாழ்க்கையின் சாதாரண நடைமுறையிலே சுயம் மறுக்கப்பட்டு கீழாக அடக்கிவைக்கப்பட வேண்டும்.

“நான் அநுதினமும் சாகிறேன்” என்று பவுலால் கூறமுடிந்தது. சின்னச் சின்ன நடக்கைகளிலே ஒவ்வொருநாளும் சுயத்திற்கு மரித்தல் நம்மை வெற்றியாளர்களாக மாற்றுகிறது. மற்றவர்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற அந்த விருப்பத்திலே சுயத்தை நாம் மறக்கவேண்டும். அநேகரிடத்தில் மற்றவர்களுக்காகக் காட்டப்படும் அன்பு திட்டமான விதத்தில் குறைவுபட்டுக் காணப்படுகிறது. உத்தமமாக அவர்களது கடமையைச் செய்தவற்குப்பதிலாக அவர்களது சொந்த இன்பங்களையே நாடித் தேடுகிறார்கள். அவருடைய ஞானத்தைத் தேடி, தங்களுடைய

பொருளினாலும் செல்வாக்கினாலும் மற்றவர்களை ஆசீர்வதிப்பது அவரது பின்னடியார்களின் ஒரு கடமையென்று தேவன் உறுதியாகக் கட்டளையிடுகிறார். தங்களது செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக வருகின்றவர்களுடைய சிந்தனைகளையும் உள்ள நேசங்களையும் உயர்த்தத்தக்கதாக தேவனால் கொடுக்கப்பட்ட இந்த ஞானமானது, தங்களது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்வதற்கு அவர்களுக்கு உதவிசெய்கிறது. மற்றவர்களுக்கு உதவிசெய்வதிலே ஒரு இனிய மனநிறைவை அனுபவிக்கமுடியும். உள்ளான ஒரு சமாதானம் ஒரு போதிய வெகுமதியாக அமையும். மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற—உயரிய—மேன்மையான—ஒரு விருப்பத்தால் தூண்டப்பட்டு செய்பவர்கள் வாழ்வின் பலதரப்பட்ட கடமைகளை உத்தமமாகச் செய்துமுடிப்பதில் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டடைகிறார்கள். இது பூமிக்குரிய ஒரு வெகுமதியைவிட மேலானதொன்றாகும் ஏனெனில் ஒவ்வொரு கடமையும் உத்தம மாகவும் தன்னலமற்ற முறையிலும் செயல்படுத்தப்படும்பொழுது, அந்தக்காரியம் தூதர்களால் கவனிக்கப்பட்டு, வாழ்வின் பதிவேடுகளிலே பிரகாசிக்கின்றது.

பரலோகத்திலே தங்களைப்பற்றியோ, தங்களது சொந்த மகிழ்ச்சியைப்பற்றியோ எவருமே நினைக்கமாட்டார்கள். உத்தமமான-—தூய்மையான அன்பினால் அனைவரும் தங்களைச் சுற்றிலுமிருக்கிற பரலோக ஜீவிகளுடைய மகிழ்ச்சியையே நாடுவார்கள். புதிய பூமியிலே, பரலோகத்தின் சமுதாய உறவை நாம் அனுபவிக்க விரும்புவோமானால் இப்பொழுது—இந்த பூமியிலேயே பரலோகக் கொள்கைகளால் நாம் ஆளப்படவேண்டும். கிறஸ்துவின் குணத்தையுடையோராக இவ்வுலகில் வாழ்ந்து, தேவனை மகிமைப்படுத்துவதே, நாம் நமது உலகில் செய்யவேண்டிய மாபெரும் ஊழியம் ஆகும். ★

# ஜீவனுக்கான வழி!

**“இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்”**

**—மத்தேயு 7:13,14.**

இடுக்கமான பாதையிலே பிரவேசிக்கவேண்டுமென்று கிறிஸ்து நம்மை அழைக்கிறார். அந்தப் பாதையிலே நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் தன்னலத்தை ஒறுத்தல் என்பதாகும். நித்திய சத்தியம் என்ற தளமேடையிலே நிற்கவேண்டுமென்று அவர் நம்மை அழைக்கிறார். போராடவேண்டும். ஆம்! பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக ஊக்கமாக போராடவேண்டும்.

உலகத்தின் முடிவை நாம் நெருங்கிக்கொண்டிருக்கும் பொழுது, துரைத்தனங்களும் அதிகாரங்களும் உயர்ந்த இடங்களிலே காணப்படுகின்ற ஆவிக்குரிய துன்மார்க்கமும் சத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் முழுமையாகக் கொண்டுவரப்படும்பொழுது, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதான அளவிற்கு சாத்தானின் வஞ்சிக்கும் வல்லமை மிகவும் அதிகரிக்கும்பொழுது, சாத்தானின் உபாய தந்திரங்களைப்பற்றி அறிவற்றவர்களாயிருந்துவிடாதபடிக்கு தெய்வீக அறிவின் ஒளியூட்டுதலின்மூலமாக, நமது பகுத்தறிவு கூர்மையாக்கப்பட வேண்டும். தேவன் பரிசுத்த தூதர்களின் ஒத்துழைப்பை நமக்குக் கொடுப்பதின்மூலம் நமது ஊழியம்… ஒரு மகிமையான வெற்றியை அடைவதை சாத்தியமாக்கியிருக்கிறார். ஆனால் சிதறிக்கிடக்கும் ஒரு முயற்சியின்மூலம் வெற்றி கிடைக்காது. சபையிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் இணைந்து செயல்படும் செல்வாக்கே தேவையாயிருக்கிறது.

ஏனோக்கைப்போல தேவனோடு நடந்து கிறிஸ்துவை உலகிற்கு எடுத்துக்காட்டுகிற மனிதர்களே சபையின் இன்றையத் தேவையாகும். மேலான ஒரு படித்தரத்தை சபையின் அங்கத்தினர் அடைவது ஒரு

அவசியமான காரியமாகும். சுயத்தை கண்ணிற்குப் புலப்படாத அளவிற்கு மறைத்து, “கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்”(கலாத்தியர் 2:20) என்று சொல்லும்படியாக வாழ்கிறவர்களுடன் தொடர்புகொள்ள பரலோகத்தின் தூதர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சபையின் வெளிச்சம் உலகத்திற்கு தெளிவான ஒளிக்கதிர்களால் பளிச்சென்று கொடுக்கப்படுமுன்னர், அது மேற்கூறப்பட்டபடியான ஆண்களாலும் பெண்களாலும் இணைந்து உருவாக்கப்பட்டதாயிருக்கவேண்டும். நீதியின் சூரியனைப்பற்றிய நமது கருத்துக்கள் சுயத்தை நாடித்தேடுவதால் இருண்டு மங்கிக்கிடக்கின்றன. அநேகர் சுயத்தில் திளைப்பதால் தங்கள்மீது சாத்தானின் அடக்கியாளுதலை அனுமதிக்கிறார்கள். இவ்வாறு கிறிஸ்து மறுபடியும் புதிதாக சிலுவையில் அறையப்படுகிறார்.

பரலோக இராஜ்யத்தை ஆளுகின்ற பிரமாணங்களுக்கு உண்மையாயிருக்கிறார்களா அல்லது உண்மையற்றவர்களாக இருக்கிறார்களா என்பதை அவர் காணத்தக்கதாக அனைவரும் சோதிக்கப்பட்டு, புடமிடப்படவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாகும். இறுதிவரை சாத்தான் தன்னை ஒரு பொய்யனாகவும், ஒரு குற்றஞ்சாட்டுகிறவனாகவும், ஒரு கொலைகாரனாகவும் வெளிப்படுத்த தேவன் அனுமதிக்கிறார். இவ்வாறு தமது மக்களின் இறுதி வெற்றியானது மிகவும் குறிப்பிடத்தக்கதாகவும் மிகவும் மகிமை பொருந்தியதாகவும் நிறைவானதாகவும் முழுமைபெற்றதாகவும் அமைக்கப்படுகிறது. ★

# கிறிஸ்துவுடன் பங்காளியாக இருத்தல்!

**“நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” –யோவான் 15:5.**

முடிவு சமீபமாயிருக்கிறது! மீந்திருக்கும் காரியங்களை ஒழுங்குபடுத்தவேண்டுமென்று தேவன் சபைக்கு ஒரு அழைப்பு விடுக்கிறார். தேவனோடு சேர்ந்த உடன் ஊழியர்களாக இருக்கும் நீங்கள் மற்றவர்களையும் அந்த இராஜ்யத்திற்கு அழைத்துச் செல்லத்தக்கதாக ஆண்டவர் உங்களுக்கு அதிகாரமளிக்கிறார். நீங்கள் தேவனுடைய ஜீவனுள்ள பிரதிநிதிகளாக உலகத்திற்கு ஒளியின் வாய்க்கால்களாயிருக்கவேண்டும். நீங்கள் ஆத்துமாக்களுக்காகச் செய்யும் மீட்பின் ஊழியத்திலே, உங்களைப் பலப்படுத்தி—நிலைநிறுத்தி—தாங்கிப்பிடிக்க, கிறிஸ்துவிடமிருந்து கட்டளை பெற்ற பரலோகத்தின் தூதர்கள் உங்களைச் சுற்றிலும் இருக்கிறார்கள்....

தெளிவாகத் தெரியத்தக்கவிதத்தில் உலகினின்று விலகி தனித்து நில்லுங்கள். உலகத்திலிருங்கள், ஆனால் உலகத்தாராயிருக்காதீர்கள். நீதியின் சூரியனின் ஒளிக்கதிர்களை பிரதிபலித்து நில்லுங்கள். விசுவாசத்திலே பூமியின் அனைத்து நெடுஞ்சாலைகளிலும் ஒதுக்கமாயிருக்கும் தெருக்களிலும் வெளிச்சத்தை எடுத்துச்செல்லுங்கள்.

நித்தியமாக மிகவும் பிந்திப்போகுமுன்னர் சபைகள் விழிப்படையட்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் தனது தனிப்பட்ட ஊழியத்தை எடுத்தவராக எந்த ஆண்டவரின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறாரோ, அந்த ஆண்டவருக்கு வெற்றியை நிலைநாட்டட்டும். சோம்பேறித்தனமும் அவிசுவாசமுமிருக்குமிடத்தை திடமான விசுவாசமும் ஊக்கமான பயபக்தியும் எடுத்துக்கொள்ளட்டும். விசுவாசம் கிறிஸ்துவைப் பற்றிப்பிடிக்கும்போது, ஆத்துமாவிற்கு சத்தியம் மகிழ்ச்சியைக் கொண்டுவரும். மார்க்கசம்பந்தமான

ஆராதனைகள் மந்தமாகவும் ஆர்வமற்றதாகவுமிருக்காது.... நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் கிறிஸ்தவத்தை ஒவ்வொரு நாளும் செயல்முறையில் காட்டும்பொழுது நீங்கள் ஒரு மேன்மையான அனுபவத்தையடைவீர்கள். இதன் பயனாக பாவிகள் மனந்திரும்புவார்கள்....

ஆ! அனைவரும் விழிப்படைந்து, தங்களது விசுவாசம் ஒரு உயிரோட்டமுள்ள விசுவாசம் என்பதை உலகிற்குக் காட்டினால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இயேசு சீக்கிரம் வரப்போகிறாரென்ற ஒரு முக்கியமான வெளியிடப்படவேண்டிய செய்தி, உலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது. நித்திய உலகின் எல்லைக்கு அருகிலிருக்கிறோமென்று நாம் விசுவாசிப்பதை மக்கள் காணட்டும்.

மானிடப் பிரதிநிதிகளின் விசுவாசத்திற்கு அல்லது அவிசுவாசத்திற்குத்தக்கதாக தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டியெழுப்புதல் என்னும் வேலை ஒன்று குன்றிப்போகும் அல்லது ஊக்கம்பெறும். மானுடம் தெய்வீகத்தோடு ஒத்துழைக்கத் தவறும்பொழுது, ஊழியம் தடங்கலைச் சந்திக்கிறது. “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக” (மத்தேயு 6:10) என்று மனிதர் ஜெபிக்கலாம். ஆனால் அவர்கள் தங்களது ஜீவியங்களிலே இந்த ஜெபத்தை செயல்படுத்தத் தவறுவார்களானால் அவர்களுடைய விண்ணப்பங்கள் பயனற்றுப்போய்விடும். ஆனால் நீங்கள் பெலவீனமாகவும் தவறு செய்பவராகவும் பாவமுள்ளவராகவு மிருந்தபோதிலும் அவரோடு பங்காளியாயிருக்கத்தக்கதான ஒரு சலுகையை உங்களுக்குமுன் வைக்கிறார். தெய்வீகப் போதனைக்கடியிலே வரவேண்டுமென்று உங்களை அழைக்கிறார். கிறிஸ்துவோடு இணைந்தவர்களாக நீங்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்யலாம். “என்னையல்லாமல் உங்காளல் ஒன்றுஞ்செய்யக்கூடாது” என்று கிறிஸ்து கூறினார். ★

# நீங்களே மீட்பரின் பிரதிநிதிகள்!

**“புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோத மாய்ப் பேசும் விஷயத்தில்,அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு,அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ள வர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்” –1 பேதுரு 2:12.**

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்கள் அவருடைய பிரதிநிதிகளாயிருந்து அவருக்காகப் பேசவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.... அவர்கள் யாரையெல்லாம் சந்திக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கத்தக்கதாக பரிசுத்தமாக்கப்பட்ட—தூய்மையாக்கப்பட்ட—புனிதமான மக்களாக அவர்களிருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் தங்களது கொள்கைகளிலும் தங்களது விருப்பம் சார்ந்த காரியங்களிலும் உலகத்தினின்று பிரிந்து வாழ்பவர்களாயிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் தங்களை முற்றிலுமாக உலகத்தினின்று ஒதுக்கிவைத்துக்கொள்ளக்கூடாது. இரட்சகர் மனிதரோடு கலந்து ஒன்றுசேர்ந்து வாழ்ந்தார். தேவனுடைய சித்தத்திற்கு முரணான எந்தக் காரியத்தையும் செய்வதற்கு உற்சாகப்படுத்தாமல், அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தவும் உயர்த்தவும் அவர்களுடன் கலந்து வாழ்ந்து வந்தார்.

“அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்” (யோவான் 17:19) என்று உறுதியாகக் கூறினார். ஆகவே தெய்வீக நறுமணம் உலகத்தைக் கேட்டினின்று பாதுகாப்பதற்காக கிறிஸ்தவன் உப்பைப்போன்று மக்கள் மத்தியிலே தங்கி வாழவேண்டும்.

ஒரு உயர்வான—தூய்மையான—மேன்மையான வாழ்க்கையினின்று வெளிப்படும் வல்லமை மாபெரும் தேவையாகும். கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்களால் என்ன பயன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காண்பதற்கு இந்த உலகம் அவர்களை விழிப்புடன் கவனித்துக்கொண்டிருக்கிறது.... நாம் யாரோடெல்லாம் பழகுகின்றோமோ, அவர்களனைவருடைய உள்ளங்களிலும் வேதாகம மார்க்கத்தைப்பற்றி சாதகமான அல்லது பாதகமான எண்ணப்பதிவுகள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

தேவனும் தூதர்களும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக் கின்றனர். உலகபற்றின்மேல் கிறிஸ்தவத்தினால் கிடைக்கும் அனுகூலம் என்ன என்பதையும், அவர்கள் ஒரு உயர்வான பரிசுத்தமான நிலையிலே ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவரது மக்கள் தங்களது ஜீவியங்களின்மூலமாகக் காட்டவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தாங்கள் ஏற்றுக்கொண்ட சத்தியம் தங்களைப் பரலோக இராஜாவின் பிள்ளைகளாக மாற்றியிருக்கிறது என்பதை அவர்களது வாழ்க்கையில் வெளிப்படுத்துவதைக்காண அவர் ஏங்குகிறார். தமது எல்லையற்ற அன்பும் இரக்கமும் பாய்ந்தோடத்தக்கதான வாய்க்கால்களாக அவர்கள் அமையவேண்டுமென அவர் ஏங்குகிறார்.

தமது சபையிலே தாம் வெளிப்படுத்தப்படுவதற்காக ஏக்கமுள்ள ஆர்வத்தோடு கிறிஸ்து காத்துக்கொண்டிருக்கிறார். மீட்பரின் குணம் அவரது மக்களிலே பூரணமாக உருவாக்கிக் காட்டப்பட்ட பின்னர், அவர் தமக்குச் சொந்தமானவர்களை உரிமை கோரிப் பெற்றுக்கொள்ள வருவார். நமது ஆண்டவருடைய வருகைக்காக நோக்கிக்கொண்டிருப்பதோடல்லாமல் அதைத் துரிதப்படுத்துவது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சிறப்புரிமையாகவும் இருக்கிறது. அவரது பெயரைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் அவருடைய மகிமைக்காக கனிகொடுப்பார்களானால் சுவிசேஷ விதை எவ்வளவு துரிதமாக உலகம் முழுவதிலும் விதைக்கப்பட்டுவிடும்! வெகு சீக்கிரத்தில் கடைசி மாபெரும் அறுவடையும் முதிர்ந்துவிடும்! கிறிஸ்துவும் வந்துவிடுவார்! ★

# உலகத்தால் அங்கீகரிக்கப்படப்போகின்ற நற்குணம்!

**“கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு...” –பிலிப்பியர் 2:15.**

அவரது மக்கள்மூலமாக அவரது இராஜ்யத்தின் கொள்கைகளை வெளிப்படச்செய்வதே தேவனுடைய நோக்கமாகும். அவர்களது வாழ்க்கையிலும் குணத்திலும் இந்தக் கொள்கைகளை வெளிப்படுத்தத்தக்கதாக இவ்வுலகத்தின் பழக்கங்கள் நடைமுறைகள் ஆகியவற்றினின்று அவர்களைப் பிரித்துவைக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.... அவரது சபையிலே நன்மையும் இரக்கமும் நீதியும் தேவனுடைய அன்பும் வெளிப்படுவதை நோக்கிப்பார்த்து, அவரது குணத்தின் ஒரு பிரதிபலிப்பை இந்த உலகம் பெற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கையிலே தேவனுடைய பிரமாணம் இத்தகைய விதத்தில் ஒரு முன்மாதிரியாகக் காட்டப்படும்பொழுது, உலகத்தின் மற்ற எல்லா மக்களையும்விட தேவனை நேசித்து அவரைச் சேவிக்கின்ற மக்களுடைய மேன்மையான நிலையை இந்த உலகங்கூட அங்கீகரிக்கும்.

மற்ற எல்லா மக்களையும்விட ஏழாம்நாள் வருகையினர் சபையின் அங்கத்தினர்கள் கடவுளைப்பற்றி இருதயத்திலும் உரையாடலிலும், பரிசுத்தத்தின் மாதிரிப் படிவங்களாயிருக்கவேண்டும். சாவிற்குரிய மானிடராகிய இவர்களிடத்தில்தான் மிக பக்திவிநயமான சத்தியங்களைக் காக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. கிருபையின்—வல்லமையின்—திறமையின் ஒவ்வொரு நன்கொடையும் தாராளமாக வழங்கப்பட்டிருக்கிறது. வானத்தின் மேகங்கள்மீது அதிசீக்கிரம் வரப்போகின்ற கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக அவர்கள் நோக்கிப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது விசுவாசம் அவர்களது வாழ்க்கையிலே ஆதிக்கஞ்செலுத்தும் ஒரு வல்லமையாக இல்லையென்ற எண்ணத்தை இவ்வுலகத்திற்கு அவர்கள் கொடுப்பார்களானால், அது மாபெரும் அளவில் தேவனை அவமதிக்கும் ஒரு செயலாயிருக்கும்.

சாத்தானுடைய சோதனைகளின் அதிகரிக்கும் வல்லமையால், தேவனுடைய மக்களுக்கு வாழ்கின்ற காலங்கள் முழுவதும் ஆபத்து நிறைந்ததாயிருக்கிறது. எனவே ஒவ்வொரு காலடியையும் நாம் நிச்சயத்தோடும் நீதியோடும் எடுத்துவைக்கத்தக்கதாக, அந்த மாபெரும் போதகரிடம் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அற்புதமான காட்சிகள் நமக்கு முன்பாக விரித்துக்காட்டப்படுகின்றன. இச்சமயத்தில் தேவனுடைய மக்கள் என்று கூறிக்கொள்பவர்களது ஜீவியங்களில் ஒரு உயிருள்ள சாட்சி பகரப்படவேண்டும். இவ்வாறாக, இந்தக் காலத்தில், தீமை எப்பக்கத்திலும் கோலோச்சிக் கொண்டிருக்கும்பொழுதும், ஒரு மக்கள் கூட்டம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக, தங்களுடைய சித்தத்தைப் புறம்பே தள்ளிவிட்டவர்களாக, தங்களது இருதயங்களிலும் ஜீவியங்களிலும் தேவனுடைய பிரமாணம் எழுதப்பட்டவர்களாக இருப்பதை இந்த உலகம் காணவேண்டும்....

அவர்களது நினைவுகள் தூய்மையாகவும் அவர்களது வார்த்தைகள் மேன்மையாகவும் மேம்படுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும். அவர்கள் செய்வது சொல்வது அனைத்திலும் கிறிஸ்துவின் மார்க்கம் பின்னிப் பிணைந்திருக்கவேண்டும். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட-—தூய்மையாக்கப்பட்ட புனிதமான மக்களாக தாங்கள் தொடர்புகொள்கிற அனைவரிடத்திலும் வெளிச்சம் கொடுப்பவர்களாயிருக்கவேண்டும். தங்களது ஜீவியங்களிலே சத்தியத்திற்கு முன்மாதிரிகளாக வாழ்ந்து பூமியிலே ஒரு துதியாக இருக்கவேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். அதைச் செய்துமுடிப்பதற்கு கிறிஸ்துவின் கிருபை போதுமானதாகும். ★

# உலகத்திற்கு தேவைப்படுகின்ற சாட்சி!

**"எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே"**

**—2 கொரிந்தியர் 3:2.**

குணத்தில் முற்றிலும் ஏற்படும் மாற்றமே கிறிஸ்துவின் அன்பு உள்ளே நிலைபெற்றிருக்கிறது என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்தும் ஒரு சாட்சியாயிருக்கிறது. குறைவுள்ள குணமுடையோர்மீது கிருபையின் மீட்பின் வல்லமை செயல்புரிந்து, ஒரே சீரான நிலையில் ஏராளமான கனிகளைக் கொடுத்து விருத்தி செய்வதை அவரது மக்கள் ஏற்படுத்திக்காட்டவேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக செய்யப்படவேண்டிய ஆயத்த வேலை ஒன்று உண்டு. விலகிச் செல்வதற்கு வேராக அமைந்துள்ள தன்னலத்தை, நமது இதயங்களைவிட்டு வெளியேற்றி வெறுமையாக்கவேண்டுமென்று ஆண்டவர் நம்மை வேண்டுகிறார். மிக அதிகமான அளவில் பரிசுத்த ஆவியை நம்மீது பொழியவேண்டுமென்று அவர் ஏங்குகின்றார். சுயத்தைத் துறப்பதின்மூலம் பாதையைத் தெளிவாக்கவேண்டுமென்று அவர் நம்மிடம் கேட்கிறார். சுயத்தை தேவனிடத்தில் சரணடையச்செய்யும்பொழுது நம்முடைய கிறிஸ்தவத் தன்மையற்ற குணம் மற்றவர்களது வழியிலே போட்டிருக்கின்ற இடறுதலுக்கான கற்களைக் காணும்படியாக நமது கண்களைத் திறக்கும். இவைகளையெல்லாம் அகற்றவேண்டுமென்று தேவன் நம்மிடம் வேண்டுகிறார். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது"—யாக்கோபு 5:16.

தாவீது தனது பாவத்தை அறிக்கைசெய்தபின், அவனுக்குக் கிடைத்த மன்னிப்பின் நிச்சயத்தை நாமும் பெற்றுக்கொள்ளலாம். "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்"– சங்கீதம் 51:12,13.

உள்ளத்திலே தேவ கிருபை ஆளுகைசெய்யும்பொழுது, விசுவாசம், தைரியம் கிறிஸ்து காட்டுவதுபோன்ற அன்பு ஆகியவை நிறைந்த சூழ்நிலை ஆத்துமாவைச் சுற்றிலும் காணப்படும். ஆவிக்குரிய வாழ்க்கைக்கு எழுச்சியூட்டும் ஒரு சூழ்நிலை இருக்கும். அதைச் சுவாசிக்கும் அனைவரும் அதை உணருவார்கள்.... கிறிஸ்துவின் மன்னிக்கும் அன்பிலே பங்காளியாயிருக்கும் ஒவ்வொருவரும், ஆவியானவரால் மேம்படுத்தப்பட்டு சத்தியத்திற்கு மனந்திரும்பின ஒவ்வொருவரும், இத்தகைய அருமையான ஆசீர்வாதங்களுக்காக, தாங்கள் தொடர்புகொள்ளும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை உணருவார்கள். அபிஷேகம்பெற்ற போதகர்களால் சந்திக்கக்கூடாமலிருக்கும் ஆத்துமாக்களைச் சென்றடைய ஆண்டவர் இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களைப் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவுடைய மீட்பின் கிருபையை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பேசத்தக்கதாக அவர்கள் தூண்டப்படுவார்கள்.

அவர்கள் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது, தாங்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். அதிகப்படியான கிருபையால் நம்மை நிறைக்கத்தக்கதாக கிருபையை அளிக்கும் சந்தர்ப்பத்தை அவர் நமக்குத் தருகிறார். தேவன் வழங்கியிருக்கும் தாலந்துகளோடும் வசதிகளோடும் செயல்புரியும்போது, நம்பிக்கையும் விசுவாசமும் உறுதியடையும். ஊழியஞ்செய்யத்தக்கதாக அந்த நபர் தெய்வீக செயல்துணையைப் பெற்றுக்கொள்வார். ★

ஏப்ரல் 17

# குறைபாடுகளை தேவன் சரிப்படுத்துகிறபொழுது...!

**"தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்"**
**–2 கொரிந்தியர் 6:1.**

உலகமுழுவதும் நடைபெறும் தேவனுடைய ஊழியத்திலே நாம் பங்காளிகளாக இருக்கவேண்டும். எங்கெல்லாம் ஆத்துமாக்கள் ஆதாயம்பண்ணப்படவேண்டுமோ அங்கிருந்து அநேகக் குமாரர்களும் குமாரத்திகளும் கொண்டுவரப்படத்தக்கதாக நாம் நமது உதவிக்கரங்களை நீட்டவேண்டும். முடிவு சமீபம். இந்தக் காரணத்திற்காக ஊழியத்திற்கு உதவக்கூடிய ஒப்படைக்கப்பட்ட அனைத்து திறமைகளையும் அனைத்து செயல் துணைகளையும் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தவேண்டும்....

முடிவு சமீபமாக நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இரக்கத்தின் கடைசி தூதைப் பெற்றிருப்பவர்கள் மற்றவர்களுக்காகவும் மற்றவர்களுடைய இரட்சிப்பிற்காகவும் கவலையற்றிருக்கும் வேளையில், தாங்கள் ஒன்றாகக் கூடுவதையும், தங்களது சொந்த ஆத்துமாக்களின் நன்மைக்காக மாத்திரம் கூட்டங்களுக்கு வருவதையும், அங்கு பிரசங்கங்கள் அதிகமாக இல்லாவிடில் அதிருப்தியடைகிறதையும் பார்க்கும்போது, தூதர்கள் எப்படி உணருவார்கள்? உயிரோட்டமுள்ள விசுவாசத்தினால் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கும் அனைவரும் அவருடைய தெய்வீகத் தன்மைக்குப் பங்காளிகளாயிருப்பார்கள். தொடர்ந்து அவரிடமிருந்து ஆவிக்குரிய ஜீவனைப்பெற்றுக்கொண்டிருப்பார்கள். அவர்களால் அமைதியாக இருக்க முடியாது.

உயிர் நிலைபெற்றிருக்கும்போது, தன்னை எப்பொழுதும் செயலிலே காட்டுகிறது. இருதயம் உயிரோடு இருக்குமானால் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் ஜீவனைக் கொடுக்கும் இரத்தத்தை அனுப்பிக்கொண்டிருக்கும்.

யாருடைய இருதயங்களெல்லாம் ஆவிக்குரிய உயிரோட்டத்தால் நிறைந்திருக்கிறதோ, அவர்கள் அதை வெளிப்படுத்தத்தக்கதாக எவரும் அவர்களை வற்புறுத்த அவசியமில்லை. அவர்களிடமிருந்து தெய்வீக ஜீவனானது கிருபையின் வளப்பமிக்க வேகத்தில் பாய்ந்தோடும். அவர்கள் ஜெபிக்கும்பொழுதும் பேசும்பொழுதும் ஊழியஞ்செய்யும்பொழுதும் தேவன் மகிமைப்படுகிறார்.

மிகவும் கூர்மதி படைத்த அல்லது மிகவும் தாலந்துகள் நிறைந்தவர்களது ஊழியந்தான் மிகவும் மேம்பட்ட நீடித்து நிற்கின்ற பலன்களைக் கொடுக்கும் என்பதில்லை. மிகவும் திறமைவாய்ந்த ஊழியர்கள் யார்? “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்” (மத் 11:29) என்று இயேசு கொடுக்கும் இந்த அழைப்பிற்கு ஆதரவாகப் பதில் தருகிறவர்களே மிகத் திறமையான ஊழியர்கள் ஆவர்.

தேவனால் அறிவாற்றலின் தாலந்துகளை அடையப்பெற்ற வர்கள் அவருடைய மகிமைக்காக அந்தத் தாலந்துகளை பயன்படுத்த மறுப்பார்களானால், அவர்களைப் பரீட்சித்துப்பார்த்து, புடமிட்டு, பின்னர் அவர்களது சொந்தக் கற்பனை வளத்திற்கே விட்டுவிடுவார். பின்னர் இந்த அளவிற்கு வளமான வாய்ப்பு நலன்களைப் பெறாதவர்கள் மற்றும் அதிக அளவில் தங்கள்மீது நம்பிக்கைவைக்காதவர்களை எடுத்து, பெலவீனமானவர்களை செயல் திறமுடையவராக மாற்றுகிறார். ஏனெனில் தங்களால் செய்யக்கூடாத காரியங்களைத் தங்களுக்காக தேவன் செய்யவேண்டுமென்று அவர்மீது அவர்கள் முழு நம்பிக்கையையும் வைக்கிறார்கள். முழு மனதோடு செய்யப்படும் இந்த சேவையை தேவன் ஏற்றுக்கொள்வார். அவர்களிடம் காணப்படும் குறைபாடுகளை அவரே சரிப்படுத்திவிடுவார். உங்களது பரலோக எஜமானரைப்பற்றி நீங்கள் எத்தகைய அறிக்கையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தூதர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்கின்றனர். ★

ஏப்ரல் 18

# வல்லமையுடன் பிரசங்கித்தல்!

**"அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது..."**

**—மத்தேயு 3:1,2.**

யோவான் ஸ்நானகன் தனது வனாந்தர வாழ்க்கையின் பொழுது தேவனால் போதிக்கப்பட்டார். தேவனைப்பற்றிய வெளிப்படுத்தல்களை இயற்கையின் வாயிலாகக் கற்றுக்கொண்டார். தெய்வீக ஆவியானவரின் ஆலோசனைக்கடியில் தீர்க்கதரிசிகளின் புத்தகச்சுருள்களைப் படித்தார். பகலிலும் இரவிலும், அவரது உள்ளமும் இதயமும் ஆத்துமாவும் அந்த பரலோகத்தின் தரிசனத்தால் நிரப்பப்படும்வரை, கிறிஸ்துவே அவரது பாடமாகவும் தியானமாகவும் இருந்தார்.

இராஜாவை அவரது அழகிலே நோக்கிப்பார்த்தார். எனவே சுயம் முற்றிலும் காணப்படாமற்போயிற்று. அந்தப் பரிசுத்தத்தின் மகா மேன்மையை அவர் கண்டார். எனவே தாம் தகுதியற்றவர் திறமையற்றவர் என்பதை அறிந்துகொண்டார். அவர் கூறியறிவிக்க வேண்டியது தேவனுடைய தூதாகும். தேவனுடைய வல்லமையிலும் அவருடைய நீதியிலுந்தான் அவர் நிலைநிற்க வேண்டியிருந்தது. மானிடர்களைக்கண்டு பயப்படாதவராக பரலோகத்தின் தூதுவராக வெளியே செல்வதற்கு அவர் ஆயத்தமாக இருந்தார். ஏனெனில் அவர் தெய்வீகத்தை நோக்கிப்பார்த்திருந்தார். இராஜாக்களுக்கு இராஜாவின் முன்பாக நடுக்கத்தோடு பணிந்து நின்றதினால், இவ்வுலகத்தின் அரசர்களின் முன்னிலையிலே பயமின்றி அவரால் நிற்கமுடிந்தது.

யோவான் ஸ்நானகன் விரிவான தர்க்கங்களிலோ அல்லது நயமாகப் புனையப்பட்ட கருத்துக்களிலோ தமது செய்திகளைக் கூறியறிவிக்கவில்லை. அவருடைய தூது அதிர்ச்சி கொடுக்கக் கூடியதாகவும் கடுமையானதாகவும் இருந்தது. எனினும் அந்தச் செய்திகள் நம்பிக்கை நிறைந்தவைகளாக இருந்தன. வனாந்தரத்திலிருந்து, "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்தேயு 3:2) என்ற அவரது குரல் கேட்டது. ஒரு

புதிய விசித்திரமான வல்லமையோடு அந்தச்செய்தி மக்களை அசைத்தது. நாடு முழுவதும் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. திளான மக்கள் வனாந்தரத்திற்குச் சென்றார்கள்.

வான மேகங்களின்மீது கிறிஸ்து இரண்டாம் முறையாக வருவதற்கு சற்றுமுன்னர் உள்ள இந்தக் காலத்திலே யோவான் ஸ்நானகன் செய்த ஊழியத்தைப்போன்ற ஒரு ஊழியம் செய்யப்பட வேண்டும். ஆண்டவருடைய அந்த மகா நாளிலே நிற்கத்தக்கதாக ஒரு கூட்டத்தை ஆயத்தஞ்செய்வேண்டுமென்று அதற்காக மனிதரை தேவன் அழைக்கிறார்.... கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை விசுவாசிக்கின்ற மக்கள் கூட்டமாக இருக்கின்ற நாம் எடுத்துச்செல்ல வேண்டிய ஒரு தூது உண்டு. "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" (ஆமோஸ் 4:12) என்பதே அது. நம்முடைய தூது யோவான் ஸ்நானகனுடைய தூதைப்போன்று ஒளிவுமறைவற்றதாக—நேரடியானதாக இருக்கவேண்டும். அவன் இராஜாக்களை அவர்களது அக்கிரமத்திற்காகக் கடிந்துகொண்டான். தனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தபோதிலும், தேவனுடைய வார்த்தையைக் கூறியறிவிக்கத் தயங்கவில்லை. இந்தக் காலத்தில் நம்முடைய ஊழியமும் உத்தமமாகச் செய்யப்பட வேண்டும்.

யோவான் கொடுத்ததைப்போன்ற ஒரு தூதை நாம் கொடுக்கவேண்டுமானால் அவனுக்கிருந்ததைப்போன்ற ஆவிக்குரிய அனுபவம் நமக்கிருக்க வேண்டும். அதே வேலையானது நம்மிலே செய்யப்படவேண்டும். நாம் தேவனை நோக்கிப்பார்க்கவேண்டும். அவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, சுயம் காணப்படாமல் மறைந்துபோகிறது. ★

# தேவ ஆட்டுக்குட்டி!

**"...இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" –யோவான் 1:29.**

மானுடத்திற்கே உரித்தான பொதுவான வெலவீனங்களும் குறைகளும் இயல்பிலேயே யோவான் ஸ்நானகனுக்கு இருந்தது. ஆனால் தெய்வீக அன்பின் தொடுதல் அவனை முற்றிலுமாக மாற்றிவிட்டது. கிறிஸ்து தமது ஊழியத்தை ஆரம்பித்தபின்னர் யோவானின் சீடர்கள் அவனிடத்தில் வந்து, எல்லா மனிதரும் ஒரு புதிய போதகரை பின்பற்றிச் செல்கிறார்கள் என்று குறைகூறி முறையிட்டார்கள். யோவான் தனக்கும் மேசியாவிற்குமுள்ள தொடர்பை எவ்வளவு தெளிவாகப் புரிந்திருந்தானென்றும், யாருக்காக வழியை ஆயத்தம்பண்ணினானோ அந்த ஒருவரை மகிழ்ச்சியோடு வரவேற்றான் என்பதையும் தெளிவுபடுத்தினான்.

"யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான். நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று. அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (யோவான் 3:27 –30) என்றார்.

விசுவாசத்திலே மீட்பரை நோக்கிப்பார்த்த யோவான், சுயத்தை விட்டொழிக்கும் அந்த உயர்வான நிலைக்கு எழும்பினான். மனிதரை தன் பக்கமாக கவர்ந்து இழுக்க அவன் முயற்சிக்கவில்லை. ஆனால் அவர்களது நினைவுகளை தேவ ஆட்டுக்குட்டியின்மீது தங்கும் அளவிற்கு உயர்வாக மேலும் உயர்வாக உயர்த்த முனைந்தான். அவன் ஒரு குரலாக, வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தமாகவே இருந்தான். இப்பொழுது மகிழ்ச்சியோடு மௌனத்தையும் மறைவான ஒதுக்கிடத்தையும்

ஏற்றுக்கொண்டான். ஜீவனின் ஒளியாகிய அவரிடத்திற்கு அனைவரது கண்களும் திரும்பும்படி அவ்வாறு செய்தான்.

தேவனுடைய தூதுவர்களாக தங்களது அழைப்பிற்கு உண்மையாக இருப்பவர்கள், தங்களுக்கு நன்மதிப்பைத் தேடமாட்டார்கள். கிறிஸ்துவிற்காகக் கொண்ட அன்பிலே சுயத்தின்மீது வைத்திருக்கும் அன்பு அமிழ்ந்துபோய்விடும். “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகன் கூறி அறிவித்ததுபோல தங்களுடைய பணியும் கூறியறிவித்தலே என்பதை நன்றாக விளங்கிக்கொள்வார்கள். அவர்கள் இயேசுவை உயர்த்திக் காட்டுவார்கள். அவரோடு சேர்ந்து மனித இனமும் உயர்த்தப்படும்....

சுயத்தை வெளியே தள்ளி வெறுமையாக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசியின் ஆத்துமா தெய்வீக ஒளியினால் நிறைந்திருந்து ... மீட்பரின் மகிமையைக் குறித்து சாட்சிபகர்ந்தது.... கிறிஸ்துவானவரின் இந்த மகிமையிலே அவரது பின்னடியார்கள் அனைவரும் பங்கடைவார்கள். சுயத்தை வெளியேற்றி இருதயத்தை வெறுமையாக்க நாம் விருப்பத்தோடு இருந்தால் மாத்திரமே பரலோக ஒளியைப் பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய அனைத்து நினைவுகளையும் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதற்குச் சிறைப்படுத்திக் கொண்டுவர சம்மதித்தால் மாத்திரமே தேவனுடைய குணத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். விசுவாசத்திலே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வோம். இதைச் செய்கிற அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவர் மட்டில்லாத அளவிற்குக் கொடுக்கப்படுகிறார். “ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்”—கொலோசெயர் 2:9,10. ★

ஏப்ரல் 20

# சீர்திருத்தத்திற்கான தேவ அழைப்பு!

**“பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத் திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற் கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.” —லூக்கா 1:17.**

நீதிமான்களின் ஞானத்திற்கு மக்களைத் திருப்பத்தக்கதாகவும், ஆண்டவருக்கு வழியை ஆயத்தஞ்செய்வதற்காகவும், எலியாவின் வல்லமையும் ஆவியுமுடையவராக யோவான் ஸ்நானகன் புறப்பட்டுச்சென்றார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தஞ்செய்யும்படி மக்கள்முன் வைக்கத்தக்கதாக பரிசுத்த சத்தியங்களை யாரிடம் ஒப்படைத்திருக்கிறாரோ, கடைசி காலத்தில் வாழும் அவர்களுக்கு யோவான் ஸ்நானகன் ஒரு பிரதிநிதியாக இருக்கிறார்....

கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ணத்தக்கதாக எலியாவின் ஆவியோடு யோவான் வந்ததுபோல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணத்தக்கதாக இருப்பவர்கள், உத்தமமான எலியாவைக்கொண்டு சுட்டிக்காட்டப்படுகிறார்கள். சீர்திருத்தம் என்ற அந்த மாபெரும் பொருள் தூண்டப்பட்டு, பொதுமக்களுடைய சிந்தனை உணர்த்தப்படவேண்டும். தேவனுடைய மக்களை அவர்களது விக்கிரக வணக்கத்தினின்றும், பெருந்திண்டியிலிருந்தும், உடை போன்ற காரியங்களுக்காகச் செய்யப்படும் ஊதாரித்தனமான செலவுகளினின்றும் திருப்புவதற்காக எல்லாவற்றிலும் தன்னடக்கமென்ற செய்தி தூதுடன் இணைக்கப்பட வேண்டும்.

சீர்கேடுகள் நிறைந்த இந்தக் காலத்தில் வாழ்கின்ற மக்களுடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கக்கூடிய ஊதாரித்தனமான பழக்கங்களுக்கு மாறாக, தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு நடத்தி வரப்படுபவர்களாகிய

நீதிமான்களிடத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற சுயமறுப்பு, தாழ்மை, தன்னடக்கம் ஆகிய காரியங்கள் அந்த மக்களுக்கு முன்பாக வைக்கப்படவேண்டும். எப்படி கையானது உடலோடு இணைந்திருக்கிறதோ, அதைப்போன்று மூன்றாம் தூதனின் தூதோடு ஆரோக்கியச் சீர்திருத்தம் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கவேண்டும். இத்தகைய முக்கியமான பொருள் அலட்சியஞ்செய்யப்படுகிறது. உடல் மற்றும் ஒழுக்கச் சீர்கேட்டிற்குக் காரணம் இதை அலட்சியஞ்செய்வதுதான் என்பதைவிட, வேறு எதுவுமிருக்கமுடியாது. இன்சுவை கவர்ச்சிகளிலும் இச்சைகளிலும் திளைப்பவர்கள் கொடுக்கப்படும் வெளிச்சத்திற்கு தங்களது கண்களை மூடிக்கொள்கிறார்கள். தாங்கள் விட்டுவிட விரும்பாத பாவம் நிறைந்த இன்பத் தோய்வுகள் தேவனுக்கு முன்பாக குற்றமாயிருக்கிறது என்பதை அவர்கள் காண்கிறார்கள்....

தேவனுடைய அருள் அவருடைய மக்களை உலகப் பிரகாரமான ஊதாரித்தன பழக்கங்களிலிருந்தும், இன்சுவைக் கவர்ச்சிகள் இச்சைகளில் திளைப்பதினின்றும் வெளியேற்றி, அனைத்திலும் சுயமறுப்பு மற்றும் தன்னடக்கம் ஆகிய தளமேடையில் நிற்கச்செய்யத்தக்கதாக வழி நடத்திக்கொண்டிருக்கிறது. தேவன் வழிநடத்துகிற மக்கள் ஒரு தனி இயல்புடைய மக்களாக இருப்பார்கள். அவர்கள் உலகத்தாரைப்போல இருக்கமாட்டார்கள். தேவனுடைய வழிநடத்துதல்களை அவர்கள் பின்பற்றுவார்களானால், அவரது சித்தத்திற்கு தங்களது சித்தத்தை ஒப்புக்கொடுத்து, அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவார்கள்.... கிறிஸ்து இருதயத்திலே வாசஞ்செய்வார்.... உங்களது சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றார். ★

# நலவியல் வாழ்வை முன்னேற்றமடையச் செய்யுங்கள்!

**“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை” –ரோமர் 12:1.**

உடல் மனம் மற்றும் ஒழுக்கத்தின் ஆற்றலை இழக்கச்செய்கின்ற பழக்கங்களில் தொடர்ந்து திளைத்துக்கொண்டே ஒரு மனிதன் தனது உடலை தேவனுக்குப் பிரியமான பரிசுத்த ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பது கூடாத செயலாகும். மீண்டும் அப்போஸ்தலனாகிய பவுல்: “நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” (ரோமர் 12:2) என்கிறார்.

குணத்தின் நீதிக்கும் அல்லது தூய்மைக்கும் குறிப்பாக கிருபையில் வளர்வதற்கும் எதிர்த்துநிற்கின்ற உலகில் நாமிருக்கின்றோம். எங்கு பார்த்தாலும் சீர்கேட்டையும் ஊழலையும் உருக்குலைவையும் பாவத்தையுமே காண்கிறோம். சாவாமை என்னும் ஈவைப் பெற்றுக்கொள்வதற்கு சற்று முன்பாக, நம்மிலே நிச்சயமாக நிறைவேற்றப்படவேண்டிய வேலைக்கு இவையெல்லாம் எவ்வளவு எதிராகக் காணப்படுகின்றது! இந்தக் கடைசி நாட்களிலே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சுற்றிலும் காணப்படும் களங்கங்களுக்கு மத்தியில் கறைப்படுத்தப்படாதவர்களாக திடமாக நிற்கவேண்டும். அவர்களது சரீரங்கள் பரிசுத்தமாக்கப்படவேண்டும். அவர்களது குணங்கள் தூய்மையாயிருக்கவேண்டும். இந்த வேலை நிறைவேற்றப்படவேண்டுமானால், இக்காரியம் ஊக்கத்தோடும் புரிந்துகொள்ளுதலோடும் உடனடியாகச் செய்யப்படவேண்டும். தேவனுடைய

ஆவியானவரின் முழுமையான கட்டுப்பாடு இருக்கவேண்டும். ஒவ்வொரு செயலும் அவரது செல்வாக்கினால் இயக்கப்படவேண்டும்.

ஆண்டவரது வருகைக்கு ஒரு கூட்டம் மக்களைத் தகுதிப்படுத்துவதற்காக செய்யப்பட வேண்டிய ஒரு மாபெரும் ஊழியம் சுகாதார சீர்திருத்தமாகும். அது அந்த ஊழியத்தின் ஒரு கிளையாகும். தேவனுடைய பிரமாணத்தை மீறாமல், மிகக்கேடான இன்சுவைக் கவர்ச்சிகளிலும் சிற்றின்பம் சார்ந்த இச்சைகளிலும் திளைத்து இயற்கைப் பிரமாணத்தை ஆண்களும் பெண்களும் மீறமுடியாது. அவர் நமது உயிர்த்துடிப்பான உடலிலே நிலைநாட்டி வைத்திருக்கும் பிரமாணங்களை மீறுவதினால் ஏற்படும் பாவநிலையை தெளிவாகப் புரிந்துகொள்ளத்தக்கதாக சுகாதார சீர்திருத்தத்தின் ஒளியை நம்மீது பிரகாசிக்கும்படி அவர் அனுமதித்திருக்கிறார்....

இயற்கையின் பிரமாணத்தை எளிதாக்குவதற்கும் அதற்கு கீழ்ப்படியும்படித் தூண்டுவதற்கும் இந்தப் பணி மூன்றாம் தூதனின் தூதுடன் இணைந்து செல்கிறது. இந்தப் பொருள் கிளர்ச்சியை உண்டுபண்ணவும், பொதுமக்களின் மனம் அதை நுட்பமாக விசாரிக்கவும்வேண்டுமென்று தேவன் திட்டமிடுகிறார். பாவம் நிறைந்த—உடல் நலத்தை அழிக்கின்ற—மூளையை வலுவிழக்கச் செய்கின்ற பழக்கங்களின் வல்லமைக்கடியில் இருக்கும்போது, ஆண்களும் பெண்களும் பரிசுத்த சத்தியங்களைச் சரியாக மதிப்பீடுசெய்ய முடியாது....

தேவன் ஒரு நபருக்குக் கொடுத்த சுகாதார சீர்திருத்தம்பற்றிய வெளிச்சத்தை, அந்த நபர் நெஞ்சார நேசிப்பாரானால், நித்திய வாழ்விற்குத் தகுதியாகும்படி சத்தியத்தின் மூலமாக பரிசுத்தமாகுதலின் பணிக்கு அந்த உடல் நலவியல் சீர்திருத்தம் ஒரு முக்கியமான உதவியாக அமைகிறது. ★

# சுயத்தை மறத்தல் என்பது சிறந்த பண்பு!

**"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"**
**—கலாத்தியர் 2:20.**

விசுவாசத்தினாலே பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவின் கிருபையை தம்முடையதாக்கிக்கொண்டார். இந்தக் கிருபை அவரது ஆத்துமாவின் அத்தியாவசியத் தேவைகளையெல்லாம் வழங்கியது. அந்த பரலோக ஈவை அவர் விசுவாசத்தினாலே பெற்றுக்கொண்டார். வெளிச்சத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு அதைப் பங்காகக் கொடுத்தார். இதுவே நமக்குத் தேவையான அனுபவமாகும்.... இந்த விசுவாசத்திற்காக ஜெபியுங்கள். அதற்காக முயற்சி செய்யுங்கள். அதை தேவன் உங்களுக்குக் கொடுப்பார் என்று நம்புங்கள்.

இந்த நம்முடைய உலகத்திலே ஒரு மாபெரும் ஊழியம் நடைபெற வேண்டியதிருக்கிறது. இது கனவுலகமல்ல. நமக்கு முன்பாக ஜீவனுள்ள உயிர்த்தோற்றங்கள் இருக்கின்றன. எங்கணும் சாத்தானுடைய வல்லமையின் வெளிப்படுத்தல்கள் காணப்படுகின்றன. நம்மை பழைய நிலைக்குக்கொண்டுவந்து, உயர்த்துவதற்காக உழைக்கின்ற அவரோடு நாம் இணைந்து வேலைசெய்வோம். கிறிஸ்துவிற்காக உழைக்கின்ற நபர் அனைத்து வல்லமைகளுக்கும் ஊற்றாகிய அவருடைய வல்லமையை புதிதாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.... கிறிஸ்தவர்கள் சிந்தனை ஆற்றலையும் திடமுள்ள சித்தத்தையும் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதினால் வருகின்ற அறிவையும் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். அவர்களுடைய உள்ளங்களை

அற்பமான காரியங்களால் நிரப்புவது கூடாது. ஒவ்வொரு நாளும் அவர்கள் ஆவிக்குரிய வல்லமையிலே புதுப்பிக்கப்படவேண்டும்.

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்" என்று சொன்ன ஆண்டவரிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். அவரால் போதிக்கப்பட்டிருந்தால் நீங்கள் இளைப்பாறுதலைக் கண்டடைவீர்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் தேவனுடைய காரியங்களிலே ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்; அவருடைய மீட்பின் மகத்துவத்தையும் அவரோடு கொண்டிருக்கும் ஒரு ஐக்கியத்தினால் வரும் மகிமையையும் நன்றாகப் புரிந்துகொள்வீர்கள். கிறிஸ்துவைப்போன்று எப்படி வாழ்வது என்பதைத் தொடர்ந்து நன்றாகக் கற்றுக்கொள்வீர்கள். தொடர்ந்து நீங்கள் அதிகமாக மீட்பரைப்போன்று வளருவீர்கள்.

நாம் சுயத்திற்கு மரிப்போமானால், கிறிஸ்து நமக்கு என்னவாயிருக்கமுடியும், நாம் அவருக்கு என்னவாயிருக்கமுடியும் என்பதை விரிவான கண்ணோட்டத்தோடு நோக்குவோமானால், கிறிஸ்தவ சகோதரத்துவ இணைப்புகளிலே நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவோமானால் மாபெரும் வல்லமையோடு நம்மூலமாக தேவன் கிரியைசெய்வார். அதன்பின்னர் சத்தியத்தின் மூலமாக தேவன் கிரியை செய்வார். அதன்பின்னர் சத்தியத்தின் மூலமாக நாம் பரிசுத்தமாக்கப்படுவோம். தேவனாலே நிச்சயமாக நாம் தேர்ந்தெடுக்கப்படுவோம். அவருடைய ஆவியினாலே நாம் கட்டுப்படுத்தப்படுவோம். வாழ்வின் ஒவ்வொரு நாளும் நமக்கு மிகவும் அருமையானதாயிருக்கும். ஏனெனில் மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக நமக்கு ஒப்படைக்கப்பட்ட ஈவுகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அதிலே நாம் காண்போம்.

மற்றவர்களுக்காகச் செய்கின்ற அன்பின் சேவையிலே நாம் சுயத்தை மறந்துவிடவேண்டும்.... செய்கின்ற சில இரக்கத்தின் செயல்கள் நமக்கு ஞாபகமில்லாதிருக்கலாம்.... ஆனால், ஆத்துமாக்களின் மீட்பிற்காகச் செய்யப்பட்ட ஒவ்வொரு செயலையும், தேவனுடைய பிள்ளைகளின் ஆறுதலிற்காகப் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நித்தியம் பிரகாசத்தோடு கொண்டுவரும். கிறிஸ்துவிற்காகச் செய்யப்பட்ட இந்தச் செயல்கள் நித்திய காலத்திற்கும் நமது மகிழ்ச்சியின் ஒரு பங்காக இருக்கும். ★

ஏப்ரல் 23

# வாலிபர்கள் தேவனுடைய கருவிகள்!

**"தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" —புலம்பல் 3:27.**

வாலிபர்கள் தங்களது சக்தியோடும் உயிர்த்துடிப்போடும், சுயமறுப்பிலும் தியாகத்திலும் துன்பத்திலும் தம்மோடு பங்குகொள்ளத்தக்கதாக அவர்களை தேவன் அழைக்கின்றார். அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வார்களானால் எந்த ஆத்துமாக்களுக்காக அவர் மரித்தாரோ, அந்த ஆத்துமாக்களுக்காக சேவை செய்கின்ற உபகரணங்களாக அவர்களை மாற்றுவார். சிலுவையில் அடிக்கப்பட்ட அந்த இரட்சகரை சேவிக்கத்தக்கதான நிபந்தனைகளைப்பற்றி முழு அறிவையும் பெற்று, அதற்காக தாங்கள் கொடுக்கவேண்டிய விலையை உணர்ந்தவர்காளக (பாடு அனுபவிக்கவேண்டும் என்பதை) அந்த ஊழியத்திற்குள் பிரவேசிப்பார்களானால் அவர் அவர்களை ஏற்றுக்கொள்வார்....

நமது சொந்த இருதயங்களை தேவனுக்கு இசைவாகக்கொண்டுவருவதே நமது முதல் வேலையாகும். அப்பொழுது தான் மற்றவர்களுக்காக ஊழியஞ்செய்ய நாம் ஆயத்தமாகிறோம். முந்தைய நாட்களிலே உற்சாகமும் ஊக்கமுமுள்ள ஊழியர்களின் மத்தியிலே தங்களது இருதயங்களை உய்த்தாராய்ந்து சோதிக்கும் தன்மை மிக அதிகமாகக் காணப்பட்டது. அவர்கள் ஒருங்கிணைந்து ஒருவருக்கொருவர் ஆலோசனைகொடுத்து, தெய்வீக வழிகாட்டுதலை அறியத்தக்கதாக தாழ்மையாக ஜெபஐக்கியத்தில் ஊக்கமாக ஈடுபட்டார்கள்.... நமது விசுவாசத்தின் ஆரம்ப நாட்களைவிட கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. ஒவ்வொரு நாள் கடந்துசெல்லும்பொழுதும் எச்சரிப்பின் செய்தியை உலகத்திற்குக் கொடுக்கும் நாட்களில் ஒருநாள் குறைந்துவிடுகிறது. இன்று தேவனோடு மன்றாடி பரிந்துபேசி ஜெபித்தலும்,

அதிகமான தாழ்மையும் தூய்மையும் விசுவாசமும் காணப்படுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

தவறான கருத்துக்கள் எனப்படும் இருளிலே இருப்பவர்களுக்கு தேவனுடைய வசனத்தை எடுத்து விளக்கிக்காட்டவேண்டிய அந்த மாபெரும் உயரிய பணியை நமது எஜமானருக்காக நாம் செய்யவேண்டியதிருக்கிறது. வாலிப நண்பர்களே, உங்களிடம் ஒரு பரிசுத்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தால் எப்படி நடந்துகொள்வீர்களோ அப்படி நடந்துகொள்ளுங்கள். உங்களில் நிலைத்திருக்கும் நம்பிக்கைக்கான ஒரு காரணத்தை, கேட்கின்ற ஒவ்வொருவருக்கும் உடனே கொடுக்கிற அளவிற்கு, வேதத்தைக் கற்றுத்தெளிந்த மாணவர்களாக நீங்கள் இருக்கவேண்டும். உங்களது மெய்யான கிறிஸ்தவ மேன்மைக்கு ஏற்றபடி, உங்களிடத்தில் மக்களின் நன்மைக்கு சாதகமான ஒரு சத்தியம் இருக்கிறது என்பதற்கான ஆதாரத்தைக் காட்டுங்கள். இந்தச் சத்தியம் உள்ளான ஆத்துமாவிலே கிரியைசெய்திருக்குமானால், ஒரு கிறிஸ்தவன் மாத்திரமே உடைமையாகப் பெற்றிருக்கக்கூடிய அத்தகைய முகபாவத்திலும் நடந்துகொள்ளும் முறையிலும் அமைதியான—மேன்மையான—தன்னடக்கமான நிலையிலும் சமாதானத்திலும் அது தன்னை வெளிப்படுத்திக்காட்டும். மெய்யான தாழ்மையுள்ளவர்களிடத்திலும், சுவிசேஷத்திலே வெளிப்படுகின்ற சத்தியங்களால் மனங்கள் விரிவடைந்திருப்பவர்களிடத்திலும், மற்றவர்களால் தெளிவாக உணரப்படுகின்ற அளவிற்கு ஒரு செல்வாக்கு உணரப்படும். உள்ளங்களிலும் இதயங்களிலும் அவர்கள் ஒரு எண்ணப்பதிவை ஏற்படுத்துவார்கள். நமது வாலிபர்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசுவைப் பின்பற்றுவதற்கு வழிநடத்தக்கூடிய சுத்தமான மார்க்கத்தின் ஆவியினால் நிறையப்பெற்றிருப்பதைவிட, வேறு எந்தவிதமான உயரிய விருப்பமும் எனக்குக் கிடையாது. கிறிஸ்துவின் வாலிப சீடர்களே, கொள்கையினால் அடக்கியாளப்பட்டவர்களாக—பரிசுத்த ஆவியாகிய உடைகளை அணிந்தவர்களாக—புறப்பட்டுச்செல்லுங்கள். எந்த இடத்தில் அதிக அளவில் பயனுள்ளவர்களாயிருப்பீர்களோ அந்த இடத்தில் உங்களது தாலந்திற்குத்தக்கவிதத்தில் பொருத்தமான ஒரு பதவியைப் பெற்றுக்கொள்ள உங்களது மீட்பர் உங்களை நடத்துவார். கடமையின் பாதையிலே, அந்தந்த நாளிற்குப் போதுமான கிருபையை நீங்கள் நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளலாம். ★

# அனைத்து வயதினருக்குமான ஓர் ஊழியம்!

**“பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்” –1 யோவான் 2:14.**

வாலிபர்கள் அநேகத் துறைகளிலே பயனுடைய முயற்சிக்கான சந்தர்ப்பத்தைக் காணலாம். சுவிசேஷத்தின் இந்த இறுதிப்பணியிலே உடமையாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய பரந்து விரிந்த ஒரு பணித்தளம் நமக்கு உண்டு. சாதாரண மக்கள் மத்தியினின்று என்றுமில்லாத அளவிற்கு அதிகமான ஊழியத்தைச் செய்யத்தக்கதான உதவியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஈடுபடுத்தப்படவேண்டும். வாலிபர்களும் அவர்களைவிட வயதில் மூத்தவர்களும் வயல்களினின்றும், திராட்சைத்தோட்டங்களினின்றும் தொழில் பட்டறைகளினின்றும் அழைக்கப்பட்டு, தூதைக் கொடுப்பதற்காக எஜமானரால் அனுப்பப்படுவார்கள். இவர்களில் அநேகருக்கு கல்விக்காகச் சொற்பமான சந்தர்ப்பமே கிடைத்திருந்திருக்கலாம். ஆனால் கிறிஸ்து அவரது நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக அவர்களுக்கு ஆற்றலைக் கொடுப்பதற்கு அவர்களிலே ஒரு சிறப்பான தகுதியைக் காண்கிறார். அவர்கள் ஊழியத்திலே தங்களது முழுஇருதயத்தையும் வைப்பார்களானால் தொடர்ந்து கற்றுக்கொள்ள விரும்புவார்களானால் அவருக்காக உழைக்கும்படி அவர் அவர்களைத் தகுதிப்படுத்துவார்.

உங்களது தாலந்துகள் பெருமதிப்பு வாய்ந்தவைகளாக இருந்தாலும், அல்லது அற்பமானவைகளாக இருந்தாலும் அவைகள் உங்களுடையதாக, அதாவது உங்களது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து, நீங்கள் உங்களை உண்மையானவர்களென்று

நிரூபித்துக்காட்டவேண்டுமென்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறார். உங்களுடைய அனைத்துத் திறமைகளுக்கும் நீங்கள் அவருக்குக் கடனாளிகளாயிருக்கின்றீர்கள். உங்களது உடலின்—மனதின்—ஆத்துமாவின் சக்திகள் அனைத்தும் அவருக்கே சொந்தமானவை. இந்த சக்திகள் அனைத்தும் அவருக்காகவே செலவிடப்படவேண்டும். உங்களது நேரம், செல்வாக்கு, செயல், வல்லமை, திறமை ஆகிய அனைத்திற்கும் அவருக்குக் கணக்குக்கொடுக்கவேண்டும். ஏனெனில் அனைத்தையும் கொடுக்கிறவர் அவரே.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், ஜெபவேளையிலும், மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் காண்கிற வாலிபன் அவரது ஜீவ ஊற்றினின்று தொடர்ந்து பருகி, புதுமலர்ச்சி அடைகிறான். மற்றவர்களால் கருத்தில் உருவாக்கமுடியாத அளவிற்கு அவன் ஒழுக்கநிலையில் மிக உயர்ந்து தனிச்சிறப்பைப் பெற்றுக்கொள்வான். அவனது சிந்தனை விசாலமடையும்.... இவ்வாறு தங்களது ஆத்துமாவை தேவனோடு இணைத்துக்கொள்பவர்கள், அவரால் அவரது குமாரரும், குமாரத்திகளுமென்று ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து, உயர்ந்து உயர்ந்து, ஆண்டவர் அவர்களை உலகத்திற்கு வெளிச்சத்தின்—ஞானத்தின் வாய்க்கால்களாக மாற்றும் அந்த நிலையை எட்டிப்பிடிக்கும்வரை தேவனைப்பற்றியும் நித்தியத்தைப்பற்றியும் தெளிவான கருத்துக்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

நமது வாலிபர்களைப்போன்ற ஒரு ஊழியர் படை சரியான விதத்தில் பயிற்றுவிக்கப்படுமானால், சிலுவையிலறையப்பட்ட—உயிர்த்தெழுந்த—சீக்கிரம் வரப்போகின்ற மீட்பரைப்பற்றிய தூது எவ்வளவு விரைவாக இந்த உலகம் முழுவதற்கும் எடுத்துச் செல்லப்பட்டுவிடும்! துன்பம், துக்கம், பாவம் ஆகியவைகளின் முடிவு— அதாவது இந்த உலகத்தின் முடிவு வந்துவிடும். ★

ஏப்ரல் 25

# ஏன் இத்தனை சோம்பேறிகள்?

**“பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்”**

**—அப்போஸ்தலர் 1:8.**

முதல் சீடர்களின் குழுவிற்குக் கொடுக்கப்பட்ட அந்தப் பொறுப்பிலே, ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த விசுவாசிகள் பங்குபெற்றிருக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் உலகிற்கு வழங்குவதற்காக, ஒரு பரிசுத்த சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய உத்தமமான மக்கள் எப்பொழுதுமே வலிமைவாய்ந்த உயிர்த்துடிப்போடுகூடிய இறைப்பணியாளராக இருந்திருக்கிறார்கள். அவரது நாமத்தின் மேன்மைக்காக வளவாய்ப்புகளை அர்ப்பணித்து அவரது சேவைக்காக அவர்களது தாலந்துகளை ஞானமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தேவனுடைய சபையின் அங்கத்தினர்கள் நற்கிரியைகளைச் செய்வதில் பற்றார்வமுடையவர்களாக, உலகப்பிரகாரமான பேரார்வங்களினின்று தங்களை விலக்கிக்கொண்டு, நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்த அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். இருதயங்களில் இரக்கமும் பரிவும் நிறைந்தவர் களாக யாருக்கு உதவிதேவைப்படுகிறதோ, அவர்களுக்காக ஊழியஞ்செய்து, மீட்பரின் அன்பைப்பற்றிய அறிவை பாவிகட்கு எடுத்துச்செல்லவேண்டும். இத்தகைய பணிக்கு கடின உழைப்போடுகூடிய முயற்சி தேவைப்படுகிறது. ஏனெனில் அது பெரும் வளம்சார்ந்த ஒரு வெகுமதியைக்கொண்டுவரும். நோக்கத்தில் நேர்மையோடு இத்தகைய ஊழியத்தில் ஈடுபடுகிறவர்கள் மீட்பருக்காக ஆத்தும ஆதாயஞ்செய்வதைக் காண்பார்கள்....

“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக”—வெளிப்படுத்தல் 22:17. இந்த அழைப்பைக் கொடுக்கக்கூடிய பொறுப்பு முழுசபைக்கும் இருக்கிறது. அழைப்பைக்கேட்ட ஒவ்வொருவரும்

மலையினின்றும், பள்ளத்தாக்கினின்றும் "வாருங்கள்" என்று கூறி இந்தத் தூதை எதிரொலிக்கச் செய்யவேண்டும்....

இந்த இரட்சிப்பின் செய்தியைக் கேட்ட நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மக்கள் ஏதாவது ஒரு துறையில், சுறுசுறுப்பாக சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, சந்தை வெளியிலே இன்னும் வீண் அலுவற்காரராக நின்றுகொண்டு இருக்கிறார்கள். இவர்களை நோக்கி: "நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன" என்று கிறிஸ்து வினவுகிறார். மேலும் அவர் அவர்களை நோக்கி: "நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள்"(மத்தேயு 20:6,7) என்று கூறுகிறார். ஏன் அநேகர் அழைப்பிற்குச் செவிசாய்க்கிறதில்லை? தாங்கள் பிரசங்க மேடைக்கு முன்பாக நிற்காததினால், அந்தக் கடமையினின்று விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்று தங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருப்பதுதான் காரணமா? தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஆயிரக்கணக்கான சபை அங்கத்தினர்களால் பிரசங்க மேடைக்கு வெளியே செய்யப்படவேண்டிய மாபெரும் ஊழியம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளட்டும்.

ஒவ்வொருவரும், அவரவருடைய திறமைக்குத்தக்கதாக ஊழியஞ்செய்யத்தக்கதாக, சேவை செய்யும் ஆவி முழுசபையையும் பற்றிக் கொள்ளவேண்டும் என்று தேவன் நீண்ட நாட்களாகக் காத்திருந்தார். சுவிசேஷக் கட்டளையின் நிறைவேறுதலாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேவையிலிருக்கும் பணித்தளங்களிலே தேவனுடைய சபையின் அங்கத்தினர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியத்தைச் செய்கிறபோது, இந்த உலகம் எச்சரிக்கப்பட்டுவிடும். ஆண்டவராகிய இயேசு வல்லமையோடும் மகா மகிமையோடும் இந்த பூமிக்குத் திரும்ப வருவார். "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" ★

ஏப்ரல் 26

# நமது சொத்துக்கள் அனைத்தும் தேவனுக்கே!

**"...இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்"**
**—மத்தேயு 10:8.**

மனிதர் தேவனிடமிருந்து பெறுகின்ற அனைத்து வளமான நன்கொடைகளும்தொடர்ந்து அவருக்கே சொந்தமானவைகளாக இருக்கின்றன. இப்பூமியில் நமது கரங்களில் அவர் கொடுத்திருக்கின்ற மதிப்புவாய்ந்த மற்றும் அழகான பொருட்கள் எதுவாயினும் நம்மைச் சோதிப்பதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவருக்காக நாம் கொண்டுள்ள அன்பின் ஆழத்தைத் தெரிவிப்பதற்காகவும், அவர் நமக்கு வழங்கியிருக்கும் சலுகைகளுக்காக அவரைப் பாராட்டுவதற்காகவுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. செல்வம் நிறைந்த பொக்கிஷங்களானாலும் அறிவாற்றலானாலும் அவைகள் மனப்பூர்வமான காணிக்கையாக இயேசுவின் பாதங்களில் வைக்கப்பட வேண்டும்.

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"(மாற்கு 16:15) என்று இயேசு தமது சீடர்களுக்குக் கட்டளை கொடுத்தபோது, அவரது கிருபையின் அறிவைப் பரப்புகின்ற ஊழியத்தை மனிதருக்குத் திட்டமிட்டுக் குறித்துக் கொடுத்தார். சிலர் பிரசங்கஞ்செய்யப் போகும்போது, மற்றவர்களிடம், இந்த உலகில் அவரது ஊழியத்தை ஆதரிப்பதற்காக காணிக்கைகளைக் கொடுக்கும்படி அழைக்கிறார். எல்லோரும் ஏராளமான காணிக்கைகளைக் கொடுத்துவிடமுடியாது. எல்லோரும் மாபெரும் காரியங்களையும் சிறப்புவாய்ந்த நேர்த்தியான செயல்களையும் செய்துவிட முடியாது. ஆனால் எல்லாரும் சுயத்தை மறுக்கின்ற காரியத்தைச் செயல்படுத்தலாம். அனைவரும் மீட்பரின் தன்னலமற்ற தன்மையை வெளிப்படுத்தலாம். சிலர் ஆண்டவருடைய பண்டகசாலைக்கு ஏராளமான நன்கொடைகளைக் கொண்டுவரமுடியும். ஆனால் மற்ற சிலரோ சில சிறு காசுகளை மாத்திரமே கொண்டுவரமுடியும்,

ஆனால் நேர்மையான முறையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு காணிக்கையும் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தன்னலத்தை மறுக்கும் செயல்களால் தேவனுடைய ஊழியத்திற்காக எவ்வளவு அதிகமாக மிச்சப்படுத்தமுடியும் என்பதைக் காணும்போது, அநேகர் ஆச்சரியமடைவார்கள். சுயமறுப்பின்றி கொடுக்கப்படுகின்ற ஏராளமான நன்கொடைகளால் தேவனுடைய ஊழியம் வளர்ந்து உருவாக்கப்படுவதைவிட தியாகச்செயல்களின் மூலமாகக் கொடுக்கப்படும் சின்னஞ்சிறு காணிக்கைகள் தேவனுடைய வேலையை பலப்படுத்துவதற்கு அதிக நன்மை கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

தாராளமாகக் கொடுக்கின்ற ஆவி, பரலோகத்தின் ஆவியாகும். சுயத்தைத் தியாகஞ்செய்த கிறிஸ்துவின் அன்பு சிலுவையின்மீது வெளிப்படுத்தப்பட்டது. மனிதனின் இரட்சிப்பிற்காக அவர் தம்மிடமிருந்த அனைத்தையும் கொடுத்தார். பின்னர் தம்மைத்தாமே தத்தஞ்செய்தார். ஆசீர்வதிக்கப்பட்ட மீட்பருடைய ஒவ்வொரு பின்னடியாருக்கும் இரக்கமனப்பான்மையோடிருங்கள் என்று கிறிஸ்துவின் சிலுவை வேண்டுகோள் விடுக்கின்றது. “கொடுங்கள், கொடுங்கள்” என்ற கொள்கையே சிலுவையின்மீது விளக்கிக்காட்டப்பட்டது. உலகியல் சார்ந்த மக்களுடைய கொள்கை, “பெற்றுக்கொள், பெற்றுக்கொள்” என்பதே.

கிறிஸ்துவின் சிலுவையினின்று பிரகாசிக்கும் சுவிசேஷ ஒளி தன்னலத்தைக் கடிந்துரைக்கிறது.... உலகப்பற்று, பேராசை என்னும் கண்ணிகளில் அகப்படுகின்ற அபாயத்தில் தேவனுடைய மக்களில் அநேகர் இருக்கின்றனர். அவர்களது சொத்துக்களின் தேவைகளை அவரது இரக்கமே பன்மடங்கு பெருகச்செய்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.... இவ்வாறாக, அவரது ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துகொடுப்பதற்கான ஒரு ஊடகமாக மனிதனை அவர் பூமியில் வைத்திருக்கிறார். மனிதன் தன்னைப் படைத்தவரைப்போல குணத்திலே தன்னலமற்றவனாகக் கொடுக்கும் திறமையுடையவனாகி, இறுதியில் அந்த நித்திய மகிமையான வெகுமதியை கிறிஸ்துவோடு ஒரு பங்காளியாக இருந்து பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தேவன் அறச்செயல்களின் அமைப்புமுறையைத் திட்டமிட்டு வைத்திருக்கிறார். ★

ஏப்ரல் 27

# இரட்டிப்பான ஓர் வாழ்க்கை!

**"...எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" –1 யோவான் 1:3.**

தேவனோடு நாம் கொள்ளும் ஆன்மீக உறவின் மூலமாக, செயல்முறை சார்ந்த பயன்களைவிட, நம்முடைய ஊழியத்திற்கு அதிகம் தேவையானது எதுவுமில்லை. நமது அன்றாட வாழ்க்கையிலே மீட்பரிலே இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோம் என்பதை நாம் காட்டவேண்டும். அவரது சமாதானம் நமது இருதயத்தில் இருக்குமானால், அது நமது முகத்தோற்றத்திலே வெளிப்படையாகப் பிரகாசிக்கும். தேவனோடு கொள்ளும் உறவு, நமது குணத்தையும் வாழ்க்கையையும் உயர்ந்த தகுதியுடையதாக மாற்றும். இயேசுவின் முதல் குழுவிலிருந்த சீடர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்று அறியப்பட்டிருந்ததுபோல, நம்மைப்பற்றியும் மக்கள் அறிந்துகொள்வார்கள். இக்காரியம் ஊழியர்க்கு வேறு எதுவும் கொடுக்கக்கூடாத வல்லமையைக் கொடுக்கும். இந்த வல்லமையை இழந்துவிடத்தக்கதான நிலைக்கு நம்மை அனுமதித்துவிடக்கூடாது. நாம் ஒரு இரட்டிப்பான வாழ்க்கை வாழவேண்டும். அதாவது சிந்தனையும் செயலுமுள்ள மற்றும் மௌனமாக ஜெபித்து ஊக்கமாக உழைத்து வாழும் வாழ்கையாகும்.

தேவன் கொடுக்கும் பயிற்சிக்கடியிலிருக்கும் அனைவரும் தங்களது சொந்த இதயங்களோடும் இயற்கையோடும் தேவனோடும் அமைதியான மணிவேளையைச் செலவிடவேண்டியது அவசியமாகும்.... நமது இதயத்தோடு அவர் பேசுவதை தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவரும் கேட்கவேண்டும். அனைத்து குரல்களின் ஓசையும் அடங்கியபின்னர், அமைதியான நிலையில் அவருக்கு முன்பாக நாம் காத்திருக்கவேண்டும். ஆத்துமாவில் நிலவுகின்ற அமைதி, தேவனுடைய குரலை மிகத் தெளிவாகக் கேட்கும்படிச் செய்கின்றது. "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" (சங்கீதம் 46:10) என்று அவர் நம்மிடம் வேண்டுகிறார். தேவனுக்காகச் செய்யப்படும் அனைத்து ஊழியங்களுக்கும் இதுவே

பயன்தரும் ஒரு ஆயத்தமாகும். துரிதகதியில் இயங்கிக்கொண்டிருக்கும் கூட்டத்திற்கு மத்தியிலே, வாழ்க்கையில் மும்முரமான செயல்பாடுகளின் சிரமங்களுக்கு மத்தியிலே, இவ்வாறு மறுமலர்ச்சியைப் பெறும் நபரைச் சுற்றிலும் வெளிச்சமும் சமாதானமுமாகிய சூழ்நிலைகள் காணப்படுகிறது. உடலிற்கும், மனதிற்கும் ஒரு புதிய சக்தியை நன்கொடையாக அந்த நபர் பெற்றுக்கொள்கிறார். அவரது வாழ்க்கை ஒரு நறுமணத்தைப் பரப்பும். மனிதரின் இதயங்களை சென்றடையத்தக்கதாக ஒரு தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தும்.

தேவனோடு பக்தியுடன் தொழுகை நடத்தும் வேளைகளில்கூட, அவரோடு உண்மையாக ஆன்மீகத் தொடர்புகொள்வதின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள அநேகர் தவறிவிடுகிறார்கள். மிகவும் அவசரமாக காரியங்களைச் செய்கிறார்கள். துரிதமாக அடியெடுத்துவைத்து, கிறிஸ்துவின் அன்பின் பிரசன்னத்தின் சூழலிலே அந்தப் பரிசுத்த சூழ்நிலையிலே ஒருவேளை ஒருகணம் நின்றுவிட்டு, கடந்துசெல்கிறார்கள். ஆலோசனைக்காக அங்கு காத்திருப்பதில்லை. தெய்வீகப் போதகரிடத்தில் தங்கிக் காத்திருக்க நேரமில்லை. தங்களது பாரங்களோடு தங்களது வேலைக்கு திரும்பிச்செல்கிறார்கள்.

இத்தகைய ஊழியர்கள் வல்லமையின் இரகசியத்தைக் கற்றுக்கொள்ளும்வரை ஒருபொழுதும் உயர்ந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. தங்களது உடலின் உள்ளத்தின் ஆவிக்குரிய சக்திகளை புதுப்பித்துக்கொள்ளத்தக்கதாக சிந்திப்பதற்கும் ஜெபிப்பதற்கும் தேவனிடத்தில் காத்திருப்பதற்கும் கண்டிப்பாக தங்களுக்காக நேரத்தை ஒதுக்கிவைக்கவேண்டும். ஆவியானவர் வழங்குகின்ற இந்த உயர்த்துகின்ற செல்வாக்கு அவர்களுக்குத் தேவை. அதைப் பெற்றுக்கொள்ளும்பொழுது அவர்கள் புதிய ஜீவனால் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். ★

# தவறான விருப்பத்துடனுள்ள ஆர்வம்!

**“தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சிசொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல” —ரோமர் 10:2.**

குறிக்கோள் அல்லது நோக்கமின்றி இரைச்சலோடுகூடிய பற்றார்வம் காணப்படுகின்றது. அது அறிவுக்கேற்றபடி அமையவில்லை. மேலும் இக்காரியமானது அதன் இயங்குமுறையிலே குருட்டுத்தனமாகவும், அதனால் விளைகின்ற பயன்களிலே அழிவைக் கொடுக்கிறதாகவுமிருக்கிறது. இது ஒரு கிறிஸ்தவனின் ஆர்வமல்ல. கிறிஸ்தவனின் பற்றார்வம் கொள்கையினால் கட்டுப்படுத்தப்படுகிறது. திடீர்திடீரென்று வருவதல்ல. கிறிஸ்தவ பற்றார்வம் உற்சாகமும் ஊக்கமும் நிறைந்தது. ஆழமானது, உறுதியானது. முழு ஆத்துமாவையும் ஈடுபடுத்தி, ஒழுக்க உணர்வுகளைச் செயல்படுத்தத் தக்கதாக எழுப்பிவிடுகிறது.

ஆத்துமாக்களின் மீட்பும், தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்த அக்கறையூட்டும் காரியங்களும் அதிகம் முக்கியத்துவம்வாய்ந்தவை. ஆத்தும ஆதாயத்தையும் தேவனுடைய மகிமையையும்தவிர வேறு எந்த இலக்குகள் மாபெரும் உள்ளார்வத்தைக் காட்ட நம்மை அழைக்கிறது? ஆராய்ந்து பார்க்கக்கூடிய காரியங்கள் இங்கு இருக்கின்றன. அவைகளை இலேசாக எண்ணி மதிப்பீடு செய்துவிடமுடியாது. நித்தியத்தைப் போன்று அவைகள் மேன்மையான முக்கியத்துவம்வாய்ந்தவை. நித்தியம் உறுதியற்ற நிலையில் இருக்கிறது. வளமான வாழ்வுக்காகவோ அல்லது கடுந்துயரத்திற்காகவோ ஆண்களும் பெண்களும் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ வைராக்கியம் அதைக்குறித்துப் பேசி தன் பெலத்தை இழக்காது. மாறாக, ஆற்றலோடும் திறனோடும் உணர்ந்து செயல்படும். எனினும் மற்றவர்களுக்குக் காணப்படவேண்டும் என்பதற்காக செயல்புரியாது. ஒவ்வொரு முயற்சியிலும் ஒவ்வொரு ஊழியத்திலும் தாழ்மை தனிச்சிறப்பு

வாய்ந்த பண்பாகக் காணப்படும். கிறிஸ்தவ வைராக்கியம் ஊக்கமுள்ள ஜெபத்திற்கும் தாழ்மையான ஒப்புக்கொடுத்தலிற்கும் குடும்பத்தின் கடமைகளில் உத்தமமாக இருத்தலுக்கும் வழிநடத்துகிறது. குடும்ப வளையத்திற்குள் மென்மை, அன்பு, இரக்கம், பரிவு ஆகிய குணநலன்கள் காணப்படும். இவைகளே எப்பொழுதும் கிறிஸ்தவ வைராக்கியத்தினால் பெறப்படும் கனிகளாகும்....

ஆ! ஆத்துமாக்களின் மதிப்பை ஒரு சிலரே எண்ணிப்பார்க்கிறார்கள். வெகு சிலரே கிறிஸ்துவை அறிகிற அறிவிற்கு ஆத்துமாக்களைக்கொண்டுவர தியாகஞ்செய்ய விருப்பத்தோடிருக்கிறார்கள். அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்கள் விஷயத்தில் அதிகமாகப் பேசப்படுகிறது; அவர்கள்மீது அதிக அன்புகாட்டுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்தப் பேச்சு கீழ்த்தரமான ஒன்று. மனமார்ந்த கிறிஸ்தவ வைராக்கியம்— ஏதாவதொன்றைச் செய்வதின் மூலமாக வெளிப்படுகின்ற வைராக்கியம் தேவைப்படுகிறது. இப்பொழுது அனைவரும் தங்களுக்காக ஊழியஞ்செய்ய வேண்டும். அவர்களது இதயத்திலே இயேசு இருப்பாரென்றால் மற்றவர்களிடம் அவரைப்பற்றி அறிக்கைசெய்வார்கள். நயாகராவின் தண்ணீர்கள் எப்படி அருவியாக விழுவதினின்று நிறுத்தப்படமுடியாதோ, அதைப்போல கிறிஸ்துவை உள்ளத்தில் கொண்டிருக்கிற ஆத்துமா அவரை அறிக்கைசெய்வதை ஒருபோதும் தடைசெய்ய முடியாது.

ஒவ்வொரு கிறஸ்தவனுடைய ஆழ்ந்த பற்றார்வமும் நித்திய வாழ்வைப்பற்றிய காரியத்தில் ஈடுபட்டிருக்கவேண்டும். மாபெரும் மீட்பின் திட்டத்திலே கிறிஸ்துவோடும் பரலோகத்தின் தூதர்களோடும் உடன் ஊழியராக இருக்கவேண்டும். எந்த ஊழியத்தை இதற்கு ஈடாக ஒப்பிட்டுக்கூற முடியும்! இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவினின்றும் மகிமை பெருகி, தேவனிடம் வந்தடைகிறது. அந்த மகிமை மீட்கப்பட்ட நபர்மீதும் அவரை இரட்சிக்க ஒரு உபகரணமாக இருந்தவர்மீதும் பிரதிபலிக்கிறது. ★

# ஒரு உறுதியான அடித்தளம்!

**“ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது” –2 தீமோத்தேயு 2:19.**

எஃகைப்போன்று, நேர்மையில் உண்மையாக இருக்கின்ற, கருங்கல் பாறையைப்போன்று விசுவாசத்தில் திடஉறுதியோடு இருக்கின்ற ஒரு மக்கள் கூட்டம் ஆண்டவருக்கு இருக்கும். அவர்கள் உலகத்திலே அவரது சாட்சிகளாகவும், அவரது ஆயத்த நாளிற்காக—ஒரு மகிமையான—ஒரு சிறப்பான வேலையைச் செய்வதற்கு அவரது உபகரணங்களாகவும் இருப்பார்கள்.

சத்தியத்தை ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் பிரசங்கித்த போதகர்கள் வழிவிலகி, சமயக்கொள்கைகளைக் கைவிட்டு, சத்துருவின் அணியில் சேர்ந்துகொள்ளக்கூடும். இக்காரியம் சத்தியத்தைப் பொய்யாக மாற்றறிவிடுமா? “ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது”–2 தீமோத்தேயு 2:19. மனிதர்களின் உணர்வுகளும் விசுவாசமும் மாறலாம். தேவனுடைய சத்தியம் ஒருபோதும் மாறாது.

தேவன் உயிரோடிருக்கிறார் என்ற காரியம் எவ்வளவு நிச்சயமானதோ, அதைப்போன்று நம்மிடம் சத்தியம் இருக்கின்றது என்பதும் நிச்சயமானது. சாத்தான் தனது அனைத்து தந்திரங்களாலும் கொடிய பயங்கர வல்லமையினாலும் தேவனுடைய சத்தியத்தை ஒரு பொய்யாக மாற்றமுடியாது. மாபெரும் பகைவனான சாத்தான் தேவனுடைய வார்த்தையைப் பயனற்றதாக்கிப்போடுவதற்கு தன்னால் இயன்ற அளவு முயற்சிசெய்வான். ஆனால் எரிந்துகொண்டிருக்கின்ற ஒரு விளக்கைப்போன்று சத்தியம் கொண்டுசெல்லப்படவேண்டும்.

ஆண்டவர் நம்மைத் தனியாகப் பிரித்தெடுத்து, வெளியே கொண்டுவந்து, அவரது அற்புதமான இரக்கத்தின் குடிமக்களாக மாற்றியிருக்கிறார்.

சமயக்கோட்பாடுகளுக்கு கட்டுப்படாதவர்களுடைய சிறுபிள்ளைத்தனமான பேச்சைக்கேட்டு, நாம் மயங்கிவிடுவோமா? சாத்தானோடும், அவனது சேனையோடும் நிற்பதை நாம் தெரிந்துகொள்வோமா? தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களோடு நாம் இணைந்துகொள்வோமா? ஆண்டவரே, எனக்கும் சாத்தானுக்குமிடையே பகையை உண்டாக்கும் என்பதே நமது உறுதியான ஜெபமாக இருக்கட்டும். அவனது இருளின் கிரியைகளின் பேரில் நாம் பகையோடிராவிடில், அவன் வல்லமையோடு நம்மை மடக்கி வளைத்துவிடுவான். எந்தக் கணத்திலும் நமது இதயத்திற்குள் செலுத்தத்தக்கதாக அவனது கொடுக்கானது ஆயத்தமாக இருக்கிறது. அவனை ஒரு நச்சுத்தன்மையுள்ள பகைவனாக நாம் கணித்துவைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனை எதிர்க்கவேண்டும். இன்னும் முன்னேறிச் செல்வதே நமது வேலையாகும்.... கிறிஸ்துவின் பெயரைக் கூறுகின்ற அனைவரும் நீதியின் ஆயுதத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது, நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதை நமக்கு நாமே தெரிந்துகொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது.... நித்திய வாழ்வை நாம் பற்றிக்கொள்ளத்தக்கதாக வரப்போகும் காலங்களுக்கு எதிராக ... ஒரு நல்ல அடித்தளத்தை நமக்காக நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். நாம் ஊழியஞ்செய்ய வேண்டும். நம்முடைய சொந்த சக்தியினால் அல்ல, உயிர்த்தெழுந்த நம்முடைய ஆண்டவரின் சக்தியினால் ஊழியஞ்செய்யவேண்டும். இயேசுவிற்காக துணிந்து செயல்பட நாம் என்ன செய்யவேண்டும்? ★

# பரலோகம் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது!

**"...பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்..." —யோவான் 20:21.**

"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற்கு 16:20) என்று அப்போஸ்தலர்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்து அவரது சீடர்களை வெளியே அனுப்பியதுபோல இன்றும் அவர் தமது சபையின் அங்கத்தினர்களை ஊழியஞ்செய்வதற்காக வெளியே அனுப்புகிறார். எந்த வல்லமை அப்போஸ்தலர்களுக்குக் கிடைத்ததோ, அதே வல்லமை இவர்களுக்கும் கிடைக்கும். இவர்கள் தேவனை தங்கள் பெலனாக வைத்துக்கொள்வார்களானால் அவர்களோடு அவர் வேலைசெய்வார். அவர்கள் வீணாக வேலைசெய்யமாட்டார்கள். தாங்கள் ஈடுபட்டிருக்கிற இந்த வேலையின்மீது ஆண்டவர் தமது முத்திரையைப் பதித்திருக்கிறார் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்துகொள்ளட்டும். "ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி, கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன் என்றார்"—எரே 1:7–9. நமது உதடுகளின்மீது அவரது பரிசுத்தத் தொடுதலை உணர்ந்தவர்களாக அவர் கொடுக்கின்ற வார்த்தைகளைப் பேசுவதற்காகப் புறப்பட்டுச் செல்லும்படி நம்மிடம் வேண்டுகிறார்.

கிறிஸ்து சபைக்கு ஒரு பரிசுத்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் கிருபையின் பொக்கிஷங்களையும் ஆராய்ந்து

முடியாத ஐசுவரியத்தையும் உலகிற்கு எடுத்துச் செல்லத்தக்கதான வாய்க்கால்களாக, ஒவ்வொரு சபை அங்கத்தினரும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் குணத்தையும் அவரது ஆவியானவரையும் உலகிற்கு எடுத்துக்காட்டத்தக்கதான செயல்துணைகளை விரும்பவதுபோன்று வேறு எதையும் அதிகமாக விரும்புவது கிடையாது. மீட்பரின் அன்பை மனித இனத்தின் மூலமாக வெளிப்படுத்துவதைவிட வேறு எதுவுமே அவ்வளவு அதிகமான அளவிற்கு இந்த உலகத்திற்கு அவசியமில்லை. தேவன் எத்தகைய ஆண்கள் பெண்கள் மூலமாக கிறிஸ்துவத்தின் வல்லமையை வெளிப்படுத்தக் காத்திருக்கிறாரோ அவர்களுக்காக பரலோகம் முழுவதுமே காத்துக்கொண்டிருக்கிறது.

சத்தியத்தைக் கூறியறிவிப்பதற்காக சபை ஒரு முகவராக செயல்துணையாக இருக்கின்றது. ஒரு சிறப்பான பணியைச் செய்வதற்காக சபை அவரால் அதிகாரம் பெற்றிருக்கிறது. சபை அவருக்கு உண்மையாக அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அதனுள் தெய்வீகக் கிருபை தங்கி வாசஞ்செய்யும். அது பற்றுறுதியில் உண்மையாக இருக்குமானால், இஸ்ரவேலின் தேவனாகிய ஆண்டவரை கனப்படுத்துமானால், அதற்கு எதிராக எந்த வல்லமையும் நிற்க முடியாது.

தேவனுக்காவும் அவரது ஊழியத்திற்காகவும்கொண்ட வைராக்கியமே சுவிசேஷத்திற்காக சாட்சிகொடுக்கத்தக்கதாக சீடர்களை அசைத்தது. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றியும் அவரது மீட்பின் அன்பைப்பற்றியும் சொல்வதற்கு தீர்மானித்த அதே வைராக்கியம் நமது இதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யாதா? மீட்பரின் வருகையை எதிர்பார்ப்பது மட்டுமல்ல, துரிதப்படுத்துவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அளிக்கப்பட்ட சிறப்புரிமையாகும். ★

# தேவன் தமது மக்களை வழிநடத்துவார்!

**"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது." —ஏசாயா 43:2.**

தேவனுக்கு பூமியிலே ஒரு சபை இருக்கிறது. அவர்கள் அவரது கற்பனைகளைக் கைக்கொள்கிற—அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாவர். இங்கொன்றும் அங்கொன்றுமாக நெறிகெட்டு அலைந்துதிரிபவர்கள் அல்ல, ஒரு கூட்ட மக்களை அவர் வழிநடத்துகிறார்.

வேலை வெற்றி பெறாதோவென்று பயப்படவும் சந்தேகிக்கவும் அவசியமில்லை. ஊழியத்திற்கு தேவனே தலைமை வகிக்கிறார். அவர் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி நிலைப்படுத்துகிறார். ஊழியத்தின் தலைமைப்பொறுப்பிலே ஏதாவது சரிப்படுத்தவேண்டியது அவசியமானால், அவர் தலையிட்டு ஒவ்வொரு தவறையும் சரிப்படுத்துவார். தேவனுடைய மக்களை ஏற்றிச்செல்லும் அந்த மேன்மையான கப்பலை தேவன் துறைமுகத்திற்கு பத்திரமாகக் கொண்டுசேர்ப்பார் என்ற விசுவாசம் நமக்கிருக்கட்டும்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் மெயின் எனப்பட்ட இடத்திலுள்ள போர்ட்லேண்டிலிருந்து பாஸ்டனுக்குக் கப்பலில் பயணித்துக்கொண்டிருந்தபோது, எங்கள் மீது புயல் வீசியது. பிரம்மாண்டமான அலைகள் எங்களை அங்குமிங்குமாக அலைக்கழித்தன. தொங்கிக்கொண்டிருந்த கொத்துவிளக்குகள் கீழே விழுந்தன. பெட்டிகள் பந்துகளைப்போன்று ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு உருண்டோடின. பயணிகள் பயந்து நடுங்கினார்கள். அநேகர் மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களாக அலறிக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் சென்றபின்னர் மாலுமி உள்ளே வந்தார். அவர் சக்கரத்தை பிடித்து இயக்க ஆரம்பித்தபோது, கப்பல் தலைவன் அருகில் நின்று கப்பலின் பாதையைக்குறித்த தமது பயத்தை வெளிப்படுத்தினார். மாலுமி கப்பல் தலைவனை நோக்கி, கப்பலை ஓட்டுகின்ற கருவியை நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளமுடியுமா? என்று வினவினார். கப்பல் தலைவன் அதற்கிணங்க ஆயத்தமாக இல்லை. ஏனெனில் அந்தச் செயலில் தனக்கு அனுபவமில்லை என்று அவருக்குத் தெரியும். பின்னர் பிரயாணிகளில் சிலர் கவலைப்பட்டு, மாலுமி கப்பலைப் பாறையின்மீது மோதியடித்துவிடுவார் என்று தாங்கள் பயப்படுவதாகக் கூறினார்கள். நீங்கள் கப்பலை ஓட்டுகிறீர்களா என்று மாலுமி அவர்களைக் கேட்டார். ஆனால் அந்தக் கப்பலை ஓட்டும் கருவியை தங்களால் கட்டுப்படுத்த முடியாது என்று அவர்களுக்குத் தெரியும்.

ஊழியம் ஆபத்திலிருப்பதாக நீங்கள் நினைக்கும்பொழுது "ஆண்டவரே இயக்கும் கருவிக்கு அருகில் நின்று குழப்பமான இந்த நிலையினூடாக எங்களை அழைத்துச்செல்லும். துறைமுகத்திற்கு பத்திரமாக எங்களைக் கொண்டு சேர்த்தருளும்" என்று ஜெபியுங்கள். ஆண்டவர் நம்மை வெற்றிகரமாக நடத்திச்செல்வார் என்று விசுவாசிப்பதற்கு நமக்குக் காரணம் இல்லையா?....

தேவனுடைய அனைத்து அருட்செயல்களாலும் எப்படி அவர் காரியங்களை நடப்பிக்கிறார் என்பதை எல்லைக்குட்பட்ட உங்களது மனங்களால் விளங்கிக்கொள்ள முடியாது. தேவனே தமக்குச் சொந்தமான வேலையைப் பொறுப்பேற்று நடத்தட்டும். ★

# சாத்தான் தனது முயற்சிகளை இருமடங்காக்குகிறான்!

**"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" —சங்கீதம் 34:7.**

நமது மீட்பரின் மிக உன்னதமான வல்லமைகளில் நாம் பெற்றுக்கொள்ளும் விடுதலையும் பாதுகாப்பும்மட்டும் நமக்கு இருந்திராவிட்டால், சாத்தானுடைய—அவனது சேனையுடைய வல்லமையும் பகைமையும் நம்மைத் துளிகூட பிசகாமல் பயத்தால் மூழ்கடித்துவிடும். தீய மனிதர்களிடமிருந்து நம்மையும் நமது சொத்தையும் பாதுகாப்பதற்காக மிகக் கவனமாக நமது வீடுகளுக்கு தாழ்ப்பாள்களையும் பூட்டுகளையும் போட்டுவைக்கிறோம். தீயதூதர்கள் நம்மைத் தாக்குவார்களானால் நமது சொந்த பலத்தில் எந்தவிதமான பாதுகாப்பு முறையும் நமக்குக் கிடையாது. அத்தகைய தீயதூதர்கள் நம்மிடத்திற்கு நுழைவுரிமையை நாடித்தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். இந்த தீயதூதர்களைப்பற்றி நாம் சிறிதளவும் நினைத்துப் பார்ப்பதில்லை. தீயதூதர்கள் அனுமதிக்கப் படுவார்களானால் நம் உள்ளத்தின் கவனத்தைச் சிதறடித்து, நம் உடல்களைச் சீர்குலைத்து, கடும் வேதனைக்குட்படுத்தி, நமது உடமைகளையும் நமது ஜீவியங்களையும் அழித்துப்போடமுடியும். அவர்களது ஒரேமகிழ்ச்சி நாம் படுகின்ற கடுந்துயரத்திலும் அழிவிலேயும்தான் இருக்கிறது. தீய சக்திகளின் கட்டுப்பாட்டிற்கு தேவன் அவர்களை ஒப்புக்கொடுக்கின்றவரை தெய்வீக உரிமை கோருதல்களை எதிர்த்து, சாத்தானின் சோதனைகட்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்களது நிலைமை மிகவும் அச்சந்தரக்கூடியதாகும். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அவரது பராமரிப்பிற்கடியில் எப்பொழுதும் பாதுகாப்புடன் இருக்கிறார்கள். மேம்பட்ட வல்லமையுள்ள தூதர்கள் அவர்களின் பாதுகாப்பிற்காக பரலோகத்தினின்று அனுப்பப்படுகின்றனர். தேவன் நமது பாதுகாப்பிற்காக வைத்திருக்கும் காவலைக் கடந்து தீயசக்தி உள்ளே வரமுடியாது.

சுமார் ஆறாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த மாபெரும் போராட்டம் முடிவடையும் தருவாயிலிருக்கிறது. தனது கண்ணிகளில் ஆத்துமாக்களைக் கட்டிவைக்கவும், மனிதனின் சார்பாக கிறிஸ்து செய்யும் பணியை முறியடிக்கவும், அந்தத் தீயவன் தனது முயற்சிகளை மீண்டும் இரட்டிப்பாக்குகிறான். மீட்பரின் மத்தியஸ்த வேலை முடியும்வரை மக்களை இருளிலும் தவறுகளை அறிக்கைசெய்யாத நிலையிலும் பிடித்துவைக்க முயல்கின்றான். அதற்குப்பின் பாவத்திற்கான ஒரு பலி எதுவுமில்லை. அந்த நோக்கத்தை நிறைவேற்றவே அவன் முயன்றுகொண்டிருக்கிறான்.

சாத்தானின் வல்லமையை எதிர்ப்பதற்காக சிறப்பான முயற்சிகள் எதுவும் செய்யப்படாதபொழுது, உலகத்திலும் சபையிலும் அக்கறையற்ற தன்மை நிலவும்பொழுது, சாத்தானும் அதைக்குறித்து கவலைப்படாமல் இருக்கின்றான். ஏனெனில் யாரையெல்லாம் தனது சித்தத்தின்படி சிறைப்படுத்தி, நடத்திவந்திருக்கிறானோ அவர்களை இழந்துவிடுகின்ற எத்தகைய ஆபத்திலும் அவன் இல்லை. ஆனால் நித்திய காரியங்களைக் குறித்து அக்கறை செலுத்தும்படியாக கவனம் ஈர்க்கப்படும்பொழுது, “இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?” என்று ஆத்துமாக்கள் வினவும்பொழுது, அவன் கிறிஸ்துவின் வல்லமைக்கு எதிராக, தனது வல்லமை நிகரானது என்று காட்டுவதற்கு முயற்சித்து களத்தில் இறங்குகிறான்.... தேவனைத் தொழுதுகொள்ளத்தக்கதாகக் கூடிவரும்பொழுது, அவன் அங்கு இருக்கின்றான். பார்வைக்குக் காணப்படாமல் மறைந்திருந்தாலும் தொழுபவர்களுடைய உள்ளங்களை அடக்கியாளத்தக்கதாக சுறுசுறுப்பாகச் செயல்படுகிறான். ★

மே 3

# பெரும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய போராட்டம் நமக்கு முன்பாக இருக்கிறது!

**“...மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது” —அப்போஸ்தவர் 5:29.**

ஒரு மாபெரும் நெருக்கடி நேரம் தேவனுடைய மக்களுக்காகக் காத்திருக்கிறது. இந்த உலகத்திற்கு ஒரு இக்கட்டான நிலை காத்துக்கொண்டிருக்கிறது. யுகங்கள் அனைத்திற்குமாக மாபெரும் விளைவுகளை உண்டாக்கவல்ல ஒரு போராட்டம் நமக்கு முன்பாக இருக்கிறது.... நாடு முழுவதற்கும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த—ஆர்வத்தை எழுப்பக்கூடிய—ஞாயிறு ஆசரிப்பை அமுல் படுத்தக்கூடிய—கடுஞ்சிக்கலான காரியம் ஒன்றிருக்கிறது. இந்த இயக்கத்தின் விளைவு என்னவாயிருக்கும் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால் இக்காரியத்திற்காக நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? மக்களுக்குமுன்பாக இருக்கும் ஆபத்தைக்குறித்த எச்சரிப்பைக் கொடுப்பதற்காக, தேவன் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கின்ற அந்தக் கடமையை நாம் உத்தமமாக நிறைவேற்றியிருக்கிறோமா?....

வேதாகம ஓய்வுநாளான (ஜயடிடியவா) மெய்யான ஓய்வுநாள் கோரும் உரிமைகளை அறியாமலும், ஞாயிறு ஆசரிப்பு நிறுவப்பட்டிருக்கிற பொய்யான அடித்தளத்தை விளங்கிக்கொள்ளாமலும் அநேகர் இருக்கின்றனர். மார்க்கசம்பந்தமான சட்டத்திற்கு ஆதரவாக எந்த இயக்கம் ஏற்பட்டாலும், அது உண்மையிலே, மனச்சாட்சியின் சுதந்திரத்திற்கு எதிராக நீண்டகாலம் உறுதியோடு போரிட்டுவந்திருக்கிற போப் ஆதிக்கத்திற்குக் காட்டப்படும் சலுகையே. ஞாயிறு ஆசரிப்பு ஒரு கிறிஸ்தவ அமைப்பாக அழைக்கப்படுவதற்கு “அக்கிரமத்தின் இரகசியத்திற்கு” கடமைப்பட்டிருக்கிறது. ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்றால், ரோமன்

கத்தோலிக்க சமயக்கோட்பாடுகளின் மூலைக்கல்லாக இருக்கும் கொள்கைகள் நடைமுறையில் மெய்யாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். நமது நாடு (ரு.ஐ.யு) ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை இயற்றுவதற்காக, தனது அரசாங்கத்தின் கொள்கைகளை கைவிடும்போது, புரொட்டஸ்டாண்டுமார்க்கம் இச்செயலின் வழியாக போப்புமார்க்கத்தோடு கரங்களை இணைத்துக்கொள்ளும். இது, நீண்ட காலமாக ஆர்வத்தோடு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதாவெனக் காத்திருந்த கொடுமைக்கு, அது சர்வாதிகாரம் செய்வதற்கு ஏதுவாக உயிர்கொடுப்பதுவே என்று சொல்வதைத்தவிர வேறு எதுவுமில்லை....

போப்புமார்க்கம் அல்லது அதின் கொள்கைகள் அதிகாரம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக சட்டம் இயற்றப்படுமானால் யார் பிரபலமான பிழைகளுக்காக சத்தியத்தையும் மனச்சாட்சியையும் தியாகஞ்செய்ய மறுப்பார்களோ, அவர்களுக்கு எதிராக உபத்திரவத்தின் நெருப்புகள் மீண்டும் தூண்டிவிடப்படும். இந்தத் தீமை நடைமுறைக்கு வரவேண்டிய நேரம் வந்துவிட்டது.

நமக்கு முன்பாக இருக்கும் ஆபத்துகளைக் காட்டத்தக்கதான வெளிச்சத்தை தேவன் கொடுத்திருக்கும்போது, அதை மக்களுக்கு முன்பாகக் கொண்டுவரத்தக்கதாக நமது சக்தியில் இருக்கும் எல்லா முயற்சிகளையும் செய்யாதபடி அலட்சியஞ்செய்வோமானால், அவருடைய பார்வையிலே நாம் எப்படி குற்றமற்றவர்களாக நிற்கமுடியும்? மிகப்பெரும் விளைவுகளை ஏற்படுத்தத்தக்க இந்தக் காரியத்தைக் குறித்து எச்சரிக்காமல் விட்டுவிடுவதில் நாம் நிம்மதியோடிருக்கமுடியுமா?....

இந்தபூமியை ஆளுகை செய்பவர்களால் கொண்டுவரப்படும் சட்டங்கள், அண்டசராசரத்தின் ஆளுநரான மகா தேவனின் சட்டங்களுக்கு எதிராகக் கொண்டுவரப்படும்பொழுது, தேவனுடைய விசுவாசமுள்ள குடிமக்கள் அவருக்கு உண்மையாக இருப்பார்கள். ★

# வேதவாக்கியங்களின் பொருளை திரிபுபடுத்திக் கூறுதல்!

**"…கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" –2 பேதுரு 3:16.**

இந்த நிலையினால் என்ன முக்கிய விளைவுகள் ஏற்பட்டு விடும் என்று மனிதர் எண்ணும்போது, அதுவே சாத்தானின் மாபெரும் வெற்றியுள்ள வஞ்சகங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. சத்தியம் அதை நேசிப்பதினால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் இதைப் பெற்றுக்கொள்பவரது ஆத்துமாவை பரிசுத்தப்படுத்துகிறது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். எனவே, பொய்யான கோட்பாடுகளையும் கட்டுக்கதைகளையும் வேறொரு சுவிசேஷத்தையும் அதற்குப் பதிலாக வைப்பதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறான்….

கிறிஸ்தவ உலகில் காணப்படுகின்ற வேதவாக்கியங்களைப் பற்றி தெளிவற்ற—போலியாகப் புனையப்பட்ட கருத்து விளக்கங்கள், மார்க்கசம்பந்தமான விசுவாசத்தைக்குறித்த அநேக முரண்பாடான கோட்பாடுகள் அனைத்தும் நமது மாபெரும் எதிராளியின் கைவண்ணமாகும். மக்கள் சத்தியத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாதபடி, குழப்பமடையத்தக்கதாக இவ்வாறு செய்கிறான். கிறிஸ்தவ உலகிலே சபைகளுக்கு மத்தியில் முரண்பாடுகளும், பிரிவினைகளும் காணப்படுகிறதற்கு, விருப்பத்திற்கேற்ற ஒரு கோட்பாட்டை ஆதரிப்பதற்காக வேதவாக்கியங்களை திரித்துக்கூறுவதே காரணமெனத் தெரிகிறது. அவருடைய சித்தத்தைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தாழ்மையான இருதயத்தோடு தேவனுடைய வார்த்தையை கவனமாகப் படிப்பதற்குப் பதிலாக, விசித்திரமான தனிப்புதுமையான சிலவற்றைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று அநேகர் தேடி அலைகிறார்கள். தவறான கோட்பாடுகளையும் அல்லது கிறிஸ்தவப் பண்பிற்கு ஒத்துவராத பழக்கங்களையும் ஆதரிப்பதற்காக, வேதவாக்கியங்களின்

பகுதிகளை எடுத்து, அந்த வசனம் கூறப்பட்ட சந்தர்ப்பத்தினின்று அதைப் பிரித்தெடுத்து, அவர்களது கருத்தை நிரூபிப்பதற்காக, ஒரு தனி வசனத்தின் பாதியை மேற்கோளாக எடுத்துக்கூறுவார்கள். ஆனால் அந்த வசனத்தில் மீந்திருக்கும் பகுதியோ, அவர்கள் நிரூபித்த கருத்திற்கு எதிர்மாறாக இருக்கும். சர்ப்பத்தின் தந்திரத்தோடு தங்களது மாம்ச இச்சைகளுக்கு இசைந்துபோகத்தக்கதாக தொடர்பற்ற கூற்றுகளில் சொற்களை இணைத்து அதற்குப் பொருள்கொடுத்து, அதற்குப்பின்னால் தங்களை வலுவாக வைத்துக்கொள்கிறார்கள். இவ்வாறு அநேகர் வேண்டுமென்றே தேவனுடைய வார்த்தையை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். மற்றும் சிலர் தங்களது சுறுசுறுப்பான கற்பனைத்திறனோடு பரிசுத்த வேத எழுத்துக்களிலுள்ள உருவகங்களுக்கும் அடையாளங்களுக்கும் தங்களது விருப்பத்திற்கிசைவாக பொருள் விளக்கம் கொடுக்கிறார்கள். வேதவாக்கியங்கள் தங்களுக்குத் தாங்களே, பொருள் விளக்கம் கொடுக்கக்கூடியவை என்ற சாட்சியை ஒரு சிறிதும் அவர்கள் மதிக்கிறதில்லை. மேலும் தங்களால் கூறப்படுகின்ற பொருந்தாத கருத்துக்களை, வேதாகமத்தின் போதனைகளென்று முன்னிலைப்படுத்துகிறார்கள்.

எப்பொழுதெல்லாம் ஜெபசிந்தையோடும் தாழ்மையோடும் போதனையை ஏற்றுக்கொள்ளும் குணத்தோடும் ஜெபத்தோடும் வேதவாக்கியங்கள் படிக்கப்படவில்லையோ, அப்பொழுதெல்லாம் தெளிவாக விளங்கக்கூடிய சுலபமான பகுதிகள் மற்றும் மிகக் கடினமான பகுதிகளுங்கூட அதின் உண்மையான பொருளினின்று திரித்துக்கூறப்பட்டுவிடும்.... ஜெபசிந்தையோடுகூடிய இருதயத்தோடு படிக்கும்பொழுது அனைவருக்கும் மிகத்தெளிவாக இருக்கும். உண்மையிலேயே நேர்மையான ஒவ்வொரு ஆத்துமாவும், சத்தியத்தின் வெளிச்சத்தினிடத்திற்கு வந்துசேர்வார்கள். “நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது”– சங்கீதம் 97:11. எந்த சபை அங்கத்தினராயினும், மறைந்திருக்கும் புதையலைத் தேடுவதுபோன்று சத்தியத்தை ஊக்கத்தோடு தேடாவிட்டால், பரிசுத்தத்தில் முன்னேறிச்செல்ல முடியாது. ★

# தேவனைப்பற்றிய பொய்யான கோட்பாடுகள்!

**“அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.” —ரோமர் 1:21.**

“இயற்கை அனைத்திலும் ஊடுருவி நிறைந்திருக்கின்ற ஒரு உள்ளியல்பே தேவன்” என்ற கொள்கை சாத்தானின் மிகப்பயங்கரமான உபாய தந்திரங்களுள் ஒன்றாகும். அது தேவனை தவறாகச் சுட்டிக்காட்டுகிறது. எனவே அது அவரது மகா மேன்மைக்கும் இராஜரீகத்திற்கும் ஒரு அவமதிப்பாகும்.

இந்தக் கொள்கையும், அது சம்பந்தப்பட்ட அனைத்துக் கொள்கைகளும் தேவனுடைய வார்த்தையின் ஆதரவைப் பெற வில்லை. அவரது சத்தியத்தின் வெளிச்சம் இந்தக் கொள்கைகளை எல்லாம், ஆத்துமாவை அழிக்கின்ற செயல்துணைகள் என்று காட்டுகிறது. இருள்தான் இந்தக் கொள்கைகளின் செயற்களம், சிற்றின்பமே அவைகளின் செயல்கள். இயல்பான இருதயத்தை இவைகள் திருப்திசெய்கின்றன. விருப்பப்படிக் காரியங்களைச் செய்ய முழு உரிமையும் கொடுக்கின்றன. தேவனைவிட்டு விலகிச்செல்வதே, இவைகளை ஏற்றுக்கொள்வதினால் ஏற்படும் விளைவாகும்....

மனிதரின் இதயத்தைப்பற்றிப் பிடித்திருக்கும் தீமையை உடைத்தெறியத்தக்க வல்லமை ஒன்றிருக்கிறது. அது இயேசு கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய வல்லமையேயாகும். சிலுவையில் அறையப்பட்ட அந்த ஒருவரது இரத்தத்தின்மூலமே பாவத்தினின்று சுத்திகரிப்பு ஏற்படமுடியும். நமது விழுந்தபோன தன்மையின் போக்குகளை எதிர்த்து அடக்கியாள அவரது கிருபைமாத்திரமே நமக்குப் பெலனளிக்கமுடியும். இந்த வல்லமை, தேவனைப்பற்றி ஆவியுலக துறைசார்ந்த போலியான

கொள்கைகளை பயனற்றுப்போகச் செய்கிறது. அனைத்து இயற்கையையும் ஊடுருவிச்செல்லும் ஒரு உள்ளியல்பாக தேவன் இருப்பாரானால் எல்லா மனிதரிலும் அவர் வாசஞ்செய்கிறார். பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்ள மனிதன் தன்னிலுள்ள வல்லமையை முன்னேற்றுவித்தால் மட்டும் போதும்!?

இந்தக் கோட்பாடுகள் அதின் தர்க்கரீதியான முடிவின்படி பின்பற்றப்படும்பொழுது, கிறிஸ்தவ நடைமுறை ஆட்சியை முற்றிலுமாக அடித்துக்கொண்டுபோய்விடுகின்றது. பாவநிவாரணம் செய்யப்படவேண்டும் என்ற தேவையையே இல்லாமல் ஆக்கிப்போடுகின்றது. மனிதன் தன்னைத்தானே இரட்சிக்கக்கூடியவன் என்று காட்டுகிறது. தேவனைப்பற்றிய இந்தக் கொள்கைகள் அவரது வார்த்தையை பயனற்றதாக்கிவிடுகிறது. இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்பவர்கள் முழு வேதாகமத்தையும் ஒரு கட்டுக்கதையென பார்க்கக்கூடிய நிலைக்கு இறுதியிலே நடத்தப்படும் பேராபத்திலிருக்கிறார்கள். அவர்கள் தீயொழுக்கத்தைவிட, ஒழுக்கம் மேலானது என்று மதிப்பீடு செய்யலாம், தேவன் அவரது இறையாண்மை நிலையினின்று மேற்கூறியவாறு அகற்றப்பட்டிருக்கிறதினால், தேவன் இல்லாவிடில் மதிப்பற்றுப்போகிற மானிட வல்லமையின்மீது அவர்கள் சார்ந்திருக்கிறார்கள்.. உதவியற்ற மானிடச் சித்தத்திற்கு தீமையை எதிர்த்து மேற்கொள்ளும் அந்த மெய்யான சக்தி கிடையாது. ஆத்துமாவின் அரண்கள் நொறுக்கப்பட்டுத் தள்ளப்பட்டிருக்கின்றன. பாவத்திற்கு எதிரான தடைவேலி மனிதனுக்கு இல்லை. தேவனுடைய வார்த்தை அவரது ஆவியானவரால் கிடைக்கின்ற கட்டுப்பாடுகள் ஒருமுறை ஒதுக்கித் தள்ளப்படும்பொழுது, எந்த ஆழத்திற்கு ஒருவர் அமிழ்ந்துபோய்விடுவார் என்பதை நம்மால் அறிய முடியாது.

இந்த ஆவிமார்க்கக் கோட்பாடுகளைத் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருப்பவர்கள் அவர்களது கிறிஸ்தவ அனுபவத்தை நிச்சயமாகவே இழந்துவிடுவார்கள். தேவனோடு அவர்கள் கொண்டுள்ள தொடர்பை அறுத்துப்போட்டு, நித்திய வாழ்வையும் இழந்து விடுகிறார்கள். ★

# பொய்யான அறிவியலிலுள்ள அபாயங்கள்!

**"ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு"**
**–1 தீமோத்தேயு 6:20.**

நியூ ஹாம்ஷயர் என்ற இடத்தில் தேவனைப்பற்றின பொய்யான கருத்துக்களை சுறுசுறுப்பாகப் பரப்பிக்கொண்டிருந்தவர்கள் இருந்தார்கள். இந்த மனிதர்கள் தங்களது கருத்துக்களின்மூலமாக சத்தியத்தைப் பயனற்றதாக ஆக்கிக்கொண்டிருந்தார்கள் என்பதுபற்றி எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டது. இந்தக் கருத்துக்களில் சில சுகபோக இச்சைக்கு (குசநந– டுழஎளைஅ) வழிநடத்தியது. இந்த மனிதர்கள் தேவனைப்பற்றி யூகித்து, தான்தோன்றித் தத்துவங்களை மக்கள் முன்பாக வைத்து, ஆத்துமாக்களை வஞ்சித்துக்கொண்டிருந்தனர் என்பது எனக்குக் காட்டப்பட்டது....

மற்ற கருத்துக்களினிடையே ஒருமுறை பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் பாவஞ்செய்ய முடியாது என்ற கருத்தையும் வைத்திருந்தார்கள். இதை நற்செய்திபோன்ற உணவாக மக்களுக்கு முன்பாக வைத்துக்கொண்டிருந்தார்கள். இத்தகைய பொய்யான கொள்கைகள், அவைகளுக்கே உரிய ஏமாற்றும் செல்வாக்கின் பாரத்தால் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிகக் கேட்டை விளைவித்துக்கொண்டிருந்தன. இவ்வாறு அழகாகப் புனையப்பட்ட கொள்கைகளின் தீமையைக் கண்டறிய முடியாதவர்கள்மீது ஒரு ஆவிக்குரிய ஆதிக்கத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே மாபெரும் தீமைகள் விளைந்துவிட்டன. எல்லாரும் பரிசுத்தமானவர்கள் என்ற கொள்கை பரிசுத்தமாக்கப்பட்டவர்களது மனப்போக்கு ஒருபோதும் வழிவிலகிப்போகும் ஆபத்தில் இல்லை என்ற நம்பிக்கைக்கு வழிநடத்தியது. இந்த நம்பிக்கையின் விளைவாக இருதயத்தின் சுயவிருப்பங்கள் நிறைவேறின. இந்த இருதயங்கள்

பரிசுத்தமாக்கப்பட்டவைகள் என்று சொல்லப்பட்டிருந்தாலும் சிந்தையிலும் செயலிலும் பரிசுத்தத்திற்கு வெகு தூரத்தில் இருந்தன.

"ஆள்தத்துவத்தில் குறித்துக்காட்டப்படாத ஒரு கடவுள் இயற்கையின் மூலமாக எங்கும் பரவியிருக்கிறார்" என்ற கொள்கையையும் "பரிசுத்த மாம்சம்" என்ற கொள்கையையும் மக்களுக்குமுன் வைத்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் இத்தகையோரைக் கடிந்துகொள்ளத்தக்கதாக நான் அழைக்கப்பட்டேன்.

வருங்காலத்தில் சத்தியமானது மனிதரின் கொள்கையால் போலியாக்கப்பட்டுவிடும். பாதுகாப்பான கொள்கைபோன்று வஞ்சிக்கும் கொள்கைகள் மனிதர்முன் வைக்கப்படும். பரலோக மன்றங்களிலே பொய்யன அறிவியலை சாத்தான் தனது செயல்துணைகளில் ஒன்றாகப் பயன்படுத்தினான். அக்காரியம் இன்றும் அவனால் பயன்படுத்தப்படுகிறது....

தேவனுக்காக ஊழியஞ்செய்கிறவர்கள் கலப்படமற்ற மெய்யான ஒன்றிற்குப்பதிலாக, போலியானதை ஏற்றுக்கொள்ள வேண்டாமென நான் அவர்களிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறேன். மிகவும் அருமையான சத்தியங்கள் நிறைந்த ஒரு முழு வேதாகமம் நம்மிடத்தில் இருக்கிறது. யூகங்களோ அல்லது பொய்யான பரபரப்போ நமக்கு அவசியமில்லை. சத்தியம் எனப்படும் பொற் கலசத்திலே கிறிஸ்துவின் போதனைகள் எடுத்துக்காட்டியதுபோல் பாவத்தை உணர்த்தி ஆத்துமாக்களை மனந்திரும்பச்செய்யும் காரியங்கள் நமக்கு இருக்கிறது. அவர் எந்த சத்தியங்களை இந்த உலகிற்குக் கூறியறிவிக்க வந்தாரோ, அந்த சத்தியத்தை கிறிஸ்துவின் எளிமையோடு மக்கள்முன் வையுங்கள். உங்கள் தூதின் வல்லமை, அதை மற்றவர்கள் உணரும்படிச் செய்துவிடும். வேதாகமத்தை அடித்தளமாகக் கொண்டிராத கொள்கைகளையோ அல்லது பரிசோதனைகளையோ மக்கள்முன் வைக்காதீர்கள். ★

# சாத்தானுடைய வஞ்சகத்தின் ஒரு தலைசிறந்த படைப்பு!

**“மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்” —உபாகமம் 29:29.**

ஆவிக்குரிய மற்றும் உலகியல் சார்ந்த காரியங்களைப்பற்றி மானிடர் கொண்டிருக்கும் அறிவு அரைகுறையானது, பூரணமற்றது. எனவே அநேகருக்கு வேதவாக்கியக் கூற்றுகளோடு அறிவியலைப்பற்றிய கருத்துக்களை இணைத்துப்பார்க்கும் திறன் இல்லை. வெறும் கொள்கைகளையும் யூகங்களையும் அறிவியல் உண்மைகள் போன்று அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள். “அறிவியல் என்று பொய்யாகக் கூறப்படுபவைகளை” வைத்து தேவனுடைய வார்த்தை பரிசோதிக்கப்படவேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். (1தீமோத்தேயு 6:20). படைத்தவர் மற்றும் அவரது கிரியைகள் அவர்களது புரிந்துகொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டவையாகும். இவைகளை இயற்கையின் சட்டங்களை வைத்து விளக்கமுடியாத காரணத்தால், வேதாகம வரலாறுகள் நம்பமுடியாதது என்று மதிப்பிடுகிறார்கள். பழைய—புதிய ஏற்பாடுகளின் விவரத்தொகுதிகளின் நம்பகத்தன்மையைக்குறித்து சந்தேகிப்பவர்கள், அடிக்கடி மேலும் ஒரு அடி எட்டப்போய், தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையே சந்தேகித்து, இயற்கை எல்லயற்ற வல்லமையுடையது என்று கூறுகிறார்கள். தங்களது நங்கூரத்தை தங்களைவிட்டுச் செல்லும்படி அனுமதித்துவிட்டார்கள். எனவே நம்பிக்கையின்மை என்ற பாறையில் மோதும்படி விட்டுவிடப்படுகிறார்கள்.

இவ்வாறு அநேகர் தவறுசெய்து, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போய்விடுகிறார்கள். பிசாசினால் கவர்ச்சிக்கப்பட்டு, வெளியே இழுக்கப்படுகிறார்கள். புரியாத அநேக இரகசியங்களை மானிடத்

தத்துவம் தேடி விளக்கங்கொடுக்க முயற்சி செய்திருக்கிறது. ஆனால் இவைகள் நித்தியகால யுகங்கள் முழுவதும் ஒருபொழுதும் வெளிப்படுத்தப்படப்போவதில்லை. தேவன் அவரைப்பற்றியும் அவரது நோக்கங்களைப்பற்றியும் வெளிப்படுத்தியிருக்கிறவைகளைத் தேடி ஆராய்ந்து விளங்கிக்கொள்வார்களானால் யோகோவாவின் வல்லமை, மகிமை, இராஜரீக மேன்மை ஆகியவைகளைப்பற்றி இப்படிப்பட்ட கருத்தைப் பெற்றுக்கொள்வார்கள். பின்னர் தங்களது அற்பமான நிலையை தெளிவாக உணர்ந்து தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட காரியங்களைக்குறித்து திருப்தியோடிருப்பார்கள்.

தேவன் மக்களுக்கு தெரிவிக்காதவைகளையும், அவர்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்று அவர் திட்டமிடாதவைகளையும் குறித்து, மனிதரின் மனங்கள் ஆராய்ச்சி செய்யவும் யூகிக்கவும் வேண்டுமென்று செய்யும் காரியம் சாத்தானின் தலைசிறந்த வஞ்சகங்களுள் ஒன்றாகும். இவ்வாறு முயற்சித்ததினால்தான் லூசிபர் பரலோகத்தில் தனது இடத்தை இழந்துவிட்டான். தேவனுடைய நோக்கங்களின் அனைத்து இரகசியங்களும் அவனிடத்தில் நம்பி ஒப்படைக்கப்படவில்லை என்ற காரணத்தால் அதிருப்தியடைந்தான். தனக்கு நியமிக்கப்பட்டிருந்த உன்னதமான இடத்திலுள்ள தனது சொந்த வேலையைக்குறித்து அவனுக்கு விளக்கப்பட்டிருந்ததை அவன் முற்றிலுமாகப் புறக்கணித்தான். அவனது கட்டுப்பாட்டிற் கடியிலிருந்த தூதர்களிடம் அதேவிதமான அதிருப்தியை உருவாக்கி, அவர்களது விழுகைக்கும் காரணமானான். இப்பொழுது, அதே ஆவியை மனிதரின் மனதில் நிரப்புவதற்கு முயன்று தேவனுடைய நேரடியான பிரமாணங்களைப் புறக்கணிக்கும்படியும் நடத்துகிறான். ★

மே 8

# காலங்களும் வேளைகளும்!

**"அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" —அப்போஸ்தவர் 1:7.**

காலங்களையும் வேளைகளையும் தேவன் தமது சொந்த அதிகாரத்திற்குள் வைத்திருக்கிறார். இந்த அறிவை அவர் ஏன் நமக்குக் கொடுக்கவில்லை? ஏனெனில் அவர் அப்படிச் செய்திருப்பாரானால் நாம் அதை சரியாகப் பயன்படுத்தியிருக்க மாட்டோம். நமது மக்கள் மனதில் இந்த அறிவு இருக்குமானால் வரப்போகின்ற மகா நாளிலே நிற்கத்தக்கதாக ஒரு மக்கள் கூட்டத்தை ஆயத்தஞ்செய்யும் தேவனுடைய பணியில் பெருமளவிற்கு தாமத்தை ஏற்படுத்திவிடும்.... இயேசு தமது சீடர்களிடத்தில் விழிப்போடு கவனமாயிருக்கவேண்டுமென்று கூறினார். ஆனால் திட்டவட்டமான ஒரு நேரத்தைப்பற்றி அல்ல. தங்களுடைய தலைவனின் கட்டளைக்கு கவனமாகச் செவிசாய்த்துக் கொண்டிருக்கவேண்டுமென்ற நிலையில் அவரது பின்னடியார்கள் இருக்கவேண்டும். ஆண்டவரின் வருகையின் நாளை நெருங்கிவரும்போது, அவர்கள் விழிப்போடிருக்கவேண்டும். காத்துக்கொண்டிருக்கவேண்டும். ஜெபித்துக்கொண்டிருக்கவேண்டும். ஊழியஞ்செய்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் அந்தநேரம் சரியாக எப்பொழுது வரும் என்ற எவருமே முன்னறிவிக்கமுடியாது. "அந்தநாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான்." அவர் ஓராண்டிற்குள், இரண்டு ஆண்டுகளுக்குள், ஐந்து ஆண்டுகளுக்குள் வருவாரென்று நீங்கள் கூறமுடியாது. அல்லது பத்து, இருபது ஆண்டுகளுக்கு அவர் வரமாட்டார் என்று கூறி, அவரது வருகையைத் தள்ளிப்போடவும் கூடாது.... பரிசுத்த ஆவியின் பெரும் அருள் மாரிக்கானாலும் அல்லது கிறிஸ்துவின் வருகைக்கானாலும் திட்டமான நேரத்தை நாம் அறியவேண்டியதில்லை.

பழைய எருசலேமிற்குப் போகவேண்டியது தங்களது கடமை என்றும், ஆண்டவர் வருமுன்பாக தாங்கள் அங்கு செய்யவேண்டிய பணி ஒன்று உண்டு என்றும், ஒரு மாபெரும் தவறான காரியத்தை நம்பிக்கொண்டிருந்த

சிலர் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டார்கள். இந்த ஒரு கருத்து, மூன்றாம் தூதனுடைய தூதிற்கடியில் ஆண்டவரின் நிகழ்கால ஊழியத்தின் பெயரிலுள்ள எண்ணத்தையும் ஆர்வத்தையும் எடுத்துப்போடத்தக்கதாக திட்டஞ்செய்யப்பட்டதாகும். இன்னமும் எருசலேமிற்குப் போகவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருப்பவர் களுக்கு அவர்கள் மனங்கள் அங்கேதான் இருக்கும். தாங்களும் மற்றவர்களும் அங்கு செல்லவேண்டுமென்பதற்காக அவர்களது பொருளும் நிகழ்கால சத்தியத்திற்குப் பயன்படாதபடி நிறுத்திவைக்கப்பட்டுவிடும். இந்த ஊழியத்திட்டம் எத்தகைய மெய்யான நன்மையையும் நிறைவேற்றாது. ஒரு சில யூதர்களைக் கூட இயேசுவின் முதலாம் வருகையில் விசுவாசம் வைக்கச் செய்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். அவரது இரண்டாம் வருகையை நம்பச்செய்வதற்கு மேலும் அதிகக் காலமாகும்.

குறிப்பு: இந்த வேதப்பகுதியானது 1850–ம் ஆண்டுகளின் ஆரம்ப நாட்களில் எழுதப்பட்டது. “வரப்போகிற காலம்” என்ற காரியத்தை ஆதரித்து வாதாடியவர்கள், பழைய எருசலேம் ஒரு கிறிஸ்தவ சாட்சியின் மையமாக, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றத்தக்கதாகக் கட்டப்படும் என்று போதித்தார்கள். ★

# நோவாவின் நாட்களில் நடந்ததுபோல...!

**“நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்” —லூக்கா 17:26.**

நமது உலகிலே காரியங்கள் ஒரு பயங்கரமான நிலையில் காணப்படுகின்றன என்பது எனக்குக் காட்டப்பட்டது. இரக்கத்தின் தூதன் தனது செட்டைகளை மடக்கிக்கொண்டு புறப்பட்டுச்செல்வதற்கு ஆயத்தமாகிறான்.... தேவனுடைய பிரமாணம் பயனற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. குழப்பம், கலக்கம், வறுமை, பஞ்சம், நிலநடுக்கங்கள், வெள்ளங்கள் ஆகியவைபற்றி நாம் பார்க்கிறோம், கேள்விப்படுகிறோம். மனிதர் பயங்கரமான அட்டூழியங்களை நடப்பிப்பார்கள். பகுத்தறிவு அல்ல, இச்சையே ஆதிக்கஞ்செலுத்தும். சோதோம், கொமோராவின் குடிகளைப்போன்று துரிதமாக மக்கள் கேடடைந்துவருவதால், தேவனுடைய உக்கிரகோபம் பூமியின்மீது படிகின்றது. ஏழைகளை ஒடுக்கி, தன்னலத்தோடு குவிக்கப்பட்ட சொத்துக்களும் மற்றும் ஆயிரக்கணக்கான உயிர்களும் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் அழிந்துகொண்டிருக்கின்றன. ஆண்டவர் சீக்கிரத்தில் தமது பணியைக் குறைத்து, அதை முடித்துவிட்டு பாவத்திற்கு முடிவுகட்டப்போகிறார். இந்தக் கடைசி நாட்களிலே செயல்படுத்தப்படும் அக்கிரமங்கள் பற்றி எனது கண்களுக்கு முன்பாகக் காட்டப்பட்ட காட்சிகள் தேவனுடைய மக்களென்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்களுடைய உள்ளங்களில் ஒரு ஆழமான எண்ணத்தை ஏற்படுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

நோவாவின் நாட்களில் எப்படி இருந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் இருக்கும். ஆண்டவர் பூமியிலே தாம் போட்டிருந்த தடைவரம்புகளை அகற்றிக்கொண்டிருக்கிறார். வெகுசீக்கிரத்தில் மரணமும், அழிவும், குற்றங்கள் பெருகுதலும், கொடுமையும், ஏழைகளுக்கு எதிராகத் தங்களை உயர்த்திக்கொண்ட செல்வந்தர்களுக்கு விரோதமாக தீமை

செயலாற்றுதலும் நடைபெறும். தேவனுடைய பாதுகாப்பற்றவர்கள் எந்த இடத்திலும், எந்த நிலையிலும் பாதுகாப்பைக் காணமுடியாது. காயப்படுத்தவும் கொலைசெய்யவுந்தக்கதாக மிகவும் சக்திவாய்ந்த கருவிகளைத் தங்களது புதிய கண்டுபிடிப்பின் வல்லமையில் பயன்படுத்துவதற்காக மானிடர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது....

என்னுடைய சகோதர, சகேதரிகளே... உங்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அநேகருடைய ஜீவியங்கள் இன்பத்தில் இழைந்து, நாகரிகத்தில் தோய்ந்துபோயிருக்கின்றது. தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் செயலாற்றும் கிறஸ்தவ வாழ்க்கையின் பொருள் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. ஒரு கிறிஸ்துவைப்போன்று இருக்கவேண்டும் என்பதே அதன் பொருள்.... அவரோடு இசைந்து வாழ்வதின்மூலம், அவருடன் ஒத்துழைக்கவேண்டும். விக்கிரகத்தின் வடிவத்தை எடுத்துக்கொள்ளும் அனைத்தையும், ஆத்தும ஆலயத்தினின்று வெளியேற்றவேண்டும். இப்பொழுது தேவனுடைய நேரம். அவருடைய நேரம் உங்களுடைய நேரமாகும். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுங்கள், அவிசுவாசத்தைப்பற்றி நினைக்கவும், பேசவும் வேண்டாம். இந்த உலகம் கடைசி எச்சரிப்பின் தூதைக் கேட்கவேண்டும். ★

# வெகு சீக்கிரத்தில் ஒரு பெரும் பயங்கரம் நிகழவிருக்கின்றது!

**"...நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்." –1 கொரிந்தியர் 4:9.**

இந்த உலகம் ஒரு நாடக மேடை. இதன் குடிகள் அனைவரும் மாபெரும் கடைசி நாடகத்தில் தங்களது பாகத்தை நடிக்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார்கள். மனிதர் சதியுடன் கூடிய உள்ளார்ந்த நோக்கத்தோடு, தங்களது தன்னலமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகக் கூடுவதைத்தவிர, இந்த மாபெரும் மானிட திரள்கூட்டத்தின் மத்தியில் ஒற்றுமை என்பது இல்லை. தேவன் நோக்கிப்பா ர்த்துக்கொண்டிருக்கிறார். கலகக்குணம் படைத்த அவரது குடிமக்களுக்காக அவர் கொண்டிருக்கும் நோக்கங்கள் நிறைவேறுதலை அடையும். தேவன் இந்த உலகில் குழப்பம் மற்றும் ஒழுங்கற்ற நிலையிலுள்ள மூலக்கூறுகளை ஒரு காலம்வரை ஆதிக்கஞ்செலுத்த அனுமதித்தபோதிலும், இந்த உலகம் மனிதரின் கையில் ஒப்படைக்கப்பட்டுவிடவில்லை. நாடகத்தின் கடைசி மாபெரும் காட்சிகளைக் கொண்டுவரத்தக்கதாக, அடிமட்டத்தலிருந்து ஒரு வல்லமை கிரியை செய்துகொண்டிருக்கிறது. எவரெல்லாம் தங்களை இரகசியச் சங்கங்களிலே கூட்டாக இணைத்து ஒன்றுபடுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களிலே அனைத்து அநீதியின் வஞ்சகத்தோடும் வேலைசெய்வதற்காக சாத்தான் கிறிஸ்துவைப்போன்று வருவான். குற்றத்திற்கு உடந்தையான கூட்டுறவுகளிலே, அதிக இச்சையோடு தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள் சத்துருவின் (சாத்தானின்) திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்திற்கேற்ற அதன் விளைவு பின்தொடரும்.

மீறுதல் ஏறக்குறை அதின் வரையறை எல்லையை அடைந்துவிட்டது. குழப்பம் இந்த உலகத்தை நிறைத்து இருக்கிறது. மானிடர்மீது ஒரு

மாபெரும் பயங்கரம் சீக்கிரத்தில் வரவிருக்கிறது. முடிவு வெகு சமீபம். திணறடிக்கக்கூடிய எதிர்பாராத அதிர்ச்சி இந்த உலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்போகிறது. இதை எண்ணி சத்தியத்தை அறிந்தவர்களாகிய நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்க வேண்டும்....

நாம் ஒருகூட்டமக்களாக உறங்கிக்கொண்டிருக்கிறோமா? இப்பொழுது ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமில்லாமலிருக்கிற, ஆண்டவரின் குடும்ப அங்கதினராவதற்கு தகுதியற்றவர்களாக இருக்கிற நமது நிறுவனங்களிலுள்ள இளம்பெண்களும் ஆண்களும் காலங்களின் அடையாளங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வார் களானால் அவர்களிலே எப்படிப்பட்ட ஒரு மாற்றத்தைக் காணமுடியும்! ஆண்டவராகிய இயேசு சுயத்தை மறுத்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற ஊழியர்களை அழைத்துக் கொண்டிருக்கிறார். அவரோடு நடக்கவும், சிலுவையைச் சுமந்து அவரோடு ஊழியஞ்செய்யவும், அவர் எந்த வழியில் நடத்திச்செல்லுகிறாரோ அதில் பின்தொடரவும் அழைக்கிறார். அற்பமான சேவையின் சில சிறுசெயல்களை ஆண்டவருக்காகச் செய்துவிட்டு, அநேகர், மனமார திருப்தியோடிருக்கிறர்கள். அவர்களது கிறிஸ்தவம் நலிந்த நிலையிலிருக்கிறது. கிறிஸ்து பாவிகளுக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார். பாவத்திலே அழிந்துகொண்டிருக்கும் மானிடர்களை நாம் காணும்பொழுது, ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக நாம் எத்தகைய அக்கறையால் நிறைந்திருக்கவேண்டும்! அளவிடமுடியாத விலைக்கிரயத்தால் இந்த ஆத்துமாக்கள் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கல்வாரிச் சிலுவையின்மீது ஏற்பட்ட தேவகுமாரனின் மரணமே அவர்களது மதிப்பின் அளவாகும்! ஒவ்வொரு நாளும் தங்களுக்கு நித்திய வாழ்வா அல்லது நித்திய மரணமா என்பதைத் தீர்மானித்துக்கொண்டிருக்கிறார்கள். ★

# வாலிபர்களும்போதையின் நோய்க்குறிகளும்!

**“வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.” —பிரசங்கி 11:9.**

சாத்தானே இந்த அண்டசராசரத்தின் முதல் கலகக்காரன். பரலோகத்தினின்று அவன் வெளியேற்றப்பட்ட நாளிலிருந்து மானிடக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் தன்னைப் போல் மாற்றத்தக்கதாக, பழைய கொள்கைகளைக் கைவிடும்படிச் செய்யவேண்டுமென்று தேடி அலைகிறான். சட்டத்திற்குப் புறம்பான இன்சுவைக் கவர்ச்சிகளில் திளைக்கச்செய்து, தேவனுடைய பிரமாணங்களை மீறும்படி வழிநடத்தி, மனிதரை அழிப்பதற்காக அவன் திட்டங்களை உருவாக்கினான். தடைசெய்யப்பட்ட பழத்தைப் புசிக்கும்படி ஆதாமையும் ஏவாளையும் சோதித்தான். அப்பொழுது, அவர்களது விழுகையை நிறைவேற்றினான். ஏதேன் தோட்டத்திலிருந்து அவர்களும் வெளியேறவேண்டியதாயிற்று. “நான் மட்டும் ஆதாம் இருந்த இடத்தில் இருந்திருப்பேனானால் இத்தகைய எளிய சோதனையில் ஒருபோதும் விழுந்திருக்கமாட்டேன்” என்று எத்தனைபேர் கூறுகிறார்கள்! இவ்வாறு, தற்புகழ்ச்சி செய்கின்ற உங்களுக்கு, உங்களது நோக்கத்தின் ஆற்றலைக் காட்டுவதற்கும், உபத்திரவத்திற்கு அடியிலும் கொள்கைக்காக நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தைக் காட்டுவதற்கும் மேம்பட்ட ஒரு சந்தர்ப்பம் காத்துக்கொண்டிருக்கிறது. உங்களது வாழ்க்கையில் தேவன் ஒரு பாவத்தையும் காண்கிறதில்லையா?....

எங்கணும் வாலிபர்களை சிக்கவைத்து, அழிவின் பாதையில் நடத்திச்செல்ல சாத்தான் வகைதேடிக்கொண்டிருக்கிறான். அவன் அவர்களது பாதங்களை ஒருமுறை அந்த வழியிலே நிலைப்படுத்திவிடக் கூடுமானால் கீழ்நோக்கிச்செல்லும் இழிவான பாதையிலே துரிதமாக நடக்கச்செய்து,

அவனுக்கு இரையாகிவிட்டவர்கள், தங்களுக்குமுன்பாக தேவபயம் அற்றவர்களாக, மனச்சாட்சியிலே மென்மைத் தன்மையை இழந்து, ஒழுக்கங்கெட்ட ஒரு நிலையிலிருந்து, இன்னொரு ஒழுக்கங்கெட்ட நிலைக்குச் செல்லும்வரை நடத்திச்செல்கிறான். சுயக்கட்டுப்பாட்டை மெல்ல மெல்லக் குறைத்துக்கொள்ளும் பயிற்சிக்கு இவர்கள் ஆளாகிறார்கள். மேலும், மது, சாராயம், புகையிலை மற்றும் அபின் ஆகிய போதைகளுக்கு அடிமைகளாகி, ஒரு இழிநிலையிலான கட்டத்தினின்று இன்னொரு இழிநிலைக்குச் செல்கிறார்கள். இன்சுவை நுகர்ச்சிக்கு அடிமைகளாகிறார்கள். முன்பு மதித்த ஆலோசனையை இப்பொழுது இகழ்ச்சி செய்யக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். வீராப்புமிக்க தோற்றத்தைக் காட்டியவர்களாக விடுதலையைக் குறித்துப் பேசி பெருமைபாராட்டுகிறார்கள். ஆனால், அவர்களே சீர்கேடான நிலைக்கு சேவகர்களாக இருக்கிறார்கள். அவர்களது விடுதலை என்ற வார்த்தையின் பொருள் தன்னலத்திற்கும், இழிந்த இன்சுவை நுகர்ச்சிக்கும் சீர்கேடு அடைந்த காமநிலைக்கும் அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

சாத்தான் மானிட இனம் அனைத்தையுமே தனது குடிமக்களாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறான். ஆனால் சத்ததுருவிடமிருந்து மனிதன் மீட்கப்படவேண்டுமென்றும், விழுந்துபோன மானிட இனம் தேவனுடைய ஒழுக்கத்தின் சாயலைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அளவற்ற கிரயத்தை கிறிஸ்து செலுத்தியிருக்கிறார்.... விழுந்துபோன மனிதர் கிறிஸ்துவின்மூலமாக பிதாவிடம் செல்லும் உரிமையைப் பெற்றுக்கொள்ளவும் சிலுவையில் அடிக்கப்பட்டு, உயிர்த்தெழுந்த இரட்சகரின் புண்ணியங்களின் மூலமாக வெற்றியாளர்களாவதற்கு பெலனடையும்படியாகவும் கிருபையைப் பெற்றுக்கொள்ளலாம். ★

# அஞ்ஞான வல்லமையின் வெளிப்படையான அணிவகுப்பு!

**"ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்."**

**–2 தீமோத்தேயு 4:3,4.**

மிக வேகமாக மனிதர் தாங்கள் தெரிந்துகொண்ட கொடியின் கீழ் அணிவகுத்துக்கொண்டிருக்கிறார்கள். நிம்மதியின்றி தங்களது தலைவர்களது இயங்கும் வழிமுறைகளை விழிப்போடு கவனித்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.... மற்றுமுள்ளோர் நமது ஆண்டவரின் வருகைக்காக விழிப்போடு காத்துக்கொண்டும், ஊழியஞ்செய்துகொண்டும் இருக்கிறார்கள். முதன் முதலில் மருளவிழுந்துபோன அந்த மாபெரும் படைத்தலைவனுக்கடியில் அடுத்த கூட்டத்தார் துரிதமாக அணிவரிசையில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். மனித வடிவில் ஒரு தேவனுக்காக நோக்கிப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேடுகிற ஒருவரின் உருவை சாத்தான் எடுக்கிறான். திரளான மக்கள் சத்தியத்தை தள்ளிப்போட்டதினால் இவ்வாறு ஏமாற்றப்படுவார்கள். எனவே, போலியை ஏற்றுக்கொள்வார்கள். மானுடம் தேவனைப்போன்று போற்றப்படுகிறது.

முடிவின் நேரத்தை நாம் நெருங்கிக்கொண்டிருக்கும்பொழுது, அஞ்ஞான வல்லமை வெளிப்படையானவிதத்தில் பெரிய அளவில் இன்னும் மிகப்பெரிய அளவில் அணிவகுத்துச்செல்லும். அஞ்ஞான தெய்வங்கள் குறிப்பிடத்தக்கவிதத்தில் தங்களது வல்லமையை வெளிப்படுத்தி, உலகின் பட்டணங்களிலே தங்களைப் பகட்டாக வெளிப்படுத்திக்காட்டும். இந்தவிதமான சித்தரிப்புகள் ஏற்கெனவே நிறைவேறத் துவங்கிவிட்டன. தேவனுடைய மக்களை துன்புறுத்துவதில் தனிச்சிறப்போடு விளங்கியவர்களது கவர்ச்சிமிக்க செல்வாக்கும் இழிவான குணமும் பலவகையான உருவங்களின் மூலமாக கர்த்தராகிய இயேசுவால் யோவானுக்குக் காட்டப்பட்டது. இந்த பூமியில்

வரலாற்றை முடிவிற்குக் கொண்டுவரும் காரியத்தில் பெரும்பாலும் காட்டப்படுகின்ற அந்த "அக்கிரமத்தின் இரகசியத்தை" குறித்து கவனமாக ஆராய்ச்சிசெய்து கண்டறிய அனைவருக்கும் ஞானம் தேவை.... நாம் வாழ்ந்துவருகிற இந்தக் காலத்திலேயே ஆண்டவர் தமது மக்களை அழைத்து, எடுத்துச் செல்வதற்கான ஒரு தூதை அவர்களிடம் கொடுத்திருக்கிறார். ஞாயிறு சட்டத்தை ஒரு குறிப்பிடத்தக்க வல்லமையாக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைத்து, படைப்பின் ஓய்வுநாளாகிய உண்மையான ஓய்வுநாளைக் கைக்கொள்வதின் மூலம், அவரைக் கனப்படுத்துவதில் திடமாக நிற்கின்ற தேவனுடைய மக்களை ஒடுக்கிய அந்தப் பாவ மனிதனின் கொடுமையை வெளிப்படையாகக் காட்டுவதற்கு அவர்களை அழைத்திருக்கிறார்....

உலகத்தின் இறுதி நாட்களின் ஆபத்துகள் நம்மீது வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய ஊழியத்தின்போது, மக்கள் எத்தகைய ஆபத்திலிருக்கிறார்கள் என்பதைக்குறித்து நாம் அவர்களை எச்சரிக்கவேண்டும். தீர்க்கதரிசனம் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிற பக்திவிநயமான காட்சிகள் தொடாமல் விட்டுவிடப்படக்கூடாது. நமது மக்கள் பாதி அளவிற்காவது விழிப்புடையவர்களாயிருந்து, வெளிப்படுத்தின விசேஷத்தில் விளக்கமாக வர்ணிக்கப்பட்டிருக்கிற சம்பவங்கள் எவ்வளவு நெருங்கிவந்துவிட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்களானால் நமது சபைகளிலே ஒரு சீர்திருத்தம் உருவாகிவிடும். அதிகமான மக்கள் தூதை விசுவாசிப்பார்கள். நமக்கு இழக்க இனி நேரமில்லை. கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களைப்போன்று ஆத்துமாக்களுக்காக நாம் விழிப்போடிருக்கவேண்டுமென்று தேவன் நம்மை அழைக்கிறார்.★

# பட்டணங்களிலே நிகழவிருக்கும் கலவரங்கள்!

**“பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.” –2 தீமோத்தேயு 3:13.**

அவரது மக்கள் பட்டணங்களிலே ஓர் இடத்தில் கூட்டங்களாக நெருங்கி ஒன்றுசேர்ந்து மொட்டைமாடிகளிலும் ஒரே கட்டிடத்திலுள்ள குடியிருப்பு மனைகளிலும் வசிக்கவேண்டுமென்பது தேவனுடைய நோக்கமல்ல. உலகம் உண்டாக்கப்பட்ட ஆரம்ப நாட்களிலே நமது முதல் பெற்றோர்களை அழகான காட்சிகள் மற்றும் இயற்கையின் கவர்ச்சியான தொனிகளுக்கு மத்தியில் தேவன் வைத்திருந்தார். இன்றும் அந்தக் காட்சிகளையும் தொனிகளையும் மக்கள் கேட்டு, பார்த்து மகிழவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

பட்டணங்கள் குழப்பத்தினாலும் வன்முறையினாலும், குற்றங்களினாலும் நிரம்பிவழியுமென்பதையும், இந்தக் காரியங்கள் இந்தப் பூமியின் வரலாற்றின் முடிவுவரை அதிகமதிகமாகப் பெருகுமென்பதையுங்குறித்து எனக்கு வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

நமது மக்கள் தங்களது குடும்பங்களைப் பட்டணங்களிலிருந்து மிகவும் ஒதுக்கமான தனி இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கான காலம் இதுவே. இல்லாவிடில், நமது வாலிபர்களில் அநேகரும் மற்றும் வயதுவந்தவர்களில் அநேகருங்கூட கண்ணிகளில் அகப்பட்டு, எதிராளியால் கொண்டுசெல்லப்பட்டுவிடுவார்கள்.

“பட்டணத்தைவிட்டு வெளியேறுங்கள்! பட்டணத்தைவிட்டு வெளியேறுங்கள்!” இதுவே ஆண்டவர் எனக்குக் கொடுத்துக்கொண்டிருக்கும் தூதாகும்.

இந்தப் பட்டணங்களை நிறைத்திருக்கும் கலவரங்கள், குழப்பங்கள், தொழிற்சங்கங்களாலும், வேலைநிறுத்தங்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள

நிலைமைகள் ஆகியவை நமது ஊழியத்திற்கு ஒரு மாபெரும் தடங்கலாயிருக்கும். பலவிதமான தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை சில தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டிற்கடியில் கொண்டுவரத்தக்கதாக மனிதர் முயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். இது தேவனுடைய திட்டமல்ல. இது ஒரு வல்லமையால் ஏற்படுத்தப்படும் திட்டம். இதை நாம் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவனுடைய வார்த்தை நிறைவேறிக் கொண்டிருக்கிறது. எரிக்கப்படுவதற்கு ஆயத்தமாக துன்மார்க்கர் தங்களைக் கட்டுகளாகக் கட்டிக்கொண்டிருக்கிறர்கள். நமக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற அனைத்து செயல் வல்லமைகளையும், இந்த உலகத்திற்கு கடைசி எச்சரிப்பின் தூதைக் கொடுக்கின்ற பணியிலே நமது தனித்தன்மையையும் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாம் நம்மை இரகசியச் சங்கங்களுடனோ அல்லது தொழிற்சங்கங்களுடனோ இணைத்துக்கொள்ளக்கூடாது. கிறிஸ்துவையே தொடர்ந்து நோக்கியவர்களாக, தேவனில் விடுதலைபெற்றவர்களாக நாம் நிற்கவேண்டும்.

நமது உலகின் தேவ பயமற்ற பட்டணங்கள் அழிவு என்னும் துடைப்பத்தால் வாரிக்கொண்டுபோகப்படவிருக்கிறது. மாபெரும் கட்டிடங்கள் மற்றும் பட்டணங்களின் பெரும்பாலான பகுதிகளின்மீது இப்பொழுது ஏற்படுகின்ற பேரிடர்கள் பூமி முழுவதின்மீதும் என்ன சம்பவிக்கப்போகின்றது என்பதைக் காட்டிக்கொண்டிருக்கிறது. “அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்” –மத்தேயு 24:32,33. ★

# தப்பெண்ணங்கள் பெருக்கமடைகின்றன!

**"என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள். நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட் டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்." –1 யோவான் 3:13,14.**

யார் கிறிஸ்துவோடு நெருக்கமான தொடர்புடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் நிறம் அல்லது சாதிபற்றிய தவறான எண்ணங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவரது விசுவாசம் நித்திய வாழ்வுபற்றிய மெய்யான காரியங்களைப் பற்றிப்பிடித்துக்கொள்கிறது. சத்தியத்தின் தெய்வீக ஆசிரியர் (நமது கர்த்தர்) உயர்த்தப்படவேண்டும். அன்பினால் கிரியைசெய்து ஆத்துமாவைத் தூய்மைப்படுத்துகிற விசுவாசத்தினால், நமது இருதயங்கள் நிரப்பப்படவேண்டும். நாம் பின்பற்றவேண்டிய முன்மாதிரி நல்ல சமாரியனின் ஊழியமே.

சத்தியத்தை விசுவாசிக்கிறவர்கள் கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாக இணைந்து, அவரோடு ஒன்றுபட்ட நிலையை அடையும்வரை, ஆண்டவருடைய ஒழுங்கிற்கு ஏற்றபடி நிறம் பற்றிய (கருப்பர், வெள்ளையர்) அனைத்துக் காரியங்களையும் சரிப்படுத்துவது முடியாத காரியமாகும். நமது சபைகளிலுள்ள வெள்ளைக்காரர்கள் மற்றும் கருப்பின அங்கத்தினர்கள் ஆகிய இருவகுப்பாரும் மனந்திரும்ப வேண்டியது அவசியமாகும். இரு வகுப்பாரிலும் பகுத்தறிவிற்கு ஒத்துப்போகாத சிலர் இருக்கிறார்கள். நிறம்பற்றிய கேள்வி கிளர்ந்தெழும்பொழுது, அவர்கள் பரிசுத்தமற்ற—மனந்திரும்பாத குணக்கூறுகளை வெளிப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் நுகத்தை சுமக்க ஒருபோதும் கற்றுக்கொள்ளாதவர்கள் கொள்கைப் பிடிவாதமும், வளைந்து கொடுக்காத தன்மையும் உடையவர்களாக

இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் சுயம் முதன்மையான இடத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, பரிசுத்தமற்ற தீர்மானத்தோடு அமளி செய்கின்றது.

காலம் செல்லச்செல்ல இனம்பற்றிய தப்பெண்ணங்கள் பெருகும்பொழுது, அநேக இடங்களிலே கருப்பின மக்கள் மத்தியிலே வெள்ளைக்கார ஊழியர்கள் வேலைசெய்வது ஏறக்குறைய முடியாது என்ற நிலையை எட்டிவிடுகிறது. சில சமயங்களில் நமது ஊழியத்தோடு ஒத்துப்போகாத வெள்ளையின மக்கள் கருப்பின மக்களோடு சேர்ந்து எதிர்க்கிறார்கள். மேலும் சபைகளை உடைப்பதற்கும் ஓய்வுநாள்பற்றிய காரியத்தில் பிரச்சனை உண்டாவதற்கும் ஒரு முயற்சியாக நம்முடைய போதனை அமைகிறதென்று கூறுகிறார்கள். வெள்ளையின ஊழியர்களும் கருப்பின ஊழியர்களும் பொய்யான கூற்றுகளைக்கூறி, மக்களின் உள்ளங்களிலே விரோத உணர்வை விழிப்டையச்செய்கிறார்கள். எனவே, அவர்கள் அழிக்கவும் கொல்லவும் ஆயத்தமாகிறார்கள்.

கருப்பின மக்கள் மத்தியிலே இரக்கத்தின் கடைசித் தூதை கூறியறிவிப்பதைத் தடுப்பதற்காக, பாதாளத்தின் வல்லமைகள் தங்களுடைய அனைத்து சூழ்ச்சித் திறன்களோடும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. வெள்ளையர் மற்றும் கருப்பின மக்களுக்கு இடையே நிலவுகின்ற தப்பெண்ணங்களைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதை சுவிசேஷ ஊழியருக்கும் போதகருக்கும் மிகவும் கடினமானதாக ஆக்குவதற்காக, சாத்தான் கிரியை செய்துகொண்டிருக்கிறான்.

ஞானத்தின் வழிமுறையை நாம் பின்பற்றவேண்டும். தேவையற்ற விதத்தில் எதிர்ப்பை உண்டாக்கத்தக்கதாக நாம் எதையும் செய்யக்கூடாது. சுவிசேஷ தூதை அறிவிக்கும் வேலையைத் தடைசெய்கின்ற எந்தக் காரியத்தையும் நாம் செய்யக்கூடாது.★

# நிர்வாணநிலையின்மீது இச்சையுடன்கூடிய நாட்டம்!

**"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று." —மத்தேயு 5:28.**

அநேக வாலிபர்கள் புத்தகம் வாசிக்க ஆர்வத்தோடிருக்கின்றனர். தங்கள் கையில் கிடைக்கும் அனைத்தையும் வாசிக்கிறார்கள். பரபரப்பூட்டும் காதல் கதைகள், தூய்மையற்ற படங்கள் ஆகியவைகளுக்குக் கேடுசெய்யும் ஒரு செல்வாக்கு இருக்கிறது. அநேகர் புதினங்களை (நாவல்களை) ஆர்வத்தோடு கவனமாகப் படிக்கிறார்கள். அதன் விளைவாக, அவர்களது கற்பனை சக்தி கேடடைகிறது. நிர்வாண நிலையில் காணப்படும் பெண்களின் புகைப்படங்கள் விற்பனைக்காக கார்களிலே அடிக்கடி எடுத்துச்சென்று பரப்பப்படுகிறது. கலைத்திறனோடு செதுக்கும் சிற்ப வேலைகளிலே ஈடுபட்டிருப்பவர்கள் இருக்கின்ற இடங்களிலுள்ள சுவர்களிலே இத்தகைய அருவருப்பான படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. எங்கணும் ஊழல் நிறைந்த—கேடுகள் நிரம்பி வழிகின்ற காலமிது. நோக்கிப்பார்ப்பதாலும், வாசிப்பதாலும் கண்களின் இச்சைகளும் கேடான சிற்றின்ப இச்சைகளும் வெளிப்படுகின்றது. இத்தகைய கற்பனை வளத்தினால் இருதயம் கேடடைகிறது. கீழ்த்தரமான—ஒழுக்கக்கேடான—இச்சைகளைத் தூண்டிவிடுகின்ற—காட்சிகளை ஆழ்ந்து சிந்திப்பதினால் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. கேடடைந்த கற்பனாசக்தியின்மூலமாகக் காண்கின்ற இழிந்த நிலையிலுள்ள உருவச்சிலைகள் ஒழுக்கத்தைக் கெடுத்து, வஞ்சிக்கப்பட்டு மயங்கிக்கிடக்கின்ற மனிதரை, அடங்காத சிற்றின்ப ஆசைகளுக்கு, கட்டுக்கடங்காமல் இணங்குவதற்கு ஆயத்தமாக்குகிறது. அதன்பின்னர் தொடருகின்ற பாவங்களும் கடுமையான குற்றங்களும் தேவசாயலில் படைக்கப்பட்ட மனிதனை இறுதியில் அழிவிலே அமிழ்ந்துபோகத்தக்கதாக மிருகங்களோடு வைத்து எண்ணப்படும் நிலைமைக்கு இழுத்துக்கொண்டுபோய் விட்டுவிடுகிறது. தூய்மையற்ற

சிந்தனைகளை முன்வைக்கின்ற காரியங்களை வாசிப்பதையும் பார்ப்பதையும் தவிர்க்கவேண்டும். ஒழுக்கம் மற்றும் அறிவுசார்ந்த வல்லமைகளை வளர்த்து உருவாக்கவேண்டும். இத்தகைய மேன்மையான சக்திகள், கதைப் புத்தகங்களை மிதமிஞ்சி வாசிப்பதினால் தளர்ச்சியடைந்து தகாத வழியில் பயன்படுத்தப்படாதிருக்கட்டும்....

தேவனுடைய வார்த்தையை கவனமாகப் படிப்பதை வாலிபர்கள் துய்த்து மகிழாவிடில், அவர்கள் ஒரு ஆரோக்கியமான நயத்தோடு கூடிய மனதையும் சரியான மார்க்கசம்பந்தமான கொள்கைகளையும் உடையவர்களாயிருப்பது கூடாதகாரியமாகும். வேதாகமப் புத்தகம் ஆர்வமூட்டக்கூடிய வரலாற்றுப்பகுதியை தன்னகத்தே வைத்துள்ளது. கிறிஸ்துவின் மூலமாக மீட்பின் பாதையைச் சுட்டிக்காட்டுகிறது. உயர்வான—மேன்மையான வாழ்விற்கு அவர்களது வழிகாட்டியாக இருக்கின்றது. அவர்களது கற்பனைத்திறன் போலியான தன்மையுள்ள, பரபரப்பூட்டும் கதைகளால் தவறான நிலையை அடைந்திராவிட்டால் தாங்கள் ஆராய்ந்துபடித்த புத்தகங்களிலே இதுவே மிகவும் ஆர்வமூட்டக்கூடிய புத்தகமென்று அவர்கள் அனைவரும் அழுத்தந்திருத்தமாகக் கூறுவார்கள். இரண்டாம் வருகையிலே உங்களது சாவிற்கேதுவான சரீரத்தை மாற்றவும், தமது மிகவும் மேன்மையான சரீரத்திற்கேற்றபடி அவைகளை வடிவமைக்கவும்வேண்டுமென்று ஆண்டவரை நோக்கிப்பார்த்துக கொண்டிருக்கின்ற நீங்கள், மிகவும் உயர்ந்த செயற்பாடுடையவர்களாக வெளிவரவேண்டும். இதுவரை நீங்கள் செய்ததைவிட, மிக உயர்ந்த நோக்குநிலையினின்று நீங்கள் உழைக்கவேண்டும். இல்லாவிடில், சாவாமை என்னும் அந்த இறுதித் தொடுதலைப் பெற்றுக்கொள்ளும் கூட்டத்தின் எண்ணிக்கையில் உள்ளவராக நீங்கள் இருக்க முடியாது.★

# சமாதானம்பற்றி கூக்குரலிடுபவர்கள்!

**"வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம் போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள்." —ஏசாயா 56:12.**

பொல்லாத ஊழியக்காரன் என் ஆண்டவன் வர நாள்செல்லும் என்று தனது இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான். கிறிஸ்து வரமாட்டார் என்று அவன் சொல்லுகிறதில்லை. அவரது இரண்டாம் வருகையைப்பற்றிய கருத்தைக்குறித்து பரிகாசஞ்செய்கிறதில்லை. ஆனால் அவனது இருதயத்திலும் அவனது வார்த்தைகள் செயல்கள் மூலமாகவும் ஆண்டவரின் வருகை தாமதமாயிருக்கிறது என்று உறுதியாகக் கூறுகிறான். ஆண்டவர் சீக்கிரம் வரப்போகிறார் என்ற உறுதியான எண்ணத்தை மற்றவர்களது உள்ளங்களிலிருந்து அகற்றிப்போடுகிறான். அவனது செல்வாக்கு துணிகரமான அக்கறையற்ற தாமதத்திற்கு மனிதரை வழிநடத்துகிறது. அவர்கள் தங்களது உலகப்பற்றிலும் மதிமயங்கிய நிலையிலும் நன்கு ஊன்றியிருக்கிறார்கள். பூமிக்குரிய இச்சைகள், சிந்தனைகளைக் கெடுத்து, உள்ளத்தை ஆட்கொண்டுவிடுகின்றன. அந்தப் பொல்லாத ஊழியக்காரன் குடிகாரனோடு சேர்ந்து புசித்து, குடித்து சிற்றின்பத்தைத் தேடி, உலகத்தோடு இணைந்துகொள்கிறான். அவன் தனது சக ஊழியர்களை அடித்து, தங்களது எஜமானர்களுக்கு உண்மையாயிருப்பவர்களைக் குற்றஞ்சாட்டி, கண்டனஞ் செய்கிறான்....

கிறிஸ்துவின் வருகை பொய்யான போதகர்களை திடீரென்று அதிர்ச்சியில் மூழ்கடிக்கும். அவர்கள் "சமாதானம், சவுக்கியம்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எருசலேமின் விழுகைக்கு முன்னாலிருந்த ஆசாரியர்களையும் போதகர்களையும்போன்று இந்த பூமிக்கடுத்த செழுமையையும் மகிமையையும் அனுபவிக்க வேண்டுமென்று சபையை நோக்கிப்பார்க்கிறார்கள். காலங்களின் அடையாளங்கள் இதை முன்குறித்துக்காட்டுகிறது என்று விளக்கங்கொடுக்கிறார்கள். ஆனால்

ஆண்டவரின் அருள் வார்த்தை என்ன கூறுகிறது? “அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்...”

ஆண்டவரின் வருகையை மனிதர் எட்டத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எச்சரிப்புகளைக்கேட்டுச்சிரிக்கிறார்கள். “அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்” என்றும், “வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம் போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள்” என்றும் பெருமையான தற்புகழ்ச்சி செய்யப்படுகிறது. (2 பேதுரு 3:4; ஏசாயா 56:12). மேலும் இன்பங்களை நேசிப்பதில் நாம் ஆழ்ந்து ஈடுபடுவோம் என்கிறார்கள். ஆனால் கிறிஸ்து: “இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்” (வெளி. 16:15) என்று கூறுகிறார். “அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?” என்று ஏளனமாக இந்த உலகத்தார் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கும் அந்த நேரத்தில் தானே அடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. “சமாதானம், சவுக்கியம்” என்று அவர்கள் உரத்த சத்தமிடும்பொழுது, கொள்கைக்கு எந்த மதிப்பும் கொடுக்கப்படாமல், பலதரப்பட்ட வழிகளில் பணம் சம்பாதிக்கும் தொழில் தொடர்ந்து நடைபெறும்பொழுது, வேதாகமத்தைத்தவிர அனைத்து அறிவையும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கற்றுக்கொள்பவர் ஆவலோடு நாடித்தேடும்பொழுது, கிறிஸ்து ஒரு திருடனைப்போல வருகிறார். ★

# காட்சிகள், ஒலிகள், குற்றப்பழியுடைமை!

**“தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்; அது என்னைப் பற்றாது. மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலவேண்டும்; பொல்லாதவனை அறியமாட்டேன்.” —சங்கீதம் 101:3,4.**

முன்னேறிச்செல்லுகின்ற ஒவ்வொரு படியிலும் சோதனைகளை எதிர்த்துப் போராடவேண்டிய நிலையிலிருக்கின்ற உங்களது பிள்ளைகளைப்பற்றி உங்களுக்கு ஆழ்ந்த அக்கறை இருப்பதற்கான காரணமிருக்கிறது. தீய தோழர்களோடு உள்ள தொடர்பைத் தவிர்ப்பது அவர்களுக்குக் கூடாத காரியமாகும்.... அவர்கள்மீது செல்வாக்கை ஏற்படுத்தி அடக்கி ஆளுகின்ற காட்சிகளைக் காண்கிறார்கள். தொனிகளைக் கேட்கிறார்கள். அவைகள் ஒழுக்கத்தைச் சீர்குலைப்பவையாக இருக்கின்றன. அவைகளினின்று அவர்கள் முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டாலொழிய இக்காரியங்கள் புலனால் உணரமுடியாத அளவிற்கு, ஆனால் நிச்சயமாக இதயத்தைக் கேடடையச்செய்து, குணத்தைப் பாழாக்கிவிடுகிறது....

சில தாய் தகப்பன்மார்கள் மிகவும் அக்கறையற்றவர் களாகவும், மிகவும் கவலையற்றவர்களாகவும் இருக்கிறார்கள். தங்களது பிள்ளைகள் ஒரு சபையைச் சார்ந்த பள்ளிக்கூடத்தில் படித்தாலும் சரி அல்லது பொதுவாக நடத்தப்படும் பள்ளியில் படித்தாலும் சரி, அதில் எந்த வித்தியாசமுமில்லை என நினைக்கிறார்கள். நாம் இந்த உலகத்திலிருக்கிறோம். “நாம் இதைவிட்டு வெளியே செல்ல முடியாது” என்று கூறுகிறார்கள். நாம் எவ்வாறு செய்யவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்வோமானால், இந்த உலகத்தைவிட்டு வெளியேற ஒரு நல்ல வழி நமக்குண்டு. இந்தக் கடைசி நாட்களில் துரிதமாகப் பெருகிவருகின்ற அநேகத் தீமைகளை நாம் தவிர்க்கமுடியும்....

எதிர்காலத்தைப்பற்றி கற்பனைத் திறனால் வெளிப்படுகின்ற காட்சிகள் சிறுபிள்ளைகள், வாலிபர்கள் ஆகியோரது சுறுசுறுப்பான உள்ளங்களில் மெய்யானவைபோன்று இருக்கிறது. புரட்சிகள் முன்னுரைக்கப்பட்டு, சட்டத்தின் தடைவேலிகளையும் சுயகட்டுப்பாட்டையும் உடைத்து தள்ளிப்போடத்தக்கதாக விவரிக்கப்பட்டுள்ள அனைத்துவகையான நடைமுறைகளும் இத்தகைய சார்புடைய காரியங்களின் தன்மையைப்பற்றி இறுகப் பிடித்துக்கொள்கிறது.

மன எழுச்சியூட்டத்தக்கதாக எழுதும் எழுத்தாளர்கள் நுட்பமாக விவரித்துக்காட்டுவதையும்விட மிகவும் மோசமான குற்றங்களை முடியுமானால் செய்வதற்கு அவர்கள் நடத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட செல்வாக்குகளின் மூலமாக சமுதாயம் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. சட்டச் செயலாட்சியற்ற நிலையின் விதைகள் பரப்பப்படுகின்றன. குற்றங்களின் ஒரு அறுவடையே அதின் விளைவாயிருக்கும் என்பதைக் கண்டு எவரும் ஆச்சரியப்பட அவசியமில்லை....

“எனது அருமையான மணிநேரங்களை எனக்குப் பயனற்றதா யிருப்பவைகளை வாசிப்பதற்காக நான் செலவழிக்கமாட்டேன். அவைகள் மற்றவர்களுக்குச் சேவைசெய்ய என்னைத் தகுதியற்றவனாக்கிவிடுகிறது. தேவனுடைய சேவைக்கு ஒரு தகுதியை அடைந்து கொள்வதற்காக, எனது நேரத்தையும் சிந்தனைகளையும் அதற்காக அர்ப்பணிப்பேன். அற்பமான—பொழுதுபோக்கான—பாவம் நிறைந்த காரியங்களுக்கு என் கண்களை மூடிக்கொள்வேன். எனது காதுகள் ஆண்டவருடையவை. எதிராளியின் தந்திரமான பகுத்தறிவின் குரலிற்கு நான் செவிசாய்க்கமாட்டேன். தேவனுடைய ஆவியானவரின் செல்வாக்கிற்கடியிலில்லாத ஒரு சித்தத்திற்கு எந்த வகையிலும் எனது குரல் கட்டுப்பட்டிருக்காது. எனது சரீரம், பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. எனது உடலின் அனைத்து சக்திகளும் தகுதியுள்ள குறிக்கோளிற்காக அர்ப்பணிக்கப்படும்” என்று உறுதியோடு கூறுங்கள்.

# ஆவிமார்க்கமும் புரட்சியும்!

**"அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்."**

**—லூக்கா 10:27.**

வாலிபர்கள் உலகத்திற்குள் செல்லும்பொழுது, பணத்தைச் சேர்க்கவேண்டுமென்ற இச்சை, கேளிக்கைகள், இன்பத்தோய்வுகளில் மூழ்கியிருத்தல் மற்றும் தோற்றப்பகட்டுகள், உயர் இன்ப வாழ்க்கை, ஆடம்பரச் செலவுகள், தந்திரமான வழிமுறைகளைக் கையாளுதல், மோசடி, பொருளாதாரச் சீரழிவு, கொள்ளையடிப்பு ஆகிய பாவங்களுக்கு கொண்டுச்செல்லும் கவர்ச்சிகளோடு போராடவேண்டியதிருக்கிறது. அங்கே சந்திக்கவேண்டிய போதனைகள் யாவை?

மனிதர் விழுந்துபோகாத அரை தெய்வங்கள் என்றும், "ஒவ்வொரு உள்ளமும் தன்னைத்தானே நியாயந்தீர்த்துக் கொள்ளும்" என்றும், உண்மையான அறிவு சட்டங்களுக்குமேலாக மனிதனை வைக்கிறது என்றும், "செய்யப்படும் பாவங்கள் அனைத்துமே குற்றமற்றவை" ஏனெனில், "என்ன காரியமானாலும் அது சரியானதே" என்றும், "தேவன் கண்டனஞ்செய்கிறதில்லை" என்றும் ஆவிமார்க்கம் உறுதியாகக் கூறுகின்றது. இழிவான மானிடர்களும், மேன்மையான உயர்த்தப்பட்ட நிலையில் பரலோகத்தில் இருக்கிறார்கள் என்று காட்டுகிறது. இவ்வாறு நீங்கள் என்ன செய்தாலும் அதைப்பற்றி பிரச்சனையில்லை. நீங்கள் விரும்புகிறபடியே வாழுங்கள், பரலோகம் உங்களுடையது என்று அனைத்து மனிதர்களுக்கும் அறிவிக்கிறது. மனதில் விருப்பமே மிக உயர்வான சட்டமென்றும், முழு உரிமையும் பெற்றுள்ள நிலையே சுதந்தரம் என்றும், மனிதன் தனக்கு மாத்திரமே கணக்கு ஒப்புவிக்கவேண்டுமென்றும், நம்பும்படியாக திரளான மக்கள் வழிநடத்தப்படுகிறார்கள்.

வாழ்வின் அந்தத் துவக்க நாட்களில் இத்தகைய போதனை கொடுக்கப்படும்பொழுது, உந்துவேகம் மிகவும் வலிமையோடிருக்கும் பொழுது, சுயகட்டுப்பாட்டிற்கும் தூய்மைக்குமான தேவை உடனடியாகச் சந்திக்கப்பட வேண்டியதாயிருக்கும்பொழுது, ஒழுக்கத்திற்கான பாதுகாவல்கள் எங்கேயிருக்கின்றன? உலகம் ஒரு இரண்டாவது சோதோமாக ஆகிவிடாதபடித் தடுப்பதற்கு எது இருக்கிறது?

அதே சமயம் குழப்பம் அனைத்துச் சட்டங்களையும், தெய்வீகச் சட்டங்களை மாத்திரமரல்ல, மானிடச் சட்டங்களையும் அடித்துக்கொண்டுபோக முயற்சிசெய்கிறது. செல்வமும் அதிகாரமும் ஓர் இடத்தில் குவிதல், அநேகரை நஷ்டப்படுத்தி ஒரு சிலர் செல்வம் சேர்ப்பதற்காக ஏற்படுத்தப்படும் மிகப் பெரிய செயற்கூட்டுறவுகள், ஏழை வகுப்புகளைச் சேர்ந்த அநேகர் தங்களுடைய ஆதாய நோக்கங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு பாதுகாப்பைத்தேடி, செயற்கூட்டுறவில் இணைதல், பிரெஞ்சுப் புரட்சிக்கு கொண்டுசென்ற அதே போதனைகளை உலகம் முழுவதும் பரப்புதல் ஆகிய அனைத்தும் பிரெஞ்சு நாட்டை அதிரச்செய்த, அந்தப் போராட்டத்தைப்போலவே முழு உலகத்தையும் சிக்கவைக்கும் படியாக நடத்திச்செல்கிறது. இன்றைய வாலிபர்கள் இத்தகைய செல்வாக்குகளைச் சந்திக்கவேண்டியதிருக்கிறது. இப்படிப்பட்ட பொங்கியெழும் பிரச்சனைகளுக்கு மத்தியில் இப்பொழுது வாலிபர்கள் தங்களது குணத்திற்கான அடித்தளத்தைப் போடவேண்டும். அனைத்துத் தலைமுறைகளிலும் அனைத்து நாடுகளிலும் குணக்கட்டுமானத்திற்கான உண்மையான அடித்தளமும் மாதிரியும் ஒன்றுபோலவே இருந்திருக்கின்றன. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது"(லூக்கா 10:27) என்பது தெய்வீகப் பிரமாணமாகும். இந்த மாபெரும் கொள்கையே நமது மீட்பரின் குணத்திலும் வாழ்விலும் வெளிப்படுத்திக் காட்டப்பட்டது. இதுவே ஒரே பாதுகாப்பான அடித்தளம், ஒரே நிச்சயமான வழிகாட்டியுமாகும். ★

# மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பரீட்சைகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

**“பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையா யிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதன முள்ளவர்கள்.” —பிலிப்பியர் 3:2,3.**

தங்களது இருதயங்களிலே தேவ ஆவியானவரின் தொடுதல் அவசியமான நிலையில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது, இந்தக் காலத்திற்கான தூது, அவர்களது மனப்பாரமாக இருக்கும். அவர்கள் மானிடப் பரீட்சைகளைத்தேடி அலையமாட்டார்கள். அதாவது, ஏதோ புதிதான—வித்தியாசமான காரியங்களைத் தேடமாட்டார்கள். நான்காம் கற்பனையிலுள்ள ஓய்வுநாளே, இந்தக் காலத்திற்குரிய பரீட்சையாகும்.

ஏறக்குறைய உலகம் முழுவதிலும் பயனற்றதாக்கிப் போடப்பட்ட தேவனுடைய பிரமாணமே, இந்தக் காலத்திற்குரிய சோதிக்கின்ற சத்தியமாகும்.... தேவனை வணங்கும் அனைவரும் இந்த அடையாளத்தின் மூலமாக (உண்மையான ஓய்வுநாளை ஆசரிப்பதின் மூலமாக) வேறுபடுத்திக்காட்டப்படக்கூடிய நேரம் வந்துகொண்டிருக்கிறது. தேவனுக்கு அவர்கள் உண்மையா யிருப்பதின்மூலமாக, தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று அறிந்து கொள்ளப்படுவார்கள். நிகழ்கால சத்தியத்தில் அடங்கியிருக்கும் மாபெரும் முக்கியமான கொள்கைகளினின்று, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சோதனைகள் அனைத்தும் உள்ளத்தை விலகச்செய்யும்.

நமக்கு மத்தியிலே எதற்கெடுத்தாலும் மிதமிஞ்சிச் செயலாற்றுபவர்கள்—அதாவது குறுகிய கண்ணோட்டமுடைய மக்கள்,

குற்றங்கண்டுபிடிக்கிறவர்கள், கூர்முனைப்புடையவர்கள், சத்தியத்தின் பொருள் இதுதான் என்று தங்களது சொந்தக் கருத்துக்களை அதிக விடாப்பிடியோடு பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள் ஆகியோரைக் கொண்டுவருவதே சாத்தானின் விருப்பமும் திட்டமுமாகும். அவர்கள் மிகவும் நெருக்கடி கொடுத்து, குறைவான முக்கியத்துவமுடைய காரியங்களில் மிகவும் கடுங்கண்டிப்பாக கடமைகளை நடைமுறைப்படுத்த முயற்சித்து, மிதமிஞ்சிச் செல்லுகிறார்கள். ஆனால் பிரமாணத்தின் உயர்தர முக்கியத்துவம் வாய்ந்தவைகளை அலட்சியஞ்செய்து, அதாவது தேவனுடைய நியாயத்தீர்ப்பு, அன்பு, இரக்கம் ஆகியவைகளை அசட்டைபண்ணுகிறார்கள். இத்தகைய கூட்டத்தைச் சார்ந்த ஒரு சிலர் செய்யும் செயல்களினால், ஓய்வுநாளைக் கைக்கொள்கிற அனைவருமே குருட்டுப்பிடிவாதமுள்ளவர்கள் என்றும், கொள்கை வெறியர்கள் என்றும் பெயர் சூட்டப்படுகிறார்கள்....

அனுபவமுள்ள மனிதர் செய்வதற்காக தேவன் ஒரு சிறப்பான வேலையை வைத்திருக்கின்றார். அவர்கள் தேவனுடைய ஊழியத்தை விழிப்போடு காக்கவேண்டும். தங்களது சொந்த சுதந்திரமான தீர்மானத்தின்படி, வெளியே செல்வது தங்களது சிறப்புரிமை என்றெண்ணுகிற மனிதரிடத்தில் தங்களுக்கு விருப்பமானது எதுவோ அதையே பிரசங்கிப்போம் என்பவர்களிடத்தில், ஊழியஞ்சம்பந்தமாக அல்லது கொடுக்கப்படும் செயல்துறை கட்டளைகளுக்கு தாங்கள் யாருக்கும் பொறுப்பல்ல என்று சொல்லுகிறவர்களிடத்தில், தேவனுடைய வேலை ஒப்படைக்கப்படக்கூடாதென்பதை இவர்கள் கவனிக்கவேண்டும். நமக்கு மத்தியிலே மட்டற்ற தன்னம்பிக்கையின் ஆவி ஆளுகைசெய்யும்படி அனுமதிப்போமானால், செய்யப்படும் காரியங்களில் எந்தவிதமான இணக்கமும் இருக்காது. ஆவியின் ஒருமைப்பாடு அங்கிருக்காது. ஊழியத்திற்கும் பாதுகாப்பு இல்லை. ஆண்டவருடைய வேலையிலே ஆரோக்கியமான வளர்ச்சியு மிருக்காது.... கிறிஸ்து தாமும் தமது பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல, தமது பின்னடியார்களும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று ஜெபித்தார். இந்த ஜெபத்திற்கு பதிலளிக்கப்படுவதைக் காண விரும்புபவர்கள் பிரிவினை எனப்படும் தன்மை சிறிதளவு காணப்பட்டாலும், அதை அதைரியப்படுத்த முயற்சி செய்யவேண்டும். சகோதரர்கள் மத்தியில் அன்பின்—ஐக்கியத்தின் ஆவியைக் காப்பாற்றவேண்டும். ★

# பிசாசிடமிருந்தும் குணமாகுதல் கிடைக்கலாம்!

**“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.” —1 பேதுரு 5:8.**

சாத்தானின் போலியான வாதங்கள் இப்பொழுது ஏராளமாகப் பெருகிக்கொண்டிருக்கின்றன. சத்தியப் பாதையினின்று விலகுபவர்கள் தங்களைத் தாங்கும் தளத்தை இழந்துவிடுவார்கள். நங்கூரம் பாய்ச்சுவதற்கு இடமின்றி, பல மாறுபாடான கொள்கைகள் என்னும் காற்றுகளால் மோதியடிக்கப்பட்டு, ஒரு வஞ்சகத்தினின்று இன்னொரு வஞ்சகத்திற்கு மெல்ல மெல்ல நகர்ந்து செல்வார்கள். சாத்தான் மகா வல்லமையோடு இறங்கியிருக்கிறான். அநேகர் அவனது அற்புதங்களால் வஞ்சிக்கப்படுவார்கள்.

வருங்காலத்திலே, மாபெரும் விழிப்பான நிலை அவசியப்படு மென்று சொல்லும்படி நான் அறிவுறுத்தப்பட்டேன். தேவனுடைய மக்களுக்கு மத்தியில் ஆவிக்குரிய மதிகேடு காணப்படக்கூடாது. மனிதரின் மனங்களை அடக்கியாளத்தக்கதாக தீயசக்திகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டு முயற்சிசெய்துகொண்டிருக்கின்றன. கடைசி நாட்களில் வரப்போகும் நெருப்பிலே எரிக்கப்படுவதற்கு ஆயத்தமாக மனிதர்கள் தங்களைக் கட்டுகளாக கட்டிக்கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவையும் அவரது நீதியையும் உதறித்தள்ளுபவர்கள் உலகத்தில் வெள்ளம்போன்று பெருக்கெடுத்துக்கொண்டிருக்கும் போலி வாதங்களை ஏற்றுக்கொள்வார்கள். கெர்ச்சிக்கிற சிங்கம் போல் யாரை விழுங்கலாம் என்று வகைதேடிச் சுற்றித்திரிகிற எதிராளியாகிய பிசாசை கிறிஸ்தவர்கள் தெளிவான அறிவோடும் விழிப்போடும் திடமாக எதிர்த்து நிற்கவேண்டும். அசுத்த ஆவிகளின் செல்வாக்கிற்கு அடியிலிருக்கும் மனிதர்கள், அற்புதங்களைச் செய்வார்கள்....

நாம் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியமில்லை. சாத்தான் மிக நெருக்கமாகத் தொடர்புகொண்டிருக்கின்ற அதிசயமான காட்சிகள் வெகுசீக்கிரத்தில் நடைபெறும். சாத்தான் அற்புதங்களைச் செய்வானென்று தேவனுடைய வார்த்தை உறுதியாகக் கூறியறிவிக்கிறது. அவன் மக்களை வியாதிப்படச்செய்து, பின்னர் தனது சாத்தானிய வல்லமையால் அவர்களிடமிருந்து அந்த வியாதியை திடீரென்று அகற்றிவிடுவான். பின்னர் அவர்கள் குணமாக்கப்பட்டதாக எண்ணப்படுவார்கள். வெளிப்படையாகக் காணப்படும் இந்த குணமாகுதலின் வேலைகள், ஏழாம்நாள் வருகையினரின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களைச் சோதனைக்கு உட்படுத்தும்....

இந்தவிதமான வெளிப்பாடுகளினிமித்தமாக, யார்மூலமாக குணமாகுதல் நடத்தப்பட்டதோ, அவர்கள் தொடர்ந்து கீழ்ப்படியாமையில் இருக்கவும் தேவனுடைய பிரமாணத்தை அசட்டை செய்யவும் துணிந்தால், அவர்கள் எந்த அளவிற்கும் எதையும் செய்வதற்கும் வல்லமையைப் பெற்றிருந்தாலும் அது தேவனுடைய மாபெரும் வல்லமை என்று நாம் எண்ணமுடியாது. முற்றிலும் மாறாக, அது மாபெரும் வஞ்சகனுடைய அற்புதஞ்செய்யும் வல்லமையே ஆகும். அவன் சன்மார்க்கப் பிரமாணத்தை மீறியவன். அந்தப் பிரமாணத்தின் உண்மையான பண்பை மனிதர் அறியாதிருக்கத்தக்கதாக, அனைத்து உபாயங்களையும் முழுமையான தேர்ச்சியுடன் பயன்படுத்தி, மனிதரைச் குருடாக்கிப்போடுகிறான். கடைசி நாட்களில் அவன் அடையாளங்களையும் பொய்யான அற்புதங்களையும் செய்வானென்று நமக்கு எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. அவன் (சாத்தான்) இருளின் தூதனல்ல, ஒளியின் தூதனே என்பதற்கான ஆதாரத்தை அவர்களுக்கு சுட்டிக்காட்டுவதற்காக, கிருபையின் காலம் முடிவடையும்வரை இந்த அற்புதங்களைத் தொடர்ந்துசெய்வான். ★

# குமுறுகின்ற பூமி!

**“அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.” —வெளிப்படுத்துதல் 6:12.**

கிறிஸ்துவின் வருகையின் நோக்கம், அவர் வருகின்ற விதம் ஆகியவைகளைமட்டும் தீர்க்கதரிசனம் முன்னுரைக்காமல் வருகை சமீபம் என்பதை மனிதர் அறிவதற்காக, சில அடையாளங்களையும் கொடுக்கிறது.... இரண்டாம் வருகைக்கு முன்னர் காணப்படும் அடையாளங்களில் முதலாவது அடையாளத்தைப்பற்றி வெளிப்படுத்தின விசேஷகன்: “அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று”—வெளி. 6:12 என்று கூறுகிறார்.

19—ம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கு முன்னரே இந்த அடையாளங்களை மக்கள் கண்டார்கள். இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக 1755—ம் வருடம் இதுவரை என்றுமே பதிவு செய்யப்படாத அளவிற்கு, ஒரு மகா பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் லிஸ்பன் நிலநடுக்கமென்று பொதுவாக அறியப்பட்டிருந்தாலும், ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளிலும் மற்றும் ஆப்பிரிக்கா, அமெரிக்கவரையிலும் விரிந்து பரவியது. மேலும் கிரீன்லாந்திலும், மேற்கு இந்தியத் தீவுகளிலும், மெடிரா தீவிலும், நார்வேயிலும், ஸ்வீடனிலும், கிரேட் பிரிட்டனிலும், அயர்லாந்திலும் உணரப்பட்டது. 40 இலட்சம் சதுரமைல்களுக்கும் குறைவின்றி பரந்துவிரிந்து பாதித்தது. இந்த நிலநடுக்கத்தின் அதிர்ச்சி ஐரோப்பாவில் எப்படி கடுமையாயிருந்ததோ, ஏறக்குறைய அதேபோல ஆப்பிரிக்காவிலும் இருந்தது. அல்ஜீயர்ஸின் பெரும்பகுதி அழிக்கப்பட்டுப்போயிற்று. மொராக்கோவிற்கு சிறிது தூரத்திலிருந்த ஒரு கிராமத்திலுள்ள 8 அல்லது 10 ஆயிரம் மக்கள் அப்படியே விழுங்கப்பட்டுவிட்டார்கள். ஒரு மாபெரும் அலை ஸ்பெயின், ஆப்பிரிக்கா கடற்கரையோரங்களில் அடித்து, பட்டணங்களை விழுங்கி, மாபெரும் அழிவை ஏற்படுத்தியது.

ஸ்பெயினிலும் போர்ச்சுகலிலும் இருந்த அதிர்ச்சி அதின் உச்சவேக வன்மையோடு வெளிப்பட்டது. காடிஸ் என்ற பகுதியில் உள்ளே வந்த அலை 60 அடி உயரமாயிருந்தது என்று சொல்லப்பட்டது. "போர்ச்சுக்கலில் இருந்த மிகப் பிரம்மாண்டமான மலைகளில் சில அதின் அடித்தளத்தினின்று அசைக்கப்பட்டது போன்று விசை வேகத்தோடு அசைக்கப்பட்டன" என்று சர் சார்லஸ் லைல் (ளுசை ஊாயசடநள டுலநடட) எழுதிய "சைைெஉனிடநள ழக புநழடழபல என்ற புத்தகத்தின் 495–ம் பக்கத்தில் காணப்படுகிறது. "ஒரு பரிசுத்த நாளிலே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மடங்களும் ஆலயங்களும் மக்களால் நிறைந்து காணப்பட்டன. வெகு சிலரே தப்பித்தனர்"–Encyclopaedia Americana, art, "லிஸ்பன்," note (ed. 1831)... அந்த சாவிற்குரிய நாளிலே 90 ஆயிரம் பேர்கள் உயிரிழந்தார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எவ்வளவு அடிக்கடி நிலநடுக்கங்கள் பற்றியும் சூறைப்புயல் பற்றியும் நெருப்பினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட அழிவுகள் பற்றியும் உயிர்களும், சொத்துகளும் பெருமளவில் சேதமடைந்தது பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம். வெளிப்படையாகச் சொல்லுமிடத்து, இந்தப் பேரிடர்கள் ஒழுங்குமுறையற்ற, சீராக அமையாத இயற்கையின் சக்திகளால் ஏறுமாறாக ஏற்படும் திடீர் வெடிப்புகளாகும். இவை முற்றிலும் மனிதக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். ஆனால் இவைகளனைத்திலும் தேவனுடைய நோக்கத்தை வாசித்து அறியலாம். இத்தகைய செயல்துணைகளின் மூலமாக ஆண்டவர் ஆண்களையும் பெண்களையும் தங்களுக்கு வரவிருக்கும் ஆபத்தை உணரத்தக்கதாக, விழிப்படையச்செய்ய முயற்சிசெய்கிறார்.★

# வானங்களிலே அடையாளங்கள்!

**“கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.” —யோவேல் 2:31.**

ஒலிவ மலையிலே, மீட்பர் தமது சீடர்களோடு நடத்திய உரையாடலிலே, சபைக்கு வரப்போகின்ற நீண்டகால உபத்திரவத்தைப்பற்றி விவரித்தார். அதாவது போப்பு மார்க்கத்தால் கொடுக்கப்படும் 1260 ஆண்டு உபத்திரவம்பற்றிக் கூறினார். அதுகுறித்து அந்த உபத்திரவகாலம் குறைக்கப்படும் என்றும் வாக்குத்தத்தஞ்செய்தார். இவ்வாறு அவரது வருகைக்கு முன்னர், நடைபெறவிருக்கும் சில சம்பவங்களைப்பற்றி குறிப்பிட்டார். இந்தச் சம்பவங்களில் முதலாவதாகக் காணப்படவிருக்கின்ற வேளையை உறுதிப்படுத்தினார். “அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்”—மத். 24:29.

1260 நாட்கள் அல்லது ஆண்டுகள், 1798—ல் முடிவடைந்தது. இதற்கு கால் நூற்றாண்டிற்கு முன்னரே, உபத்திரவம் ஏறக்குறைய முற்றிலுமாக முடிவடைந்துவிட்டது. இந்த உபத்திரவத்திற்குப் பின்னர் கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி சூரியன் அந்தகாரப்படவேண்டும். 1780—ம் ஆண்டு, மே 19—ல் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது.

“முழுமையாக இல்லாவிட்டாலும் ஏறக்குறைய தனியானதாக, விளக்கமுடியாத மிக மர்மமான காட்சியாக... 1780—ம் ஆண்டின் மே 19 இருண்ட நாளாக இருக்கின்றது. நியூ இங்கிலாந்து பகுதியில் பார்க்கக்கூடிய வானங்களும் வளிமண்டலம் முழுவதும் முற்றிலும் காரணம் கூறப்படாத அளவிற்கு இருண்டது”–R.M.Devens, Our First Century, p. 89.

அந்த நாளின் இருளுக்குப் பின்னர், மாலை நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக, ஆகாயம் ஓரளவு

தெளிவாகக் காணப்பட்டது. சூரியன் இருண்டு கனத்த ஒரு படலத்தால் மறைக்கப்பட்டிருந்தபோதிலும், காணப்பட்டது. “சூரிய அஸ்தமனத்திற்குப்பின் மீண்டும் மேகங்கள் தலைக்கு மேலாக வந்தன. வெகு துரிதமாக இருள் கவிழ்ந்தது.” “இரவின் இருள் அந்த நாளின் பகலைவிடச் சாதாரணமாகவும், பயங்கரமற்றதாகவுமிருந்தது (அதாவது பகல் மிகவும் இருண்டு காணப்பட்டது). எனினும் ஏறக்குறைய அன்று முழு நிலவு காணப்பட்டது. அந்த இரவிலே எந்தப் பொருளும் தெளிவாகக் காணப்படவில்லை. செயற்கையான விளக்கின் உதவியினால் மாத்திரம் காண முடிந்தது....”– Isaiah Thomas, Massachusetts Spy; or American Oracle of Liberty, Vol. 10, No. 472 (May 25, 1780).

இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு 2500 ஆண்டு:களுக்கு முன்னர் “கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்” (யோவேல் 2:31) என்று யோவேல் தீர்க்கதரிசியால் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகளின் எதிரொலியைப் போலவே, இந்தச் சம்பவத்தை கண்ணால் கண்டவர்களால் கொடுக்கப்பட்ட வர்ணனை இருந்தது.

கிறிஸ்து தமது மக்களை, தமது வருகைக்கான அடையாளங்களை விழிப்போடு கவனிக்கவேண்டுமென்றும், வரப்போகிற தங்களது இராஜாவைக்குறித்த அடையாளங்களை நோக்கிப்பார்த்து களிகூரவேண்டுமென்றும் கூறியிருந்தார். ★

# நட்சத்திர வீழ்ச்சி!

**“அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.” –மத்தேயு 24:29.**

நமது மீட்பர், தமது இரண்டாம் வருகையின் அடையாளங்கள் என்று வாக்குத்தத்தங்கொடுத்திருந்தவைகளில் கடைசி அடையாளம் 1833–ம் ஆண்டு காணப்பட்டது. நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும் என்று இயேசு கூறினார். வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனுடைய நாளை அறிவிக்கின்ற காட்சிகளைத் தரிசனத்தில் கண்ட யோவான்: “அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது” (வெளி. 6:13) என்று உறுதிப்படுத்திக் கூறினார். 1833–ம் ஆண்டில், நவம்பர் 13–ம் நாளில், மாபெரும் விண்கற்களின் விழுகையினாலே கருத்தைக் கவரும் விதத்தில் மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதான முறையில், இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. எழுதிவைக்கப்பட்ட குறிப்புகளிலே நட்சத்திர வீழ்ச்சி கவர்ச்சிமிக்க அற்புதமான காட்சியாகவும், மிகவும் பரவலாகவும் காணப்பட்டது. “வானமண்டலப்பகுதி அனைத்திலும் பல மணி நேரங்களாக அனல் கக்குகின்ற ஒரு கொந்தளிப்பு அமெரிக்க ஐக்கிய நாடு முழுவதிலும் காணப்பட்டது. அமெரிக்காவில் முதல் குடியேற்றம் ஏற்பட்ட காலத்திலிருந்து, வானத்திலே இத்தகைய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி எதுவும் என்றுமே நடைபெற்றதில்லை. சமுதாயத்திலே ஒரு வகுப்பார் இத்தகைய காட்சியை ஆழ்ந்த வியப்போடும் மற்றுமொரு வகுப்பார் அதை அதிக பயத்தோடும் அதிர்ச்சியோடும் நோக்கிப் பார்த்தனர்.” “அதின் மேம்பாடும் அச்சந்தரும் அழகும் இன்னும் அநேக உள்ளங்களில் நீடித்து நிற்கிறது” (இந்த புத்தகம் கடந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது). … விண்கற்கள் பூமியை நோக்கி விழுந்த அடர்த்தியைப்போல, மழைகூட ஒருபோதும் பெய்ததில்லை. இந்த விண்கற்கள் சொரிந்த நிலை, கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் ஒன்றுபோலவே காணப்பட்டது. வானமண்டலம் முழுவதுமே ஒரு அசைவிலே இருப்பதுபோலக் காணப்பட்டது. பேராசிரியர் சில்லிமேனின் பத்திரிகையில்

வர்ணிக்கப்பட்ட அந்தக் காட்சியில், வட அமெரிக்கா முழுவதிலும் காணப்பட்டதென்று விவரிக்கப்பட்டுள்ளது.... கண்ணைக்கூசவைக்கும் பளபளப்பான—பிரகாசமான மின் ஒளிர்வுகள், வானமண்டலம் முழுவதும் ஒருதொடர்ச்சியாக நிலைபெற்றிருந்தது.—R.M. Devens, American Progress; or The Great Events of the Greatest Century, ch. 28, paras, 1–5.

அவரது வருகையின் அடையாளங்களின் கடைசிக் காட்சி இவ்வாறு முனைப்பாகக் காட்டப்பட்டது. இதைக்குறித்து தமது சீடர்களுக்கு இயேசு: “அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்” (மத். 24:33) என்று கூறினார். இந்த அடையாளங்களுக்குப்பிறகு, அடுத்து வரப்போகும் மாபெரும் சம்பவமாக, வானம் சுருட்டப்பட்டப் புத்தகம்போன்று விலகிப்போயிற்று. பூமி அதிர்ந்தது. மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. துன்மார்க்கர் பயம் நிறைந்தவர்களாக மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தினின்று விலகி ஓட விரும்பினார்கள்.

ஆனால் கிறிஸ்து அவரது வருகையின் நாளையாவது, நாழிகையையாவது வெளிப்படுத்தவில்லை.... மனுஷகுமாரனின் இரண்டாம் வருகையின் சரியான நேரம் தேவனுடைய இரகசியமாக இருக்கிறது. ★

# தீர்க்கதரிசனத்தில் ஒட்டாமன் அரசு!

**"ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக் கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்து விடப்பட்டார்கள்." —வெளிப்படுத்தல் 9:14,15.**

ஒன்றன்பின் ஒன்றாக, ஜாதிகளின் வரலாறு அவைகளுக்குக் குறிக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் இடம்பெற்றிருக்கிறது. அதின்பொருள் இன்னதென்று தங்களுக்குத் தாங்களே அறியாத சத்தியத்திற்கு நம்மிடம் இந்த வரலாறு சாட்சி கூறுகின்றது. தேவன் தமது மாபெரும் திட்டத்திலே, இன்று வாழ்கின்ற ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். தவறு செய்யாத ஒருவரது கரத்திலிருக்கும் தூக்குநூலால் மனிதரும் நாடுகளும் அளவிடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் தங்களது சொந்தத் தெரிந் தெடுத்தலின்மூலம் தங்களது முடிவைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றத் தக்கதாக அனைத்தையும் மேலாட்சி செய்துகொண்டிருக்கிறார்....

நிகழ்காலம்வரை நிறைவேறிக்கொண்டிருக்கிற—முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அனைத்தின் தடங்களும், வரலாற்றின் பக்கங்களிலே கண்டறியப்பட்டுள்ளன. இனியும் வரப்போகின்ற காரியங்களும் அதின் ஒழுங்கிலே நிறைவேறுதலை அடையும் என்பதுகுறித்து நாம் நிச்சயத்தோடிருக்கலாம்.

1840—ம் ஆண்டிலே இன்னொரு தீர்க்கதரிசனத்தின் குறிப்பிடத்தக்க நிறைவேறுதல் எங்கணும் பரவலாக ஆர்வத்தைத் தூண்டியது. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இரண்டாம் வருகையைக்குறித்து

பிரசங்கித்துக்கொண்டிருந்த முதன்மையான ஊழியர்களுள் ஒருவரான ஜோசியா லிட்ச் என்பவர், வெளிப்படுத்தல் 9–ம் அதிகாரத்தைப்பற்றி ஒரு விளக்கம் எழுதி பிரசுரித்திருந்தார். அதில் ஓட்டாமன் அரசின் (முவவழஅயெ நுஅிசைந) விழுகையைக்குறித்து முன்னுரைத்திருந்தார். அவரது கணிப்பின்படி அந்த வல்லமை கி.பி.1840–ன் ஆகஸ்ட் மாதத்தில் குறிப்பிட்ட நேரத்தில் விழுகையைச் சந்திக்கவேண்டியதிருந்தது. இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலிற்கு சில நாட்களுக்கு முன்பாக "துருக்கியர்களின் உத்தரவைப்பெற்று டியாகோசஸ் (Diacozes) என்பவர் சிங்காசனம் ஏறுவதற்கு முன்னர், முதல்கட்டமான 150 ஆண்டுகள் சரியாக நிறைவேறியிருக்கவேண்டும் என்பதாக அனுமதிக்கவேண்டும். அதின்பின்னர் உள்ள 391 ஆண்டுகளும் 15 நாட்களும் முதல் கட்டம் முடிந்த பின்னர் ஆரம்பமாயிற்று. அந்த காலக்கட்டம் ஆகஸ்ட் 11–ம் நாள் 1840–ல் முடிகிறது. அச்சமயத்தில் கான்ஸ்டான்டிநோபிலிலுள்ள ஓட்டாமன் அரசானது சிதறிப்போகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய நிலையில்தான் இது காணப்படுமென்று நான் நம்புகிறேன்" என்று எழுதினார்.—Josiah Litch, in Signs of rhe Times, and Expositor of Prophecy, Aug. 1, 1840.

சுட்டிக்காட்டப்பட்ட அந்த நேரத்தில்தானே, துருக்கி தனது தூதர்கள்மூலமாக ஐரோப்பாவிலுள்ள நேச நாடுகளின் பாதுகாப்பில், கிறிஸ்தவ நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள் தன்னை வைத்துக்கொண்டது. இச்சம்பவம் முன்னுரைக்கப்பட்டபடி சரியாக நிறைவேறியது.... இக்காரியம் அட்வெந்து இயக்கத்திற்கு ஒரு அற்புதமான உந்துவேகத்தைக் கொடுத்தது. ★

# ஒழுக்கக்கேட்டினால் ஏற்படும் இழிநிலை!

**"மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது." —எபேசியர் 5:3.**

தற்காலத்தில் ஒரு அபாயகரமான—கீழ்த்தரமான தன்மை உரையாடல்களில் காணப்படுகிறது. இது சிந்தனைகளிலும் ஒழுக்க நிலையிலும் ஒரு மட்டமான நிலையிருப்பைக் காட்டுகிறது. குணத்தின் உண்மையான மதிப்பு மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. உண்மையான தன்னடக்கத்தையும் சொல்லடக்கத்தையும் காண்பது மிகவும் கடினம். வெகுசிலரே பரிசுத்தமாகவும் தூய்மை கெடாமலும் இருக்கின்றனர்....

கேடடைந்த சிந்தனைகளுக்கு இடங்கொடுக்கும்பொழுது, அது பழக்கமாக மாறிவிடுகிறது. ஆத்துமாவில் வடுவை ஏற்படுத்தி கறைப்படுத்திவிடுகிறது. தவறான ஒரு செயலை ஒருமுறை செய்யும்பொழுது, அங்கே ஒரு கறைபடிந்துவிடுகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தைத்தவிர வேறு எதுவும் அதைக் குணப்படுத்த முடியாது. திடமான தீர்மானத்தோடு அந்தப் பழக்கத்தினின்று திரும்பாவிட்டால், அந்த ஆத்துமா கெட்டுப்போகிறது. அத்தகைய அழுக்கான ஊற்றிலிருந்து புறப்பட்டு வருகின்ற நீரொழுக்குகள் மற்றவர்களையும் கறைப்படுத்திவிடுகிறது.

சோதனைகளை வரவேற்கின்ற ஆண்களும் பெண்களும் இருக்கின்றார்கள். தாங்கள் சோதிக்கப்படுகிற நிலையில் தங்களை வைத்திருக்கின்றார்கள். ஆட்சேபத்திற்குரிய நட்புக்குழுவில் தங்களை வைத்துக்கொள்ளும்பொழுது, அவர்கள் சோதிக்கப்படுவதைத்தவிர வேறு வழியில்லை. எல்லாச் சமயங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளுக்கடியிலும் தகுதியான முக்கியத்துவத்தோடு பழகுவதே பாவத்தினின்று பாதுகாத்துக்கொள்ளத்தக்கதான சிறந்த வழியாகும். ஒருபோதும் திடீர் உணர்வினால் முயற்சி செய்யவோ அல்லது செயல்படவோ கூடாது.

தேவனுக்குப் பயப்படும் பயம் எப்பொழுதும் உங்கள்முன் இருக்கட்டும். அப்பொழுது, சரியாகச் செயல்படுகிறீர்கள் என்பதைக்குறித்து நீங்கள் உறுதியாகவிருக்கலாம்.

ஒழுக்கநிலையில் காணப்படும் ஆபத்துகளில் அனைத்து வாலிபரும் வயதுடையோரும் பாதுகாப்பற்ற நிலையில் விடப்பட்டிருப்பது தினமும் பெருகிவருகிறது. படுமோசமான இயல்பு என்று நாம் அழைக்கின்ற ஒழுக்கச் சீர்கேடுகள் கிரியைசெய்வதற்கு ஏராளமாக இடம் இருக்கின்றது. தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிற ஆண்களும், பெண்களும் மற்றும் வாலிபரும் உழைக்கின்ற ஒரு செல்வாக்கு இழிந்த நிலையுடையதாகவும் சிற்றின்ப வாழ்வில் தோய்ந்ததாகவும் பேய்த்தன்மையுடையதாகவும் இருக்கிறது.

சத்தியத்தைக் கற்றுக்கொண்டவரிடத்தில், அவர்கள்கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு ஏற்ற கிரியைகள் காணப்படாவிட்டால், சாத்தானின் சோதனைகளுக்கு ஆட்பட்டவராகின்றனர். அவர்கள் தங்களது முன்னேற்றத் திற்காக எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஆபத்தை எதிர்த்துப் போராடவேண்டியதிருக்கிறது. தீமையோடு தொடர்புகொள்ளத்தக்கதாக கொண்டுவரப்படுகிறார்கள். தங்களது கட்டுக்கடங்காத இச்சைகளை விழிப்படையச் செய்யத்தக்கதாக, அதற்கேற்ற காட்சிகளைப் பார்க்கின்றார்கள், தொனிகளைக் கேட்கிறார்கள், நன்மையானதைவிட தீமையானவற்றையே தெரிந்துகொள்ளத்தக்கதாக நடத்திச்செல்லுகின்ற செல்வாக்குகளுக்கு ஆட்படுகின்றார்கள். ஏனெனில், அவர்கள் இருதயத்தில் உரமுடையவர்களாக இல்லை....

வாலிப ஆண்களும் பெண்களும் அனைத்துக் கறைகளினின்றும், அனைத்து ஒழுக்கக்கேடான அழுக்கினின்றும் தங்களது ஆத்துமாக்களை சுத்திகரித்துக்கொள்ளத்தக்கதான— ஆயத்தஞ்செய்வதற்கு அவசியமான பயிற்சியைவிட, இப்பொழுது வேறு எந்தப் பயிற்சியும் அதிகமாகத் தேவையில்லை.★

# கொள்கைவெறியும் பல பாஷைகள பேசுதலும்!

**"தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே. தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத் திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லா வற்றிலேயும் அப்படியே இருக்கிறது." –1 கொரிந்தியர் 14:32, 33.**

ஓய்வுநாளை ஆசரிப்பவர்களில் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை கொள்கைவெறியின் ஆவி ஆளுகை செய்திருக்கிறது.... அவர்கள் சத்திய ஊற்றிலே சிறிதளவே உறிஞ்சிக் குடித்திருக்கிறார்கள். மூன்றாம் தூதனுடைய தூதின் ஆவியுடன் அவர்கள் அறிமுகமாகவில்லை. இவர்களது வெறிபிடித்த கருத்துக்கள் திருத்தப்படும்வரை, இந்த வகுப்பாருக்கு எதுவும் செய்யமுடியாது....

இந்த நபர்களில் சிலர் வெளிப்படுத்துகின்ற செயல்களை வரங்கள் என்ற பெயரால் அழைக்கிறார்கள். அவர்களை ஆண்டவர் சபையில் வைத்திருக்கிறார் என்று கூறுகிறார்கள். அவர்களிடத்தில் பொருள் விளக்கமற்ற—தெளிவற்ற பேச்சு இருக்கிறது. அதை அவர்கள் அறியாத பாஷை என்று அழைக்கிறார்கள். இது மனிதனுக்கு மட்டுமல்ல ஆண்டவருக்கும் பரலோகம் முழுவதற்குமே தெரியாத ஒரு பாஷையாகும். மாபெரும் வஞ்சகனின் உதவியினால் ஆண்களும் பெண்களும் இத்தகைய வரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கொள்கைவெறி, பொய்யான பரபரப்பு, பாஷைகளில் பொய்யாகப் பேசுதல், கூச்சலோடு வெளிப்படுத்துகின்ற செயல்கள் ஆகிய அனைத்தும் வரங்கள் என்றும், இவைகளை சபையிலே தேவன் கொடுத்திருக்கிறார் என்றும் எண்ணப்படுகின்றன. இங்கே சிலர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இவை அனைத்திலும் காணப்படும் கனிகள் நல்லவைகளாக இருக்கவில்லை....

கட்டுப்பாட்டிற்கும் அமைப்பிற்கும் ஒழுங்கிற்கும் கீழ்ப்படியாத அநேக அமைதியற்ற ஆவிகளும் உண்டு. அவர்கள் தங்களுடைய

சொந்த மதிப்பீடுகளை ஒதுக்கிவைத்து, அனுபவம் வாய்ந்தவருடைய தீர்மானங்களுக்குக் கட்டுப்படுவார்களானால், தங்களது தன்னாட்சி உரிமைகள் குறைக்கப்பட்டுவிடுமென்று நினைக்கிறார்கள். தங்களது கூட்டங்களிலிருந்து, அசட்டை செய்கின்ற ஒழுங்கீனமான கொள்கைவெறியின் ஆவியைக் கட்டளையிட்டு, வெளியேற்றி, கட்டுப்படுத்துகின்ற மனப்பாங்கு இருந்தாலொழிய தேவனுடைய வேலை முன்னேற்றமடையாது. எண்ணப்பதிவுகளும் உணர்வுகளும் ஆண்டவரால் ஒருவர் நடத்தப்படுகிறார் என்பதற்கு உறுதியான ஆதாரமல்ல. சாத்தானும் அவனைக்குறித்து நாம் சந்தேகப்படாவிட்டால், எண்ணப்பதிவுகளையும்உணர்வுகளையும் கொடுப்பான். இவைகள் பாதுகாப்பான வழிகாட்டிகளல்ல. அனைவரும் தங்களை முழுக்க முழுக்க நமது விசுவாசத்திற்கான ஆதாரங்களோடு அறிமுகப்படுத்திக்கொள்ளவேண்டும். தாங்கள் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்கிற காரியங்களுக்கு ஏற்றபடி, தங்களை அணிசெய்துகொண்டு, தேவனுக்கு மகிமையாகக் கனிகொடுக்க வேண்டும்.... அற்பமான, கேலிசெய்கினற, அசட்டையான ஆவி கண்டிக்கப்படவேண்டும். ஜெபக்கூட்டங்களில் திறமையுடன் பிரசங்கித்து, ஜெபித்துவிட்டு கூட்டத்தைவிட்டு வெளியேவந்தபின், கரடுமுரடாக கவனமற்ற தன்மையில் பேசுவதும் செயல்புரிவதும் அவரது இருதயத்திலே தேவ கிருபையிருப்பதற்கான ஆதாரம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது....

தேவனுடைய சத்தியம் ஒருபோதும் இழிவுநிலைக்குக் கொண்டுவராது. ஆனால் சத்தியத்தைப் பெற்றுக்கொள்பவரை உயர்த்தி, அவரது விருப்பத்தை நயப்படுத்தி, அவரது தீர்மானங்களைப் பரிசுத்தமாக்கி, தேவனுடைய இராஜ்யத்திலுள்ள தூய்மையான—பரிசுத்தமான தூதர்களோடு கொள்ளும் கூட்டுறவிற்காக அந்த நபரை பூரணப்படுத்துகிறது. ★

# எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள்!

**“கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.” —மத்தேயு 7:15.**

தேவனுடைய அருட்செயலால் ஊழியத்தின் ஆரம்பநாட்களிலிருந்தே, அதாவது 1843, 1844–ம் ஆண்டுகளிலிருந்து, தேவனுடைய பணியில் ஒரு பங்குவகிக்கத்தக்கதாக, நானும் எனது கணவரும் அழைக்கப்பட்டோம். அந்த ஊழியத்தை உருவாக்கித் திட்டமிடத்தக்கதாக ஆண்டவர் எங்களுடன் இருந்தார். அவருடைய ஜீவனுள்ள செயல்துணைகளின்மூலமாக அவரது திட்டங்களை எங்களுக்காகத் திறம்படச் செய்துகொடுத்தார். பொய்யான பாதைகள் அடிக்கடி தெளிவாக எங்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டன. நாங்கள் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட வேலையோடு தொடர்புடைய அனைத்து இடர்நிறைந்த முயற்சிகளிலும், உண்மையான—பாதுகாப்பான பாதைகள் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டன. சாத்தானின் உபாய தந்திரங்களைப்பற்றியோ அல்லது தேவனுடைய வழிகள் மற்றும் கிரியைகளைப்பற்றியோ நான் ஒன்றும் அறியாதவளாக இருக்கவில்லையென்று உண்மையாகக் கூறமுடியும். எங்களுடைய ஆராய்ச்சிகளிலே எங்களை வழிநடத்தத்தக்கதாக, தேவ ஞானத்தின்மீது சார்ந்திருந்து, மனதின் அனைத்து சக்திகளையும் கடுமையாகப் பயன்படுத்தவேண்டியதிருந்தது. தேவனுடைய வார்த்தையினின்று பிரகாசிக்கும் வெளிச்சத்தின்மூலமாகவும் அவரது வார்த்தை மற்றும் சாட்சிகளின் வழியாக தேவன் எனக்கு வெளிப்படுத்திய காரியங்களின்மூலமாகவும், எங்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பலதரப்பட்ட அனைத்து கோட்பாடுகளையும் நாங்கள் மறுசீராய்வு செய்யவேண்டியதிருந்தது. மேலும் அவைகளின் நிறைகளையும் குறைகளையும் கண்டறியவேண்டியதிருந்தது. நாங்கள் மற்றவர்களை ஏமாற்றாமலிருக்கவும் அவ்வாறு செய்தோம். எங்களுடைய சித்தத்தையும் வழியையும் தேவனிடத்தில் ஒப்படைத்தோம்.

அவரது உதவிக்காக மிகவும் ஊக்கமாக மன்றாடி ஜெபித்தோம். அந்த முயற்சி ஒருபோதும் வீணாகிவிடவில்லை. தேவனுடைய ஊழியத்தின் தொடர்போடுகூடிய அநேக ஆண்டுகளில் பெற்ற துயரமான அனுபவங்கள் அனைத்துவகையான பொய்யான இயக்கங்களைப்பற்றியும் எனக்கு நல்ல அறிமுகம் ஏற்படச்செய்தது. அநேக சந்தர்ப்பங்களில், "எனக்கு அந்த இடத்திலே நீ செய்யவேண்டிய வேலை ஒன்று உண்டு. நான் உன்னுடனே இருப்பேன்" என்ற தூதோடு நான் பல இடங்களுக்கு அனுப்பப்பட்டேன். அந்தச் சந்தர்ப்பம் வந்தபோது, (சாத்தானால்) பொய்யான சொப்பனங்களையும் தரிசனங்களையும் பெற்றவர்களுக்கு கொடுக்கும்படியாக ஆண்டவர் என்னிடத்தில் ஒரு தூதைக் கொடுத்தார். கிறிஸ்துவின் பலத்தினாலே அவருடைய ஆணையின்படி நான் எனது சாட்சியைக் கொடுத்தேன்....

கடந்த 45 ஆண்டுகளில், மற்றவர்களுக்கான கடிந்துரைக்கும் தூதுகளை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டோமென்று உரிமை கோரிய நபர்களை நான் சந்தித்திருக்கிறேன். மார்க்கசம்பந்தமான கொள்கைவெறியின் இந்த காலக்கட்டம், 1844—முதல் மீண்டும் மீண்டும் தலைதூக்கியது. தவறுகளை நிலைநாட்டத்தக்கதாக அநேக வழிகளில் சாத்தான் கிரியைசெய்தான். இந்த தரிசனங்களில் பேசப்பட்ட சில காரியங்கள் நடைபெற்றன. ஆனால், கிறிஸ்துவின் வருகையின் நேரம்பற்றின காரியம், கிருபையின்கால முடிவு, நடைபெறவேண்டிய சம்பவங்கள் ஆகியவை முற்றிலுமாகப் பொய்யென்று நிரூபிக்கப்பட்டது....

"ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்..."—லூக்கா 8:18. இது கிறிஸ்து கொடுக்கும் எச்சரிப்பாகும்.... மிகக் கவனமாகச் சோதித்துப்பாருங்கள். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"—1 தெச. 5:21. இது தேவன் கொடுக்கும் ஆலோசனையாகும். நாம் இதைக் கவனிப்போமா? ★

# போலிகள்!

**“வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.” —ஏசாயா 8:20.**

தேவனுடைய மக்கள் வேதவாக்கியங்களினிடத்திற்கு வழிநடத்தப்படுகிறார்கள். இருளின் சக்திகளின் ஏமாற்றும் வல்லமை களுக்கும் பொய்யான போதகர்களுக்கும் எதிராக வேத வாக்கியங்களே அவர்களது பாதுகாப்பாகும். வேதாகமத்தைப்பற்றிய அறிவை மனிதர் பெற்றுக்கொள்ளாதபடி, சாத்தான் தான் செய்யக்கூடிய அனைத்து உபாய தந்திரங்களையும் பயன் படுத்துகிறான். ஏனெனில் வேதவாக்கியங்களில் காணப்படும் தெளிவான விளக்கங்கள் அவனது வஞ்சகங்களை வெளிப்படுத்து கின்றன. தேவனுடைய ஊழியத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு எழுப்புதலிலும், தீமையின் பிரபுவானவன், அதிக முனைப்போடு நடவடிக்கைகளில் ஈடுபடத்தக்கதாக விழிப்படைகிறான். கிறிஸ்துவிற்கும் அவரது பின்னடியார்களுக்கும் எதிராக நடத்துகின்ற ஒரு இறுதிப் போராட்டத்தில் இயலும் அளவிற்கு இந்நாட்களில் வலிமையோடு முயற்சித்துக்கொண்டிருக்கின்றான். மாபெரும் கடைசி வஞ்சகம் வெகுசீக்கிரத்தில் நமக்கு முன்பாக வெளிப்படவிருக்கிறது. அந்திக் கிறிஸ்து நமது கண்களுக்கு முன்பாக அவனது அற்புதமான செயல்களை நடத்திக்காட்டப்போகிறான். அந்தப் போலி பெருமளவில் உண்மையைப்போன்றே காணப்படும். எனவே பரிசுத்த வேதவாக்கியங் களின் உதவியின்றி இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை வேறுபடுத்தி அறிவது மிகவும் கடினம். அவர்களது சாட்சியின் மூலமாக, அவர்களுடைய ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு அற்புதமும், சோதித்தறியப்படவேண்டும்....

அற்புதஞ்செய்யப்படுவதை தனது விசுவாசத்திற்கான பரீட்சை என வைத்துக்கொண்டிருக்கும் நபர், வகைவகையான வஞ்சகங்கள் மூலமாக மெய்யான அற்புதங்களைப்போன்று தோற்றங் கொடுக்கக் கூடியவைகளை சாத்தான் செய்யக்கூடும் என்பதைக் காண்பார்.

சாத்தான் தந்திரமாக வேலைசெய்கிறவன். உள்ளத்தைக் குழப்பி— இருட்டடித்து, மீட்பிற்கான மூலக்கோட்பாடுகளை வேரோடு பிடுங்கத்தக்கதாக, சூழ்ச்சி நிறைந்த போலி வாதங்களைக் கொண்டுவருவான். வேதவாக்கியங்கள் எப்படிக் கூறுகிறதோ, அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவனுடைய கண்ணியிலே அகப்பட்டுக்கொள்வார்கள்.

ஒவ்வொரு கணத்திலும் தீய தூதர்கள் நமது பாதையிலே வந்துகொண்டிருக்கிறார்கள்.... அவர்கள் புதிய களத்தை எடுத்தவர்களாக நமது கண்களுக்கு முன்பாக வியக்கத்தக்க நிகழ்ச்சிகளையும் அற்புதங்களையும் செய்துகாட்டுவார்கள்....

சிலர் இந்த அற்புதங்கள் தேவனிடத்திலிருந்த வருகிறதென்று எண்ணி, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக சோதிக்கப்படுவார்கள். நமது கண்களுக்கு முன்பாக பிணியாளிகள் குணமாக்கப்படுவார்கள். நாம் காணும்படியாக அற்புதங்கள் செய்யப்படும். சாத்தானின் பொய்யான அற்புதங்கள் முற்றிலுமாக வெளியரங்கமாகத்தக்கதாக நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய சோதனையைச் சந்திக்க நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? அநேக ஆத்துமாக்கள் கண்ணியில் அகப்படுத்தப்பட்டு, வீழ்த்தப்பட்டுவிடமாட்டார்களா? தேவனுடைய தெளிவான கொள்கைகளினின்றும், கட்டளைகளினின்றும் வழிவிலகிச்சென்று, கட்டுக்கதைகளின்மீது கவனஞ்செலுத்துவதினால், அநேகருடைய உள்ளங்கள் இத்தகைய பொய்யான அற்புதங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் ஈடுபடப்போகிற அந்தப் போராட்டத்திற்காக, நாம் அனைவரும் இப்பொழுதே அதற்கு எதிரான கவசத்தை அணிந்துகொள்ள நாடவேண்டும். தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து, ஜெபத்தோடு அதைப்படித்து, செயல் முறையில் அதைக் காட்டுவோமானால், அதுவே சாத்தானுடைய வல்லமையினின்று காக்கக்கூடிய கேடகமாக நமக்கு அமையும். கிறிஸ்துவின் இரத்தத்தின்மூலமாக நாம் வெற்றியாளர்களாகக் கொண்டுவரப்படுவோம். ★

# பிரிவினை உண்டாக்குபவர்களைக்குறித்து விழிப்போடிருங்கள்!

**“இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!.” —லூக்கா 17:1.**

ஒரு மக்கள் கூட்டத்தை தேவன் வெளியே கொண்டுவந்து கொண்டிருக்கிறார். அவர்கள் ஒரே நபரைப்போன்று இணைந்து நிற்கவும், ஒரே காரியத்தைப் பேசவும், கிறிஸ்து தமது சீடர்களுக் காகச்செய்த “அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்க ளெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்” (யோவான் 17:21) என்ற ஜெபத்தை நிறைவேற்றவும் ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கிறார்....

தொடர்ந்து எழும்பிக்கொண்டிருக்கும் சிறுசிறு குழுக்கள் இருக்கின்றன. மிகவும் சிதறிக்கிடக்கும் அந்த சிலரோடு மாத்திரந்தான் தேவன் இருக்கிறாரென்று இந்த குழுக்களிலுள்ளவர்கள் நம்புகிறார்கள். தேவனுடைய ஊழியர்கள் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கும் வேலையை இவர்களது செல்வாக்கு தகர்த்து கீழே தள்ளி சிதறிப்போடுவதாக அமைகிறது. ஒன்றாயிருக்கவேண்டுமென்ற தேவ வார்த்தைக்கு ஒத்திசைவாக அனைத்து முயற்சிகளையும் செயல்படுத்திக் கொண்டிருக்கும் மக்கள், மூன்றாம் தூதனின் தூதிலே நிலைப்படுத்தப்பட்டிருக்கும் மக்கள், தங்களது வேலையை விரி வடையச்செய்துகொண்டிருக்கிறார்கள். சத்தியத்திற்காக ஆத்துமாக்களைக் கூட்டிச்சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களை சந்தேகத்தோடு நோக்கிப்பார்க்கிறார்கள். உலகத்திலே அவர்களுக்கு செல்வாக்கு இருப்பதினால் அவர்களை உலகப்பற்றுடையோர் என்றெண்ணி நோக்கிப்பார்க்கிறார்கள்....

தான் தேவனால் நடத்தப்படுவதாக உரிமைகோரிக்கொண்டு ஒரு நபர் எழும்புகிறார். அவர் துன்மார்க்கருக்கு உயிர்த்தெழுதல் இல்லையென்ற முரணான சமயக்கருத்தை ஆதரித்து வாதிடுகிறார்.... மற்றொருவர் வரப்போகிற காலத்தைக்குறித்து தவறான கருத்துக்களை மனதார நேசிக்கிறார்.... அவர்களனைவரும் முழுமையான மார்க்கசுதந்திரம் வேண்டுமென்கிறார்கள். ஒவ்வொரு நபரும் மற்றவர்களை விட்டுவிட்டு தனித்தியங்குகிறார்கள். எனினும், அவர்களுக்கு மத்தியில் தேவன் தனிச்சிறப்போடு வேலைசெய்கிறார் என்று உரிமைகோருகிறார்கள்.... இந்தமக்களின் புத்தி தெளிவாக இல்லை. இவர்கள் ஒரு பொய்யான பரபரப்பினால் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இவர்களிடத்தில் சத்தியமில்லை என்று நமக்குத் தெரியும்.... தேவனுக்காக சீர்திருத்தம் அடைவார்கள் அல்லது ஓய்வுநாள் ஆசரிப்பை விட்டுவிடுவார்கள். அப்படியானால் அவர்கள் அவிசுவாசிகளுக்கு இடையூறாக இருக்கமாட்டார்கள்....!

உலகம் தங்களை வெறுக்கத்தக்கதான வழியைப் பின்பற்றுகிறவர்கள்மீது தேவன் கோபத்தோடிருக்கிறார். ஒரு கிறிஸ்தவன், அவனது நல்ல செயல்களுக்காகவும், அவன் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதற்காகவும் வெறுக்கப்பட்டால், அவனுக்கு ஒரு வெகுமதி உண்டு. தான் நேசிக்கப்படத்தக்கதான ஒரு போக்கை கடைபிடிக்காமல் இருப்பதற்காக அவன் வெறுக்கப்படாமல், அவனது பண்படாத தன்மைக்காக வெறுக்கப்பட்டால், சத்தியத்தை தனது அண்டை அயலகத்தாரோடு சண்டைபிடிப்பதற்கான ஒரு பொருளாக ஆக்கி, அல்லது ஒருவிதமான போக்கைப் பின்பற்றி ஓய்வுநாளில் அவர்களுக்கு எவ்வளவு எரிச்சல் உண்டாக்கக்கூடுமோ, அவ்வளவு எரிச்சல் உண்டாக்கத்தக்கதான காரியங்களைச் செய்தால், அவன் பாவிகளுக்கு ஒரு முட்டுக்கட்டையாகவும் பரிசுத்த சத்தியத்திற்கு ஒரு இகழ்ச்சியாகவும் இருக்கிறான். அவன் மனந்திரும்பாவிட்டால், ஒரு இயந்திரக்கல்லை அவன் கழுத்திலே கட்டி, சமுத்திரத்தில் அவனை எறிந்துபோடுவது அவனுக்கு நலமாக இருக்கும். ★

# சாத்தானால் கொடுக்கப்படும் பொய்யான தரிசனங்களால் ஏற்படும் விளைவுகள்!

**“நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.” —மத்தேயு 7:19,20.**

இப்பொழுது (1890—ல்) வாழ்ந்துகொண்டிருக்கிற அநேகர் ஐயவாதிகளாக இருக்கிறார்கள். சபைகளில் காணப்படும் வரங்களில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. சத்தியத்திலும் விசுவாசம் இல்லை. அவர்களுக்கு சமய நிறுவனம் என்ற ஒரு காரியம் இல்லவே இல்லை. போலியான தரிசனங்களினால் ஏற்படுகின்ற நிச்சயமான விளைவே, இதற்கான காரணமென்று எனக்குக் காட்டப்பட்டது. சத்தியத்தினின்று வழிவிலகச்செய்வதற்காக சாத்தான் தொடர்ந்து போலிகளை இடைவிடாமல் அனுப்பிக்கொண்டிருக்கிறான்.

சாத்தானின் கடைசி மாபெரும் வஞ்சகத்தின் நோக்கம், தேவனுடைய ஆவியானவரின் சாட்சியைப் பயனற்றதாக ஆக்கிப்போடவேண்டுமென்பதே. “தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான்”—நீதி 29:18. பலதரப்பட்ட வழிகளில், பலவகையான செயல்துணைகளின்மூலமாக, உண்மையான சாட்சியிலே (True Testimony) தேவனுடைய மீதியான மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நிலைகுலையச் செய்யத்தக்கதான சூழ்ச்சித் திறனோடு சாத்தான் வேலைசெய்கிறான். தவறான வழியில் நடத்துவதற்காக போலியான தரிசனங்களைக் கொடுப்பான். உண்மையான சத்தியத்தோடு பொய்யைக் கலந்துவிடுவான். இவ்வாறாக, தரிசனங்கள் என்று அழைக்கப்படுகிற அனைத்தையும் கொள்கைவெறியின் ஒரு வகையென்று எண்ணும்படியாக மக்களுக்கு கடுமையான ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனினும்

உத்தமமான ஆத்துமாக்கள் உண்மைக்கும் போலிக்குமிடையேயுள்ள வேறுபாட்டை ஒப்பிட்டு கண்டறியும் திறனோடு இருப்பார்கள்....

தேவனிடமிருந்து வராத காரியத்தை உயர்த்திக்காட்டுதல், அதற்காகத் தொடர்ந்து கவனம் செலுத்துதல் ஆகியவைபோன்று ஆத்துமாவிற்கான நன்மை, அதின் பரிசுத்தம், தேவனைப்பற்றியும் மற்றும் பரிசுத்தமான நித்திய காரியங்களைப்பற்றியும் கொண்டிருக்கின்ற புனிதமான கருத்துக்களுக்கு அதிகமான தீங்கு விளைவிக்கக்கூடிய காரியம் வேறு எதுவுமில்லை. இக்காரியம் இருதயத்திற்கு நஞ்சூட்டுகிறது. புரிந்துகொள்ளும் தன்மையை இழிநிலை அடையச்செய்கிறது. தூய்மையான சத்தியம் அதை பெற்றுக்கொள்பவரது குணத்தின்மீது ஏற்படுத்துகின்ற நயமாக்கும், பரிசுத்தமாக்கும் மற்றும் உயர்த்தும் செல்வாக்கின்மூலமாக, அதின் தெய்வீக ஆதாரத்திற்கான சுவடுகளை ஆராய்ந்து கண்டறிய முடியும். அனைத்து சத்தியத்திற்கும் ஆரம்பமானவர், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20,21) என்று பிதாவிடம் ஜெபித்தார்.

ஐக்கியத்தைக் குலைத்துப்போடவும், சத்தியத்தினின்று மக்களை வெளியேற்றவும் தொடர்ந்து காரியங்கள் எழும்பிக்கொண்டிருக்கும். கேள்விகேட்டல், கண்டனஞ்செய்தல், பலரறிய பழித்துரைத்தல், மற்றவர்களைப்பற்றித் தீர்ப்புச்செய்தல் ஆகியவை இருதயத்தில் கிறிஸ்துவின் கிருபை இருக்கிறதற்கான ஆதாரமல்ல. இந்தச் செயல் ஐக்கியத்தை ஏற்படுத்துகிறதில்லை. தாங்கள் பாவத்தில் ஆழ்ந்துகிடக்கும்பொழுதுங்கூட, அற்புதமான வெளிச்சம் தங்களிடத்தில் இருப்பதாக கடந்த காலத்தில் உரிமைகோரிக்கொண்டிருந்த நபர்கள் தொடர்ந்து இத்தகைய வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள். ★

# சரியான அணியில் வந்துசேருதல்!

**“சாந்தகுணமுள்ளவர்கள் இதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்; தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்.” —சங்கீதம் 69:32.**

ஆண்டவரில் மகிழ்ச்சியோடிருப்பதும், அவரது வலுவூட்டும் கிருபையைப்பற்றிய அறிவிலே களிகூர்ந்திருப்பதும் உங்களுடைய சிறப்புரிமையாகும். உங்களது சிந்தனைகளையும் இருதயத்தையும் அவரது அன்பு உடைமையாகக்கொள்ளட்டும். மிதமிஞ்சி களைப் படைதல், கவலைதோய்ந்த முகத்தோடிருத்தல், சோர்ந்திருத்தல் ஆகியவைகளுக்கெதிராக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். ஒரு உயர்த்துகின்ற சாட்சியை அளியுங்கள். இருண்டு, அதைரியப் படுத்தும் காரியங்களினின்று உங்கள் கண்களைத் திருப்புங்கள். நமது மாபெரும் தலைவரான இயேசுவை நோக்கிப்பாருங்கள். அவருடைய விழிப்புள்ள மேற்பார்வைக்கடியில் எந்த நிகழ்கால சத்தியத்திற்காக நமது ஜீவியத்தையும் நமக்குள்ள எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்த நிகழ்கால சத்தியம் முடிவிலே மகிமையாக வெற்றியடையக் காத்திருக்கிறது....

ஆ! ... இயேசு இருதயத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருக் கிறார் என்றும், அவர் நம்மைத் தாங்குகிறார்—பலப்படுத்துகிறார்— தேற்றுகிறார் என்றும் காணப்படட்டும். ஒவ்வொரு நாளும் அவரது பரிசுத்த ஆவி ஒரு வளம்செறிந்த அளவிலே நமக்கு வழங்கப்படுவது நமது சிறப்புரிமையாகும். நாம் உலகத்திற்குக் கூறியறிவிக்கின்ற தூதின் முக்கியத்துவத்தையும், அதின் இலக்கைப்பற்றியும் விரிவான கருத்துக்களை நாம் கொண்டிருக்கவேண்டும். நம் ஆண்டவர் அவரது பிரமாணத்தினின்று அதிசயமான காரியங்களை உங்களுக்கு வெளிப்படுத்த விருப்பத்தோடிருக்கிறார். மனத்தாழ்மையோடு அவருக்கு முன்பாகக் காத்திருங்கள். நாம் வாழ்கின்ற காலங்களைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்வதற்காகவும், அவருடைய நோக்கத்தின்

கருத்துக்களை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்காகவும், ஆத்தும ஆதாய ஊழியத்திலே திறமைகள் பெருகுவதற்காகவும் ஊக்கமாக ஜெபியுங்கள்....

இந்த உலகத்தின்மீது சீக்கிரமாக வரப்போகின்ற காரியத்தைக் குறித்து சிந்திப்பது, ஆழ்ந்து ஆராய்வது நமக்கு நன்மையாக இருக்கும். அற்பமான காரியங்களுக்கும் அல்லது சுயத்திற்கான காரியங்களைத் தேடுவதற்கும் நேரமில்லை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலங்கள் கருத்தோடு எண்ணப்பதிவை ஏற்படுத்தத் தவறுமானால், எதுதான் நம்மைச் சரிப்படுத்த முடியும்?...

தெளிவாகப் புரிந்துகொள்ளும் மனிதர்கள் இன்று தேவைப்படுகிறார்கள். முழு நிறைவான சீர்திருத்த ஊழியம் ஒன்றிலே வழிநடத்த பரிசுத்த ஆவியினால் அடக்கியாளப்படுவதற்கு விருப்பமானவர்களை தேவன் அழைக்கிறார். நமக்கு முன்பாக நெருக்கடியான ஒரு நேரம் இருப்பதைக் காண்கிறேன். ஆண்டவர் தமது வேலையாட்களை வரிசையில் வந்துநிற்கும்படி அழைக்கிறார். கடந்த ஆண்டுகளைவிட, இப்பொழுது தேவனுக்கு ஆழமான— உண்மையான அர்ப்பணிப்பின் நிலையிலே ஒவ்வொரு ஆத்துமாவும் நிற்க வேண்டும்....

சமீபத்தில் இரவுவேளையில் எனக்கு முன்பாகக் கடந்துசென்ற காட்சிகளால் நான் ஆழமாக உணர்த்தப்பட்டேன். ஒரு மாபெரும் இயக்கம் ஒன்று காணப்பட்டது. ஒரு எழுப்புதலின் ஊழியம் அநேக இடங்களில் முன்னேறிச்சென்றுகொண்டிருந்தது. தேவனுடைய அழைப்பிற்குச் செவிசாய்த்து, நமது மக்கள் வரிசையில் சேரத்தக்கதாக நகர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். நாம் அவரது சத்தத்தைக் கவனமாகக் கேட்கமாட்டோமா? நாம் நமது விளக்கின் திரியை ஒழுங்காகக் கத்தரித்து, நேர்த்தியாக்கி, நமது ஆண்டவருடைய வருகைக்காக, நோக்கிக் கொண்டிருக்கும் மனிதர்களைப்போல நடந்துகொள்ளமாட்டோமா? விளக்கை ஏந்திச் செல்வதற்கும், முனைந்து செயல்படுவதற்கும் அழைப்புவிடுகின்ற நேரம் இது.

# வரப்போகும் சம்பவங்கள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன!

**"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்." —ஆமோஸ் 3:7.**

தவணையின் கால முடிவிற்கும் இக்கட்டுக்காலத்திற்கான ஆயத்தவேளைக்கும் தொடர்புடைய சம்பவங்கள் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளியாக்கப்படாவிட்டால், திரளான மக்களுக்கு இந்த முக்கியமான சத்தியத்தைக்குறித்து எந்தவிதமான விளக்கமும் கிடைக்காது. இரட்சிப்பிற்கேற்ற ஞானவான்களாக்கக்கூடிய ஒவ்வொரு எண்ணப்பதிவையும் எடுத்துக்கொண்டுபோய்விடத்தக்கதாக, சாத்தான் விழிப்போடு கவனித்துக்கொண்டிருக்கிறான். இக்கட்டுக்காலம் அவர்கள் ஆயத்தமற்று இருப்பதைக் கண்டுபிடிக்கும்.

இந்த உலகம் சரித்திரத்தின் முடிவை நெருங்கிக்கொண்டு இருக்கும்பொழுது, கடைசி நாட்கள் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை நாம் படிக்கவேண்டும். புதிய ஏற்பாட்டிலுள்ள வேதவாக்கியங்களின் கடைசிப் புத்தகம் அவசியமாகப் படித்து விளங்கிக்கொள்ள வேண்டிய சத்தியங்களால் நிறைந்திருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில் பக்திவிநயமான தூதுகள் அவைகளின் ஒழுங்கின்படியே கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தின் இத்தூதுகள், தேவனுடைய மக்களின் மனதிலே முதல் இடத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும்....

அருமையான நேரம் துரிதமாகக் கடந்துசென்று கொண்டிருக்கிறது. விழுந்துபோன மக்களுக்காக தேவன் அனுப்பியுள்ள தூதுகளைக்

கூறியறிவிக்கவேண்டியதற்கான நேரம், அநேகரிடமிருந்து பறிக்கப்பட்டுவிடும் அபாயம் இருக்கிறது. நித்தியத்தின் மெய்யான காரியங்களோடு சம்பந்தப்பட்வைகளைப் படிப்பதில் ஈடுபடவேண்டிய மனங்களின் கவனங்கள், வேறுவழியாகத் திருப்பப்படுவதைப் பார்த்து, சாத்தான் மகிழ்ச்சியடைகிறான்.

கிறிஸ்துவின் சாட்சி—மிகவும் பக்திவிநயமான ஒரு சாட்சி. அது இந்த உலகத்திற்கு எடுத்துச்செல்லப்படவேண்டும். வெளிப்படுத்தின புத்தகம் முழுவதிலும் மிகவும் அருமையான மேன்மைப்படுத்தக்கூடிய வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. மேலும் மிகவும் அச்சந்தரக்கூடிய—பக்திவிநயமான—முக்கியத்துவம் வாய்ந்த எச்சரிப்புகளும் இருக்கின்றன. சத்தியத்தைப்பற்றிய அறிவு தங்களுக்கு இருக்கிறதென்று சொல்லிக்கொள்கிற மக்கள், கிறிஸ்துவினால் யோவானுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியை வாசிக்கமாட்டார்களா? இங்கு யூகத்தின் அடிப்படையில் செய்யப்படும் வேலை கிடையாது. அறிவியல் ஏமாற்றங்களும் இல்லை. நமது நிகழ்கால, வருங்கால நல்வாழ்வு சம்பந்தப்பட்ட சத்தியங்கள் இங்கு இருக்கின்றன. கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்?

வேத வாக்கியங்களை ஆழ்ந்து படிக்கின்ற மாணவர்களும் சத்தியத்தின்மீதுள்ள அன்பைப் பெற்றுக்கொண்டவர்களுமே இந்த உலகத்தையே சிறைப்படுத்திக்கொள்ளப்போகும் வலுவான ஏமாற்றத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். வேதாகம சாட்சியினால் ஏமாற்றுக்காரனை அவனது மாறுவேடத்திலும் கண்டுபிடித்து விடுவார்கள். அனைவருக்கும் அந்த சோதனை நேரம் வரும். சோதனையினால் சலிக்கப்படும்போது, மெய்யான கிறிஸ்தவன் வெளியரங்கமாகக் காட்டப்படுவான். தங்களது புலன்களின் ஆதாரத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்காத அளவிற்கு தேவனுடைய மக்கள் அவரது வார்த்தையில் உறுதியாக நிலைத்திருக்கிறார்களா? இத்தகைய நெருக்கடி நேரத்தில் வேதாகமம், வேதாகமம் மட்டுமே என்று விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருப்பார்களா? ★

# வரவிருக்கும் காரியங்களுக்கான ஆயத்தங்கள்!

**"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்." —செப்பனியா 2:3.**

மீறுதல் ஏறக்குறைய அதின் எல்லையைத் தொட்டுவிட்டது. உலகம் குழப்பத்தால் நிறைந்திருக்கிறது. மானிடர்மீது ஒரு மாபெரும் பயங்கரம் வெகு சீக்கிரத்தில் வரவிருக்கிறது. முடிவு வெகு சமீபம். திணறடிக்கின்ற ஓர் அதிர்ச்சியைப்போன்று பூமியின்மீது திடீரென்று தாக்கப்போகின்ற அந்தக் காரியத்திற்காக, தேவனுடைய மக்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கவேண்டும்.

ஒருபோதும் இருந்திராத உபத்திரவக்காலம் வெகு சீக்கிரத்தில் நம்மீது வரவிருக்கின்றது. அச்சமயத்தில், இப்பொழுது இராத ஓர் அனுபவம் நமக்குத் தேவையாக இருக்கும். அதைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி அநேகர் சோம்பேறிகளாக இருக்கின்றனர். துன்பம் உண்மையிலேயே நடைபெறுவதை விட, அதற்காக எதிர்பார்த்துக் காத்திருப்பது அதிகமான துன்பமாக இருக்கும். ஆனால் நமக்கு முன்பாக இருக்கும் நெருக்கடியைக்குறித்த காரியத்தில் அது உண்மையல்ல. மிகத்தெளிவாகக் கொடுக்கப்படும் விளக்கங்கூட, அந்தக் கடுமையான துன்பத்தின் பரிமாணத்தை நெருங்கமுடியாது. அந்த கடுமையான உபத்திரவத்தின் நேரத்திலே, ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுக்குமுன்பாக தனக்காக நிற்கவேண்டும். "நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு

சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்"– எசேக்கியேல் 14:20.

உண்மைக்கும் பொய்க்கும் இடையேயுள்ள கடைசி பெரும் மோதல் தேவனுடைய பிரமாணத்தைப்பற்றிய நீண்டகால எதிர்வாதத்தின் இறுதிப்போராட்டமாகும். இந்தப் போராட்டத்திலே நாம் பிரவேசித்துக்கொண்டிருக்கிறோம். இது மனிதரின் சட்டங்களுக்கும் யோகோவாவின் பிரமாணங்களுக்கும், வேதாகம மார்க்கத்திற்கும் கட்டுக்கதைகள் பாரம்பரியங்கள் கொண்ட மார்க்கத்திற்கும் இடையேயுள்ள போராட்டமாகும்.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற இக்காலத்தைச் சுட்டிக்காட்டும் மாபெரும் பாதைக்குறியீடுகளை நாம் படிக்கவேண்டும்.... தேவன் ஆயத்தஞ்செய்யும் அந்த மகா நாளின் போராட்டங்களுக்கு ஆயத்தமாவதற்காக, இப்பொழுது நாம் அதிக ஊக்கத்தோடு ஜெபிக்கவேண்டும்.

தேவனால் வழிகாட்டப்பட்டு நடத்தப்பட அவருடைய கட்டுப்பாட்டிற்குள் தங்களை வைத்துக்கொள்பவர்கள், நடைபெறவேண்டுமென்று அவரால் வகுத்து ஒழுங்குசெய்யப்படுகின்ற அந்த வழிமுறையைத் திடமாகப் பற்றிக்கொள்வார்கள். இந்த உலகத்தினரின் வாழ்விற்காக தமது ஜீவனை தத்தஞ்செய்தவருடைய ஆவியினால் தூண்டப்பட்டவர்களாக, செய்யமுடியாதவைகளை சுட்டிக்காட்டிக்கொண்டு ஒருபோதும் ஆற்றலற்றவர்களாக நின்றுகொண்டிருக்கமாட்டார்கள். பரலோகத்தின் போர்க்கவசத்தை அணிந்தவர்களாக யுத்தஞ்செய்யப் புறப்பட்டு வெளியே செல்வார்கள். அவர்கள், சர்வவல்லமையுள்ள தேவன் தங்களது தேவையை வழங்குவாரென்று அறிந்தவர்களாக தேவனுக்காகத் துணிவுடன் பயமின்றி யுத்தஞ்செய்ய விருப்பத்தோடு செல்வார்கள். ★

ஜூன் 3

# இறுதி யுத்தத்திற்காக சாத்தான் போடும் அடித்தளம்!

**“உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.” —தானியேல் 7:25.**

கிறிஸ்தவம் பகிர்ந்தளிக்கப்பட்டக் காலத்தில், மனிதரின் மகிழ்ச்சிக்கு எதிரான மாபெரும் சத்துரு, நான்காம் கற்பனையின் ஓய்வுநாளை ஓர் குறிப்பிட்ட தாக்குதலுக்கான குறியிலக்காக ஆக்கிவிட்டான். “நான் தேவனோடு முரண்பாடான நோக்கத்தோடு செயல்புரிவேன். தேவனுடைய ஞாபகச்சின்னமாகிய ஏழாம் நாள் ஓய்வுநாளை ஒதுக்கி வைக்கத்தக்கதாக எனது பின்னடியார்களுக்கு அதிகாரம் வழங்குவேன். இவ்வாறாக, தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட நாள் மாற்றப்பட்டுவிட்டது என்று உலகத்திற்குக் காட்டுவேன். அந்த நாள் மனிதரின் உள்ளத்தில் நீடித்து வாழ்ந்திருக்கக்கூடாது. அந்த நாளைப்பற்றிய நினைவையே துடைத்து, இல்லாமற் செய்துபோடுவேன். அதற்குப்பதிலாக, தேவனுடைய ஆதாரச் சான்றைப் பெற்றிராத ஒரு நாளை—தேவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே அடையாளமாக இராத ஒரு நாளை—அந்த இடத்திலே வைப்பேன். தேவன் அந்த நாளின்மீது பரிசுத்தத்தை வைத்ததுபோன்று ஞாயிற்றுக்கிழமையை ஏற்றுக்கொள்பவர்களை அந்த நாளின் மீது பரிசுத்தத்தை வைக்கும்படிச்செய்வேன்” என்று சாத்தான் கூறுகிறான்.

“எனது பிரதிநிதியின்மூலம் நான் என்னை உயர்த்துவேன். முதலாம் நாள் உயர்வாக மதிக்கப்படும். புரொட்டஸ்டாண்டு உலகம் இந்தப் போலியான ஓய்வுநாளை உண்மையானது என்று ஏற்றுக்கொள்ளும். தேவன் நியமித்த அந்த ஓய்வுநாளை ஆசரிக்காமல் இருப்பதின்மூலமாக, அவரது பிரமாணத்தை அவமதிப்பிற்கும் புறக்கணிப்பிற்கும் உள்ளாக்குவேன்.

உங்கள் தலைமுறைதோறும் இது எனக்கும் உங்களுக்கும் அடையாளமாக இருக்கும் என்று சொல்லப்பட்ட வார்த்தைகளை எனது ஓய்வுநாளின் பக்கத்தில் இருந்து செயல்படும்படிச் செய்வேன்."

"இவ்வாறு இந்த உலகம் என்னுடையதாகும் (சாத்தான்). நான் இந்தப் பூமியில் ஆளுகைசெய்பவனாகவும், இந்த உலகத்தின் அரசனாகவும் இருப்பேன். தேவனுடைய ஓய்வுநாளை, ஒரு அவமதிப்பிற்கான—குறிப்பிட்ட குறியிலக்காகச் செய்யும்படி, என்னுடைய வல்லமையால் மக்களின் மனங்களைக் கட்டுப்படுத்துவேன். அந்த ஒரு அடையாளம் எது? ஏழாம் நாள் ஆசரிப்பை இந்த புமியிலுள்ள அதிகாரிகளுக்கு கீழ்ப்படியாததற்கான அடையாளச்சின்னமாக ஆக்குவேன். மானிடர்க்கான சட்டங்களை மிகவும் கெடுபிடியானதாக ஆக்குவேன். ஆண்களும் பெண்களும் ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கும்படி துணிவடையாதபடிக்கு அவ்வாறு செய்வேன். உணவும் உடையும் வேண்டுமே என்ற பயத்தினால் தேவனுடைய பிரமாணத்தை மீறுவதிலே அவர்கள் உலகத்தாரோடே சேர்ந்துகொள்வார்கள். இந்தப் பூமி முழுவதும் என்னுடைய ஆளுகைக்கடியில் இருக்கும்."

ஓய்வுநாள் ஆசரிப்பே நாம் தேவனுக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதை சோதிக்கும் மாபெரும் பரீட்சையாகும். ஏனெனில் அது முக்கிய முரண்பாட்டை உருவாக்குகின்ற சத்தியக் கருத்தாக இருக்கிறது. இறுதிச்சோதனை மனிதர்மீது வரும்போது, தேவனை சேவிப்பவர்களுக்கும், சேவிக்காதவர்களுக்குமிடையே தனித்த நிலையில் ஒருவேறுபாட்டை இது தெளிவாகக் கோடிட்டுக்காட்டும்.★

# ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கு எதிரான சாத்தானின் சூழ்ச்சியான போர்முறை!

**“தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங் கோலாசனம் உமக்கு இசைந்திருக்குமோ? அவர்கள் நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள்.” —சங்கீதம் 94:20,21.**

இறுதிநாட்களின் இன்னல்களை தேவனுடைய மக்கள் நெருங்கிவரும்பொழுது, அவர்களது விசுவாசத்தை வீழ்த்திப்போடத் தக்கதாக மிகவும் வெற்றியுள்ள திட்டத்தைத் தீட்டுவதற்கு சாத்தான் தனது தூதர்களோடு தீவிரமாகக் கலந்துபேசி, ஆலோசனை செய்கிறான்....

மாபெரும் வஞ்சகனாகிய சாத்தான்: “ஆத்துமாக்களின் முடிவை நிர்ணயிக்கும் கடும் தேர்வு ஓய்வுநாள் ஆசரிப்பேயாகும். நாம் உண்டாக்கிய ஓய்வுநாளை நாம் உயர்த்திக்காட்டவேண்டும். இவ்வுலக வாழ்க்கையில் பற்றுடையோரையும் சபை அங்கத்தினரையும் ஏற்றுக்கொள்ளச் செய்துவிட்டோம். இதை ஆதரிப்பதற்காக சபை உலகத்தோடு இணையும்படி நடத்தவேண்டும். சத்தியத்திற்கு எதிராக அவர்களது கண்களைக் குருடாக்கிப்போட நாம் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யவேண்டும். தேவனுக்கேற்ற பயத்தையும் பகுத்தறிவையும் ஒதுக்கிவைத்துவிட்டு, பழக்கவழக்கங்களையும் பாரம்பரியங்களையும் பின்பற்றத்தக்கதாக அவர்களை வழிநடத்தவேண்டும்.”

“பிரபலமான போதகர்கள்மீது எனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களிடம் பிரசங்கம் கேட்கிறவர்களை தேவனுடைய பிரமாணங்களைவிட்டு வழிவிலகத்தக்கதாக பேசும்படிச் செய்வேன்....”

“ஆனால் நமது முதன்மையான அக்கறை, ஓய்வுநாளை கைக்கொள்ளும் இந்தத் தனியான சமயப்பிரிவினரை அமைதிப்படுத்துவதே யாகும். அவர்களுக்கு எதிராக, பொது மக்களின் கடுங்கோபத்தைத் தூண்டிவிட வேண்டும். மாபெரும் மனிதர்களையும் உலக ஞானம் நிறைந்த மனிதரையும் நமது பக்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். நமது நோக்கங்களைச் செயல்படுத்தத்தக்கதாக, அதிகாரத்தில் இருப்பவர்களைத் தூண்டிவிடவேண்டும். பின்னர் நான் ஏற்படுத்தி வைத்துள்ள ஓய்வுநாளை மிகக் கடுமையான—கொடுமையான சட்டங்களால் கட்டாயமாகச் செயல்படுத்தவேண்டும். இந்தச் சட்டத்தைப் புறக்கணிப்பவர்களை கிராமங்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் விரட்டியடித்து, பசியாலும், தாகத்தாலும், தனிமையாலும் வாடும்படிச் செய்யவேண்டும். நமது கையில் ஒருமுறை அதிகாரம் கிடைத்துவிட்டபிறகு, தேவன்மீது தாங்கள் கொண்டிருக்கும் பற்றுறுதியினின்று விலகாமல் இருப்பவர்களுக்கு நாம் என்ன செய்வோம் என்பதைக் காட்டுவோம்.... நமது வல்லமை என்னும் இந்த வலது புயத்தோடு, புரொட்டஸ்டாண்டு சபைகளையும் உலகத்தையும் இசைவாக இப்பொழுது கொண்டுவந்து கொண்டிருக்கிறோம். இறுதியிலே, நமது அதிகாரத்திற்குக் கட்டுப்படாத அனைவரையும் ஓர் சட்டத்தின்மூலமாக, நாம் கூண்டோடு அழித்துவிடுவோம். நமது ஓய்வுநாளை (ஞாயிறு ஆசரிப்பு) மீறுபவர்களுக்கு மரணதண்டனை என்று சட்டம் இயற்றியபிறகு இப்பொழுது பிரமாணத்தைக் கைக்கொள்வோரது அணியில் இருப்பவர்கள் நம் பக்கத்திற்கு வந்துவிடுவார்கள்.”

“ஆனால் இத்தகைய தீவிரமான நடவடிக்கைகளைச் செயலாற்ற முற்படுவதற்கு முன்னர் உண்மையான ஓய்வுநாளை ஆசரிப்பவர்களை சிற்றின்பங்கள், இழிந்த இச்சைகள், பெருமை ஆகியவைகளின் மூலமாக கிறிஸ்துவைவிட்டுப் பிரித்துவிடலாம். சத்தியத்தை விசுவாசிப்பதினால், தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக அவர்கள் எண்ணிக்கொள்ளட்டும். ஆனால் இன்சுவை நுகர்ச்சிகளில் மிதமிஞ்சி திளைப்பதும் கீழ்த்தரமான—இழிவான இச்சைகளில் ஈடுபடுவதும் அவர்களது தீர்மானிக்கும் திறனை சீர்குலைத்து, வேறுபடுத்திப் பார்க்கத்தக்கதான உணர்வை அழித்து, அவர்களது வீழ்ச்சிக்கு அடிகோலும்.” ★

ஜூன் 5

# மிருகத்திற்கு ஓர் சொரூபம் வைக்கப்படுதல்!

**“மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.”**

**—வெளிப்படுத்தல் 13:14.**

கிருபையின் காலம் முடிவடையுமுன்னர் மிருகத்திற்கான சொரூபம் அமைக்கப்பட்டுவிடும். ஏனெனில் இதுவே தேவனுடைய மக்களுக்கு ஒரு மாபெரும் சோதனையாக இருக்கும். இதன்மூலம் அவர்களது நித்தியத்திற்கான முடிவு தீர்மானிக்கப்படும்....

வெளிப்படுத்தின விசேஷம் 13—ம் அதிகாரத்தில்: “பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை யுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது” (வசனம் 11,12) என்று கூறப்பட்டிருக்கிறது. பின்னர் அற்புதங்களைச் செய்யும் வல்லமை வெளிப்படுத்தப்பட்டது. “அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும்,

மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது"(வசனம் 13-17).

தேவனுடைய மக்கள் முத்திரையைப் பெற்றுக்கொள்ளு முன்பாக இந்தச் சோதனையை கடந்துசெல்லவேண்டும். அவரது பிரமாணத்தைக் கைக்கொள்வதின்மூலமாக, தேவனுக்கு தங்களது உத்தமத்தை நிரூபித்து, போலியான ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் யேகோவா தேவனாகிய கர்த்தரின் கொடியின்கீழ் இருக்கும் அணியில் நிற்பார்கள். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள். பரலோகத்தினின்று தோன்றிய சத்தியத்தை கைவிட்டு, ஞாயிற்றுக்கிழமையை ஏற்றுக்கொள்பவர்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்.

பூலோக வல்லமைகளோடு நடைபெறப்போகின்ற சபையின் இறுதி மாபெரும் போராட்டங்கள் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தரிசனத்தில் காட்டப்பட்டபோது, தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் பெறப்போகும் இறுதி விடுதலை, வெற்றி ஆகியவைகளையும் பார்க்கும்படி அனுமதிக்கப்பட்டார்.... யுத்தக்களத்தின் பேரொலிக்கும் புகைமூட்டத்திற்கும் அப்பால், சீயோன் மலைமீது, ஆட்டுக்குட்டியானவரோடு சென்ற கூட்டத்தை அவர் கண்டார். மிருகத்தின் முத்திரைக்குப் பதிலாக, அவர்களது நெற்றியிலே பிதாவின் நாமம் எழுதப்பட்டிருந்தது. ★

# மருள விழுகையினால் மிருகத்திற்கு ஓர் சொரூபம்...!

**“எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.” –2 தெசலோனிக்கேயர் 2:3.**

ஆரம்பகால சபை சுவிசேஷத்தின் எளிமையைவிட்டு விலகி, அஞ்ஞான பழக்கங்களையும் சமயச் சடங்குகளையும் அனுசரித்து, கேடான நிலைக்கு மாறிவிட்டது. தேவனுடைய வல்லமையையும் பரிசுத்த ஆவியையும் இழந்துவிட்டது. மேலும் மக்களின் மனச்சாட்சிகளை அடக்கியாளத்தக்கதாக சமயம் சாராத உலகியல் சார்ந்த வல்லமைகளை நாடிற்று. இதன்விளைவே போப்புமார்க்க ஆட்சியாகும். அதாவது அரசாங்க வல்லமையை அடக்கியாண்ட ஒருசபை, அந்த வல்லமையைத் தங்களது சொந்த நோக்கங்களை மேம்படுத்திக்கொள்ளத்தக்கதாக, அதுவும் குறிப்பாக சபையின் கருத்துக்கு முரணான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களைத் தண்டிப்பதற்காகப் பயன்படுத்தியது.

எப்பொழுதெல்லாம் உலகியல் சார்ந்த வல்லமையை சபை பெற்றுக்கொண்டதோ, அப்பொழுதெல்லாம் தங்களது கொள்கைகளுக்கு மறுப்பு தெரிவித்தவர்களை தண்டிப்பதற்காக அந்த வல்லமையைப் பயன்படுத்தியது. ரோமாபுரியின் வழித்தடங்களை பின்பற்றிய புரொட்டஸ்டாண்டு சபைகளும் உலக வல்லமைகளோடு நட்புத்தொடர்பு வைத்துக்கொண்டு, மனசாட்சியின் சுதந்தரத்தை கட்டுப்படுத்தத்தக்கதாக இதே போன்ற விருப்பத்தையே வெளிப்படுத்தின. உதாரணமாக, இங்கிலாந்திலுள்ள சபை தனது கொள்கைக்கு மாறாக இருப்பவர்களை நீண்டகாலமாக உபத்திரவப்படுத்தியது. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளிலே ஆங்கிலேய திருச்சபையின் கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஆயிரக்கணக்கான போதகர்கள் சபைகளைவிட்டு ஓடும்படிக்கு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அநேக போதகர்களுக்கும் மக்களுக்கும்

அபராதம் விதிக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டார்கள். சித்திரவதைக்கும் உள்ளானார்கள். இரத்தசாட்சியாகவும் மரிக்கவேண்டியதிருந்தது.

ஆதி சபையின் மருளவிழுகையே உள்நாட்டிலுள்ள அரசாங்கத்தின் உதவியை நாடச்செய்தது. இந்தக் காரியம் போப்பின் அதிகாரத்தின் முன்னேற்றத்திற்கான வழியை ஆயத்தஞ்செய்தது. இந்த அதிகாரமே மிருகமாகும். பவுலார், "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2 தெச. 2:3) என்று கூறினார். எனவே சபையின் கொள்கைமீறுதல் மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்க வழியை ஆயத்தஞ்செய்யும்.

"அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும்"–2 தெச. 2:9,10. இவ்வாறு சாத்தான் அனைத்து வல்லமையோடும் கிரியைசெய்வான். இருள் விரைவாகப் பெருகுகிற நிலையின்மூலம் அவனது வேலை தெளிவாக வெளிப்படும். தனிப்பட்டோரின் நலத்தைவிட பெருவாரியான மக்களின் நலத்தையே மிகுதியாக விரும்பும் கொள்கையின் பிழைகள், முரண்பட்ட சமயக்கருத்துக்கள் இறுதி நாட்களில் நடைபெறப்போகும் வஞ்சகங்கள் ஆகியவைகளின் மூலம் இந்த உலகத்தைச் சிறைப்படுத்திக்கொண்டுபோகிறது மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறஸ்துவின் சபைகள் என்று அழைக்கப்படுபவைகளையும் ஊடுருவி—பரவி, கேடடையச் செய்துகொண்டிருக்கிறது. இந்த மாபெரும் மருளவிழுகை இருளாக மாறி நள்ளிரவின் காரிருளைப் போலாகும். தேவனுடைய மக்களுக்கு சத்தியத்தினிமித்தம் அது ஓர் சோதனையின் இரவாகவும் அழுகையின் இரவாகவும் உபத்திரவத்தின் இரவாகவும் இருக்கும். ஆனால் அந்த இரவின் இருளிலிருந்து தேவனுடைய வெளிச்சம் பிரகாசிக்கும். ★

# வஞ்சிப்பதிலே ஆவிமார்க்கத்தின் பங்கு!

**“பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.”**

**–1 யோவான் 4:1.**

ஆவிமார்க்கம் வெறும் மானிட வஞ்சகமே என்ற நம்பிக்கையின்மூலமாக அநேகர் கண்ணியில் அகப்படுகிறார்கள். இந்த வெளிப்பாடுகள் நேருக்குநேராகக் கொண்டுவரப்படும்பொழுது, அவைகளை தெய்வீக ஆற்றல் என்று கருதுவதைத்தவிர வேறு எதையும் அவர்கள் நினைப்பது இல்லை. இவர்கள் ஏமாற்றப்படுவார்கள். அதை “தேவனின் மாபெரும் வல்லமை” என்று ஏற்றுக்கொள்ளும்படி வழிநடத்தப்படுவார்கள்.

ஆவிமார்க்கத்தின் போதனைகள் சபைகளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறபோது, மாம்ச சம்பந்தமுள்ள இதயத்தின்மீது ஒப்படைக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு அகற்றப்படுகிறது. இதுவும் மார்க்கந்தான் என்று சொல்லிக்கொள்ளும் நிலை கீழ்த்தரமான அக்கிரமத்தை மறைக்கின்ற ஒரு உடையைப்போலாகின்றது. ஆவிமார்க்கத்தின் வெளிப்பாடுகள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் கொள்கைகளுக்கும் கதவைத் திறந்துவைத்துவிடுகின்றது. இவ்வாறு தீய தூதர்களின் செல்வாக்கு சபைகளில் உணரப்படும்.

மக்களின் சுவைக்கு ஏற்ப நடத்தப்படும் ஊழியம், ஆவிமார்க்கத்தை வெற்றியுடன் எதிர்த்து நிற்கமுடியாது. ஆவிமார்க்கத்தின் துயரம்தரத்தக்க செல்வாக்கினின்று தங்களது மந்தைகளை எதைக்கொண்டும் காப்பாற்றுகிற வழி அச்சபைகளுக்கு இல்லை. ஆவிமார்க்கத்தின் வருந்தத்தக்க விளைவுகள் அனைத்தும் இந்தக் காலத்திலுள்ள போதகர்கள்மீதே தங்கியிருக்கிறது. ஏனெனில், அவர்கள் சத்தியத்தைப் பாதங்களின் கீழ் போட்டு மிதித்துப்

போட்டார்கள். அதற்குப் பதிலாக கட்டுக்கதைகளை விருப்பத்தோடு தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

சாத்தான் இந்த உலத்தையே ஏமாற்றுவதற்கான தனது இறுதி முயற்சிக்காக, நீண்டகாலமாக ஆயத்தஞ்செய்து வந்திருக்கிறான். ஏதேனில் ஏவாளிற்கு கொடுத்த உறுதிமொழியில் தான் அவனது அடித்தளம் போடப்பட்டிருக்கிறது. “அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது”–ஆதி. 3:4,5. கொஞ்சங்கொஞ்சமாக ஆவிமார்க்கத்தை முன்னேற்றுவிக்கிற அந்த வஞ்சகத்தின் தலையாயப் படைப்பிற்காக வழியை ஆயத்தஞ்செய்திருக்கின்றான். அவனது திட்டத்தின் முழு நிறைவேறுதலையும் இன்னும் அடைவில்லை. இறுதிக்கட்டத்தின் மீதியான நேரத்தில் அந்தக் காரியம் நிறைவேறும். “அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது”–வெளி. 16:13,14.

தேவனுடைய வார்த்தையிலே விசுவாசம் வைத்து, அவரது வல்லமையினாலே காப்பாற்றப்பட்டாலொழிய முழு உலகமும் இந்த வஞ்சகம் எனப்படும் அணிக்குள் அடித்துச்செல்லப்பட்டுவிடும். சாவைச் சந்திக்கின்ற ஒரு பாதுகாப்பிற்காக மக்கள் விரைவாகத் தாலாட்டப்பட்டுக்கொ காண்டிருக்கிறார்கள். தேவ கோபாக்கினை சொரியப்படுவதால் மாத்திரமே அவர்கள் விழிப்படைவார்கள்.★

# ஆவிமார்க்கமும் ஞாயிறு ஆசரிப்பபுச் சட்டமும்!

**"வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." —ஏசாயா 8:20.**

ஆவிமார்க்கத்தின்மூலமாக, வெளிப்படுத்தப்பட்ட அற்புதஞ்செய்யும் வல்லமை மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்துகொண்டவர்களுக்கு எதிராக தனது செல்வாக்கைப் பயன்படுத்த முனைப்போடு செயல்படும். ஆவிகளிடம் கொள்ளும் தொடர்புகளிலிருந்து, நாட்டின் சட்டங்களை தேவனுடைய பிரமாணத்தைப்போன்று மதித்து, அவைகளுக்குக் கீழ்படியவேண்டுமென்று வலியுறுத்தி, ஞாயிறு ஆசரிப்பைத் தள்ளிப் போட்டவர்களை தவறுசெய்துவிட்டதாக உணர்த்தும்படி தேவன் தங்களை அனுப்பினார் என்று அறிவிக்கும் செய்திகள் வரும். இந்த ஆவிகள் உலகில் காணப்படும் மாபெரும் துன்மார்க்கர் நிலைகுறித்து புலம்பி, ஞாயிறு ஆசரிப்பின் தெய்வீகத்தன்மையைக் கெடுத்துப்போட்டதால், இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்துகிடக்கின்றன என்று கிறிஸ்தவ மார்க்கத்தின் போதகர்கள் சொல்லும் சாட்சியை ஆதரித்துப்பேசும். அவர்களது சாட்கிகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுக்கு எதிராக கடுங்கோபம் கிளறிவிடப்படும்.

ஆவிமார்க்கத்தின் போதனைகளை எதிர்ப்பவர்கள் மனிதர்களை மட்டுமல்ல, சாத்தானையும் அவனது தூதர்களையும் முனைந்து தாக்குகிறார்கள். அவர்கள் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளையும் தாக்குகிறார்கள். சாத்தான் பரலோக தூதர்களால் விரட்டியடிக்கப்பட்டாலொழிய ஒரு அங்குல இடத்தையும் விட்டுக்கொடுக்கமாட்டான். நமது மீட்பர், "எழுதப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தைகளை வைத்து அவனைச் சந்தித்ததுபோல தேவனுடைய மக்களும் சந்திக்கவேண்டும். கிறிஸ்து இந்த உலகத்தில் அவதரித்த நாட்களில் வேதவாக்கியங்களை மேற்கோள் காட்டியதைப்போல சாத்தான்

இப்பொழுதும் செய்யமுடியும். தனது வஞ்சகங்களுக்கு வலுவூட்டத்தக்கதாக வேதவாக்கியங்களின் போதகங்களை தவறாக மாற்றி வழங்குவான். இத்தகைய ஆபத்து நிறைந்த நாட்களில் நிற்பவர்கள் வேதவாக்கியங்கள் கூறும் சாட்சிகளை தங்களுக்குத் தாங்களே நன்றாக புரிந்துவைத்திருக்க வேண்டும். பிசாசின்ஆவிகள் அன்பான உறவினர்களைப்போலோ அல்லது நண்பர்களைப்போன்றோ ஆள்மாறாட்டஞ்செய்து, மாபெரும் ஆபத்து நிறைந்த—வேதத்திற்கு முரண்பாடான காரியங்களை உறுதியாக எடுத்துக்கூறும். அநேகர் இத்தகைய காரியங்களை நேருக்கு நேராகச் சந்திக்கவேண்டியதிருக்கும். இத்தகைய ஆள்மாறாட்டக்காரர்கள் நமது மிகவும் மென்மையான பரிவிரக்கத்தைத் தொடும்படி வேண்டுகோள்விடுத்து, தங்களது மாய்மாலங்களுக்கு வலுவூட்டத்தக்கதாக அற்புதங்களைச் செய்வார்கள். எனவே, வேத சத்தியத்தை வைத்து, அதாவது மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும், இவ்வாறு காணப்படுகிறவர்கள் பிசாசுகளின் ஆவிகளே என்றும் சொல்லி, ஈடுகொடுத்து எதிர்த்து நிற்கத்தக்கதாக நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

சாத்தானின் செயல்துணைகள் மானிட உருவிலே வந்து, தேவனுடைய இராஜ்யம் கட்டப்படுகின்ற வேலையை எதிர்க்கத்தக்கதாக, இந்த மாபெரும் இறுதிப்போராட்டத்தில் பங்குகொள்வார்கள். பரலோக தூதர்களும் மனித உருவில் வந்து, செயல்புரியத்தக்கதாக களத்தில் இருப்பார்கள். இந்த உலக வரலாற்றின் கடைசி மாபெரும் அத்தியாயம் முடியும் நேரம்வரை இந்த இரண்டு எதிர் அணிகளும் தொடர்ந்து இருப்பார்கள். ★

ஜூன் 9

# பொய்யான எழுப்புதல்!

**“நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் ... நடக்கும்.” —2 தெசலோனிக்கேயர் 2:8,9.**

பவுலார் தெசலோனிக்கேயருக்கு எழுதிய தமது இரண்டாம் நிருபத்திலே, ஆவிமார்க்கத்தில் சாத்தான் ஒரு தனி முனைப்புடன் செய்யும் வேலையைக்குறித்துச் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி அவர் பேசும்போது: “அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்...” (2 தெச. 2:9) என்று உறுதிபடக் கூறினார்.

பூமியின்மீது தேவன் கொடுக்கப்போகும் தண்டனைகள் இறுதியாக வந்துசேரும்பொழுது, ஆண்டவரது மக்களுக்கு மத்தியிலே அப்போஸ்தலர் காலத்திலிருந்து இதுவரை காணப்படாத அளவிற்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட தேவ பக்தியின் ஒருவித எழுப்புதல் காணப்படும். தேவனுடைய வல்லமையும் ஆவியும் அவரது மக்கள்மீது பொழியப்படும். தேவன்மீதும் அவரது வார்த்தையின்மீதும் கொண்டுள்ள அன்பு அகற்றப்பட்டு, இந்த உலகத்தின்மீது கொண்டுள்ள அன்பு நிலைபெற்றிருக்கின்ற சபைகளைவிட்டு விலகிக்கொள்வார்கள். ஆண்டவரது வருகைக்காக ஒரு கூட்ட மக்களை ஆயத்தஞ்செய்யவேண்டிய இச்சமயத்தில் கூறியறிவிக்கப்படவேண்டும் என்று தேவன் நியமித்திருக்கிற அந்த மாபெரும் சத்தியங்களை அநேக ஊழியர்களும் மக்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். ஆத்துமாக்களின் விரோதி இந்த வேலையைத் தடைசெய்ய விரும்புகிறான். இத்தகைய இயக்கத்திற்கான ஒரு நேரம் வருவதற்கு முன்பாக அதைத் தடுக்க தீவிர முயற்சியோடு ஒரு போலியை அறிமுகப்படுத்துவான். தனது வஞ்சக வல்லமைக்கடியில் கொண்டுவரப்படக்கூடிய சபைகளிலே, தேவனுடைய

விசேஷ வல்லமை பொழியப்பட்டதுபோன்ற ஒரு தோற்றத்தைக் காட்டுவான். மார்க்க சம்பந்தமான காரியங்களில் ஒரு உற்சாகமான ஆர்வம் எழுப்பி இருப்பவர்கள்போன்று நினைக்கத்தக்கதாக வெளிப்படையான காரியங்களைக் காட்டுவான். திரளான கூட்டத்தால் தங்களுக்கு தேவன் அற்புதமான முறையில் கிரியைசெய்துகொண்டிருக்கிறார் என்று எக்களிப்பார்கள். ஆனால் அக்காரியம் வேறே ஆவியினால் நடப்பிக்கப்படுகிறதாக இருக்கும். மார்க்கசம்பந்தமாக மாறுவேடத்திற்கடியில் கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் தனது செல்வாக்கைப் பரப்ப முயற்சிசெய்வான்.

வாலிப ஆண்களும் பெண்களும் எழுச்சியடைவார்கள். அதிசயமான விதத்தில் தங்களுக்காக ஆதரவு கொடுக்கப்பட்டது என்றும், தாங்கள் ஒரு மாபெரும் பணியைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் எண்ணுவார்கள். வழக்கத்திற்கு மாறான ஒரு ஒழுங்கின்படி அநேகருக்கும் மனந்திரும்புதல்கள் ஏற்படும். ஆனால் இந்த மனந்திரும்புதல்கள் தெய்வீக கையொப்பத்தைப் பெற்றவைகள் அல்ல, பாலியல் தொடர்பான ஒழுக்கக்கேடுகளும் ஆடம்பரச்செலவுகளும் வந்துசேரும். அநேகருடைய விசுவாசம் அழிந்தொழிந்துபோகும். ★

# மிருகத்திற்கான சொரூபம் எவ்வாறு படிப்படியாக உருவெடுக்கிறது?

**“அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.” —வெளிப்படுத்தல் 13:12.**

அமெரிக்க ஐக்கிய நாடு (ரு.ஐ.யு) மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கவேண்டுமானால், தனது சொந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தின் அதிகாரம் சபையால் பயன்படுத்தப்படுவதற்கேதுவாகவும், மார்க்கசம்பந்தமான வல்லமை உள்நாட்டு அரசாங்கத்தை அடக்கியாளவேண்டும்....

மிருகத்தின் சொரூபம் விழுந்துபோன புரொட்டஸ்டாண்டு அமைப்பைச் சுட்டிக்காட்டுகிறது. புரொட்டஸ்டாண்டு சபைகள் தங்களது சமயக்கொள்கைகளை செயல்படுத்துவதற்காக, உள்நாட்டு அரசாங்க உதவியை நாடும்போது, இந்த நிகழ்வு உருவாகும்....

ஞாயிறு ஆசரிப்பு, சட்டத்தின் மூலமாக அமல்படுத்தப்படும் பொழுது, உண்மையான ஓய்வுநாள் பற்றிய கடமை உலகிற்கு அறிவுறுத்தப்படும். பின்னர் யாரெல்லாம் ரோமாபுரியின் உயர்ந்த அதிகாரத்தைத்தவிர, வேறு எந்த அதிகாரத்தையும் கொண்டிராத கொள்கைக்கு கீழ்ப்படிவதற்காக, தேவனுடைய கட்டளைகளை மீறுகிறார்களோ, அவர்கள் தேவனுக்கும் மேலாக, ரோமன் கத்தோலிக்க சபையைக் கனம்பண்ணுகிறார்கள்! ரோமாபுரியால் வகுத்தொழுங்குசெய்யப்பட்ட அமைப்பு முறையை நடைமுறைப்படுத்தும் வல்லமைக்கும் ரோமாபுரிக்கும் அத்தகைய நபர் வணக்கம் செலுத்துகிறார். அவர் மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறார். தேவன் தமது அதிகாரத்தின் அடையாளம் என்று உறுதியாகத்

தெரிவித்திருக்கின்ற அமைப்பை மனிதர் தள்ளிப்போட்டு, அதற்குப்பதிலாக, ரோமாபுரி தனது உயர் அதிகாரத்திற்கு அடையாளமாகத் தெரிந்துகொண்ட நாளைக் கனப்படுத்தும்பொழுது, அவர் தாம் ரோமாபுரிக்கு விசுவாசமாக இருப்பதற்கான அடையாளத்தை அதன்மூலம் ஏற்றுக்கொள்கிறார். இந்த முக்கியக் காரியம் இவ்வாறு மக்களுக்கு முன்பாகத் தெளிவாக நிறுத்தப்பட்டு, தேவனுடைய கட்டளைகளுக்கும் மனிதர்களுடைய கட்டளைகளுக்குமிடையே எதைத் தெரிந்துகொள்வது என்ற நிலை கொண்டுவரப்பட்டபின்புதான், தேவனுடைய கட்டளைகளைத் தொடர்ந்து மீறுகிறவர்கள் “மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்”

இந்தப் போராட்டம் என்ற முக்கியமான காரியத்தில் கிறிஸ்தவ உலகம் தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் கர்ததுக்கொள்கிறவர்கள் மற்றும் மிருகத்தையும் அதின் சொருபத்தையும் வணங்கி, அதன் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவர்கள் என்று இரண்டு மாபெரும் வகுப்புகளாகப் பிரிக்கப்படும். சபையும் அரசாங்கமும் தங்களது சக்திகளை இணைத்து, “சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் ... ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும்...”(வெளி 13:16) கட்டாயப்படுத்தும். எனினும் தேவனுடைய மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். பத்மு தீவின் தீர்க்கதரிசி: “அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவை கள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி 15:2,3) என்று பாடிய காட்சியைத் தரிசனமாகக் கண்டார்.★

# ஓய்வுநாளைப்பற்றிய சத்தியம் முழுமையாக கூறியறிவிக்கப்படுதல்!

**“பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்.” —வெளிப்படுத்தல் 14:6,7.**

இக்கட்டுக்காலம் ஆரம்பமானபோது, புறப்பட்டுச்சென்று ஓய்வுநாள் சத்தியத்தை முற்றிலுமாகக் கூறியறிவித்தபோது, நாங்கள் பரிசுத்த ஆவியினால் நிறையப்பெற்றிருந்தோம்.

இங்கு கூறப்பட்டிருக்கும் **இக்கட்டுக்காலத்தின்** தொடக்கம் வாதைகள் ஊற்றப்படுகின்ற காலத்தைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை. அந்த வாதைகள் ஊற்றப்படுவதற்கு முன்னர் உள்ள—இயேசு ஆசரிப்புக்கூடாரத்திற்குள் இருக்கின்ற—அந்த குறுகிய காலமே—இக்கட்டுக்காலமாகும். மீட்பின் ஊழியம் முடிவடைகின்ற அந்தத் தருணத்திலே, பூமியின்மீது இக்கட்டு வந்துகொண்டிருக்கும். ஜாதிகள் கோபங்கொள்ளுவார்கள். எனினும் மூன்றாம் தூதனின் வேலையைத் தடைசெய்துவிடாதபடி கட்டுக்குள் அடக்கிவைக்கப்படுகிறார்கள். அச்சமயத்தில், “பின்மாரி” அதாவது “ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து வருகிற இளைப்பாறுதல்,” கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படுகின்ற காலத்தில் பரிசுத்தவான்கள் நிலைநிற்கத்தக்கதாக, அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும், மூன்றாம் தூதுனின் உரத்தசத்தத்திற்கு வல்லமை கொடுக்கத்தக்கதாகவும் ஊற்றப்படும்.”

வெளி. 14—ம் அதிகாரத்திலுள்ள தூதன் கிறிஸ்து வானங்களின் மேகங்களின்மீது வருவதற்கு சற்றுமுன்னர் அறிவிக்கப்படவேண்டிய தூதை கொடுக்கிறான்.... இந்த நேரத்திற்கு சற்று முன்பாக, பழைய—புதிய ஏற்பாடுகளில் சொல்லப்பட்ட—அந்த உடன்படிக்கைப் பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ள—காலின் கீழ் போட்டு மிதிக்கப்பட்ட—தேவனுடைய பிரமாணத்திற்கு, மக்களின் கவனத்தை ஈர்க்கும்படியாக அழைப்பு கொடுக்கப்படுகிறது....

தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டு, ஓய்வுநாளாகக் கைக்கொள்ளப்பட வேண்டுமென்று கட்டளையாகக் கொடுக்கப்பட்ட அந்தநாளை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்குப் பதிலாக, வாரத்தின் முதல்நாள் ஓய்வுநாளாக ஆசரிக்கப்படுவதைக் காண்கிறார்கள். .அவர்கள் தேவனுடைய சித்தத்தை நேர்மையான முறையில் செய்ய விரும்புகிறார்கள். இந்த ஓய்வுநாள் மாற்றத்திற்கான காரணத்தைக் கண்டறிய வேதவாக்கியங்களை ஆராய ஆரம்பிக்கிறார்கள். இத்தகைய பழக்கத்திற்கான வேதாகம அதிகாரத்தைக் கண்டறியமுடியாமல் அதாவது பிரபலமில்லாத அல்லது பொது மக்களால் விரும்பப்படாத நிலைக்கு மாறிவிட்ட ஒரு சத்தியத்தை நாம் ஏற்றுக்கொள்வோமா? அல்லது மனிதக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தொடர்ந்து உலகத்தோடு இணைந்து செல்வோமா? என்ற கேள்வி எழுகிறது. விரித்துவைக்கப்பட்ட வேதாகமங்களைவைத்து, அழுது ஜெபிக்கிறார்கள். சத்தியத்தைப்பற்றி உறுதியான எண்ணம் ஏற்படும்வரை வேதவாக்கியங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்து, மனசாட்சியின்படி தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறவர்களோடு நிற்பதைத் தெரிந்துகொள்கிறார்கள். ★

ஜுன் 12

# இரண்டாம் தூதனின் தூது மறுபடியும் கூறப்படவேண்டும்!

**“வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்.” —வெளிப்படுத்தல் 14:8.**

வெளிப்படுத்தல் 14—ல் கூறப்பட்டுள்ள இரண்டாம் தூதனின் தூது, 1844—ம் ஆண்டு கோடைகாலத்தில் முதன்முதலாக பிரசங்கிக்கப்பட்டது. அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள (ரு.ஞு.யு) சபைகளுக்கு மிகவும் நேரடியான, ஒரு பொருத்தமான தூதாக அமைந்திருந்தது, ஏனெனில் அங்கு நியாயத்தீர்ப்பைக்குறித்த எச்சரிப்பு மிகவும் பரவலாகக் கூறியறிவிக்கப்பட்டாயிற்று. அச்செய்தி பொதுவாகத் தள்ளப்பட்டுப்போயிற்று. மேலும் சபைகள் துரிதமாக வீழ்ச்சியடைந்துகொண்டிருந்தன. ஆனால் 1844—ல் இரண்டாம் தூதனின் தூது அதின்முழுமையான நிறைவேறுதலை எட்டவில்லை. அச்சமயத்தில் சபைகள் ஒழுக்க நிலையில் ஒரு வீழ்ச்சியின் அனுபவத்தை அடைந்திருந்தன. அட்வெந்து தூதின் வெளிச்சத்தை மறுத்துப்போட்டதினிமித்தமே இவ்வாறு நேர்ந்தது. ஆனால் அந்த வீழ்ச்சி தன் முழுமையை இன்னும் அடையவில்லை. அந்த காலத்திற்கான விசேஷ சத்தியங்களை அவர்கள் தொடர்ந்து தள்ளிப்போட்டதினால், மிகவும் கீழாக தாழ விழுந்துவிட்டார்கள். எனினும், “பாபிலோன் விழுந்தது, அவளது வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே” என்று சொல்லக்கூடாத நிலையில் இருந்தது. ஏனெனில் அனைத்து ஜாதிகளுக்கும் இன்னும் குடிக்கக் கொடுக்கப்படவில்லை.

இன்னமும் பாபிலோனிலே ஒரு மக்கள் கூட்டம் இருக்கிறது. அவரது தண்டனைகள் அவர்களைச் சந்திக்குமுன் இந்த உத்தமமான மக்கள் அவளுடைய பாவங்களுக்கு உட்படாமலும், “அவளுடைய வாதையைப் பெற்றுக்கொள்ளாதபடியும் வெளியே அழைக்கப்படவேண்டும்.”

இதே தூதுதான் இரண்டாம் தூதனால் கொடுக்கப்பட்டது. பாபிலோன் விழுந்துவிட்டது. ஏனெனில் "அவளது வேசித்தனத்தின் உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்துவிட்டாள்" அந்த மது யாது? அவளது பொய்யான போதனைகளே! நான்காம் கற்பனையின் ஓய்வுநாளிற்குப்பதிலாக ஒரு பொய்யான ஓய்வுநாளை இந்த உலகிற்குக் கொடுத்துவிட்டாள். ஏதேனில் ஏவாளிற்கு சாத்தான் முதலில் கூறிய—இயற்கை சார்ந்த ஆத்துமா அழியாதது என்ற பொய்யை திரும்பக் கூறியிருக்கின்றான். அநேகர் மனிதருடைய கற்பனைகளை கொள்கைகளாகப் போதித்து, இதே மாதிரியான பிழைகளை எங்கணும் பரவலாகவும் தொலைவிடங்களிலும் பரப்பிவிட்டிருக்கிறார்கள்....

உலக எச்சரிப்பிற்காகச் செய்யப்படும் கடைசி வேலையிலே, இரண்டு தனிப்பட்ட தெளிவான அழைப்புகள் சபைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. "வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே" (வெளி. 14:8) என்றான். மூன்றாம் தூதுனின் தூதில் உரத்த சத்தத்திலே பரலோகத்திலிருந்து, "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18:4) என்ற குரல் கேட்கப்பட்டது. ★

# ஓய்வுநாளிற்கு எதிராக ஞாயிறு ஆசரிப்பின் காரியமும் இணைந்துவிடுகிறது!

**“அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.”**

**—வெளிப்படுத்தல் 14:9,10.**

இதுவரை மூன்றாம் தூதனின் தூதைப் பிரசங்கித்தவர்கள் அடிக்கடி வீணாக பீதியைப் பரப்புகிறவர்கள் என்று கருதப்பட்டனர். அமெரிக்க ஐக்கிய நாட்டிலே (ரு.ளு.யு) மார்க்கசம்பந்தமான காரியங்களில் பொறுக்கக்கூடாத மனநிலை மீண்டும் உருவெடுத்து அடக்கியாளும். சபையும் அரசாங்கமும் இணைந்து, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களை உபத்திரவப்படுத்து மென்று அவர்களால் முன்னுரைக்கப்பட்ட காரியங்கள் அடிப்படையற்றது, நகைப்பிற்கு இடமானதென்று தீர்மானமாகக் கூறப்பட்டது. ஆனால், ஞாயிறு ஆசரிப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற காரியம் பரவலாக கிளர்ச்சியைத் தூண்டும்போது இவ்வளவு காலமும் சந்தேகத்திற்கு இடமானதாகவும் நம்பக்கூடாததாகவும் இருந்த மேற்கூறப்பட்ட இந்தக் காரியங்கள் நெருங்கி வருவதைக் காணலாம். இதற்குமுன் நடைபெறக்கூடாதிருந்த விளைவுகளை இந்த மூன்றாம் தூதனின் தூது உண்டாக்கும்....

விசுவாசமும் ஜெபமும் நிறைந்த மனிதர் பரிசுத்த ஆர்வத்தோடு வலுக்கட்டாய நிலையில் புறப்பட்டுச்சென்று தேவன் தங்களுக்குக் கொடுக்கின்ற வார்த்தைகளைக் கூறியறிவிப்பார்கள். பாபிலோனின் பாவங்கள்

வெளியரங்கமாக்கப்படும். சபையின் ஆசரிப்புகளை உள்நாட்டு அரசாங்க அதிகாரத்தின்மூலம் செயல்படுத்துதல், ஆவிமார்க்கத்தின் ஆக்கிரமிப்பு, போப்பானவரது வல்லமையின் துரிதமான—மறைவான முன்னேற்றம் ஆகியவைகளால் ஏற்படும் ஆபத்தான விளைவுகள் அம்பலப்படுத்தப்படும். இத்தகைய பக்திவிநயமான எச்சரிப்புகளால் மக்கள் கலக்கமடைவார்கள். தங்களுக்கு முன்பு போதித்த போதகர்களிடம் ஆர்வத்தோடு "காரியங்கள் இப்படி இருக்கின்றனவா?" என்று கேட்கும்போது, போதகர்கள் கட்டுக்கதைகளையும் இன்பமயமான காரியங்களையும்சொல்லி, அவர்களது வெளிப்படையான மனசாட்சியையும் பயங்களையும் நயவசனிப்பினால் மாற்ற முயற்சிப்பார்கள். வெறும் மனித அதிகாரத்தினால் கூறப்படும் காரியங்களால் அநேகர் திருப்தியடையாமல், "இவ்வாறு ஆண்டவர் கூறுகிறார்" என்பதற்கு விளக்கம்கேட்டு கோரிக்கை வைக்கும்பொழுது, முன்னாளிலிருந்த பரிசேயரைப்போல தங்களுடைய அதிகாரத்திற்கு கேள்வி எழுப்பப்படுவதினிமித்தம் கோபம் நிறைந்தவர்களாகி, இந்தத் தூது சாத்தானால் கொண்டுவரப்பட்டது என்று பழித்துரைத்து, பாவத்தை விரும்புகின்ற திரளான மக்களை—இத்தூதைக் கொடுப்பவர்களை உபத்திரவிக்கும்படி தூண்டி எழுப்பிவிடுவார்கள்.

இந்தப் போராட்டம் பல புதிய பணிதளங்களுக்குப் பரவும்பொழுது, காலால் மிதிக்கப்பட்டுப்போன தேவனுடைய பிரமாணத்தை கவனிக்கத்தக்கதாக மக்களது மனங்கள் தூண்டப்படும். ஏறக்குறை மானிட சக்திக்கும் அப்பாற்பட்ட அளவிற்கு, குருமார்கள் தங்களது மந்தைக்கு இந்த வெளிச்சம் பிரகாசித்துவிடக்கூடாதே என்று அதை அணைத்துப்போட, அனைத்து முயற்சிகளையும் செயற்படுத்துவார்கள். இந்த முக்கியமான கேள்விகள் குறித்த விவாதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, தங்களது அதிகாரத்திற்குக் கீழ் இருக்கும் எல்லா வகைகளிலும் முயற்சி செய்வார்கள். சபை அரசாங்க அதிகாரத்தின் பலத்த புயத்தின் உதவிக்காக வேண்டுகோள் விடுக்கும். இந்த வேலையிலே போப்பு மார்க்கமும் புரொட்டஸ்டாண்டு சபைகளும் இணைந்து செயல்படும்.★

# அவசரமான—அவசியமான மூன்று தூதுகள்...!

**"இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்." —மல்கியா 4:5.**

தேவனுடைய நாளில் நிற்கத்தக்கதாக, ஒரு கூட்டமக்களை ஆயத்தம் செய்வதற்காக (அட்வெந்து இயக்கத்தால்) ஒரு மாபெரும் சீர்திருத்த ஊழியஞ்செய்யப்படவேண்டியது இருக்கும். அவரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் மக்களில் அநேகர் நித்தியத்திற்காக அவர்களது குணத்தைக் கட்டிக்கொண்டிருக்கவில்லை என்பதை தேவன் கண்டார். அவர் தமது இரக்கத்தினால் மதிமயங்கிய நிலையினின்று அவர்களை எழுப்பி, ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தமாகுவதற்கு அவர்களை நடத்திச்செல்ல, ஒரு தூதை அனுப்புவதாக இருந்தார்.

வெளி. 14—லிருந்து இந்த எச்சரிப்பு சிந்தனைக்குக் கொண்டுவரப்பட்டது. மூன்று அடுக்குகளிலுள்ள இந்தத் தூது, பரலோக தூதர்களால் கூறியறிவிக்கப்படுவதாகக் காட்டப்படுகிறது. அதன்பின் உடனே, "பூமியின் அறுவடையை" அறுப்பதற்காக மனுஷகுமாரனின் வருகை பின்தொடர்கிறது.

வானத்தின் மத்தியிலே தூதர்கள் பறப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் உலகத்திற்கு ஒரு எச்சரிப்பின் செய்தியை அறிவிப்பதாகக் காட்டப்படுகின்றது. பூமியின் வரலாற்றின் இறுதிக்கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு இத்தூது நேரடியாகத் தரப்படுகின்ற—அவர்களைப் பாதிக்கின்ற செய்தியாக இருக்கின்றது. இந்தத் தூதர்களின் குரலை எவரும் கேட்கிறது இல்லை. ஏனெனில் பரலோக அண்டசராசரத்தோடு இணைந்து வேலைசெய்கின்ற தேவனுடைய மக்களைக் காட்டுகின்ற அடையாளமாக இந்த மூன்று தூதுகளும் இணைந்து கொடுக்கப்படவேண்டும். உலகத்திற்கு மூன்று அடுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கின்றது.

“இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று” (வெளி. 18:1) என்று யோவான் கூறுகிறான். இது உலகத்திற்கு எச்சரிப்பாகக் கொடுக்கப்படும் இறுதி மூன்றடுக்குத் தூதைச் சுட்டிக்காட்டுகிறது.

வெளி. 14:6–12–ல் கொடுக்கப்பட்டுள்ள மூன்றடுக்கு எச்சரிப்பைத் தள்ளிப்போட்டதின் விளைவின் நேரத்தை வெளி. 18–ம் அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. இரண்டாம் தூதனால் முன்னறிவிக்கப்பட்ட நிலையை முற்றிலுமாக அடைந்திருக்கும் சபையின் தொடர்பிலிருந்து விலகிவரத்தக்கதாக பாபிலோனிலுள்ள தேவனுடைய மக்கள் அழைக்கப்படுவார்கள். உலகத்திற்காகக் கொடுக்கப்படவேண்டிய கடைசித் தூது இதுவே. அது தன்னுடைய வேலையை நிறைவேற்றும், “ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு” (2 தெச. 2:11) மாபெரும் வஞ்சகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விட்டுவிடப்படுவார்கள். பின்னர் யாருடைய இதயங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமாக இருக்கிறதோ, அவர்கள்மீது சத்தியத்தின் வெளிச்சம் பிரகாசிக்கும். பாபிலோனில் தங்கியிருக்கும் தேவனுடைய பிள்ளைகள், “பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்”(வெளி. 18:4) என்ற அவரது அழைப்பிற்குச் செவிகொடுப்பார்கள். ★

ஜுன் 15

# கடைசிநாட்களில் போர்க்கோலத்துடன் நடைபெறும் போராட்டம்!

**“இதோ, ஜாதிஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும்.” —எரேமியா 25:32.**

சீக்கிரத்தில் பொறுக்கமுடியாத துயர சம்பவங்கள் நாடுகளுக்கு மத்தியில் எழும்பும். இயேசு மீண்டும் வரும்வரை அத்தகைய துயர சம்பவங்கள் தொடரும். முன் ஒருபோதும் இல்லாத அளவிற்கு நாம் நெருங்கி வரவேண்டியது அவசியம். அனைத்தையும் ஆளுகைசெய்கின்ற— பரலோகத்தில் தமது சிங்காசனத்தை ஆயத்தஞ்செய்திருக்கிற அவரை சேவிக்கவேண்டும். தேவன் தமது மக்களைக் கைவிட்டுவிடவில்லை. அவரை விட்டுவிடாமல் இருப்பதில்தான் நமது பெலன் இருக்கிறது.

உலகில் தேவனுடைய தண்டனைகள் காணப்படுகின்றன. யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளும், நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் ஏற்படும் அழிவுகளும் உலகத்தின் முடிவுவரை அதிகரிக்கப்போகின்ற அந்த இக்கட்டுக்காலம் வெகு அருகாமையில் மிகவும் சமீபமாக வந்திருக்கிறது என்பதைத் தெளிவாக அறியலாம். இழப்பதற்கு இனி நேரமில்லை. யுத்த ஆவியினால் உலகம் கிளர்ச்சியடைந்திருக்கிறது. தானி. 11–ம் அதிகாரத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் ஏறக்குறைய அதின் இறுதி நிறைவேறுதலை எட்டிவிட்டன. நாம் இப்பொழுது எதிர்பார்க்காத அளவிற்கு நாடுகளிடையே பூசல்களும், மோதல்களும் மிக உச்சக்கட்ட அளவிலே உண்டாகும். தற்காலத்தில் இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிற அனைவரையும் திணறடிக்கக்கூடிய அளவிற்கு கவனத்தைத் தூண்டுகிற காலமாக இருக்கிறது. ஆளுநர்களும் மற்றும் அரசியல் வல்லுநர்களும் பெரும் பதவிகளிலும் பொறுப்பிலும் அதிகாரத்திலும் இருப்பவர்களும் அனைத்து வகுப்பைச் சேர்ந்த சிந்தனையாளர்களான ஆண்களும் பெண்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவங்களின்மீது

தங்களது கவனத்தைப் பதித்துள்ளனர். நாடுகளுக்கு இடையே நிலவுகின்ற இறுக்கமான—அமைதியற்ற உறவுகளை விழிப்போடு கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். பூமி சார்ந்த ஒவ்வொரு மூலப்பொருளும் எவ்வாறு கடுமையாக ஆட்கொள்ளப்படுகிறது என்பதை உற்று நோக்கிக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த உலகத்திலே ஏதோ தெளிவாக முடிவுகட்டக்கூடிய மாபெரும் காரியம் ஒன்று ஏற்படப்போகிறது என்பதும், இந்த உலகம் மிகப்பெரிய நெருக்கடியின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

தேவன் நமக்கு அமைதியான ஒரு இடைவெளி நேரத்தை, மிகவும் கிருபையாகக் கொடுத்திருக்கிறார். அறியாமையில் அழிந்துகொண்டிருக்கும் மக்களுக்காக தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்ற ஒவ்வொரு சக்தியும் இப்பொழுது பயன்படுத்தப்படவேண்டும். அதில் எந்தத் தாமதமும் இருக்கக்கூடாது. பூமியில் இருளான பகுதிகளில் சத்தியம் கூறியறிவிக்கப்படவேண்டும். ஒரு மாபெரும் வேலை செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தை அறிந்தவரிடத்தில் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த பூமியின் வரலாற்றில் கடைசிக் காட்சிகளிலே, யுத்தம் குமுறி வெடிக்கும். வாதைகள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் ஏற்படும். ஆழத்தின் தண்ணீர்கள் எல்லைகளைக்கடந்து பொங்கி வழியும். நெருப்பினாலும், வெள்ளத்தினாலும், சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்படும். ஆண்டவர் அவரை நேசிப்பவர்களுக்காக ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கிற அந்த மாளிகைகளுக்குச்செல்ல நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கவேண்டும். இந்த பூமியில் போராட்டத்திற்கு ஒரு ஓய்வு இருக்கிறது. ★

ஜுன் 16

# தொல்லைகள் நிறைந்த காலங்கள் நம்மீது வந்திருக்கின்றன!

**“இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.” —வெளிப்படுத்தல் 7:1.**

மகா வல்லமையுள்ள நான்கு தூதர்கள் பூமியின் நான்கு காற்றுகளையும் இன்னமும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். பயங்கரமான அழிவு முழுமையாக வராதபடி தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு கொடிய யுத்தத்திற்காக இந்தக் காற்றுகள் நாடுகளை கிளர்ந்தெழச்செய்யும் இச்சமயத்தில், நான்கு காற்றுகளையும் தூதர்கள் பிடித்துக்கொண்டு, தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்களது நெற்றிகளிலே முத்திரையிடப்படும் வரைக்கும், சாத்தானின் பயங்கர வல்லமையின் சீற்றம் செயலில் காட்டப்பட்டுவிடாதபடிக்கு தடுத்து நிறுத்திவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய தண்டனைகள் பூமியின்மீது ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆண்டவரின் வருகையின் நாள் அருகில் வந்துவிட்டது என்பதற்கான ஆதாரத்தைக் காலங்களின் அடையாளங்கள் காட்டுகின்றன. எதிர்காலத்திலே மிகவும் கொடிய போராட்டம் ஒன்றிருக்கிறது என்பதை நாளிதழ்களில் நிறைந்து காணப்படும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. துணிகரமான கொள்ளைகள் அடிக்கடி நடைபெறுகின்றன. வேலை நிறுத்தங்கள் சர்வசாதாரணமாகிவிட்டன. எப்பக்கத்திலும் திருட்டும் கொலையும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பிசாசுபிடித்த மனிதர்கள் ஆண்கள், பெண்கள், சிறுபிள்ளைகள் ஆகியோரது உயிர்களைப் பறித்துக்கொண்டிருக்கின்றனர். இவையனைத்தும் ஆண்டவரின் வருகை மிகவும் சமீபம் என்று வலியுறுத்திக்கூறுகின்றன.

தடுத்துநிறுத்துகின்ற தேவ ஆவியானவர் இப்பொழுதே உலகத்திலிருந்து பிரிந்துசென்றுகொண்டிருக்கிறார். நிலத்திலும், சமுத்திரத்திலும், சூறாவளி, புயல், கொந்தளிப்பு பேரழிவுகள் ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக வந்து தாக்குகின்றன. நம்மைச் சுற்றிலும் நிறைந்து காணப்படும் அடையாளங்கள் மனுஷகுமாரன் வெகு சீக்கிரத்தில் வரப்போகிறார் என்ற செய்தியைச் சொல்லுகின்றன.... ஆனால் இந்த உண்மையான காரணத்தை விட்டுவிட்டு, வேறு ஏதாவது ஒரு காரணம் கற்பித்துக் கூறப்படுகிறது. உலகத்தில் துக்கம் காணப்படுகின்ற காலம் நம்மீது நேராக வந்துகொண்டிருக்கிறது. எந்த மானிட மருந்தும் அதை சுகமாக்க முடியாது. கடைசி மாபெரும் அழிவு இந்த உலகத்தின்மீது வரு முன்னதாக மனிதரின் மகத்துவத்தைப் பெருமைப்படுத்திப் பேசுகின்ற நினைவுச்சின்னங்கள் உடைந்து தரைமட்டமாகும். மாபெரும் வெளிச்சம் கிடைத்தபோதிலும், தொடர்ந்து பாவத்திலே இருந்தவர்கள் மீது தேவனின் பழிவாங்குதலின் தண்டனைகள் விழும். நெருப்பினால் பாதிக்கப்படாது என்று சொல்லப்படும் பெரும் மதிப்புள்ள கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் பழிக்குப்பழி வாங்கும் தேவதண்டனையின் நெருப்பினால் சோதோம் அழிந்ததுபோல, இத்தகைய பெருமைக்கு எடுத்துக்காட்டாக நிற்கும் கட்டிடங்கள் சாம்பலாகும். பெரும் விலைமதிப்புள்ள கப்பல்கள் சீற்றமுள்ள அலைகளை எதிர்த்து வல்லமைமிக்க சமுத்திரத்தோடு போராடிக்கொண்டிருக்கிறதை நான் கண்டேன். அவைகளிலுள்ள தங்கம், வெள்ளி ஆகிய அனைத்துப் பொக்கிஷங்களோடும் மானிட பயணிகளோடும் ஒருதண்ணீர் கல்லறைக்குள் அமிழ்ந்தன. ஆனால் இத்தகைய பரபரப்பின் அமளிகள் ஒவ்வொரு இடத்திலுமுள்ள குழப்பம் ஆகியவைகளுக்கு மத்தியிலே உலகத்திலே தேவனுக்காக செய்யப்படவேண்டிய வேலை ஒன்று உண்டு. ★

# தேவனுடைய மக்களே அழிவுகளுக்குக் காரணமென்று குற்றஞ்சாட்டப்படல்!

**"ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்." —வெளிப்படுத்தல் 12:12.**

அனைத்து மனிதர்களும் தேவனைவிட்டு தூரந்தூரமாக விலகிச்செல்கின்றனர். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மீது வல்லமை பெற்றுக்கொள்ளத்தக்கதாக சாத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறான். சாத்தான் மனிதர் மத்தியிலே அழிவை சுழற்றி வீசுகிறான். சமுத்திரத்திலும் தரையிலும் பேரிடர்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. நெருப்பாலும் வெள்ளத்தாலும் சொத்துக்களும் உயிர்களும் சேதமடைகின்றன. சாத்தான் தான் நிலைநிறுத்தியுள்ள விக்கிரகத்திற்கு தலைவணங்க மறுக்கிறவர்கள்மீது இந்தக் குற்றச்சாட்டைக் கொண்டுவரத் தீர்மானிக்கிறான். இந்த இக்கட்டிற்கு காரணம் ஏழாம் நாள் வருகை சபையினரே என்று அவனது பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். "இந்த மக்கள் சட்டத்தை மதிக்காமல் எதிர்த்து நிற்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமையின் தெய்வீகத்த தன்மையை அவமதித்துப்போட்டார்கள். இவர்கள் இந்த ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்திற்கு கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்தப்படுவார்களானால், இத்தகைய பயங்கரமான தண்டனைகள் வருவது நின்றுபோகும்" என்று கூறுவார்கள்.

பேரிடர்கள் ஏற்படும், மிகவும் பயங்கரமான—எதிர்பாராத அழிவுகள் ஏற்படும். இந்த அழிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும். தேவன் கொடுத்த எச்சரிப்புகளுக்குச் செவிசாய்ப்பார்களானால்—சபைகள் மனந்திரும்புமானால்—மீண்டும் தங்களது வைராக்கியமான நிலைக்குத் திரும்புவார்களானால், மற்ற பட்டணங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அழியாமல்

காக்கப்படும். ஆனால் வஞ்சிக்கப்பட்ட மனிதர் தொடர்ந்து தேவனுடைய பிரமாணத்தை அசட்டைபண்ணி, பொய்யான காரியங்களை மக்களுக்குமுன் வைப்பார்களானால், அவர்களது உணர்வுகள் விழிப்படையத்தக்கதாக, பேரிடர்களை அனுபவிக்கத்தக்கதாக ஆண்டவர் அனுமதிக்கிறார்.

தண்டனைகள் அந்த மக்களுடைய துன்மார்க்கத்திற்குத் தக்கபடியாகவும், அவர்களுக்கு இதுவரை எவ்வளவு சத்திய வெளிச்சம் கிடைத்திருக்கிறது என்பதற்குத் தக்கதாகவும் கொடுக்கப்படும்.

நடைபெறும் சம்பவங்களுக்கு சாத்தான் தனது விவர விளக்கங்களைக் கொடுக்கிறான். அவனுடன் இருப்பதால், சனிக்கிழமையை ஆசரிப்பவர்கள், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பை மீறியதால்தான் நாட்டில் இடுக்கண்கள் உண்டாகியிருக்கின்றன என்று நினைக்கிறார்கள். தேவனுடைய கோபாத்தைத் தணித்து, சமாதானப்படுத்துவதற்காக, செல்வாக்குள்ள இந்த மனிதர்கள் ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக, சட்டங்களை இயற்றுகிறார்கள். இந்தப் பொய்யான ஓய்வுநாளை உயர்த்தி, மேலும் உயர்த்தி, ஞாயிறு சட்டத்திற்கு அதாவது இந்தப் போலியான ஓய்வுநாளிற்குக் கீழ்ப்படிதலைக் கட்டாயப்படுத்தி, இவ்வாறு தாங்கள் தேவனுக்குச் சேவை செய்கிறதாக நினைக்கிறார்கள். உண்மையான ஓய்வுநாளை ஆசரித்து, தேவனைக் கனம்பண்ணுகிறவர்கள் தேவனுக்கு விசுவாசமானவர்களாக இருக்கவில்லை என்று எண்ணப்படுகிறார்கள். உண்மையில் அவர்களை இவ்வாறு மதிப்பீடு செய்கிறவர்கள்தான் தேவனுக்கு விசுவாசமற்றவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் ஏதேனில் ஆரம்பமாகிய இந்த ஓய்வுநாளை அவர்கள் தங்களது காலின்கீழ்போட்டு மிதித்துக்கொண்டிருக்கிறார்கள். ★

# ஓய்வுநாளை ஆசரிப்பதில் கவனம் தேவை!

"ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்." —மத்தேயு 10:16.

மக்களின் பழக்கவழக்கங்கள் தேவனுடைய பிரமாணத்தோடு முரண்படாவிட்டால், நீங்கள் அவைகளோடு இசைந்துபோகலாம். ஊழியர்கள் இதைச் செய்யத் தவறுவார்களானால், அவர்கள் தங்களது சொந்த ஊழியத்தையும் தடைசெய்து, யாருக்காகச் செய்கிறார்களோ, அவர்கள் வழியிலும் முட்டுக்கட்டை போட்டு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதபடி தடைசெய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் இறைப்பணியாளர்களுக்கு மிகச் சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கிறது. அந்நாளில் ஞாயிறு பள்ளிகள் வைத்து எளிய முறையில் மக்களண்டை வந்து, பாவிகளுக்காக இயேசு கொண்டிருக்கும் அன்பைப்பற்றிக் கூறி, அவர்களுக்கு வேத வாக்கியங்களைக் கற்றுக்கொடுக்கலாம்.

இப்பொழுது ஞாயிறு ஆசரிப்பு ஒரு பரீட்சையாக இல்லை. நேரம் வரும், அப்பொழுது மக்கள் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்வதைத் தடுப்பதுமட்டுமல்ல, ஓய்வுநாளில் அதாவது சனிக்கிழமையில், வேலைசெய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்த முயற்சிப்பார்கள். மேலும், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பிற்கு சம்மதியுங்கள், அல்லது உங்களது சுதந்திரத்தையும் உயிரையும் இழக்கவேண்டுமென்று கூறுவார்கள். ஆனால் இதற்கான வேளை இன்னும் வரவில்லை. ஏனெனில் மக்களுக்கு முன்பாக சாட்சியான சத்தியம் முழுமையாக வைக்கப்படவேண்டும்.

தேவனுடைய ஊழியக்காரர்கள் அமைதியாக ஊழியஞ்செய்யச் செல்லவேண்டும். வேதாகமத்தின் மகத்துவமான- அருமையான சத்தியங்களைப் பிரசங்கிக்கவேண்டும். சிலுவையில் அறையப்பட்ட

கிறிஸ்துவை—அவரது அன்பை—அவரது எல்லையற்ற தியாகத்தைப்பற்றிக் கூறவேண்டும். தேவனுடைய பிரமாணம் நிலையானது, மாற்றப்பட முடியாதது, நித்தியமானது. அந்தக் காரணங்களால்தான் கிறிஸ்து மரிக்கவேண்டியதாயிற்று என்று கூறவேண்டும். ஓய்வு நாளானது ஒரு தெளிவான முறையிலே கற்றுக்கொடுக்கப்படவேண்டும். அந்த ஞாயிறு என்ற விக்கிரகம்பற்றிய நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்கிறீர்கள் என்பதைக்குறித்து மிகவும் கவனமாகச் செயல்படுங்கள். ஞானமுள்ளவர்களுக்கு ஒரு வார்த்தையே போதுமானது. இதைக்குறித்த வெளிச்சம் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்யாமல் இருத்தல் என்ற காரியம் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுதல் என்று கருதப்படாது. எங்கு இந்தக் காரியம் நமது ஊழியத்தின் காரியங்களை முன்னேற்றுவிக்குமோ, அங்கு இது செய்யப்பட வேண்டும். ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்யவேண்டுமென்று அன்றாடப் பழக்கத்தினின்று நாம் விலகிச் செல்லக்கூடாது....

ஓய்வுநாளைப்பற்றிய வெளிச்சத்தைக் கண்டு, கேட்டு தேவனுடைய பரிசுத்த நாளைக் கைக்கொள்ளவேண்டுமென்று சத்தியத்திற்கு தங்களது பங்கைத் தெரிந்துகொள்பவருக்கு பிரச்சனை உண்டாகும். அவர்களுக்கு எதிராக முயற்சிகள் எடுக்கப்பட்டு, தேவனுடைய பிரமாணத்தை மீறத்தக்கதாக ஆண்களும் பெண்களும் கட்டாயப்படுத்தப்படுவார்கள். இங்கு தேவனுடைய பிரமாணத்தை மீறமாட்டோம் என்பதில் உறுதியாக நிற்கவேண்டும். எதிர்ப்பும் உபத்திரவமும் தீர்மானமான முறையில் வைக்கப்படுமானால் கிறிஸ்துவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள் (மத். 10:23) என்று கிறிஸ்து சொன்ன வார்த்தைகளை அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். ★

ஜுன் 19

# ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஊழியம் செய்யவேண்டும்!

**“சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.”**

**–2 தீமோத்தேயு 4:2.**

ஞாயிறு சட்டங்களை எதிர்த்து நிற்பது, அதை நடைமுறைப் படுத்த முயற்சிக்கின்ற மார்க்க சம்பந்தமான விடாப்பிடியான கொள்கை உடையோரை, தாங்கள் கொடுக்கும் உபத்திரவத்திலே மேலும் அதிகமாகப் பலப்படுத்தும். சட்டத்தை மீறுகிறவர்கள் என்று அழைக்கப்படுவதற்கு எந்த ஒரு வாய்ப்பையும் கொடுக்காதீர்கள். தேவனுக்கும் மனிதனுக்கும் பயப்படாத மனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் விடப்படுவார்களானால், அந்தக் கட்டுப்படுத்துதல் அதின் புதுமையை சீக்கிரத்தில் இழந்துவிடும். ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பின் காரியத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பது தங்களுக்கு வசதியானதாகவோ அல்லது ஒத்திருப்பதாகவோ இல்லை என்பதை அவர்கள் காண்பார்கள். உங்களது வேதாகமங்களைக் கரங்களில் ஏந்தியவர்களாக, உங்களது இறைப்பணியை நேராகத் தொடர்ந்து செய்யுங்கள். சத்துரு தனது இலக்கைத்தானே மிகவும் மோசமாக்கிப்போட்டதைக் கண்டுகொள்வான். மற்றவர்களை புண்படுத்தக்கூடிய வேலையைச் செய்யும் காரியத்தினின்று விலகி, அதே சமயத்தில், மேன்மையான— முக்கியத்துவம் வாய்ந்து வேலையைச் செய்துகொண்டு, சமாதானத்தைக் காத்துக்கொள்ளத்தக்கதான ஞானமுள்ள காரியத்தை அந்த நபர் தெளிவாக உணர்வதைக் காட்டுவதினால், அந்த நபர் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளமாட்டார்.

ஞாயிற்றுக்கிழமையை இறைப்பணிக்கு நாம் ஒப்படைக்கும் பொழுது ஏழாம் நாள் வருகை சபையினரை இழிவுபடுத்த நினைக்கும் கடுமையான மனப்போக்கையுடைய வெறியர்களின் கரங்களிலிருந்து சாட்டை அகற்றப்பட்டுவிடும்.

தேவனுக்காக நிறைவேற்றத்தக்கதாக பலதரப்பட்ட அதிகமான வேலை முன்னேறிச்செல்வதற்கு ஞாயிற்றுக்கிழமையைப் பயன்படுத்தலாம். அந்த நாளிலே திறந்த வெளியிடங்களிலும், வீடுகளிலும், ஜெபக்கூட்டங்களை நடத்தலாம். வீடுவீடாக மக்களைச் சந்தித்து, தேவ செய்தியைக் கொடுக்கலாம். எழுதும் திறமையுள்ளோர் அந்த நாளில் கட்டுரைகள் எழுதலாம். எப்பொழுதெல்லாம் சாத்தியமோ அப்பொழுதெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் மார்க்க சம்பந்தமான ஆராதனைகள் நடத்தப்படட்டும். மிகவும் அதிக ஆர்வத்தை எழுப்பும் கூட்டங்களாக இவைகளை நடத்துங்கள். தூய்மையான எழுப்புதல் கீதங்களைப் பாடுங்கள். மேலும், மீட்பரின் அன்பைப்பற்றி வல்லமையோடும், நிச்சயத்தோடும் பேசுங்கள். இச்சையடக்கம்பற்றிய உண்மையான—மார்க்கசம்பந்தமான அனுபவத்தைப்பற்றிப் பேசுங்கள். இவ்வாறாக, எப்படி ஊழியஞ்செய்வேண்டும் எப்படி அநேக ஆத்துமாக்களை சென்றடையவேண்டும் என்பதைப்பற்றி நீங்கள் அதிகமாகக் கற்றுக்கொள்வீர்கள்.

வாரத்தின் முதல்நாளை ஆசரிக்கவேண்டுமென்று வலியுறுத்தும் சட்டம் விழுந்துபோன கிறிஸ்தவ உலகத்தின் படைப்பாகும். ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு, போப்பு மார்க்கத்தின் குழந்தையாகும். தேவனுடைய ஓய்வின் பரிசுத்த நாளுக்கும் மேலாக, கிறிஸ்தவ உலகத்தால் உயர்த்தப்பட்டதாகும். எந்த வகையினாலும் தேவனுடைய மக்கள் அதற்கு வணக்கஞ்செலுத்தக்கூடாது. எதிர்ப்பை தவிர்க்கவேண்டுமென்று ஆண்டவர் விரும்பும்போது, எதிர்ப்பைத் துணிவுடன் சந்திப்பதினால், அவர்கள் தேவ சித்தத்தைச்செய்கிறவர்கள் என்று கருதப்படமாட்டார்கள் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அற்புதமான காட்சிகள் நமக்கு முன்பாக வெளிப்படையாகக் காட்டப்படுகின்றன. இந்தக் காலத்தில் எப்பக்கத்திலும் தீமை ஆளுகைசெய்யும். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக, தங்களது சுயசித்தத்தை ஒதுக்கி வைத்துவிட்ட இதயங்களிலும் ஜீவியங்களிலும் தேவனுடைய பிரமாணம் எழுதப்பட்ட ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த உலகம் காணத்தக்கதாக தேவனுடைய மக்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டிருப்பவர்களது ஜீவியங்களால் ஒரு உயிருள்ள சாட்சி பகரப்படவேண்டும்.★

# அமெரிக்காவில் தேவனுடைய பிரமாணம் அவமதிக்கப்படல்!

**“நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளைவந்தது; அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள்.” —சங்கீதம் 119:126.**

ஒரு காலம் வந்துகொண்டிருக்கிறது. அச்சமயத்தில் ஒரு குறிப்பிட்ட தன்மையிலே நமது நாட்டிலே(ரு.ஐ.யு) தேவனுடைய பிரமாணம் வெறுமையாக்கப்பட்டுவிடும். நமது நாட்டை ஆள்பவர்கள் சட்டசபைகளில் சட்டங்கள் இயற்றி, ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்துவார்கள். இவ்வாறாக, தேவனுடைய மக்களை மாபெரும் இன்னலுக்கு உள்ளாக்குவார்கள். மக்களுடைய மார்க்கசம்பந்தமான சிறப்பு உரிமைகளைக்குறித்த காரியத்தில் ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்தி, ஏழாம் நாளில் ஓய்வு நாளைக் கைக்கொள்கிறவர்களுக்கு விரோதமாக ஒடுக்குகின்ற வல்லமையை அனுமதித்து. மனிதரின் மனசாட்சியை கட்டிப்போடுவதற்காக, நம்முடைய நாடு (ரு.ஐ.யு) அதின் சட்டசபைக்கூட்டங்களிலே சட்டம் இயற்றும்போது, தேவனுடைய சித்தத்தின் பிரமாணம் அதின் அனைத்து உள்ளார்ந்த நோக்கங்களிலும் நாட்டிலே வெறுமையானதாக ஆக்கப்பட்டுவிடும்.

தங்களது சொந்த மனசாட்சியின் கட்டளைகளுக்கு ஏற்றபடி தொழுதுகொள்ளவும், சர்வவல்லவரின் கேடகம் அநேக ஆண்டுகளாக விரிவெல்லையாக மேலே படர்ந்து காக்கப்பட்டதும், இயேசுவின் தூய்மையான மார்க்கத்தின் சேமிப்பின் காப்பாளராக ஆதரவு கொடுத்து அமைக்கப்பட்துமான நாடு, தனது சட்டமன்ற உறுப்பினர்களால் தேவனுடைய பிரமாணத்திலே குறுக்கிட்டு மாற்றங்களை ஏற்படுத்தி, ரோமாபுரியின் மருளவிழுகைக்கு உடன்பாடு தெரிவித்து, புரொட்டாஸ்டாண்டு கொள்கைகளை ஒழித்துக்கட்டும். அப்பொழுது பாவ மனிதனின் இறுதி வேலை வெளிப்படும். புரொட்டஸ்டாண்டுகள் தங்களது முழு செல்வாக்கையும்

சக்தியையும் போப்புமார்க்கத்தின் ஆதரவிற்காகக் கொடுப்பார்கள். மேலும் ரோமாபுரியின் கேடடைந்த விசுவாசத்திற்கு ஆற்றலையும் புதிய ஜீவனையும் கொடுத்து, போலியான ஓய்வு நாளை நாட்டின் சட்டத்தின் மூலமாக நடைமுறைப்படுத்துவார்கள். மேலும் ரோமாபுரியின் கொடுமைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி, மனசாட்சியை ஒடுக்கி அடக்குவார்கள். பின்பு, அதுவே அவரது சத்தியத்தை மெய்ப்பித்துக் காட்டத்தக்கதாக, மகா வல்லமையோடு தேவன் செயல்படுவதற்கான நேரமாக அமையும்.

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்" (வெளி. 18:1,2,4,5) என்று தீர்க்கதரிசி கூறுகிறார். அவளுடைய பாவங்கள் எப்பொழுது வானபரியந்தம் எட்டுகிறது? தேவனுடைய பிரமாணம் சட்டத்தின் மூலம் வெறுமையானதாக ஆக்கப்படும்போது அவ்வாறு நடக்கும். தேவனுடைய மக்களின் இக்கட்டு நேரம் இந்த வானத்திற்கும் பூமிக்கும் யார் ஆளுநர் என்பதைக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாகிறது. அடிமட்டத்திலிருக்கும் மூலக்கூறுகளை ஒரு சாத்தானிய வல்லமை கிளறிவிடும்போது, சத்தியத் தூது உலகம் முழுவதும் கூறியறிவிக்கப்படத்தக்கதாக தேவன் தமது தக்களுக்கு வெளிச்சத்தையும் வல்லமையையும் அனுப்புவார்.★

# பெரிய பட்டணங்களைவிட்டு வெளியேறுவதற்கான அடையாளம்!

**“மேலும், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.” —மத்தேயு 24:15,16.**

ஆரம்பகால சீடர்களைப்போல, பாழான—தனிமையான இடங்களில் ஒரு அடைக்கலத்தை நாம் கட்டாயமாக நாடித் தேடுவதற்கான காலம் வெகுதூரத்தில் இல்லை. யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு ரோமப்படைகளால் எருசலேம் முற்றுகையிடப் படுவது ஓடிப்போவதற்கான ஒரு அடையாளமாக இருந்தது. போப்புமார்க்கததின் ஓய்வுநாளை அமலுக்குக் கொண்டுவர இயற்றப்படும் சட்டத்திலே, நமது நாடு (USA) தானாக அதிகாரத்தை எடுத்துக்கொள்வது, நம் அனைவருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாக இருக்கும். அதுவே, நாம் பெரிய பட்டணங்களைவிட்டு வெளியேறுவதற்கான அடையாளமு மாகும். பின்னர் சிறிய பட்டணங்களைவிட்டுச் செல்லவும், அதன்பின்னர் மலைகளுக்கு மத்தியில் தனியாக அமைந்திருக்கும் ஓய்வுபெற்றோர் இல்லங்களுக்கும் செல்லவேண்டும்.

பட்டணங்களை மையமாக வைத்து நமது வேலைகள் ஆரம்பிக்கப்படக்கூடாது என்ற காரியத்தில் ஒரு விசேஷித்த வெளிச்சம் பல ஆண்டுகளாக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணங்களில் நிறைந்து காணப்படும் கலவரங்கள் குழப்பங்கள் தொழிற்சங்கங்கள், வேலை நிறுத்தங்கள் ஆகியவைகளால் கொண்டுவரப்படும் நிலைமைகள் நமது வேலைக்கு மாபெரும் தடங்கலாக இருக்கும் என்பதை நிரூபிக்கும். பலவிதமான தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களை சிறு தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிடவேண்டுமென்று மனிதர் முயற்சிக்கிறார்கள். இது தேவனுடைய திட்டமல்ல. இது வேறு

ஒரு வல்லமையின் திட்டமாக இருக்கிறது. இதை நாம் எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவனுடைய வார்த்தை நிறைவேறிக் கொண்டிருக்கிறது. துன்மார்க்கர் தாங்கள் எரிக்கப்படுவதற்கு ஆயத்தமாக, தங்களைக் கட்டுகளாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த தொழிற்சங்கங்களும் உலகின் நேச கூட்டுறவு அமைப்புகளும் ஒரு கண்ணியாக இருக்கிறது. சகோதரரே, அவர்களைவிட்டு விலகியிருங்கள், அவர்களைவிட்டு வெகுதூரத்திலே இருங்கள். அவர்களோடு எதையும் வைத்துக்கொள்ளவேண்டாம். இத்தகைய தொழிற்சங்கங்களாலும் நேச கூட்டுறவு அமைப்புகளாலும் நமது நிறுவனங்கள் பட்டணங்களில் வேலைசெய்வது வெகு சீக்கிரத்தில் மிகக் கடினமாகிவிடும். பட்டணத்தைவிட்டு வெளியேறி, நாட்டுப்புறங்களில் வசிக்கத்தக்கதாக, நமது மக்களுக்குக் கற்றுக்கொடுங்கள். தங்களுக்காகவும் தங்களது பிள்ளைகளுக்காகவும் அங்கு அவர்கள் ஒரு சிறு துண்டு நிலத்தை வாங்கி வீட்டைக்கட்டிக் கொள்ளலாம்.

இதற்கு முன்பாக கலகங்களும் குழப்பங்களும் பட்டணங்களில் நிறைந்துவிடும். அதைவிட்டு வெளியேற விரும்புபவர்கள் வெளியேற முடியாது. தேவனுடைய நாமத்தை கனப்படுத்தாதவர்களோடு, நாம் நெருங்கிய தொடர்புவைத்துக்கொள்ளத்தக்கதான கட்டாய நிலை ஏற்படும் இடங்களில், நாம் வீடுகட்டி வசிக்கக்கூடாது.... ஞாயிறு ஆசரிப்பைப்பற்றிய காரியத்தில் ஒரு நெருக்கடி சீக்கிரத்தில் வரவிருக்கிறது....

ஞாயிறு ஆசரிப்பு சட்டம் தனது பொய்யான கோரிக்கைகளில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆண்டவரின் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிப்பவர்களுக்கு இந்தக காரியம் ஒடுக்கப்படுத்தல் என்ற நிலையில் வெளிப்படும்.... தேவனுடைய முன்னறிவின் திட்டத்தால் பட்டணங்களை விட்டு வெகுதூரத்தில் தங்குமிடம் பெற்றுக்கொள்ளக்கூடுமானால் அதைச்செய்வதற்காக ஆண்டவர் நமக்குத் துணை நிற்பார். துன்பமான காலம் நமக்கு முன்பாக இருக்கிறது.★

# உலகமுடிவின் கடைசிநாட்களில் ஆகாரம் மற்றும் நிலங்கள்பற்றிய ஆலோசனைகள்...!

**“ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.” —மத்தேயு 6:34.**

இக்கட்டுக்காலத்தில் நமது உலகியல் சார்ந்த தேவைகளுக்காக ஏதாவது முன்னேற்பாடு செய்துவைப்பது, வேதாகமத்திற்கு முரண்பாடானது என்று மீண்டும் மீண்டும் ஆண்டவர் தரிசனத்தில் எனக்கு காட்டியிருக்கிறார். பரிசுத்தவான்கள் தங்களது உணவிற்காக பொருட்களைச் சேர்த்துவைப்பார்களானால் அல்லது வயல்களில் இருக்குமானால் இக்கட்டுக்காலத்திலே யுத்தமும், பஞ்சமும், கொள்ளைநோயும் நாட்டில் பெருகும்போது, வன்முறையாளர்களின் கரங்களல் அவைகள் பறித்துக்கொள்ளப்பட்டுவிடும். அந்நியர்கள் வந்து அவர்களது வயல்களை அறுவடைசெய்வார்கள். அப்பொழுது தான் நாம் தேவனையே முற்றிலுமாக உறுதியாக நம்பவேண்டிய நேரமாகும். அவர் நம்மை போஷிப்பார். அச்சமயத்தில் நமது அப்பமும் தண்ணீரும் நிச்சயமாகக் கிடைக்கும். எதுவும் குறைவுபடாது. பசியினால் வருந்தவும் மாட்டோம். தமது பிள்ளைகளில் சிலர் ஆகாரப்பொருட்களின் விலைவாசி உயர்வதைக் கண்டு பயந்து இக்கட்டுக்காலத்திற்காக ஆகாரப் பொருட்களை வாங்கிச் சேர்த்துவைத்ததை ஆண்டவர் எனக்குக் காட்டினார். பின்னர், அந்த ஆகாரப்பொருட்களுக்கான தேவை ஏற்படும்போது, அதைச்சென்று பார்த்தார்கள். அவை பூச்சி, புழுபோன்ற உயிரினங்களால் நிறைந்து, பயன்படுத்துவதற்குத் தகுதியற்றதாக இருந்தது.

இக்கட்டுக்காலத்தில் பரிசுத்தவான்களுக்கு வீடுகளும் நிலங்களும் பயனற்றவைகளாயிருக்கும். வெறியுடன் கொந்தளிக்கும்

கூட்டங்களுக்குமுன்பாக அவர்கள் தப்பியோடவேண்டிதிருக்கும். அச்சமயத்தில் நிகழ்கால சத்தியத்தின் ஊழியத்தை முன்னேற்று விப்பதற்காக, அவர்களது உடைமைகளை விற்பனை செய்யமுடியாது....

யாராவது தங்களது சொத்துக்களைப் பாசத்தோடு பற்றிப்பிடித்தவர்களாக, அவைகளைக்குறித்து தாங்கள் செய்யவேண்டிய கடமை இன்னதென்று ஆண்டவரிடத்தில் வினவாமல் இருப்பார்களானால், அவரும் அக்கடமையை அவர்களுக்கு தெரியப்படுத்தமாட்டார். தங்களது சொத்தை வைத்திருக்கும்படி அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் இக்கட்டுக்காலத்தின் நேரத்திலே அவர்களை நசுக்கிப்போடத்தக்கதான அளவிற்கு அவைகள் அவர்களுக்கு ஒரு மலையைப்போன்று காணப்படும். அவர்கள் அதை விற்க முயற்ச்சி செய்வார்கள். ஆனால் அவர்களால் விற்கமுடியாது.... ஆனால் அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பினார்களானால் எப்பொழுது விற்கவேண்டும், எவ்வளவு சொத்துக்களை விற்கவேண்டுமென்று தேவையான நேரத்தில் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பார்.

சாத்தானோடு நடைபெறுகின்ற இந்த மாபெரும் எதிர்வாதத்தின் இறுதிப் போராட்டத்திலே, தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் இப்பூமியிலுள்ள அனைத்து ஆதரவும் துண்டிக்கப்பட்டுப்போயிற்று என்பதைக் காண்பார்கள். பூமியின் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய பிரமாணத்தை மீறுவதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. வாங்கவும் விற்கவும் கூடாதபடி தடைவிதிக்கப்படும். இறுதியிலே அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்படும்.... ஆனால் கீழ்ப்படிபவர்களுக்கு: “அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்”– என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகின்றது. இந்த வாக்குத்தத்தத்தினாலே தேவனுடைய பிள்ளைகள் உயிரோடிருப்பார்கள்– ஏசாயா 33:16.★

# தொழிற்சங்கங்களும் அறக்கட்டளைகளும்!

**“இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.” —யாக்கோபு 5:7.**

செயல்புரியும் நிறுவனங்களில் ஒன்றான தொழிற்சங்கம் உலகம் தோன்றியதுமுதல் இதுவரை ஏற்பட்டிராத அளவிற்கு அத்தகைய ஒரு இக்கட்டுக்காலத்தை இந்த பூமியின் மீது கொண்டுவரும்.

நமது அனைத்துப் பெரிய பட்டணங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த தொழிற்சங்கங்களாலும் நேசக் கூட்டுறவு அமைப்புகளாலும் மனிதர்கள் கட்டுகளாகக் கட்டப்படுதல் (இறுதியாக அக்கினியில் எரிக்கப்படுவதற்காக) நடைபெறும். மனிதர் மற்ற ஆண்களையும் பெண்களையும் ஆளுகைசெய்து, அவர்களிடம் அதிக அதிகாரத்துடனே வேண்டுதல் விடுப்பார்கள். இத்தகைய தொழிற்சங்கங்களோடு இணைய மறுப்பவர்களது உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும்.

எதிர்காலத்தில் வரப்போகின்ற சம்பவங்களுக்காக ஆயத்தமாவதே தேவனுடைய மக்களின் வேலையாகும். திணறடிக்கும் வேகத்தோடு இச்சம்பவங்கள் சீக்கிரத்தில் வரவிருக்கின்றன. உலகிலே ஏகபோகத் தனியுரிமைபெற்ற அமைப்புகள் ஏற்படும். மனிதர் தங்களை தொழிற்சங்கங்களில் இறுகப் பிணைத்துக்கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் அவர்களை எதிராளியாகிய சாத்தானின் மடிப்புகளில் பொதிந்துவைத்துவிடும். குறிப்பிட்ட சில வகைப்பட்ட தொழில்களிலே அனைத்துச் செல்வ ஆதாரங்களையும் கைப்பற்றிக்கொள்ளத்தக்கதாக சில மனிதர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். தொழிற்சங்கங்கள் உருவாக்கப்படும். இந்த தொழிற்சங்கங்களிலே சேர மறுப்பவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டு வைக்கப்படும்.

இந்த சங்கங்கள் கடைசி நாட்களுக்கான ஒரு அடையாளமாகும். எரிக்கப்படுவதற்கு ஆயத்தமாக மனிதர் தங்களைக் கட்டுகளாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சபை அங்கத்தினர்களாக இருக்கலாம். ஆனால் இந்தக் கூட்டுறவுகளில் உரிமையுடைய— தொடர்புடையவர்களாக இருப்பார்களானால் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது சாத்தியம் ஆகாது. ஏனென்றால் இத்தகைய சங்கங்களில் தொடர்பு வைத்திருப்பவர்கள் பத்துக்கற்பனைகள் அனைத்தையுமே புறக்கணிக்கிறார்கள் என்பதே பொருளாகும்.

“அன்பு கூருவாயாக...” இத்தகைய கூட்டுறவுகளை அமைத்துக்கொண்டு, அவர்களுக்கு நியாயப்படி கிடைக்கவேண்டிய நன்மைகளைத் திருடி, சில நிபந்தனைகளுக்கு அடியில் தவிர மற்றபடி அவர்கள் வாங்குவதையும் விற்பதையும் தடுத்துப்போடுகிற போது, மேற்கூறப்பட்ட வார்த்தைகளுக்கு மனிதர் எப்படி கீழ்ப்படிய முடியும்?

தேவனுடைய பிள்ளைகள் என்று கூறி உரிமைபாராட்டுகிற வர்கள் அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களுடனோ அல்லது அமைக்கப்படப்போகிறவைகளுடனோ எந்த வகையிலும் இணைத்துக்கொள்ளக்கூடாது. இதை ஆண்டவர் தடுக்கிறார். தீர்க்கதரிசனங்களைப் படிக்கிறவர்கள் தங்களுக்கு முன்னாக என்ன இருக்கிறது என்பதைப் பார்த்து, புரிந்துகொள்ளமுடியாதா?

முக்கியமான காரியங்கள் சீக்கிரத்தில் சந்திக்கப்பட வேண்டியதிருக்கின்றன. நாம் இயேசுவை காண்பதற்காகவும், அவரது பரிசுத்த ஆவியினால் உற்சாகமடைவதற்காகவும், பாறையின் பிளவிலே மறைத்துவைக்கப்படவேண்டுமென்றும் விரும்புகிறோம். நமக்கு இனி இழக்க நேரமில்லை. ஒரு கணமுங்கூட இல்லை. ★

ஜூன் 24

# வாங்குவதும் விற்பதும் தடைசெய்யப்படல்!

**“மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.” —வெளிப்படுத்தல் 13:17.**

நாம் எந்த விலையிலும் எதையும் விற்கமுடியாத காலம் வந்துகொண்டிருக்கிறது. மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்பவர்களைத்தவிர மற்றவர்கள் வாங்கவும் விற்கவும் தடைசெய்யக்கூடிய சட்டம் சீக்கிரத்தில் இயற்றப்படும்.

சாத்தானோடு நடைபெறவிருக்கும்—இறுதியான மாபெரும் போராட்டத்தில் தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் தங்களுக்கு பூமிக்குரிய அனைத்து ஆதரவும் துண்டிக்கப்பட்டுவிட்டதைக் காண்பார்கள். உலகின் வல்லமைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரது பிரமாணத்தை மீறுவதற்கு மறுப்பவர்கள் வாங்கவும் விற்கவுங் கூடாதபடிக்குத் தடைசெய்யப்படுவார்கள்.

மார்க்கசம்பந்தமான வல்லமைகள் தங்களது பதவியின் மூலமாக பரலோகத்தோடு இணைந்தவர்களாக ஆட்டுக்குட்டியின் குணங்கள் தங்களுக்கு இருப்பதாகக் கூறிக்கொண்டு தங்களது செயல்களின்மூலமாக வலுசர்ப்பத்தின் இதயத்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் சாத்தானால் தூண்டப்பட்டு அடக்கியாளப் படுவாார்கள். தேவனுடைய மக்கள் ஏழாம்நாளை பரிசுத்தமாக ஆசரிப்பதினால் உபத்திரவத்தை அனுபவிப்பார்கள்.

கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் வாங்கவும் விற்கவும் முடியாத காலம் சீக்கிரம் வந்துகொண்டிருக்கிறது. புதைத்து வைக்கப்பட்டிருக்கும் உங்களது தாலந்துகளைத் தோண்டியெடுக்க விரைந்து முயற்சிசெய்யுங்கள். உங்களிடத்திலே ஆண்டவர் பணத்தை ஒப்படைத்திருப்பாரானால், பொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பிற்கு உண்மையாக

இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுங்கள். போடப்பட்டிருக்கும் முடிச்சை அவிழ்த்து, தாலந்துகளை நாணயப்பரிவர்த்தனை செய்வோர்களிடம் அனுப்பிவையுங்கள். கிறிஸ்து வரும்போது, அவருக்கு சொந்தமான வட்டியைப் பெற்றுக்கொள்வார். இறுதியான இக்கட்டின் நேரத்திலே இந்த ஊழியம் முடிவடையும்முன்னர், ஆயிரக்கணக்கான மக்கள் உற்சாகத்தோடு பலிபீடத்தின் மீது வைக்கப்படுவார்கள். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் வேளையிலே, ஒரு பங்கைப் பெற்றுக்கொள்வதற்கும், தேவனுடைய மகா நாளில் நிற்பதற்கும் ஆண்களும் பெண்களும் அதைத் தங்களது பாக்கியமான சிறப்புரிமையாக எண்ணுவார்கள். இப்பொழுது, உடனடியாகப் பணம் கொடுக்கப்படுவதுபோல், நூற்றுக்கணக்காகக் கொடுப்பார்கள். கிறிஸ்துவின் அன்பு, அவரது மக்கள் என்று சொல்லிக்கொள்ளகிறவர் களது இதயங்களிலே கொழுந்துவிட்டு எரியுமானால் அதே ஆவி இணைந்து வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கான அனைத்து வேலைகளுக்கும் முடிவு எவ்வளவு சீக்கிரமாக இருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்திருப்பார் களானால் ஆரம்பகால சபையின் அங்கத்தினர்களைப்போன்று தாராளமாக தங்களது உடைமைகளைத் தியாகஞ்செய்வார்கள். உலகப்பற்றுடைய மக்கள் ஐசுவரியத்தைத் தேடுவதற்காக எவ்வளவு ஊக்கமாக உழைப்பார்களோ அதைப்போன்று தேவனுடைய ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பார்கள். சாமர்த்தியமும் திறமையும் செயல்படுத்தப்படும். ஊக்கமான—தன்னலமற்ற—உழைப்பின்மூலமாக பொருள் சேகரிக்கப்படும். பொருளைப் பெற்றுக்கொள்வது அதைக் குவித்து வைப்பதற்காக அல்ல. தேவனுடைய பொக்கிஷசாலையில் கொடுப்பதற்காகவே. ★

# பட்டணத்திற்கு வெளியே தங்கியிருந்து பட்டணங்களில் ஊழியஞ்செய்தல்!

**"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**
**–2 கொரிந்தியர் 6:17.**

தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும் மக்களாக இருப்பதால், நாம் பட்டணங்களைவிட்டு கண்டிப்பாக வெளியேற வேண்டும். ஏனோக்கு செய்ததைப்போல நாம் பட்டணங்களில் வேலை செய்யவேண்டும், ஆனால் அங்கு தங்கி வாழக்கூடாது.

கூடியமட்டும் நமது நிறுவனங்கள் பட்டணத்தைவிட்டு வெளியே அமைக்கப்படவேண்டும். அவரது மக்கள் பட்டணங்களில் குடியிருக்கவேண்டுமென்பது தேவனின் சித்தமல்ல. ஏனெனில் அங்கு கலவரங்களும் குழப்பங்களுமே தொடர்ந்து காணப்படும். பட்டண அமைப்பு முழுவதுமே பரபரப்பினாலும், வேகத்தினாலும், கூச்சலினாலும் சீர்குலைந்து கிடப்பதால், அவர்களது பிள்ளைகள் அதினின்று காப்பாற்றப்படவேண்டும். தமது மக்கள் நாட்டுப்புறங்களுக்குச்சென்று நிலத்திலே குடியிருக்க வீடுகட்டி, தங்களது சொந்த பழமரங்களையும் காய்கறிகளையும் பயிர்செய்து, இயற்கையின் தொடர்பிலே நேரடியாக தேவனுடைய பணியைச் செய்யவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகின்றார். உங்களது குடும்பங்களை பட்டணத்தைவிட்டு வெளியே அழைத்துச்செல்லுங்கள் என்பதே என்னுடைய தூது.

மனிதர் கேட்டாலும் சரி அல்லது பொறுத்துக்கொண்டாலும் சரி(விருப்பமின்றி), சத்தியம் சொல்லப்படவேண்டும். பட்டணங்கள் சோதனைகளால் நிறைந்திருக்கின்றன. இத்தகைய தூய்மைக் கேட்டினின்று எவ்வளவு தூரத்திற்கு நம்முடைய வாலிபர்களைக்

கொண்டுசெல்ல முடியுமோ அத்தகைய விதத்தில் அவர்களைக் காப்பாற்ற நமது ஊழியத்தைத் திட்டஞ்செய்யவேண்டும். வெளியிடங்களில் தங்கி, பட்டணங்களில் ஊழியஞ்செய்யவேண்டும். பட்டணங்களுக்கு எச்சரிப்பு கொடுக்கப்படவேண்டாமா? ஆம், பட்டணங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களால் அல்ல, அவர்களைப்போய் சந்தித்து, பூமியின்மீது வந்துகொண்டிருக்கிற ஆபத்துக்களைக்குறித்து எச்சரிப்புக் கொடுப்பவர்களால்தான் இவ்வாறு செய்யப்படவேண்டுமென்று தேவனுடைய தூதுவர் கூறுகிறார். ஒரு நாட்டிலே அக்கிரமம் பெருகும்போது, சோதோமிலே லோத்தின் குரல்கேட்டதுபோல, போதனையும் எச்சரிப்பும் கொடுக்கும் சத்தம் எப்பொழுதும் கேட்கப்படட்டும். லோத்துமட்டும் இந்த துன்மார்க்கமான கேடுகள் நிறைந்த பட்டணத்தில் தனது குடும்பத்தை வைத்திராதிருந்தால், அவன் அவர்களை நிச்சயமாகப் பாதுகாத்திருக்கமுடியும். லோத்தும் அவனது குடும்பமும் பட்டணத்திலிருந்து சற்று தூரத்தில் வாழ்ந்திருந்தால்கூட, வெளியே சோதோமிலே செய்த காரியங்களைச் செய்திருக்கமுடியும். ஏனோக்கு தேவனோடு நடந்தான். ஒவ்வொரு விதமான துன்மார்க்கத்தாலும் கலகங்களாலும் நிறைந்த பட்டணத்தின் மத்தியிலே சோதோமில் லோத்து வாழ்ந்ததுபோல, அவன் வாழவில்லை.

ஏனோக்கு துன்மார்க்கர் இருக்கும் இடத்திலே வீடுகட்டிக் குடும்பம் நடத்தவில்லை.... எங்கு சூழ்நிலை எவ்வளவிற்கு அதிகமாகத் தூய்மையாக இருக்குமோ, அங்கு தன்னையும் தனது குடும்பத்தையும் வைத்துக்கொண்டான். சில சமயங்களில் உலகத்தின் குடிகள் வாழ்ந்துகொண்டிருக்கும் இடங்களுக்கு தேவன் கொடுத்த தூதைக் கொடுக்கும்படிச்சென்றான்.... அவன் தனது தூதுகளை கொடுத்தபின்னர், தனது எச்சரிப்பின் செய்தியை ஏற்றுக்கொண்ட மக்களையும், எப்பொழுதுமே தான் இளைப்பாறுமிடத்திற்கு தன்னுடன் அழைத்துச்சென்றான். ★

# உடல் வேதனையினின்று விடுதலை!

**“காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர் களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.” —மத்தேயு 10:6-8.**

இன்னல் நிறைந்த காலங்கள் நமக்குமுன்பாக இருக்கின்றன. உலகம் முழுவதும் குழப்பத்திலும் வேதனையிலும் சிக்கிக் கொண்டிருக்கும் மானிடக் குடும்பத்தின்மீது அனைத்துவிதமான வியாதிகளும் வந்துசேரும். ஆரோக்கிய விதிகளைப்பற்றிய காரியத்தில் இப்போது இருக்கின்ற இத்தகைய அறிவற்ற நிலையினால் காப்பாற்றப்படவேண்டியதாயிருக்கிற அநேக உயிர்கள் பறிக்கப்பட்டுவிடும். அதிக வேதனைகளையும் சந்திக்க வேண்டியதிருக்கும்.

மார்க்க சம்பந்தமான கெடுபிடிகள் நமது நாட்டின் சுதந்திரங்களைக் கவிழ்த்துப்போடும்போது, யார் மனசாட்சியின் சுதந்திரத்திற்காக நிற்பார்களோ, அவர்கள் சாதகமற்ற நிலையில் வைக்கப்படுவார்கள். அவர்கள் தங்களது நன்மைக்காகவாவது சந்தர்ப்பம் இருக்கும்பொழுது, வியாதிகளைப்பற்றியும் அவைகளுக்கான காரணங்கள் பற்றியும், அவைகளைத் தடுக்கும் வழிகள் பற்றியும் அவைகளை குணமாக்கும் வழிமுறைகள் பற்றியும் நல்லபடியாக அறிவைப் பெற்றுக்கொண்டவர்களாக மாறவேண்டும். அவ்வாறு செய்பவர்கள் எங்குவேண்டுமானாலும் தாங்கள் வேலைசெய்வதற்கான ஒரு பணிக்களத்தைக் கண்டுகொள்ளுவார்கள். வியாதிகளால் துன்பப்படுகிறவர்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்ற நிலையில், அநேகர் இருப்பார்கள். நம்முடைய சபையின் விசுவாசத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, சத்தியத்தை அறியாதவர்கள் மத்தியிலும் ஏராளமானவர்கள் இருப்பார்கள்.

மூன்றாம் தூதனின் தூதைக் கொடுக்கும்போது, அத்துடன் சேர்த்துச் செய்யப்படும் மருத்துவ ஊழியம் அற்புதமான பலன்களைக் கொண்டுவரவிருக்கிறது. இது ஒரு பரிசுத்தமாக்குகின்ற—இணைக்கின்ற ஊழியமாக சபையின் மாபெரும் தலைவர் தமது குழுவிலுள்ள சீடர்களை அனுப்பியதோடு இணைந்ததாக இருக்கும்.

தமது சீடர்களை ஆண்டவர் அழைத்து, "போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள் வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகி களைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசு களைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத். 10:7,8,16) என்ற கட்டளையைக் கொடுத்தார்.

மத்தேயு புத்தகத்தின் பத்தாம் அதிகாரத்தைப் படிப்பது நமக்கு நல்லது. அதிலுள்ள போதனைகள் நம்மை நமது ஊழியங்களுக்காக ஆயத்தப்படுத்தும். கிறிஸ்துவின் பணிக்காக அவரது கட்டளைகளுக்கு ஏற்றபடி ஆரம்பகால சீடர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு வழியை அவரது ஆவியானவரே ஆயத்தஞ்செய்தார். இத்தகைய சத்தியத்தைக் கொடுக்கும்பொழுது, இத்தகைய ஆசீர்வாதங்களை அவர்களது பங்காக வழங்கும்போது, அந்த மக்களுடைய இல்லங்களிலே வரவேற்பைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று உணர்ந்துகொள்ளவேண்டும். சரீரசம்பந்தமான வியாதிகளின் வேதனைகளினின்று விடுதலை கிடைக்கும்போது அதின்மூலமாக தேவன் இதயங்களைச் சென்றடைகிறார். அந்த உள்ளத்திலே சத்தியத்தின் ஒரு விதை போடப்பட்டு, தேவனால் நீர் பாய்ச்சப்படுகிறது. அந்த விதையிலே உயிர் இருக்கிறது என்பதற்கான அடையாளங்களைக் காட்டும்வரை, அதிகப் பொறுமை தேவைப்படலாம். ஆனால் இறுதியிலே அந்த விதை முளைத்தெழும்பி, நித்திய வாழ்விற்காகக் கனிகொடுக்கிறது.

தேவனுடைய வல்லமையின் நாளுக்கென்று அவர் செய்யும் ஆயத்தத்தை புரிந்துகொள்வதற்கு மனிதர்கள் எவ்வளவு மந்தமாக இருக்கிறார்கள்! ★

# ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் கொண்டுவரப்படல்!

**"...என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்." —மத்தேயு 24:9.**

ஞாயிறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் இயக்கம் மிகுந்த துணிகரத்தோடும் தீர்மானத்தோடும் செயல்படுகிறபொழுது, கற்பனைகளைக் கைக்கொள்வோர்க்கு விரோதமாக சட்டம் இயற்றப்படும். அபராதங்கள் மற்றும் சிறைவாசம் ஆகியவைகளால் பயமுறுத்தப்படுவார்கள். சிலருக்கு செல்வாக்கு மிகுந்த பதவிகள் வழங்கப்படும். மற்றவர்களுக்கு வெகுமதிகளும் சில நன்மைகளும் அவர்களது விசுவாசத்தை விட்டவிடத்தக்கதாக கவர்ச்சியான தூண்டுதல்களும் கொடுக்கப்படும். ஆனால் "தேவனுடைய வார்த்தையினின்று எங்களுடைய தவறைச் சுட்டிக்காட்டுங்கள் என்பதே அவர்களது உறுதியான பதிலாயிருக்கும்...." நீதிமன்றங்களுக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டப்படுகிறவர்கள், சத்தியத்தைப்பற்றி இதுதான் ஒரு உறுதியான கொள்கை என்று விளக்கிக் கூறுவார்கள். இந்தப் பதிலைக் கேட்கின்ற சிலர், தேவனுடைய அனைத்துப் பிரமாணங்களையும் கைக்கொள்ளத் தக்கதாக, உறுதியாக நிற்பதற்கு வழிநடத்தப்படுவார்கள். இவ்வாறு சத்தியம் அநேகமாயிரம் மக்களுக்குமுன்பாகக் கொண்டுவரப்படும். இப்படிப்பட்டவர்களுக்கு மற்றபடி வேறு எந்த வழியிலும் சத்தியத்தைப்பற்றி அறியமுடியாது.

மனசாட்சியின்படி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் கலகஞ்செய்ததாகக் கருதப்படும் சாத்தானால் குருட்டாட்டத்தில் அகப்பட்டு, இந்த சத்தியத்தை விசுவாசிக்கின்ற பிள்ளையை பெற்றோர் வெறுப்போடும் கடுமையோடும் நடத்துவார்கள். வீட்டெஜமான் அல்லது எஜமானி கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற வேலைக்காரனை ஒடுக்குவான் அல்லது ஒடுக்குவாள். பாசம் முறிந்து போய்விடும். பிள்ளைகளுக்கு மரபுரிமையின்படி வரவேண்டிய சொத்து மறுக்கப்பட்டு, வீட்டைவிட்டு

விரட்டப்படுவார்கள். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12) என்ற பவுலாரின் வார்த்தைகள் அப்படியே நிறைவேறும். சத்தியத்தின் காவலர்கள் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளை கனப்படுத்த மறுக்கும்பொழுது, சிலர் சிறைக்குள் தள்ளப்படுவார்கள். சிலர் நாடுகடத்தப்படுவார்கள். சிலர் அடிமைகளாக நடத்தப்படுவார்கள்....

இந்த உபத்திரவத்தின் நேரத்திலே, ஆண்டவருடைய ஊழியக்காரர்களின் விசுவாசம் பரிசோதிக்கப்படும். அவர்கள் தேவனையும் அவரது வார்த்தைகளையும் நோக்கிப்பார்த்தவர்களாக உண்மையோடும் உத்தமத்தோடும் எச்சரிப்பின் செய்தியைக் கொடுத்துவிட்டார்கள். அவர்களது இதயங்களில் தேவ ஆவியானவர் அசைவாடியதால் பேசும்படி அவர்களை வலுக்கட்டாயமாக ஏவினார். எனினும் எதிர்ப்பு, அவதூறு ஆகிய புயல்கள் சீறிப்பாய்ந்தபோது, சிலர் பயத்தினால் மேற்கொள்ளப்பட்டு, "நாங்கள் கொடுத்த எச்சரிப்பின் வார்த்தைகளின் விளைவுகளை அறிந்திருந்தோ மானால் அமைதி காத்திருப்போம் என்று கூக்குரலிட ஆயத்தமா யிருப்பார்கள். இக்கட்டுகளால் அவர்கள் சூழப்பட்டார்கள். சாத்தான் கொடிய சோதனைகளால் அவர்களை முனைந்து தாக்குகிறான். தாங்கள் ஏற்றுக்கொண்ட பணி நிறைவேற்ற முடியாத அளவிற்கு அவர்களது திறமைக்கு மிகவும் அப்பாற்பட்டதுபோன்று தோன்றுகிறது. அழிவைச் சந்திக்க நேரிடும் என்று பயமுறுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு உயிரூட்டிய ஆர்வம் எங்கோ போய்விட்டது. எனினும் அவர்கள் திரும்பிச் செல்லமுடியாது. தங்களது முற்றிலும் உதவியற்ற நிலைமையை உணர்ந்து, வல்லமையை பெற்றுக்கொள்ளத்தக்கதாக, மகா வல்லமையையுடைய அந்த ஒருவரிடத்திற்கு ஓடினார்கள்." ★

# புரொட்டஸ்டாண்டு மார்க்கம் போப்பு மார்க்கத்தோடு இணைகிறது!

**“நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத் துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்கள் ஒரே யோசனையுள்ள வர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.” –வெளிப்படுத்தல் 17:12,13.**

இறுதி நெருக்கடி நேரத்தை நாம் நெருங்கும்பொழுது, ஆண்டவரது கருவிகளாகப் பணிசெய்கின்றவர் மத்தியில் ஐக்கியமும் இணக்கமும் நிலைத்திருப்பது அந்த கணத்திலே முக்கியத்துவம் பெற்றதாகும். உலகம் கொந்தளிப்பாலும், யுத்தத்தாலும், ஒற்றுமையின்மையினாலும் நிறைந்திருக்கிறது. எனினும், போப்பின் வல்லமையின் ஒரே தலைமைக்கடியில் அவர்களது சாட்சியின் சார்பாக நிற்கும் தேவனை எதிர்க்க மக்கள் ஒன்றுகூடுவார்கள்.

இந்த வல்லமைக்கு தனது இராஜ்யத்தைக் கொடுக்கின்றது எது? புரொட்டஸ்டாண்டு மார்க்கமேயாகும். இந்த புரொட்டஸ்டாண்டு வல்லமை ஒரு ஆட்டுக்குட்டியின் குணமும் ஆவியும் உடையதென்றும், பரலோகத்தோடு தொடர்புடையது என்றும் சொல்லிக்கொண்டாலும், வலுசர்ப்பத்தின் குரலிலே பேசுகிறது. அடிமட்டத்திலிருந்துவரும் ஒரு வல்லமையால் அது அசைக்கப்பட்டிருக்கிறது.

“அவர்கள் ஒரே மனமுடையவர்களாக இருப்பார்கள். ”உலகம் முழுவதும் ஒரே ஐக்கியத்தில் ஒரு மாபெரும் இணக்கத்தில் சாத்தானின் வல்லமையின் ஒரு நேசக் கூட்டுறவில் இருக்கும். அவர்கள் தங்களது வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். போப்பதிகாரத்தின்மூலமாக வெளிப்படுத்தப்பட்டபடி, அதே

கொடுங்கோன்மையான—ஒடுக்குகின்ற வல்லமை, மார்க்க சுதந்திரத்திற்கும் மனசாட்சியின் கட்டளைப்படி தேவனை வணங்குவதற்குவேண்டிய சுதந்திரத்திற்கும் எதிராக வெளிப்பட்டது. கடந்த காலங்களிலே ரோமானிய வழிபாட்டு முறைமைகளுக்கும் சடங்காச்சாரங்களுக்கும் இசைந்துபோக மறுக்கத் துணிந்தவர்களை உபத்திரவத்திற்குள்ளாக்கியது.

கடைசி நாட்களிலே நடைபெறப்போகிற யுத்தத்திலே தேவனுடைய மக்களுக்கு எதிராக ஒரு கூட்டணி உருவாகும். யேகோவாவின் கட்டளைக்கு உத்தமமாயிராமல், மருளவிழுந்துபோன அனைத்துவித கேடான வல்லமைகளும் ஒன்று சேரும். இந்த யுத்தத்திலே மாபெரும் முக்கியமான காரியம் நான்காம் கற்பனையிலுள்ள ஓய்வுநாளே. ஏனெனில் இந்த ஓய்வுநாள் கட்டளையிலே பிரமாணத்தைக் கொடுத்த மகா தேவன், வானத்தையும் பூமியையும் படைத்தவரென்று தம்மை அடையாளங்காட்டுகிறார்.

“ஆத்துமா அழியாதது” என்ற கொள்கை, “ஞாயிற்றுக் கிழமைக்குரிய பரிசுத்த தன்மை” ஆகிய இரண்டு மாபெரும் பிழைகளின் மூலமாக, சாத்தான் தனது வஞ்சகத்தினடியில் மக்களைக் கொண்டுவருவான். முதல் பெரும் பிழை—“ஆத்துமா அழியாதது” என்பது ஆவிமார்க்கத்திற்கு அடித்தளம் போடுகிறது. இரண்டாவது—“ரோமாபுரியோடு உணர்ச்சி ஒருமைப்பாட்டின் ஒரு உறவை உருவாக்கி இருக்கிறது.” அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள புரொட்டஸ்டாண்டுகள் ஆவிமார்க்கத்தின் கரத்தைப் பற்றிப் பிடிக்கத்தக்கதாக பெரும் பிளவிற்குக் குறுக்கே தங்களது கரங்களை நீட்டுவதில் முன்னணியில் இருப்பார்கள். இந்த இரண்டு (புரொட்டஸ்டாண்டுகளும் ஆவிமார்க்கமும்) வல்லமைகளும் சேர்ந்து மாபெரும் பிளவிற்கும் அப்பால் இருக்கும் ரோம வல்லமையோடு கைகோர்க்கும். இத்தகைய முக்கூட்டு உறவின் செல்வாக்கிற்கு அடியில், மனசாட்சியின் உரிமையை மிதித்துப் போடுவதில் ரோமாபுரியின் அடிச்சுவட்டை இந்த நாடு (USA) பின்பற்றும்.★

ஜுன் 29

# இரண்டு மாபெரும் கிறிஸ்தவப் பிரிவுகள்!

**“அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட் டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி....” –வெளிப்படுத்தல் 13:3.**

போப்பின் அதிகாரத்திற்கு வணக்கஞ்செலுத்தும் காரியத்தில் (ரு.ளு.யு) அமெரிக்க ஐக்கிய நாடு தனித்துச் செயல்படாது. முன்பு ரோமாபுரியின் ஆளுகையை ஏற்றுக்கொண்டிருந்த நாடுகளின்மீது அதன் செல்வாக்கு இன்னும் ஒழிந்துபோகவில்லை.

இறுதிப் போராட்டத்தில் ஓய்வுநாளே (ளுயடிடியவா) கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் போராட்டத்தின் முக்கிய பொருளாக இருக்கும். ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக அரசியல் ஆளுநர்களும் மார்க்கசம்பந்தமான தலைவர்களும் இணைவார்கள். மென்மையான (கடுமையற்ற) வழிமுறைகள் தோற்றுப்போகும் பொழுது, மிகக் கடுமையான சட்டங்கள் இயற்றப்படும். சபையின் அமைப்பிற்கும் நாட்டின் சட்டத்திற்கும் எதிராக நிற்பவர்களை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளமுடியாது என்ற காரியம் வற்புறுத்தப்படும். பழைய உலகின் ரோமானிய கொள்கையும் புதிய உலகின் விழுந்துபோன புரொட்டஸ்டாண்டுகொள்கையும் சேர்ந்து, தெய்வீகக் கட்டளைகளை மதிப்பவர்களிடத்தில் ஒரே விதமான வழிமுறையைப் பின்பற்றுவார்கள்.

கிறிஸ்தவ உலகம் என்று இவ்வாறு அழைக்கப்படும் பகுதி மாபெரும் தீர்மானிக்கும் ஆற்றலுள்ள செயல்களுக்கான அரங்கமாக இருக்கும். போப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, மனசாட்சியைக் கட்டுப்படுத்துவதற்காக, அதிகார பீடத்தில் இருக்கும் மனிதர் சட்டங்களை இயற்றுவார்கள். தனது வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை சகல ஜாதிகளையும் பாபிலோன் குடிக்கவைக்கும். அனைத்து நாடுகளும் இக்காரியத்தில் ஈடுபட்டிருக்கும். (வெளி. 18:3-7)

வெளி. 14–ம் அதிகாரத்தில் மூன்றாம் தூதன் கொடுக்கும் எச்சரிப்பு வானத்தின் மத்தியிலே ஒரு தூதுன் பறந்து உரத்த சத்தத்தோடு செய்தியைக் கூறியறிவிப்பதுபோன்று தீர்க்கதரிசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது உலகத்தின் முழுக் கவனத்தையும் ஆட்கொள்ளும்.

இந்தப் போராட்டத்தின் முக்கியக் காரியத்திலே கிறிஸ்தவ உலகம் முழுவதும் இரண்டு மாபெரும் பிரிவுகளாகப் பிரியும். ஒரு வகுப்பினர், தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொண்டவர்கள். அடுத்த வகுப்பார், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி, அதின் முத்திரையைத் தரித்துக்கொண்டவர்கள். சபையும் அரசாங்கமும் தங்களது வல்லமைகளை இணைத்து, “சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளி லாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்”(வெளி. 13:16) கட்டாயப்படுத்தும். எனினும், தேவனுடைய மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். “அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங் கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமு மானவைகள்” (வெளி. 15:2,3) என்று மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடினார்கள் என்பதை பத்மு தீவு தீர்க்கதரிசி காண்கிறார். ★

ஜுன் 30

# அநேக குரல்கள் உருவாக்கும் குழப்பம்!

**“பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங் களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.” –வெளிப்படுத்தல் 18:4.**

உலகத்தை எச்சரிக்கும் இந்தக் கடைசி ஊழியத்திலே சபை களுக்கு, இரண்டாம் தூதுனின் தூது: “வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தன மாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்” (வெளி. 14:8) மூன்றாம் தூதனின் தூது: “என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்” (வெளி. 18:4,5) என்று இரண்டு தெளிவான அழைப்புகள் கொடுக்கப்படுகின்றன.

ஓய்வுநாளைக் கைக்கொள்ளத்தக்கதாக தேவன் இஸ்ரவேல் புத்திரரை எதிப்தினின்று வெளியேற்றியதுபோல, மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்காதபடி பாபிலோனைவிட்டு வெளியே வாருங்கள் என்று தமது மக்களை அழைக்கின்றார்....

அனைத்து நாடுகளிலும் இந்த சத்தியம் சாட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் எண்ணிப்பார்க்கத்தக்கதான ஒவ்வொரு தீயசக்தியும் செயல்பட ஆரம்பிக்கும். “இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார்” என்றும், “இதோ, கிறிஸ்து அங்கே இருக்கிறார்” என்றும், மேலும் “இதுவே சத்தியம், தேவனிடமிருந்து வந்த செய்தி என்னிடத்தில் இருக்கிறது் மாபெரும் வெளிச்சத்தை என்னிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்” என்றும் தொனிக்கும் குரல்கள் மக்களது உள்ளங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும். சபையின் முக்கியக்கொள்கைகள் நிகழ்ச்சிகள் அகற்றப்படும். விசுவாசத்தின் தூண்களை அடித்து நொறுக்க முயற்சிகள் எடுக்கப்படும். பொய்யான ஓய்வுநாளை உயர்த்திக்காட்டி, அவர்

ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கிய அந்த நாளிற்குப் பதிலாக வேறொரு நாளை நியமிப்பதின்மூலம் தேவன்மீது நிந்தனை சொரியப்படத்தக்கதாக பொய்யான ஓய்வுநாள் உயர்த்திக்காட்டப்படும். இந்தப் பொய்யான ஓய்வுநாள் கடுமையான ஒரு சட்டத்தின்மூலம் அமுலாக்கப்படும்.... சாத்தான் தனது பொய்யான அற்புதங்களைச் செய்யும்பொழுது, வெளிப்படுத்தல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்பட்ட நேரம் நிறைவேறும். பூமியை தனது மகிமையினால் நிரப்புகின்ற அந்த மகா வல்லமையுள்ள தூதன் பாபிலோனின் விழுகையைக் கூறியறிவித்து, அவளைவிட்டு வெளியே வரச்சொல்லி தேவனுடைய மக்களை அழைப்பான்.

எப்பொழுது அவளுடைய பாவங்கள் வானபரியந்தம் எட்டும்? தேவனுடைய பிரமாணம் சட்டத்தின்மூலம் இறுதியிலே வெறுமையாக்கப்படும்போது, அந்தக் காரியம் நடைபெறும். பின்னர் தேவனுடைய மக்களின் இக்கட்டுக்காலம் வானத்திற்கும் பூமிக்கும் அவரே அரசர் என்பதைக்காட்ட, அவரது சந்தர்ப்பமாக அமையும். ஒரு சாத்தானிய வல்லமை பூமிக்கு அடியிலுள்ள மூலகங்களை கிளர்ந்தெழச்செய்யும்போது, உலக முழுவதும் சத்தியத்தின் தூது கூறியறிவிக்கப்படத்தக்கதாக தேவன் தமது மக்களுக்கு வெளிச்சத்தையும் வல்லமையையும் அனுப்புவார்.★

# விழுந்துபோன சபைகளின் முக்கூட்டு ஐக்கியம்!

**“அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.”**

**–வெளிப்படுத்தல் 16:13,14.**

போப்பின் அமைப்பாகிய ஞாயிறு ஆசரிப்பை, தேவ பிரமாணத்தை மீறி சட்டம் இயற்றி அமல்படுத்துவதின்மூலமாக, நமது நாடு (USA) நீதியினின்று தன்னை துண்டித்துக்கொள்ளும். புரொட்டஸ்டாண்டு மார்க்கம் ரோம வல்லமையின் கரத்தைப் பற்றிப்பிடிக்கத்தக்கதாக, பெரும் பிளவிற்கு அப்பால் தனது கரங்களை நீட்டும். புரொட்டஸ்டாண்டுகள் அந்த ஆவிமார்க்கத்தின் கரங்களைப் பற்றிப்பிடிப்பதற்காக அந்தப் படுகுழிக்கு அப்பால் கரங்களை நீட்டுவார்கள். இந்த முக்கூட்டு ஐக்கியத்தின் செல்வாக்கிற்கடியில், புரொட்டஸ்டாண்டு குடியரசு நாட்டின் ஒவ்வொரு கொள்கையையும் நமது நாடு (USA) மறுத்துப்போடும்பொழுது, போப்பின் பொய் உபதேசங்களையும் வஞ்சகங்களையும் பரப்புவதற்காக, எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்பொழுது, அப்பொழுது, சாத்தான் தனது அற்புதஞ்செய்யும் கிரியைகளை நடப்பிக்கும் நேரமும் உலகத்தின் முடிவின் நேரமும் நெருங்கிவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

ஆத்துமா அழியாதது, ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தமானது என்ற மாபெரும் பிழைகள் மூலமாக, சாத்தான் அனைத்து மக்களையும் தனது வஞ்சகங்களுக்கடியில் கொண்டுவருவான். ஆத்துமா அழியாதது என்ற கொள்கை, ஆவிமார்க்கத்திற்கு வழிநடத்துகிறது. ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தமானது என்ற கொள்கை ரோமாபுரியோடு ஒரு இணைப்பை

ஏற்படுத்துகிறது. இரண்டாவது பிழை ரோமாபுரியோடு உணர்ச்சி ஒருமைப்பாட்டின் ஒரு உறவை உருவாக்குகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள புரொட்டஸ்டாண்டுகள் ஆவிமார்க்கத்தின் கரத்தைப் பற்றிப்பிடிக்கத்தக்கதாக பெரும் பிளவிற்குக் குறுக்கே தங்களது கரங்களை நீட்டுவதில் முன்னணியில் இருப்பார்கள். ரோமாபுரியின் வல்லமையின் கரங்களைப்பற்றிப் பிடிப்பதற்காக, அந்தப் படுகுழிக்கு அப்பாலும் கரம்நீட்டி எட்டிப் பிடிப்பார்கள். இத்தகைய முக்கூட்டு அணியின் செல்வாக்கிற்கடியில் மனச்சாட்சியின் உரிமையை மிதித்துப்போடுவதிலே, ரோமாபுரியின் அடிச்சுவட்டை இந்த நாடு பின்பற்றும்.

போப்புமார்க்கத்தாரும், புரொட்டஸ்டாண்டுகளும், உலகப் பிரகாரமாக வாழும் மக்களும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாக இருப்பார்கள். உலகத்தையே மனமாறுதலுக்குக் கெண்டுவரத்தக்கதான இந்த மாபெரும் ஐக்கியக் கூட்டுறவிலே ஒரு மிகப்பெரிய இயக்கத்தையும், நீண்ட காலமாக தாங்கள் எதிர்பார்த்திருந்த ஆயிரவருட அரசாட்சியையும் இவ்வியக்கம் கொண்டுவரும் என்று எண்ணுவார்கள்.

நமது நாடானது ஞாயிறு சட்டத்தை இயற்றுவதற்காக, தனது அரசாங்கத்தின் கொள்கைகளை ஒழித்துப்போடும்போது, இந்தச் செயலிலே புரொட்டஸ்டாண்டுமார்க்கம் போப்பு மார்க்கத்தோடு கரங்களை இணைத்துக்கொள்ளும். நீண்டகாலமாக சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்த்துக்கொண்டிருந்த கொடுமைக்கு இக்காரியம் உயிர்கொடுத்து, மீண்டும் விறுவிறுப்பான செயலுடன் கொடுங்கோன்மையை கிளர்ந்தெழச் செய்யும். ★

# சாத்தானும் அவனது முக்கூட்டு ஐக்கியமும்!

**“அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.” –வெளிப்படுத்தல் 13:4.**

“அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை யுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது.” தேவ ஆட்டுக்குட்டியின் பின்னடியார்கள் என்று தங்களைப்பற்றிக் கூறிக்கொண்டாலும் வலுசர்ப்பத்தின் ஆவியினாலே மனுஷர்கள் நிறைந்திருந்தார்கள். தாங்கள் சாந்தமும் மனத்தாழ்மையுமாக இருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் சாத்தானின் ஆவியினால் பேசுகிறார்கள். சட்டம் இயற்றுகிறார்கள். தாங்கள் தங்களைப்பற்றி என்ன கூறிக்கொள்ளுகிறார்களோ, அதற்கு எதிராக இருப்பதை அவர்களது செயல்கள் காட்டுகின்றன. ஆட்டுக்குட்டியைப்போன்ற இந்த வல்லமை, வலுசர்ப்பத்தோடு இணைந்து, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு இயேசுவின்மீது சாட்சியை உடையவர்களோடு யுத்தம்பண்ணப் போயிற்று. சாத்தான் போப்புமார்க்கத்தோடும் புரொட்டஸ்டாண்டுகளோடும் இணைந்து, இந்த உலகத்தின் கடவுளாக ஒப்பந்தஞ்செய்து, அவனது இராஜ்யத்தின் குடிமக்கள்போன்று மனிதருக்கு கட்டளைகளைப் பிறப்பிப்பான். மேலும், தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு அவர்களைக் கையாண்டு, அடக்கி ஆளுகைசெய்வான். தேவனுடைய கற்பனைகளைக் காலின்கீழ்போட்டு மிதிக்க மனிதர் சம்மதிக்காவிட்டால், வலுசர்ப்பத்தின் குணம் வெளிப்படும். அவர்கள் சிறைப்படுத்தப்படுவார்கள். நீதிமன்றங்களுக்குமுன்னர் அழைத்துச்செல்லப்பட்டு, அபராதம் விதிக்கப்படுவார்கள். “மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக்கொடுக்கும்படி அதற்குச்சத்துவங்கொடுக்கப்பட்டது.

அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்..” (வெளி. 13:15,16) வற்புறுத்தும். இவ்வாறு சாத்தான் யோகோவாவின் தனிச்சிறப்புரிமையைப் பறித்துக்கொள்கிறான். பாவ மனிதன் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து தன்னைத் தேவனென்று பிரகடனஞ்செய்து தேவனுக்கும் மேலாகச் செயல்புரிகிறான்.

தேவனுடைய முத்திரையைத் தரித்துக்கொள்பவர்களுக்கும் மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வேறுபாடு காணப்படும். தேவனுடைய வார்த்தையைக் கேட்காத, தேவனுடைய வார்த்தையைக் கேட்க விரும்புகிறவர்களது வழியில் முட்டுக்கட்டுகளைப்போட ஆயத்தஞ்செய்கின்ற அந்தப் பொய்யான போதகர்களினால் ஆண்டவருடைய உத்தமமான ஊழியக்காரர்கள் கசப்பான உபத்திரவங்களை அனுபவிக்க நேரிடும். ஆனால் தேவனுடைய மக்கள் பயப்படத் தேவையில்லை. சாத்தான் தனது எல்லைக்கு அப்பால் செல்லமுடியாது. ஆண்டவரே அவரது மக்களின் பாதுகாப்பாக இருப்பார். சத்தியத்தினிமித்தம் தனது ஊழியக்காரர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தமக்கே இழைக்கப்பட்டதாகக் கருதுகிறார். இறுதித் தீர்மானஞ்செய்து முடிக்க அனைவரும் தாங்கள் எந்தப் பக்கம் நிற்கவேண்டும் என்பதை தீர்மானித்துக்கொள்கிறார்கள். அதாவது, கிறிஸ்துவிற்காகவும், அவரது கட்டளைகளுக்காகவுமா அல்லது அந்த மாபெரும் சமயப் பகைவனுக்காகவா என்று தீர்மானிக்கிறார்கள். தேவன் தமது வல்லமையிலே எழுந்தருளுவார். அவருக்கு எதிராக தேவதூஷணம் கூறியவர்களின் வாய்கள் அனைத்தும் என்றைக்குமாக அடைக்கப்படும். எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு வல்லமையும் அதற்குரிய தண்டனையைப் பெற்றுக்கொள்ளும். ★

# சத்தியம் கறைப்படுத்தப்பட்டது!

**"அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்."**

**—மத்தேயு 24:23.**

மருளவிழுகையின் பணி, இறுதி வளர்ச்சியடைவதற்குமுன்னர் மக்கள் பற்றிக்கொண்டிருக்கும் விசுவாசத்திலே குழப்பம் ஏற்படும். தேவனுடைய இரகசியம்பற்றி தெளிவான—திட்டமான கருத்துக்கள் இருக்காது. ஒன்றன்பின் ஒன்றாக சத்தியம் தூய்மைக்கேடடையும்.

எல்லா நாடுகளிலும் சத்தியம் ஒரு சாட்சியாகக் கூறியறிவிக்கப்பட்டபின்னர் எண்ணிப்பார்க்கக்கூடிய ஒவ்வொரு வல்லமையும் செயல்படுத்தத்தக்கதாக அமைக்கப்படும். "இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார். இதுவே சத்தியம் தேவனிடத்தில் இருந்து வந்த செய்தி என்னிடத்தில் இருக்கிறது, ஒரு மாபெரும் வெளிச்சத்தோடு என்னை அனுப்பியிருக்கிறார்" என்று கூச்சலிடும் பலதரப்பட்ட குரல்களினால் உள்ளங்களில் குழப்பம் ஏற்படும். சபையின் முக்கிய தனித்தன்மை வாய்ந்த அடையாளங்கள் அகற்றப்படும். நமது விசுவாசத்தின் தூண்களை நொறுக்கிப்போடுவதற்காக ஒரு முயற்சி எடுக்கப்படும். பொய்யான ஓய்வுநாளை உயர்த்திக்காட்டுவதற்காக, அதிகத் தீர்மானமான முயற்சி ஒன்று எடுக்கப்படும். அவர் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கிய நாளைப் பிடுங்கியெறிந்துபோடுவதின்மூலமாக தேவனை நிந்திப்பதற்கான முயற்சி எடுக்கப்படும். ஒடுக்குகின்ற ஒரு சட்டத்தின்மூலம் பொய்யான ஓய்வுநாள் நடைமுறைப்படுத்தப்படும்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு வகையான வஞ்சகமும் எழும்பும். நமது பாதங்களுக்கு கீழே இருக்கும் அடித்தளம் உறுதியாக இருக்கவேண்டும். கட்டிடத்திற்கு உறுதியான தூண்கள் நமக்குத் தேவை. தேவன் நிலைநாட்டிவைத்திருக்கும் காரியங்களினின்று ஒரு ஊசிகூட அகற்றப்படக்கூடாது. சத்துரு பொய்யான கருத்துக்களைக் கொண்டுவருவான்.

ஆசரிப்புக்கூடாரம் இல்லையென்று கூறுவான். இந்த ஒரு கருத்தினால் சத்தியத்தினின்று வழுவிப்போகும் நேரம் ஏற்படும்.

பொய்யான சொப்பனங்களும் பொய்யான தரிசனங்களும் உண்டாகும். அவைகளில் கொஞ்சம் சத்தியம் இருக்கும். ஆனால் இவை தொடக்கத்திலுள்ள சத்தியத்தினின்று வழிவிலகும்படி நடத்தும். இதை மனிதர் கண்டறியத்தக்கதாக, "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசா. 8:20) என்கிற ஒரு விதிமுறையை ஆண்டவர் வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

நாம் உலக முடிவை நெருங்கிக்கொண்டிருக்கும்பொழுது, பொய் சத்தியத்தோடு அதிகமாகக் கலந்து காணப்படும். பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலில் இருப்பவர்கள் மாத்திரமே பிழையினின்று சத்தியத்தை வேறுபடுத்திக் கண்டறிய முடியும். தேவனுடைய வழியைப் பின்பற்றுவதற்காக, அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்கவேண்டியது அவசியம். மனிதரில் உறுதியான நம்பிக்கை வைக்கத்தக்கதாக, எந்த வகையிலும் நாம் தேவ ஆலோசனையைவிட்டு விலகக்கூடாது. ஆண்டவர்பேரில் விசுவாசம் வைத்திருக்கிறவர்மீது தளர்வில்லாத விழிப்போடு இருக்கத்தக்கதாக, ஆண்டவரது தூதர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தத் தூதர்கள் நமது அனைத்துத் தேவையின் நேரங்களிலும் நமக்குச் சிறப்பான முறையில் உதவிசெய்வதற்காகக் காத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் விசுவாசத்தின் முழு நிச்சயத்தோடும் ஆண்டவரிடத்தில் வரவேண்டும். ஞானத்திற்காக அவரை நோக்கிப் பார்க்கவேண்டும்.... தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகிறவர்களாக, பொய்மைக்கும் சத்தியத்திற்குமுள்ள வேறுபாட்டையும், பாவத்திற்கும் நீதிக்குமுள்ள வேறுபாட்டையும் நிச்சயத்தோடு தெளிவாகக் கண்டடையலாம்.★

# தீர்க்கதரிசனத்தில் (USA) அமெரிக்க ஐக்கியநாடு!

**"பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது." —வெளிப்படுத்தல் 13:11.**

மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி, ஒரே நாடு, ஒரேயொரு நாடுதான், அதற்கேற்ற தனிக்குறிப்புள்ள விவர விளக்கத்திற்கு பொருத்தமானதாக அமைந்திருக்கிறது. அதைக்குறித்து—தவறாகப் பொருள்கொள்ளமுடியாத அளவிற்கு, அது அமெரிக்க ஐக்கிய நாட்டையே சுட்டிக்காட்டுகிறது.

நமது சொந்த நாட்டின் எழுச்சி, அதின் வளர்ச்சி ஆகியவைகுறித்து கருத்தைக் கவருகின்ற விதத்தில் அதின் தோற்றம் காணப்படுகிறது. நமது அரசாங்கத்தின் தன்மை அல்லது தனிச்சிறப்புவாய்ந்த இயல்பிலே, குடியரசு கொள்கை, புரொட்டஸ்டாண்டு கொள்கை ஆகிய இரண்டு அடிப்படையான கொள்கைகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய மதிப்புவாய்ந்த பண்பையும் மாசற்ற தன்மையையும் சுட்டிக்காட்டத்தக்கதாக ஆட்டுக்குட்டிக்கு இருப்பதைப்போன்ற கொம்புகள் அடையாளச் சின்னங்களாக இருக்கின்றன. இந்த உலகிலே சூரியன் உதிக்கின்ற அனைத்து தேசங்களுக்கும் ஆண்டவர் செய்திருப்பதைவிட, அதிகமாக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் செய்திருக்கிறார். அவர் தமது மக்களுக்காக ஒரு புகலிடத்தைக் கொடுத்தார். தங்களது மனசாட்சியின் கட்டளைகளுக்கேற்றபடி அவர்கள் தொழுகை செய்வதற்காக, தமது மக்களுக்காக ஒரு புகலிடத்தைக் கொடுத்தார். இங்கு கிறிஸ்தவ மதம் அதன் தூய்மையிலே முன்னேற்றமடைந்தது. மனிதனுக்கும் தேவனுக்குமிடையே மத்தியஸ்தராக இருக்கின்ற ஜீவனை அளிக்கும் கொள்கை கட்டுப்பாடின்றி தாராளமாகக் கற்றுக்கொடுக்கப்பட்டது. மனசாட்சியின் கட்டளைகளுக்கேற்றபடி அனைத்து மக்களும் தம்மைத் தாராளமாகத் தொழுதுகொள்ளவேண்டுமென்று தேவன் திட்டமிட்டுவைத்தார். விரிவாக்கப்பட்ட—சுவிசேஷச் சிறப்புரிமைக்காக

விடுதலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட, இந்த உள்நாட்டு அரசாங்க நிறுவனங்களைத் திட்டமிட்டு அமைத்தார்.

ஆனால் நீதிக்கெல்லாம் பகைஞனாகிய சாத்தான் இந்த நாட்டிற்காக தேவன் வைத்திருக்கும் நோக்கத்தின்மீது அவனது திட்டங்களை வைத்திருக்கிறான். தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை மனிதன் மறந்துவிடத்தக்கதாக வழிநடத்துகிறதற்கு இடர்நிறைந்த முயற்சிகளைக் கொண்டுவருவான். விக்கிரக வணக்கம்போன்ற உலகப்பற்றும் பேராசையும் மாபெரும் வஞ்சகனின் கிரியைகளின்மூலமாக மேலோங்கி நிற்கும். தேவனுடைய பிரமாணங்களும் அதைச்சார்ந்த அனைத்தும் வெறுமையாக்கப் படும்வரை இவ்வாறு நடக்கும்.

சாத்தான் நமக்குத் தெரியாமல், நம்மை முந்திக்கொண்டிருக்கிறான் என்பது எனக்குக் காட்டப்பட்டிருந்தது. தேவனின் பிரமாணம் சாத்தானின் பிரதிநிதிகளால் ஒன்றுமில்லாமல் வெறுமையாக்கப்பட்டுவிடும். வீண் பெருமையுடன் சுதந்திரம் பற்றிப்பேசப்பட்டுக்கொண்டிருந்த நமது நாட்டில், மார்க்க சுதந்திரம் ஒரு முடிவிற்கு வந்துவிடும்.

நமது நாடு தன்னுடைய சட்டசபைக் கூட்டங்களிலே மனிதரின் மார்க்கசம்பந்தமான உரிமைகளிலே அவர்களது மனசாட்சியைக் கட்டுப்படுத்துவதற்கு ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டங்கள் இயற்றும்பொழுது, ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கு எதிராக ஒடுக்கும் வல்லமை செயல்படுத்தும்பொழுது, தேவனுடைய பிரமாணம் அதின் அனைத்து உட்கருத்துக்களிலும் நோக்கங்களிலும் நமது நாட்டிலே பயனற்றதாக ஆக்கப்படும். நாடுதழுவிய மருளவிழுகைக்குப்பின்னர் நாட்டின் அழிவு பின்தொடர்ந்துவரும். ★

# புரொட்டஸ்டாண்டுகளாலும் கத்தேலிக்கர்களாலும் கொடுக்கப்படும் உபத்திரவங்கள்!

**“என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.” —மத்தேயு 10:22.**

உபத்திரவத்தைச் சகிக்க முடியாது என்று நினைக்கவேண்டிய அவசியமில்லை. நாம் பயங்கரமான காலங்களைக் கடந்துசெல்லவேண்டியதிருக்கும்.

ரோமன் கத்தோலிக்க சபை புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தை (முன்பு) உபத்திரவப்படுத்தியது. அதின் விளைவாக, இயேசு கிறிஸ்துவின் மார்க்கம் ஏறக்குறைய நிர்மூலமாகிவிட்டது. ஆனால் போப்புமார்க்கமும், புரொட்டஸ்டாண்டு மார்க்கமும் இணைந்து செயல்படும்பொழுது, எதிர்ப்பு இன்னும் அதிகமாக—கடுமையாக இருக்கும்.

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் மக்கள் மிகவும் கடுஞ்சோதனையான நிலையில் வைக்கப்படுவார்கள். ஆனால் வெளிச்சத்திலே நடந்தவர்கள், வெளிச்சத்தைப் பரப்பியவர்கள் அவர்கள் சார்பிலே தேவன் குறுக்கிடுவதை தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். அனைத்துமே மிகவும் அச்சுறுத்துவதைப்போன்று தோற்றங்கொடுத்தாலும், ஆண்டவர் தம்மிடம் உத்தமமாக இருப்பவர்களுக்குத் தமது வல்லமையை வெளிப்படுத்துவார். எந்த நாட்டின்மீது தேவன் அற்புதமான முறையில் கிரியை செய்திருக்கிறாரோ, எந்த நாட்டின்மீது தமது வல்லமையின் கேடகத்தை விரித்துப் பிடித்திருக்கிறாரோ, அந்த நாடு புரொட்டஸ்டாண்டு கொள்கைகளை ஒதுக்கித்தள்ளும்பொழுது, தனது சட்டசபையின் மூலமாக மார்க்கசம்பந்தமான சுதந்தரத்தை வரையரைக்குள் கொண்டுவந்து, ரோமன் கத்தோலிக்கருக்கு முகங்கொடுத்து ஒத்துழைக்கும்பொழுது,

ஆண்டவர் தமக்கு உண்மையாக இருக்கிற மக்களுக்கு, தமது வல்லமையின்மூலம் கிரியை செய்வார். ரோமாபுரியின் கொடுங்கோலாட்சி நடைமுறைப்படுத்தப்படும். ஆனால், கிறிஸ்துவே நமது அடைக்கலமாக இருப்பார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் மிகப்பெரிய சபைகள், தங்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கின்ற முக்கியக்கொள்கையின் மூலமாக இணையும்பொழுது, தங்களது நிறுவன அமைப்புகளைக் காப்பாற்றத்தக்கதாக, தங்களது சட்டங்களை செயற்படுத்தும்படி தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தும். இவ்வாறு புரொட்டஸ்டாண்டு அமெரிக்கா, ரோமாபுரியின் ஆட்சியமைப்பிற்கு ஒரு சொரூபத்தை உருவாக்கிவிடும். இதை மறுத்து நிற்பவர்களுக்கு அரசாங்கம் தண்டனைகளை வழங்குவது தவிர்க்கமுடியாத விளைவாகும்.

போப்பதிகாரம் இழந்துபோய்விட்ட மேலாண்மையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் என்றும், புரொட்டஸ்டாண்டு உலகம் என்ற பெயரால் தன்னை அழைத்துக்கொண்டிருக்கும் வல்லமை, நேரத்திற்கு ஏற்றபடி, நோக்கம் நிறைவேற சலுகைகாட்டி, அதின்மூலமாக உபத்திரவத்தின் நெருப்புகளை மீண்டும் தூண்டிவிடும். இந்த ஆபத்தின் நேரத்திலே நம்மிடம் சத்தியமும் வல்லமையும் இருப்பதால் மாத்திரமே நாம் நிற்கமுடியும்.... தனி மனிதனுக்குரிய ஆபத்திலும் துன்பத்திலும் கொண்டுவரப்பட்டுவிடுவோமோ என்ற எதிர்பார்த்தலினால் உங்களுக்கு மனத்தளர்ச்சி ஏற்படத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, தேவனுடைய மக்களுக்கு ஆற்றலும் நம்பிக்கையும் ஊக்கமடையவேண்டும். அவர்களது ஆபத்தின் நேரமே, அவர்களுக்கு அவரது வல்லமையின் தெளிவான வெளிப்படுத்தல்களை வழங்கும் தேவனுடைய நேரமாகும். ★

# கிறிஸ்துவிற்காக உபத்திரவம் அநுபவித்தல்!

**“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” —2 தீமோத்தேயு 3:12.**

காரணமின்றி கிறிஸ்து வெறுக்கப்பட்டார். அதைப்போன்று அவரது மக்களும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதால், வெறுக்கப்பபடுவார்கள். தூய்மையானவராகவும் பரிசுத்தமானவராகவும் மாசற்றவராகவுமிருந்து, இந்த உலகிலே நன்மைசெய்து, நன்மையைமாத்திரமே செய்த அவரே மிகவும் மோசமான குற்றவாளியைப்போன்று நடத்தப்பட்டு, மரணத்தீர்ப்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டாரெனில், அவர்களது சீடர்களும் தங்களது வாழ்க்கையில் குற்மற்றவர்களும் குணங்களில் தீங்கற்றவர்களுமாக இருந்தாலும் அதைப்போன்றே நடத்தப்படுவார்கள்.

மானிடச்சட்டங்கள், சாத்தானின் பிரதிநிதிகளால் உருவாக்கப்படும் சட்டங்கள், தீமையைச் சரிக்கட்டி நன்மைக்காகப் பரிந்துபேசுவதுபோன்ற தோற்றத்திற்கடியில் உயர்த்திக் காட்டப்படும். அதே சமயத்தில், தேவனுடைய பரிசுத்த கட்டளைகள் அவமதிக்கப்பட்டு, காலின்கீழ்போட்டு மிதிக்கப்படும். யேகோவாவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதினால், தங்களது உத்தமத்தை நிரூபிக்கின்ற அனைவரும் கைதுசெய்யப்படுவதற்கும் எந்த ஆலோசனைச் சட்டங்களுக்கு அவர்களது படித்தரத்தின்படி தேவனுடைய பரிசுத்தப்பிரமாணம் பரிசுத்தமாகவும், உயர்ந்ததாகவும் இல்லையோ அத்தகைய மன்றங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்படுவார்கள். இந்த உலக வரலாற்றின் கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள், சத்தியத்திற்காக உபத்திரவம் அநுபவித்தல் என்பதின் பொருளை நன்றாக அறிவார்கள். நீதிமன்றங்களிலே அநீதி நிலைத்திருக்கும், தேவனுடைய கற்பனைகளுக்கு விசுவாசமாக இருப்பவர்கள் கொடுக்கும் காரணங்களைக் கேட்பதற்கு நீதிபதிகள் மறுப்பார்கள். ஏனெனில் நான்காம் கற்பனைக்கு சாதகமாகப் பேசப்படும் வாதங்கள் அனைத்திற்கும் பதில் கூறமுடியாது என்பதை அவர்கள் நன்றாக

அறிவார்கள். “எங்களுக்கு ஒரு சட்டமிருக்கிறது, அந்தச் சட்டத்தின்படி அந்த நபர் மரிக்கவேண்டும்” என்று நீதிபதிகள் கூறுவார்கள். தேவனுடைய பிரமாணம் அவர்களுக்கு ஒன்றுமில்லையென்பதுபோல் இருக்கும். “எங்களது சட்டமே மிக உயர்ந்தது” என்பதே அவர்களது எண்ணம். இந்த மானிடச்சட்டத்தை மதிப்பவர்கள் தனிச்சலுகைக்குரியவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களது விக்கிரகமாகிய ஓய்வுநாளிற்கு தலைவணங்காத வர்களுக்கு எந்தச் சலுகையும் காட்டப்படாது.

கோடைகாலத்தில் என்றுமே பசுமையாக பச்சைப்பசேல் என்று இருக்கின்ற மரங்களுக்கும் மற்ற மரங்களுக்கும் கவனம் செலுத்திப் பார்க்கத்தகுந்த அளவிற்கு வித்தியாசம் இருக்காது. ஆனால் பனிக்காலத்தில் கொடுங்காற்று மோதியடிக்கும்போது, என்றும் பசுமையான மரங்கள் அப்படியே மாறாமல் இருக்கும். ஆனால் மற்ற மரங்களிலோவெனில் இலைகள் அனைத்தும் உதிர்ந்த நிலையில் வெறுமையாகக் காட்சியளிக்கும். அதேபோன்று, பொய் இதயத்தோடுள்ள மதக்கோட்பாளரை உண்மையான கிறிஸ்தவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காணமுடியாது. ஆனால் அந்த வித்தியாசம் தெளிவாகக் காணப்படுகின்ற நேரம் நம்மீது வந்துவிட்டது. எதிர்ப்புகள் எழும்பட்டும். மதவெறியும் சகிப்பற்ற தன்மையும் ஆட்டம்போடட்டும். உபத்திரவம் தூண்டிவிடப்படட்டும். அரைகுறையான மனதுடையோரும் மாய்மாலக்காரரும் நிலைதடுமாறி விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்தவன் அவனது வாய்ப்புவளங்கள் நிறைந்திருந்த காலத்தைவிட, ஒரு கன்மலையைப்போன்று உறுதியாக நிற்பான். அவனது விசுவாசம் உறுதியாக இருக்கும். அவனது நம்பிக்கை பிரகாசமாக இருக்கும். ★

# முன்பு நம்முடன் இருந்த சகோதரர்களைக் கொடுமையாகத் துன்புறுத்துவார்கள்!

**“அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.” – மத்தேயு 24:10.**

புயல் நெருங்கிவரும்பொழுது, மூன்றாம் தூதனின் தூதில் நம்பிக்கைவைத்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாததின்மூலமாக பரிசுத்தமாக்கப்படாதவர்கள், தாங்கள் நின்ற நிலையினின்று விலகி, எதிர் அணியினரோடு இணைந்துகொள்வார்கள். உலகத்தோடு இணைந்து, உலகத்தாரின் குணத்தில் அல்லது ஆவியில் பங்கு பெற்றவர்களாக அவர்களைப்போல ஏறக்குறைய அதே வெளிச்சத்தில் காரியங்களை நோக்கிப்பார்க்கும் நிலைக்கு வந்துவிடுவார்கள். சோதனை கொண்டுவரப்படும்பொழுது, இலகுவான, பொது மக்கள் சார்ந்த பக்கத்தைத் தெரிந்தெடுத்துக்கொள்வார்கள். தாலந்துகளுள்ள இனிமையாக அளவளாவும் வழக்கமுள்ள—ஒரு காலத்தில் சத்தியத்தில் களிகூர்ந்திருந்த அத்தகையோர், தங்களது வல்லமையால் ஆத்துமாக்களை ஏமாற்றி, தவறாக வழிநடத்துவார்கள். இவர்கள் தங்களது சகோதரர்களாயிருந்த (முன்பு) சபையாருக்கு, மிகக் கசப்பான விரோதிகளாக மாறிவிடுவார்கள். ஓய்வு நாளை ஆசரிப்பவர்கள் தங்களது விசுவாசத்திற்கான பதிலைக்கொடுக்கும்படி நீதிமன்றங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்படும்பொழுது, மருளவிழுந்துபோன இவர்கள், சாத்தானின் மிகத் திறமையான பிரதிநிதிகளாகக் காரியங்களை திரித்துக்கூறி, குற்றஞ்சாட்டி, பொய்யான அறிக்கைகளின்மூலம், மாய்மாலஞ்செய்து, ஆளுநர்களை அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழச்செய்வார்கள்.

தேவனுடைய மக்களுக்கு முன்பாக இருக்கிற கடுந்துன்பவேளை தளராத விசுவாசத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறது. ஆண்டவர் ஒருவர்

மாத்திரமே தங்களது தொழுகைக்குரியவர் என்பதை அவர்களது பிள்ளைகள் தெளிவாகக் காட்டவேண்டும். பொய்யான தொழுகைக்குத் தங்களது ஜீவனைப்பற்றிய காரியமானாலுங்கூட எந்நவித முக்கியத்துவமோ அல்லது சலுகையோ அளிக்கும்படித் தூண்டக்கூடாது.

அந்த சமயத்திலே பொன்னானது களிம்பினின்று பிரித்தெடுக்கப்படும்.... நாம் வியந்து பாராட்டிய நட்சத்திரம்போன்று பிரகாசித்த அநேகர், இருளிலே மங்கி மறைந்துபோவார்கள். ஆசரிப்புக் கூடாரத்தின் அணியாக கருதப்பட்டிருந்தவர்கள் கிறிஸ்துவின் நீதியினால் தரிக்கப்படாதிருந்தால், தங்களது சொந்த நிர்வாண வெட்கத்தோடு காணப்படுவார்கள்.

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் சிதறிக்கிடக்கின்ற குடிமக்களில் பாகாலிற்கு தங்களது முழங்கால்களை முடக்காத அநேகர் இருக்கிறார்கள். இரவிலே மாத்திரம் பிரகாசிக்கின்ற வானத்தின் நட்சத்திரங்களைப்போல விசுவாசமுள்ள இந்த மக்கள், இந்த பூமியை இருள்மூடும்பொழுது, மக்களை காரிருள் மூடும்பொழுது, ஒளிவிட்டு அதிகமாகப் பிரகாசிப்பார்கள்.... அந்த மருள விழுகையின்போது, “அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்....” (வெளி. 13:16) பொய்யான இளைப்பாறுதலின் நாளுக்கான அடையாளத்தை மரண தண்டனைக்கடியில் கொடுக்கத்தக்கதாக சாத்தான் தீவிர முயற்சியை மேற்கொள்ளும்போது, தேவனிடத்தில் விசுாவசமாயிருக்கும் மக்கள், “ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற...” (பிலி.2:14) அவர்கள் இரவின் இருள் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ, அவ்வளவு அதிகமாகப் பிரகாசத்தோடு ஒளிர்வார்கள். ★

# நண்பர்களாலும் உறவினர்களாலும் காட்டிக்கொடுக்கப்படுதல்!

**“ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.”**
**–மத்தேயு 10:36.**

தேவனுடைய பிரமாணம் வெறுமையாக்கப்பட்டுவிடும்போது, பூமியில் வாழ்கின்ற அனைவரையும் பரீட்சித்துப்பார்க்கக்கூடிய கொடிய இடர்களால் சபை சலிக்கப்படும்பொழுது, உண்மையானவர்களென்று இதுவரை யூகிக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலான விகிதப்படியான மக்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து, துரோகிகளாக மாறி, பரிசுத்த பொறுப்புகளைக் மறுதலிப்பார்கள். நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களில் அவர்கள்தான் மிகவும் கொடியவர்களென்று தங்களை நிரூபிப்பார்கள். “உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந் திருக்கிறேன்”–அப்போஸ்தலர் 20:30. அநேகர் இந்த வஞ்சிக்கிற ஆவிகளுக்குச் செவிகொடுப்பார்கள்.

சோதனைவேளையின்பொழுது, மருளவிழுந்துபோனவர்கள் தங்களது சொந்த பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, பொய்சாட்சிகூறி. சகோதரரைக் காட்டிக்கொடுப்பார்கள். தங்களது சகோதரர்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறி, அவர்களது பாதைகளிலே ஓநாய்களை அனுப்பிவைப்பார்கள். கிறிஸ்து இதைக்குறித்து ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார். நண்பர்களாலும், உறவினர்களாலும், இயற்கைக்கு மாறான கொடிய வழிமுறைகள் பின்பற்றப்படுவதுகுறித்து ஆச்சரியப்பட வேண்டாம்.

இயேசு கிறிஸ்துவின் கரத்தைத்தவிர அனைத்துக் கரங்களையும் விட்டுவிடவேண்டுமென்பதை நாம் கண்டுகொள்வோம். நண்பர்கள் துரோகிகளாகி நம்மைக் காட்டிக்கொடுப்பார்கள். சத்துருவினால் வஞ்சிக்கப்பட்ட உறவினர்கள், நம்மை எதிர்ப்பதாலும் கடினமான இடத்தில் கொண்டுவந்து நிறுத்துவதாலும் தேவனுக்கு சேவை செய்கிறோம் என்று எண்ணி, நாம் நமது விசுவாசத்தை விட்டு விடுவோமென்ற நம்பிக்கையில் தீவிரமான முயற்சிகளை எடுப்பார்கள். ஆனால் ஆபத்துகளுக்கும் இருளுக்கும் மத்தியிலும், இயேசுவின் கரத்திலே நமது கரத்தை உறுதியாக நம்பி ஒப்படைக்கவேண்டும்.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஏளனப் பேச்சுகளுக்கு எதிராகப் போராடுவதை எதிர்பார்க்கவேண்டும். அவர்கள் வையப்படுவார்கள். அவர்களது வார்த்தைககளும் விசுவாசமும் தவறாக எடுத்துக் கூறப்படும். இரத்தசாட்சியாக மரிப்பதைவிட, மக்களின் நிந்தைகளை யும் புறக்கணிப்புகளையும் தாங்கிக்கொள்வது மிகக் கடினமாக இருக்கும்....

பிரபலமில்லாத இந்த சத்தியத்தைப் பிள்ளைகள் ஏற்றுக்கொள்கிறதினால், அவர்களுக்கு எதிராக பெற்றோர்கள் கடுமையானவர்களாக மாறுவார்கள். மனசாட்சியின்படி தேவனை சேவிக்கிறவர்கள் கலகஞ்செய்கிறவர்களாகக் குற்றஞ்சாட்டப் படுவார்கள். நிகழ்கால சத்தியத்தை விசுவாசிக்கின்ற பிள்ளைகள் பெயரிலோ அல்லது மற்ற உறவினர்கள் பெயரிலோ எழுதிவைக்கப்பட்ட சொத்துக்களின் உயில்கள் வேறு மனிதர்களின் கரங்களில் கொடுக்கப்படும். அனாதைப் பிள்ளைகளுக்காகவும் விதவைகளுக்காகவும் நியாயப்படி கொடுக்கப்படவேண்டிய பொருட்கள், அவர்களின் பாதுகாவலர்களால் திருடப்படும். தீமையினின்று தங்களை விலக்கிக்கொள்பவர்கள் மனசாட்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு இரையாவார்கள். மனிதர் தங்களுக்கு உரிமையில்லாத சொத்துக்களை தங்களுக்கென்று எடுத்துக்கொள்வார்கள். “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறவர்கள் அனைவரும் துன்பப்படுவார்கள்” என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள் வெகு சீக்கிரத்தில் மெய்ப்பிக்கப்படும். ★

# மரணம் என்னும் அச்சுறுத்தலுக்கு அடியில்...

**"நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்." —எஸ்தர் 4:14.**

அதிசயமான சம்பவங்கள் உலகத்திற்கு முன்பாக வெகு சீக்கிரத்தில் நடைபெறவிருக்கின்றன. அனைத்துக் காரியங்களின் முடிவும் மிகவும் நெருங்கிவந்துவிட்டது. இக்கட்டுக்காலம் தேவனுடைய மக்கள்மீது வரவிருக்கின்றது. ஆண்டவரின் நாளை கைக்கொள்கிறவர்களை, வாங்கவும்—விற்கவும் கூடாதபடி தடைசெய்யத்தக்கதாக ஒரு சட்டம் இயற்றப்படும். இவ்வாறு ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கு அவர்கள் வாரத்தின் முதல்நாளை ஓய்வுநாளாக ஆசரிக்காவிட்டால் தண்டனை—ஏன் மரணதண்டனை கூட விதிக்கப்படுமென்று பயமுறுத்தப்படுவார்கள்.

தேவனுடைய மக்களுக்கு விரோதமாக இயற்றப்படும் சட்டம் எஸ்தர் ராணி காலத்தில், அகாஸ்வேரு ராஜா யூத இனத்துவருக்கு விரோதமாகப் பிறப்பித்த சட்டத்தைப்போன்று இருக்கும்.... உண்மையான தேவனைப்பற்றிய அறிவைப் பாதுகாத்த மக்களைப் பூமியினின்று அழித்து ஒழிக்கத்தக்கதாக இந்தத் திட்டத்தை சாத்தானே பின்னின்று தூண்டிவிட்டான். ஆனால் அவனது மறைவான இந்த சதித்திட்டங்கள் மானிடரிடையே ஆளுகைசெய்துகொண்டிருக்கும் எதிர்வல்லமையால் தோற்கடிக்கப்பட்டன.

ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகின்ற இச்சிறு கூட்டத்தில்— வாயில் கதவண்டை அமர்ந்திருக்கும் மொர்தெகாயை புரொட்டஸ்டாண்டு உலகம் பார்க்கிறது. அவனது குணமும் நடத்தையும் தேவனுடைய பிரமாணத்திற்கு ஒரு பயபக்தியை வெளிப்படுத்தியது. ஆண்டவருக்கேற்ற பயத்தைத் தூர எரிந்துவிட்டு, அவரது ஓய்வுநாளை காலின்கீழ்ப்போட்டு

மிதித்துக்கொண்டிருந்த வர்களுக்கு இது ஒரு தொடர்ச்சியான கண்டனமாக அமைந்திருந்தது. அழையாது நுழைந்திருக்கும் இந்த வேண்டாத நபரை, எந்த வழிவகையிலாவது நமது வழியினின்று விலக்கிவிடவேண்டும் என்று எண்ணப்பட்டது.

அதே ஆதிக்க மனப்பான்மை, கடந்தகாலங்களில் உத்தமமாக இருந்தவர்களுக்கு விரோதமாக சதித்திட்டம் தீட்டியது. அதேமனம் தேவனுக்குப் பயந்து அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களை பூமியினின்று ஒழித்துப்போடவேண்டுமென்று தொடர்ந்து முயற்சிசெய்துகொண்டிருக்கிறது. பிரபலமான பழக்க வழக்கங்களையும் பாரம்பரியங்களையும் மனசாட்சியினிமித்தம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற சிறுபான்மையான—தாழ்மையான ஒரு கூட்டத்திற்கு எதிராக, சாத்தான் கோபத்தைத் தூண்டி விடுவான். தேவனுடைய மக்களுக்கு எதிராக மேலான பதவிகளில் இருக்கும் புகழ்பெற்ற மனிதர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படியாத தீயவர்களோடு இணைந்து ஆலோசனை செய்வார்கள்.... வேதாகம ஓய்வுநாளிற்கு ஆதரவாகப் பரிந்துவாதாடுபவர்களுக்கு விரோதமாகக் கொண்டுவரத்தக்கதாக, “வேதவாக்கியங்கள் இவ்வாறு கூறுகின்றன” என்று சொல்லுவதற்கு எதுவுமே இல்லாததால் அந்தக்குறைவை சரிப்படுத்தத்தக்கதாக, ஒடுக்குகின்ற சட்டங்களைத் தங்களது வழிமுறையாக வைத்துக்கொள்வார்கள்.... இந்த யுத்த களத்திலே சத்தியத்திற்கும் பொய்க்குமிடையே இருக்கும் போராட்டத்தின் மாபெரும் இறுதிக்கட்டம் வருகிறது. இந்தக் காரியத்தைக் குறித்து நாம் எந்தவித சந்தேகத்திலும் விட்டுவிடப்படவில்லை. மொர்தெகாயின் நாட்களில் செய்ததைப்போல இப்பொழுதுங்கூட ஆண்டவர் தமது சத்தியத்தையும் தமது மக்களையும் மெய்ப்பித்துக்காட்டுவார். ★

# கடைசிநாட்களில் இரத்தசாட்சிகள்!

**“அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்.” –யோவான் 16:2.**

இரண்டு கொடிகளில் ஒன்றினுக்கடியிலுள்ள வரிசையிலே இந்த உலகிலுள்ள ஒவ்வொரு தனிநபரும் நிற்கவைக்கப்படுவார்.

இரண்டு சேனைகளும் தெளிவாகத் தெரிகின்ற விதத்தில் தனித்துநிற்கும். இந்த வித்தியாசம் மிகவும் குறிப்பிட்டவிதத்தில் தெளிவாகத் தெரிவதினால், சத்தியத்தைப்பற்றித் தெளிவான நம்பிக்கைகொண்ட மக்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் மக்கள் கூட்டத்தோடு வந்து நிற்பார்கள். இறுதியாக முடிவடைகின்ற அந்தப் போராட்டத்திற்குமுன்பு, இந்த மேன்மையான பணி ஒன்று யுத்தகளத்திலே நடைபெறவேண்டியிருக்கும்பொழுது, அநேகர் சிறையிலடைக்கப்படுவார்கள். பட்டணங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் உயிர்தப்புவதற்காக ஓடிப்போவார்கள். சத்தியத்தின் பாதுகாவலர்களாக நிற்பதைத் தெரிந்துகொண்ட அநேகர் கிறிஸ்துவிற்காக இரத்தசாட்சிகளாவார்கள்.

தேவனுடைய பிரமாணத்தின் மீறுதலாக, போப்பின் அமைப்பை சட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்துவதிலே, நமது நாடு நீதியினின்று முற்றிலுமாகத் தனது தொடர்பைத் துண்டித்துக்கொள்ளும்.

எருசலேமிற்கு வரப்போகின்ற அழிவைச் சுட்டிக்காட்டத் தக்கதாக, ரோம சேனை எருசலேமை நெருங்கிவரும் சம்பவம் சீடர்களுக்கு ஒரு அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்போன்று தேவனுடைய பொறுமை எல்லையை எட்டிவிட்டது என்பதையும், தேசத்தின் அக்கிரமத்தின் அளவு நிறைவாகிவிட்டது என்பதையும், இரக்கத்தின் தூதன் இனி ஒருபோதும் திரும்பிவராமல் பறந்துசெல்வதற்கு ஆயத்தமாகிவிட்டான் என்பதையும் இந்த மருளவிழுகை ஒரு அடையாளமாகவிருந்து நமக்குக்

காட்டுகிறது. யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று தீர்க்கதரிசிகளால் விவரிக்கப்பட்ட அத்தகைய வேதனை துன்பம் ஆகியவை நிறைந்த காட்சிகளுக்குள் தேவனுடைய மக்கள் வீழ்த்தப்படுவார்கள். துன்பப்படுகிற உத்தமமான மக்களின் கூக்குரல் வானபரியந்தம் எட்டினது. பூமியினின்று ஆபேலின் இரத்தம் முறையிட்டதுபோல், கல்லறைகளினின்றும், கடலிலுள்ள சவக்குழிகளினின்றும், மலைகளிலுள்ள அடிநிலக்குகைகளினின்றும் மடங்களின் அடிநிலக் கல்லறைக்கூடங்களினின்றும் இரத்த சாட்சிகளின் அழுகையின் குரல்கள் தேவனை நோக்கிச் சென்றன. “பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்...”(வெளி. 6:10) என்று கேட்கப்பட்டது.

ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபொழுது, வெளிப்படுத்தின விசேஷ கனாகிய யோவான் தேவனுடைய வசனத்திற்காகவும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த சாட்சிக்காகவும் கொல்லப்பட்ட கூட்டத்தார் பலிபீடங்களுக்கு அடியில் இருப்பதை தரிசனத்தில் கண்டார். இதற்குப் பிறகு, வெளி. 18–ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருந்த காட்சிகள் தோன்றின. அப்பொழுது, உத்தமமாகவும் உண்மையாகவும் இருப்பவர்கள் பாபிலோனிலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்பட்டார்கள்.

எடுக்கப்பட்ட உயிரை கிறிஸ்து மீண்டும் கொடுப்பார். ஏனெனில் அவர் ஜீவனைக் கொடுக்கிறவராக இருக்கிறார். அவர் நீதிமான்களை நித்திய வாழ்வினால் அலங்கரிப்பார். ★

# அசைக்கப்படும் அந்த நேரம்!

**“அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.” —மத்தேயு 24:12.**

தேவனுடைய மக்கள் அவர்களுடைய நெற்றிகளிலே முத்திரையிடப்படுகின்றனர். இது காணப்படத்தக்கதான முத்திரையோ அல்லது அடையாளமோ அல்ல. அவர்கள் அசைக்கப்படாதபடிக்கு ஆவிக்குரிய பிரகாரமாகவும் அறிவுப்பூர்வமாகவும் சத்தியத்திலே உறுதிப்பட நிலைப்படுத்தப்படுவதாகும். தேவனுடைய மக்கள் முத்திரையிடப்பட்டு, அந்த மாபெரும் அசைக்கப்படுதலிற்கு ஆயத்தமாக்கப்பட்டபின்பு அக்காரியம் நடைபெறும். உண்மையிலேயே அது ஆரம்பமாகிவிட்டது. என்ன வரப்போகிறது என்பதை அறிந்துகொள்வதற்காக நமக்கு எச்சரிப்பு கொடுப்பதற்காக தேவன் கொடுக்கும் நியாயத்தீர்ப்புகள் (தண்டனைகள்) இவ்வுலகில் வந்திருக்கின்றன.

மாபெரும் கலக்கமும் குழப்பமும் நிறைந்த நாட்கள் வேகமாக நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன. தூதனுடைய உடைகளை அணிந்தவனாக சாத்தான் வந்து ஏமாற்றுவான். கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையுங்கூட வஞ்சித்துப்போடுவான். அநேக கர்த்தாக்களும் அநேக ஆண்டவன்மார்களும் இருப்பார்கள். அனைத்துவகையான கொள்கைகளையும் காற்று அடித்துக்கொண்டுவரும்.

மிருகத்தின் முத்திரையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப்படுவோம். ஏளனத்திற்கும் அவமதிப்பிற்கும் சிறைவாசம், மரணதண்டனை என்ற பயமுறுத்தல்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுப்பதைவிட, படிப்படியாக உலகப்பிரகாரமான கோரிக்கைகளுக்கும் உலகப்பிரகாரமான பழக்கங்களுக்கும் ஒத்திசைவாகச்சென்று அந்த வல்லமைகளுக்கு ஒப்புக்கொடுப்பது அதிகக் கடினமாக காரியமல்ல என்பதைக் காண்பார்கள். இது தேவனுடைய கட்டளைகளுக்கும் மனிதனுடைய கட்டளைகளுக்குமிடையே உள்ள போராட்டமாகும். இந்தக் காலத்திலே சபையிலே பொன்னிலுள்ள களிம்பு அகற்றப்பட்டு சுத்திகரிக்கப்படும். உண்மையான தேவ பக்தியானது

அற்பமான பகட்டுப்பொருள், தோற்றம் ஆகியவையினின்று தெளிவாக வேறுபட்டுக் காணப்படும். நம்மால் வியந்து பாராட்டப்பட்ட—மின்னுகிற நட்சத்திரங்களைப்போன்று பிரகாசித்த அநேகர், பின்னர் இருளிலே சென்று மங்கி மறைந்து போவார்கள். உமியானது மேகம்போன்று மேலே எழும்பி காற்றினால் அடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்பட்டுவிடும். வளமான கோதுமைக்களங்களிலுங்கூட உமி பறக்கடிக்கப்பட்டு போய்விடும். ஆசரிப்புக்கூடாரத்தின் அணிமணிகளை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் தரிப்பிக்கப்படாவிட்டால், தங்கள் சொந்த நிர்வாணத்தின் வெட்கத்திலே காணப்படுவார்கள்.

ஆனால் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் மனிதருமுண்டு. ஒழுங்கைமீறி சத்தியத்தைவிட்டு விலகிச்செல்வதினால் ஏற்படும் வெற்றிடங்களை அவர்கள் நிரப்புவார்கள்....

உண்மையானக கிறிஸ்தவக் கொள்கைகளைப் பின்பற்றுவோர், இத்தகையோர் விட்டுச்சென்ற இடங்களைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் விசுவாசமுள்ள நம்பிக்கைக்குரிய குடும்பங்களாக இருந்து, தேவனுடைய வார்த்தையை அதின் உண்மையான தோற்றத்திலும் எளிமையிலும் எடுத்துக்கூறுவார்கள். உண்மையான—உத்தமமான மக்களினின்று பற்றுறுதியற்றவர்கள் பிரிக்கப்படத்தக்கவிதத்தில் ஆண்டவர் கிரியைசெய்வார். அணிவரிசைகள் குறைவுபடுவதில்லை. ஒழுங்குமீறி மருளவிழுந்துபோனவர்களால் ஏற்பட்ட வெற்றிடங்களை, உறுதியான உண்மையான மக்கள் நிரப்பிவிடுவார்கள். ★

# தேவனுடைய மக்களுக்கு வரப்போகின்ற அசைக்கப்படுதலைப்பற்றிய ஒரு தரிசனம்!

**"இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாகக் கோகு வரும்காலத்தில் என் உக்கிரம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகி□."**

**—எசேக்கியேல் 38:18,19.**

சிலர் பலத்த விசுவாசத்தோடும், கடுந்துயர் நிறைந்த கூக்குரலோடும் தேவனிடத்தில் மன்றாடுவதைக் கண்டேன். அவர்களது உள்மனப்போராட்டத்தை வெளிப்படையாகக் காட்டும்வண்ணமாக, அவர்களது முகங்கள் வெளுத்தும், மிகப் பதற்றமடைந்தும் காணப்பட்டன. உறுதியும் அதிக ஆர்வமும் அவர்களது முகங்களிலே காணப்பட்டன. அவர்களது நெற்றிகளிலிருந்து பெரும் வியர்வைத் துளிகள் விழுந்தன...

கேடுசெய்யும் தூதர்கள் சுற்றிலும் நெருக்கிநின்று அங்கு இருள் கவியும்படிச் செய்து, இயேசுவை அவர்களது பார்வையினின்று மறைக்கும்படி பெரும் முயற்சிகள் செய்தார்கள். அதன்மூலம், அவர்களது எண்ணங்கள் தீய தூதர்களைச் சுற்றியே இழுக்கப்பட்டு, இவ்வாறாக, அவர்கள் தேவனை நம்பாமல், அவருக்கு விரோதமாக முறுமுறுக்கும்படி அவர்களை வழிநடத்தலாம் என்று முயன்றார்கள். அவர்கள் தங்களது கண்களை மேலே உயர்த்தி நோக்குவதில்தான் அவர்களது ஒரே பாதுகாப்பு இருந்தது. தேவதூதர்களுக்கு அவர்களது மக்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்வமுள்ள மக்களைச் சுற்றிலும், தீய தூதர்களால் நச்சு நிறைந்த சூழ்நிலை நிறைந்திருந்தபோதிலும் பரலோகத்தின் தூதர்கள் தொடர்ச்சியாக அவர்கள்மீது தங்களது செட்டைகளால் விசிறி அங்கிருந்த அந்தகாரத்தை

சிதறடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெபித்துக்கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து உருக்கமாகக் கதறும்பொழுது, சில சமயங்களில் இயேசுவிடமிருந்து வந்த ஒளிக்கதிர்கள் அவர்கள்மீது வீசியது. இவ்வாறாக, அவர்களது இதயங்களைத் திடப்படுத்தி, முகங்களைப் பிரகாசிப்பிக்கச் செய்தார். இந்தக் கடுந்துயரிலும் மன்றாட்டிலும் சிலர் பங்குகொள்ளவேயில்லை என்பதையும் நான் கண்டேன். அவர்கள் விருப்புவெறுப்பின்றி கவலையற்றுக் காணப்பட்டார்கள்.... தேவ தூதர்கள் ... உருக்கத்தோடு ஜெபிப்பவர்களின் உதவிக்குச் சென்றார்கள்.... தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எந்த உதவியையும் தேட முயற்சிக்காதவர்களைவிட்டுச் சென்றார்கள். என்னாலும் அவர்களைக் காணமுடியவில்லை.

நான் பார்த்த இந்த அசைவின் பொருள் என்ன என்பதை வினவினேன். லவோதிக்கேயருக்குக் கொடுக்கப்பட்ட உண்மையுள்ள சாட்சியின் ஆலோசனையால் அழைக்கப்பட்ட, நேரடி சாட்சியினால் ஏற்படுவதுதான் இந்த அசைவு என்று எனக்குக் காட்டப்பட்டது....

வெகுவாக அசைக்கப்பட்ட ஒரு கூட்டத்தைப் பார்க்கும்படி எனது கவனம் திருப்பப்பட்டது.... அவர்களைச் சுற்றிலுமுள்ள பாதுகாக்கும் தூதர்களின் கூட்டம் இருமடங்காகியது. அவர்கள் தலையிலிருந்து பாதங்கள் வரை ஆயுதங்களால் தரிப்பிக்கப்பட்டிருந்தார்கள்....

ஆயுதம் தரிப்பிக்கப்பட்டவர்கள் மிகுந்த வல்லமையோடு சத்தியத்தைப் போதிப்பதை நான் கேட்டேன். அதற்குப் பலனிருந்தது.... இந்தப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது எது எனக் கேட்டேன். ஒரு தூதன் என்னை நோக்கி: “இதை ஏற்படுத்தியது பின்மாரியே, தேவ சமூகத்தினின்று வந்த புதுப்பெலனே, மூன்றாம் தூதனின் உரத்த சத்தமே” என்று பதிலளித்தான். ★

# உரத்த சத்தத்திற்கடியில் ஐக்கியமும் பிரிவினையும்!

**"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்." —ஏசாயா 60:1,2.**

துன்ப துயரங்கள் நம்மைச் சுற்றிலும் சூழும்பொழுது, நமது அணிகளிலே விலகிச்செல்லுதலும் இருக்கும். ஐக்கியமும் இருக்கும். இப்பொழுது, சண்டைசெய்வதற்கான ஆயுதங்களை எடுக்க ஆயத்தமாயிருக்கின்ற சிலர் உண்மையாகவே ஆபத்து வருகின்ற வேளைகளில் தாங்கள் உறுதியான கன்மலையின்மீது கட்டப்படவில்லை என்பதை வெளிப்படுத்திவிடுவார்கள். அவர்கள் தங்களைச் சோதனைக்கு ஒப்புக்கொடுத்துவிடுவார்கள். சிலர் ஏராளமான வெளிச்சத்தையும் அருமையான சலுகைகளையும் பெற்றிருந்தபோதிலும், அவைகளைப் பெருகச்செய்யாமலிருந்து விட்டதால், ஏதாவது ஒரு அல்லது வேறொரு சாக்குப்போக்கைச் சொல்லி நம்மைவிட்டுப் பிரிந்துசென்றுவிடுவார்கள். சத்தியத்தின் மீதுள்ள அன்பை அவர்கள் பெற்றுக்கொள்ளாததினால் சத்துருவின் வஞ்சகங்களினால் இழுத்துக்கொள்ளப்படுவார்கள். வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் கொள்கைகளுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப்போவர்கள். ஆனால் வேறுவகையாகப் பார்க்குமிடத்து காரியம் பின்வருமாறு இருக்கும். அதாவது, உபத்திரவம் எனப்படும் புயல் நம்மை மோதித்தாக்கும்பொழுது, உண்மையான ஆடு தனது உண்மையான மேய்ப்பனின் குரலைக் கேட்கும். இழக்கப்பட்டுப்போனவர்களை மீண்டும் கொண்டுவருவதற்காக சுயத்தை மறுக்கும் முயற்சிகள் மிகுதியாகச் செய்யப்படும். சபையினின்று விலகி வழிதப்பித் திரிந்த அநேகர் அந்த மாபெரும் மேய்ப்பனைப் பின்பற்றுவதற்காக மீண்டும் திரும்பி வருவார்கள். தேவனுடைய மக்கள் ஒன்றாக இணைந்து சத்துருவிற்குமுன் ஒரு ஐக்கியமுள்ள கூட்டணியாக உருவாகி நிற்பார்கள்.

சாதாரணமாகக் காணப்படுகிற ஆபத்துகளினிமித்தம், மேலாதிக்கஞ செலுத்தவேண்டுமென்பதற்காக ஏற்படும் சச்சரவுகள் நின்றுபோகும். யார் பெரியவராக மதிக்கப்படவேண்டுமென்பதுகுறித்து எந்தவிதமான சண்டையும் இருக்காது. உண்மையான விசுவாசிகளில் ஒருவர்கூட, “நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் நான் அப்பல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும்” கூறமாட்டான். “நான் கிறிஸ்துவை விடாது பற்றிக்கொண்டிருக்கிறேன். அவரை என் சொந்த இரட்சகராக வைத்து அவரில் களிகூருகிறேன்” என்பதே அவர்களது சாட்சியாக இருக்கும்.

மூன்றாம் தூதனின் தூது ஒரு உரத்தசத்தமாக பெருக்கமடையும்போது, அந்த அறிவிப்பு மகா வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் செய்யப்படும். தேவ மக்களின் முகங்கள் பரலோக வெளிச்சத்தால் பிரகாசிக்கும்.

அரசாங்கத்தில் ஆளுகைசெய்பவர்களில் அநேகர் சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மத்தியிலும் தேவனுடைய பிரதிநிதிகள் உண்டு. எனினும் சிலர் சத்தியத்திற்காக திருப்பப்படுவார்கள்.... தேவனுடைய பிரதிநிதிகளில் ஒரு சிலர் தீமையின் மாபெரும் தொகுதியையே நொறுக்கித்தள்ளிப்போடும் வல்லமை உடையவர்களாக இருப்பார்கள். இவ்வாறு மூன்றாம் தூதனின் தூது அதின் பணியை முடிக்கும்வரை, இந்த வேலை தொடர்ந்து நடைபெறும். பின்னர் அந்த மூன்றாம் தூதனின் உரத்த சத்தத்திலே இந்தப் பிரதிநிதிகளுக்கு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அவர்களில் சிலர் மனந்திரும்பி இக்கட்டுக்காலத்திலே பரிசுத்தவான்களோடு துன்பத்தை அனுபவிப்பார்கள். ★

# சபை விழுந்துபோய்விடுவது போன்று காணப்படுதல்!

**“சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.” —ஏசாயா 49:14,15.**

சாத்தான் மக்களை ஏமாற்றுவதற்காக அவனுடைய அற்புதங்களைச் செய்வான். தனது வல்லமையை மிகவும் உயர்வானதாக நிலைநிறுத்திவைப்பான். சபை விழுந்துவிடுவதுபோல் தோன்றும். ஆனால், அது விழுகிறதில்லை. அதாவது, சீயோனிலுள்ள பாவிகள் சலித்து வெளியேற்றப்படும்வரை சபை நிற்கும். அருமையான கோதுமையினின்று உமி அகற்றப்படும். இது ஒரு பயங்கரமான சோதனை. எனினும், இது நடைபெற்றாக வேண்டும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டவர்கள் பாவக்கறைதிரையின்றி, அவர்களது வாய்களிலே கபடமின்றி, உத்தமமும் உண்மையுமான மக்களோடு காணப்படுவார்கள். வேறு எவருக்கும் அங்கு இடமில்லை.... சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து தங்களது ஆத்துமாக்களை தூய்மைப்படுத்திக்கொண்ட மீதியானவர்கள் அந்த இக்கட்டு நிறைந்த வழிமுறையின்மூலமாக பலனடைந்து, சுற்றிலும் காணப்படுகின்ற மருளவிழுகைக்கு மத்தியில், தங்களது பரிசுத்த அழகை வெளிப்படுத்திக்காட்டுவார்கள்.

ஆண்டவர் தமது சபையை நேசிக்கிறார் என்பதை நான் அறிவேன். இந்த சபை தனித்தனி சிறுகுழுக்களாக சிதறடிக்கப்படவோ அல்லது அதின் ஒழுங்கு குலைக்கப்படவோ கூடாது. ஏனெனில் இதில் கொஞ்சங்கூட நிலைத்திருக்கும் தன்மை இல்லை. மேலும் இப்படிப்பட்ட ஒரு காரியம் நடக்கும் என்பதற்கான ஒரு சிறிதளவு ஆதாரமுமில்லை. இத்தகைய பொய்யான செய்தியைக்கேட்டு, மற்றவர்களையும்

கெடுக்க நினைக்கிறவர்கள் ஏமாற்றப்படுவார்கள். மேலும் அதிகமான ஏமாற்றங்களைச் சந்திப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக வேண்டும். அவர்கள் ஒன்றுமில்லாமற்போய்விடுவார்கள்.

இஸ்ரவேலின் தேவன் இன்னும் அவர்களை நடத்திவருகிறார். முடிவுபரியந்தம் அவர்களோடு தொடர்ந்து இருப்பார் என்ற காரியத்தை தெளிவாக விளங்கிக்கொள்ளும்போது, நானும் தைரியப்படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகிறேன்.

இப்பொழுது தேவன் நிலைநாட்டியிருக்கிற அடித்தளத்தினின்று இறங்கி வெளியே செல்லக்கூடாது. அமைக்கப்பட்ட எந்த புதிய நிறுவனங்களுக்குள்ளும் நாம் பிரவேசிக்கக்கூடாது. சத்தியத்தினின்று மருளவிழுந்துவிட்டோம் என்பதே இதன் பொருளாகும்.

சபை தனது மிகக் கடுமையான போராட்டத்திற்குள் வெகுசீக்கிரத்தில் பிரவேசிக்கவிருக்கிறது. பூமியிலே தேவனுக்கு மிகவும் பிரியமானது ஒன்று உண்டானால்—அது அவரது சபையே. அடித்தளத்தினின்று தீமையின் கூட்டமைப்பு வல்லமையோடு கிளர்ந்தெழும். சாத்தான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது எல்லாவித அவதூறுகளையும் சுமத்துவான். அவனது சாத்தானிய கண்டுபிடிப்புகளாலும், பொய்யான காரியங்களாலும் அவர்களை ஏமாற்றவோ வஞ்சிக்கவோ முடியாது. ஆனால் "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்"–அப். 5:31. இவ்வாறு உயர்த்தப்பட்ட கிறிஸ்து நமது தலைவரும் பிரதிநிதியுமானவர். அவர் தமது இதயத்தை அடைத்துக்கொள்வாரா? அல்லது தமது கரத்தை விலக்கிக்கொள்வாரா? அல்லது அவரது வாக்குத்தத்தத்தைப் பொய்யாக்கிப்போடுவாரா? அல்ல. ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார். ★

ஜுலை 15

# சபை தூய்மையாக்கப்படல்!

**“அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்.” —மல்கியா 3:3.**

மா பெரும் வஞ்சகனின் அற்புதஞ்செய்யும் வல்லமை மேலும் அதிகத் தீர்மானமாக வெளிப்படவேண்டிய வேளை நம்மீது வந்துவிட்டது. அவனது ஏமாற்றங்கள் அவைகளின் வஞ்சிக்கும் கவர்ச்சியோடு பெருகும். அவைகள் குழப்பமடையச்செய்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் ஏமாற்றிப்போடும். அந்தகாரத்தின் பிரபு அவனுடைய தீயதூதர்களோடு இணைந்து கிறிஸ்தவ உலகத்தின்மீது கிரியைசெய்துகொண்டிருக்கிறான். கிறிஸ்துவின் பெயரைச் சொல்லுகிறவர்களை இருளின் கொடியின்கீழ் நிற்கும்படித் தூண்டிவிடுகிறான். தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்கிறவர்களோடு யுத்தஞ்செய்யும்படியாகத் தூண்டுகிறான்.

தேவ மக்களின் கரத்தில் மிருகத்தின் முத்திரையை வைப்பதற்காக மருளவிழுந்துபோன சபை பூமியின் பாதாளத்தின் வல்லமையோடு இணையும். தேவனுடைய பிள்ளைகள் மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கவேண்டுமென்றும், அவர்கள்மீது ஆதிக்கஞ்செலுத்தும் தேவனுடைய பிரமாணத்திற்கு உத்தமமாக இருப்பதை விட்டொழிக்கவேண்டுமென்றும், மேலும் போப்பானவருக்கு வணக்கஞ்செலுத்தவேண்டுமென்றும் கட்டாயப்படுத்த முயற்சிகள் செய்யப்படும். அப்பொழுதுதான் மனிதரின் ஆத்துமாக்களைச் சோதிக்கின்ற காலம் வரும். மருளவிழுந்துபோன சபைகளின் கூட்டுறவு அமைப்பு, தேவனுக்கு விசுவாசமாக இருக்கும் குடிமக்கள் யேகோவாவின் பிரமாணத்தைக் கைவிட்டுவிடவேண்டும் என்றும், அவரது வார்த்தையின் சத்தியத்தை ஏற்க மறுக்கவேண்டுமென்றும் கோரிக்கை வைக்கும். அப்பொழுது பொன்னினின்று கழிவு அகற்றப்படும்.

யார் தேவ பக்தியுடையவர்கள், யார் உத்தமமும் உண்மையுமானவர்கள் என்பதும், யார் விசுவாசமற்றவர்கள், களிம்பு, வெறும் தகரம் என்பதும் வெளிப்படையாகத் தெரியும். தேவனது காற்றாடியில் எத்தகைய உமிப்படலமும் அடித்துச்செல்லப்படும்! இப்பொழுது நமது கண்கள் கண்டறியக்கூடிய வளமான கோதுமை மணித்தளங்களிலே இருந்து, தேவனுடைய காற்றாடி உமியைப் பறக்கடித்து வெளியேற்றும். கிறிஸ்துவிலே மையங்கொண்டிராத அனைவரும் அந்த நாளில் கடுமையான சோதனைகளிலும் பரீட்சைகளிலும் நிற்கமுடியாது. கிறிஸ்துவின் நீதியினால் தரிப்பிக்கப்பட்டிருக்கும் அனைவரும் சத்தியத்திற்கும் கடமைக்கும் உறுதியாக நிற்பார்கள். தங்களது சொந்த நீதியிலே நம்பிக்கைகொண்டவர்கள் அந்தகாரப் பிரபுவின் கருப்புக்கொடியின்கீழ் அணிவகுத்து நிற்பார்கள். அதன்பிறகு கிறிஸ்துவிற்கா அல்லது போலியாளிற்கா? யாருக்காக அவர்களது தெரிந்தெடுப்பு என்பது கண்டறியப்படும்.

சுயத்தின்மீது நம்பிக்கையற்றிருந்தவர்கள், தாங்கள் வைக்கப்பட்டிருந்த சூழ்நிலையிலே, புகழுக்கு ஏற்படும் அவமானத்தைச் சந்திக்க தைரியமின்றி இருந்தவர்கள் இறுதியிலே பகிரங்கமாக தாங்கள் கிறிஸ்துவிற்கும் அவரது பிரமாணத்திற்கும் உறுதியாக நிற்பதாக அறிவிக்கிறார்கள். அதே சமயத்தில் செழிப்பாக வளர்ந்த மரங்களைப்போல தோற்றங்கொடுத்திருந்தவர்கள், கனியற்றவர்களாகக் காணப்பட்டு, தீமையைச் செய்வதற்காக திரள்கூட்டத்தோடு சேர்ந்து, மருளவிழுகையின் அடையாளத்தை தங்களது நெற்றியிலாவது கையிலாவது பெற்றுக்கொள்வார்கள். ★

ஜூலை 16

# கிறிஸ்துவைப் போன்று சாத்தான் தோற்றமளித்தல்—1

**"அதற்கு அவர்: நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்களைப் பின்பற்றாதிருங்கள்." —லூக்கா 21:8.**

இந்தக் காலத்திலே அந்திக்கிறிஸ்து உண்மையான கிறிஸ்துவைப்போன்று தோன்றுவான். நமது உலகத்திலுள்ள நாடுகளிலே தேவனுடைய பிரமாணம் முற்றிலும் வெறுமையாக்கப்பட்டுவிடும். தேவனுடைய பரிசுத்த பிரமாணத்திற்கு விரோதமான கலகம் முற்றிலும் முதிர்ந்திருக்கும். ஆனால் இந்தக் காலத்தில் உண்மையான தலைவனான சாத்தான் ஒரு ஒளியின் தூதனுடைய உடையைத் தரித்திருப்பான். மனிதர் வஞ்சிக்கப்பட்டு, அவனை தேவனுடைய இடத்தில் உயர்த்திவைத்து, அவனை தேவனாக்கிவிடுவார்கள். ஆனால் சர்வவல்லவர் குறுக்கிடுவார். மருள விழுந்துபோன சபைகள் சாத்தானை உயர்த்துவதிலே இணையும் பொழுது, அவர்கள்மீது "ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்" (வெளி. 18:8) என்கிற தீர்ப்பு அறிவிக்கப்படும்.

ஒளியின் தூதனைப்போன்ற மாறுவேடத்தில் அவன் (சாத்தான்) பூமி முழுவதும் அதிசயங்களை நடப்பிக்கிறவனாக நடந்துதிரிவான். அவன் மொழி நடையிலே மிக உயர்ந்த ஆர்வமூட்டும் கருத்துக்களை மக்கள்முன் வைப்பான். அவனால் நல்ல வார்த்தைகள் பேசப்படும். நல்ல செயல்கள் செய்யப்படும். கிறிஸ்துவைப் போன்று தன்னை அப்படியே உருவகப்படுத்திக்காட்டுவான். ஆனால் ஒரு காரியத்தில் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் காணப்படும். அதாவது, தேவனுடைய பிரமாணத்தினின்று மக்களை விலகச்செய்வான்.

ஓய்வுநாள் வாரத்தின் ஏழாம் நாளினின்று முதலாம் நாளுக்கு மாற்றப்பட்டாயிற்று என்று வலியுறுத்திக் கூறுவான். வாரத்தின் முதல் நாளின் ஆண்டவனான—அவனுக்கு (சாத்தானுக்கு) உண்மையாக இருப்பவர்களுக்கு, ஒரு பரீட்சையாக போலியான ஓய்வுநாளை முன்னிலைப்படுத்துவான்.

பரலோகத்தின் மகிமையும் கடந்தகாலத்தில் நடைபெற்ற உபத்திரவமும், மீண்டும் திரும்பவந்து, இரண்டையும் ஒன்றாக இணைத்துப்பார்க்கும்பொழுது, பூமியிலே அப்பொழுது உயிரோடு இருக்கும் தேவனுடைய மக்களின் அனுபவம் எப்படி இருக்குமென்று அதைப்பற்றிக் கருத்துக் கூறுவது கூடாதகாரியமாகும். தேவ சிங்காசனத்தினின்று புறப்பட்டுவருகிற வெளிச்சத்திலே அவர்கள் நடப்பார்கள். பரலோகத்திற்கும் இப்பூவுலகத்திற்கும் இடையே தூதர்களின்மூலமான தொடர்பு, தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். தீய தூதர்களால் சூழப்பட்டிருக்கும் சாத்தான் தன்னை தேவனென்று உரிமைகோரிக்கொண்டு, வஞ்சிப்பதற்காக கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்துப் போடத்தக்கதாக, அனைத்து வகையான அற்புதங்களையும் செய்வான். தேவனுடைய மக்கள் அற்புதங்களைச் செய்வதின்மூலம் தங்களது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் செய்யப்படுகின்ற அற்புதங்களுக்குப்பதிலாக, போலியைச் செய்துகாட்டிவிடுவான். சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்ட மக்கள் யாத்திராகமம் 31:12–18–ல் சொல்லப்பட்டுள்ள அடையாளத்தில் தங்களது வல்லமையைக் கண்டுகொள்வார்கள். “எழுதப்பட்டிருக்கிறதே என்ற ஜீவனுள்ள வார்த்தையிலே தங்களது உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அந்த ஒரு அடித்தளத்தில் மாத்திரமே அவர்கள் பாதுகாப்பாக நிற்கமுடியும்.” ★

# கிறிஸ்துவைப்போன்று சாத்தான் தோற்றமளித்தல் – 2

**“அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.” –2 கொரிந்தியர் 11:14.**

தேவனுடைய மக்களுக்கு எதிராக தான் நடத்தப்போகும் கடைசிப்போராட்டத்திலே சாத்தான் மக்களை ஏமாற்றத்தக்கதான வேலைகளைச் செய்ய ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறான். அவன்தான் செய்கிறானென்பதை அவர்கள் அறியாமல் இருக்கத்தக்கதாக இவ்வாறு செய்கிறான். “இதைக் குறித்து ஆச்சரியப்படவேண்டாம். சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே...” தேவனுடைய மக்களை அலைக்கழிக்கவும் சோதிக்கவும் தவறாக வழிநடத்தவும் சாத்தான் தன் வல்லமை முழுவதையும் பயன்படுத்துவான்.

நமது ஆண்டவரை சாத்தான் நேருக்குநேர் முகம்நோக்கிப் பார்க்கவும் சோதிக்கவும் இழித்துரைக்கவும் துணிகரங்கொண்டவனாக இருந்தான். அவன் அவரைத் தனது புயங்களினால் தூக்கி தேவாலயத்தின் உப்பரிகைக்குத் தூக்கிச்செல்ல வல்லமையுடையவனாகவும் இருந்தான். மேலும் மிக உயர்ந்த மலைக்கும் அவரைத் தூக்கிச்சென்றான். அவன் தங்களது ஆண்டவரைவிட மிகக் குறைந்த ஞானமுள்ள அவனது சூழ்ச்சி மற்றும் வல்லமைபற்றி முற்றிலும் அறியாத நிலையிலிருக்கின்ற இந்தக் காலத்திலுள்ள மானிடத்தலைமுறையின்மீது, மிகவும் அதிசயிக்கத்தக்க அளவிற்கு தனது வல்லமையைப் பயன்படுத்துவான்.

இயல்பிலேயே அவனது கட்டளையின்படி காரியங்களைச் செய்பவர்களது உடல்களை ஆச்சரியமானவிதத்தில் பாதிப்பான்.

இயேசு கிறிஸ்துவைப்போன்று உருவ அமைப்பில் வந்து, பெரும் அற்புதங்களைச் செய்வான். மனிதர் இயேசு கிறிஸ்துதான் என்றெண்ணி அவன் காலில் விழுந்து பணிந்துகொள்வார்கள்.

உலகம் கிறிஸ்துவென்று மகிமைப்படுத்துகின்ற இந்த ஜீவியை (சாத்தான்) நாம் வணங்கவேண்டுமென்று கட்டளையிடப்படுவோம். நாம் என்ன செய்வோம்? இவன் மனிதனின் மிகப்பெரிய சத்துரு என்றும், எனினும் இவன் தன்னை தேவன் என்று உரிமைகோருகிறான் என்றும், இப்படிப்பட்ட எதிராளிக்கு விரோதமாக கிறிஸ்து எங்களுக்கு எச்சரிப்பு கொடுத்திருக்கிறார் என்றும் அவர்களுக்குச் சொல்லுங்கள். மேலும் கிறிஸ்து இரண்டாம் முறையாகத் தோன்றும்பொழுது அவரது வருகை மகா வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் இருக்குமென்றும், ஆயிரமாயிரமான பதினாயிரம் பதினாயிரமான தூதர்களோடு அவர் வருவார் என்றும், அவர் வரும்பொழுது, அவரது குரலை நாங்கள் அறிவோமென்றும் அவர்களிடத்தில் கூறுங்கள்.

தான் கிறிஸ்துவென்று உரிமைகோரிக்கொண்டு, தனியாக உங்கள் கண்களுக்குமுன் அற்புதங்களைச் செய்வான். தேவனுடைய சத்தியத்தின்மீது உங்களது பாதங்கள் திடமாக நிலைநிறுத்தப் பட்டிருக்காவிட்டால் அடித்தளத்தினின்று இழுத்துச்செல்லப்படுவீர்கள்.

சாத்தான் முடிவுபரியந்தம் யுத்தத்தை நடத்தத் தீர்மானித்திருக்கிறான். தான் கிறிஸ்துவென்று உரிமைகோரியவனாக—ஒளியின் தூதனின் வேடத்தைத் தரித்தவனாக வந்து, உலகத்தை வஞ்சித்துப் போடுவான். அவன் வெற்றி மிகவும் குறுகியதே. யாருடைய பாதங்கள் நித்திய சத்தியத்தின் கொள்கைகளிலே உறுதியாக ஊன்றப்பட்டிருக்கின்றவோ, அவர்களை எந்தப் புயலினாலும் அல்லது சூறாவளியினாலும் அசைக்கமுடியாது. ஏறக்குறைய உலகமனைத்தும் மருளவிழுந்துகிடக்கும்பொழுது, இவர்கள் உறுதியாக நிற்க பெலனுடையவர்களாக இருப்பார்கள். ★

# சாத்தானின் வல்லமையால் செய்யப்படும் அற்புதங்கள் – 1

**“ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசி களும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.”**

**–மத்தேயு 24:24.**

தன்னுடைய அற்புதங்களைச் செய்யும் வல்லமையால், முழு உலகத்தையும் ஏமாற்றுவதற்கு சத்துரு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான். உருவத்தில் இயேசு கிறிஸ்துபோன்று தன்னைக் காட்டத்தக்கதாக ஒளியின் தூதர்களின் உருவத்தை எடுத்துக்கொள்வான்.

அவனது வல்லமை எவ்வளவிற்கு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவிற்கு அதிகமாக, அப்படியே நடைமுறைக்கேற்றபடி அற்புதங்களைச் செய்வான். வேதவாக்கியங்களிலே “அந்த அற்பதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்குவான்” (வெளி. 13:14) என்று கூறப்பட்டிருக்கிறது. தான் செய்கிறதாக மாய்மாலங்காட்டும் காரியங்களில் மட்டுமல்லாமல் அனைத்தையும் செய்வான். இந்த வேதவாக்கியத்திலே வெறுமனே ஏமாற்று வேலைமட்டும் செய்யாமல், அதற்கும் அதிகமாக செய்வான் என்பது நமது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. அவனுக்கும் ஓர் எல்லை உண்டு. அதற்கப்பால் அவனால் போகமுடியாது. இச்சமயத்தில் தான் தனக்கு உதவியாக ஏமாற்றுவேலைகளைச் செய்கிறான். உண்மையிலேயே செய்வதற்கு தனக்கு வல்லமையில்லாத காரியங்களைப் போலியாகச் செய்ய ஆரம்பிக்கிறான். கடைசிநாட்களிலே உலகத்தில் கிறிஸ்து இரண்டாம் வருகை வந்ததுபோன்ற விதத்தில் மக்கள் நம்பும்படியாகத் தோன்றுவான். உண்மையிலேயே தன்னுடைய தோற்றத்தை ஒளியின் தூதனைப்போன்று மாற்றிக்கொள்வான். இயேசு கிறிஸ்துவைப் போன்று காணப்பட்டு, மாபெரும் அற்புதங்களைச் செய்வான். இயேசு கிறிஸ்துவென எண்ணி, மக்கள் அவனது காலில் விழுந்து தொழுது கொள்வார்கள். உலகம் கிறிஸ்துவென்று எண்ணி,

மகிமைப்படுத்திக்கொண்டிருக்கும் அந்த நபரைத் தொழுதுகொள்ளும்படி நாமும் கட்டளையிடப்படுவோம்.

"பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலம்" (வெளி. 3:10) நமக்கு முன்பாக இப்பொழுது இருக்கிறது. தேவனுடைய வார்த்தையிலே யாருடைய விசுவாசமெல்லாம் உறுதியாக நாட்டப்படவில்லையோ அவர்கள் வஞ்சிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவார்கள். மானிடர்மீது ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, "அநீதியின் அனைத்து வஞ்சகங்களோடும் சாத்தான் கிரியைசெய்கிறான். அவனது வஞ்சகங்கள் தொடர்ச்சியாக பெருகும், மனிதர் அவனது சோதனைகளுக்குத் தாங்களாக ஒப்புக்கொடுத்தால் மாத்திரமே அவனது இலக்கை அவன் அடையமுடியும். சத்தியத்தைப்பற்றிய அறிவை உலகத்தோடு தேடி, கீழ்ப்படிதல்மூலமாக தங்களது ஆத்துமாக்களைத்தூய்மைப்படுத்திக்கொள்ளத்தக்கதாக, தொடர்ந்து முயற்சித்து, இவ்வாறு செய்வதின்மூலம், இந்தப் போராட்டத்திற்காக என்ன ஆயத்தஞ்செய்யலாம் என்றிருப்பவர்கள், சத்தியத்தின் தேவனிடத்திலே ஒரு நிச்சயமான பாதுகாப்பைக் கண்டடைவார்கள். "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி. 3:10) என்பதுவே மீட்பரின் வாக்குத்தத்தமாகியிருக்கிறது. தன்னிடத்திலே உறுதியாக நம்பிக்கை வைத்திருக்கிற ஒரு ஆத்துமாவை சாத்தானால் மேற்கொள்ளப்படும்படி விட்டுவிடுவதைவிட, அவர் தமது மக்களைக் காப்பதற்காக, பரலோகத்தின் அனைத்துத் தூதர்களையும் உடனடியாக அனுப்பிவைப்பார். ★

# சாத்தானின் வல்லமையால் செய்யப்படும் அற்புதங்கள் - 2

**"அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து..." —வெளிப்படுத்தல் 13:13.**

இறுதி நாட்களின் ஆபத்துக்களை தேவனுடைய மக்கள் நெருங்கிவரும்பொழுது, அவர்களது விசுவாசத்தை முறியடிக்கத்தக்கதான மிகவும் வெற்றியுள்ள ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்காக சாத்தான் தனது தூதர்களோடு ஊக்கமாகக் கலந்து ஆலோசனை நடத்துகிறான். தனது வஞ்சக வல்லமையால் பிரபலமான சபைகளையெல்லாம் ஏற்கெனவே தாலாட்டி, நித்திரைசெய்யவைத்துவிட்டான் என்பதை அவன் காண்கிறான். நயமான குதர்க்கங்களாலும், பொய்யான அற்புதங்களாலும் தொடர்ந்து அவர்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும். எனவே, குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்து, தேவனுடைய அனைத்துக் கற்பனைகளையும் கைக்கொள்ளவேண்டுமென்று முயற்சிசெய்கிற அனைவர்மீதும் தங்களது கண்ணிகளை வைக்கும்படி சாத்தான் தனது தூதர்களை வழிநடத்துகிறான்.

இறுதி நாட்களிலே அடையாளங்களையும் பொய்யான அற்புதங்களையும் சாத்தான் செய்வான் என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். தவணையின்காலம் முடிவடையும்வரை இந்த அற்புதங்களைத் தொடர்ந்துசெய்வான். தான் இருளின் தூதனல்ல, ஒளியின் தூதன்தான் என்பதற்கு இதை ஆதாரமாகச் சுட்டிக்காட்டுவதற்காக, அவன் இவ்வாறு செய்வான்.

கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் சாத்தான் வஞ்சிக்கவருவான். அவன் தான் கிறிஸ்துவென உரிமைகோரிக்கொண்டு, தன்னை ஒரு மாபெரும் மருத்துவ இறைப்பணியாளர் என மாய்மாலம்

செய்துகாட்டுபவனாக வருவான். தான் கடவுள் என்று நிரூபிப்பதற்காக மனிதர்களுக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியை இறங்கச்செய்வான்.

சாத்தான் தனது பொய்யான அற்புதங்களினால் இந்த முழு உலகத்தையும் சிறைபிடித்துக்கொள்வான். மனிதர்களுக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணுவான். அவன் அற்புதங்களை நடப்பிப்பான். அவனது இந்த அதிசயமான அற்புதங்களின்மூலம் முழு உலகமும் வாரிக்கொண்டுபோகப்படும்.

இந்த அற்புதங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவைகள் என்று ஏற்றுக்கொள்ளும்படியாக சிலர் சோதிக்கப்படுவார்கள். நமக்கு முன்பாக பிணியாளிகள் சுகமடைவார்கள். நமக்கு முன்பாக அற்புதங்கள் நடப்பிக்கப்படும். சாத்தானின் பொய்யின் அற்புதங்கள் முற்றிலும் பகிரங்கமாகக் காட்டப்படும்போது, வரவிருக்கின்ற உபத்திர காலத்தைச் சந்திக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? அநேக ஆத்துமாக்கள் கண்ணியில் அகப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டுப் போவார்கள் அல்லவா? தேவனுடைய தெளிவான கட்டளைகள் கொள்கைகளினின்று விலகுவதின்மூலமும், கட்டுக்கதைகளுக்கு செவிசாய்ப்பதின்மூலமும், இவ்வித பொய்யான அற்புதங்களை ஏற்றுக்கொள்ள அநேக மனிதரின் உள்ளங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. நாம் வெகுசீக்கிரத்தில் ஈடுபடப்போகிற இந்தப் போராட்டத்திற்காக போர்க்கால கவசத்தை அணிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைத்தவர்களாக ஜெபசிந்தையோடு படித்துச்செயல்படுவதே சாத்தானின் வல்லமையினின்று நம்மைக் காக்கும் கேடகமாக இருக்கும். மேலும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் அது நம்மை வெற்றியாளர்களாகவும் வெளியே கொண்டுவரும். ★

# பரீட்சைக்கு நிற்கத்தக்கதாக பரிசுத்தவான்கள் கொண்டுவரப்படல்!

**"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."**

**—மத்தேயு 7:22,23.**

நாம் ஏமாற்றப்படவேண்டிய அவசியமில்லை. சாத்தான் மிக நெருக்கமாகத் தொடர்புகொண்டுள்ள அற்புதமான காட்சிகள் வெகுசீக்கிரத்தில் நமக்கு முன்பாக நடைபெறும். சாத்தான் அற்புதங்களைச் செய்வான் என்று தேவனுடைய வார்த்தை உறுதியாகக் கூறுகின்றது. மக்களை வியாதிப்படச்செய்வான். பின்னர், சாத்தானிய வல்லமையின்மூலம் திடீரென அந்த வியாதியை அகற்றிப்போடுவான். அதற்குப்பிறகு அவர்கள் குணமாக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள். இத்தகைய பகிரங்கமாகத் தெரிகின்ற குணமாக்குதல் ஏழாம் நாள் வருகை சபையாரை சோதனைக்குள் கொண்டுவரும். அதிகமான வெளிச்சத்தைப் பெற்றிருந்தவர்கள் அந்த வெளிச்சத்திலே நடக்கத் தவறிவிட்டார்கள். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவோடு ஒன்றாக ஐக்கியப்படவில்லை.

மிகுந்த துன்பத்திலும் தேவனுடைய உறுதியான வாக்குத்தத்தங்களுக்காக நமது மக்கள் அழுது மன்றாடி ஜெபித்துக்கொண்டிருப்பதை நான் கண்டேன். நம்மைச் சுற்றிலுமிருந்த துன்மார்க்கர் நம்மைக் கேலிசெய்து, அழித்துப்போட்டுவிடுவதாக நம்மைப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள். நமது நலிந்த நிலைபற்றியும் நமது குறைவான எண்ணிக்கைபற்றியும் பரிகாசஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

நம்மை அதிக வேதனைப்படுத்தத்தக்கதான வார்த்தைகளால் அலைகழித்துக் கொண்டிருந்தார்கள். உலகத்தார் அனைவரினின்றும் பிரிந்து, ஒரு தனித்த சுயாதீன நிலையில் நாங்கள் இருப்பதாக நம்மைக் குற்றஞ்சாட்டினார்கள். நாங்கள் வாங்கவும் விற்கவும் கூடாதபடி எங்களது வாய்ப்புகளையெல்லாம் துண்டித்துப்போட்டார்கள். நமது இழிந்த தரித்திர நிலையையும், நோயுற்று பாதிக்கப்பட்ட நிலையையும் சுட்டிக்காட்டினார்கள். நாங்கள் உலகின்மீது சார்ந்திருந்தோம். உலகின் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், சட்டங்கள் ஆகியவற்றிற்கு கண்டிப்பாக ஒத்துப்போகவேண்டும் அல்லது அதைவிட்டு வெளியே போய்விடவேண்டும். இந்த உலகின் உதவியின்றி நாம் எப்படி வாழமுடியும் என்பதை அவர்களால் காணமுடியவில்லை. ஆண்டவரால் ஆதரிக்கப்பட்டவர்களாக இந்த உலகத்தில் நாங்கள் மட்டுமே வாழ்ந்துகொண்டிருப்போமானால், தோற்றங்கள் எல்லாம் எப்படி பயங்கரமானவிதத்தில் எதிராக இருந்தன. அவர்களிடம் சத்தியம் இருப்பதாகவும், அவர்கள் மத்தியிலே அற்புதங்களும் காணப்படுவதாகவும், பரலோகத்தின் தூதர்கள் அவர்களோடு பேசி நடப்பதாகவும், மாபெரும் வல்லமை, அற்புதங்கள் அடையாளங்கள் அவர்கள் மத்தியிலே செய்யப்படுவதாகவும், அதுதான் அவர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த இம்மைக்குரிய ஆயிரமாண்டு அரசாட்சி என்றும் உறுதிபடக் கூறினார்கள். முழு உலகமும் திருப்பப்பட்டு, ஞாயிறு சட்டத்தோடு இணைந்து சென்றது. ஆனால் இந்தச் சிறிய—நலிந்த கூட்டம் நாட்டின் சட்டங்களை எதிர்த்து நிற்கின்றது. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, இந்த பூமி முழுவதிலும் தாங்கள் மாத்திரமே சரியானவர்கள் என்று உரிமைகோருகிறது.

அற்புதங்களைச் செய்வதினால், தேவனுடைய மக்கள் தங்கள் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். அந்த நபர்செய்கின்ற எந்த அற்புதமானாலும் அதை சாத்தானுங்கூட போலியாகச் செய்து காட்டிவிடுவான்.... “எழுதப்பட்டிருக்கிறதே” என்ற ஜீவனுள்ள வார்த்தையின்படி நிற்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ★

# இயற்கை நிலையின் தன்மைக்கும் அப்பாற்பட்ட தோற்றங்கள்!

**“பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.” —லூக்கா 21:11.**

இறுதி நேரத்தை நாம் நெருங்கும்பொழுது, அஞ்ஞான வல்லமையின் வெளிப்படையான அணிவகுப்பு அதிகமாக, மேலும் அதிகமாக இருக்கும். அஞ்ஞான தெய்வங்கள் அவைகளின் வல்லமையை முனைப்பான முறையில் உலகின் பட்டணங்களிலே வெளிப்படுத்திக்காட்டும் இந்தச் சித்தரிப்பு ஏற்கெனவே நடைபெற ஆரம்பித்துவிட்டது.

எருசலேமின்மீது நியாயத்தீர்ப்புகள் (தண்டனைகள்) கொடுக்கப்படுவதைக்குறித்த மீட்பரின் தீர்க்கதரிசனத்திற்கு இன்னும் ஒரு நிறைவேறுதல் இருக்கிறது. அந்தப் பயங்கர பாழ்நிலை தெளிவற்ற நிழல்போலாகிவிடும். தெரிந்தெடுக்கப்பட்ட பட்டணத்தின் முடிவுபற்றிய காரியத்தில் (எருசலேமின் அழிவைப்பற்றி) தேவனுடைய இரக்கத்தைத் தள்ளிப்போட்டு, அவரது கற்பனையைக் காலின்கீழ்போட்டு மிதித்துப்போட்ட இந்த உலகத்தின் அழிவை நாம் காணலாம்.

பேரிடர், அழிவு ஆகிய தீமைகளை முன்னறிவிக்கக்கூடிய அடையாளங்களும் அற்புதங்களும் காணப்பட்டன. நடு இரவிலே இயற்கைக்கு மாறான ஒளி ஆலயத்தின்மீதும், பலிபீடத்தின்மீதும் காணப்பட்டது. மாலை மயங்கும் வேளைகளில், மேகங்களிலே இரதங்களும் யுத்தத்தில் ஈடுபடும் மனிதரும் சண்டைசெய்வதற்காகக் கூடிவருவதுபோன்ற காட்சிகள் காணப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமையில் காலையிலே (ஆகஸ்டு 24, 1906) நான் விழிப்பதற்கு சற்றுமுன்னர், அதிகமாக மனதில் பதிவை ஏற்படுத்தக்கூடிய காட்சி ஒன்று எனக்குமுன் வைக்கப்பட்டது. நான் தூக்கத்தினின்று விழிப்பதுபோன்று தெரிந்தது. ஆனால் நான் எனது வீட்டில் இல்லை. சன்னல்கள் வழியாக பயங்கரமான நெருப்புப் பிழம்பு ஒன்றைக் காணமுடிந்தது. வீடுகளின்மீது பெரிய நெருப்புப் பந்துகள் விழுந்துகொண்டிருந்தன. அந்த நெருப்புப் பந்துகளிலிருந்து நெருப்பை உமிழும் கூர்மையான அம்புகள் எல்லாத் திசைகளுக்கும் பறந்து சென்றன. எங்கெல்லாம் நெருப்பு பற்றியெரிந்து என்ற காரியத்தைத் தீர்மானிப்பது மிகவும் கடினமாக இருந்தது. அநேக இடங்கள் அழிந்துவிட்டன. மனிதர் மத்தியிலே காணப்பட் பயங்கரத்தை வர்ணிக்கவியலாது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மையுள்ள பயத்தை உருவாக்கும் காட்சிகள் வெகுசீக்கிரத்தில் வானங்களில் வெளிப்படும். பிசாசுகளின் அற்புதஞ்செய்யும் வல்லமைக்கு அவை அடையாளங்களாக இருக்கும். அவர்களைக் கண்ணியில் அகப்படுத்தவும், பரலோக அரசாங்கத்துக்கு விரோதமான கடைசி யுத்தத்திலே சாத்தானோடு இணைந்துகொள்ளத்தக்கதாக அவர்களை வற்புறுத்தும்படியும் பிசாசுகளின் ஆவிகள் இந்த பூமியின் இராஜாக்களிடத்திற்கு இந்த உலகம் முழுவதும் செல்கின்றன. இத்தகைய செயல்துணைகளின் மூலம் ஆளுநர்களும் பிரஜைகளும் ஒன்றுபோல ஏமாற்றப்படுவார்கள். சிலர் தாங்களே கிறிஸ்து என்று மாய்மாலமாகக் கூறி, உலக இரட்சகருக்கு மாத்திரமே சொந்தமான பெயருக்கும் தொழுகைக்கும் உரிமைகொண்டாடுவார்கள். அவர்கள் அதிசயமான குணமாக்கும் அற்புதங்களைச்செய்து, பரலோகத்தினின்று தங்களுக்கு வெளிப்படுத்துதல் வந்ததாகச் சொல்லுவார்கள். இவை வேதவாக்கியங்களின் சாட்சிக்கு முரண்பாடாக அமைந்திருக்கும். ★

# தேவனின் முத்திரையும் மிருகத்தின் முத்திரையும்!

**“சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார்.” —ஏசாயா 8:16.**

தவணையின் கால முடிவிற்கு முன்னர், உயிரோடிருக்கும் நீதிமான்கள் தேவனுடைய முத்திரையைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆண்டவருடைய படைப்பின் நினைவுச்சின்னமான அடையாளம் அல்லது முத்திரை ஏழாம்—நாள் ஓய்வுநாள் ஆசரிப்பிலே வெளிப்படும். இதற்கு எதிரானது மிருகத்தின் முத்திரையாகும். அது வாரத்தின் முதல்நாள் ஆசரிப்பாகும்.

ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு இன்னும் மிருகத்தின் முத்திரையாகவில்லை. இந்த விக்கிரகமாகிய ஓய்வுநாளை மனிதர் வணங்கத்தக்கதாக சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்வரை, அது மிருகத்தின் முத்திரையாக இருக்காது. இந்த நாள் ஒரு பரீட்சையாக அமைகின்ற நேரம் வரும். அந்த நேரம் இன்னும் வரவில்லை.

இதுவரை எவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளவில்லை. அந்தச் சோதனைக்காலம் இன்னும் வரவில்லை. ரோமன் கத்தோலிக்க சபையையும் சேர்த்து அனைத்து சபைகளிலும் உண்மையான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிச்சம் கிடைத்து, அந்த நான்காம் கற்பனைக்குரிய கடமையை அறியும்வரை அவர்கள் கண்டனஞ்செய்யப்படமாட்டார்கள். போலியான ஓய்வுநாளை, நடைமுறைப்படுத்துவதற்காக சட்டம் இயற்றப்படும்பொழுது, மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குவதற்கு எதிராக மூன்றாம் தூதனின் உரத்தசத்தமானது மனிதரை எச்சரிக்கும்பொழுது, பொய்யான மற்றும் உண்மையான ஓய்வுநாளிற்கு இடையேயுள்ள கோடு தெளிவாகப் போடப்பட்டுவிடும். பின்னரும் தொடர்ந்து மேலும் மீறுதலிற்குள்ளாக

இருப்பவர்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள். நான்காம் கற்பனையின் ஓய்வுநாளை வெளிப்படுத்தி, சத்தியத்தின் வெளிச்சம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்குமானால், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பிற்கு தேவனுடைய வார்த்தையிலே எத்தகைய அடித்தளமும் இல்லை என்று காணப்பட்டிருக்குமானால் அதன்பிறகும் "என்னுடைய பரிசுத்தநாள்" என்று தேவனால் அழைக்கப்படுகின்ற அந்த நாளைக் கைக்கொள்ள மறுத்து, இன்னமும் பொய்யான ஓய்வுநாளையே பிடித்துக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வீர்கள். இந்தக் காரியம் எப்பொழுது நடைபெறுகிறது? ஞாயிற்றுக் கிழமையில் வேலை செய்யாமல் ஓய்ந்திருக்கச்சொல்லும் சட்டத்திற்கு நீங்கள் கீழ்ப்படியும்பொழுது, வேதத்திலே ஞாயிற்றுக்கிழமை சாதாரண வேலைநாள்தான் என்பதைத் தவிர வேறொரு வார்த்தையும் கூறப்படாதிருக்கும்பொழுது, நீங்கள் அந்த நாளை ஓய்வுநாளாக நினைத்து தேவனைத் தொழுதுகொண்டால், நீங்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ள சம்மதித்துவிட்டீர்கள் என்று பொருள். ஆகையால் தேவனுடைய முத்திரையைப் பெற மறுத்துவிட்டீர்கள் என்பது பொருளாகும்.

வெகு சீக்கிரத்தில் தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையின்மீதும் தேவனுடைய முத்திரை வைக்கப்படும். ஆ! அது நமது நெற்றிகளின்மீது வைக்கப்படலாமே! தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றிகளின்மீது முத்திரைபோடுவதற்காக, தூதன் செல்லும்பொழுது, நமக்கு முத்திரை போடாமல் கடந்துசென்றுவிட்டான் என்ற நினைவை யாரால் தாங்கிக்கொள்ள முடியும்? ★

ஜூலை 23

# முத்திரையிடப்படுதலும் பின்மாரியும்!

**“ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.” –2 தீமோத்தேயு 2:19.**

ஊழியம் முடிவடையும் முன்னர்—தேவனுடைய மக்களுக்கு முத்திரைபோடப்படும் வேலை முடிவடையும்முன்னர், தேவனுடைய ஆவியானவரின் பெரும் மழையைப் பெற்றுக்கொள்வோம். பரலோகத்தின் தூதர்கள் நம் மத்தியில் இருப்பார்கள்.

நமது பரம பிதா நம்மால் செய்யமுடியாத காரியங்களை செய்யும்படி நம்மிடம் கேட்கமாட்டார். அவரது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, தமது மக்கள் ஊக்கமாக ஊழியஞ்செய்வேண்டுமென்று அவர் விரும்புகிறார். கிறிஸ்து இயேசுவிலே ஆண்களும் பெண்களும் முழு வளர்ச்சியை அடையத்தக்கதாக வல்லமைக்காக ஜெபிக்கவேண்டும். வல்லமைக்காக எதிர்பார்த்திருக்கவேண்டும். வல்லமையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சபையின் எல்லா அங்கத்தினருமே தனிப்பட்ட விதத்தில் பயபக்தியை பேணி வளப்பதில்லை. எனவே, அவர்கள் தனிப்பட்ட விதத்தில் தங்களது பொறுப்பை உணர்கிறதுமில்லை. கிறிஸ்தவ பூரணத்துவத்தின் உயர்ந்த தரத்தை அடைவது தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமையும் தனிச்சிறப்பு வாய்ந்த சலுகையும் என்பதை அவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்வதுமில்லை.... ஊழியத்திற்காகத் தகுதியாக்கப்படுவதற்கு பரத்தின் வல்லமையால் சபை தரிப்பிக்கப்படும் அந்த சிறந்த நாளை நம்பிக்கையோடு எதிர்பார்த்து, பின்மாரி கிடைக்குமென்று காத்திருக்கிறோமா? தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற வல்லமையைப் பயன்படுத்தாமல், சோம்பியிருப்பவர்களுக்கு பின்மாரி வந்து ஒருபொழுதும் மறுமலர்ச்சியையோ, எழுச்சியையோ வழங்காது.

நமது ஆவிக்குரியவாழ்வைப் பேணிவளர்க்க, ஆற்றல் நிலைக்கத்தக்கதான உயிர்கொடுக்கும் தூய்மையான சூழ்நிலையே நம்முடைய மாபெரும் தேவையாகும். மிக அதிகமான ஊக்கமும், உற்சாகமும் தேவை. உலகத்திற்குக் கொடுப்பதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பக்திவிநயமான தூது, அதிக உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் கூறியறிவிக்கப்படவேண்டும். மகா உன்னதமானவர் நம்முடன் ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார் என்றும், நமது திறமைக்கும் வல்லமைக்கும் அவரே ஆதாரமாக இருக்கிறாரென்றும், அவிசுவாசிகளின் மனதிலும் அதைக்குறித்த உணர்வை ஏற்படுத்தி நடத்துமளவிற்கு ஆழ்ந்து வேலைசெய்யவேண்டும்.

காணாமற்போன ஆட்டைத் திரும்பவும் கொட்டகைகளுக்குக் கொண்டுவரத்தக்கதாகச் செய்யும் முயற்சிகளிலே உங்களது அனைத்து சக்திகளையும் பயன்படுத்துகிறீர்களா? எச்சரிக்கப்படவேண்டிய ஆயிரமாயிரம்பேர் அறியாமல் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வல்லமைக்காக ஒருபொழுதும் ஜெபித்திராத அளவிற்கு ஜெபியுங்கள். அழிந்துகொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்றுவதற்காக அதற்கான விருப்பத்தால் நிறையப்படத்தக்கதாக,அவரது ஆவியானவரின் அருட்பொழிவிற்காக ஜெபியுங்கள். “தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்” (சங். 67:1,2) என்ற ஜெபம் பரலோகத்திற்குச் சென்று எட்டட்டும். ★

# மீதியானவர்களும் முத்திரையிடப்படுதலும்!

**“அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா என்றார்.” – சகரியா 3:2.**

மாபெரும் இக்கட்டிற்குள்ளும் வேதனைக்குள்ளும் மீதமான சபை கொண்டுவரப்படும். தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொண்டவர்கள் வலுசர்ப்பம், அதின் கூட்டம் அனைத்தின் கோபத்தையும் உணருவார்கள். சாத்தான் இந்த உலகத்தின் குடிகளை தன்னுடையவர்கள் என்று எண்ணி வைத்திருக்கிறான். மருளவிழுந்துபோன சபைகள் அனைத்தின்மீதும் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்டுவிட்டான். ஆனால் அவனது ஆளுகையை ஒரு சிறுகூட்டம் எதிர்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களை இந்த பூமியினின்று அகற்றிப்போட்டானானால் அவனது வெற்றி நிறைவைப் பெற்றுவிடும். இஸ்ரவேலரை அழித்துப்போடுவதற்காக அஞ்ஞான சாதிகளின்மீது அவன் செல்வாக்கைப் பயன்படுத்தியதுபோல, வெகுசீக்கிரத்தில்—வருங்காலத்தில் தேவனுடைய மக்களை அழித்துப்போடுவதற்காக, துன்மார்க்கமான வல்லமைகளை கிளர்ந்தெழச்செய்வான். தெய்வீகப் பிரமாணத்தின் மீறுதலாக, மானிட சட்டங்களுக்குக் கீழ்ப்படியத்தக்கதாக, அனைவருக்கும் கட்டளை பிறப்பிக்கப்படும். தேவனுக்கும் கடமைக்கும் உண்மையாக இருப்பவர்களுக்குத் தொல்லை கொடுக்கப்படும். பழித்துரைக்கப்பட்டு விலக்கிவைக்கப்படுவார்கள். அவர்கள் பெற்றோராலும் சகோதரர்களாலும் உறவினர்களாலும் நண்பர்களாலும் காட்டிக்கொடுக்கப்படுவார்கள்.

கிறிஸ்துவின் இரக்கத்தில் மாத்திரமே அவர்களது ஒரேநம்பிக்கை இருக்கும். அவர்களது ஜெபமே அவர்களது ஒரே பாதுகாப்பு. யோசுவா தூதனுக்கு முன்பாகக் கெஞ்சி மன்றாடியது போல, மீதியான சபையும்

நொறுங்குண்ட இருதயத்தோடும், ஊக்கமான விசுவாசத்தோடும் தங்களது வழக்கறிஞரான இயேசுவின்மூலமாக, மன்னிப்பிற்காகவும் விடுதலைக்காகவும் கெஞ்சிமன்றாடவேண்டும்.... தேவனுக்கு முன்பாக சாத்தான் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வலியுறுத்துகிறான். அவர்கள் தங்களது பாவங்களினால் தெய்வீகப் பாதுகாப்பை இழந்துவிட்டார்களென்றும், அவர்கள் மீறுதல்களுக்கு உட்பட்டவர்களாதலால் அவர்களை அழிப்பதற்கான உரிமையை அவரிடம் வேண்டுகிறான்.

கிறிஸ்துவின் பின்னடியார்கள் பாவஞ்செய்திருந்தபோதிலும், தீமையின் கட்டுப்பாட்டிற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. அவர்கள் தங்களது பாவங்களை அறிக்கைசெய்து வெளியேற்றிவிட்டார்கள். பாவத்திற்காக மனம்வருந்தி—தாழ்த்தி ஆண்டவரைத் தேடினார்கள். எனவே, தெய்வீக வழக்கறிஞர் அவர்களுக்காக மன்றாடுகிறார்....

தேசத்திலே நடக்கின்ற அருவருப்புகளுக்காக தேவனுடைய மக்கள் பெருமூச்சுடன் அழுதுகொண்டிருக்கிறார்கள். தெய்வீக பிரமாணத்தை காலின்கீழ்போட்டு மிதிப்பதினால் வரும் ஆபத்தைப்பற்றி துன்மார்க்கருக்குக் கூறி, அழுகையோடு எச்சரிக்கிறார்கள். தங்களது சொந்த மீறுதலிற்காக, வார்த்தைகளால் விவரிக்கமுடியாத துக்கத்தோடு ஆண்டவருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள். துன்மார்க்கர் அவர்கள் அனுபவிக்கும் துக்கத்தைப் பார்த்து கேலிசெய்கிறார்கள். அவர்களது பக்திவிநயமான வேண்டுதல்களைக் கேட்டுப் பரிகசிக்கிறார்கள். இவைகளையெல்லாம் அவர்களது பெலவீனம் என்று சுட்டிக்காட்டி, ஏளனமான இகழ்ச்சிசெய்கிறார்கள். ஆனால் தேவனுடைய மக்கள் அனுபவிக்கும் கடுந்துயரும் அவர்களது தாழ்ச்சியும் அவர்கள் பாவத்தின் பலனால் இழந்துபோன மேன்மையான குணத்தையும் வல்லமையையும் மீண்டும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்குத் தெளிவான ஆதாரமாக இருக்கும். சாத்தான் தனது குற்றச்சாட்டுகளை வலியுறுத்திக்கூறும்பொழுது, கண்ணுக்கு மறைவாக இருந்த பரிசுத்த தேவதூதர்கள் அங்குமிங்கும் நடந்துசென்று, ஜீவனுள்ள தேவனின் முத்திரையை அவரது மக்கள்மீது வைத்தார்கள். ★

# அமெரிக்காவின் தலைமையை அனைத்து நாடுகளும் பின்பற்றுகின்றன!

**“ஆதலால் சகல ஜனங்களும், எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம் முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தைக் கேட்டவுடனே, சகல ஜனத்தாரும் ஜாதியாரும் பாஷைக்காரரும் தாழ விழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொண்டார்கள்.” —தானியேல் 3:7.**

வரலாறு மீண்டும் திரும்பும். பொய்யான மார்க்கம் உயர்த்திக் காட்டப்படும். வாரத்தின் முதல் நாளாகிய சாதாரணமான வேலை நாள் எந்தப் பரிசுத்தத்தையும் எந்த விதத்திலும் பெற்றிருக்காத அந்த நாள், பாபிலோனிலே சொரூபமாக நிலைநாட்டப்படும். இந்தப் போலியான ஓய்வுநாளை வணங்கத்தக்கதாக அனைத்து தேசத்தாருக்கும் மொழியினருக்கும் மக்களுக்கும் கட்டளை கொடுக்கப்படும். படைப்பின் நினைவுச்சின்மாக இந்த உலகிற்குக் கொடுக்கப்பட்ட—தேவனால் அமைக்கப்பட்ட காரியத்தில் மக்களை எண்ணமற்று போகச்செய்யவேண்டுமென்பதே சாத்தானின் திட்டமாகும்.

இந்த நாளின் தொழுகையை நடைமுறைப்படுத்தும் சட்டம் உலக முழுவதிற்கும் செல்லும்.

மார்க்க சுதந்திரமுள்ள நாடாகிய அமெரிக்க போப்புடன் இணைந்து, மனசாட்சியைக் கட்டுப்படுத்தவும், பொய்யான ஓய்வுநாளை மனிதர் மேன்மைப்படுத்தவும் வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தும். இவ்வுலகத்தின் அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றத்தக்கதாக வழிநடத்தப்படுவார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்மாதிரியை அனைத்து வெளிநாடுகளும் பின்பற்றும். அவள் முன்னின்று வழிநடத்திய போதிலும்,

உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள நமது மக்கள்மீது இதே நெருக்கடி வரும்.

நாடுகள் தங்களது மையப்பகுதிவரைக்கும் அசைக்கப்படும் குணத்தின் நிச்சயமான பரீட்சையாக இருக்கின்ற, தேவனுடைய நீதியின் படித்தரத்தைக் கூறியறிவிப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஆதரவு நிறுத்தப்பட்டுவிடும். நாட்டின் மன்றங்களின் சட்டங்களுக்கு தலைவணங்க மறுத்து, பாவமனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வுநாளை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பவர்களும் தேவனுடைய பரிசுத்த நாளைப் புறக்கணிக்க மறுப்பவர்களும் போப்புவின் வல்லமையின் கடுமையை மாத்திரமல்ல, புரொட்டஸ்டாண்டு உலகத்தினுடைய மற்றும் மிருகத்தின் முத்திரையின் கொடூரத்தையும் உணர்வார்கள்.

தேவனுடைய மக்களுக்கு முன்பாக இருக்கின்ற அந்த உபத்திரவத்தின் வேளை தடுமாற்றமில்லாத ஒரு விசுவாசத்திற்கு அழைப்பு விடுக்கும். அவர் மாத்திரமே தங்களது தொழுகைக்குரியவர் என்பதை அவரது மக்கள் நிச்சயமாக வெளிப்படுத்தவேண்டும். எந்த விதமான முக்கியத்துவமும் அது ஜீவனுக்குரிய காரியமானாலுங்கூட பொய்யான தொழுகைக்கு சலுகை காட்டத்தக்கதாக தூண்டமுடியாது. நித்திய தேவனின் வார்த்தைக்கு அருகில் ஒரு எல்லைக்குட்பட்ட பாவமனிதனின் கட்டளைகளானது, உத்தமமான இருதயமுடையவர்களுக்கு எந்த முக்கியத்துவமுமற்றதாக அமிழ்ந்துபோய்விடும். விளைவு சிறைவாசமானாலும் நாடுகடத்தலானாலும் அல்லது மரணமேயானாலும் சத்தியத்திற்கு மக்கள் கீழ்ப்படிவார்கள். ★

ஜுலை 26

# முடிவின் ஆரம்பம்!

**“கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: தீங்கு வருகிறது; இதோ, ஏகமான தீங்கு வருகிறது.... முடிவு வருகிறது, முடிவு வருகிறது, அது உன்மேல் நோக்கமாயிருக்கிறது; இதோ, வருகிறது.”**

**—எசேக்கியேல் 7:5,6.**

தார்க்கரீதியான, பயமுறுத்த இந்தக் காரியத்தில் உலகம் முழுவதும் ஒன்றாக சேரவிருக்கிறது. தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக உலகின் அனைத்து வல்லமைகளும் ஒன்று சேர்ந்து, “அதாவது சிறியோர்—பெரியோர், ஐசுவரியவான்கள்—தரித்திரர், சுயாதீனர்—அடிமைகள்” அனைவரும் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, பொய்யான ஓய்வுநாளை ஆசரிப்பதின்மூலம், சபையின் பழக்கத்திற்கு ஒத்திசைவாக நடக்கவேண்டும் என்று கூறியது. இதற்கு சம்மதிக்க மறுப்பவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படும். இறுதியிலே அவர்கள் மரண தண்டனையைப் பெறவேண்டியவர்கள் என்று அறிவிக்கப்படும். வேறுவகையில் பார்க்குமிடத்து, படைத்தவரின் இளைப்பாறுதலின் நாள் தேவப் பிரமாணத்தின் ஆணையாக கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறது. அதின் கட்டளையை மீறுகிற அனைவருக்கும் எதிராக, உக்கிரமான கோபம் உண்டாகும் என்று எச்சரிக்கிறது.

இவ்வாறு தரிக்கரீதியான அடிப்டையிலான இந்தக் காரியம் தெளிவாக மனிதனுக்குமுன் கொண்டுவரப்பட்டபோது, யாரெல்லாம் மனிதனால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு கீழ்ப்படிவதற்காக தேவனுடைய பிரமாணத்தைக் காலின்கீழ்போட்டு மிதிக்கிறார்களோ, அவர்கள் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்கிறார்கள். தேவனுக்குப்பதிலாக எந்த வல்லமைக்கு பற்றுறுதியோடு இருப்பதை ஒரு நபர் தெரிந்துகொள்கிறாரோ, அந்த அடையாளத்தைப் பெற்றுக்கொள்கிறார்....

ஒரு நபரின் உத்தமமான குணத்தைப் பரிசோதிப்பதற்கான பரீட்சை, ஓய்வுநாள் ஆசரிப்பே. குறிப்பாக, சத்தியத்தின் இந்தப் பகுதியே எதிர்த்து வாதிடும் காரியமாக இருக்கிறது. இறுதிச்சோதனை மனிதர்மீது

தாக்கத்தை ஏற்படுத்தும்பொழுது, தேவனை சேவிப்பவர்களுக்கும் தேவனை சேவிக்காதவர்களுக்குமிடையில் வேறுபாட்டைக் காட்டத்தக்கதான இடத்தில் தெளிவான கோடிடப்படும். நாட்டின் சட்டத்திற்கு சம்மதித்து, பொய்யான ஓய்வுநாளை ஆசரிப்பது நான்காம் கட்டளைக்கு விரோதமாக இருக்கும்பொழுது, தேவனுக்கு எதிராளியான ஒரு வல்லமைக்கு பற்றுறுதியோடு இருப்பதற்கான உறுதிமொழிபோன்று இருக்கும். தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து உண்மையான ஓய்வுநாளை ஆசரிக்கும் செயல், படைத்தவருக்கு உத்தமமாக இருப்பதற்கான ஒரு சான்றாக இருக்கும். ஒரு வகுப்பார் பூமியின் வல்லமைகளுக்கு அடிபணிந்துள்ள வல்லமையை ஏற்றுக்கொள்ளும்பொழுது, அடுத்த வகுப்பார் தெய்வீக அதிகாரத்திற்கு பற்றுறுதியோடு இருப்பதின் அடையாளமாக தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இதுவரை மூன்றாம் தூதனின் சத்தியங்களை எடுத்துக்கூறுகிறவர்கள் வெறுமனே பீதியை பரப்புகிறவர்களென்று கருதப்பட்டுவந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு நடைமுறைப்படுத்தும் முக்கியக் காரியம் மிகவும் விரிவாகக் கிளர்ந்தெழும்போது, இவ்வளவு காலம் சந்தேகிக்கப்பட்டு, நம்பப்படாமலிருந்த சம்பவம் நெருங்கிவருவதைக் காணும்பொழுது, மூன்றாம் தூதனின் தூது இதுவரைக்கும் முன்பு ஒருபோதும் இருந்திராத ஒரு விளைவை உருவாக்கும். ★

# அமெரிக்க ஐக்கிய நாட்டின் மருளவிழுகையும்... பின்தொடரும் அழிவும்!

**“தேசம் தன் குடிகளின் மூலமாய்த் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள்.” —ஏசாயா 24:5.**

அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் ஒரு சிறப்பான சலுகையைப்பெற்ற மக்களாவர். ஆனால் அவர்கள் மார்க்க சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, புரொட்டஸ்டாண்டு கொள்கையைக் கைவிட்டு, ரோமன் கத்தோலிக்க சபைக்கு இசைவுகாட்டும்பொழுது, அவர்களின் குற்றத்தின் அளவு நிறைவடையும். பரலோகப் புத்தகத்திலே நாடு முழுவதும் மருளவிழுகைக்குச் சென்றுவிட்ட காரியம் பதிவுசெய்யப்படும். இந்த மருளவிழுகையின் விளைவு, நாடு முழுவதற்கும் ஏற்படும் அழிவேயாகும்.

தேவப் பிரமாணத்தை மீறி போப்புவின் அமைப்பாகிய ஞாயிறு ஆசரிப்பை நடைமுறைப்படுத்த இயற்றப்படும் சட்டத்தினால் நமது நாடு (USA) நீதியினின்று தன்னை முற்றிலுமாகத் துண்டித்துக்கொள்ளும். புரொட்டஸ்டாண்டு மார்க்கம் ரோம வல்லமையின் கரத்தைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக பெரும் பிளவிற்கப்பால் தனது கரத்தை நீட்டும். மேலும் புரொட்டஸ்டாண்டுகள் அந்த ஆவிமார்க்கத்தின் கரங்களைப் பற்றிப்பிடிப்பதற்காக, அந்தப் படுகுழிக்குமப்பால் தங்கள் கரங்களை நீட்டுவார்கள். இந்த முக்கூட்டுறவின் செல்வாக்கினால் ஒரு புரொட்டஸ்டாண்டு குடியரசு நாட்டின் அமைப்பின் ஒவ்வொரு கொள்கையையும் நமது நாடு மறுத்துவிடும்பொழுது, போப்புவின் பொய்யான கொள்கைகளையும் வஞ்சகங்களையும் பரப்புவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்பொழுது, அப்பொழுது, சாத்தான் தனது அற்புதமான கிரியைகளை நடப்பிக்கும் காலம் வந்துவிட்டது என்றும் முடிவு சமீபம் என்றும் நாம் அறிவோம்.

ஆவிமார்க்கத்தின்மூலமாக மானிட இனத்திற்கு நன்மை செய்கிறவனைப்போன்று தோற்றங்கொடுப்பான். மனிதனின் வியாதிகளைக் குணமாக்குவான். மேலும் ஒரு புதிய மிகவும் உயர்ந்த விசுவாசமார்க்க அமைப்பை வழங்கப்போவதாகக் கூறுவான். ஆனால் அதே சமயத்தில் அழிவைக்கொண்டுவருபவனாகச் செயல்படுவான்....

ஒரு மாபெரும் வைத்தியனைப்போன்று மக்கள் அனைவருடைய பிணிகளையும் குணமாக்குவதாகத் தோற்றங்கொடுப்பான். ஆனால் அதே சமயத்தில் ஜனத்திரள் மிகுந்த பட்டணங்களிலே வியாதிகளையும் பேரழிவுகளையும் கொண்டுவந்து, அழித்துப் பாழாக்கிப்போடுவான்.

பின்னர் தேவனைச் சேவிக்கிறவர்களே இத்தகைய தீமைகளைக் கொண்டுவருகிறார்களென்று இந்த மாபெரும் வஞ்சகன் மனிதரை நம்பச்செய்ய முயற்சிசெய்வான்.

மனிதன் தேவனைவிட்டு விலகிச் செல்லச்செல்ல, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின்மீது அதிக வல்லமையைப் பெறத்தக்கதாக சாத்தான் அனுமதிக்கப்படுகிறான். மனிதர் மத்தியில் அழிவைச் சுழற்றி வீசுகிறான். தரையிலும் கடலிலும் பேரழிவுகள் ஏற்படுகின்றன. நெருப்பினாலும், வெள்ளத்தினாலும் உயிரும் சொத்துக்களும் அழிக்கப்படுகின்றன. இந்த அனைத்துத் தீய காரியங்களையும் தான் நிலைநாட்டியுள்ள விக்கிரகத்திற்கு தலைவணங்க மறுப்பவர்கள்மீது காட்டுவான். துன்பத்திற்கான காரணம் ஏழாம் நாள் வருகையினர் என்று அவனது பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுவார்கள். “இந்த மக்கள் சட்டத்தை எதிர்த்து நிற்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமையை பரிசுத்தக்குலைச்சல் ஆக்குகிறார்கள். ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுவார்களானால் இத்தகைய பயங்கரமான தண்டனைகளுக்கு ஒரு முடிவு ஏற்படும்” என்று அவர்கள் கூறுவார்கள். ★

# தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக எழும்பும் உலகமக்கள்!

**“அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற வர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடைய வர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.”**

**—வெளிப்படுத்தல் 12:17.**

நமது மக்கள், அவர்களைக் கவனித்துப்பார்க்குமளவிற்கு முக்கியத்துவமற்றவர்கள் என்று கருதப்படுவார்கள். ஆனால் ஒரு மாறுதலுண்டாகும். கிறிஸ்தவ உலகம் இப்பொழுது சில பொது இயக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இக்காரியங்கள் கற்பனையைக் கைக்கொள்ளும் மக்களை முக்கியத்துவம் வாய்ந்த நிலைக்குக் கொண்டுவரும்.

உலகமுழுவதும் ஏழாம்நாள் வருகையினருக்கு விரோதமாகத் தூண்டப்பட்டு, பகை நிறைந்து காணப்படும். இந்த அந்திக்கிறிஸ்துவினுடைய வல்லமையின் அமைப்பாகிய ஞாயிறு ஆசரிப்பு என்ற அமைப்பை மதிக்காமலும் போப்புவிற்கு தலைவணங்காமலும் இருப்பதால் இவ்வாறு நடக்கும். உலகத்தில் அவனது மேலாதிக்கம் வாதத்திற்கு இடமின்றி நிலைத்திருக்கத்தக்கதாக அவர்களை பூமியின்று அகற்றிப்போடுவது என்பதே சாத்தானின் நோக்கமாகும்.

நமது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சத்தியத்தில் ஒவ்வொரு நிலையிலும் மாபெரும் மேதாவிகளின் குற்றச்சாட்டைச் சுமக்க வேண்டியதிருக்கும். உலகின் மகா மனிதர்களில் மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள மனிதர்கள் நமது சத்தியத்தோடு தொடர்புகொள்ளத் தக்கதாகக் கொண்டுவரப்படுவார்கள். எனவே, நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நிலையும் குற்றங்கண்டுபிடிக்கத்தக்கதாக, ஆய்வு செய்யப்பட்டு, வேதவாக்கியங்களோடு வைத்துச் சோதிக்கப்படும். இப்பொழுது, நம்மீது

யாரும் அக்கறைகாட்டாததுபோல் தோன்றும். ஆனால் எப்பொழுதும் இப்படியே இருக்காது. நம்மை முன்னணிக்குக் கொண்டுவரத்தக்கதாக இயக்கங்கள் வேலைசெய்து கொண்டிருக்கின்றன. நமது சத்தியத்தின் ஆய்வுகள் வரலாற்று அறிஞர்களாலும் உலகின் மாபெரும் மனிதர்களாலும் அலசி ஆராயப்படவேண்டியதிருக்குமானால் அதுவும் அவ்வாறே நடைபெறும்.

சத்தியம் என்ன என்பது குறித்து ஒவ்வொருவரும் தனித்தனியாக நமக்கு நாமே அறிந்திருக்கவேண்டும். நமது நம்பிக்கைக்கான காரணத்தைப் பெருமையோடும் தற்புகழ்ச்சியோடும் சுயத்திருப்தியோடுமல்ல, பயத்தோடும் சாந்தத்தோடும் கிறிஸ்துவின் ஆவியோடும் கூறவேண்டும். நமது விசுவாசத்திற்கான விடையை தனியே நின்று கொடுக்கவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு காரியத்திலும் நாம் தாக்கப்படுவோம். உச்சக்கட்ட நிலைவரை சோதிக்கப்படுவோம். இந்தச் சத்தியம் நமது தந்தையர்கள்மூலம் நமது கரங்களில் கொடுக்கப்பட்டது என்ற காரணத்தினால் மாத்திரம் இந்த விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்று விரும்பமாட்டோம். நமக்கு முன்னாலிருக்கும் பயங்கரமான சோதனையை இத்தகைய விசுவாசத்தால் தாங்கி நிற்கமுடியாது. நாம் ஏன் ஏழாம்நாள் வருகையினரது சபையில் அங்கம் வகிக்கின்றோம்? உலகினின்று பிரிந்து ஒரு தனிப்பட்ட மக்கள் கூட்டமாக, நாம் இருப்பதற்கான உண்மையான காரணம் என்ன? இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடையை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இருளின் வல்லமைகள் தங்களது பீரங்கிகளால் நம்மீது தாக்குதல் நடத்தும். அக்றையற்று கவலையற்றவர்களாக இருப்பவர்கள் தங்களது பூமியின் பொக்கிஷங்கள் மீது தங்களது பாசத்தை நிலைநாட்டி வைத்திருப்பார்கள். தேவன் தம் மக்களிடையே எப்படிக் காரியங்களை நடப்பிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள அக்கறையெடுக்காதவர்கள் எளிதில் இரையாகிவிடுவார்கள். இயேசு கிறிஸ்துவில் காணப்படுவதுபோன்ற சத்தியத்தைப்பற்றிய ஓர் அறிவே நம்மை எப்பொழுதும் திடமானவர்களாக வைத்திருக்கும். வேறு எதுவுமல்ல. இதை வைத்துக்கொண்டு ஓராயிரம் அல்லது ஈராயிரம்பேரை விரட்டியடிக்கலாம். பத்தாயிரம் பேரைப் பறக்கடிக்கலாம். ★

# வெளிப்படுத்தல் 18—ன் தூதன்!

**“இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று.” —வெளிப்படுத்தல் 18:1.**

வெளிப்படுத்தல் 18—ம் அதிகாரத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் வெகு சீக்கிரத்தில் நிறைவேறுதலையடையும். மூன்றாம் தூதனின் தூது கூறியறிவிக்கப்படும்போது, “பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று”—வெளி.18:1. தங்களை ஒப்படைத்த உபகரணங்களாகிய மானிடரை கர்த்தரின் ஆவியானவர் மிகக் கனிவோடு ஆசீர்வதிப்பார். அதின்விளைவாக ஆண்களும் பெண்களும் சிறுபிள்ளைகளும் தங்களது வாய்களைத் திறந்து துதிகளாலும் நன்றிகூறுதலின் வார்த்தைகளாலும், இந்த பூமி அனைத்தையும் தேவனைப்பற்றிய அறிவினால் நிறைப்பார்கள். சமுத்திரத்தில் தண்ணீர் நிறைந்திருப்பதுபோல், பூமி அவரது ஏராளமான மகிமையினால் நிறைந்திருக்கும்.

தங்களது நம்பிக்கையின் ஆரம்பத்தை உறுதியாகப் பற்றிப்பிடித்தவர்கள், மூன்றாம் தூதனின் தூது மிகுந்த வல்லமையோடு கூறியறிவிக்கப்படும்பொழுது, அதிக விழிப்புடையவர்களாக இருந்தார்கள். சபை உரத்தசத்தத்தின் காலத்திலே உயர்த்தப்பட்டு, ஆண்டவர் தம் அருளால் தலையிட்டு உதவியளித்ததின்மூலமாக இரட்சிப்பின் அறிவை ஏராளமாகப் பரவச்செய்தது. அதின்பயனாக ஒவ்வொரு பட்டணத்திலும் நகரத்திலும் வெளிச்சம் சென்றடையும். இரட்சிப்பின் அறிவினால் பூமி முழுவதும் நிறைந்திருக்கும். தேவ ஆவியானவரின் புதுப்பித்தலினால் மிகவும் அதிக ஊக்கத்தோடும் சுறுசுறுப்போடும் இயங்குகின்ற செயல்துணைகளின் வெற்றியினால் முடிசூட்டப்பட்டார்கள். அதின்மூலமாக, நிகழ்கால சத்தியத்தின் ஒளி எங்கணும் பளிச்சிட்டுக் காணப்படும்.

இந்தக் காலத்திலே தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்களால் அந்தச் சூழ்நிலைக்கு தேவனே எஜமானராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் சத்தியம் சந்தேகத்திற்கிடமில்லாத விதத்தில் மிகவும் தெளிவான மொழியில் கூறியறிவிக்கப்படும். பரிசுத்த ஆவியானவரின் அடக்கியாளும் வல்லமைக்கடியில் ஒரு மக்கள் கூட்டமாக ஆண்டவருக்கு வழியை ஆயத்தஞ்செய்யவேண்டும். சுவிசேஷம் அதின் தூய்மையான தன்மையிலே கொடுக்கப்படவேண்டும். ஜீவதண்ணீரின் ஓடை அதின் போக்கிலே ஆழப்படுத்திக்கொண்டும், அகலப்படுத்திக்கொண்டும் செல்லவேண்டும். அருகிலும் மற்றும் தூரமான இடங்களிலுமிருக்கும் பணிக்களங்களிலிருந்தும், மக்கள் அதிகமாக ஈடுபட்டிருக்கின்ற விவசாயம், வியாபாரம் மற்றும் சாதாரணமான தொழில்செய்வோர் மத்தியினின்றும் மனிதர்கள் அழைக்கப்படுவார்கள். இவர்களை அனுபவமுள்ள மனிதர்களோடு தொடர்புகொள்ளச்செய்து, சத்தியம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படும். இவர்கள் இவ்வாறு திறமையோடு உழைக்கக் கற்றுக்கொள்ளும்பொழுது, சத்தியத்தை வல்லமையோடும் கூறியறிவிப்பார்கள். தெய்வீக அருட்செயல்களின் மிகவும் அற்புதமான கிரியைகளின் மூலமாக, மலைபோன்ற கடினமான காரியங்களும் அகற்றப்பட்டு, சமுத்திரத்திலே எறிந்து விடப்படும். இந்த பூமியில் வாழ்கின்ற மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் தூது மக்களால் கேட்கப்பட்டு புரிந்துகொள்ளப்படும். சத்தியமென்றால் என்ன என்பதை மனிதர் அறிந்துகொள்வார்கள். முழு உலகமும் எச்சரிக்கப்பட்டுத்தீரும்வரை, ஊழியம் மேலும்மேலும் இன்னும் அதிகமதிகமாக முன்னேறும். அதன்பிறகு முடிவு வரும். ★

# முன்மாரியும்-பின்மாரியும்!

**"சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார்."**
**—யோவேல் 2:23.**

சபைகளிலே தேவனுடைய வல்லமையின் அதிசயமான வெளிப்படுத்தல்கள் இருக்கும். ஆனால் கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தாதவர்களிடத்திலும் பாவ அறிக்கையினாலும் மனந்திரும்புதலினாலும்தங்களது இருதயக்கதவைத்திறக்காதவர்களிடத்திலும் ஆவியானவர் அசைவாடமாட்டார். தேவ மகிமையினால் பூமியைப் பிரகாசிப்பிக்கின்ற அந்த வல்லமையின் வெளிப்படுத்தல்களிலே, தங்களது குருட்டுத்தனத்திலே தாங்கள் ஆபத்தென்று நினைக்கிற காரியத்தை மாத்திரமே பார்க்கிறார்கள். அது அவர்கள் பயத்தை மாத்திரமே விழிப்படையச் செய்கிறது. எனவே, அதை எதிர்ப்பதற்காக தங்களைப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். தங்களது இலட்சியத்தின்படியும் எதிர்பார்ப்புகளின் படியும் ஆண்டவர் கிரியை செய்யாதிருக்கிறபடியால், அவர்கள் ஊழியத்தை எதிர்க்கிறார்கள். "நீண்ட காலமாக நாங்கள் இந்தவேலையில் இருந்துகொண்டிருக்கிறபடியால் ஏன் நாங்கள் தேவனுடைய ஆவியானவரை அறிந்திருக்கமுடியாது?"என்று அவர்கள் வினவுகிறார்கள். ஊழியத்தை எதிர்ப்பவர்கள் அவர்கள் எச்சரிப்புகளுக்குச் செவிசாய்க்காததினால்— தேவனுடைய தூதுகளின் கெஞ்சுதல்களுக்கும் செவிசாய்க்காததினால், "நான் ஐசுவரியவான் என்றும் திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு குறைவுமில்லை என்றும்" விடாப்பிடியாகத் தொடர்ந்து சொல்லுகிறார்கள்.

தங்களை நீதியனின் சூரியனுடைய பிரகாசமான ஒளிக்கதிர் களினடியில் வைத்தவர்களாக—ஆண்டவரால் அழைக்கப் பட்டவர்களாக— தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக பரிசுத்தஆவியின் அருட்கொடையினால் ஆயத்தமாக்கப்பட்டாலொழிய, அவர்களது நீண்ட அனுபவமும் திறமையும் அவர்களை ஒளியின் வாய்க்கால்களாக மாற்றாது. பரிசுத்த காரியங்களை ஏற்று நடத்துகிறவர்கள், தேவனுடைய மகா வல்லமையுடைய

கரத்திற்கடியில் தங்களைத் தாழ்த்தும்பொழுது, ஆண்டவர் அவர்களை உயர்த்துவார். காரியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறவர்களாக, அவர்களை மாற்றுவார். அவரது ஆவியானவரின் கிருபையின் ஐசுவரியம் நிறைந்தவர்களாக மாற்றுவார். உலகத்தின் ஒளியாக இருக்கிறவரினின்று வருகிற வெளிச்சத்திலே, அவர்களது குணத்தில் காணப்படும் வலுவான தன்னலக்கூறுகளும் பிடிவாதமான போக்கும் வெளியரங்கமாகக் காணப்படும். "ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்"—வெளி 2:5. "நீங்கள் முழுமனதோடும் ஆண்டவரைத்தேடினீர்களானால், அவர் உங்களுக்குக் காணப்படுவார்."

முன்மாரியினால் சுட்டிக்காட்டப்பட்ட கிருபையை அசட்டைசெய்யக்கூடாது. தங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்தின்படி நடக்கிறவர்கள்மாத்திரமே அதிக மேலான வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். செயல்திறமுடைய கிறிஸ்தவ ஒழுக்கங்களின் எடுத்துக்காட்டுதல்மூலமாக நாம் ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டிருந்தாலொழிய பின்மாரியில் உண்டாகும் பரிசுத்தஆவியின் வெளிப்படுத்தல்களை கண்டு உணரமுடியாது. நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களது இருதயங்களிலே பின்மாரி பெய்துகொண்டிருக்கலாம். நாம் அதைத் தெளிவாக அறிந்துகொள்ளவோ—பெற்றுக்கொள்ளவோமாட்டோம். ★

# விழிப்படைவீர்... வேளை வந்துவிட்டது!

**“உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.” —ரோமர் 3:11,12.**

மாபெரும் போராட்டம் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது. கடலில் அல்லது நிலத்திலே ஏற்படும் பேரழிவுகள் அனைத்துக் காரியங்களுக்கும் முடிவு மிகவும் சமீபம் என்ற உண்மைக்குச் சாட்சியாக இருக்கிறது. யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும் அதை வலியுறுத்திக் கூறுகின்றன. நமக்கு முன்பாக நடைபெறவிருக்கும் சம்பவங்களை எதிர்பார்த்திருக்கின்றபோது படபடவென்று நாடிதுடிக்காத கிறிஸ்தவன் எங்காவது இருக்கிறானா? நமது ஆண்டவர் வருகிறார்! நம்மை நெருங்கி வந்துகொண்டிருக்கிற தேவனின் காலடிச் சத்தத்தை நாம் கேட்கிறோம்.

கிறிஸ்துவின் வருகை வெகுசீக்கிரமாக இருக்கிறது என்பதைப் பற்றிய அறிவையும், அதின் நோக்கத்தையும் இழந்துவிட நாம் அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு செய்வோமானால் கவலையின்றி கவனமற்றவர்களாக அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்துவிடுவோம். உள்ளார்ந்த காரியங்களுக்கு உணர்வற்றவர்களாகவும் அக்கறையற்றவர்களாகவும் மாறிவிடுவோம். நித்திரை மயக்கத்திலே நாம் பொய்யான உலகில் இருக்கும்பொழுது, நம்மைச் சுற்றிலும் நடைபெறும் காரியங்களைக்குறித்து நமக்கு உணர்விருக்காது.

தங்களைச் சுற்றிலும் கண்ணைக் கூசத்தக்கதான சத்திய ஒளியில் இருக்கும் நபர்களும் இருக்கிறார்கள். எனினும் ஒளிக்கு உணர்வற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சத்துருவினால் கவர்ச்சிக்கப்பட்டு, அவனது மயக்கும் வல்லமைக்கடியில் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் போல் இருக்கிறார்கள். இந்த நமது உலகத்திற்கு வரப்போகின்ற அந்த மகா நாளிற்கு அவர்கள்

ஆயத்தமாகிக்கொண்டிருக்கவில்லை. மார்க்கசம்பந்தமான சத்தியங்களுக்கு முற்றிலும் உணர்வற்றவர்கள் போன்று காணப்படுகிறார்கள்.

விழிப்போடிருக்கும் சில வாலிபர்கள் இல்லையா? இரவும் வருகிறது, விடியற்காலமும் வருகிறது எனக் காண்கிறவர்கள் தங்களது தூங்குகின்ற தோழர்களை எழுப்பிவிடத்தக்கதாக, தளரா ஊக்கத்தோடு பணிபுரியவேண்டும். அவர்களது ஆபத்தை அவர்களால் உணரமுடியாதா? அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்கள் தங்களது சொந்த வாழ்க்கை மற்றும் குணத்தின்மூலமாக கிறிஸ்து சீக்கிரமாக வருகிறார் என்பதை தங்களுக்குத்தாங்களே விசுவாசிக்கும்படிச் செய்யுங்கள்.... நமக்கும் சத்தியத்திற்குமுள்ள இடைவெளி துரிதமாகக் குறைந்துவருகிறது என்ற காரியம் நமது இருதயத்தை ஆழமாக உணர்த்தவேண்டும். நமது குணத்தைப் பூரணப்படுத்துகிற நமது பணியிலே, கடந்துசெல்லும் ஒவ்வொரு நாளும் நமக்கு ஒருநாளைக் குறைத்துக்கொண்டேவருகிறது.... எத்தனை அநேகம்பேர் தூங்குகிறார்களோ, கவலையற்ற அக்கறையின்மையோடு அருமையான மணிவேளைகளை விளையாட்டாக நித்திய உலகின் அந்த விளிம்பில்தானே நின்றுகொண்டிருப்பதைப்போன்று இருக்கிறார்கள். விசுவாசிக்கிறவர்கள் தெளிவாகவும் விழிப்போடும் ஊக்கத்தோடுமிருந்து கடும் உழைப்பாளர்களாகவும் விழித்திருந்து, ஜெபஞ்செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும்....

அன்புள்ள வாலிபர்களே, உங்களது விளக்குகளின் திரிகள் வெட்டப்பட்டு, சரியாக்கப்பட்டு எரிந்துகொண்டிருக்கின்றனவா? ★

# தவணையின் அந்த மணிநேரங்களில...!

**"அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்."**

**–2 கொரிந்தியர் 6:2.**

சந்தேகமின்றி கிறிஸ்து சீக்கிரம் வருகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். இது நமக்கு ஒரு கட்டுக்கதையல்ல. இது ஒரு உண்மை. இதைக்குறித்து சந்தேகமில்லை. அநேக ஆண்டுகளாகவும் சந்தேகம் இருந்ததில்லை. இது நாம் பற்றிக்கொண்டிருக்கும் மூலக்கோட்பாடு— நிகழ்கால சத்தியமாகும். நாம் நியாயத்தீர்ப்பை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். அவரைச் சந்திக்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். அவர் பரிசுத்த தூதர்கூட்டத்தால் அழைத்துவரப்பட்டு, உத்தமமாகவும் நீதியாகவும் இருப்பவர்களுக்கு சாவாமையின் இறுதித் தொடுதலைக் கொடுப்பதற்காக, மேகங்களின்மீது தோன்றப்போகிறார். அவர் வரும்பொழுது, நமது பாவங்களைவிட்டு நம்மைச் சுத்திகரிப்பதற்காக வரவில்லை. நம்முடைய குணங்களிலுள்ள குறைவுகளை அகற்றுவதற்காகவோ அல்லது நமது குணங்கள் நமது மனப்பாங்குகளிலுள்ள குறைபாடுகளினின்று குணமாக்குவதற்காகவே அவர் வரவில்லை. இந்தக்காரியங்கள் நமக்காகச் செய்யப்பட்டுவிட்டதென்றால் இந்தக்காலத்திற்கு முன்னரே இந்த வேலை செய்து முடிக்கப்பட்டிருக்கவேண்டும்.... ஆண்டவர் வரும்பொழுது பரிசுத்தமாக இருப்பவர்கள் இன்னும் பரிசுத்தமாகவே இருப்பார்கள். தங்களது சரீரத்தையும் ஆவியையும் தூய்மையான நிலையில் காத்துக்கொண்டவர்கள், பரிசுத்தத்திலும் மேன்மையிலும் காத்துக்கொண்டவர்கள், அந்த சாவாமையின் இறுதித் தொடுதலைப் பெற்றுக்கொள்வார்கள். அநீதியோடு பரிசுத்தமற்றவர்களாகவும் அசுத்தமாகவும் இருந்தவர்கள் என்றும் அப்படியே இருப்பார்கள். அவர்களது குறைவுகளை அகற்றி, அவர்களுக்குப் பரிசுத்த குணங்களைக் கொடுப்பதற்காக, அச்சமயத்தில் எந்த வேலையும்

நடைபெறாது. அவர்களுடைய பாவங்களையும் கேடான காரியங்களையும் அகற்றுவதற்காக புடமிடுகிறவர் உட்கார்ந்து தமது புடமிடும் நடவடிக்கையைத் தொடர்வதில்லை. இவையனைத்தும் இந்த தவணையின் மணிவேளைகளிலே நடைபெறவேண்டும். இப்பொழுதே நமக்காக இந்த வேலை செய்துமுடிக்கப்படவேண்டும்.

நமக்கு இயல்பான பலதரப்பட்ட வலிமைகளோடு, தேவனுடைய சத்தியத்தை விரும்பி ஏற்றுக்கொள்கிறோம். இந்த சத்தியத்தின் செல்வாக்கிற்கடியில் நாம் வரும்போது, அது நமக்காக ஒரு வேலையைச் செய்துமுடிக்கும். மகிமையின் இராஜ்யத்திற்காகவும் பரலோகத் தூதர்களின் கூட்டுறவிற்காகவும், ஒரு ஒழுக்கத் தகுதியை நமக்குக் கொடுப்பதற்கும் இத்தகைய பணி அவசியமாகும். நாம் இப்பொழுது தேவனுடைய தொழிற்பட்டறையில் இருக்கிறோம். நம்மில் அநேகர் கல்குவாரியிலுள்ள கரடுமுரடான கற்களைப் போலிருக்கிறோம். ஆனால் தேவனுடைய சத்தியத்தைப்பற்றிப் பிடித்துக்கொள்ளும்போது, அதின் செல்வாக்கு நம்முடைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவற்றை எத்தகைய தன்மையுடைய பாவமானாலும் கறையானாலும் நம்மைவிட்டு அகற்றி நம்மை உயர்த்துகிறது. இவ்வாறு இராஜாவை அவரது அழகிலே நாம் காண்பதற்கும், இறுதியில் மகிமையான இராஜ்யத்தில் தூய்மையான பரலோகத்தின் பரிசுத்த தூதர்களோடு இணைவதற்கும், நாம் ஆயத்தமாக்கப்படுகிறோம். இங்கேயே இந்த வேலை நமக்காகச் செய்யப்படவேண்டும். இங்கேயே நமது சரீரங்களும் குணங்களும் சாவாமையைப் பெற்றுக்கொள்ளத் தகுதியாக்கப்படவேண்டும். ★

# ஒழுக்கநிலை சார்ந்த அன்பின்அடிப்படைஆதாரம்!

**"எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மைபாராட்டமாட்டோம். ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது ... உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்." –2 கொரிந்தியர் 10:15,16.**

சாத்தானின் வசிய நிலப்பரப்பினின்று நீங்கள் விலகியிருக்க வேண்டும். தேவனிடம் நீங்கள் கொண்டிருக்கும் பற்றுறுதியினின்று உங்கள் மனங்கள் தடுமாறிப்போய்விட அனுமதிக்கக்கூடாது. கிறிஸ்துவின் மூலமாக நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும். சுயத்தைக் கட்டுப்படுத்திவைத்திருக்கும் குணங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். உங்களது சிந்தனைகள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ் அடங்கியிருக்கத்தக்கதாக கொண்டுவரப்படவேண்டும். உங்களது உணர்வுகள், மார்க்கம், பகுத்தறிவு ஆகியவைகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும். உங்களது கற்பனாசக்தி தடையின்றி கொந்தளித்து, அதின் சொந்தப் போக்கிலே செல்லும்படியும், கட்டுப்பாடு அல்லது ஒழுங்குமுறையின்றி செல்வதற்கு அனுமதிக்கப்படத்தக்கதாகவும் கொடுக்கப்படவில்லை. சிந்தனைகள் தவறாயிருக்குமானால், உணர்ச்சிகள் தவறாக இருக்கும். சிந்தனைகளும் உணர்வுகளும் சேர்ந்து ஒழுக்கமான குணத்தை உருவாக்குகிறது.... உங்களது எண்ணப்பதிவுகளுக்கு உங்களை ஒப்புக்கொடுத்து, சந்தேகம், உறுதியற்ற உணர்வு, மனஉளைச்சல் ஆகியவைகளின் போக்கிலே உங்களது சிந்தனைகளை ஓட அனுமதிப்பீர்களானால் உலகில் வாழும் மக்களிலே நீங்கள்தான் மிகவும் மிகழ்ச்சியற்றவர்களாக இருப்பீர்கள்....

அன்புள்ள சகோதரி F> உங்களது கற்பனா சக்தி வியாதிப்பட்டிருக்கிறது. உங்களது பகுத்தறிவையும் தீர்மானிக்கும் திறனையும் உங்களது எண்ணங்களை முற்றிலும் அடக்கியாள அனுமதித்து, அவ்வாறு தேவனைக் கனவீனம் செய்கிறீர்கள். உங்களிடத்திலே தீர்மானமான ஒரு

சித்தம் இருக்கிறது. அதினால், உங்களது உடலில் உள்ளத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அதின் விளைவாக இரத்த ஓட்டத்தில் சமநிலை தவறி சில உறுப்புகளிலே இறுக்கம் உண்டாக்குகிறது. உங்களது எண்ணங்களுக்கு உங்களது ஆரோக்கியத்தை தியாகஞ்செய்கிறீர்கள்.

நீங்கள் ஒரு தவறுசெய்துகொண்டிருக்கிறீர்கள். அது சரிப்படுத்தப்படாவிட்டால், உங்களது சந்தோஷத்தை மாத்திரம் சீர்குலைத்துப்போடுவதோடு நின்றுவிடாது. நீங்கள் திட்டமாக ஒரு தீமையை உங்களுக்குமட்டுமல்ல, உங்களது குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கும் செய்கிறீர்கள். மிக அதிகமாகச் செயல்புரிந்துகொண்டிருக்கும் உங்களது கற்பனாசக்தி உங்களது பகுத்தறிவைக் கட்டுப்படுத்தியிருக்கிறது.... உங்களது உணர்ச்சிகளின் மீது உங்களுக்கு வல்லமையிராவிட்டால், இது ஒரு பாவமாக இருக்காது. சத்துருவிற்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக இது இவ்வாறு பதில் கொடுக்காது. தேவனுடைய காரியங்களை எதிர்க்கத்தக்கதாக அணிவகுத்து நிற்பதற்குப்பதிலாக, உங்களது சித்தம் பரிசுத்தமாக்கப்பட்டு, அடக்கியாளப்படுவது அவசியமாகிறது.

துக்கம், கவலை, குழப்பமிருக்கின்ற ஒரு உலகத்திலே மனிதன் வைக்கப்பட்டிருக்கிறான். ஆதாம் ஏவாளைப்போல சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்படத்தக்கதாகவும் வைக்கப்பட்டிருக்கிறான். மேலும் சரியான குணத்தை உருவாக்கி, முரண்பாட்டிலும் குழப்பத்தின் மத்தியிலும் ஒரு இணக்கத்தைக் கொண்டுவரவேண்டும். நமக்காக இவ்வாறு அதிகமாகச் செய்யப்படவேண்டியது அவசியம். நாம் மகிழ்ச்சி அனுபவிக்க ஏராளமான காரியங்கள் இருக்கின்றன. கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடு ஒரு தொடர்புக்குள் கொண்டுவரப் படுகிறோம். அவரது இரக்கங்கள் தொடர்ந்து அவருக்குக் கடமைப்பட்ட நிலையில் நம்மை வைக்கிறது. அவரால் காட்டப்படும் அன்பாதரவிற்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்தவர்களாக, அவைகளில் மிகக் குறைவானதாகக் கருதப்படும் காரியத்திற்காகக்கூட பாராட்டி மதிப்பிடவேண்டும்.★

# குணமானது ஆத்துமாவின் ஒரு தனி இயல்பு!

**“பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது; முத்துகளைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது.” –யோபு 28:18.**

இந்த உலகினின்று அடுத்த உலகிற்கு நாம் எடுத்துச்செல்லக்கூடிய ஒரே பொக்கிஷம் தெய்வீக சாயலிற்கு ஏற்றபடி உருவாக்கப்பட்ட குணமே. இந்த உலகத்திலே கிறிஸ்துவின் போதனைக்கடியில் இருப்பவர்கள் தெய்வீக முயற்சியால் அடைந்த தேர்ச்சிப்பேறுகள் அனைத்தையும் தங்களுடன் பரலோக மாளிகைகளுக்கு எடுத்துச்செல்வார்கள். பரலோகத்திலும் நாம் தொடர்ந்து மேம்பாடடைந்துகொண்டிருக்கவேண்டும்.

மனதின் திறனும் கூர்மதியும் குணமல்ல. பொதுவாக இப்படிப்பட்டவைகளை உடைமையாகப்பெற்றிருப்பவர்கள் பெரும்பாலும் நல்ல பண்பிற்கு எதிர்மாறானவர்களாகவே இருபார்கள். புகழ் குணமல்ல. உண்மையான குணம் ஆத்துமாவின் ஒரு தனித்தன்மையாக, அந்த நபரின் நடத்தையிலே தன்னை வெளிப்படுத்துகிறது.

ஒரு நல்ல குணம் தங்கத்தையோ அல்லது வெள்ளியையோவிட அதிக மதிப்புடைய ஒரு முதலீடுபோன்று இருக்கிறது. திடீர் அச்சங்கள், தோல்விகள் ஆகியவைகளால் பாதிக்கப்படுகிறதில்லை. பூமிக்கடுத்த பொக்கிஷங்கள் அடித்துக்கொண்டுபோகப்படும் அந்த நாளிலே, அந்த நல்ல குணம் வலிமை வாய்ந்த பயன்களைக் கொண்டுவரும். நேர்மை, மனத்திடம், விடாமுயற்சி ஆகிய குணங்களை ஊக்கத்தோடு பேணிவளர்த்து உருவாக்க முயற்சிசெய்யவேண்டும். இந்தக் குணங்களை உடையோரை, அது எதிர்க்கமுடியாத வல்லமையால் அணிசெய்கிறது. இந்த வல்லமை நன்மைசெய்வதாகும். தீமையை எதிர்த்து நிற்பதற்கும் இன்னல்களைத் தாங்கிக்கொள்வதற்கும் வலிமைவாய்ந்தவர்களாக மாற்றுகிறது.

குணத்தின் வலிமையில் இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கின்றன. அவை சித்தத்தின் வல்லமை, சுயக்கட்டுப்பாட்டின் வல்லமைகளாகும். வலுவான—அடக்கியாளக்கூடாத நிலையிலுள்ள இச்சையை அநேக வாலிபர்கள் வல்லமைவாய்ந்த குணமென மதிப்பிடுகிறார்கள். எந்த நபர் தனது இச்சைகளால் அடக்கி ஆளப்படுகிறாரோ அவர் ஒரு பலவீனமான மனிதர் என்பது உண்மையாகும். உண்மையாகவே ஒரு மனிதனின் மேன்மையும் பெருந்தன்மையும் அவரது உணர்ச்சிகளின் வல்லமையாக அவரைக் கட்டுப்படுத்துவதில் அடங்கியிராமல், அவரது உணர்ச்சிகளை அவர் எப்படிக் கட்டுப்படுத்துகிறார் என்பதை வைத்தே அளவிடப்படுகிறது. தன்மேல் கூறப்படும் நிந்தனைகளை நுட்பமாக உணர்ந்துகொண்டபோதிலும், தனது உணர்ச்சிகளை கீழ்ப்படுத்தி, விரோதிகளை மன்னிப்பவரே மிகவும் பெலமுள்ள மனிதர் ஆவார். இன்றைய வாலிபர்கள் தங்களது உடைகளிலும் நடைஉடை பாவனைகளிலும் உலக நாகரீகத்தைப் பின்பற்றுகிறார்கள். அன்புகொள்ளத்தக்கதான மனநிலையும் அழகிய நற்குணமும் உடையவர்களாயிருத்தல் முக்கியமானது என்று கருதப்படுமானால் சமுதாயத்திலே ஒரு மேம்பட்ட செல்வாக்கை செயல்படுத்துவதற்கு ஆயத்தமாக, சுறுசுறுப்பான வாழ்க்கையின் முன்னேற்றப்படியிலே, இன்று ஒரு வாலிபன் இருக்குமிடத்திலே, நூற்றுக்கணக்கான வாலிபர்களைக் காணலாம். ★

ஆகஸ்டு 4

# கிறிஸ்துவே நமது உதவியாளரும் மீட்பருமாவார்!

**“அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.” —ரோமர் 5:19.**

விழுந்துபோன மனிதன் தனது மானிட சக்தியால் சாத்தானை மேற்கொள்ளமுடியாததினால், மானிட வல்லமையும் தெய்வீக வல்லமையும் ஒருங்கே இணைந்த கிறிஸ்து இதைக்கொண்டு பரலோக இராஜரீக மன்றங்களில் அவனுக்கு உதவி செய்யவந்தார். ஏதேனில் இருந்த ஆதாம் அவனது மேம்பட்ட அனுகூலங்களால் சாத்தானின் சோதனைகளுக்கு எதிர்த்து நின்று ஈடுகொடுத்து அவன்மீது வெற்றிபெற்றிருக்கமுடியும். விழுகைக்குப்பின் ஆதாம் ஏதேனினின்று வெளியேற்றப்பட்டு, தேவனின் அன்பினின்றும் வெளிச்சத்தினின்றும் விலகிய நிலையில், அவனது சொந்த சக்தியினால் சாத்தானின் சோதனைகளை எதிர்த்து நிற்பது முடியாது காரியம் என்பதும் கிறிஸ்துவிற்குத் தெரியும். மனிதன் முற்றிலும் அழிந்துபோகாதபடி, அவனைக் காப்பாற்றி அவனுக்கு நம்பிக்கையைக் கொண்டுவருவதற்காக, மனிதன் எங்கு இருக்கிறானோ, அங்கே அவனைச் சென்றடையத்தக்கதாக அவர் தம்மையே தாழ்த்தி, மனிதனின் தன்மையை எடுத்து, அவரது தெய்வீக வல்லமையோடு மானிடத்தையும் இணைத்தார். விழுந்துபோன ஆதாமின் குமாரர் களுக்கும் குமாரத்திகளுக்கும் அவர்கள் தங்களுக்காகப் பெற்றுக்கொள்ளக்கூடாத சக்தியை அவரது நாமத்தினாலே சாத்தானின் சோதனைகளை அவர்கள் மேற்கொள்ளத்தக்கதாக அவர்களுக்கு அவர் பெற்றுக்கொடுக்கிறார்.

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலே மிகவும் சாதகமான சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள்.... அவர்கள் பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பில்லாதவர்களாக அங்கிருந்தார்கள்.... அவர்கள் உலகில் வாழ்வதற்கு ஆரம்பத்தைக் கொடுத்தவர் அவர்களது ஆசிரியராக இருந்தார். ஆனால் தந்திரமுள்ள எதிராளியின் சோதனைகளுக்கும் வல்லமைகளுக்குமடியில்

அவர்கள் விழுந்துபோனார்கள். தேவனுடைய அரசாங்கத்திற்கு எதிராக சாத்தான் நான்காயிரம் ஆண்டுகள் போராடிக்கொண்டிருந்தான். தீர்மானமான செயல்திட்டத்தின்மூலமாக, வல்லமையையும் அனுபவத்தையும் பெற்றுக்கொண்டான். ஏதேனில் இருந்த ஆதாமைப்போல் விழுந்துபோன மனிதர்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் இல்லை. நான்காயிரம் ஆண்டுகள் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டவர்களாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். புரிந்துகொள்ளும் ஞானம் சாத்தானின் சோதனைகளை எதிர்க்கும் வல்லமை ஆகியவை இந்த பூமியிலே சாத்தான் வெற்றியோடு ஆளுகைசெய்வதாகத் தோன்றும்வரை குறைந்துகொண்டேபோய்விட்டது. இன்சுவைக் கவர்ச்சி, இச்சை, உலகப்பற்று, துணிகரமான பாவங்கள் ஆகியவை தீமையின் மாபெரும் பிரிவுகள் ஆகும். இவைகளினின்று அனைத்து வகையான கேடுபாடுகளும் வளர்ந்தன.

நமது ஜீவியங்கள் ஒரு கடுமையான சிக்கலில் இருப்பது போன்று தோன்றலாம். ஆனால் தலைமை ஊழியக்காரராகிய அவரிடம் ஒப்படைப்போமானால், அவருடைய சொந்த மகிமைக்கு ஏற்றதான வாழ்க்கை, குணம் ஆகியவைகளைக் கொண்டுவருவார். அந்தக் குணமானது, அதாவது கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்துகிற குணம் தேவனுடைய பரலோகத்திலே ஏற்றுக்கொள்ளப்படும்.

விசுவாசத்தினாலே தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிற அனைவரும், ஆதாம் தன்னுடைய மீறுதலிற்கு முன்பாக வாழ்ந்திருந்த அந்த பாவமற்ற நிலையை அடைவார்கள். ★

ஆகஸ்டு 5

# ஆவிக்குரிய உயர்ந்தநிலை முயன்று அடையக்கூடியது!

**“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.” —யூதா 24.**

பிரமாணத்தின் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் கிறிஸ்து கீழ்ப்படிந்தார்.... அவரது பூரண கீழ்ப்படிதலினாலே ஒவ்வொரு மானிடனும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதை அவர் சாத்தியமாக்கினார். நாம் நம்மை கிறிஸ்துவிற்கு அர்ப்பணிக்கும்போது, இதயம் அவரது இதயத்தோடு இணைக்கப்படுகிறது. சித்தம் அவரது சித்தத்தோடு கலந்துவிடுகிறது. மனம் அவரது மனதோடு ஒன்றாகிவிடுகிறது. சிந்தனைகள் அவருக்குக் கட்டுப்பட்ட நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றன. அவரது வாழ்க்கையைப்போன்று நமது வாழ்க்கை அமைந்துவிடுகிறது. அவரது நீதியின் உடைகளை நாம் தரித்திருப்பது என்பதின் பொருள் அதுவே. இச்சமயத்தில் அவர் நம்மைப்பார்க்கும்பொழுது, அத்தி இலைகளால்தைக்கப் பட்ட உடைகளை அல்ல, நமது நிர்வாணத்தையும் நமது பாழ்பட்டுப்போன நிலையையுமல்ல, தமது சொந்த நீதியின் ஆடையையே பார்க்கிறார். அதுவே, யேகோவாவின் பிரமாணத்திற்கான முழுமையான கீழ்ப்படிதலாகும்.

மீட்பின் திட்டத்தின்மூலமாக, ஒவ்வொரு பாவக்குணத்தையும் கட்டுப்படுத்தவும், எவ்வளவு வலுவான சோதனையானாலும் அனைத்து சோதனைகளையும் எதிர்த்து நிற்கவும் வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறார்.

மிகவும் வலுவான சோதனை பாவஞ்செய்வதற்கான ஒரு சாக்குப்போக்கு அல்ல. எவ்வளவு பெரிய அழுத்தம் ஆன்மாவின் மீது கொண்டுவரப்பட்டாலும், மீறுதல் நமது சொந்தச் செயலாகவே இருக்கிறது. எவரையும் பாவஞ்செய்யவைப்பதற்கு கட்டாயப்படுத்துவதற்காக பூமி பாதாளம் ஆகியவைகளில் எந்த வல்லமையும் கிடையாது. நமது சித்தம் சம்மதிக்கவேண்டும். இதயம் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இச்சை பகுத்தறிவை குலையச்செய்யமுடியாது. நீதியின்மீது அக்கிரமம் வெற்றிகொள்ளமுடியாது.

அவரது சேவையை உத்தமமாகச்செய்தவர்களாக, அந்த இம்மானுவேல் இளவரசனின் இரத்தந்தோய்ந்த கொடியின்கீழ் நிற்பவர்களானால், நீங்கள் ஒருபோதும் சோதனைக்கு வளைந்து கொடுக்கவேண்டிய அவசியமில்லை. உங்களது அருகிலே நின்று கொண்டிருக்கின்ற அவர் நீங்கள் விழாதபடி உங்களைக் காப்பாற்ற வல்லவராக இருக்கிறார்.

பாவம் நிறைந்த ஒரு மனப்பாங்கைக்கூட நீங்கள் விடாமல் வைத்துக்கொண்டிருக்க அவசியமில்லை.... எபேசியர் 2:1–6.

நாம் அவரது தெய்வீகத்தன்மையில் பங்குகொள்ளும்போது, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகின்ற மற்றும் நம்மால் பேணிவளர்க்கப்பட்ட தவறுசெய்கின்ற மனப்பாங்குகள், நமது குணத்திலிருந்து துண்டித்து வெளியேற்றப்படுகின்றன. நன்மையே செய்வதற்காக ஒரு ஜீவனுள்ள வல்லமையாக நாம் ஆக்கப்படுகிறோம். அந்த தெய்வீகப் போதகரிடமிருந்து எப்பொழுதும் கற்றுக்கொண்டு, அவரது சாயலில் ஒவ்வொரு நாளும் பங்குபெற்று, இவ்வாறு சாத்தானின் சோதனைகளை மேற்கொள்வதற்கு, நாம் தேவனோடு ஒத்துழைக்கிறோம். கிறிஸ்து தேவனோடு ஒன்றாக இருப்பதுபோல, மனிதனும் கிறிஸ்துவோடு ஒன்றாக இருக்கத்தக்கதாக தேவன் கிரியைசெய்கிறார். மனிதனும் கிரியை செய்கிறான். அதன்பிறகு பரலோக வாசஸ்தலங்களிலே கிறிஸ்துவோடு நாம் ஒன்றாக அமர்ந்திருப்போம். இயேசுவிலே நிச்சயத்தோடும் சமாதானத்தோடும் மனம் இளைப்பாறுதலைப் பெறுகிறது.★

# கிறிஸ்தவ பூரணத்துவத்தின் உயரத்தை எட்டிப்பிடித்தல்!

**"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு...." —எபேசியர் 3:20.**

தேவனை உங்களது பெலனாக வைத்துக்கொள்வீர் களானால், மிகவும் அதைரியமூட்டும் சூழ்நிலைகளுக்கடியிலும் கிறிஸ்தவ பரிபூரணத்துவத்தின் நிறைவை அடைவது சாத்தியமே என்று போதிய அளவு சிந்திக்காதிருந்தாலுங்கூட, அத்தகைய பரிபூரணத்துவத்தின் நிறைவை மிகவும் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். உங்களது சிந்தனைகள் உயர்வடையலாம். உங்களது நாட்டங்கள் மேன்மை உடையவைகளாகவும், சத்தியதைப்பற்றிய உள்ளார்ந்த சிந்தனைகளும் செயலுக்கான நோக்கங்களும் தெளிவாக இருக்கலாம். இவை கீழ்த்தரமான நோக்கங்களினின்று உங்களை உயர்த்தும்.

குணத்தின் பூரணத்துவத்தை அடைவதற்காக சிந்தனை, செயல் ஆகிய இரண்டுமே அவசியமாகும். உலகத்தோடு தொடர்புகொள்ளத்தக்கதாக நீங்கள் கொண்டுவரப்படும்போது, மனிதரின் பாராட்டுதலை ஆர்வத்தோடு நாடாமலும், அவர்களது நன்மதிப்பிற்காக (அவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்) வாழாதபடியும் நீங்கள் கவனமாக இருக்கவேண்டும்.... தாழ்மை என்னும் கிருபையைப் பேணி வளர்க்கவேண்டும். உங்களது உதவியற்ற ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மீது பற்றிக்கொண்டிருக்கும்படியாகச் செய்யவேண்டும்.... உலகப்பிரகாரமான பற்றுடைய மக்கள்திரளுக்கு மத்தியிலுள்ள குழப்பத்திற்கும் சோதனைகளுக்குமிடையில் ஆத்துமாவின் சுதந்திரத்தை பூரண இனிமையோடு காத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் தேவனோடு ஆன்மீக உறவுகொள்வீர்களானால், அவர் என்ன தகுதியை வைத்திருக்கிறாரோ அதை நீங்கள் மனிதருக்குக் கொடுப்பீர்கள். துன்பம் அனுபவிக்கின்ற மானிட இனத்தை ஆசீர்வதிப்பதற்காக

உங்கள்மீது வைக்கப்பட்டிருக்கும் கடமைகளை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ள முன்வருவீர்கள். நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவர் அல்ல. உங்களது மேம்பாடான விருப்பங்கள் உங்களது வாழ்க்கையின் மிக உயர்ந்த சேவைகள்மீது உங்களது ஆண்டவருக்கு பரிசுத்தமான உரிமைகள் இருக்கின்றன. உங்கள் சரீரத்தில் உங்கள் ஆன்மாவில் அவரது சொந்த மேன்மைக்காகவும் மகிமைக்காகவும் உங்களது திறமைகளை முழு அளவிற்கு பயன்படுத்துவதற்கு அவருக்கு உரிமையிருக்கிறது. எத்தகைய சிலுவைகளானாலும் நீங்கள் சுமக்கவேண்டுமென்று கோரப்படுமானால் ஒரு முறுமுறுப்புமின்றி நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்....

அநேகர் தேவனற்றவர்களாக—நம்பிக்கையற்றவர்களாக இந்த உலகில் வாழ்கிறார்கள். அவர்கள் சாத்தானின் உபாய தந்திரங்களால் அடிமைப்படுத்தப்பட்டு, குற்றமுள்ளவர்களாகவும் கேடு நிறைந்தவர்களாகவும்—இழிந்த—தரக்குறைவான பண்புடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்களை மீட்பதற்காகத்தான் பரலோகத்தினின்று கிறிஸ்து இறங்கிவந்தார். நமது மிகவும் மேன்மையான பரிவு, இரக்கம், தளரா முயற்சி ஆகியவைகளைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அழிவின் விளிம்பிலே இருக்கிறார்கள். நிறைவேற்றப்படாத விருப்பங்களாலும், ஒழுங்குகுலைந்த இச்சைகளாலும் தங்களது சொந்த மனசாட்சியின் கண்டனங்களாலும் துன்பம் அனுபவிக்கிறார்கள். துயர்மிகுந்த என்ற வார்த்தையின் ஒவ்வொரு பொருளின்படியும் வேதனை அனுபவிக்கிறார்கள். இந்த உலக வாழ்க்கையில் பிடியை இழந்து கொண்டிருக்கிறார்கள். வரப்போகும் வாழ்க்கையைக்குறித்து எதிர்பார்க்க அவர்களுக்கு எதுவுமில்லை.

உங்களுக்கு ஊழியஞ்செய்வதற்கு முக்கியமான பணித்தளம் ஒன்றிருக்கிறது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் விழிப்புடையவர்களாகவும் எஜமானின் அழைப்பிற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியவேண்டும்.★

# மானிட சமூகப்படிநிலையில் பூரணத்துவம்!

**“ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.” —மத்தேயு 5:48.**

நமது மீட்பர் மானிடரின் தன்மைபற்றி நன்றாகப் புரிந்திருந்தார். எனவே, பரலோகத்திலுள்ள, “என் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்.” என்று ஒவ்வொரு மனிதரிடத்திலும் கூறுகிறார். தேவன் தமது செல்வாக்கின் எல்லையிலே பூரணராக இருப்பதுபோன்று, மனிதனும் தனக்குரிய செல்வாக்கின் எல்லையிலே பூரணமாக இருக்கவேண்டும். “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.”—யோவான் 1:12. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இந்த எண்ணிக்கையில் காணப்படுகிறார்கள். அவர்களைப்பற்றி மேற்கூறப்பட்ட முழு நம்பிக்கை நிறைந்த வார்த்தைகள் கூறப்பட்டன. மிகச் சிறந்த—மிக உயர்ந்த குணத்திற்கு சற்றும் குறையாத அளவு குணத்தில் மாத்திரமே நாம் மனநிறைவோடிருக்கவேண்டுமென்று இந்த வார்த்தைகள் அறிவிக்கின்றன. அதாவது, நமது குணம் தெய்வீக குணத்தைப்போன்று அமையவேண்டும். இத்தகைய குணத்தை உடையவர்களாக நாம் இருக்கும்பொழுது, நமது வாழ்க்கை, நமது விசுவாசம், நமது மார்க்கத்தின் தூய்மை ஆகியவை மற்றவர்களுக்கு அறிவுறுத்துகின்ற முன்மாதிரியாக இருக்கும்.

பாவத்தை மேற்கொள்ளத்தக்கதாக, தங்களிடத்தில் எந்த விதமான தீர்மானமான முயற்சியுமின்றி இருப்பவர்கள், தங்களது குணங்களிலே ஒரு மாயவித்தையைப்போன்று திடீர் மாற்றத்தைக் காணவேண்டும் என்று காத்திருப்பவர்கள் ஏமாற்றமடைவார்கள். இயேசுவை நோக்கிப்பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, பயப்படவும் நமக்குக் காரணமில்லை, சந்தேகப்படவுங்காரணமில்லை. அவரிடத்தில் வருகின்ற அனைவரையும்

இறுதிவரை இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். நமது பழைய குணம் மீண்டும் மேலாதிக்கம் பெற்றுவிடுமோவென்றும், நாம் மீண்டும் அவனது கைதிகளாகி விடாதபடி சத்துரு தனது உபாய தந்திரத்தால் சில கண்ணிகளை வைத்து விடுவானோவென்றும் நாம் தொடர்ந்து பயத்தில் இருக்கலாம். நமது சொந்த இரட்சிப்பிற்காக பயத்தோடும் நடுக்கத்தோடும் நாம் பாடுபடவேண்டும். தேவன் தமது செல்வாக்கின் எல்லைக்குள் எப்படி பரிசுத்தமாக இருக்கிறாரோ அதைப்போன்று நமது எல்லைக்குட்பட்ட வல்லமையோடு, நம்முடைய செல்வாக்கிற்கடியில் பரிசுத்தமாக இருக்கவேண்டும். தெய்வீக குணத்தின் நயத்தையும் நேர்த்தியையும் அன்பையும் சத்தியத்தையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். மெழுகு முத்திரையின் பதிவை எடுத்துக்கொள்ளுகிறதுபோல, ஆன்மா தேவனுடைய ஆவியானவரின் பதிவை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவின் சாயலை விடாமல் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆவிக்குரிய இனிய தன்மையிலே நாம் ஒவ்வொரு நாளும் வளரவேண்டும். தெய்வீக மாதிரிப்படிவத்தைப் பார்த்து பின்பற்றும் நமது முயற்சிகளில் நாம் அடிக்கடி தவறலாம். நமது குறைபாடுகளுக்காகவும் தவறுகளுக்காகவும் இயேசுவின் பாதத்தில் விழுந்து அடிக்கடி அழுது மன்றாடிக்கொண்டிருக்க வேண்டிய திருக்கலாம். நாம் அதைரியப்படத் தேவையில்லை. நாம் அதிக ஊக்கமாக ஜெபிக்கவேண்டும். முற்றிலுமாக விசுவாசிக்கவேண்டும். நமது ஆண்டவரின் சாயலிற்கேற்றபடி வளரத்தக்கதாக திடஉறுதியோடு மீண்டும் முயற்சி செய்யவேண்டும். நம்முடைய சொந்த வல்லமையில் நாம் நம்பிக்கைகொள்ளத் தயங்கும்பொழுது, நமது மீட்பரின் வல்லமையை நாம் உறுதியாக நம்புவோம். நமது தேவனும் நமது நலவாழ்விற்கு ஆதாரமாக இருக்கிறவருமாகிய அவருக்கு துதிகளைச் செலுத்துவோம்.★

ஆகஸ்டு 8

# நோக்கத்திலும் செயலிலும் மதிப்பிற்குரிய நிலை!

**“ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.” —எபேசியர் 4:32.**

கொள்கை, சரியான காரியங்களில் நேர்மை ஆகியவை என்றும் நெஞ்சார நேசிக்கப்படவேண்டும். தந்திரத்திற்குப் புகலிடங்கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திலே, நேர்மை தங்கித் தரித்திருக்காது. அவை இரண்டும் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. ஒன்று பாகாலிடத்திலுள்ளது. அடுத்தது தேவனிடத்திலுள்ளது. நமது எஜமானர் தமது ஊழியர்கள் நோக்கத்திலும் செயலிலும் மிகவும் மேன்மையுடையவர்களாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.... நேர்மையை தனது தோழனாகத் தெரிவுசெய்துவைத்திருப்பவர்கள் தங்களது அத்தனை செயல்களிலும் வெளிப்படுத்திக்காட்டுவார்கள். பெரும்பாலான மக்களுக்கு இப்படிப்பட்டவர்கள் திருப்தியளிக்கக் கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் தேவனுக்கு இவர்கள் அழகான மனிதர்கள்.

சாத்தான் தன்னைச் சுற்றிலும் திரள்கூட்டத்தை நெருக்கமாக வைத்துக்கொள்ள கிரியைசெய்கிறான். மிகவும் நெருக்கமான நண்பர்களைப் பிரித்துவிடுவான். எப்பொழுதும் பேசிக்கொண்டும், வீணாக வம்பளந்துகொண்டும், பொய்ச்சாட்சி சொல்லிக்கொண்டுமிருக்கிற மனிதர்கள் உண்டு. இவர்கள் முரண்பாடுகளையும் சச்சரவுகளையும் உண்டாக்கும் விதைகளை விதைக்கிறார்கள். இந்த வகுப்பினரை பரலோகம் சாத்தானின் மிகவும் திறமையான ஊழியர்களென்று நோக்கிப்பார்க்கின்றது. ஒரு நபரிடத்தில் இச்சகமாகப் பேசி, வெற்றிபோன்று காணப்படுகிற அவர்களது ஒரு சில முயற்சிகளைப் புகழ்ந்துபேசுவதைவிட, பிறரால் புண்படத்தக்கதாக பேசப்பட்ட மனிதன் குறைந்த ஆபத்தான நிலையில் இருக்கிறான். தோற்றத்தில் நண்பர்களைப்போன்று காணப்படுபவர்களால் கூறப்படும்

புகழுரைகள், பிறரால் கூறப்படும் நிந்தனையான சொற்களைவிட மிகவும் ஆபத்தானவை.

தன்னையே புகழ்ந்துகொள்ளுகிற ஒவ்வொரு மனிதனும், அவனது மிகச் சிறந்த முயற்சிகளில் காணப்படும் பொலிவான தோற்றத்தை துடைத்துப்போடுகிறான். மேன்மையான குணத்தையுடைய நபர் விரோதிகளின் பொய்யான குற்றச்சாட்டுகளைக் குறித்து சீற்றங்கொள்ளும் அளவிற்கு தன்னைத் தாழ்த்திக்கொள்ள மாட்டார். பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் தீங்கின்றி கீழே விழுகிறது. ஏனென்றால், அது தன்னால் விழத்தள்ளமுடியாததைப் பலப்படுத்திவிடுகிறது. அன்பின்—பொறுமையின் தேவனாகிய அவர் தமது மக்கள் தம்மோடு நெருக்கமாக இணைந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார். அனைவரும் தங்களது வாழ்க்கையிலே கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தவேண்டும். எவரும் மற்றவரது உத்தியோகத்தை அல்லது நிலையை அல்லது புகழை சிறுமைப்படுத்திப் பேசும் முயற்சியில் இறங்கக்கூடாது. இது தற்பெருமையாகும்.

எவரையும் ஒருபோதும் இழிவாகப் பேசாதீர்கள். ஏனெனில் அவன் ஆண்டவர் பார்வையில் மிகப் பெரியவனாக இருக்கலாம். தங்களைப்பற்றி மிகப் பெருமையாக நினைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அவர்களது இதயங்களின் முறைகேடான நிலையினால் தேவனால் மிகவும் அற்பமாக மதிப்பீடுசெய்யப்படலாம். சிலுவையின் பாதத்தில் தாழவிழுந்துகிடப்பதும், நமது கண்களில் நாம் அற்பமாகத் தெரிவதும் தேவனில் உறுதியாக நம்பிக்கை வைப்பதுந்தான் நம்முடைய ஒரே பாதுகாப்பாக இருக்கிறது. நம்மை மிகப் பெரியவர்களாக ஆக்குவதற்கு அவருக்கு மாத்திரமே வல்லமை இருக்கிறது. அனைவரது மதிப்பீடுசெய்யும் திறனும் திறமையும் இப்பொழுது அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வேலையும் கவனத்தோடும், விசுவாசத்தோடும் செய்யப்படவேண்டுமென்று எதிர்பாக்கும் காரியம் போதுமான அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று காட்டுகிறது. அனைவருடைய வேலையையும் ஒரே மனிதன் செய்யமுடியாது. ஒவ்வொருவருக்கும் அவரது நிலைமைக்கேற்ற இடமும், அவருக்கான சிறப்பான வேலையுமுண்டு. நியாயத்தீர்ப்பின் சோதனையில் நிற்கத்தக்கதாக, ஒவ்வொருவரும் தனது வேலையை எத்தகைய முறையில் செய்யவேண்டுமென்று நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். ★

# கெட்ட பழக்கங்களை மேற்கொள்ளுதல்

**“ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்.” —1 தீமோத்தேயு 5:22.**

மனதின்—ஆத்துமாவின்—உடலின் தூய்மையை எது அமைத்து உருவாக்குகிறது என்பதை அறிவது கல்வியின் ஒரு முக்கியப் பகுதியாகும்.

குணத்தில் தூய்மை குறைவுபடும்போது, பாவம் குணத்தின் ஒரு பகுதியாக மாறும்போது, அதற்கு மயக்கும் ஒரு வல்லமை இருக்கிறது. அது ஒரு குவளை வெறியூட்டும் மதுபானத்திற்கு சமானமாகும். முழு மனிதனையும் கறைப்படுத்தக்கூடிய பழக்கவழக்கங்களால் மனக்கட்டுப்பாடு, பகுத்தறிவு ஆகியவைகளின் வல்லமைகள் நிலைகுலைந்துபோகின்றன. இந்தப் பாவம் நிறைந்த பழக்கங்கள் தொடருமானால், மூளை நிலையற்று வியாதிப்பட்டு, அதின் சமநிலையை இழந்துவிடுகிறது. இப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே சாபமாகவும் தங்களிடத்தில் தொடர்புவைத்துக்கொண்டிருக்கிற அனைவருக்கும் சாபமாகவும் இருப்பார்கள்....

நல்ல பழக்கங்களைவிட, கெட்ட பழக்கங்கள் சுலபமாக அமைந்துவிடுகின்றன. மேலும் மிகக் கடும் முயற்சியோடுதான் கெட்ட பழக்கங்களை விட்டுவிடமுடியும். இதயத்தின் இயல்பான தன்மையுள்ள சீர்கேடானது, மிகவும் நன்றாகத் தெரிந்த உண்மையான காரணமாக இருக்கிறது. அதாவது, வாலிபர்களிடத்தில் அவர்களது குணங்களிலே நிலைத்துநிற்கின்ற தூய்மையின் கேடடையாத நீதியின் குணத்தை ஊன்றச்செய்வதைவிட, கட்டுப்பாட்டை சிதைப்பதற்கும் ஒழுக்கத்திற்கான மார்க்கசம்பந்தமான கருத்துக்களை கேடடையச் செய்வதற்கும் மிகக்குறைந்த அளவில் முயற்சி செய்தலே போதுமானது. தங்குதடையற்ற இன்பத் தோய்வுகளில் ஈடுபடுதல், கேளிக்கைகளின்மீதுள்ள விருப்பம், பகை,

பெருமை, தன்மதிப்பு, எரிச்சல், பொறாமை ஆகியவை போதனையின்றியும் முன்மாதிரியின்றியும் புறத்தூண்டுதலின்றியும் தானே வளரும். நமது விழுந்துபோன இப்பொழுது இருக்கும் நிலையிலே மனதையும் குணத்தையும் அதின் இயல்பான தன்மைக்கு விட்டுவிட்டால், காரியங்கள் பின்வருமாறுதான் நடைபெறும். அதாவது இயற்கை உலகிலே ஒரு வயலை அப்படியே கிடக்கும்படி விட்டுவிடுவோமானால், முள்ளும் புதரும் அதை மூடிவிடுவதை நாம் காணலாம். அது அருமையான தானியத்தையும் அழகான பூக்களையும் உற்பத்திசெய்துகொண்டிருக்கவேண்டுமானால் அங்கு கவனத்தோடு இடைவிடாமல் வேலைசெய்யப்படவேண்டும்.

தீமைக்கு எதிராகத் தொடர்ந்து எதிர்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கவேண்டியது அவசியம் என்பதை நாங்கள் உங்களுக்கு முன்பாக வைக்கிறோம். ஆண்களும் பெண்களும் மீட்கப்படவேண்டுமென தேவன் அத்தனை அதிகமான அக்காரியத்தை மதிப்பீடு செய்து, தமது நேசகுமாரனை அவர்களை மீட்பதற்காக மரிக்கக் கொடுத்தார் என்ற காரியத்தில் பரலோகம் முழுவதும் அக்கறை காட்டுகிறது. இத்தகைய விருத்தி, இத்தகைய தூய்மையாக்கப்பட்ட தன்மை, இத்தகைய மேன்மை ஆகியவைகளுக்கு மனிதனைப்போன்ற தகுதியுடைய நிலையில் தேவன் படைத்த எந்த உயிரினமும் காணப்படவில்லை. ஆனால் மனிதன் தனது சொந்த இழிவான இச்சைகளால், அறிவு மழுங்கி தீய ஒழுக்கத்தில் மூழ்கிப்போனதால், ஆண்டவரின் பார்வையில் எத்தகைய நிலைக்கு உறுமாறிப்போயிருக்கிறான்.

அவன் எப்படி இருக்கலாம், எப்படி மாறிவிடமுடியும் என்று எண்ணிப்பார்க்கவே முடியாது. கிறிஸ்துவின் கிருபையின்மூலமாகத் தொடர்ந்து மனவளத்தில் முன்னேற்றமடையும் திறமை படைத்தவனாக இருக்கிறான். நித்திய வெளிச்சம் அவனது உள்ளத்தில் பிரகாசிக்கட்டும். அவனது இதயத்தினின்று தேவ அன்பு வெளியே பொழியட்டும். கிருபையின்மூலமாக அவனை ஒரு வல்லமையுள்ள மனிதனாக ஆக்குவதற்கு, பூமியின் பிள்ளையாக—ஆனால் நித்திய வாழ்வைச் சுதந்தரிக்கும் பிள்ளையாக அவனுக்குப் பங்களிப்பதற்காக கிறிஸ்து மரித்தார்.★

# மனிதன் முற்றிலும் பரிசுத்தமாகும் நிலை!

**“உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.” —எபேசியர் 4:23,24.**

சத்தியம் முழுமனிதனையும் பரிசுத்தமாக்கவேண்டும். அதாவது, அவனது மனம், அவனது சிந்தனைகள், இதயம், சக்தி அனைத்தையும் பரிசுத்தமாக்கவேண்டும். அவனது சொந்த இச்சை மிகுந்த பழக்கங்களின்மீது அவனது உயிராற்றல் சக்திகள் எரிக்கப்பட்டுவிடாது. இந்தப் பழக்கங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் அல்லது அவைகள் அவனை மேற்கொண்டுவிடும்.... நினைவுகள் தூய்மையாக்கப்படவேண்டியது அவசியம். தங்களது உடலை எப்படிப் பேணிப் பராமரிக்கிறார்களோ அதே போன்று, அவர்களது மனதின்— இதயத்தின் ஆற்றல், சக்தி, தூய்மை ஆகியவைகளில், செயல்கள் அனைத்தும் சரியாக நடைபெறும். இதைமட்டும் சரியாகப் புரிந்துகொண்டிருப்பார்களானால், எப்படிப்பட்ட சிறந்த ஆண்களும் பெண்களுமாக இருந்திருப்பார்கள்!

ஒரு உண்மையான கிறிஸ்தவன் பரிசுத்தத்தைக்கொண்டு வரும் ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்கிறான். அவன் தமது மனசாட்சியில் குற்றத்தின் ஒரு கறையுமின்றி அல்லது ஆன்மாவில் உள்ளார்ந்த கேடு இன்றி இருக்கிறான். தேவனுடைய பிரமாணத்தின் ஆவிக்குரியதன்மை, அதின் வரையறைசெய்யப்பட்ட கொள்கைகளோடு அவனது வாழ்விற்குள் கொண்டுவரப்படுகிறது. சத்தியத்தின் வெளிச்சம் அவனது புரிந்துகொள்ளும் தன்மையை ஒளியால் நிரப்புகிறது. மீட்பருக்காகக் கொண்ட பூரண அன்பின் ஆர்வப்பெருக்கானது அவனது ஆன்மாவிற்கும் தேவனுக்குமிடையே குறுக்கிட்டிருக்கும் அந்த நச்சு நிறைந்த ஆவியை வெளியேற்றி தெளிவடையச்செய்கிறது. தேவனுடைய சித்தம் அவனுடைய சித்தமாக—தூய்மையாக உயர்த்தப்பட்டதாக—நயப்படுத்தப்பட்டதாக பரிசுத்தமாக்கப்படுகிறது. பரலோக வெளிச்சத்தை அவனது முகம்

வெளிப்படுத்துகிறது. அவனது உடல் பரிசுத்த ஆவியானவர் தங்குவதற்குத் தகுந்த ஆலயமாகிறது. அவனது குணத்தைப் பரிசுத்தம் அலங்கரிக்கிறது. தேவன் அவனோடு தொடர்புகொள்ளமுடியும். ஏனெனில் அவனது ஆன்மாவும் உடலும் தேவனோடு இசைந்திருக்கிறது.

நமக்கு உடைமையாக இருக்கிற அனைத்தின்மேலும், அதாவது நமது உள்ளம், ஆன்மா, உடல், ஆவி அனைத்தின்மீதும் அவருக்கு உரிமையிருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவரால் நாம் படைக்கப்பட்டதாலும், மீட்கப்பட்டதாலும் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். நம்மைப் படைத்தவராக நமது முழு சேவையின்மீதும் அவர் உரிமை கோருகிறார். மேலும் ஒரு ஈடு இணையற்ற அன்பிற்கு உரிமை கோருகிறார். இந்த உலகில் நாம் வாழ்கின்ற ஒவ்வொரு கணநேரத்திலும் இந்த அவரது உரிமையை நன்றாகப் புரிந்தவர்களாக இருக்கவேண்டும்.... நமது உடல்கள் நமது ஆத்துமாக்கள் நமது ஜீவியங்கள் எல்லாம் அவருடையவைகள். அவைகள் அவரால் நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட ஈவுகள் என்பதினால் மாத்திரமல்ல, அவர் தொடர்ந்து அவரது நன்மைகளைப் பொழிந்துகொண்டிருக்கிறார். நமது செல்படும் திறனைப் பயன்படுத்த நமக்குச் சக்தியளிக்கிறார்.... யோவான் 1:12—ஐ வாசிக்கவும்.

தேவனுடைய குமாரர்களாக இருப்பவர்கள் கிறிஸ்துவை தங்களது குணங்களிலே காட்டுவார்கள். தேவகுமாரரின் எல்லையற்ற மென்மையான தன்மையோடும் பரிவோடும் அன்போடும் தூய்மையோடும் அவர்களது பணிகள் நடைபெறும். எவ்வளவிற்கு அதிகமாக—முழுமையாக உள்ளமும் உடலும் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்படைக்கப்படுகிறதோ, அவ்வளவிற்கு அதிகமாக நாம் அவருக்கு அளிக்கும் அன்புக்கொடைகளின் இனிமை இருக்கும். ★

# அவரது பிரமாணத்தோடு இசைந்து வாழ்தல்!

**"எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும், அதைக் கைக்கொள்ளுவேன்." —சங்கீதம் 119:34.**

புதிய பிறப்பின் அனுபவத்திலே இதயம் தேவனோடு இசைந்திருக்கும்படியாகக் கொண்டுவரப்படுகிறது. அது அவரது பிரமாணத்திற்கு ஒத்த இசைவோடு கொண்டுவரப்படுகிறது. இத்தகைய மாபெரும் மாறுதல் ஒரு பாவியிடம் நடைபெறும்பொழுது, அவன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்கும், பாவத்தைவிட்டு நீங்கி பரிசுத்தத்திற்கும், மீறுதல், கலகம் ஆகியவைகளினின்று நீங்கி கீழ்ப்படிதலுக்கும், வாய்மை தவறாதிருக்கும் நிலைக்கும் உட்படுகிறான்....

தேவனுடைய பிரமாணத்தைத் தள்ளிப்போடுதல் அல்லது அலட்சியஞ்செய்தல் ஆகியவற்றினின்று எழும்புகின்ற பரிசுத்தத்தைக்குறித்த தவறான கருத்துக்கள் இந்நாட்களில் ஏற்படுகின்ற மார்க்க சம்பந்தமான இயக்கங்களில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்தக் கருத்துகள் கொள்கைகளில் பொய்யானதாகவும் செயல்முறை சார்ந்த விளைவுகளில் ஆபத்தானவையாகவும் இருக்கின்றன. இத்தகைய கொள்கைகளுக்குப் பொதுவாக அதிக ஆதரவு கிடைக்கின்றது. இதனால் இந்தக் குறிப்பிட்ட காரியத்திலே வேதவாக்கியங்கள் என்ன கற்றுக்கொடுக்கின்றன என்பதுபற்றி அனைவரும் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருப்பது இரண்டு மடங்கு அவசியமாகும்.

உண்மையான பரிசுத்தமாகுதல் என்பது வேதாகம மூலக்கோட்பாடுகளில் ஒன்றாகும். அப்போஸ்தலனாகிய பவுலார் தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதிய நிருபத்திலே, "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது" என்றும், "சமாதானத்தின் தேவன்தாமே உங்களை

முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக" (1 தெச. 4:3,5,23) என்றும் எழுதுகிறார். பரிசுத்தமாகுதல் என்றால் என்னவென்பதுபற்றியும் அதை எப்படி அடைவது என்பதைப்பற்றியும் தெளிவாக வேதாகமம் போதிக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்" என்று மீட்பர் தனது சீடர்களுக்காக ஜெபித்தார். விசுவாசிகள், "பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்று" (ரோமர் 15:15) பவுலார் போதித்தார். பரிசுத்த ஆவியானவரின் வேலை யாது? இயேசு தமது சீடர்களிடத்தில், "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோவான் 16:13) என்று கூறினார். "உம்முடைய பிரமாணமே சத்தியம்" என்று சங்கீதக்காரர் கூறுகிறார். அவருடைய பிரமாணத்தில் உள்ளடங்கியிருக்கும் நீதியின் மாபெரும் கொள்கைகள் தேவனுடைய வார்த்தையினாலும், அவருடைய ஆவியினாலும் மனிதருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "தேவனுடைய பிரமாணம் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும்" தெய்வீக பரிபூரணத்தின் ஒரு எழுத்துப்படிவமாகவும் இருக்கிறது. அந்த பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்ததால் அமைக்கப்படும் குணம் பரிசுத்தமாக இருக்கும் என்று விளங்குகிறது. கிறிஸ்துவே அப்டிப்பட்ட குணத்திற்கு ஒரு முழுமையான முன்மாதிரியாக இருக்கிறார். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டேன் என்றும் பிதாவிற்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்ய விரும்புகிறேன்" (யோவான் 15:10; 8:29) என்று கிறிஸ்து கூறுகிறார். கிறிஸ்துவின் பின்னடியார்கள் அவரைப்போலாக வேண்டும். அவரது கிருபையினாலே அவரது பரிசுத்தப் பிரமாணங்களின் கொள்கைகளுக்கு இசைந்தபடி குணங்களை அமைக்கவேண்டும். இதுவே வேதாகமத்தின்படி பரிசுத்தமாகுதலாகும். இந்தப் பணி கிறிஸ்துவிலே விசுவாசம் வைப்பதின்மூலமாகவும் நம்மில் வாசஞ்செய்கின்ற தேவ ஆவியானவரின் வல்லமையின்மூலமாகவும் மாத்திரமே நிறைவேற்றப்படமுடியும். ★

ஆகஸ்டு 12

# போலித்தனமான பரிசுத்தம்!

**“அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனா யிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோ மென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.” –1 யோவான் 2:4,5.**

மார்க்க சம்பந்தமான உலகில் பரிசுத்தமாகுதல் என்ற காரியம் இப்பொழுது முக்கியத்துவம் பெற்றுக்கொண்டிருக்கிறது. அத்துடன் சுயத்தை உயர்த்திக்காட்டுதல், தேவ பிரமாணத்தைப் புறக்கணித்தல் என்ற ஒரு குணத்தையும் வெளிப்படுத்துகிறது. இந்தவிதமான பரிசுத்தமாகுதல்—இந்தக்குறிப்பானது வேதாகம மார்க்கத்திற்கு புறம்பானது ஆகும். இதை ஆதரித்துப் பேசுபவர்கள் பரிசுத்தமாகுதல் உடனடியாக நடைபெறும் பணி என்றும் போதிக்கிறார்கள். இதைக்கொண்டு, விசுவாசத்தின்மூலமாக பூரணமான பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் போதிக்கிறார்கள். “விசுவாசித்தால் மாத்திரம் போதும்; ஆசீர்வாதம் உங்களுடையதாகும்” என்று அவர்கள் கூறுகிறார்கள். பெற்றுக்கொள்பவர் பங்கிற்கு அவர் எந்த முயற்சியும் செய்யவேண்டியதில்லை என்று எண்ணிக்கொள்ளவேண்டும். அதே சமயத்தில் தேவ பிரமாணத்தின் அதிகாரத்தை அவர்கள் மறுக்கிறார்கள். அத்துடன் தேவ பிரமாணத்தைக் கைக்கொள்வது என்ற கடமையினின்று தாங்கள் விடுதலைபெற்றிருக்கிறதாகவும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஆனால் அவரது சித்தத்திற்கும் தன்மைக்கும் வெளிப்பாடாக இருக்கிற கொள்கைகளோடு பிரமாணத்தோடு இசைந்துவராமல் அவரது சித்தத்தோடு ஒன்றுபட்டு இருக்கிறதற்கு ஏற்றவாறு மனிதர் பரிசுத்தமாயிருப்பது கூடாத காரியமாகும்.

விடாமுயற்சி—சுயமறுப்பு, உலகத்தின் அனைத்து தீமைகளினின்று விடுபடுதல் போன்றவை அவசியமில்லாத ஒரு இலகுவான மார்க்கத்தின் மேலுள்ள விருப்பம், விசுவாசம், விசுவாசம்மாத்திரமே என்னும் பிரபலமான ஒரே ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளது. ஆனால், தேவனுடைய வார்த்தை “என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசவாசமுண்டென்று

சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?.. அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.... வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?" (யாக்கோபு 2:14,17,20) என்று சொல்லுகிறது.

தேவனுடைய வார்த்தையின் சாட்சி கிரியைகளற்ற விசுவாசம் எனப்படும் கொள்கையாகிய அந்தக் கண்ணிக்கு (பொறிக்கு) விரோதமாக இருக்கிறது. எந்த நிபந்தனைகளின் பேரில் இரக்கம் வழங்கப்படுகிறதோ, அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாமல் பரலோகத்தின் ஆதரவை உரிமைகோருகின்றது விசுவாசமல்ல. அது துணிகரமாகும். வேத வாக்கியங்கள் வழங்கியிருக்கும் முன்னேற்பாடுகள், வாக்குத்தத்தங்கள் ஆகியவைகளில் மெய்யான விசுவாசத்தின் அடித்தளம் அமைந்திருக்கிறது.

தேவனுடைய எதிர்பார்ப்புகளில் ஒன்றைத் துணிவோடு வேண்டுமென்றே மீறிக்கொண்டிருக்கும் நிலையில் இருந்து கொண்டு, தாங்கள் பரிசுத்தமாக இருக்கமுடியும் என்று நம்பிக்கை வைத்து எவரும் தங்களை ஏமாற்றிக்கொள்ளாதிருக்கட்டும். ஒரு தெரிந்த பாவத்தைச்செய்யும் காரியம் ஆவியானவருடைய சாட்சியின் குரலை அமைதிப்படுத்தி, தேவனிடமிருந்து ஆத்துமாவைப் பிரித்துவிடுகிறது. "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்"–1 யோவான் 2:4,5.★

# எண்ணப்பதிவுகள், உணர்வுகள், மருந்துகள்...அதன் விளைவுகள்!

**“உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.” —சங்கீதம் 119:104.**

அமைதியற்ற அநேகர் ஒழுங்கமைதிக்கும், விதிமுறைக்கும், அமைப்பிற்கும் கட்டுப்படமாட்டார்கள். தங்களது சொந்தத் தீர்மானங்களைப் புறம்பே ஒதுக்கிவிட்டு, அனுபவமுள்ள மற்றவர்களின் தீர்மானத்திற்கு சரணடைந்தால், அவர்களது உரிமைகள் குறைக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒழுங்கிற்குக் கீழ்ப்படிந்து, துணிச்சலான, குழப்பமான கொள்கை வெறியை தங்களது கூட்டங்களிலிருந்து வெளியே தள்ளுவதற்கான மனப்பாங்கில்லாவிட்டால், தேவனுடைய ஊழியம் முன்னேற்றமடையாது,

எண்ணப்பதிவுகள், உணர்ச்சிகள் ஆகியவை ஒரு நபர் தேவனால் நடத்தப்படுகிறார் என்பதற்கான நிச்சயமான ஆதாரமல்ல. சாத்தானை நாம் சந்தேகிக்காவிட்டால், எண்ணப்பதிவுகளையும் உணர்வுகளையும் அவனே கொடுத்துவிடுவான். இவைகள் பாதுகாப்பான வழிகாட்டிகளல்ல. நமது விசுவசத்திற்கான ஆதாரங்கள்குறித்து அனைவரும் முற்றிலும் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். எப்படி தங்களது நம்பிக்கைக்கு அணிசேர்த்து, தேவனுடைய மகிமைக்காகக் கனிகொடுக்கவேண்டுமென்பதே, அவர்களது தலைசிறந்த பாடமாக இருக்கவேண்டும்.

பாட்டில்கிரீக் சானிடோரியத்திலுள்ள ஒரு நோயாளி கொஞ்சகாலமாக தான் ஒரு புதிய வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டிருந்தார். அவர் மிகவும் வியாதிப்பட்ட நிலையில் மரிக்கும் தருவாயில் இருந்தார். அவர் தமது கருத்துக்ளை யாரிடத்திலெல்லாம் கூறினாரோ, அவர்கள் அவர் சொல்வதையெல்லாம் ஆர்வத்தோடு கவனித்தார்கள். அவர் ஆவியின் அருளால் பேசுவதாக சிலர் நினைத்தார்கள்.... அநேகருக்கு அவர் பகுத்தறிவிற்கேற்றபடி பேசிய காரியம்

எவ்விதமான பிழையுமின்றி இருப்பதாக காணப்பட்டது. அவர் நோயுற்றிருந்த அறையிலே அவரால் கொடுக்கப்பட்ட சமயச் சொற்பொழிவுகளைப்பற்றி அங்குள்ளோர் கூறினார்கள். அநேக அற்புதமான காட்சிகள் அவருக்கு முன்பாகக் கடந்துசென்றன. ஆனால் அவரது அகத்தூண்டுதலிற்கான ஆதாரம் என்ன? அவரது வேதனையைப் போக்குவதற்காகக் கொடுக்கப்பட்ட மார்பின் (ஆழசிாைநெ) என்ற மருந்துதான்.

இத்தகைய பரிகாரங்கள் (மருந்துகள்) என்று அழைக்கப்படுபவைகளில் விஷப்பொருட்கள் அடங்கியிருக்கின்றன. இவை சில பழக்கங்களையும் பசியுணர்வுகளையும் உண்டாக்குகின்றன. இவைகளால் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் அழிவே ஏற்படுகிறது. அநேகருக்கு பிரபலமான—தனி உரிமைபெற்ற— காப்புரிமை பெற்ற மருந்துகள் என்று அழைக்கப்படுபவை மற்றும் மருத்துவர்களால் கொடுக்கப்படும் சில மருந்துகள், குடிப்பழக்கம், அபின் பழக்கம், மார்.ஃபின் பழக்கம் ஆகியவைகளுக்கு அடித்தளம் போடுவதில் ஒரு பங்குவகிக்கிறது. இவைகள் சமுதாயத்திற்குப் பயங்கரமான சாபமாக இருக்கின்றன.

சில ஆசீர்வாதங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவை என்று சிலரால் உரிமைகோரப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும்போதும், அந்தக் காரியம் குறிப்பிட்ட ஒரு உணர்வின்மீது சார்ந்திருக்கத்தக்கதாக வழிநடத்தும்போதும், மேலும் தேவனுடைய சித்தத்தை அறியத்தக்கதாக வேதவாக்கியங்களை ஆராயவேண்டியது அவசியமில்லை என உறுதிபடக் கூறும்போதும், அவர்களால் யூகிக்கப்பட்ட ஆசீர்வாதம் ஒரு போலியான ஆசீர்வாதமென்று அறியலாம். ஏனெனில் அந்த ஆசீர்வாதத்தை உடையவர்கள் தங்களது சொந்த பரிசுத்தமற்ற உணர்ச்சிகளின்மீதும் மனதின் போலித்தோற்றங்களின்மீதும் மதிப்புவைக்கத்தக்கதாக அது வழிநடத்துகிறது. மேலும் தேவனுடைய வார்த்தைக்கு அவரது காதுகளை அடைத்துக்கொள்ளச்செய்கிறது. ★

# கொட்டடித்தல், நடனம், கூச்சல்!

**"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது."**
**—1 கொரிந்தியர் 14:40.**

நீங்கள் விவரித்த இந்தக் காரியங்கள்... இவைகள் தவணையின் காலம் முடிவடைவதற்கு சற்று முன்னர் நடைபெறும் என்பதை ஆண்டவர் எனக்குக் காட்டினார். ஒவ்வொரு அருவருப்பான காரியமும், செயல்முறையில் தெளிவாக எடுத்துக்காட்டப்படும். கூச்சலிடுவது, கொட்டடிப்பது (னுசரஅ), நடனமாடுவது இசை ஆகியவை அரங்கேறும். பகுத்தறிவுள்ள மக்களது புலன்கள் மிகவும் குழப்பமடையும். அவர்கள் சரியான தீர்மானங்கள் எடுப்பார்களென்று நாம் நம்பமுடியாது. மேலும் இது பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதல் என்றும் கூறப்படும்.

இத்தகைய முறைகளில், பைத்தியக்கார விடுதியினின்று வெளிவரும் கூச்சலைப்போன்ற நிலையில் பரிசுத்த ஆவியானவர் தம்மை ஒருபோதும் வெளிப்படுத்துகிறதில்லை. இந்தக் காலத்திற்குரிய தூய்மையான—மெய்யான—மேம்படச்செய்கின்ற—உயர்தரமாக்குகின்ற—பரிசுத்தமாக்குகின்ற சத்தியத்தைப் பயனற்றதாக ஆக்கிப்போடும்படி தனது சூழ்ச்சி நிறைந்த வழிமுறைகளால் சாத்தானால் உருவாக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பாகும்.... இத்தகைய பைத்தியக்கார விடுதியினின்று வரும் கூச்சலைப்போன்றிருக்கும் இசை, புலன்களை அதிர்ச்சியடையச் செய்கிறது. நல்லமுறையில் நடத்தப்பட்டால், ஒரு ஆசீர்வாதமாக அமையவேண்டியதை தாறுமாறாக்கிப்போடுகின்றது. இத்தகைய சத்தத்தோடும் கூச்சலோடும் சாத்தானிய கூட்டங்களின் வல்லமையும் சேர்ந்துகொள்ளுகின்றன. ஆனால், இது பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது....!

எழுப்புதல் என்று எண்ணப்படும் இந்தக் கூட்டத்தில் பங்கெடுப்பவர்கள், சில எண்ணப்பதிவுகளைப் பெறுகிறார்கள். இவ்வாறு, அவர்கள் அலைப்புண்டுபோகிறார்கள். வேத மூலக்கோட்பாடுகளைப்பற்றி இதற்கு முன்பாக என்ன அறிந்திருந்தார்களென்பதையும் இவர்களால் கூறமுடியாது.

இவ்வகையான தொழுகைக்கு எவ்விதமான ஊக்கங்களும்

கொடுக்கக்கூடாது. 1844–ம் ஆண்டிலே அந்த ஏமாற்றத்தின் வேளை கடந்துசென்றபிறகு, இதே விதமான செல்வாக்கு மீண்டும் வந்தது. இதேபோன்ற அரங்கக் காட்சிகள் நடைபெற்றன. மனிதர் பரபரப்போடு செயல்பட்டனர். தேவவல்லமையென்று எண்ணிக்கொள்ளப்பட்ட வல்லமை அவர்களிலே கிரியைசெய்தது!

பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிறார்கள் என்பதாக உத்தேசிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் நிர்வாண நிலையில் இருந்து கூட்டங்களை நடத்தினார்கள். "பரிசுத்த மாம்சம்" (ர்ழடல கடநளா) என்பதைப்பற்றி அவர்கள் பேசினார்கள். சோதனைக்குட்படும் நிலைக்கும் அப்பாற்பட்ட நிலையில் தாங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டார்கள். பாடினார்கள்; கூச்சலிட்டார்கள்; பலவிதமான செயல்முறைகளில் உரத்த சத்தத்தோடு காரியங்களை நடப்பித்தார்கள். இத்தகைய வேலைக்கு சாத்தான் உருக்கொடுத்துக்கொண்டிருந்தான். மட்டுக்குமீறிய சிற்றின்பமான வாழ்வே அதின் விளைவாக இருந்தது. தேவனுடைய ஊழியம் அவமதிக்கப்பட்டது. சத்தியம், பரிசுத்த உண்மைகள் ஆகியவை மானிடப்பிரதிநிதிகளால் மண்ணோடு மண்ணாகப் படிந்துபோயிற்று. இத்தகைய கொள்கைவெறியோடுகூடிய இயக்கங்கள், இரைச்சல்கள், கூச்சல்கள் ஆகியவை கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கின்ற சாத்தானால் ஏவிவிடப்பட்டவை என்றும் நான் எனது சாட்சியை உறுதியாகக் கூறியறிவிக்கிறேன். நாம் சாத்தானின் உபாயதந்திரங்களால் வஞ்சிக்கப்படாதபடிக்கு, கிறிஸ்துவோடு ஒரு நெருக்கமான உறவைப் பேணிக் காத்துக்கொள்ளத்தக்கதாக, மிகவும் எச்சரிக்கையோடு இருப்பது அவசியமாகும். ஆண்டவர் தமது ஆராதனை பரபரப்போடும் குழப்பத்தோடுமல்ல, ஒழுங்கோடும் கிரமத்தோடும் நடத்தப்படவேண்டுமென்று விரும்புகிறார்.★

# தற்புகழ்ச்சிக்கு இடமில்லை!

**“அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.” —ஏசாயா 6:5.**

வேதாகமத்தின்படி பரிசுத்தமாகுதலை அனுபவிக்கிறவர்கள், தங்களிலே தாழ்மையின் ஆவியை வெளிப்படுத்துவார்கள். மோசேயைப்போல பரிசுத்த தன்மையின் அச்சந்தரும் அந்த இராஜரிகத்தைப்பற்றிய தரிசனத்தைக் கண்டிருந்தவர்கள் அந்த எல்லையற்ற பரம்பொருளின் உன்னதமான நிறைவிற்கும், தூய்மைக்கும் எதிராக இருக்கும் தங்களது சொந்தத் தகுதியற்ற நிலையைக் காண்கிறார்கள்.

தானியேல் தீர்க்கதரிசி உண்மையான பரிசுத்தமாகுதலிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார். அவரது நீண்ட ஆயுட்காலம் முழுவதும் தனது எஜமானுக்கான மேன்மையான சேவையினால் நிறைந்திருந்தார். பரலோகத்தினால், “பிரியமான புருஷனாகிய தானியேலே என்று அழைக்கப்பட்டவராக இருந்தார்” (தானி. 10:11). எனினும் பரிசுத்தத்தையும் தூய்மையையும் உரிமை கொண்டாடுவதற்குப் பதிலாக, மேன்மையாக மதிக்கப்பட்ட இந்த தீர்க்கதரிசி, தமது மக்களின் சார்பிலே தேவனுக்குமுன்பாக கெஞ்சி மன்றாடும்போது, இஸ்ரவேலின் பாவ மனிதர்களில் ஒருவராக தம்மை அடையாளங்காட்டிக்கொண்டார். “நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.... நாங்கள் பாவஞ்செய்து, துன்மார்க்கராய் நடந்தோம். இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு” (தானி. 9:18,15,20) என்கிறார்.

சூறைக்காற்றினின்று வந்த ஆண்டவரின் குரலை யோபு கேட்டபோது, “நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்” (யோபு 42:6) என்று குரல் எழுப்பினார். ஆண்டவரின்

மகிமையை ஏசாயா கண்டபோது, சேராபீன்கள் “ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்” என்று கூப்பிட்டுச்சொன்னதைக் கேட்டபொழுது, “ஐயோ! அதமானேன்”(ஏசாயா 6:3,5) என்று கதறினார். பவுலார் மூன்றாம் வானம்வரை எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டு, அதன்பின்னர் தன்னைக்குறித்து, “பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான்”(2கொரி. 12:2-4; எபே. 3:8) என்று கூறுகிறார். இயேசுவின் மார்பிலே சாய்ந்திருந்தவனாகிய—அவரது மகிமையைக் கண்டவனாகிய பிரியமான அப்போஸ்தலனாகிய யோவான், “நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்” (வெளி. 1:17) என்கிறார்.

கல்வாரிச் சிலுவையின் நிழலிலே நடக்கிறவரிடத்திலே பாவத்தினின்று விடுதலை பெற்றதற்காக தற்புகழ்ச்சியோடு உரிமைகோருதலும் சுயத்தை உயர்த்துதலும் இருக்கமுடியாது. தங்களது பாவத்தினால் ஏற்பட்ட கடுந்துயரே தேவகுமாரனின் இதயத்தை உடைத்தது என்ற அவர்கள் உணர்வார்கள். இத்தகைய நினைவு தன்னைத்தானே இழிவாக நினைத்துக்கொள்ளும் நிலைக்கு வழிநடத்தும். இயேசுவிடம் நெருக்கமாக ஜீவியம் செய்பவர்கள் மானிட இனத்தின் பாவம் நிறைந்த, நலிவடைந்த நிலையை மிகவும் தெளிவாகக் கண்டறிவார்கள். சிலுவையில் அடிக்கப்பட்ட—உயிர்த்தெழுந்த மீட்பரின் புண்ணியங்களில் மாத்திரமே அவர்களது ஒரே நம்பிக்கை இருக்கிறது. ★

# ஒவ்வொரு நாளும் மீட்பு!

**"...தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." —1 கொரிந்தியர் 10:12.**

பேதுருவின் விழுகை உடனடியாக அந்தக் கணத்திலே நிகழ்ந்ததல்ல, படிப்படியாக நிகழ்ந்ததொன்றாகும். அவனது சுயநம்பிக்கை, தான் இரட்சிக்கப்பட்டவன் என்ற நம்பிக்கைக்கு அவனை வழிநடத்தியது. கீழிறங்கிச்செல்லும் பாதையை நோக்கி ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து, இறுதியில் தனது எஜமானரை மறுதலிக்கும் வரை அவனைக் கொண்டுசென்றது. ஒருபோதும் சுயத்திலே பாதுகாப்போடு நம்பிக்கைவைக்க முடியாது. இந்தப் பக்கத்திலே இருக்கும் பரலோகத்திலே சோதனைக்கு எதிராக பாதுகாப்போடு இருக்கிறோம் என்ற எண்ணமுடியாது. இரட்சகரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், தங்களது மனந்திரும்புதல் எவ்வளவிற்கு உண்மையானதாக இருந்தாலும், தாங்கள் இரட்சிக்கப்பட்டோமென்று எண்ணும்படியோ, சொல்லும்படியோ ஒருபோதும் கற்றுக்கொடுக்கக் கூடாது. இது தவறாக வழிநடத்தக்கூடியதாகும். நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நெஞ்சாரப்பேணத்தக்கதாக ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். நாம் நம்மை கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுத்து அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார் என்று அறிந்திருக்கிறதினால், சோதனை நம்மை எட்டாத நிலையில் நாம் இருப்பதில்லை.... பாடுகளை சகிப்பவர்கள் மாத்திரமே ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்"—யாக்கோபு 1:12.

இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிறவர்களில் தங்களது முதல் நம்பிக்கையிலே,"நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லுகிறவர்கள், தங்களிடத்திலேயே உறுதியான நம்பிக்கை வைக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள்.... "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்"—1 கொரி.

10:12. தொடர்ந்து சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காமல் கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதில்மாத்திமே நமது ஒரே பாதுகாப்பு இருக்கிறது.

கிறிஸ்துவை அநேகர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முதிர்ச்சியுடைய கிறிஸ்தவர்களாக ஒருபோதும் மாறுகிறதில்லை. மனிதன் விழுந்துபோனவனென்றும் அவனுடைய செயல்திறன் எல்லாம் பலவீனப்பட்டுக்கிடக்கிறது என்றும் ஒழுக்கநிலையில் வெற்றி காண்பதற்குத் தகுதியற்றவனென்றும் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் கிறிஸ்து அனைத்துப் பாரங்களையும், அனைத்து துன்பங்களையும், அனைத்து சுயமறுப்புகளையும் சுமந்துவிட்டாரென்றும், அவர் சுமப்பதற்கு அனுமதிக்க அவர்கள் விருப்பத்தோடிருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். அவரை விசுவாசித்தால்மட்டும் போதுமென்றும், தாங்கள் தங்களுக்காகச் செய்யவேண்டியது எதுவுமே இல்லையென்றும் கூறுகிறார்கள். ஆனால் கிறிஸ்து, “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” (மத்தேயு 16:24) என்றார். “நான் இரட்சிக்கப்பட்டேன்” என்று கூறுபவர்களாக முன்னேற்றத்திற்கான அனைத்துக் காரியங்களையும் விட்டுவிட்டு, ஒரு திருப்தியான நிலையில் நாம் ஒருபோதும் இளைப்பாறிக் கொண்டிருக்கக்கூடாது. இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படும்பொழுது, விழிப்போடிருத்தல், ஜெபித்தல், மேலான இலட்சியங்களை அடையவேண்டுமென்று ஊக்கத்தோடு முயன்று முன்னேறுதல் ஆகியவைகளுக்கான நோக்கங்கள் இல்லாமல் நிறுத்தப்பட்டுப்போகின்றன. கிறிஸ்து வரும்வரை, தேவ பட்டணத்தின் வாசல்கள் வழியாகப் பிரவேசிக்கும்வரை, பரிசுத்தமாக்கப்பட்ட எந்த நாவும் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவதை நாம் காணமுடியாது. பின்னர், மிகப் பெரிய ஒழுங்கு முறையோடு, அந்த நித்திய விடுதலைக்காக தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் நாம் மகிமையைச் செலுத்துவோம். ★

# மனந்திரும்புதல் என்பதின் பொருள்!

**“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.” —2 கொரிந்தியர் 5:17.**

இரத்தத்தினாலும் மாம்ச சித்தத்தினாலும் உருவாக்கப்பட்டுள்ள பழைய குணம் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்காது. பழைய வழிகள், மரபுவழித்தொடர்பிலே வந்த மனப்பாங்குகள், பழைய வழக்கங்கள் விட்டுவிடப்படவேண்டும். ஏனெனில் கிருபையை நாம் மரபுரிமையாகப் பெற்றுக்கொள்ள முடியாது. புதிய நோக்கங்கள் புதிய நாட்டங்கள், புதிய மனப்பாங்குகள் ஆகியவைகளை உள்ளடக்கியதே புதிய பிறப்பாகும். பரிசுத்த ஆவியினால் ஒரு புதிய வாழ்விற்குப் பிறந்தவர்கள் தெய்வீகக் குணத்திற்கு பங்காளிகளாகிவிட்டார்கள். தங்களது அனைத்துப் பழக்க வழக்கங்களிலும் நடைமுறை அனுபவங்களிலும் கிறிஸ்துவோடு தாங்கள் கொண்டிருக்கும் உறவிற்கான சான்றினை வெளிப்படுத்துவார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களைப்பற்றிக் கூறி உரிமைபாராட்டுபவர்கள் குணத்திலுள்ள இயல்பான குறைபாடுகள், மனப்பாங்குகள் அனைத்தையும் விடாது வைத்திருக்கும்பொழுது, உலகப்பற்றோடு உழல்பவர்களினின்று அவர்களது நிலை எவ்விதத்தில் மாறுபட்டுக்காணப்படுகிறது? சத்தியம் குணத்தைப் பரிசுத்தமாக்குகிறது, மேன்மைப்படுத்துகிறது என்பதைச் சரியாக உணர்ந்து மதிப்பீடு செய்கிறதினால் அவர்கள் மறுபடியும் பிறந்தவர்களாக மாறிவிடவில்லை....

ஒரு மெய்யான மனந்திரும்புதலானது, தவறுசெய்யத் தூண்டுகின்ற மரபு வழிகளில்வந்த—தன்னால் வளர்த்து உருவாக்கப்பட்ட மனப்பாங்குகளை மாற்றிவிடுகிறது. தேவனுடைய மார்க்கம் எண்ணிறந்த நூல்களாலான ஒருவகை துணிபோன்றது. சாமர்த்தியத்தினாலும், திறமையினாலும் நெய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டதாகும். தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஞானம் மாத்திரமே நெய்யப்பட்ட

அந்தத் துணியை முழுமைபெறச்செய்யமுடியும். துணிகள் பலவிதமான ரகங்களில் இருக்கின்றன. முதன் முதலில் அந்தத் துணிக்கு நேர்த்தியான ஒரு தோற்றம் இருக்கலாம். ஆனால் அவைகள் பரீட்சைக்கு நிற்கமுடியாது. அவைகள் வெளிரிப்போகின்றன. வண்ணங்கள் திடமாக நிற்பவை அல்ல. கோடையின் வெப்பத்திற்கடியில் மங்கி, வீணாகிவிடுகின்றது. கரடுமுரடாகக் கையாளப்படுவதை அந்தத் துணியால் தாங்கிக்கொள்ளமுடிகிறதில்லை. அநேகருடைய மார்க்கத்திலும் இதைப்போன்ற காரியமே காணப்படுகின்றது.

குணத்தில் நெடுக்கும் குறுக்குமான (ஏறுமாறான) போக்குகள் துன்பம் என்னும் சோதனையில் நிற்கமுடியாதபொழுது, எந்த மூலப்பொருளை வைத்து செய்யப்பட்டதோ, அது தகுதியற்றது என்று தெரியும். பழைய துணியோடு ஒரு புதிய துணித் துண்டை வைத்து ஒட்டுத்தையல் இடுவதற்காக எடுக்கப்படும் முயற்சி, காரியங்களை முன்னிலும் மேம்பட்ட நிலைக்குக் கொண்டுவருகிறதில்லை. ஏனெனில் அந்தப் பழைய உறுதியற்ற சாதனம் புதியதினின்று கிழிந்துபோய்விடுகிறது. கிழிசலை முன்னிருந்ததைவிட மிகவும் பெரியதாக ஆக்கிவிடுகிறது. ஒட்டுத்தையல் பலன் அளிக்காது; முற்றிலுமாக பழைய உடையைத் தூர எறிந்துபோட்டு, முற்றிலும் புதிய ஒன்றை வாங்குவதே பின்பற்றவேண்டிய ஒரே வழியாகும்.

கிறிஸ்துவின் திட்டமே பாதுகாப்பான ஒன்றாகும். “இதோ, சகலத்தையும் புதிதாக்குகிறேன்” “ஒருவன் கிறிஸ்துவில் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாக இருக்கிறான்”... ஒட்டுத் தையல் மார்க்கம் தேவனிடம் மதிப்பைப் பெற்றதாக இருக்காது. அவர் முழு இருதயத்தைக் கேட்கிறார்.

இயேசு நமக்காக தமது ஜீவனைக் கொடுத்தார். நமது மிகச் சிறந்த பாசங்களையும் நமது மிகுந்த பரிசுத்தமான நாட்டங்களையும் நமது முழுமையான சேவையையும் நாம் அவருக்குக் கொடுக்கவேண்டாமா? ★

# ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கே பரிசுத்தமாகும் நிலை!

**“ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;... ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே... யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.” —யாத்திராகமம் 20:8-10.**

தேவன் தம்முடைய வார்த்தையிலே ஏழாம் நாள் தமக்கும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குமிடையே ஒரு அடையாளமாக—அதாவது அவர்களுடைய பற்றுறுதிக்கு அடையாளமாக இருக்கிறது என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்

ஏழாம்நாள் தேவனால் தொந்துகொள்ளப்பட்ட நாள். அந்த நாள் சபையின் குருவானவராலோ, நாட்டின் ஆளுநராலோ புதிய மாதிரியாக அமைக்கப்படவேண்டுமென்று விட்டுவிடப்படவில்லை. மானிடத் தீர்மானத்திற்கு விட்டுவிடப்படக்கூடாத அளவிற்கு இது மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். மனிதர் தங்களது சொந்த வசதியை ஆராய்ந்து மிகச் சிறப்பான முறையில் தங்களது மனசாட்சிக்கு ஏற்றபடி தெய்வீக அதிகாரத்தைப் பெற்றிராத ஒரு நாளைத் தெரிந்துகொள்வார்கள் என்பதை தேவன் கண்டார். ஏழாம் நாள் ஆண்டவருடைய ஓய்வுநாள் என்பதை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

தேவனுக்குச் சொந்தமான இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அவரது அரசாங்கத்தின் சட்டங்களுக்கடியில் இருக்கிறான். பத்துக் கட்டளைகளுக்கு மத்தியிலே தேவன் ஏழாம் நாள் ஓய்வுநாளை வைத்திருக்கிறார். கீழ்ப்படிதலிற்கான கட்டளைவிதியாக அதை வைத்தார். அதின்மூலமாக அவருடைய கிரியைகளிலும் அவரது வார்த்தையிலும் வெளிப்படையாக தெரிகின்ற அவரது வல்லமையைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளலாம்.

பரிசுத்தத்தின் ஒரு சிறிய ஆதாரத்தையும் பெற்றிராத நாளைத் தாங்கி நிறுத்தி, அந்த நாளில் நாங்கள் அவரைத் தொழுதுகொள்ளுகிறோம் என்று கூறுவதைவிட, வேறு எந்த விதத்திலும் தேவனுடைய ஊழியத்திற்கும், அவரது பிரமாணத்திற்கும் மிகவும் தீர்மானமானவிதத்தில் எதிர்க்கும் நிலையில் மனிதர் தங்களை வைத்துக்கொள்ளமுடியாது. தேவனுடைய பரிசுத்தமான ஓய்வுநாளிற்குப் பதிலாக, இந்தப் போலியான ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தி, மெய்யான ஓய்வுநாளிற்கும்மேலாக போலியான ஓய்வுநாளைக் கனப்படுத்தி, இவ்வாறு பிரமாணத்தைக் கேடடையச்செய்து தேவனுக்கும் மேலாகத் தங்களை உயர்த்துகிறார்கள்.

ஒரு பொய்யான ஓய்வுநாளிற்காக, தேவனுடைய பரிசுத்த இளைப்பாறுதலின் நாளைப் புறக்கணித்து, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்ற பெயரால் அழைத்துக்கொள்பவர்களால் பரிசுத்தமாகுதல் உரிமைகோரப்படுகிறது. அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரை மதிக்கிறவர்களுக்கு மாத்திரமே அவரிடமிருந்துவரும் பரிசுத்தமாகுதல் வழங்கப்படுகிறது. தொடர்ந்து மீறுதலில் நீடித்திருப்பதால் உரிமைகொண்டாடப்படும் பரிசுத்தமாகுதல் ஒரு போலியான பரிசுத்தமாகுதல் ஆகும். இவ்வாறு மார்க்க உலகம் தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராளியான சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறது.

மனிதர் அநேகக் கண்டுபிடிப்புகளை நாடியிருக்கிறார்கள். தேவன் கொடுக்கும் பரிசுத்தத்தினால் சிறப்பிக்கப்படாத எந்த பரிசுத்த தனிச்சிறப்புரிமைகளாலும் அணி செய்யப்படாத—ஒரு சாதாரண நாளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை ஒரு பரிசுத்த நாளென்று உறுதியாகக் கூறியறிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தச்செயல் பரிசுத்தமாகுதலின் ஒரு சாயலைக்கூட கொடுக்கவில்லை. "கர்த்தர் இப்படிச் சொல்லுகிறார்" என்று அதிகாரத்தை பெற்றிராத மானிட அமைப்புகளையும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ ஓய்வுநாளென்று கூறி, உலகத்திற்குமுன் வைத்து, தேவனை அவமதிக்கிறார்கள். ★

# அபாயத் தொனியை முழக்கவேண்டும்!

**“உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.” —நீதிமொழிகள் 3:6.**

நமது எல்லா வழிகளிலும் நாம் தேவனை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் நமது வழிகளை நடத்துவார். தாழ்மையான இதயத்தோடு அவரது வார்த்தையின் அறிவுரையைக் கேட்டு அவரது ஆலோசனையை வேண்டி அவர் சித்தத்திற்கு நம்முடைய சித்தத்தை ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவன் இல்லாமல் நாம் எதையும் செய்யமுடியாது.

உண்மையான ஓய்வுநாளை மதித்து, அதுவே உலகத்தாரினின்று தேவனுடைய மக்களை வேறுபடுத்திக்காட்டுகிறது என்பதற்கான அடையாளம் என்பதால், அதன் பாதுகாப்பிற்காக நாம் நிற்கவேண்டும். இந்த உலகம் இந்த ஓய்வுநாளைப் பயனற்றதாக ஆக்கியதால், அந்த ஒரே காரணத்தினால் தேவனுடைய மக்கள் அதின் மேன்மையைக் கொடுப்பார்கள். தேவனுடைய வார்த்தையின்மீது அவிசுவாசமுள்ளோர் நிந்தனைகளை வாரி வீசும்பொழுது, விசுவாசமுள்ள காலேபுகள் அழைக்கப்படுகிறார்கள். அப்பொழுது அவர்கள் தங்களது கடமையின் பணி நிலையிலே உறுதியாகப் பகட்டு விளம்பரமின்றி, இகழப்பட்டாலும் விலகிச்செல்லாமலும் நிற்பார்கள். விசுவாசமற்ற வேவுகாரர்கள் காலேபை அழித்துப்போடவேண்டுமென்று ஆயத்தமாக நின்றார்கள். பொய்யான தகவலைக் கொண்டுவந்தவர்களின் கரங்களிலே கற்கள் இருப்பதைக் கண்டார். ஆனால் இக்காரியம் அவருக்குப் பின்னடைவை ஏற்படுத்தவில்லை. அவரிடத்தில் ஒரு தூது இருந்தது. அதை அவர் எடுத்துச் செல்வார். தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் இதைப்போன்ற குணத்தை வெளிப்படுத்துவார்கள்.

சங்கீதக்காரன் “நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளைவந்தது; அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள். ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில்

பிரியப்படுகிறேன்"(சங்கீதம் 119:126,127) என்கிறார். மனிதர் இயேசுவின் பக்கத்தில் நெருங்கிச் சேரும்பொழுது, விசுவாசத்தினாலே கிறிஸ்து அவர்களின் இதயங்களில் வாசஞ்செய்யும்போது, தேவனுடைய கற்பனைகளுக்காக அவர்கள் கொண்ட அன்பு அவரது பரிசுத்தக்கட்டளைகளின்மீது இந்த உலகம் எவ்வளவு அவமதிப்பைக் குவிக்கின்றதோ, அந்த விகிதத்தின்படி வலுவாக வளரும். இந்தச் சமயத்தில்தான் எழுத்துக்கள்மூலமாகவும் பிரசங்கங்கள்மூலமாகவும் உண்மையான ஓய்வுநாளைப்பற்றிய செய்தி மக்கள் முன்பாகக் கொண்டுவரப்படவேண்டும். நான்காம் கட்டளையும் அதை ஆசரிப்பவர்களும் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்படும் பொழுது, விசுவாசமுள்ளவர்கள் தங்களது விசுவாசத்தை மூடிமறைக்க இது வேளையல்ல என்பதை உணரவேண்டும். மேலும் மூன்றாம் தூதுனின் தூதும் தேவனுடைய கட்டளைகளும் இயேசுவின்மேலுள்ள விசுவாசமும் பதித்து வைக்கப்பட்டுள்ள அந்தக் கொடியை விரித்துப் பறக்கவைப்பதின்மூலம் யோகோவாவின் பிரமாணத்தை உயர்த்தவேண்டும்.

இயேசுவில் இருப்பதுபோன்று சத்தியத்தை வைத்திருப்பவர்கள் அக்கிரமத்தின் இரகசியத்தால் செய்யப்படும் வேலைக்கு மௌனத்தால்கூட ஒப்புதல் தெரிவிக்காமல் இருக்கட்டும். அபாயத்தைத் தெரிவிக்கும் முழக்கத்தை ஒருபோதும் நிறுத்தாது இருக்கட்டும்.... சத்தியம் மறைத்துவைக்கப்படக்கூடாது. அது மறுக்கப்படவுங்கூடாது. அதற்குப் பொய்க்கோலம் போடக்கூடாது ஆனால் சத்தியத்தை முழு நிறைவோடு ஒத்துக்கொள்ளவேண்டும். தைரியமாகக் கூறியறிவிக்கவேண்டும். ★

# சத்தியத்தின் தூய்மையான அடையாளம்!

**“கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.” —எசேக்கியேல் 9:4.**

இந்தக் குறிப்பை கவனத்தோடு குறித்துக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தங்களில் உருவாக்கப்பட்ட தூய்மையான சத்தியத்தின் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் சணல் நூல் உடை தரித்திருக்கிற மனிதனாலே ஒரு அடையாளத்தின் மூலமாகச் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். அவர்கள் சபையிலே நடைபெறுகின்ற அனைத்து அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டு அழுகிறவர்களாகும்.

தங்களது சொந்த ஆவிக்குரிய வீழ்ச்சியைக்குறித்து துயரமடையாத வர்களும் மற்றவர்களது பாவங்களுக்காக அழுது அரட்டாதவர்களும் தேவனுடைய அடையாளமின்றி விடப்படுவார்கள்....

ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் அனைவருமே முத்திரையிடப்படமாட்டார்கள். இவ்வாறு அநேகர் இருக்கிறார்கள். சத்தியத்தை மற்றவர்களுக்குப் போதிக்கிறவர்களில்கூட தேவனுடைய முத்திரையை தங்களது நெற்றிகளிலே பெற்றுக் கொள்ளாதவர்கள் இருப்பார்கள். சத்திய வெளிச்சம் அவர்களிடத்திலிருந்தது. தங்களது எஜமானரின் சித்தத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள். தமது விசுவாசத்தின் ஒவ்வொரு பகுதியையும் நன்றாகப் புரிந்திருந்தார்கள். ஆனால் அதற்கு ஒத்த கிரியைகள் அவர்களிலே காணப்படவில்லை....

நமது குணங்களிலே ஒரு கறையோ—திரையோ இருக்கும்போது, தேவனுடைய முத்திரையை நம்மில் ஒருவர்கூட பெற்றுக்கொள்ளமுடியாது. நமது குணங்களிலுள்ள குறைபாடுகளை அகற்றவேண்டும். ஆன்மாவாகிய

ஆலயத்திலுள்ள ஒவ்வொரு கேடும் நீக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படவேண்டும். அப்பொழுது, சீடர்கள்மீது எப்படி முன்மாரி பொழிந்ததோ, அதைப்போன்று நம்மீதும் பின்மாரி பொழியும்....

சகோதரரே, அந்த மாபெரும் ஆயத்தஞ்செய்தல் என்ற காரியத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உலகத்தோடு தங்களை இணைத்துக்கொண்டிருப்பவர்கள் உலகப் பிரகாரமான மாதிரி அச்சைப் (அழரடன) பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காதவர்கள், தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்திக் கொண்டிருப்பவர்கள், சத்தியத்திற்கு கீழ்ப்படிவதின்மூலமாக, தங்களைச் சுத்திகரித்துக்கொண்டிருப்பவர்கள் ஆகிய இவர்கள் பரலோக மாதிரி அச்சைப் பெற்றுக்கொண்டு, தங்களது நெற்றிகளிலே தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார்கள். பதிலைப்பெற்றுக்கொள்ளும்போது, அவர்களது குணங்கள் நித்தியத்திற்காக தூய்மையாகவும் கறையற்றதாகவும் இருக்கும்.

இதுதான் ஆயத்தமாகும் வேளையாகும். தூய்மையற்ற ஆண் அல்லது பெண்ணின் நெற்றியிலே தேவனுடைய முத்திரை ஒரு போதும் வைக்கப்படுவதில்லை. பேராவல் நிறைந்த உலகத்தின் மீது பாசம் வைத்திருக்கின்ற ஆண் அல்லது பெண்ணின் நெற்றியிலே ஒருபோதும் முத்திரை வைக்கப்படுவதில்லை. பொய்யான பாஷை பேசுகின்ற அல்லது வஞ்சிக்கும் இதயத்தையுடைய ஆண் அல்லது பெண்ணின் நெற்றியிலே ஒருபோதும் முத்திரை வைக்கப்படுவதில்லை. தேவனுக்கு முன்பாக கறைதிரையற்றவர்களாக நிற்கின்றவர்கள் அனைவரும் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்- அவர்கள் பரலோகத்திற்கான தனிச்சிறப்புவாய்ந்த நபர்களாவர். ★

# எவர்கள் முத்திரையை பெற்றுக்கொள்வார்கள்?

**“இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களா யிருக்கிறார்கள்.” —வெளிப்படுத்தல் 14:5.**

ஜீவனுள்ள தேவனின் முத்திரையைப் பெறுபவர்கள் மாத்திரமே பரிசுத்தப் பட்டணத்தின் வாசல் வழியாகச் செல்வதற்கான பிரயாண அனுமதிச்சீட்டைப் (ீயளள ீழசவ) பெற்றவர்களாக இருப்பார்கள்.

குணத்திலே கிறிஸ்துவைப்போன்ற சாயலைத் தரித்துக்கொண்டிருக் கிறவர்களுக்குமாத்திரமே ஜீவனுள்ள தேவனின் முத்திரை வைக்கப்படும்.

மெழுகு முத்திரையின் பதிவை எடுத்துக்கொள்வதுபோல், தேவனுடைய ஆவியானவரின் பதிவை, ஆன்மா எடுத்துக்கொண்டு கிறிஸ்துவின் சாயலை தன்னகத்தே வைத்துக்கொள்ளவேண்டும்.

அநேகர் தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. ஏனெனில், அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறதில்லை, அல்லது நீதியின் கனிகளைக் கொடுக்கிறது மில்லை.

கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களில் திரளானவர்கள் தேவனுடைய அந்த நாளிலே கசப்பான ஏமாற்றத்தைச் சந்திப்பார்கள். ஜீவனுள்ள தேவனின் முத்திரை அவர்களது நெற்றியில் இருக்காது. அவர்கள் வெதுவெதுப்பாகவும் அரைமனதோடும் இருக்கிறார்கள். அவிசுவாசிகள் என்று மற்றவர்களால் எண்ணப்படும் ஒரு நபரைவிட இவர்கள் அதிகமாக தேவனை அவமதிக்கிறார்கள். பிழைசெய்யாத அந்த ஒருவரின் ஆலோசனையினடியில் வார்த்தையின் நண்பகல் வெளிச்சத்திலே நடந்துகொண்டிருக்கவேண்டியவர்கள் இருளிலே தடவித்திரிகிறார்கள்....

எவர்களை ஆட்டுக்குட்டியானவர் ஜீவதண்ணீரின் ஊற்றண்டை நடத்திச்செல்வாரோ, எவர்களது கண்களினின்று கண்ணீர் யாவையும் துடைப்பாரோ, அவர்கள் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அறிவையும், புரிந்துகொள்ளும் திறனையும் இப்பொழுது பெற்றுக்கொள்கிறவர் களாக இருப்பார்கள்....

நாம் எந்த ஒரு மானிடனையும் முன்மாதிரியாக வைத்து, அவரைப் பின்பற்றக்கூடாது. நமக்கேற்ற கட்டளை விதியாக இருக்கத்தக்க அளவிற்கு ஞானமுள்ள ஒரு மானிடனும் இல்லை. நீதி, பரிசுத்தம் ஆகியவைகளின் பரிபூரணத்துவத்திலே முழு நிறைவைப் பெற்றவராக இருக்கிற கிறிஸ்து இயேசுவென்ற பெயர் கொண்ட மனிதரை நாம் நோக்கிப்பார்க்கவேண்டும். அவரே நமது விசுவாசத்தைச் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாக இருக்கிறார். அவரே நமது முன்மாதிரியான மனிதனாக இருக்கிறார். அவரது அனுபவமே நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய அளவாகும். அவரது குணமே நமக்கு முன்மாதிரியான எடுத்துக்காட்டாகும். இந்த உலகில் குழப்பங்கள், பிரச்சனைகள் ஆகியவற்றினின்று மனங்களை அகற்றி அவர்மீது நமது கண்களைப் பதிப்போம். இவ்வாறு, அவரை நோக்கிப்பார்ப்பதின்மூலமாக, அவரது சாயலிற்கு நாம் மாற்றப்படுவோம். நல்ல நோக்கத்திற்காக நாம் கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்போம். பாதுகாப்போடு நாம் அவரை நோக்கிப் பார்க்கலாம். ஏனெனில் அவர் சகல ஞானமுமுடையவர். அவரை நோக்கிப்பார்த்து அவரைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, மகிமையின் நம்பிக்கையாகிய அவர் நம்மிலே உருவாகுவார்.

நமக்கு தேவன் கொடுத்திருக்கின்ற அனைத்து வல்லமைகளையும் உடையவர்களாக அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரில் ஒருவராக இருக்க முயற்சி செய்வோம்.★

# முத்திரையிடும் நேரம் சீக்கிரமாக முடிவடைகிறது!

**“பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பின வருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.” —யோவான் 9:4.**

முத்திரை போடப்படும் காலம் மிகவும் குறுகிய காலமாகும். அது சீக்கிரம் முடிவடைந்துவிடும். நான்கு தூதர்களும் நான்கு காற்றுகளையும் பிடித்துக்கொண்டிருக்கும்போது, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுவதற்கான வேளை—இப்பொழுதுதான்.

மூன்றாம் தூதனின் தூது கொடுக்கப்பட்டு, முடிவடைந்துகொண்டிருந்த நேரம் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. தேவனுடைய வல்லமை அவருடைய மக்கள்மீது தங்கியிருந்தது. அவர்கள் தங்களது ஊழியத்தை நிறைவேற்றி முடித்துவிட்டார்கள். தங்களுக்கு முன்னாலிருக்கும் சோதனைகளின் வேளைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் பின்மாரியை அதாவது தேவனுடைய சமூகத்தினின்று வரும் இளைப்பாறுதலைப் பெற்றுக்கொண்டார்கள். ஜீவனுள்ள சாட்சி மீண்டும் புத்துயிர்பெற்றது. கடைசி மாபெரும் எச்சரிப்பு எங்கும் முழங்கப்பட்டுவிட்டது. அது ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. இந்தத் தூதை ஏற்றுக்கொள்ளவிரும்பாத பூமியின் குடிகளை மூர்க்கமடையச்செய்தது.

தூதர்கள் பரலோகத்தில் அங்குமிங்குமாக விரைந்து கொண்டிருப்பதை நான் கண்டேன். கணக்கனின் மைக்கூட்டை இடுப்பிலே வைத்திருந்த தூதன், பூமியினின்று பரலோகத்திற்கு திரும்பிவந்து, தனது வேலை முடிந்துவிட்டது என்றும் பரிசுத்தவான்களின் தொகை எண்ணப்பட்டு முத்திரை போடப்பட்டாயிற்று என்றும் இயேசுவிடம் தனது அறிக்கையைக் கொடுத்தான். பின்பு இயேசு தூபகலசத்தை எறிந்துபோடுவதை நான்

கண்டேன். மேலும் தமது கரங்களை உயர்த்தி உரத்தசத்தத்திலே "முடிந்தது" என்று கூறினார்.

இக்கட்டுக்காலம் முழுவதும் பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே ஒரு பிரதான ஆசாரியரின்றி கர்த்தரின் பார்வையிலே தாங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்பதை அநேகர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் நான் கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையை தரித்துக்கொள்கிறவர்களும் இக்கட்டுக்காலத்திலே பாதுகாக்கப்படுகிறவர்களும் இயேசுவின் சாயலை முற்றிலுமாகப் பிரதிபலிக்கவேண்டும்.

மிகவும் தேவையான அந்த ஆயத்தத்தை அலட்சியப்படுத்திக் கொண்டும், ஆனால் பின்மாரிக்காகவும் இளைப்பாறுதலின் நேரத்திற்காகவும், கர்த்தரின் நாளிலே நிற்பதற்கு தகுதியாக்கப்படுவதற்காகவும் அவருடைய பார்வைக்கடியில் வாழ்வதற்கும் அநேகர் எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருப்பதையும் நான் கண்டேன். ஆ! அந்த இக்கட்டுக்காலத்திலே ஒரு மறைவிடமின்றி அநேகர் இருப்பதை நான் கண்டேன்!

இயேசு ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியேறுகிறபொழுது, பரிசுத்தவான்களாகவும் நீதிமான்களாகவும் இருப்பவர்கள் இன்னும் பரிசுத்தவான்களாகவும் நீதிமான்களாகவும் இருப்பார்கள். ஏனெனில் அவர்களது பாவங்கள் அனைத்தும் அச்சமயம் அகற்றப்பட்டுவிடும். ஏனெனில் அவர்கள் ஜீவனுள்ள தேவனின் முத்திரையால் முத்திரிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அநீதியாகவும் அசுத்தமாகவும் இருப்பவர்கள் தொடர்ந்து அநீதியாகவும் அசுத்தமாகவும் இருப்பார்கள். பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக அவர்களது பலிகளையும் பாவ அறிக்கைகளையும் ஜெபங்களையும் செலுத்துவதற்கு அப்பொழுது ஆசாரியர் இருக்கப்போவதில்லை. எனவே, பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகா பரிசுத்தஸ்தலத்தைவிட்டு இயேசு வெளியேறுவதற்குமுன்பாக வரப்போகும் உக்கிர கோபமென்னும் புயலினின்று ஆத்துமாக்களை தப்புவிக்கிறதற்காகச் செய்யப்படவேண்டிய அனைத்தும் செய்யப்படவேண்டும்.★

# தேவன் போடும் அடையாளத்தை தூதர்கள் வாசிக்கமுடியும்!

**“ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.” —வெளிப்படுத்தல் 7:2,3.**

உலகத்திலுள்ள அனைத்தும் ஒழுங்கும் அமைதியும் கெட்ட ஒரு நிலையில் இருக்கிறது. நாடுகள் கோபத்தில் இருக்கின்றன. யுத்தத்திற்காக மாபெரும் ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு விரோதமாகவும், ஒரு இராஜ்யம் இன்னொரு இராஜ்யத்திற்கு விரோதமாகவும் சதித்திட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. நாடுகள் யுத்தத்திற்கும், இரத்தஞ்சிந்துதலிற்கும் அவர்களது படைகளை பேரணிகளாகத் திரட்டிக்கொண்டிருந்தாலும், தூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை இன்னும் நடைமுறையில் இருக்கிறது. ஏனெனில், தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றிகளில் முத்திரை போட்டுத்தீருமளவும், தூதர்கள் அந்த நான்கு காற்றுகளையும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய ஊழியக்காரர்களது நெற்றிகளில் முத்திரை ரேபட்டுத்தீருமளவும் நான்கு காற்றுகளும் பிடிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. பின்னர் இறுதி மாபெரும் யுத்தத்திற்காக பூமியின் அனைத்து வல்லமைகளும் தங்களது சேனைகளை அணியணியாக வரிசைப்படுத்துவார்கள். நமது தவணையின் காலத்தில் மீந்திருக்கிற குறுகிய அந்தக் காலத்தை எவ்வளவு மேம்பட்ட நிலையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்!

கட்டுப்பாடற்ற சிந்தனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட உள்ளங்கள் மாறுதலடையவேண்டியது அவசியம்.... நினைவுகள் தேவனிலே மையங்கொண்டிருக்கவேண்டும். மாம்சம் இயல்பான மனப்பாங்குகளை மேற்கொள்ள ஊக்கமாக முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

இக்கட்டுக்காலத்திற்குள் பிரவேசிப்பதற்கு சற்றுமுன்னர் ஜீவனுள்ள தேவனின் முத்திரையை நாம் பெற்றுக்கொண்டோம். அதன்பிறகு அந்த நான்கு தூதர்களும் நான்கு காற்றுகளையும் பிடித்துகொண்டிருப்பதை விட்டுவிட்டதை நான் கண்டேன். அதன்பிறகு பஞ்சம், கொள்ளைநோய், யுத்தம் ஆகியவை ஏற்பட்டன. நாட்டுக்கு விரோதமாக நாடு எழும்பிற்று. முழு உலகமும் குழப்பத்தால் நிறைந்தது. அவரது மக்களுடைய நெற்றிகளிலே ஜீவனுள்ள தேவனின் முத்திரை போடப்படுதல் என்றால் என்ன? இந்த முத்திரையை மனிதர்கள் வாசிக்கமுடியாது. தூதர்கள் மட்டுமே வாசிக்கமுடியும். ஏனெனில் அழிக்கின்ற தூதன் இந்த மீட்பின் முத்திரையை கண்டிப்பாகப் பார்க்கவேண்டும். ஆண்டவரது சுவீகாரமுள்ள குமாரர்களிலும் குமாரத்திகளிலும் புத்திகூர்மையுள்ள மனங்கள் கல்வாரிச் சிலுவையின் அடையாளத்தைக் கண்டது. தேவ பிரமாணத்தின் மீறுதலின் பாவங்கள் அகற்றி வெளியேற்றப்பட்டுவிட்டன. அவர்கள் இப்பொழுது கலியாண வஸ்திரந்தரித்திருக்கிறார்கள். தேவனுடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் இருக்கின்றார்கள்.

சத்தியத்தை அறிந்தபின்னர், அதின்படி அவரது கட்டளைகளுக்கு வார்த்தையிலும் செய்கைகளிலும் கீழ்ப்படியாவிட்டால், தேவன் அவர்களை மன்னிக்கமாட்டார். ★

ஆகஸ்டு 24

# தேவனுடைய மக்களை அடையாளம்!

**"நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்."**

**—எசேக்கியேல் 20:12.**

பூமிக்குரிய கானானுக்குள் பிரவேசிக்கத்தக்கதாக இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியேறியபோது, அவர்களை வேறுபடுத்திக் காட்டிய ஒரே அடையாளம் ஓய்வுநாளே. அதேபோன்று பரலோக இளைப்பாறுதலிற்கு பிரவேசிக்கத்தக்கதாக, தேவனுடைய மக்கள் இந்த உலகைவிட்டு வெளியேறுவது இப்பொழுது மற்ற மக்களினின்று அவர்களை வேறுபடுத்திக்காட்டும் அடையாளமாகும்.

தேவன் தம்மைப்பற்றிய ஒரு அறிவைப் பாதுகாத்து வைப்பதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட வழிவகையாக இருப்பது ஓய்வுநாள் ஆசரிப்போயாகும். மேலும் இந்த ஓய்வுநாள் அவரது விசுவாசமுள்ள குடிமக்களினின்று அவரது பிரமாணத்தை மீறுபவர்களை வேறுபடுத்திக் காட்டுவதுமாகும்.

ஓய்வுநாள் கிறிஸ்துவிற்குச்சொந்தமானது.... அவர் அனைத்துப் பொருட்களையும் படைத்து, ஓய்வுநாளையும் உண்டாக்கினார். அவரது படைப்பின் வேலையின் ஞாபகார்த்தமாக அவரால் ஓய்வுநாள் தனியாக பிரித்துவைக்கப்பட்டது. அவர் படைத்தவராகவும் பரிசுத்தமாக்குகிறவருமாக இருக்கிறார் என்பதை ஓய்வுநாள் சுட்டிக்காட்டுகிறது. வானத்தையும் பூமியையும் அனைத்துப் பொருட்களையும் படைத்தவர் என்றும் அவராலே அனைத்தும் ஒன்றாக இணைந்து இயங்கிக்கொண்டிருக்கிறது என்றும் அவரே சபையின் தலைவர் என்றும் அவரது வல்லமையினாலே நாம் தேவனோடு ஒப்புரவாகிறோம் என்றும் உறுதியாகக் கூறுகிறது. ஆண்டவர் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து: "நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற

கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்"(எசே. 20:12) என்றார். எனவே, ஓய்வுநாள் நம்மைப் பரிசுத்தமாக்குகின்ற கிறிஸ்துவின் வல்லமைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. கிறிஸ்து பரிசுத்தமாக்குகின்ற அனைவருக்கும் இந்த ஓய்வுநாள் கொடுக்கப்படுகின்றது. அவரது பரிசுத்தமாக்கும் வல்லமைக்கு அடையாளமாக கிறிஸ்துவின்மூலமாக தேவனுக்குச் சொந்தமான இஸ்ரவேலருக்குள்ளே ஒரு பங்கை வைப்பதற்காக, இப்படிப்பட்ட அனைவருக்கும் ஓய்வுநாள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுநாளை கிறிஸ்துவின் படைப்பின் மீட்பின் வல்லமைக்கு ஒரு அடையாளமாக ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் அந்தநாள் ஒரு மகிழ்ச்சியாக அமைந்திருக்கும். ஓய்வுநாளிலே கிறிஸ்துவைக் கண்டு, அவரிலே தாங்கள் களிகூருகிறார்கள். மீட்பிலே அவரது மகத்தான வல்லமைக்கு ஒரு சான்றாக, படைப்பின் கிரியைகளுக்கு ஓய்வுநாள் சுட்டிக்காட்டுகிறது. ஏதேனில் இழக்கப்பட்டுப்போன சமாதானத்தை நினைவிற்குக்கொண்டுவரும்பொழுது, மீட்பரின் மூலமாக சமாதானம் மீண்டும் கொண்டுவரப்பட்டது என்பதையும் அது கூறுகிறது. இயற்கையின் ஒவ்வொரு பொருளும் அவரது அழைப்பை மீண்டும் கூறுகிறது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"– மத்தேயு 11:28.

ஓய்வுநாள் தேவனையும் அவரது மக்களையும் இணைக்கும் பொற்சங்கிலியின் ஒரு கண்ணியாகும். ★

# ஓய்வுநாளின் முக்கியத்துவமும் மகிமையும்!

**“அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.” —ஏசாயா 58:14.**

ஓய்வுநாளிலே எங்களுக்கு ஒரு இனிமையான—மகிமையான நேரமிருந்தது.... அவர் நமக்கு வழங்கியிருக்கும் ஏராளமான நன்மைகளுக்காக நாம் களிகூர்ந்து அவரை மகிமைப் படுத்துவதற்காக நாம் உண்டாக்கப்பட்டோம்.... நான் தரிசனத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டேன்....

ஓய்வுநாளின் முக்கியத்துவம்பற்றி வெகுகுறைவாகவே உணர்ந்திருக்கிறோம், புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் கண்டேன். இன்னும் எந்த அளவிற்கு அதின் முக்கியத்துவம்பற்றியும் மகிமைபற்றியும் நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும், அறிந்துகொள்ளவேண்டுமென்பதையும் நான் கண்டேன். பூமியின் உயர்ந்த இடங்களில் ஏறியிருந்து, யாக்கோபின் சுதந்திரத்தால் போஷிக்கப்படுதல் என்றால் என்ன என்பதை நாம் அறியவில்லை என்று கண்டேன். ஆனால் அந்த இளைப்பாறுதலின் பின்மாரி அவரது சமூகத்திலிருந்தும் அவரது வல்லமையின் மகிமையிலிருந்தும் வரும்போது, யாக்கோபின் சுதந்திரத்தால் போஷிக்கப்படுதலும் உயர்ந்த இடங்களில் ஏறியிருப்பதும் என்ன என்பதை அறிந்துகொள்வோம். அதன்பிறகு ஓய்வுநாளின் முக்கியத்துவத்தையும் அதின் மகிமையையும் மிகவும் அதிகமாகக் காண்போம். ஆனால் தேவனது குரலால் நம்மோடு சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டு, புதிய எருசலேமின் முத்து வாசல்கள் திறக்கப்பட்டு, அதின் மின்னுகின்ற அந்தக் கீல்களிலே அந்த வாசல்கள் பின்னாகச் செல்லும்பொழுது, அதிலே நுழைகின்ற மானிடரின் காதுகளிலே என்றும் விழுந்திராத கீதத்தைவிட இனிமையான இயேசுவின் மகிழ்ச்சியான—சந்தோஷமான குரல் கேட்கப்படும்வரை, அதின் அனைத்து முக்கியத்துவத்திலும் மகிமையிலும் அந்த ஓய்வுநாளைக்

காணமாட்டோம். நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொண்டதால் அந்த பட்டணத்திற்குள் செல்ல முழு உரிமையையும் பெற்றிருந்தோம் என்பதைக் கண்டேன். பரலோகம், இனிய பரலோகம் எங்களது வீடாக இருந்தது.

கற்பலகைகளிலே தேவனுடைய விரலால் எழுதப்பட்ட அந்தக் கட்டளைகளை நான் கண்டேன். ஒரு கற்பலகையிலே நான்கும் அடுத்ததில் ஆறும் இருந்தன. முதல் கற்பலகையிலுள்ள நான்கும் அடுத்த கற்பலகையிலுள்ள ஆறைவிட ஜெலித்தன. ஆனால் அந்த நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாள் கற்பனை எல்லாக் கற்பனைகளையும்விட ஜொலித்தது. ஏனெனில், தேவனுடைய பரிசுத்த நாமத்தின் மேன்மைக்காக அது தனியாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஓய்வுநாள் மகிமையாகக் காணப்பட்டது. ஒரு மகிமையின் ஒளிவட்டம் அதைச்சுற்றிலும் காணப்பட்டது. ஓய்வுநாள் கற்பனை சிலுவையில் அடிக்கப்படவில்லை. என்பதை நான் கண்டேன். அது அடிக்கப்பட்டிருந்தால் மற்ற ஒன்பது கற்பனைகளும் அடிக்கப்பட்டிருக்கும். நான்காம் கற்பனையையும் சேர்த்து அனைத்தையும் மீறுவதற்கு நமக்கு சுதந்திரம் இருந்திருக்கும். அவிசுவாசிகளுக்கும் உண்மையான இஸ்ரவேலருக்குமிடையே பிரிக்கும் சுவராக ஓய்வுநாள் இருக்கும் என்பதை நான் கண்டேன். ஓய்வுநாள் எனப்படும் முக்கியமான பொருளே காத்துக்கொண்டிருக்கும் அருமையான தேவனுடைய பரிசுத்தவான்களின் இருதயங்களை இணைக்கக்கூடியதாக இருக்கும். ★

ஆகஸ்டு 26

# ஓய்வுநாள்
# தேவனுடைய முத்திரை!

**“என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு, அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்.” —எசேக்கியேல் 20:20.**

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் தேவனுடைய சம்பத்து என்பதைக் காட்டுவதற்காக தங்களது கதவுகளிலே இரத்தத்தினால் கையொப்பமிட்டிருந்தார்கள். இந்தக் காலத்திலே தேவனுடைய பிள்ளைகள் தேவனால் நியமிக்கப்பட்ட கையொப்பத்தை எடுத்துச்செல்வார்கள். தேவனுடைய பரிசுத்த பிரமாணத்திற்கு இசைவாக அவர்கள் தங்களை வைத்திருப்பார்கள். பொதுவான அழிவினின்று இஸ்ரவேல் மக்களை பாதுகாப்பதற்காக, எபிரெயர் குடியிருப்புகளிலுள்ள கதவுகளிலே எப்படி ஒரு திட்டமான அடையாளம் வைக்கப்பட்டிருந்ததோ, அதைப்போன்று தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவர்மீதும் ஒரு அடையாளம் வைக்கப்படும். “நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்”—எசே.20:12.

இந்த நமது உலகிலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் படைப்பினாலும், மீட்பினாலும் தேவனுடைய சொத்தாகும். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அவரது ஜீவியத்திற்கான ஒரு பரீட்சையில் வைக்கப்பட்டிருக்கிறார். தேவனுக்கு சொந்தமானதை அந்த நபர் தேவனுக்குக் கொடுத்துவிட்டாரா? அவரால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட உடைமையாக, தேவனுக்குச் சொந்தமான அனைத்தையும் அவரிடத்தில் அந்த நபர் ஒப்படைத்துவிட்டாரா? இந்த வாழ்க்கையிலே ஆண்டவரைத் தங்களது பங்காக மனதாரப் பெற்றுக்கொண்டவர்கள் அவரது கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய விசேஷ உடைமை என்பதைக் காட்டுகின்ற தேவனுடைய அடையாளமாகிய அந்த முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள். கிறிஸ்துவின் நீதியானது அவர்களுக்கு முன்பாகச் செல்லும். ஆண்டவரது

மகிமை அவர்களுக்கு மீண்டும் கிடைத்த வெகுமதியாக இருக்கும். அவரது அடையாளத்தைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு மானிடனையும் அவர் பாதுகாக்கிறார். “மேலும், கர்த்தர் மோசேயினிடத்தில்: நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்”– யாத். 31:12.13. “ஆறுநாளும் வேலைசெய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படவேண்டும். ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள். அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்” (யாத். 31:15-17) என்றார்.

தேவனுடைய இந்த அங்கீகாரம் ஒவ்வொரு மானிடனுக்கும் ஒரு உயர்ந்த மதிப்புடையதாக விளங்குகிறது. அவரை நேசித்து, அவரைச் சேவிக்கிற அனைவரும் அவரது பார்வையில் மிகவும் அருமையானவர்கள். தேவனில் இருப்பதுபோன்ற சத்தியத்திற்கு எங்கு அவர்கள் தகுதியுள்ள பிரதிநிதிகளாக நிற்கமுடியுமோ, அங்கு அவர்களை அவர் வைப்பார். ★

# ஆசரிப்புக்கூடாரம் என்ற பொருளைப்பற்றி படியுங்கள்!

**“அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.” —தானியேல் 8:14.**

தீர்க்கதரிசனத்தைப் படிப்பதில் ஊக்கமும் உற்சாகமுமுள்ள மாணவர்களாக நாம் இருக்கவேண்டும். ஆசரிப்புக்கூடாரம் என்ற பொருளைக் குறித்து தெளிவாக அறிந்துகொள்ளும்வரை நாம் இளைப்பாறக் கூடாது. இந்த ஆசரிப்புக்கூடாரம்பற்றிய காரியம் தானியேல், யோவான் ஆகியோரது தரிசனங்களிலே கொண்டுவரப் பட்டிருக்கிறது. நமது தற்கால நிலைபற்றியும் ஊழியம்பற்றியும் இந்த ஆசரிப்புக்கூடாரம் என்ற பொருள் அதிக வெளிச்சத்தைக் கொடுக்கிறது. கடந்தகால அனுபவங்களில் தேவன் நம்மை வழிநடத்தியிருக்கிறார் என்பதற்கான, தவறாத ஓர் சான்றை நமக்குக் கொடுக்கிறது. 1844—ல் நமக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப்பற்றி விளக்கிக்காட்டுகிறது. நாம் முன்பு யூகித்தது போல் ஆசரிப்புக் கூடாரம் சுத்திகரிக்கப்படுவது என்பது, இந்த பூமியைச் சுட்டிக்காட்ட வில்லை என்றும், பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் கிறிஸ்து பிரவேசித்திருக்கிறார் என்றும் தானியேல் தீர்க்கதரிசிக்கு தூதன் கூறிய வார்த்தையின் நிறைவேறுதலாக அவர் தமது ஆசாரிய ஊழியத்தின் இறுதி வேலையைச் செய்துகொண்டிருக்கிறார் என்றும் காட்டுகிறது.

எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கான அர்தசஷ்டாவின் கட்டளை கி.மு.457—ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதுவே, 2,300 நாட்களின் ஆரம்பம் என்று கண்டறியப்பட்டது. அதுவே, துவக்கக் குறியீடாக எடுக்கப்பட்டு, தானி. 9:25—27—ல் கூறப்பட்ட காலக்கட்டத்தைப்பற்றிய விளக்கத்தில் முன்னுரைக்கப்பட்ட சம்பவங்கள் பூரண இசைவோடு அதின் வழியிலே அமைந்தது. 70 வாரங்கள் அல்லது 490 ஆண்டுகள் குறிப்பாக யூதர்களைப் பற்றியதாகும். இந்தக் காலக்கட்டம் முடிவடையும்போது, அவர்களது சீடர்களை உபத்திரவத்திற்கு உட்படுத்தி, கிறிஸ்துவை தள்ளிப்போட்டு

அந்த இனம் (யூதர்கள்) முடிவைத் தீர்மானித்துக்கொண்டது. அதன்பின்னர் அப்போஸ்தலர்கள் கி.பி.34—ல் புறஜாதிகளிடத்தில் திரும்பினார்கள். 2300—ன் முதல் 490 ஆண்டுகள் அப்பொழுது முடிவடைந்தது. மீதமான 1810 ஆண்டுகள் கி.பி.34—லிருந்து 1844—ஐ எட்டியது. "பின்பு ஆசரிப்புக்கூடாரம் சுத்திகரிக்கப்படும்" என்று தூதன் கூறினான்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் தூதனுடைய தூதுகள்பற்றிய காரியத்தில் நம்முடைய விசுவாசம் சரியாக இருந்தது. நாம் கடந்து சென்றிருக்கிற மாபெரும் வழிகாட்டும் குறிகள் அசைக்கமுடியாதவை. பாதாளத்தின் சேனைகள் அதின் அடித்தளத்தினின்று அதைப் பிடுங்கிப்போட முயற்சித்தாலும், தாங்கள் வெற்றிபெற்றோம் என்ற நினைவில் களிகூர்ந்தாலும், அவர்கள் வெற்றி பெறவில்லை. நித்தியமான மலைகளைப்போன்று இந்த சத்தியத்தின் தூண்கள் திடமாக நிற்கின்றன. சாத்தானும் அவனது சேனைகளோடு மனிதரும் சேர்ந்து செய்த முயற்சிகளினால் அது அசையவில்லை. நாம் அதிகமாகக் கற்றுக் கொள்ளலாம். இந்தக் காரியங்கள் இப்படி இருக்கின்றனவா என்பதை அறிவதற்கு, தொடர்ந்து வேதவாக்கியங்களை ஆராய்ச்சி செய்யவேண்டும். ★

ஆகஸ்டு 28

# ஆசரிப்புக்கூடாரம் சுத்திகரிக்கப்படல்!

**“இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண் டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.” —தானியேல் 7:13.**

நமது மீட்பர் பரமேறிய பின்னர், நமது பிரதான ஆசாரியராக தமது ஊழியத்தை ஆரம்பித்தார். “அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்”(எபிரெயர் 9:24) என்று பவுலார் கூறினார்.

18 நூற்றாண்டுகளாக ஆசரிப்புக்கூடாரத்தில் முதல் அறையிலே இந்த வேலை நடைபெற்றுவந்தது. (இந்தப் புத்தகம் 19—ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவும்). பாவ அறிக்கை செய்யும் விசுவாசிகளின் சார்பாக, கிறிஸ்துவின் இரத்தம் பரிந்துபேசி, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் மன்னிப்பைப் பெற்றுக்கொடுப்பதையும் செயல்படுத்துகிறது. எனினும், அந்தப் பதிவேடுகளிலே அவர்களது பாவங்கள் தொடர்ந்து தங்கியிருக்கும். அந்த நிழலாட்டமான ஆராதனையிலே—ஆண்டு முடிவிலே பாவநிவாரண வேலை நடைபெறும். மானிடரின் மீட்பிற்காக கிறிஸ்துவின் ஊழியம் முடிவடையும் முன்பாக, ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து பாவத்தை அகற்றுவதற்காக, பாவநிவாரண வேலை இருக்கிறது. 2300 நாட்கள் முடிவடைந்தபின்பு, இந்த வேலை ஆரம்பமாயிற்று. அந்த சமயத்தில் நமது மகா பிரதான ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்தை சுத்திகரிக்கின்ற அவரது பக்திவிநயமான ஊழியத்தின் கடைசிப் பகுதியின் ஊழியத்தைச் செய்வதற்காக, மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்....

ஆசரிப்புக்கூடாரத்தை சுத்திகரிப்பதற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே மகா பிரதான ஆசாரியராக வருதல் தானி. 8:14–ல் காட்டப்பட்டுள்ளது. தானியேல் 7:13–ல் சொல்லப்பட்டபடி, மனுஷகுமாரன் நீண்ட ஆயுசுள்ளவருக்கு அருகில் வருவதும், மேலும் மல்கியா முன்னறிவித்த ஆண்டவர் அவரது ஆலயத்திற்குள் பிரவேசிப்பதும் அதே சம்பவத்தின் வருணனைகளே. மத்தேயு 25–ம் அதிகாரத்தில் கிறிஸ்துவால் கூறப்பட்ட அந்த பத்து கன்னிகைகளைப்பற்றிய உவமையிலே, கலியாணத்திற்கு வருகைதரும் மணமகனின் வருகையிலேயும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஆசரிப்புக்கூடார சுத்திகரிப்பு... ஒரு விசாரணையின் வேலை. அதாவது நியாயத்தீர்ப்பின் வேலை அதில் அடங்கியிருக்கிறது. என்று காட்டுகிறது. தமது மக்களை மீட்பதற்காக கிறிஸ்து வருவதற்கு முன்பாக, இந்த வேலை நடைபெறவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது கிரியைகளுக்குந்தக்கதான வெகுமதியை அவர் வரும்போது கொண்டுவருவார்.

இறுதிநாளின் காரியங்கள் மதிப்பீடு செய்யப்படும்பொழுது, பதவி, உயர்ந்த படித்தரம் அல்லது செல்வம் ஆகியவை எவருடைய காரியத்திலும் ஒரு மயிரிழை அளவுகூட மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது. அனைத்தையும் பார்க்கின்ற தேவனால், கிறிஸ்துவிற்காக, தங்களது தூய்மையிலும்— மேன்மையிலும்— அன்பிலும் மனிதர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைவைத்து நியாயந்தீர்க்கப்படுவார்கள்.★

# பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து வரும் போதனை!

**“துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.” —எபிரெயர் 10:22.**

“இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்”—தானி. 7:13. கிறிஸ்துவின் வருகையென்று இங்கு வர்ணிக்கப்பட்டிருப்பது, பூமிக்கு அவர் வரப்போகின்ற இரண்டாம் வருகையல்ல. ஆளுகையையும் மகிமையையும் மத்தியஸ்தராக அவர் செய்கின்ற ஊழியத்தின் முடிவிலே அவருக்குக் கொடுக்கப்படவேண்டிய இராஜ்யத்தையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, பரலோகத்திலே நீண்டாயுசுள்ளவர் இருக்கும் இடத்திற்கு வருகிறார். 1844—ம் ஆண்டில் 2300 நாட்களின் முடிவில் நடைபெறுமென்று முன்னறிவிக்கப்பட்ட—தீர்க்கதரிசனத்தின்படிச் சொல்லப்பட்ட—இந்த வருகை அவரது இரண்டாம் வருகையல்ல. பரலோக தூதர்கள் புடைசூழ நமது மகா பிரதான ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தேவ சமூகத்திலே அவருக்கு முன் நிற்கிறார்.... நுட்ப நியாய விசாரணையின் ஊழியத்தைச் செய்யவும் இத்தகைய நன்மைகளுக்கு உரிமையுடையவர்களென்று காட்டப்பட்டு, அனைவருக்காகவும் பாவ நிவாரணஞ்செய்யவும் நிற்கிறார்.

ஜீவ தண்ணீர் ஊற்றினின்று ஜீவதண்ணீரைப் பருகும் அவசியத்தைக் காணத்தக்கதாக, ஆண்டவர் நமக்கு அருள்செய்வாராக. அதின் தூய்மையான சிற்றாறுகள் நம்மை இளைப்பாற்றி, குணமாக்கி, நம்மோடு தொடர்புகொள்ளும் அனைவரையும் இளைப்பாறுதலைக்

கண்டடையச்செய்யும். ஆ! தேவனுடைய ஆவியானவரால் இருதயங்கள் அடக்கியாளப் படுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும். தேவனுடைய மகிமையை மாத்திரமே கண்கள் காணுமானால், பரலோகத்தின் எத்தகைய ஒளி வெள்ளம் ஆத்துமாவின்மீது பொழியப்படும். ஒரு பொழுதும் எந்த மனிதனும் பேசாத—அத்தகைய மென்மையான தன்மையில் பேசிய—அவர் பூமியிலே ஒரு கல்வியாளர். அவரது உயிர்த்தெழுதலிற்குப்பிறகு எம்மாவூருக்குப் பயணித்துக்கொண்டிருந்த—தனிமையில் ஏமாற்றத்தோடு வாடியிருந்த சீடர்களுக்கும் மேலறையில் கூடியிருந்த அனைவருக்கும் அவர் ஒரு ஆசிரியராக இருந்தார். தம்மைப்பற்றி வேதவாக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறவைகளை விளக்கிக் காட்டினார். மேலும் அவர்களது இதயங்களைத் தூய்மையான— புதிய—பரிசுத்தமான நம்பிக்கையினாலும், மகிழ்ச்சியினாலும் துள்ளும்படிச்செய்தார்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து, போதனையின் மாபெரும் ஊழியம் நடைபெறுகிறது. தேவதூதர்கள் மனிதரோடு தொடர்புகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்து ஆசரிப்புக்கூடாரத்திலே தமது பணியைச்செய்துகொண்டிருக்கிறார். ஆசரிப்புக்கூடாரத்திற்கு அவரைப் பின்தொடர்ந்து செல்லுமளவிற்கு நாம் செல்லவில்லை. மனிதர்களின் இருதயங்களிலே கிறிஸ்துவும் அவரது தூதர்களும் பணிசெய்கிறார்கள். பரலோகத்திலிருக்கிற சபை பூலோகத்திலுள்ள சபையோடு இணைந்து பூலோகத்திலே நல்ல போராட்டத்தைப் போராடிக்கொண்டிருக்கிறது. பரலோகத்தில் ஆசரிப்புக்கூடாரத்தை கிறிஸ்து சுத்திகரித்துக்கொண்டிருப்பதற்கு இசைவாக பூமியிலும் ஆன்மா தூய்மைப்படுத்தப்படும் வேலை நடந்து கொண்டிருக்கவேண்டும்.

நமது மகா பிரதான ஆசாரியர் பணிசெய்து கொண்டிருக்கும் அந்த பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின்மீது, இப்பொழுது, தேவனுடைய மக்கள் தங்களது கவனத்தை பதித்து வைத்திருக்கவேண்டும்.★

# உயிரோடிருப்பவர்களுக்கு நடைபெறும் நியாயத்தீர்ப்பு!

**“ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்.” —வெளிப்படுத்தல் 3:3.**

நியாயத்தீர்ப்பிற்காக நியமிக்கப்படட அந்த வேளையிலே அதாவது 1844–ம் ஆண்டில்—2300 நாட்களின் முடிவிலே, நுட்ப நியாய விசாரணையும் பாவங்கள் கிறுக்கப்படும் வேளையும் ஆரம்பமானது. கிறிஸ்துவின் நாமத்தை என்றாவது தங்கள்மீது எடுத்துக்கொண்ட அனைவரும் நுட்பமாகச் செய்யப்படும் இந்த ஆய்வை கடந்துசெல்லவேண்டும். “மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்”–வெளி. 20:12. உயிரோடிருந்தவர்களும் மரித்தவர்களும் நியாயந் தீர்க்கப்பட்டார்கள். “அனைவரும் தங்களது விசுவாசத்தின்படியே நீதிமான்களாக ஆக்கப்பட்டு தங்களது கிரியைகளின்படியே நியாயம் தீர்க்கப்படுவார்கள்” என்று நியாயதிபதி கூறினார்.

மனம் வருந்தி அறிக்கை செய்யப்படாத—விட்டுவிடப்படாத அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படாது. அவைகள் பதிவேடுகளினின்றும் அகற்றப்படாது. ஆண்டவருடைய அந்த நாளிலே பாவிக்கு எதிராக ஒரு சாட்சியாக நிற்கும்.

யாருக்கெல்லாம் தீய மனப்பாங்குகள் மேலாதிக்கஞ் செலுத்தத்தக்கதாக முனைப்பாக வேலைசெய்கின்றதோ, அனைத்தையும் யாரெல்லாம் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்களோ, அவர்களுக்கு

முன்பாக தீவிரமான போராட்டம் இருக்கிறது. ஆயத்தமாகும் வேலை ஒவ்வொரு நபரும் செய்யவேண்டிய தனிப்பட்ட வேலையாகும். நாம் குழுக்களாக இரட்சிக்கப்படுகிறதில்லை. ஒருவருடைய தூய்மையும் பயபக்தியும் இத்தகைய குணங்கள் பெற்ற இன்னொருவரது குறைகளை ஈடுசெய்துவிடாது. அனைத்து ஜாதிகளும் அவரது நியாயத்தீர்ப்பிற்கடியில் கடந்து செல்லவேண்டியதிருப்பினும் அவர் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட காரியத்தையும் பூமியின்மீது வேறு எவருமே இல்லாததுபோன்று மிக நெருக்கமாகவும், மிகவும் நுட்பமான ஆராய்ச்சியோடும் விசாரணைசெய்வார். ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டு, கறைதிரை மற்றும் வேறு எதுவும் இல்லையென்பதாகக் கண்டறியப்படவேண்டும்.

பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் இந்த நுட்ப நியாய விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக இந்தப் பணி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றது. சீக்கிரத்தில்—ஒருவருக்கும் தெரியாது எவ்வளவு சீக்கிரத்தில் இந்த நியாய விசாரணை உயிரோடிருப்பவர்களுக்கு கடந்துசெல்லும் என்று. அந்த பயங்கரமான தேவ சமூகத்திலே நமது ஜீவியங்கள் மறு சீராய்விற்கு கொண்டுவரப்படும். இச்சமயத்திலே எல்லாவற்றையும்விட மீட்பரின் “அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” (மாற்கு 13:33) என்ற எச்சரிப்பை ஒவ்வொரு ஆத்துமாவும் கவனித்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும். “ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்”– வெளி. 3:3. ★

# நுட்ப நியாயவிசாரணை!

**“சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.”**
**–1 தீமோத்தேயு 5:24.**

நுட்ப நியாயவிசாரணையின் வேளையும், பாவங்கள் அகற்றிப்போடப்படுதலும் நமது ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்பாக நிறைவேற்றப்படவேண்டியவைகளாகும். மரித்தவர்கள் பதிவேடுகளில் அவர்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் காரியங்களைவைத்து நியாயந்தீர்க்கப்படவேண்டியதிருப்பதால், நியாயத்தீர்ப்பு முடியும்வரை மனிதர்களின் பாவங்கள் அகற்றப்படுவது கூடாத காரியமாகும். அச்சமயத்தில்தான் அவர்களது காரியங்கள் நியாயம் விசாரிக்கப்படமுடியும். நுட்ப நியாயவிசாரணை முடிவடையும்போது கிறிஸ்து வருவார். ஒவ்வொரு மனிதனுடைய கிரியைகளுக்குந்தக்கதாக கொடுக்கப்படப்போகும் வெகுமதி அவரோடுகூட வரும்.

பதிவேடுகளில் எழுதப்பட்டவைகளின்படி, அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்களது கிரியைகளுக்குத்தக்கதாக வெகுமதி அளிக்கப்படும். இந்த நியாயவிசாரணை மரித்தவுடன் நடைபெறுவதல்ல.

ஆசரிப்புக்கூடாரத்தின் நிழலாட்டமான ஆராதனையிலே பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பாவநிவாரணம் செய்தபின்னர் வெளியேவந்து, அங்கு குழுமியிருக்கும் சபையாரை ஆசீர்வதிப்பார். இயேசுவும் தமது மத்தியஸ்த வேலை முடிவடைந்தவுடன் நித்திய ஜீவனுக்காகக் காத்திருக்கும் மக்களை ஆசீர்வதிப்பதற்காக, இரட்சிப்பதற்காக பாவமில்லாமல் தரிசனமாவார். ஆசாரியனாக ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த பாவங்களை அகற்றுவதிலே, போக்காட்டின் தலையின்மீது பாவங்களை அறிக்கை செய்து முடிப்பான். அதேபோன்று கிறிஸ்துவும், பாவத்தை ஆரம்பித்தவனும் தூண்டியவனுமாகிய சாத்தான்மீது அனைத்து பாவங்களையும் வைப்பார்.

போக்காடு இஸ்ரவேலரின் பாவங்களைச் சுமந்தபடியே குடியில்லாத வனாந்திரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதைப் போன்று சாத்தானும் தேவனுடைய மக்களை தூண்டி பாவஞ்செய்ய வைத்த அனைத்துக் குற்றங்களையும் சுமந்தவனாக ஓராயிரம் ஆண்டுகளுக்கு குடிமக்களில்லாத—பாழாகிக் கிடக்கும் இந்த பூமியிலே அடைக்கப்படுவான். இறுதியிலே பாவத்தின் முழு தண்டனையையும் துன்மார்க்கர் அனைவரையும் அழிக்கின்ற அந்த நெருப்பில் அனுபவிப்பான்.

இந்த பூமியில் குடியிருக்கிற மக்களில் சிலரே—ஆம் வெகுசிலரே நித்தியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படியாக மீட்கப்படுவார்கள். சத்தியத்திற்கு கீழ்ப்படிவதின்மூலம் தங்களது ஆத்துமாக்களை பூரணப்படுத்தாத பெருந்திரளான மக்கள் இரண்டாம் மரணத்திற்கென்று நியமிக்கப்படுவார்கள்.

பாவமன்னிப்பைப் பெற்ற விசுவாசிகளின் பாவங்கள் ஆசரிப்புக்கூடாரத்தினின்று அகற்றப்படும்போது, பூமியிலே தேவனுடைய மக்களுக்கு மத்தியில் ஒரு சிறப்பான சுத்திகரிப்பின் வேலை அதாவது பாவத்தை அகற்றிப்போடும் வேலை நடைபெறும். ★

செப்டம்பர் 1

# நீதிமன்றங்களுக்கும ஆலோசனை மன்றங்களுக்கும் முன்பாக நிற்கவேண்டியதிருக்கும்!

**“நான் உம்முடைய சாட்சிகளைக் குறித்து, ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன்.” —சங்கீதம் 119:46.**

இந்த மாபெரும் ஊழியம் முடிவடையப்போகிற காலத்திலே, எப்படிச் சமாளிப்போம் என்று அறிந்திராத குழப்பங்களை நாம் சந்திப்போம். என்றாலும் பரலோகத்தின் மிகப்பெரிய மூன்று வல்லமைகளும் கிரியைசெய்துகொண்டிருக்கின்றன என்கிறதையும், காலச்சக்கரத்தின்மேல் தேவனுடைய கரம் இருக்கிறது என்கிறதையும், தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றுவார் என்கிறதையும் நாம் மறந்துபோகாதிருப்போமாக.

அவருடைய நாமத்தினிமித்தம் ஆயிரமாயிரம் மக்களுக்கு முன்பாகவும், ஆலோசனை மன்றங்களுக்கு முன்பாகவும் நிற்க வேண்டிய வேளை வரும். ஒவ்வொருவரும் அவரவருடைய விசுவாசத்திற்கான காரணத்தைச் சொல்லவேண்டியதிருக்கும்.

நமது மக்களால் எடுத்தாளப்படும் ஒவ்வொரு சத்தியமும் மாபெரும் மேதைகளின் திறனாய்விற்கு உட்படும். உலகின் மாபெரும் அறிவாளிகளிலும் மிக உயர்ந்தவர்கள், சத்தியத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். நாம் சத்தியத்தை எடுத்தாளும் ஒவ்வொரு நிலையும் தீர்க்கமாக வேத வார்த்தைகளைக்கொண்டு சோதிக்கப்படும். இன்றைக்கு நாம் உலகத்தாரால் அறியப்படாதவர்கள் போன்று தோற்றமளிக்கலாம். ஆனால் நிலைமை இப்படியே என்றும் இருக்காது. நம்மை முன்னணிக்குக் கொண்டுவர இயக்கங்கள் வேலைசெய்துகொண்டிருக்கின்றன. ஒருவேளை நம்முடைய சத்தியங்கள் வரலாற்று அறிஞர்களாலும் அல்லது உலகின் தலைசிறந்த மனிதர்களாலும் சின்னாபின்னப்படுத்தப்படலாம். ஆம், அவ்வாறு செய்யப்படும்.

சத்துருக்கள் தடுக்கவோ, மறுத்துப்போசவோ கூடாதபடிக்கு வல்லமையான நாவையும் ஞானத்தையும் கர்த்தராகிய இயேசு தமது சீடர்களுக்குக் கொடுப்பார். சாத்தானுடைய தந்திரங்களை தங்களது பகுத்தறிவினாலே ஜெயிக்க முடியாதவர்களுங்கூட, படித்த ஞானிகள் என்னப்படுகிறவர்களை குழப்புவதற்கேதுவாக சத்தியத்திற்கு திட்டமான சாட்சிபகருவார்கள். கல்லாதவர்களின் நாவுகளிலிருந்து மனங்களை அசைக்கத்தக்கதான மற்றவர்களும் சத்தியத்தை நம்பி ஏற்றுக்கொள்ளத்தக்கதான வல்லமையோடும் ஞானத்தோடும் வார்த்தைகள் பிறக்கும். அநேகர் சத்தியத்திற்குத் திரும்புவார்கள். அவர்களுடைய சாட்சியினால் ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்புவார்கள்.

படித்தவர்களுக்குக் கிடைக்காத வல்லமை ஏன் படிக்காதவர்களுக்குக் கிடைக்கிறது? படிக்காதவர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால் பரிசுத்தமான, தெளிவான சத்திய ஒளிக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். படித்தவர்களோ சத்தியத்தைவிட்டு விலகிச்சென்றுவிட்டார்கள். ஏழையான மனிதன் கிறிஸ்துவிற்கு சாட்சியாகிறான். சரித்திரத்திற்கோ அல்லது உயர்ந்த ஞானமென்று பெயர்பெற்றிருக்கிற அறிவியலுக்கோ அவன் வேண்டுகோள் விடுக்கமுடியாது. ஆனால் வேத வாக்கியங்களிலிருந்து வல்லமையான அத்தாட்சிகளை அவன் சேகரித்திருக்கிறான். தேவ ஏவுதலினாலே அவன் பேசுகிற சத்தியம் சுத்தமுள்ளதாகவும், கவனத்தை ஈர்க்கக்கூடியதாகவும் இருக்கிறது. எனவே, அவனுடைய சாட்சியை எவரும் எதிர்த்துப்பேச முடியாது. ★

# பூமியின் மாபெரும் மனிதர்களுக்குமுன் சாட்சிபகர்தல்!

**“அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்.” —மத்தேயு 10:18.**

உலகின் அதிபதிகளுக்கு முன்பாக சாட்சிசொல்லும்படி தேவமக்கள் கொண்டுபோகப்படுகிற காலம் வெகுதூரத்திலில்லை. நாம் உலக சரித்திரத்தின் ஆபத்துகளை நோக்கி, எத்தனை வேகமாக அடியெடுத்துவைத்துக்கொண்டிருக்கிறோம் என்கிறதை இருபதில் ஒருவர்கூட உணரவில்லை.... மாயையான அற்பமான காரிங்களுக்கும், முக்கியமில்லாத காரியங்களுக்கும் நம் மனதைச் செலுத்த இனி நேரமில்லை.

உங்களைப் பகைக்கிறவர்கள் கொடுக்கும் அறிக்கைகளின் மூலமான, இராஜாக்களும் அதிபதிகளும் மாபெரும் மனிதர்களும் உங்களைக் குறித்துக் கேள்விப்படுவார்கள். உங்கள் விசுவாசமும் குணங்களும் தவறாக எடுத்துக்காட்டப்படும். ஆனால் தவறாகக் குற்றஞ்சாட்டப்படுகிறவர்கள் தங்களுக்காகப் பதில்பேசும்படி, அவ்வாறு குற்றப்படுத்தினவர்களுக்கு முன்பாக ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்று நிற்பார்கள். இவ்வுலகின் அதிபதிகளுக்கு முன்பாக, சத்திய ஒளியை பிரதிபலிக்கும்படிக்கு பெரிய பாக்கியத்தை அவர்கள் பெறுவார்கள். நீங்கள் வேத வார்த்தைகளை ஆராய்ந்திருப்பீர்களானால் உங்கள் நம்பிக்கையைக்குறித்து உங்களை விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் பயத்தோடும் சாந்தமுள்ள ஆவியோடும் பதில்சொல்ல ஆயத்தமாயிருப்பீர்களானால், உங்கள் எதிராளி உங்கள் ஞானத்தை எதிர்த்துப்பேச முடியாது.

அப்படிப்பட்ட மேலான வல்லமையை—ஞானத்தை வேத

வாக்கியங்களை ஆராய்வதின்மூலம் முயன்று பெற்றுக்கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் இப்பொழுது உங்களுக்குமுன் இருக்கிறது. ஆனால் நீங்கள் சோம்பி, சத்தியச் சுரங்கத்தை ஆழமாகத் தோண்டிப்பார்க்க தவறுவீர்களானால், நம்மீது வெகு சீக்கிரத்தில் வரவிருக்கிற நெருக்கடியை சந்திக்க ஆயத்தமாயிருக்க முடியாது. ஆ! ஒவ்வொரு வினாடியும் பொன்போன்றிருக்கிறதை நீங்கள் தெளிவாக உணர்ந்தால் நலமாயிருக்கும். தேவனுடைய வாயிலிருந்து பிறக்கிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நீங்கள் பிழைத்துக்கொண்டிருப்பீர்களானால், ஆயத்தமில்லாதவர்களாகக் காணப்படமாட்டீர்கள்.

சத்தியத்திற்கு சாட்சிபகரும்படி எப்படிப்பட்ட இடத்திற்கு அழைக்கப்படுவீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அநேகர் சட்டசபைகளிலே நிற்கவேண்டியதிருக்கும். சிலர் இராஜாக்களுக்கு முன்பாகவும், உலகின் மேதைகளுக்கு முன்பாகவும் தங்கள் விசுவாசத்தைக்குறித்துப் பதில்சொல்ல வேண்டியதிருக்கும். சத்தியத்தைக்குறித்த மேலோட்டமான அறிவைமாத்திரம் பெற்றிருக்கிறவர்கள் வேத வாக்கியங்களைத் தெளிவாக விவரித்து தங்கள் விசவாசத்திற்கான திட்டமான காரணங்களை எடுத்துக்கூற முடியாது. அவர்கள் குழப்பமடைவார்கள். வெட்கப்படாத ஊழியக்காரராயிருக்க அவர்களால் முடியாது. தான் பரிசுத்தமான இடத்திலே பிரசங்கிக்கப்போவதில்லை என்று நினைத்து, வேதவாக்கியங்களை ஆராயவேண்டிய அவசியமில்லையென்று நினைத்துவிடவேண்டாம். தேவன் உங்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்று உங்களுக்குத் தெரியாது. ★

# உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தப்படு!

**"ஆகையால் இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு." —ஆமோஸ் 4:12.**

இக்கட்டுக்காலத்திலே, தேவனுடைய சமூகத்திலே மகா பிரதான ஆசாரியனில்லாமல் ஜீவிக்கவேண்டுமே; அதற்கு எப்படிப்பட்ட ஆயத்தத்தோடிருக்கவேண்டும் என்பதை அநேகர் நன்கு உணராமலிருக்கிறார்கள். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப் பெறுகிறவர்களும், இக்கட்டுக்காலத்திலே பாதுகாக்கப்படப் போகிறவர்களும் இயேசுவை முழுமையாகப் பிரதிபலிக்கவேண்டும்.

அவர்களது அங்கி கறையற்றதாகவும், அவர்கள் குணம் தெளிக்கப்பட்ட இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டதாகவு மிருக்கவேண்டும். தேவனுடைய கிருபையினாலும், தங்களுடைய ஜாக்கிரதையான முயற்சியினாலும் தீமையோடு நடந்த போராட்டத்திலே வெற்றிகொண்டவர்களாயிருக்கவேண டும். நுட்ப நியாயவிசாரணை பரலோகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்திலே, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புகிற விசுவாசிகளின் பாவங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து நீக்கப்படுகிற காலத்திலே, விசேஷமான சுத்திகரிப்பின் பணி—பாவங்களை நம்மைவிட்டு அப்புறப்படுத்துகிற பணி, இப்பூமியிலே தேவனுடைய மக்களின் மத்தியிலே நடைபெறவேண்டும்.

மிகவும் தேவையான ஆயத்தத்தைப் புறக்கணிக்கிற அநேகரை நான் கண்டேன். கர்த்தருடைய நாளிலே அவர் முன்பாக ஜீவிக்கவும், பரிசுத்தவான்களோடு சேர்ந்து நிற்கவும் தகுதியாகும்படிக்கு, "பின்மாரியை"—அதாவது "இளைப்பாறுதலின்" வேளையை எதிர்பார்த்திருக்கிறதை நான் கண்டேன். ஆ! இக்கட்டுக்காலத்திலே அடைக்கலமின்றி இருந்த அநேகரை நான் கண்டேன். அவர்கள் தேவையான ஆயத்தத்தை அலட்சியஞ்செய்துவிட்டார்கள். எனவே ஒரு பரிசுத்த தேவனுடைய

சமூகத்தில் வாழ்வதற்கு தங்களைத் தகுதியாக்கிக்கொள்ளத்தக்கதான அந்த பின்மாரியை அவர்களால் பெறமுடியவில்லை.

தீர்க்கதரிசிகளால் செதுக்கப்பட தங்களை ஒப்புக் கொடாதவர்களும், முழு சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து தங்கள் ஆத்துமாக்களை சுத்திகரிக்காதவர்களும், தாங்கள் உண்மையிலே அப்படி இல்லாதிருந்தும் தங்கள் நிலைதான் நல்ல மேன்மையாயிருக்கிறது என்று நம்பியிருக்கிறவர்களும் வாதைகள் ஊற்றப்படுங்காலம் வரைக்கும் அப்படியே இருப்பார்கள். பின்புதான் தாங்கள் கட்டப்படுவதற்கேதுவாக செதுக்கப்படவும் வடிவமைக்கப்படவுமில்லை என்பதை அறிவார்கள்....!

தங்களுடைய பாவநிலை, பெருமை, சுயநலம், உலக ஆசை, தவறான ஒவ்வொரு வார்த்தை, செயல் இவற்றின்மேலெல்லாம் வெற்றிபெறாத எவரும் ஆவியானவரின் இளைப்பாறுதலில் பங்கடையமுடியாது. எனவே நாம் ஆண்டவரை நெருங்கிவந்து, அவருடைய நாளின் போராட்டத்திலே நிற்கத்தக்கதாக நம்மைத் தகுதியாக்குகிற ஆயத்தத்தை ஊக்கமுடன் தேடவேண்டியது அவசியம். தேவன் பரிசுத்தமானவர் என்பதையும் பரிசுத்தவான்கள் தவிர வேறொருவரும் அவர் சமூகத்தில் வாசம்பண்ண முடியாது என்பதையும் நாம் அனைவரும் நினைவுகூரக்கடவோம். ★

# தெய்வீக உதவிகுறித்த வாக்குத்தத்தம்!

**"அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்"—மத்தேயு 10:19.**

தங்கள் விசுவாசத்தைக்குறித்து விசாரிக்கப்படும்போது, தாஎதைப்பேசவேண்டுமென்று கிறிஸ்துவின் ஊழியக்காரர் ஆயத்தமாக்கப்பட்ட பிரசங்கத்தோடு அங்கு நிற்கத் தேவையில்லை. மாறாக, அவர்களுடைய ஆயத்தம் ஒவ்வொரு நாளும் நடைபெறவேண்டும். தேவனுடைய விலைமதிப்பற்ற வார்த்தைகளை தங்கள் இருதயத்திலே சேர்த்துவைத்தும், கிறிஸ்துவின் உபதேசங்களை தியானித்து ஜெபிப்பதின்மூலமாகவும் விசுவாசத்தைப் பலப்படுத்தி ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படவேண்டும். அப்படிச்செய்வார்களானால், விசாரணைக்காக அழைத்துவரப்படும் பொழுது, அந்தசாட்சியைக் கேட்கவருகின்ற உள்ளங்களைத் தொடக்கூடிய சத்தியங்களை பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய நினைவிற்கு கொண்டுவருவார். ஜாக்கிரதையாக வேதத்தை ஆராய்ந்ததின்மூலம் பெற்றுக்கொண்ட அறிவை, எந்த நேரத்தில் தேவைப்படுகிறதோ அந்தநேரத்தில்தானே, பளிச்சென்று அவர்கள் நினைவிற்கு கொண்டுவருவார்.

நீங்கள் இப்போது சோதனையின் காலத்திற்கு ஆயத்தப்படவேண்டும். உங்கள் கால்கள் நித்திய கன்மலையின்மேல் நாட்டப்பட்டிருக்கிறதா என்பதை நீங்கள் அறியவேண்டும். உங்களுடைய வெளிச்சத்திற்காக மற்றவர்களைச் சார்ந்திராமல், உங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட அனுபவம் கொண்டிருக்கவேண்டும். சோதனைக்குள் கொண்டுவரப்படுகிற பொழுது, நீங்கள் தனித்து விடப்படமாட்டீர்களென்பது எப்படி உங்களுக்குத் தெரியும்? பூலோக நண்பன் எவரும் உங்களுக்கருகில் இல்லாமலிருக்கலாம். கிறிஸ்து உங்களுக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதை உங்களால் நன்றாக உணர்ந்துகொள்ள முடியுமா? "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல

நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை உங்களால் நினைவிற்குக் கொண்டுவரமுடியுமா? உங்களை அழித்தேவிடவேண்டுமென்ற குறிக்கோளோடு, கண்ணிற்கு மறைவாகவிருக்கும் அநேகர் உங்களைச் சுற்றிலும் இருப்பார்கள். தேவனுக்கும் அவருடைய சத்தியத்திற்கும் உறுதியாக நிற்காமல், தடுமாற்றம் அடையத்தக்கதாக சாத்தானும் அவனுடைய தூதர்களும் அனைத்து வழிகளிலும் முயற்சி செய்வார்கள். என்றாலும், உங்கள் கவனம் முழுவதும் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதில் நிலைத்திருக்குமானால் எப்படி சத்தியத்திற்காக சாட்சிசொல்லப் போகிறோம் என்று கவலைப்படத் தேவையில்லை.

வாலிப சகோதரர்களே—சகோதரிகளே! நெருக்கடியான காலக் கட்டம் வருகிறபோது, உங்களுடைய வல்லமையின் உறைவிடமாகிய கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்துவிடாதபடிக்கு, அவருக்குள் முழுமையாக வளர்ந்துகொண்டிருக்கிறீர்களா? அந்தச் சோதனையின் காலத்திலே நாம் நிற்கவேண்டுமானால், இந்த சமாதான காலத்திலே தேவனுக்கடுத்த காரியங்களிலே ஒரு ஜீவனுள்ள அனுபவத்தை நாம் பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். தேவ ஆவியானவர் ஆழமாக அசைவாடுகிறதைப் புரிந்துகொள்ள நாம் இப்பொழுது கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்து மாத்திரமே நமக்கு எல்லாவற்றிலும் எல்லாமாக, அல்பாவாகவும்—ஒமேகாவாகவும், முதலும்—கடைசியுமாகவும், ஆதியும்—அந்தமுமாகவும் இருக்கவேண்டும். ★

# மற்றுமொரு பெந்தெகொஸ்தே நாள் வரப்போகிறது!

**"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப் பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்." —எசேக்கியேல் 34:26.**

விதைப்புக் காலத்திலும் அறுவடைக்காலத்திலும் கிழக்கத்திய நாடுகளிலே பெய்கிற முன்மாரி மற்றும் பின்மாரியை உதாரணங்களாக வைத்து, எபிரெய தீர்க்கதரிசிகள் தேவனுடைய சபையின்மேல் வியக்கத்தக்க ஆவிக்குரிய கிருபை வழங்கப்படுவதை முன்னறிவித்தார்கள். அப்போஸ்தலர் காலத்தில் கொடுக்கப்பட்ட ஆவிமழை முன்மாரியாகும். அதுதான் முன்மாரியின் துவக்கம். அதனுடைய விளைவு மகிமையுள்ளதாயிருந்தது.... ஆனால் இப்பூமியின் அறுவடை நெருங்குகிற கடைசி காலத்திலே ஆவிக்குரிய கிருபை விசேஷமான முறையிலே தமது சபையை மனுஷகுமாரனுடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தும்படி வழங்கப்படும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. இவ்விதமாக அளிக்கப்படுகிற ஆவியானவர் பின்மாரி பொழியப்படுவதற்கு ஒப்புமைப்படுத்தப்படுகிறார்.

சுவிசேஷம் தொனிக்க ஆரம்பித்த காலத்தில் தேவ வல்லமை எவ்விதம் வெளிக்காட்டப்பட்டதோ, அதைக்காட்டிலும் அதிகச் சிறப்பான வெளிப்பாட்டோடு, அந்த ஊழியம் முடிவடையப்போகிறது. முன்மாரியைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் சுவிசேஷ ஊழியத்தின் துவக்க காலத்தில் நிறைவேறியதைப்போலவே, முடிவு காலத்திலும் மீண்டும் பின்மாரியோடு நிறைவுபெறவிருக்கின்றது....

தேவ ஊழியர்கள், பிரகாசமான முகங்களோடு, முகங்களில் ஒளி நிறைந்தவர்களாக, பரிசுத்த அர்ப்பணிப்பின் பிரகாசத்தோடு, பரலோகத்தின்

செய்தியைக் கூறியறிவிக்க இடம்விட்டு இடம் விரைவார்கள். உலக முழுவதும் ஆயிரக்கணக்கானோர்மூலம் எச்சரிப்பு கொடுக்கப்படும். அற்புதங்கள் நிகழ்த்தப்படும். வியாதியஸ்தர் சுகமாக்கப்படுவார்கள். விசுவாசிகளை அடையாளங்களும் அற்புதங்களும் பின்தொடரும், பொய் அற்புதங்களை சாத்தானும் நிகழ்த்துவான். மனிதருக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியையும் இறங்கப்பண்ணுவான் (வெளி. 13:13). இவ்வாறாக தங்கள் பங்கைத் தெரிந்துகொள்ள இவ்வுலகின் குடிமக்கள் அனைவரும் கொண்டுவரப்படுவார்கள்.

மிகுந்த வாக்குவாதத்தைக் காட்டிலும் தேவ ஆவியின் அசைவாடுதலினாலே சுவிசேஷ செய்தி எடுத்துச்செல்லப்படும். சத்திய உபதேசம் கொடுக்கப்பட்டாயிற்று. விதை விதைக்கப்பட்டுவிட்டது. இனி அது முளைத்து பலன் கொடுக்கும்.... சத்திய ஒளி எல்லா இடங்களிலும் ஊடுருவிச் செல்லுகிறது. சத்தியம் தெளிவாகக் காணப்படுகிறது. தேவனுடைய உண்மையான மக்கள் அவர்களைக் கட்டியிருந்த கட்டுகளை அறுத்தெரிகிறார்கள். குடும்பத்தொடர்புகள் சபை உறவுகள் எல்லாம் இப்போது அவர்களைப் பிடித்துவைக்க சக்தியற்றுப் போய்விட்டது. இவைகள் எல்லாவற்றைக்காட்டிலும் சத்தியம் இப்போது விலைமதிப்புள்ளதாயிற்று. சத்தியத்திற்கு எதிரிடையாக இருக்கிற அனைத்துத் தடைகளையும் தாண்டி, பெருந்திரளான மக்கள் கூட்டம் ஆண்டவரின் பக்கம் தங்கள் பங்கைத் தெரிந்துகொள்கிறார்கள். ★

# அர்மெகதோன் யுத்தம்!

**“இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமா யிருக்கிறார்கள் என்றான்.”—வெளிப்படுத்தல் 17:14.**

ஏழாவது கலசம் ஊற்றப்படுவதைக்குறித்து நாம் படிக்கவேண்டியது அவசியம். தீமையின் வல்லமைகள் பெரிய போராட்டம் நடத்தாமல், தங்கள் எதிப்பைக் கைவிடாது. என்றாலும் இந்த அர்மெகதோன் யுத்தத்திலே தேவதிட்டத்திற்கு முக்கியமான ஒரு பங்கு இருக்கிறது. வெளிப்படுத்தல் 18—ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள தூதனின் மகிமையால் பூமி பிரகாசமாகும்பொழுது, நன்மை மற்றும் தீமையான அடிப்படைக் கூறுகள் விழித்துக்கொள்ளும். ஜீவனுள்ள தேவனுடைய சேனைகள் அப்பொழுது களத்தில் இறங்கும்.

தேவனுடைய ஊழியக்காரர் நெற்றிகளில் முத்திரை போடப்படும்வரைக்கும் நான்கு வல்லமையான தூதர்கள் பூமியின் வல்லமைகளைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள். பூமியின் இராஜ்யங்கள் யுத்தஞ்செய்ய ஆவலோடு இருக்கின்றன. ஆனால் தேவதூதர்களால் அவைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டுப்பாடு எடுக்கப்படும்போது, வேதனை நிறைந்த ஒரு இக்கட்டுக்காலம் வரும். பயங்கரமான—சாவிற்கேதுவான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படும். கப்பல்கள் தாங்கள் சுமந்து வரும் அனைத்து மக்களோடும் மகா ஆழங்களில் புதைக்கப்படும். சத்திய ஆவியைப் பெற்றிராத அனைவரும் சாத்தானுடைய தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்துகொள்வார்கள். ஆனாலும் அர்மெகதோன் யுத்தத்திற்கான காலம் வரும்வரையில் அவர்களும் தேவ வல்லமையினால் அடக்கப்பட்டிருப்பார்கள்.

தீமையின் அனைத்து வகையான வல்லமைகளும் முழுவீச்சில் வேலை செய்யும். தீய தூதர்கள் தீய மனிதர்களோடு தங்களது

வல்லமைகளை இணைத்துச் செயல்படுவார்கள். அவர்கள் தொடர்ந்து யுத்தஞ்செய்துகொண்டே இருப்பதினாலும், ஏமாற்றுவதிலும், சண்டை செய்வதிலும் மிகத் திறமையான வழிமுறைகளில் அனுபவத்தை முயன்று பெற்றிருப்பதினாலும், இக்காரியங்களிலே நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தங்களைப் பலப்படுத்திக்கொண்டிருப்பதினாலும் இந்தக் கடைசிப் போராட்டத்தை வெறித்தனமான யுத்தமின்றி விட்டுக்கொடுக்கமாட்டார்கள். இந்த முக்கியமான கட்டத்தில் உலக மக்கள் அனைவரும் உலகில் காணப்படும் இரு பிரிவுகளில் ஒரு பிரிவைத்தெரிந்துகொள்வார்கள். அர்மெகதோன் யுத்தம் நடத்தப்படும் அந்நாளிலே நாம் ஒருவரும் உறங்குகிறவர்களாகக் காணப்படக்கூடாது. தங்கள் விளக்குகளுக்கு எண்ணெய் வைத்திருந்த புத்தியுள்ள கன்னிகைகளைப்போல நாம் அதிக விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்....

பரிசுத்த ஆவியின் வல்லமை நம்மேல் இருக்கவேண்டும். சேனையின் அதிபதியாகிய கர்த்தர், பரலோகத் தூதர்களின் அதிபதியாக நின்று இந்த யுத்தத்தை நடத்துவார். குறிப்பிடத்தக்க பக்திவிநயமான சம்பவங்கள் நம்முன் இனி நடைபெறவிருக்கின்றன. எக்காளம் மீண்டும்மீண்டும் முழங்கப்படவிருக்கின்றது. வாதையின் கலசங்கள் பூமியின் குடிகள்மீது ஒன்றன்பின் ஒன்றாக ஊற்றப்படப்போகின்றன. ஆச்சரியமான ஆர்வமூட்டும் காட்சிகள் நம்மீது ஏற்கெனவே வந்துவிட்டன. ★

# வருங்காலச் சம்பவங்கள அதின் ஒழுங்கின்படி வருதல்!

**“சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர் களல்லவே.” —1 தெசலோனிக்கேயர் 5:4.**

ஒவ்வொரு மனிதனும் நித்திய ஜீவனுக்கோ அல்லது நித்திய அழிவிற்கோ தீர்க்கப்படும்வரை, கிறிஸ்து மகா பரிசுத்தஸ்தலத்தை விட்டு வெளியேறமாட்டார். அவர் மகா பரிசுத்தஸ்தலத்தில் தமது வேலையை முடித்து, பிரதான ஆசாரியனுடைய ஆடையைக் களைந்து, பழிவாங்கும் வஸ்திரத்தை உடுத்தும்வரை, தேவகோபம் இப்பூமியின்மேல் இறங்காது. பின்பு பிதாவிற்கும் மனிதனுக்குமிடையே நிற்பதினின்று இயேசு வெளியே அடியெடுத்துவைத்து விலகிநிற்பார். தேவன் மௌனமாயிராமல், சத்தியத்தை தள்ளிப்போட்டவர்கள்மீது தமது உக்கிரமான கோபத்தை ஊற்றுவார். இராஜ்யங்களின் கோபம் தேவனுடைய உக்கிரகோபம், நித்திரையடைந்தவர்களின் நியாயத்தீர்ப்பு எல்லாம் வெவ்வேறு காலங்களில்—தனித்தனியாக—ஒன்றன்பின் ஒன்றாக நடக்கிறதை நான் கண்டேன். அதோடு மிகாவேல் இன்னும் எழுந்து நிற்கவில்லை. ஒருபோதும் நடைபெற்றிராத அந்த இக்கட்டுக்காலம் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதையும் கண்டேன். தேசங்கள் இப்போது ஒன்றுக்கொன்று விரோதமாக எழும்பிக்கொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய பிரதான ஆசாரியர் ஆசரிப்புக்கூடார ஊழியத்தை முடித்தபின்பு எழுந்துநின்று பழிவாங்குதலின் ஆடையைத் தரித்துக்கொள்வார். அதின்பின்னர் கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படும்.

இயேசு தமது ஆசரிப்புக்கூடார ஊழியத்தை நிறைவேற்றும்வரை நான்கு தூதர்களும் காற்றுகளைப் பிடித்திருப்பார்கள் என்பதை நான் கண்டேன். அதற்குப்பின்னர், கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படும் என்பதையும் நான் கண்டேன். இந்த வாதைகள் நீதிமான்களுக்கு விரோதமாக துன்மார்க்கரை வெறிகொள்ளச்செய்யும். நாம்தான் தேவனுடைய

நியாயத்தீர்ப்புகளை அவர்கள்மேல் கொண்டுவந்துவிட்டோம் என்றும், நம்மை இப்பூமியிலிருந்து நீக்கிவிட்டால், வாதை நிறுத்தப்படும் என்றும் நினைத்துக் கொண்டார்கள். எனவே, பரிசுத்தவான்களை கொலைசெய்யத்தக்கதான ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதினிமித்தம் விடுதலைக்காக இரவும் பகலும் பரிசுத்தவான்கள் கதறிக்கொண்டிருந்தார்கள். இதுவே, யாக்கோபின் இக்கட்டுக்காலமாகும். பின்பு, மிகுந்த மனவேதனையோடு ஜெபித்த பரிசுத்தவான்கள் அனைவரும் தேவனுயை குரலால் விடுவிக்கப்பட்டனர்.

சிலுவை மரணத்திற்கு முன்பாகவே தாம் கொலைசெய்யப்படப் போவதையும், கல்லறையிலிருந்து உயிர்த்தெழப்போவதையும் நமது இரட்சகர் தமது சீடர்களுக்கு விளக்கிக் கூறினார்.... ஆனால் சீடர்களோ ரோம நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து உலகப்பிரகாரமான விடுதலையை எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களுடைய நம்பிக்கை நாயகனாயிருந்த கிறிஸ்து இப்படிப்பட்ட அவமானமுள்ள சாவைச் சந்திப்பார் என்கிற நினைவை அவர்களால் சகிக்க முடியவில்லை.... சீடர்களுக்கு கிறிஸ்து விளக்கிச் சொன்னதைப்போலவே, தீர்க்கதரிசனங்களின் வாயிலாக எதிர்காலம் நமக்கு முன்பாகத் திறக்கப்பட்டிருக்கிறது. கிருபையின் கால முடிவோடும் இக்கட்டுக்காலத்திற்கான ஆயத்தத்தோடும் தொடர்புடைய சம்பவங்கள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒருபோதும் வெளிப்படுத்தப்படவேயில்லை என்பதுபோல திரளான கூட்டத்தார், இந்த முக்கியமான சத்தியங்களைப் புரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். ★

செப்டம்பர் 8

# ஒரு சிறிது கால சமாதானம்!

**“சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை.”**

**—1 தெசலோனிக்கேயர் 5:3.**

மீட்பின் ஊழியம் முடிவடையும்பொழுது, இப்பூமியின்மேல் இக்கட்டு வந்துசேரும். அப்பொழுது நாடுகள் ஒன்றுக்கொன்று விரோதங்கொள்ளும். என்றாலும் மூன்றாம் தூதனின் வேலையை தடைசெய்யாதபடிக்கு அந்நாடுகள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்படும். மூன்றாம் தூதனின் தூதிற்கு வல்லமையளிக்கவும், கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும்போது நிலைத்துநிற்க பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்தவுந்தக்கதாக, பின்மாரி தேவ சமூகத்திலிருந்து ஊற்றப்படும்.

உலகவாசிகள் முழுமையான குழப்பத்திலிருக்கிறதை நான் கண்டேன். யுத்தம், இரத்தஞ்சிந்துதல், தனிமை, வறுமை, பஞ்சம் கொள்ளைநோய் ஆகிய அனைத்தும் தேசமெங்கும் வந்திருந்ததைக் கண்டேன். தேவ மக்களை இவைகள் சூழ்ந்துகொண்டபோது, அவர்கள் தங்களிடமிருந்த சிறியசிறிய பாரங்களையும் களைந்து போடத்தக்கதாக ஒருவருக்கொருவர் நெருங்கிவந்தனர். இதுவரை இருந்த சுயகௌரவம் செயலிழந்துபோனது. அந்த இடத்தை மனத்தாழ்மை பிடித்துக்கொண்டது. பாடுகள், கலக்கம், தனிமை எல்லாம் மனதை ஆட்கொள்ள, உணர்வுகளுக்கு அடிமைப்பட்டிருந்த விவேகமற்ற மனிதன் அறிவடைந்து, ஞானமாக—புத்தியாகச் செயல்பட்டான்.

என் கவனம் இந்த நிகழ்ச்சியிலிருந்து திசைதிருப்பப்பட்டது. மிகச்சொற்பமான சமாதானகாலமே இருந்ததைப்போலத் தெரிந்தது. மீண்டும் ஒருமுறை இவ்வுலகவாசிகள் எனக்குக் காண்பிக்கப்பட்டனர். மீண்டும் அனைத்தும் உச்சக்கட்ட குழப்பத்திலிருந்தன. சண்டை, யுத்தம், இரத்தஞ்சிந்துதல், பஞ்சம், கொள்ளைநோய் அனைத்தும் தீவிரமாக எல்லா இடங்களிலும் காணப்பட்டன. மற்ற நாடுகளும் இந்தக் குழப்பத்திலும் யுத்தத்திலும் பங்கெடுத்துக்கொண்டன. யுத்தத்தினால் பஞ்சம் ஏற்பட்டது.

வறுமையும் இரத்தஞ்சிந்தும் நடவடிக்கையும் கொள்ளை நோயை உண்டாக்கியது. அப்போது, "பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்து போயிற்று."

இப்பொழுது வரப்போகும் அழிவைக்குறித்து இந்த உலகம் எச்சரிக்கப்படும்வரை உலகில் நடைபெறவிருக்கும் சண்டைகளை தூதர்கள் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பூமியின்மேல் மோதத்தக்கதாக கடும்புயல் ஒன்று ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. காற்றுகளை விட்டுவிடும்படி, தேவன் தமது தூதர்களுக்குக் கட்டளையிடும்போது, எழுதுகோலால் விவரிக்கமுடியாத, போராட்ட காட்சிகள் வந்து சம்பவிக்கும்.

மிகக்குறுகிய இடைவேளை ஒன்று தேவனால் நமக்குக் கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அறியாமையிலே அழிந்துகொண்டிருக்கிற ஜனத்திற்காகச் செய்யும்படி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாத் திறமைகளும் உபயோகப்படுத்தப்படவேண்டும். ★

# சமாதானம், சௌக்கியம் என்பதுபற்றிய கூக்குரல்!

**"சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்."**
**—எரேமியா 6:14.**

போப்புமார்க்கமும் புரொட்டஸ்டாண்டுகளும் உலகப் பற்றுடையோரும் இணையும் இந்த மாபெரும் இயக்கம் உலகத்தின் மனந்திரும்புதலையும் வெகுகாலம் காத்திருந்த ஆயிரவருட அரசாட்சியையும்... கொண்டுவருமென்று எண்ணுகிறார்கள்.

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"—2 பேதுரு 3:10. உலகம் சார்ந்த தத்துவங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக்குறித்த பயத்தை மக்கள் மனதிலிருந்து அகற்றிக்கொண்டிருக்கும்பொழுது, மார்க்கதலைவர்கள் சமாதானமான, செழிப்பான நீடித்த நாட்களைக் குறித்துப் போதித்துக்கொண்டிருக்கும்பொழுது, உலகம் முழுவதும் வியாபாரத்திலும், உலக இன்பங்களிலும், நடுவதிலும், கட்டுவதிலும், விருந்துகளிலும், களியாட்டங்களிலும் மூழ்கியிருக்கும்பொழுது, தேவனுடைய எச்சரிப்புகளை உதறித்தள்ளி அவருடைய ஊழியக்காரரை பரியாசம்பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது "அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை"—1 தெசலோனிக்கேயர் 5:3.

சித்தீம் பள்ளத்தாக்கிலே வசித்தவர்களைப்போல, மக்கள் சமாதானத்தையும் செழிப்பையுங்குறித்து கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள். "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ" என்பதுதான் தேவனுடைய தூதுர்களிடமிருந்து வருகின்ற எச்சரிப்பு. ஆனால் மற்ற குரல்களெல்லாம்: "பரபரப்படையவேண்டாம், பயப்படத்தேவையில்லை" என்கின்றன. திரள்கூட்டமானவர்கள், "சமாதானமும் சௌக்கியமும்" என்று சொல்லும்பொழுது, கீழ்ப்படியாதவர்கள் மேல்

அழிவு சடிதியாக வருகிறது என்று பரலோகம் உறுதிபட அறிவிக்கிறது. அழிவிற்கு முந்தின இரவிலே, சமவெளியிலிருந்த அந்தப் பட்டணங்கள், கட்டுக்கடங்காத களிப்பிலே மூழ்கி, தேவனுடைய ஊழியக்காரரின் பயங்களையும் எச்சரிப்புகளையும் பரியாசம்பண்ணிக்கொண்டிருந்தன. ஆனால், அந்தப் பரியாசக்காரர்கள் அக்கினியிலே அழிந்துபோனார்கள். அதே இராத்திரியிலே தானே கிருபையின் கதவு என்றென்றைக்குமாக சோதோமிலிருந்த நிர்விசாரமான துன்மார்க்கருக்கு மூடப்பட்டது. தேவன் தம்மை எப்போதும் பரியாசம்பண்ணவொட்டார்.... நீண்ட காலமாக அசட்டை பண்ணப்படவும் அனுமதிக்கமாட்டார். "இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது"—ஏசாயா 13:9. உலகத்தின் பெருந்திரள்கூட்டம் தேவனுடைய இரக்கத்தை உதறித்தள்ளினவர்கள். அவர்கள் மீளமுடியாத விரைந்துவரும் அழிவிலே அமிழ்ந்துபோவார்கள். ஆனால், எச்சரிப்புகளுக்குச் செவிகொடுக்கிறவர்களோ, "உன்னதமானவரின் மறைவில்" இருந்து, சர்வவல்லவரின் நிழலில் தங்குவார்கள். அவருடைய சத்தியம் அவர்களுக்கு பரிசையும் கேடகமுமாகும். ★

# தேவனுடைய வேலை முடிவடைகிறது!

**"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கு முள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." —மத்தேயு 24:14.**

இந்த பயபக்தியான பரிசுத்தமான எச்சரிப்பின் தூது மிகவும் கடினமான பணித்தளங்களிலும், இந்த பெரிய முத்தூதின் ஒளி பிரகாசித்திராத இடங்களிலும் கூறியறிவிக்கப்படவேண்டும். ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கான கடைசி அழைப்பை ஒவ்வொருவரும் கேட்கவேண்டும். நகரத்திலிருந்து நகரத்திற்கும், பட்டணத்திலிருந்து பட்டணத்திற்கும், நாட்டிலிருந்து நாட்டிற்கும் இந்த நிகழ்கால சத்தியம் கூறியறிவிக்கப்படவேண்டும். வெளிப்பகட்டோடு அல்ல, ஆவியின் வல்லமையோடு கூறியறிவிக்கப்படவேண்டும்.

தேவ கிருபையின் புதுப்பிக்கும் வல்லமையின் தூது பல்வேறு தட்ப வெப்ப நிலையுடைய அனைத்து நாடுகளுக்கும், உலகம் முழுவதும் சத்தியத்தினால் சுற்றி வளைக்கப்படத்தக்கதாக கொண்டுசெல்லப்படும். முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களில் எல்லா ஜாதி, கோத்திரம், பாஷை, ஜனக்கூட்டத்தாரும் இருப்பார்கள். ஒவ்வொரு தேசத்திலுமிருந்து சேர்க்கப்படப்போகிற ஆண்களும் பெண்களும் தேவனுடைய சிங்காசனத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாக நின்று, "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" (வெளி. 7:10) என்பார்கள்.

ஆண்டவருடைய சத்தியத்தின் மகிமையினாலே பூமிமுழுவதும் பிரகாசமாக்கப்படும். அந்த ஒளி எல்லா மக்களுக்கும் எல்லா தேசத்திற்கும் பிரகாசிக்கவேண்டும். அதைப் பெற்றுக்கொண்டவர் களிடமிருந்து அந்த ஒளி பிரகாசிக்கவேண்டும். விடிவெள்ளி நம்மேல் உதித்திருக்கிறது. நாம் அதின் வெளிச்சத்தை இருளிலிருக்கிற மக்களின் பாதைகள்மேல் காட்டவேண்டும்.

ஒரு நெருக்கடியான காலக்கட்டம் நம்மேல் வந்திருக்கிறது. நாம் இப்போது பரிசுத்தஆவியானவரின் வல்லமையினாலே கடைசிக்

காலத்திற்குரிய மாபெரும் சத்தியங்களைக் கூறி அறிவிக்கவேண்டும். வெகு சீக்கிரம் ஒவ்வொருவரும் எச்சரிப்பைக் கேள்விப்பட்டு, தீர்மானம் எடுப்பார்கள். அப்பொழுது முடிவு வரும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் தூதர்களுடைய தூதுகளில் பொதிந்திருக்கிற சத்தியம் ஒவ்வொரு ஜாதிக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் ஜனக்கூட்டத்தாருக்கும் போய்ச் சேரவேண்டும். ஒவ்வொரு கண்டங்களிலும் பரவியிருக்கிற இருளை அது குறைக்கவேண்டும். அது கடல்களிலிருக்கிற தீவுகளுக்கும் சென்று சேரவேண்டும். இந்த வேலையிலே தாமதம் கூடாது.

நமது கோட்பாட்டுச் சொல்லானது, முன்னேறு! எப்போதும் முன்னேறு! என்பதே. பரலோகத்தின் தூதர்கள் வழியை ஆயத்தப்படுத்தத்தக்கதாக நமக்கு முன்னே செல்வார்கள். முழு உலகமும் ஆண்டவருடைய மகிமையினால் பிரகாசமடையும்வரை, நமக்கு அப்பாலிருக்கிற இடங்களைக்குறித்த பாரம் நம்மைவிட்டு ஒருபோதும் அகலக்கூடாது. ★

# தேவன் தமது மக்களுக்காக குறுக்கிடுகிறார்!

**“சகல ஜனங்களே, கேளுங்கள்; பூமியே, அதிலுள்ளவைகளே, செவி கொடுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர், தம்முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே, உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருப்பார். இதோ, கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கிப் பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.” —மீகா 1:2,3.**

நெருக்கடியான ஒரு காலக்கட்டத்தில்தான் குணம் வெளிப்படுகின்றது.... ஆத்துமாவின் தேவை சந்திக்கப்படக்கூடாத விதத்தில் பிந்திவிட்ட நிலையில், மானிடருக்காக நியமிக்கப்பட்ட அந்த கிருபையின் காலமுடிவிலே, மிகப்பெரிய கடைசிச் சோதனை வருகிறது.

நாடுகளைக்குறித்து தீர்க்கவேண்டிய கணக்குகள் ஆண்டவரிடம் இருக்கிறது. இந்த உலகின் வரலாற்றிலே, அனைத்து நூற்றாண்டுகளின் நெடுகிலும் தீமையின் கூட்டாளிகள் தேவ கோபத்தை, தேவனுடைய உக்கிரகோபாக்கினையின் நாளுக்கெதிராக சேர்த்துவைத்துக்கொண்டிருக்கிறார்கள். காலம் நிறைவேறும்போது, அக்கிரமம் தேவனுடைய இரக்கத்தின் எல்லையை எட்டுகிறபோது, அவருடைய பொறுமை முடிவடையும். பரலோகப் புத்தகங்களிலே சேகரிக்கப்பட்டிருக்கிற பாவங்களின் தொகை, மீறுதலின் விளிம்பைத் தொடும்போது, இரக்கம் கலக்கப்பட்டிராத தேவனுடைய உக்கிரகோபம் வந்துசேரும். அப்போதுதான் தெய்வீகப் பொறுமையை அலட்சியப்படுத்துவது எத்தனை பயங்கரமான காரியம் என்பது தெளிவாகும். தேவனுடைய கற்பனைகளை ஒன்றுமில்லாமற் போகப்பண்ண, நாடுகள் ஒன்றுசேரும்பொழுது, அந்த நெருக்கடி அதன் உச்சக்கட்டத்தை அடையும்.

அக்கிரமம் மிகுதியாவதினாலே, நீதிமான்கள் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பிக்கிற நாட்கள் வரும். தெய்வீக வல்லமையைத் தவிர வேறு எதுவும் தீய மக்களோடு இணைக்கப்பட்டிருக்கிற சாத்தானுடைய இறுமாப்பைத் தகர்க்கமுடியாது. சபைக்கு வருகிற அந்த மாபெரும் ஆபத்தான மணிவேளையிலே சபைக்காக உண்மையான மீதமானவர்களால் ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்படும். துன்மார்க்கரின் பாவம் அதின் உச்சக்கட்டத்தை எட்டுகிற அந்த வேளையில்தானே, தேவன் தமது பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களுக்குப் பதிலளிப்பார். "இரவும் பகலும் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக, அநேக நாள் பொறுத்திருந்தபோதிலும் அவர் பழிவாங்குவார்."

உண்மைக்குப் பதிலாகப் பொய்யை நியமிப்பதே இந்த நாடகத்தின் கடைசிச் செயலாக இருக்கும். இந்த நியமனத்தை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் தம்மை வெளிப்படுத்துவார். மனிதனுடைய சட்டங்கள் தேவனுடைய சட்டங்களுக்கும் மேலாக உயர்த்தப்படும்போது, இவ்வுலகின் வல்லமைகள் வாரத்தின் முதல்நாளை ஆசரிக்கும்படி மனிதரைக் கட்டாயப்படுத்தும்போது, தமது வேலையை நடப்பிக்கத்தக்கதான வேளை தேவனுக்கு வந்ததென்பதை அறியுங்கள். அவர் தமது மாட்சிமையிலே எழும்புவார். பூமியைப் பயங்கரமாகக் குலுக்குவார். உலகவாசிகளை, அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தம் தண்டிப்பதற்காக, தம்முடைய ஸ்தானத்திலிருந்து எழுந்தருளுவார். பூமி தன்னில் கொலையுண்டவர்களை ஒப்புக்கொடுக்கும். அது இனி அவர்களை மறைக்காது. ★

# மனிதர்களுக்கான தவணையின் காலம் முடிவடைகிறது!

**“அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமா யிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.” —வெளிப்படுத்தல் 22:11.**

நுட்ப நியாயவிசாரணையின் வேலை முடிவடையும்போது, அத்தனைபேருக்கும் வாழ்வா அல்லது சாவா என்கிற காரியம் தீர்மானிக்கப்பட்டுவிடும். ஆண்டவர் வானத்தின் மேகங்கள்மேல் வருவதற்குச் சிறிது காலத்திற்குமுன் கிருபையின் காலம் முடிவடைகிறது.

பரியாசக்காரர் இயற்கையைச் சுட்டிக்காட்டினார்கள். ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற மாறாத பருவகாலங்கள், ஒருபோதும் மழைபொழியாத நீல வானங்கள் (ஜலப்பிரளயத்திற்கு முந்தைய காலத்தில் மழை கிடையாது), இரவின் பனியினாலே புதுப்பிக்கப்படுகிற பச்சை வயல்கள், இவைகளையெல்லாம் சுட்டிக்காண்பித்து அவரை (நோவாவை) கட்டுப்பாடற்ற உணர்ச்சி ஆர்வமிகுந்த ஒரு மனிதரென்று கூறி நிந்தித்தார்கள். முன்னைவிட சிற்றின்ப கேளிக்கைகளை நாடித்தேடுவதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். பொல்லாத வழிகளிலே முன்னைவிட தீவிரமாக ஈடுபட்டார்கள். எனினும், அவர்களுடைய அவிசுவாசம் முன்குறிக்கப்பட்ட சம்பவத்தைத் தடைசெய்யமுடியவில்லை. மனந்திரும்புவதற்குப் போதுமான சந்தர்ப்பங்களைக் கொடுத்து, அவர்களுடைய துன்மார்க்கத்தை ஆண்டவர் வெகு காலம் பொறுத்திருந்தார். ஆனால், நியமிக்கப்பட்ட காலம் வந்தபோது, அவருடைய இரக்கத்தை தள்ளிப்போட்டவர்கள் மீது அவருடைய நியாயத்தீர்ப்பு (தண்டனைகள்) வந்தது.

இதேபோன்றதொரு அவிசுவாசம் அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்தும் நிலவும் என்று கிறிஸ்து உறுதிபடக்கூறுகிறார். நோவாவின் காலத்திலே “வெள்ளம் வந்து அனைவரையும்

வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்த" மக்களைப்போலவே, "மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" (மத்தேயு 24:39) என்று நம் ஆண்டவரே சொல்லியிருக்கிறார். தேவனுடைய மக்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் உலகத்தோடு தங்களை இணைத்துக்கொண்டு, அவர்களைப்போலவே வாழ்ந்து, விலக்கப்பட்ட களியாட்டுகளிலே தங்களை இணைத்துக்கொள்ளும்பொழுது, உலகத்தின் ஆடம்பரம் சபையின் ஆடம்பரமாகும்பொழுது, பெண் கொள்வதிலும் கொடுப்பதிலும் மூழ்கி, உலகப்பிரகாரமான பல செழுமையின் ஆண்டுகளை எதிர்நோக்கியிருக்கும்பொழுது, வானத்திலே திடீரென்று மின்னல் ஒளிர்கிறவண்ணம், அவர்களுடைய பிரகாசமான எதிர்பார்ப்புகளும் மாயையான நம்பிக்கைகளும் முடிவிற்கு வரும்.

கிருபையின் காலமுடிவில் நடைபெறப்போகிற சம்பவங்களும் இக்கட்டுக்காலத்திற்குச் செய்யவேண்டிய ஆயத்தங்களும் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வெகு திரளானோர் இந்த முக்கியமான சத்தியங்களைப்பற்றி ஒன்றுமே ஒருபோதும் கேள்விப்பட்டிராததுபோல, ஒன்றையும் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்களை இரட்சிப்பிற்கேற்ற ஞானவான்க ளாக்கத்தக்கதாக வருகின்ற ஒவ்வொரு எண்ணங்களையும் பிடுங்கிப்போடும்படி, சாத்தான் கவனித்துக்கொண்டே இருக்கிறான். முடிவாக, அந்த இக்கட்டுக்காலம் அவர்களை ஆயத்தப் படாதவர்களாகவே கண்டுகொள்ளும். ★

# தவணையின் கால முடிவு கவனிப்பாரற்று கடந்துசெல்கிறது!

**“சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.” –1 தெசலோனிக்கேயர் 5:1,2.**

நீதிமான்களும் துன்மார்க்கரும் அவர்களது மானிடத்தன்மையிலே (சாவுக்குரிய) இன்னும் தொடர்ந்து பூமியிலே வாழ்ந்துகொண்டிருப்பார்கள். திரும்பப்பெறக்கூடாத அந்த வாக்கியம் பரலோகக் கூடாரத்திலே சொல்லப்படும்வரைக்கும் மனிதர் நட்டும் கட்டியும், குடித்தும், புசித்தும் அந்த தீர்மானத்தைக்குறித்து ஒன்றும் உணராதவர்களாயிருப்பார்கள். ஜலப்பிரளயத்திற்கு முன்பு, நோவா பேழைக்குள் பிரவேசித்தபின்பு, தேவன் அவனை உள்ளேயும், தேவபயம் இல்லாதவர்களை வெளியேயும் வைத்து அடைத்தார். ஆனால் அந்த ஏழு நாட்களும் தங்களுக்கு அழிவு நிச்சயிக்கப்பட்டுவிட்டது என்பதை அறியாத அம்மக்கள் தங்களுடைய விசாரமற்ற களியாட்டங்களிலே பொழுதுபோக்கி, நேரிடப்போகிற நியாயத்தீர்ப்பைக்குறித்த எச்சரிப்புகளை பரிகாசம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். “இப்படியே மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்” என்று மீட்பர் சொல்லுகிறார். அமைதியான நடு இராத்திரியில் திருடனைப்போல, எவரும் அறியாதவண்ணம், ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தீர்மானிக்கிற மணிவேளை கடந்துபோகும். பாவிகளுக்குக் கொடுக்கப்பட்ட இரக்கத்தின் சலுகை எடுபட்டுப்போகும்.

தேவனுடைய உக்கிரகோபம் உந்தப்படுவதினால் மாத்திரமே விழிப்படையத்தக்கதான அந்தப் பொய்யான பாதுகாப்பை நம்பி, மக்கள் தாலாட்டப்பட்ட நிலையிலிருக்கிறார்கள்.

காலங்களின் முடிவிலே, நியாயத்தீர்ப்பினிமித்தம் ஆண்டவர் இந்த பூமியின்மேல் நடந்துசெல்லவிருக்கிறார். பயங்கரமான வாதைகள்

பூமியின்மேல் வந்துவிழும். அப்பொழுது, தேவனுடைய வார்த்தையை அவமதித்து, அதை மிகவும் அற்பமாக மதிப்பிட்டவர்கள் அதைத் தேட ஒரு சமுத்திரம் தொடங்கி மறு சமுத்திரம்மட்டும் வடதிசை தொடங்கிக் கீழ்த்திசைமட்டும், அங்கும் இங்கும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற்போவார்கள்.... தேவனுடைய ஊழியக்காரர் தங்கள் கடைசி வேலையைச் செய்தாயிற்று. தங்கள் கடைசி விண்ணப்பங்களை ஏறெடுத்தாயிற்று. கலகமுள்ள சபைக்காகவும், பக்தியற்ற மக்களுக்காகவும் அவர்களுடைய கடைசியான—கசப்பான கண்ணீர்த் துளிகளையும் சிந்தியாகிவிட்டது.

காலங்களைக் கடந்துவந்த கர்த்தருடைய கண்கள் நம்முடைய காலத்தைப்பார்க்கும்போது, "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்" (லூக்கா 19:42) என்கிறார். அவருடைய பிரமாணத்தை வைத்துப் பாதுகாக்கின்ற பெட்டகமாக வைக்கப்பட்டிருக்கிற தேவனுடைய சபையே, இன்னும் இது உன்னுடைய நாளாகவே இருக்கிறது. நம்பிக்கையின் தவணையின் நாளாகயிருக்கிற இந்தநாள், அதின் முடிவிற்கு வந்துகொண்டிருக்கிறது. சூரியன் வேகமாக அஸ்தமித்துக் கொண்டிருக்கிறது. அந்தநாள் முடிந்துவிடும்வரை, "உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறியமாட்டாயோ!" "இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது" (லூக்கா 19:42) என்கிற மாற்றமுடியாத அந்த நியாயத்தீர்ப்பு உன்மேல் சொல்லப்படவேண்டுமோ? ★

# ஒருபோதும் கண்டிராத ஒரு இக்கட்டுக்காலம்!

**"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்." —தானியேல் 12:1.**

மூன்றாம் தூதனின் தூது முடிவடைகிறபோது, பூமியின் பாவிகளுக்காக இரக்கம் இனி ஒருபோதும் மன்றாடுகிறதில்லை. தேவனுடைய மக்கள் தங்களுடைய வேலையை நிறைவேற்றி விட்டார்கள். அவர்கள் "பின்மாரியை" அதாவது "தேவசமூகத்தினின்று வருகிற இளைப்பாறுதலைப்" பெற்றுக்கொண்டுவிட்டார்கள். தங்கள்முன் இருக்கிற இக்கட்டுக்காலத்திற்காக ஆயத்தமாகிவிட்டார்கள். பரலோகத்தில் தூதர்கள் அங்குமிங்குமாக அவசரமாகச் செல்லுகிறார்கள். பூமியிலிருந்து திரும்புகிற ஒரு தூதன் வேலை முடிவடைந்துவிட்டது என்று அறிவிக்கிறான். பூமியின்மேல் கடைசி சோதனை அனுப்பப்பட்டாயிற்று. தெய்வீகப் பிரமாணங்களுக்கு உண்மையாயிருந்தவர்கள், "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப்" பெற்றுக்கொண்டார்கள். பின்பு, இயேசு தமது ஆசரிப்பபுக்கூடார மத்தியஸ்த வேலையை முடிக்கிறார். தமது கரங்களை உயர்த்தி, "ஆயிற்று" என்று முழங்குகிறார்....

அவர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து வெளியேறினபோது, இருள் பூமியின் குடிகளைச் சூழ்ந்துகொண்டது. அந்த பயங்கரமான நேரத்திலே, மத்தியஸ்தர் இல்லாமல் நீதிமான்கள் பரிசுத்த தேவனுக்கு முன்பாக நிற்கவேண்டும். துன்மார்க்கர்மேல் விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்பட்டது. மனதைக் கடினப்படுத்தி, மனந்திரும்பாதிருந்த மக்கள்மீது சாத்தானுக்கு முழு அதிகாரமும் கிடைக்கிறது. தேவனுழைடய நீடிய பொறுமை முடிவடைந்து விடுகிறது. உலகம் அவரது இரக்கத்தைத் தள்ளிப்போட்டது. அவரது அன்பை இகழ்ந்தது. அவரது கற்பனைகளை

மிதித்துப்போட்டது. துன்மார்க்கர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின் காலத்தை கடந்துவிட்டார்கள். தொடர்ந்து மறுக்கப்பட்ட தேவ ஆவியானவர், கடைசியாக எடுத்துக்கொள்ளப்பட்டார். தெய்வீகக் கிருபையின் மறைவு இல்லாதபொழுது, துன்மார்க்கருக்கு எதிரான வேறு பாதுகாப்பு அவர்களுக்கு இல்லை. அப்போது, ஒரு மாபெரும் இறுதி இக்கட்டிற்குள்ளாக சாத்தான் பூமியின் குடிகள் அனைவரையும் அமிழ்த்திவிடுவான். மானிட இச்சைகளினால் ஏற்படும் அந்தக் கொடிய வெறித்தனத்தை கட்டுப்படுத்துவதை தேவ தூதர்கள் நிறுத்திவிட்டார்கள். சண்டைகளுக்கான எல்லா வழிமுறைகளும் கட்டவிழ்த்துவிடப்படும். முந்தைய எருசலேமின்மேல் வந்த அழிவைக்காட்டிலும், மிகவும் பயங்கரமான அழிவிற்குள் உலகம் முழுவதும் சிக்கிக்கொள்ளும்.

கைகளில் சுத்தமுள்ளவர்களும் இருதயத்தில் மாசில்லாதவர்களும் மாத்திரமே அந்த சோதனைக்காலத்தில் நிலைத்து நிற்பார்கள்.... நான்கு தூதர்களும் காற்றுகளைப் பிடித்திருக்கிற இந்த நேரமே நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக்கொள்வதற்கேற்ற சரியான நேரம்.

# நான்கு காற்றுகளும் அவிழ்த்துவிடப்படல்!

**“நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.”**

**–வெளிப்படுத்தல் 7:3.**

சாத்தானுக்கு ஆதரவாக பெருந்திரள்கூட்டம் இருப்பதினாலே, இந்த உலகத்திலே அவன் சர்வாதிகாரம் செலுத்துவதை உரிமை கொண்டாடாதபடிக்கு, அதை மறுத்தவர்களாய் தேவதூதர்கள் உலகத்தைச் சுற்றி வளைக்கிறார்கள். அவர்களது குரல்களை நாம் கேட்கிறதில்லை. நம்முடைய மானிட கண்களால் அந்தத் தூதர்களை நாம் காணமுடிகிறதில்லை. எனினும் அவர்களுடைய கரங்கள் உலகத்தைச் சுற்றிலும் இணைக்கப்பபட்டிருக்கின்றன. நித்திரையற்ற ஜாக்கிரதையோடு, தேவனுடைய மக்கள் முத்திரையைப் பெற்றுக்கொள்ளும்வரையிலும், சாத்தானுடைய சேனைகளைத் தடுத்து நிறுத்திக்கொண்டேயிருக்கிறார்கள்.

இயற்கையின் மூலக்கூறுகளான நிலநடுக்கம், புயல் மற்றும் அரசியல் சச்சரவு ஆகியவற்றை நான்கு தூதர்களும் பிடித்திருப்பதாக யோவான் காண்கிறார். அவைகளை விட்டுவிடும்படிக்கான கட்டளையை ஆண்டவர் கொடுக்கும்வரை, அந்தக் காற்றுகள் தேவனுடைய கட்டுப்பாட்டிற்கடியிலே இருக்கும். அங்கேதான் தேவனுடைய சபையின் பாதுகாப்பு இருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்கிற தேவதூதர்கள், ஊழியக்காரர் தங்கள் நெற்றியிலே முத்திரையைப் பெற்றுக்கொள்ளும்வரைக்கும், பூமியின் மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது காற்று அடியாதபடிக்கு பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கிறார்கள்.

உயிரோடிருக்கிற அனைவருக்கும் இந்தக்காலம் திணரடிக்கும் அளவிற்கு கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒரு முக்கியமான காலமாகும். ஆளுநர்களும் அரசியல் வல்லுநர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமான

பொறுப்பிலும் அதிகாரத்திலுமிருக்கும் மனிதரும், அனைத்து வகுப்பையும் சார்ந்த சிந்திக்கும் ஆண்களும் பெண்களும் நம்மைச்சுற்றி நிகழ்கிற சம்பவங்களிலே தங்களது கவனத்தை பதித்திருக்கிறார்கள். நாடுகளுக்கிடையே நிலவுகிற இறுக்கமான— அமைதியற்ற உறவுகளை அவர்கள் விழிப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பூமியின் ஒவ்வொரு மூலக்கூறையும் மும்முரமாக ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் காரியங்களை கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இறுதியாக—உறுதியாக ஏதோ ஒரு மாபெரும் சம்பவம் நடைபெறவிருக்கிறது என்பதையும், இந்த உலகம் ஒரு மாபெரும் நெருக்கடியின் விளிம்பில் நிற்கிறது என்பதையும், நன்றாக விளங்கிக்கொள்கிறார்கள்.

உலகம் அதின்மேல் வரும் அழிவைக்குறித்து எச்சரிக்கப்படும்படி, தூதர்கள் அழிவின் காற்றுகளை இப்பொழுது பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், ஒரு பெரிய புயல், பூமியின்மேல் மோதத்தக்கதாக ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. காற்றுகளை அவிழ்த்துவிடுமாறு தேவன் தமது தூதர்களுக்கு கட்டளையிடும்போது, எந்த பேனாவினாலும் விவரிக்கமுடியாத அளவிற்கு, மகா பயங்கரமான பூசல்கள் இவ்வுலகில் எழும்பும்....

தேவன் ஒரு சிறிய இடைவெளியின் நேரத்தை நமக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிறார். பரலோகத்தால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு திறமையையும் அறியாமையிலே அழிந்துகொண்டிருக்கிற மக்களுக்காக, செய்யும்படி ஆண்டவர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தைச் செய்ய நாம் உபயோகிக்கவேண்டும்.... இந்த எச்சரிப்பின் செய்தி உலகம் முழுவதிலும் தொனிக்கவேண்டும்.... ஒரு பெரிய ஊழியம் நடைபெறவேண்டும். இக்காலத்திற்கான சத்தியத்தை அறிந்த மக்களிடம் இந்த ஊழியப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது....★

செப்டம்பர் 16

# கடைசி ஏழு வாதைகள் விழ ஆரம்பிக்கின்றன!

**"அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன்."**

**–வெளிப்படுத்தல் 16:1.**

ஆசரிப்புக்கூடாரத்திலே கிறிஸ்து மத்தியஸ்த ஊழியத்தை முடிக்கும்போது, மிருகத்தை வணங்கி அதின் முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு (வெளி. 14:9,10) எதிரான கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட ஆண்டவருடைய உக்கிரம் ஊற்றப்படும். இஸ்ரவேலரை விடுவிக்கும்முன்பு அனுப்பப்பட்ட வாதைகள், தேவன், தமது மக்களை கடைசியாக விடுதலைசெய்யும்முன்னர் அனுப்பப்படப்போகிற பயங்கரமான வாதைகளுக்கு ஒத்ததாகும். அந்த பயங்கரமான காட்சியை விவரிக்கும்பொழுது, "மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று." "சமுத்திரத்திலே ... அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின" "ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ... இரத்தமாயின" என்று யோவான் எழுதுகிறார். இந்த பயங்கரமான தண்டனைகள்மூலமாக, தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் நீதியானவைகள் என்பதும் முற்றிலுமாக மெய்பிக்கப்பட்டது. தேவனுடைய தூதன், "அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்" "தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்" (வெளி. 16:6,5) என்று கூறினான். தேவனுடைய மக்களை சாவிற்கு ஒப்புக்கொடுத்ததினிமித்தம் அவர்கள் சொந்தக் கைகளினாலேயே கொலைசெய்ததைப்போல தங்கள்மேல் ஆக்கினையைக் குவித்துக்கொண்டார்கள்.

அடுத்த வாதையில், "தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது ... மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு"—வெளி. 16:8,9.

இந்த வாதைகள் உலகம் முழுவதையும் ஒரே நேரத்தில் பாதிக்காது. அவ்வாறு பாதிக்குமானால் பூமியின் குடிகள் அனைவரும் முற்றிலுமாக அழிந்துபோய்விடுவார்கள். என்றாலும் இதுவரையிலும் மனிதர் அனுபவித்திராத கொடிய—பயங்கரமான வாதைகளும் இருக்கும். கிருபையின் காலமுடிவிற்குமுன்னர், மனிதருக்குக் கொடுக்கப்பட்ட அனைத்து தண்டனைகளிலும் இரக்கம் கலந்திருந்தது. பரிந்துபேசிக்கொண்டிருந்த கிறிஸ்துவின் இரத்தம், பாவங்களுக்கான முழுமையான தண்டனையையும் பெறாதபடிக்கு பாவிகளை மறைத்துக்கொண்டிருந்தது. ஆனால் கடைசி நியாயத்தீர்ப்பிலே, இரக்கம் கலந்திராத உக்கிரகோபம் பூமியின்மேல் ஊற்றப்படும்.

தேவனின் உக்கிரகோபம் விரைவாக வரவிருக்கிறது. மீறினவர்களை அவர் கண்டிக்க ஆரம்பித்தபின்பு இறுதிவரை எத்தகைய இடைவெளியுமின்றி தொடர்ந்துசெல்லும். தேவனுடைய கோபாக்கினையின் புயல் சூழ்ந்துகொண்டிருக்கிறது. தேவனுடைய அன்பிலே சத்தியத்தின்மூலமாக பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மாத்திரமே நிலைத்து நிற்பார்கள். அழிவு கடந்துபோகுமட்டும் அவர்கள் தேவனிலே கிறிஸ்துவிற்குள் மறைத்துவைக்கப்படுவார்கள். ★

# மரணதண்டனைக்கான சட்டம் இயற்றப்படுதல்!

**“மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது.” —வெளிப்படுத்தல் 13:15.**

இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு வெளியேறும்போது, இதுவரை அதிகாரிகளிடமிருந்த—மக்களிடமிருந்த—அவரது கட்டுப்படுத்துகின்ற தேவ ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுகிறார். எனவே, அதிகாரிகளும் மக்களும் தீயதூதர்களின் கட்டுப்பாட்டிற்கு விட்டுவிடப்படுவர். அப்போது, சாத்தானுடைய ஆலோசனை மற்றும் வழிமுறைகளின்படியாக, பயங்கரமான சட்டங்கள் பிறப்பிக்கப்படும். காலம்மட்டும் குறைக்கப்படாதிருக்குமானால் எவரும் உயிரோடிருக்கக்கூடாதபடிக்கு அழிக்கப்பட்டுப்போவார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்திலே இயேசுவின் வேலை முடிவுபெறும் வரைக்கும் நான்கு தூதர்களும் நான்கு காற்றுகளையும் பிடித்திருப்பார்கள். பின்பு, கடைசி ஏழு வாதைகளும் வரும் என்பதை நான் கண்டேன். இந்த வாதைகள் நீதிமான்களுக்கெதிராக துன்மார்க்கரை கோபவெறிகொள்ளச்செய்தது. நாம்தான் அந்த வாதைகளை அவர்கள்மேல் கொண்டுவந்தோம் என்று நினைத்தார்கள். எனவே ஒருவேளை நம்மை இந்த உலகத்திலிருந்து அகற்றிவிட்டால் வாதை நின்றுபோகும் என்று யோசித்தார்கள். விடுதலைக்காக இரவும் பகலும் பரிசுத்தவான்களைக் கதறச்செய்த சட்டம் இப்படியாகப் பிறந்தது. இதுவே, யாக்கோபின் இக்கட்டுக்காலம்.

உலகை தலைமை தாங்குகிற மனிதர்கள் ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்தார்கள். சாத்தானும் அவனுடைய தூதர்களும் அவர்களைச் சுற்றிலும் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். எழுதப்பட்டவைகளை நான் பார்த்தேன். அவற்றின் நகல்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. அதில், பரிசுத்தவான்கள் தங்கள் தனித்தன்மைவாய்ந்த

விசுவாசத்தை விட்டுவிட்டு, ஓய்வுநாள் ஆசரிப்பைக் கைவிட்டு, வாரத்தின் முதல்நாளை ஆசரிக்காவிடில் குறிப்பிட்ட காலத்திற்குப்பின்பு, அவர்களைக் கொன்றுபோட பொதுமக்களுக்குச் சுதந்திரம் தருவதாக எழுதியிருந்தது.

கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற மக்களைக் கொன்றுபோட ஒரு பொதுவான சட்டத்திற்கான காலம் குறிக்கப்பட்டிருந்தபோதிலும், அக்குறிப்பிட்ட காலத்திற்குமுன்பே அவர்களைக் கொன்றுபோட எதிரிகள் விரும்பினார்கள். ஆனால் உண்மையுள்ள ஆத்துமாவைச் சுற்றிலும் எவரும் கடந்துசெல்ல முடியாது. பட்டணங்களிலிருந்து கிராமங்களுக்குத் தப்பிச்செல்லும்போது, சிலர் தாக்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு விரோதமாக உயர்த்தப்பட்ட பட்டயம் வலிமையிழந்து ஒரு வைக்கோலைப்போல முறிந்து—சக்தியற்று விழுந்தது. மற்றவர்கள் யுத்த வீரர்கள்போல காணப்பட்ட தூதர்களால் பாதுகாக்கப்பட்டனர்.

ஒருவேளை மனிதர்கள் பரலோகப் பார்வையோடு பார்த்தார்களானால், கிறிஸ்துவின் பொறுமையின் வசனத்தைக் காத்துக்கொண்ட பிள்ளைகளைச் சுற்றிலும் வல்லமையான தூதர் கூட்டங்கள் நிற்கிறதைக் காண்பார்கள். அவர்களுடைய மனவேதனையையும் அவர்களுடைய ஜெபங்களையும் அந்தத் தூதர்கள் பரிவுள்ள மென்மையோடு கண்டிருக்கிறார்கள். அவர்களை அழிவிலிருந்து காக்கிற அவர்களுடைய அதிபதியின் கட்டளைகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் சிறிது காலம் காத்திருக்கவேண்டும். தேவ மக்கள் அவர் குடிக்கும் பாத்திரத்தில் குடிக்கவும், அவர் பெறும் ஸ்நானத்தைப் பெறவும் வேண்டும்.★

# மரணத்திற்கென்று குறிக்கப்பட்டாயிற்று!

**“ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது.” —எஸ்தர் 3:13.**

தேவனுடைய மீதியான மக்கள்மேல் வரப்போகிற கட்டளை, அகாஸ்வேரு யூதர்களுக்கு எதிராகப் பிறப்பித்த கட்டளையைப் போன்றே இருக்கும்.

மானிட சட்டதிட்டங்கள் கொடுத்த பாதுகாப்பு கற்பனையைக் கனம்பண்ணின பிள்ளைகள்மேலிருந்து விலக்கிக்கொள்ளப்படும் போது, ஆங்காங்கே வெவ்வேறு நாடுகளில் அவர்களை அழித்துப்போடுவதற்காக இதேபோன்ற ஒரு இயக்கம் காணப்படும். சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட காலம் நெருங்கும்பொழுது, வெறுக்கப்பட்ட கூட்டத்தாரை வேரோடு அழிக்க மக்கள் சதித்திட்டந் தீட்டுவார்கள். அவர்களைக் கடிந்துகொண்ட—அவர்களுடைய சொல்லுக்கு இணங்காத—அந்தக் குரலை முற்றிலுமாக அமைதிப்படுத்தத்தக்கதாக, ஒரே இரவில் அவர்கள்மீது ஒரு இறுதித் தாக்குதல் நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்படும்.

அவர்கள், நான்காம் கற்பனை சொல்லுகிற ஓய்வுநாளை கண்டிப்பாக புறக்கணித்துவிட்டு, வாரத்தின் முதல்நாளைக் கனம்பண்ணவேண்டும்; அல்லது கொல்லப்படவேண்டுமென்ற ஒரு சட்டம் எங்கும் போய்ச்சேரும். ஆனால் அவர்கள் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆண்டவருடைய ஓய்வுநாளை காலின்கீழ் மிதித்து, போப்பு மார்க்கத்தின் நியமனத்தைக் கனப்படுத்தமாட்டார்கள். சாத்தானுடைய சேனையும் துன்மார்க்கர் கூட்டமும் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும். அவர்கள் தப்பிக்க வேறுவழியே இல்லாததுபோல் காணப்படுவதினால், அக்கூட்டம் அவர்களைக்கண்டு எக்களிக்கும்.

இக்கட்டுக்காலம் வரும்பொழுது, ஒவ்வொருவருடைய நித்தியமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அதற்குப்பின்பு கிருபையின் காலம் இல்லை. மனந்திரும்புகிற பாவிக்காக இரக்கம் காத்திருக்காது. ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை அவரது மக்கள்மீது போடப்பட்டிருக்கும். வலுசர்ப்பத்தை தலைமையாகக் கொண்ட சேனையோடு வந்துகொண்டிருக்கிற பூமியின் வல்லமைகளுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாக்கக்கூடாத இந்த சாவுக்கேதுவான போராட்டத்தில் சிறிய—மீதமான கூட்டத்தார், ஆண்டவரைத் தங்களுக்கு பாதுகாப்பாகப் பற்றிக்கொள்வர். உபத்திரவம், மரணம் என்னும் வேதனைக்கடியில் அனைவரும் மிருகத்தை வணங்கி, அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளவேண்டும் என்று உலகத்தின் பெரிய அதிகாரிகளால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பரிசுத்தவான்கள் அதிகமான மனவேதனையை அனுபவித்ததை நான் கண்டேன். பூமியின் பொல்லாத குடிமக்கள் அவர்களைச் சூழ்ந்திருந்ததைப்போலத் தோன்றியது. காணப்பட்டதெல்லாம் அவர்களுக்கு எதிராகவே இருந்தது. துன்மார்க்கருடைய கைகளினால் மடியும்படி, தேவன் தங்களை விட்டுவிடுவார் என்று சிலர் பயப்பட ஆரம்பித்தார்கள்....

பரிசுத்தவான்களுக்கு அது பயங்கரமான—வேதனை நிறைந்த—கடுந்துயர் அனுபவிக்கும் நேரமாக இருந்தது. இரவும் பகலும் விடுதலைக்காக அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். வெளித்தோற்றத்திற்கு அவர்கள் தப்பிப்போகமுடியாததுபோலத் தோன்றிற்று. "உங்கள் தேவன் ஏன் உங்களை எங்கள் கைகளிலிருந்து விடுவிக்கவில்லை?" "நீங்களாகவே உங்களை ஏன் காப்பாற்றிக்கொள்ளக்கூடாது" என்றெல்லாம் சொல்லி, துன்மார்க்கர் அவர்கள்மேல் ஆரவாரித்தார்கள். ஆனால் பரிசுத்தவான்கள் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.★

செப்டம்பர் 19

# இக்கட்டுக்காலத்தில் தூதர்களின் பாதுகாப்பு!

**"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்." —ஏசாயா 26:20.**

பயங்கரமான சோதனையின் அந்தநாளிலே, "என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்" (ஏசாயா 26:20) என்று கிறிஸ்து கூறுவார். அவர்கள் ஒளிந்துகொள்ளவேண்டிய அறைகள் எவை? அவை கிறிஸ்துவினுடைய பரிசுத்த தூதர்களுடைய பாதுகாவலே. இந்த நேரத்திலே, தேவ மக்கள் ஒரே இடத்தில் இருக்கவில்லை. வெவ்வெறு கூட்டங்களிலே உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தார்கள்.

பரிசுத்தவான்கள் பட்டணங்களையும் கிராமங்களையும்விட்டு, கூட்டங்கூட்டமாக, மிகவும் தனிமையான இடத்திலே சென்று வசிக்கிறதை நான் கண்டேன். தூதர்கள் அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொண்டுவந்தார்கள். துன்மார்க்கரோவெனில், பசியாலும் தாகத்தாலும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

மிக ஆழமாகப் பதியக்கூடிய சம்பவங்கள் இரவிலே என்முன் கடந்துசென்றன. சேனைகளுக்குள்ளே பெரிய குழப்பமும் சண்டையும் இருந்ததுபோலக் காணப்பட்டது. ஆண்டவரிடமிருந்து வந்த தூதன் என்முன்னே நின்று, "உன் குடும்பத்தைக் கூட்டிக்கொள்; நான் உன்னை நடத்திச் செல்லுகிறேன்; என்னைப் பின்தொடர்ந்து வா" என்று சொன்னான். அவன் என்னை இருளான ஒரு வழியிலே அழைத்துச்சென்றான். காட்டின் வழியே நடத்தினான். பின்பு, மலை இடுக்குகளின் வழியாக நடத்திச்சென்று, "இங்கே நீ பாதுகாப்பாய் இருப்பாய்" என்றான். அங்கே வேறு சிலரும் இருந்தனர். "இக்கட்டுக்காலம் இராத்திரியிலே வருகிற திருடனைப்போல

வந்துவிட்டது; ஆண்டவர் உங்களை எச்சரித்ததுபோலவே நடக்கும்" என்றும் அந்த தூதன் சொன்னான்.

கிறிஸ்துவின் வருகைக்குச் சற்றுமுன்னதாக நடக்கிற இந்த இக்கட்டுக்காலத்திலே, பரலோகத் தூதர்களின் சேவையாலே நீதிமான்கள் பாதுகாக்கப்படுவார்கள். ஆனால் தேவனுடைய கட்டளைகளை மீறியவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. தெய்வீகப் பிரமாணங்களில் ஒன்றையாகிலும் அலட்சியப்படுத்துகிறவர்களை தூதர்கள் பாதுகாக்கமுடியாது.

உலக சரித்திரத்தின் முடிவிலே, சத்தியத்திற்காக உறுதியாக நிற்கிற மக்களுக்காக, ஆண்டவர் வல்லமையாக கிரியை செய்வார்.... இக்கட்டுக்காலத்தின் நடுவிலே, உலகம் உண்டானதுமுதல் உண்டாயிராத அந்த இக்கட்டுக்காலத்திலே, அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அசையாமல் நிலைத்து நிற்பார்கள். அவர்களில் மிகவும் பெலவீனமானவனையுங்கூட, சாத்தானாலும் அவனது தீய சேனைகளாலும் அழிக்கமுடியாது. பராக்கிரமத்தில் சிறந்த தூதர்கள் அவர்களைப் பாதுகாப்பார்கள். தம்மை நம்புகிற மக்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையுள்ள நம் ஆண்டவர்— யேகோவாக—தேவர்களுக்கு தேவனாக, அவர்களுக்காக தம்மை வெளிப்படுத்துவார். ★

# வாதை ஊற்றப்படுங்காலத்தில் துன்மார்க்கருடைய நிலை...!

**“இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசை தொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள்.” —ஆமோஸ் 8:11,12.**

இரக்கத்தின் இனிய குரல் ஓய்ந்தபோது, துன்மார்க்கரை பயமும் நடுக்கமும் பிடித்துக்கொண்டது. மிகவும் பிந்துவிட்டது! மிகவும் பிந்திவிட்டது!! என்கிற பயங்கரமான வார்த்தைகளை மிகத்தெளிவான நிலையில் கேட்டார்கள்.

தேவனுடைய உக்கிர கோபத்தின் கலசங்கள் அவர்கள்மீது ஊற்றப்படும்போது, பாவிகள் அடையும் வேதனையை, கிறிஸ்துவும் பாவிகளுக்காக சிலுவையின்மேல் அடைந்தார். குற்ற உணர்வோடு இருக்கிற மக்களை, இருண்ட—நம்பிக்கையற்ற நிலை ஒரு மரணப்போர்வையைப்போன்று சுற்றிலும் சூழ்ந்துகொள்ளும். பாவத்தின் இயல்பான பாவத்தன்மையைக்குறித்து முற்றிலுமாக அப்பொழுது நன்கு புரிந்துகொள்வார்கள்.

தேவனுடைய வார்த்தைகளுக்கு இதுவரை முக்கியத்துவங்கொடுக்காதவர்கள், அச்சமயத்தில் ஒரு சமுத்திரத்திலிருந்து மறு சமுத்திரம் வரைக்கும், வடக்கிலிருந்து கிழக்குவரைக்கும் ஆண்டவருடைய வார்த்தைகளைத்தேடி நிலையற்று அலைந்துகொண்டிருந்தார்கள். “அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற்போவார்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார். தேசத்தின்மேல் பஞ்சம்; அது ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல; ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல;

கர்த்தருடைய வசனம் கேட்கக்கிடைக்காத பஞ்சம். தேவன் தங்களை அங்கீகரித்துவிட்டார் என்கிற ஒரு வார்த்தைக்காக எதைத்தான் அவர்கள் கொடுக்கமாட்டார்கள்....!

வாதையின் கொடுமைகளைச் சகிக்கமாட்டாத துன்மார்க்கரில் அநேகர், மிகவும் அதிகமாக வெகுண்டெழுந்தார்கள். அது மிகவும் பயங்கரமான கடுந்துயர் நிறைந்த ஒரு காட்சியாக இருந்தது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மோசமாக தூஷித்தார்கள். அப்படியே பிள்ளைகள் பெற்றோரையும், சகோதரர்கள் சகோதரிகளையும், சகோதரிகள் சகோதரரையும் நிந்தித்தார்கள்.... "நீங்கள் எங்களை எச்சரிக்கவில்லை. உலகம் முழுவதும் மனம் மாறிவிடும் என்றீர்கள். எங்களுக்குள் உண்டான பயத்தையும் சமாதானம், சமாதானம் என்று சொல்லி அமர்த்திவிட்டீர்கள். இந்த மணி வேளையைக்குறித்து நீங்கள் எங்களுக்குச் சொல்லவில்லை. எங்களுக்கு இந்த எச்சரிப்பைக் கொடுத்த ஜனங்களைப்பற்றி அவர்கள் கொள்கை வெறியர்கள், பொல்லாதவர்கள், உங்களைக் அழித்துவிடுவார்கள் என்று சொல்லித் தடுத்துவிட்டீர்கள்" என்று மக்கள் கசப்பான வெறுப்போடு போதகர்களைத் தாக்கினார்கள். எனவே, போதகர்களும் தேவனுடைய உக்கிரகோபத்துக்குத் தப்பவில்லை என்பதை நான் கண்டேன். அவர்களது சபையாரைக் காட்டிலும் அவர்கள் அடைந்த துன்பங்கள் பத்து மடங்கு அதிகமாயிருந்தது.

"உன்னதமானவருடைய மறைவில்" தங்கியிருப்பவர்களுடைய நிலையைப் பார்த்து, அதாவது தம்மை நேசித்து தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற அனைவரையும் ஆண்டவர் தமது கூடாரத்தின் மறைவிலே மறைத்துவைக்கின்ற நிலையைக்கண்டு, துன்மார்க்கர் ஆ! எவ்வளவு அதிகமாகப் பொறாமைகொண்டிருப்பார்கள்! ★

# யாக்கோபின் இக்கட்டுக்காலம்!

**“ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.” —எரேமியா 30:7.**

இயேசு தமது ஆசாரிய ஊழியத்தை முடிக்கும்வரையிலும் நான்கு தூதர்களும் காற்றுகளைப் பிடித்திருப்பார்கள் என்று நான் கண்டேன். அதற்குப்பின்னர் கடைசி ஏழு வாதைகளும் வரும். இந்த வாதைகள் நீதிமான்களுக்கு எதிராக துன்மார்க்கரை வெகுண்டெழச்செய்தது. நாங்கள்தான் அவர்கள்மேல் அந்த ஆபத்துகளை வரவழைத்தோம் என்று நினைத்தார்கள். எனவே, எங்களை இவ்வுலகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டால், வாதைகள் நிறுத்தப்படும் என்று நினைத்தார்கள். பரிசுத்தவான்களைக் கொலைசெய்யும்படிக்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டம் பரிசுத்தவான்களை இரவும் பகலும் விடுதலைக்காகக் கதறச் செய்தது. இதுவே யாக்கோபின் இக்கட்டுக்காலம்.

யாக்கோபிற்கு விரோதமாக படையெடுக்க ஏசாவை சாத்தான் தூண்டியதுபோலவே, யாக்கோபின் இக்கட்டுக்காலத்திலே தேவனுடைய மக்களை அழிக்கும்படி துன்மார்க்கரை அவன் தூண்டி விடுவான். அன்று யாக்கோபைக் குற்றப்படுத்தினதுபோலவே தேவனுடைய மக்கள்மேல் குற்றஞ்சாட்ட மற்றவர்களை ஏவுவான். இவ்வுலகவாசிகளை அவனுடைய மக்களாக அவன் நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால், தேவ கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற சிறிய கூட்டத்தார் அவனுடைய அதிகாரத்தை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை பூமியிலிருந்து அழித்துவிட்டால் அவனுடைய வெற்றி முழுமைபெற்றுவிடும். அவர்களைப் பரிசுத்த தூதர்கள் பாதுகாக்கிறார்கள். எனவே, அவர்கள் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டன என்று அனுமானிக்கிறான். பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் அவர்களுடைய நித்தியம் தீர்மானிக்கப்பட்டது என்பதை அவன் அறியாமலிருக்கிறான். அந்த மக்களை எவ்வாறெல்லாம் பாவஞ்செய்யத் தூண்டினான் என்கிறதைக்குறித்த மிகச் சரியான அறிவு அவனுக்கு இருப்பதினால், அவர்கள் செய்த தவறுகளை

மிகைப்படுத்தி, தன்னைப்போலவே அவர்களும் தேவனுடைய தயவிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று ஆண்டவரிடம் எடுத்துக்கூறுகிறான். அவர்களை மன்னிக்கிற ஆண்டவர் தன்னையும் தன் தூதர்களையும் மன்னிக்காமல் அழிக்கப்போவது நியாயமில்லை என்பான். அவர்கள் தனது இரை என்று உரிமை கோரி, அவர்களை அழித்துப்போடத்தக்கதாக, அவர்களைத் தன்னிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுப்பான்.

பாவங்களைச் சுட்டிக்காட்டி, சாத்தான் தேவனுடைய மக்களை குற்றஞ்சாட்டுகிறதினால், அவர்களை உச்சக்கட்ட நிலைவரை சோதிக்க ஆண்டவர் அவனை அனுமதிக்கிறார். ஆண்டவர்மேல் அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை, அவர்கள் விசுவாசம், உறுதி எல்லாம் பயங்கரமாகச் சோதிக்கப்படும். தங்களுடைய கடந்த காலத்தைப் பார்க்கும்போது, அவர்கள் நம்பிக்கையெல்லாம் அழிந்துபோய்விடும். ஏனெனில் தங்கள் வாழ்க்கை முழுவதிலும் எந்த நன்மையான காரியங்களையும் தாங்கள் செய்ததாக அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுடைய பலவீனங்களையும் தகுதியின்மையையுங்குறித்து முற்றிலுமாக அறிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண் என்கிற எண்ணத்தினாலே அவர்களைப் பயமுறுத்த சாத்தான் முயற்சிக்கிறான். அவர்களுடைய பாவக்கறை ஒருபோதும் கழுவப்படமுடியாது என்பான். இப்படியாக, அவர்கள் விசுவாசத்தைக் குலைத்தால், அவர்கள் அவன் கண்ணியிலே விழுந்து, தேவனுக்கு உண்மையாயிருப்பதிலிருந்து விழுந்துவிடுவார்கள் என்று நம்புகிறான். ★

செப்டம்பர் 22

# ஏன் இந்த இக்கட்டுக்காலம்?

**"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்." —சங்கீதம் 46:1.**

ஆண்டவருடைய பிள்ளைகள், அவர்களை அழிக்கக் காத்திருக்கிற எதிரிகளால் சூழப்பட்டிருந்தாலும், அவர்கள் அடைகின்ற மனவேதனை சத்தியத்திற்காக அனுபவிக்கப்போகும் துன்பத்தைக்குறித்த பயத்தினால் ஏற்பட்டதல்ல; நமது அனைத்துப் பாவங்களும் அறிக்கை செய்யப்படவில்லையோ என்றும், தங்களில் காணப்படும் சில பாவங்களால் "பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி.3:10) என்கிற இரட்சகருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை உணர்ந்துகொள்ள தவறிவிடுவோமோ என்கிற பயத்தினால் உண்டானதே. மன்னிப்பின் நிச்சயம் அவர்களுக்கு இருக்குமானால், உபத்திரவத்திற்காவது அல்லது மரணத்திற்காவது அவர்கள் பின்வாங்கமாட்டார்கள். தங்கள் குணக்கேட்டினாலே ஆண்டவருடைய இராஜ்யத்திற்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று நினைத்து ஜீவனை இழப்பார்களேயானால், தேவனுடைய பரிசுத்த நாமம் தூஷிக்கப்பட்டுவிடும்.

நாற்புறமும் துரோகத்தின் சதித்திட்டங்களை அவர்கள் கேள்விப்படுகிறார்கள். கலகத்தின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளைக் காண்கிறார்கள். இவைகளினிமித்தம் அவர்கள் இதயத்திலே, இந்த மாபெரும் மருளவிழுகை முடிவடைந்து, துன்மார்க்கரின் துன்மார்க்கம் முடிவுக்கு வரவேண்டுமே என்ற ஆத்தும பாரமும் ஒரு வாஞ்சையும் ஏற்படுகிறது. கலகத்தின் இந்த வேலை நிறுத்தப்படவேண்டுமென்று தேவனிடம் அவர்கள் மன்றாடும்போது, தீமையின் பயங்கரமான வல்லமையை எதிர்த்துப் போராடி விரட்டுவதற்கு தங்களுக்கு எந்த வல்லமையும் இல்லையென்ற கூரிய உணர்வோடு தங்களைத் தாங்களே நொந்துகொள்வார்கள். தங்களுடைய திறமைகளையெல்லாம் கிறிஸ்துவிற்கு சேவை செய்வதற்காக எப்பொழுதும் உபயோகித்திருந்தால், பலத்தின்மேல் பலமடைந்து முன்னேறி

இருந்திருப்போமே; தங்களை எதிர்க்க சாத்தானுக்கு இவ்வளவு பலம் இருந்திருக்காதே என்பதை உணருவார்கள்.

தேவனுக்கு முன்பாக தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்த்தி, தங்கள் பழைய பாவங்களைவிட்டு மனந்திரும்பினதைச் சுட்டிக்காட்டி, "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும். அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசாயா 27:5) என்கிற இரட்சகரின் வாக்குத்தத்தத்திற்காக தங்களுடைய ஆத்துமாக்களை வருத்தி, தேவனிடம் மன்றாடுவார்கள். அவர்கள் ஜெபத்திற்கு உடனே பதில் வராதபடியினால் அவர்களுடைய விசுவாசம் குறைந்துபோகாது. வேதனையும், கலக்கமும், பயமும், துன்பமும் உண்டாயிருந்தபோதிலும், தங்களது விண்ணப்பங்களை நிறுத்தமாட்டார்கள். யாக்கோபு தூதனின் பலத்தைப் பற்றிக்கொண்டதுபோல, இவர்களும் தேவனுடைய தூதனின் பலத்தைப் பற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் இருதயத்தின் எண்ணமெல்லாம் "நீர் என்னை ஆசீர்வதிக்காவிடில் நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்பதே அவர்களது ஆத்துமாக்களின் மொழியாக அமைந்திருக்கும்.

கிறிஸ்துவைப்போன்ற குணங்களை வெளியே கொண்டுவருகின்ற புடமிடும் குகையே யாக்கோபின் இக்கட்டுக்காலம். சாத்தானையும் அவனுடைய சோதனைகளையும் முற்றிலும் விட்டுவிடுவதற்கேதுவாக தேவன் தமது மக்களை வழிநடத்தவே இது திட்டமிடப்பட்டிருக்கிறது. ★

# தேவனுடைய கண்கள் அவரது மக்கள்மீது பதிக்கப்பட்டிருக்கிறது!

**"அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்...."—லூக்கா 18:7,8.**

இக்கட்டுக்காலத்திலே பயத்தாலும், வேதனையாலும் அலைக்கழிக்கப்படும்பொழுது, அறிக்கைசெய்யப்படாத பாவத்தோடு இருப்பார்களேயானால், சோதனைகளில் விழுந்துவிடுவார்கள்; நம்பிக்கையிழந்து விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். விடுதலைக்காக ஆண்டவரிடத்திலே விண்ணப்பஞ்செய்யும் நம்பிக்கை அவர்களுக்கு இல்லாமற்போய்விடும். ஆனால் தங்களுடைய தகுதியற்ற நிலையைக்குறித்து, ஒரு ஆழ்ந்த உணர்வு அவர்களுக்கு இருக்கும்போது, வெளிப்படுத்தத்தக்கதான அளவிற்கு மறைக்கப்பட்ட தவறுகள் அவர்களிடத்தில் இருக்காது. நியாயத்தீர்ப்பிற்கு முன்னரே அவர்களது பாவங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவைகளை அவர்கள் நினைவிற்குக்கூட கொண்டுவரமுடியாது....

கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொண்டவர்கள் ஆயத்தமில்லாதவர்களாக அந்த கடைசி பயங்கரமான போராட்டத்திற்குள் பிரவேசிக்கிறபோது, நம்பிக்கையை இழந்தவர்களாக, வேதனையோடு தங்கள் பாவங்களை அறிக்கையிடுவார்கள். துன்மார்க்கரோ, அவர்கள் படும் வேதனைகளைக்குறித்து எக்களிப்பார்கள்....

வஞ்சிக்கப்பட்டு—சோதிக்கப்பட்டு—பாவத்திற்குள்ளாகச் செல்லத்தக்கதாக ஏமாற்றப்பட்டவர்கள், உண்மையான பாவ அறிக்கையோடு அவரிடத்தில் திரும்புவார்களானால் அவர்களை அவர் தள்ளமாட்டார்

என்பதற்கு யாக்கோபின் வரலாறு ஒரு நிச்சயத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த மக்களை அழித்துப்போட சாத்தான் வகைதேடும்போது, அத்தகைய ஆபத்து வேளையிலே அவர்களைப் பாதுகாத்துத் தேற்றுவதற்காக, தேவன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். சாத்தானுடைய தாக்குதல்கள் மூர்க்கமானதாகவும் திட்டமிடப்பட்டதாகவுமிருக்கும். அவனது வஞ்சகங்கள் பயங்கரமானதாயிருக்கும். ஆனாலும், ஆண்டவருடைய கண்கள் அவருடைய பிள்ளைகள்மேல் வைக்கப்பட்டிருக்கும். அவர் செவிகள் அவர்களுடைய கூக்குரலைக் கவனித்துக் கேட்கும். அவர்களுடைய உபத்திரவம் மிகவும் பெரியது. அவர்களைச் சுற்றி எரிகிற அக்கினி அவர்களை முழுவதும் எரித்துப்போடுவதைப்போலத் தோன்றும். ஆனால் அக்கினியால் புடமிடப்பட்ட தங்கத்தைப்போல, புடமிடுகிறவர் (தேவன்) அவர்களைப் புடமிட்டுக்கொண்டு வெளியே வருவார். பயங்கரமான சோதனையின் காலத்திலே அவர்கள்மேல் ஆண்டவர் பாராட்டுகிற அன்பு, அவர்களுடைய செழிப்பிலே அவர் காட்டின அன்பைப்போன்றே இருக்கும். புடமிடும் குகையிலேவைத்து, நெருப்பிலே அவர்களைப் புடமிடவேண்டியது அவசியமாகும். கிறிஸ்துவின் சாயல் அவர்களில் பரிபூரணமாகப் பிரதிபலிக்கத் தக்கதாக, இந்த பூமி சார்ந்த பற்றுகளனைத்தும் சுட்டெரிக்கப்படவேண்டும். சுயம் அவர்களைவிட்டுப் போகவேண்டும்.

சோர்வையும், தாமதத்தையும், பசியையும் தாங்கிக்கொள்கின்ற விசுவாசமே, நம்முன் இருக்கிற வேதனையான, சோதனை நிறைந்த காலத்திலே, நம்மிடம் இருக்கவேண்டிய விசுவாசம். அதாவது மிகக் கடுமையாகச் சோதிக்கப்பட்டாலும் தளராத விசுவாசமாக இருக்கும். அந்தக் காலத்திற்கு நாம் ஆயத்தப்படும்படிக்கே கிருபையின் காலம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.... யாக்கோபைப்போல, ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களைப் பிடித்துகொண்டு, உண்மையோடு விடாப்பிடியாக இருந்து அவன் வெற்றியடைந்ததுபோல அவர்களும் வெற்றியடைவார்கள். ★

# மகா கொடிய இக்கட்டுக்காலம்!

**“ஏனெனில் தேவன் உலகத்தைச் சிருஷ்டித்ததுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்.” —மாற்கு 13:19.**

இதுவரை ஒருபோதும் உண்டாயிராத இக்கட்டுகாலம் நம்முன் சீக்கிரமாக வரவிருக்கிறது. இப்போது, நாம் பெற்றிராத அனுபவத்தை பெற்றுக்கொள்வது அவசியமாகும். அத்தகைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடாத அளவிற்கு, அநேகர் மிகவும் சோம்பலுடன் இருக்கிறார்கள். நிஜத்தைப் பொருத்தமட்டில் எப்பொழுதுமே பிரச்சனையைவிட, அதை எதிர்பார்க்கிறதினால் உண்டாகிற வேதனையே அதிகம். ஆனால், நம்முன் இருக்கிற நெருக்கடியைப் பொருத்தவரையில் அது உண்மையல்ல. வரப்போகும் அந்த இக்கட்டுபற்றி மிகவும் முனைப்பான தெளிவோடு விவரித்துக் கூறினாலுங்கூட, அந்தக் கடுந்துயர் வேளையின் பரிமாணத்தை துல்லியமாக எடுத்துக்காட்ட முடியாது. எனவே, இப்பொழுது நமது அருமையான மீட்பர் நமக்காக பாவநிவர்த்தி செய்துகொண்டிருக்கும்போது, நாம் அவரில் பூரணப்பட பிரயாசப்படவேண்டும். தேவனின் அருளால் திட்டமிடப்பட்ட பள்ளியில்தான் இயேசுவின் தாழ்மையையும் சாந்தத்தையும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் தெரிந்துகொள்ளுகிற பாதை மிகவும் சுலபமாகவும் இனிமையாகவுமிருக்கிறது. அத்தகைய பாதையை ஆண்டவர் ஒருபோதும் நமக்கு முன்பாக வைக்கிறதில்லை. வாழ்வின் உண்மையான குறிக்கோள்களையே எப்பொழுதும் நமக்குமுன் வைக்கிறார். தங்களுடைய ஆத்துமாக்களை மிகவும் பயங்கரமான ஆபத்திற்குள் கொண்டுவரத்தக்கதான அளவிற்கு ஒருவரும் இத்ததைய பணியை அலட்சியம்செய்யவோ அல்லது தாமதப்படுத்தவோ கூடாது.

“பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும்” என்று பரலோகத்திலிருந்து வந்த ஒரு உரத்த சத்தத்தைக் கேட்டதாக, அப்போஸ்தலனாகிய யோவான் கூறி ஆச்சரியப்படுகிறார்.

பரலோகத்தினின்று வரும் குரலே இத்தகைய ஆச்சரியத்தை ஏற்படுத்துமானால், அந்தக்காட்சி எத்தனை பயங்கரமானதாக இருக்கும்? சாத்தானுடைய காலம் குறுகக்குறுக, அவனுடைய உக்கிரமான கோபம் அதிகமாகிறது. அவனுடைய தந்திரங்களும் அழிவுகளும் இக்கட்டுக்காலத்திலே உச்சக்கட்டத்தை அடைகின்றது. தேவனுடைய நீடிய பொறுமை முடிவிற்கு வந்துவிட்டது. உலகம் அவருடைய இரக்கத்தைத் தள்ளிப்போட்டது. அவரது அன்பை அவமதித்து, அவருடைய பிரமாணத்தை மிதித்துப்போட்டது. துன்மார்க்கர் கிருபையின் காலத்தின் எல்லையைக் கடந்துவிட்டார்கள். ஆண்டவர் தமது பாதுகாப்பை விலக்கிக்கொள்ளுகிறார். அவர்கள்தாமே தெரிந்துகொண்ட தலைவனுடைய இரக்கத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு ஒப்புக்கொடுத்த மக்களை அவன் ஆளுவான். அவர்களெல்லாரையும் ஒரு மாபெரும் இறுதி இக்கட்டிற்குள்ளாக அவன் அமிழ்த்திப்போடுவான். மானிட இச்சைகளின் கொடிய வெறியாட்டங்களை தேவதூதர்கள் தடுத்து நிறுத்தாமல் விட்டுவிடும்போது, காலத்தின் மூலக்கூறுகள் அனைத்தும் கட்டவிழ்த்து விடப்படும். பழைய எருசலேமின்மேல் வந்த அழிவைக்காட்டிலும் மிகவும் பயங்கரமான அழிவில் உலகம் முழுவதும் சிக்கிக்கொள்ளும்.

உலகம் உண்டானதுமுதல் உண்டாயிராத இக்கட்டுக் காலத்தின் மத்தியிலே, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகள் அசையாது நிற்பார்கள். சாத்தானும் அவனுடைய தீய சேனைகள் அனைத்தும், தேவனுடைய பரிசுத்தவான்களில் மிகவும் பலவீனமான ஒரு நபரைக்கூட அழித்துப்போடமுடியாது. ★

# வஞ்சகச்செயலின் உச்சக்கட்டம்!

**“என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.”**
**—வெளிப்படுத்தல் 3:10.**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்க நெருங்க, சாத்தானும் அவனுடைய தூதர்களும் அடிமட்டத்தினின்று எழும்புகிறார்கள். சாத்தான் மனிதனைப்போன்று மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவின் தோற்றத்திலும் வருவான். சத்தியத்தைத் தள்ளிப்போட்ட இந்த உலகம் அவனை இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக ஏற்றுக்கொள்ளும்.

சாத்தானுடைய காலம் குறையக்குறைய, அவனுடைய உக்கிரம் அதிகமாகிறது. அவனுடைய தந்திரங்களும், அழிவுகளும் இக்கட்டுக்காலத்திலே அதின் உச்சநிலையை எட்டும்....

இந்த ஏமாற்றுகிற நாடகத்திலே, அதின் கிரீடமாக, சாத்தான்தானே கிறிஸ்துவின் வேடத்தைத் தரித்துக்கொள்வான். சபை தன் நம்பிக்கை பூர்த்தியடைவதற்கேதுவாக—நெடுங்காலமாக கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருக்கிறதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது சாத்தான் கிறிஸ்து தாமே வந்துவிட்டதைப்போன்று காண்பிப்பான். பூமியின் வெவ்வேறு இடங்களிலே, பிரகாசிக்கிற ஒளியோடு, கெம்பீரமான தோற்றத்தோடு தேவகுமாரனைப்பற்றி வெளிப்படுத்தல் 1:13–15–ல் யோவான் விவரித்திருப்பதற்கு ஒப்பாக, தன்னை வெளிப்படுத்திக்காட்டுவான். அவனைச் சுற்றியிருக்கிற மகிமை இதுவரை மனிதர் பார்த்திராத, எல்லாவற்றையும் மிஞ்சுகிற மகிமையாக இருக்கும். “கிறிஸ்து வந்துவிட்டார், கிறிஸ்து வந்துவிட்டார்” என்கிற வெற்றியின் தொனி வானங்களிலே தொனிக்க, மக்கள் அவன்முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து தொழுதுகொள்ளுகிறார்கள். கிறிஸ்து பூமியிலிருந்தபோது, தமது சீடர்களை ஆசீர்வதித்தவண்ணம் அவன் தனது

கரங்களை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிக்கிறான். அவனுடைய குரல் அடக்கமாகவும், மென்மையாகவும், மனதைக் கவரும் மெல்லிய இசையுடன் இருக்கிறது. கனிவான, பரிவோடுகூடிய குரலில், நம் இரட்சகர் கூறிய அதே கிருபை நிறைந்த பரலோக சத்தியங்களில் சிலவற்றை அவர்களுக்கு எடுத்துக்கூறுகிறான். மக்களுடைய நோய்களைக் குணப்படுத்தி, பின்னர் கிறிஸ்துவின் குணத்தை தன்மீது போலியாகப் புனைந்துகொண்டவனாக, தான் ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிவிட்டதாகவும், அவன் ஆசீர்வதித்த நாளை அனைவரும் கனம்பண்ணும்படியாகவும், கிறிஸ்து சொல்வதைப்போலவே அனைவருக்கும் கட்டளையிடுகிறான். ஏழாம்நாளை ஓய்வுநாளாகத் தொடர்ந்து ஆசரிக்கிறதினாலும், சத்திய வெளிச்சத்தை எடுத்துச்சென்ற அவனுடைய தூதர்களுக்கு செவிசாய்க்காமல் மறுத்ததினாலும், மக்கள் தன்னுடைய பெயரை தூஷிக்கிறதாகவும் குற்றஞ்சாட்டுகிறான். இதுதான் வல்லமையான, ஏறக்குறை உச்சகட்டமான வஞ்சகமாகும். சீமோனால் ஏமாற்றப்பட்ட சமாரியர்களைப்போன்று, இந்த திரள் கூட்டமும் சிறியவரிலிருந்து பெரியவர்வரை இந்த மாயங்களுக்கு செவிகொடுத்து, “தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான்” (அப். நட. 8:10) என்பார்கள்.

ஆனால் தேவனுடைய மக்கள் தவறாக வழிநடத்தப்பட மாட்டார்கள். இந்தக் கள்ளக்கிறிஸ்துவின் போதகங்கள் வேத வாக்கியங்களுக்கு ஒத்திருக்கவில்லை. ★

# தவணையின் காலம் முடிவடைந்தபின் இரத்தசாட்சிகள் கிடையாது!

**“அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.” —சங்கீதம் 91:15.**

தேவ மக்கள் துன்பம் அடைகிறதினின்று விடுதலை பெற்றிருக்கமாட்டார்கள். ஆனால் உபத்திரவப் படுத்தப்பட்டு துன்பமடையும்போது, தனிமையில் தத்தளித்து ஆகாரமின்றி பட்டினிகிடக்கும்போது, அவர்கள் அழிந்துபோகும்படி விட்டுவிடப்படமாட்டார்கள்.... தனிமையில் ஆகாரமும் தண்ணீருமின்றி தவிக்கும்போது, அழியாதபடி காக்கப்படுவார்கள்.... ஆனாலும், இதற்கு முன்பாக மரித்த இரத்தசாட்சிகளைப்போல, தங்களது இரத்தத்தினாலே தங்களது சாட்சியை சீக்கிரத்தில் முத்திரைபோடவேண்டும் என்பதைப்போன்று அவர்களுக்கு காணப்படலாம். அது பயங்கரமான கடுந்துயர் நிறைந்த காலம். விடுதலைக்காக இரவும்பகலும் அவர்கள் தேவனை நோக்கி கதறுகிறார்கள்....

உலக வல்லமைகளெல்லாம் தேவ மக்களுக்கு எதிரிடையாக நிற்கப்போகின்றன. யுகங்கள் நெடுகிலும் தேவனுடைய கண்கள் தமது மக்கள் சந்திக்கப்போகின்ற அந்த இக்கட்டுக்காலத்தின்மீது பதிக்கப்பட்டிருந்தன. இச்சமயத்தில் பூமியின் வல்லமைகள் தேவனுடைய மக்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்கும்படிச் செய்யப்படும். நாடுகடத்தப்பட்ட கைதியைப்போன்று பட்டினியினாலும் கொடுமையினாலும் மரித்துவிடுவோமோ என்ற அவர்கள் பயந்துகொண்டிருப்பார்கள். ஆனால் இஸ்ரவேலிற்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தை பிளந்த பரிசுத்தமுள்ள ஆண்டவர் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்படி, தமது வல்லமையைக் காண்பிப்பார். “என் சம்பத்தை நான் சேர்க்கும்நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்”—மல்கியா

3:17. இந்தக் காலத்திலே, கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரருடைய இரத்தம் அவருக்குச் சாட்சியாக சிந்தப்படுமானால், முற்காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தவர்களுடைய இரத்தத்தைப்போன்று, அது ஆண்டவருக்கு ஒரு பெரிய அறுவடையைத் தருவதற்காக விதைக்கப்பட்டதாக இருக்காது. அவர்களுடைய உத்தம விசுவாசம் மற்றவர்களுக்கு சத்தியத்தைக்குறித்த ஞானத்தைக் கொடுக்கும் ஒரு சாட்சியாக இருக்காது. ஏனெனில், பிடிவாதமான கல்நெஞ்சு தன்னிடத்தில் அனுப்பப்பட்ட இரக்கத்தின் அலைகளை, இனி திரும்பி வரக்கூடாதபடி திருப்பி அனுப்பிவிட்டது. நீதிமான்கள் அவர்களுடைய சத்துருக்களுக்கு இரையாக ஒப்புக்கொடுக்கப்படுவார்களேயானால், அது அந்தகாரத்தின் அதிபதிக்கு வெற்றியாகவே இருக்கும். “தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்” (சங்கீதம் 27:5) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். கிறிஸ்துவும், “என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்” (ஏசாயா 26:20,21) என்கிறார். ஜீவ புத்தகத்திலே நாமங்கள் எழுதப்பட்டு, அவருடைய வருகைக்காகப் பொறுமையோடு காத்திருக்கின்ற பிள்ளைகளுடைய விடுதலை மிகவும் மகிமையுள்ளதாயிருக்கும். ★

செப்டம்பர் 27

# தேவனுடைய மக்கள் விடுவிக்கப்படுகிறார்கள்!

**“பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்.” —ஏசாயா 49:25.**

தேவனுடைய சட்டதிட்டங்களை கனம்பண்ணுகிற பிள்ளைகளுக்கு, மானிட சட்டங்கள் கொடுத்துவந்த பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்படும்போது, அவர்களை அழிக்கத்தக்கதாக, அதைப்போன்ற இயக்கங்கள், பல நாடுகளிலே, ஒரே நேரத்தில் செயல்படும். மரணச்சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட நேரம் நெருங்குகிற பொழுது, வெறுக்கப்பட்ட ஜனத்தை வேரோடு அழிக்க, இரகசிய திட்டங்கள் போடப்படும். ஒரு குறிப்பிட்ட இரவிலே, அவர்களைக் கடிந்துகொண்ட—அவர்களுக்கு எதிரிடையாகக் கூறிய குரல்களை முற்றிலுமாக அமைதிப்படுத்தும்படிக்கு ஒரு தீர்மானமான தாக்குதல் நடத்தத் திட்டமிடப்படும்.

சிறைச்சாலைகளிலும், காடுகளிலும், மலைகளிலுமுள்ள தனிமையான இடங்களில் ஒளிந்துகொண்டிருக்கிற தேவ மக்கள் தங்களைக் கொன்றுபோடத்தக்கதாக, தீய ஆவிகளால் ஏவப்பட்ட மனிதர்கள் எல்லா இடங்களிலும் ஆயுதந்தரித்தவர்களாக ஆயத்தப்படுகிற அந்த நேரத்திலும், பரலோகப் பாதுகாப்பிற்காக மன்றாடுவார்கள். இந்த நேரத்தில்தான் உச்சக்கட்ட ஆபத்திலே, இஸ்ரவேலின் தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களை விடுவிக்கும்படிக்கு இடைப்படுவார்....

வெற்றிக்களிப்போடு, பரிகாசமான சாபவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஆரவாரிக்கிற தீய மனிதர்களின் கூட்டங்கள், தங்கள் இரையின்மேல் பாய ஆயத்தமாகிற அந்த நேரத்தில்தானே, அந்த இரவின் இருளைக்காட்டிலும் அடர்த்தியான இருள் பூமியின்மேல் படிகின்றது. பின்பு, தேவனுடைய சிங்காசனத்தின் மகிமையோடு பிரகாசிக்கின்ற

வானவில் வானம் முழுவதும் பரவிநின்று, ஜெபித்துக்கொண்டிருக்கிற ஒவ்வொரு கூட்டத்தையும் சூழ்ந்துகொள்கிறது. மூர்க்கங்கொண்டிருந்த திரள்கூட்டத்தார் திடீரென தடைசெய்யப்பட்டவர்கள்போன்று அப்படியே நிற்கிறார்கள். அவர்களுடைய பரிகாசக்குரல்கள் அடங்கிப்போயின. யாரைக் கொலைவெறியோடு தாக்கினார்களோ அவர்களை மறந்துவிடுகிறார்கள்.... பயம் நிறைந்தவர்களாக வரப்போகும் இடர்குறித்து முன்னுணர்வு கொண்டவர்களாக, தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளத்தை உற்றுநோக்கி, தங்களால் ஏறெடுத்தும் பார்க்கக்கூடாதிருந்த அந்த பிரகாசத்தினின்று தாங்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்று ஏங்குகிறார்கள்.

தேவனுடைய மக்கள் தங்களுக்கருகில் ஒரு தெளிவான—இனிமையான—“மேல் நோக்கிப்பார்” என்று கூறுகின்ற—ஒரு சத்தத்தைக் கேட்பார்கள். தங்கள் கண்களை வானத்துக்கு உயர்த்தும்போது, உடன்படிக்கையின் சின்னமாகிய வானவில்லைக் காண்கிறார்கள். ஆகாய விரிவை மூடியிருந்த, சீற்றத்தோடுகூடிய கருத்த மேகங்கள் விலகிக்கொண்டன. ஸ்தேவானைப்போல வானங்களிலே தேவனுடைய மகிமையையும், சிங்காசனத்திலே அமர்ந்திருக்கிற மனுஷகுமாரனையும் அவர்கள் திடமாக நோக்கிப்பார்க்கிறார்கள்.

உலகம் முழுவதும் இருளில் மூழ்கியிருக்கும்போது, பரிசுத்தவான்களின் கூடாரங்களிலெல்லாம் வெளிச்சம் உண்டாயிருக்கும். கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் முதல்காட்சியை அவர்கள் காண்பார்கள். ★

செப்டம்பர் 28

# நள்ளிரவில் விடுதலை!

**"இப்படிப்பட்டவர்கள் சடிதியில் சாவார்கள்; ஜனங்கள் பாதிஜாமத்தில் கலங்கி ஒழிந்துபோவார்கள்; காணாத கையினால் பலவந்தர் அழிந்துபோவார்கள்." —யோபு 34:20.**

சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவிக்கப்பட சந்தர்ப்பமே இல்லையென்று தோன்றுகிற சமயங்களில், தமது வல்லமையைக் காண்பிக்க ஆண்டவர் எப்பொழுதுமே உச்சக்கட்ட சூழ்நிலைகளையே தெரிந்துகொள்ளுகிறார்.

தம்முடைய மக்களை விடுவிக்க, ஆண்டவர் நள்ளிரவில் தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார். சூரியன் தன் முழு வல்லமையில் பிரகாசிக்கிறது. அடுத்தடுத்து வேகமாக அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெறுகின்றன. துன்மார்க்கர் பயத்தோடும் ஆச்சரியத்தோடும் இக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்க நீதிமான்கள் பக்திவிநயமான மகிழ்ச்சியோடு நோக்கிப்பார்க்கிறார்கள். இயற்கை முழுவதும் அதின் ஒழுங்கினின்று மாறுபட்டதுபோலத் தோன்றுகிறது. நீரோடைகள் ஓடுவதை நிறுத்திவிடுகின்றன. இருண்ட கனத்த மேகங்கள் மேலே வந்து ஒன்றோடொன்று மோதிக்கொள்கின்றன. கோப முகமான வானத்தின் நடுவிலே தெளிவான—விவரிக்கமுடியாத மகிமையோடு ஓர் இடம் தெரிகிறது. அங்கேயிருந்து திரளான தண்ணீர்களின் ஓசையைப்போல, "ஆயிற்று" (வெளிப்படுத்தல் 16:17) என்கிற ஆண்டவருடைய சத்தம் தொனிக்கிறது.

ஆண்டவருடைய சத்தத்தினாலே வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுகின்றன. பின்பு சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாம் தங்கள் இடங்களைவிட்டு அகன்றன. அவைகள் முற்றிலும் அகன்றுபோய்விடாது; ஆனால் ஆண்டவருடைய சத்தத்தினாலே அசைக்கப்படும்.

இருண்ட கனத்த மேகங்கள் மேலே வந்து ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. வளிமண்டலம் பிரிந்து சுருண்டுபோயிற்று, பின்னர் மிருகசீரிஷ நட்சத்திர குழுவிலுள்ள அந்தத் திறப்பான இடத்தை எங்களால் பார்க்கமுடிந்தது.

ஜனங்கள் தேவ சத்தத்தைக் கேட்டபிறகு, மகா பெரிய பூமியதிர்ச்சியினாலே பூமி அசைக்கப்படும்வரை கிறிஸ்துவின் வருகை இருக்காது. உலகம் உண்டானதுமுதல் ஒருபோதும் உண்டாயிராத வேதனையிலும் துன்பத்திலும் அவர்கள் இருக்கிறார்கள். இந்தக் காரியத்திலே தேவனுடைய மக்கள் துன்பத்தை அனுபவிப்பார்கள். வானத்தின் மேகங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும். அங்கே இருள் உண்டாகும். பின்பு அந்தசத்தம் வானத்திலிருந்த வருகின்றது. மேகங்கள் சுருட்டப்பட்ட புத்தகத்தைப்போல விலகிப்போயின. அங்கே தெளிவான—பிரகாசமான மனுஷகுமாரனுடைய அடையாளம் காணப்பட்டது. இந்த மேகத்தின் அர்த்தம் என்ன என்பது தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெரியும்.

1,44,000 பேர்கள் வெற்றி முழக்கமிட்டார்கள். அவர்கள் முகங்கள் தேவ மகிமையினாலே பிரகாசமடைந்தன.

தேவனுடைய சத்தம் அவருடைய மக்களின் சிறையிருப்பை திருப்பும்பொழுது, வாழ்க்கையின் மாபெரும் போராட்டத்திலே அனைத்தையும் இழந்துவிட்டவர்களிடையே, பயங்கரமான விழிப்புணர்வு உண்டாகும்.

ஆண்டவருடைய சத்துருக்களுக்கு கோபாக்கினையின் நாளாகிய—அந்தநாள், அவருடைய சபைக்கு விடுதலையின் நாளாயிருக்கும். ★

செப்டம்பர் 29

# தேவன் இயற்கையை நிலைகுலையச்செய்கிறார்!

**“ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது. சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி யுண்டானதில்லை.” —வெளிப்படுத்தல் 16:17,18.**

ஏழாம் தூதுனுடைய கோபகலசம் ஊற்றப்படுவதை நாம் சற்று ஆராயவேண்டியது அவசியம். தீமையின் வல்லமைகள் பெரிய யுத்தஞ்செய்யாமல் தங்கள் போராட்டத்தைக் கைவிடாது.

சீற்றமிகுந்த வானங்களின் நடுவிலே, சொல்லமுடியாத மகிமையோடு ஒரு தெளிவான இடம் காணப்பட்டது. அங்கே இருந்துதான், “ஆயிற்று” (வெளி. 16:17) என்கிற தேவ சத்தம் திரளான தண்ணீர்களின் ஓசையைப்போலப் பிறந்தது.

அந்தச் சத்தம் வானங்களையும் பூமியையும் அசைக்கின்றது. “மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு” உண்டாயிராத (வசனம் 17,18) பெரிய பூமியதிர்ச்சி உண்டாயிற்று. ஆகாய விரிவு திறக்கப்படுவதைப்போலவும், மூடிக்கொள்வதைப்போலவும் காணப்பட்டது. தேவனுடைய சிங்காசனத்திலிருந்து அவருடைய மகிமை பிரகாசித்தது. காற்றில் நாணல் அசைவதைப்போல மலைகள் அசைந்தன. கரடுமுரடான குன்றுகள் எங்கும் சிதறிவிழுந்தன. பெரிய புயல்காற்று வருவதைப்போன்ற முழக்கம் கேட்டது. கடல் அதின் சீற்றத்துடன் கொந்தளித்தது. அழிவின் வேலையில் ஈடுபட்டிருக்கிற பிசாசுகளின் குரலைப்போல, சுழல் காற்றின் ஓசை உரத்துத் தொனித்தது. கடலின் அலைகளைப்போன்று, பூமிமுழுவதும் பெருமூச்சுவிட்டு பொங்குவதுபோன்று காணப்பட்டது. பூமியின் மேற்புறம் பிளந்தது. அதின் அஸ்திபாரமே உடைந்து விழுவதைப்போல் காணப்பட்டது.

மலைத்தொடர்கள் புதைந்து கொண்டிருந்தன. மக்கள் குடியிருந்த தீவுகள் காணப்படாமற்போயிற்று. சோதோமைப்போல துன்மார்க்கத்தால் நிறைந்திருந்த கடல்துறைமுகங்கள் மூர்க்கமான அலைகளால் விழுங்கப்பட்டுவிட்டன. "மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது;" "தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து ... விழுந்தது" –வெளி. 16:19; இவை தங்கள் அழிவின் வேலையைச் செய்துகொண்டிருந்தன. உலகின் பெருமையான பட்டணங்கள் தாழ்த்தப்பட்டன. தங்களை மேன்மைப்படுத்தும்படிக்கும், மகிமைப்படுத்தும்படிக்கும், உலகின் பெரியபெரிய மனிதர்கள் தங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்த அரண்மனைகள் அவர்கள் கண்களுக்குமுன்பாக நொருங்கி அழிந்துபோயின. சிறையின் சுவர்கள் பிளந்தன. அங்கே தங்கள் விசுவாசத்தினிமித்தம் அடைக்கப்பட்டிருந்த தேவனுடைய பிள்ளைகள் விடுவிக்கப்பட்டனர். ★

செப்டம்பர் 30

# விசேஷ உயிர்த்தெழுதல் !

**"பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." —தானியேல் 12:2.**

தமது மக்களை விடுவிக்கும்படி ஆண்டவர் நள்ளிரவைத் தெரிந்துகொண்டார். துன்மார்க்கர் அவர்களைச் சுற்றிலும் பரிகாசம் பண்ணிக்கொண்டிருந்தபோது, சூரியன் தன் மகா வல்லமையில் பிரகாசமாகக் காணப்பட்டது. சந்திரன் தன் ஸ்தானத்தில் நின்று போயிற்று.... இருண்ட கனத்த மேகங்கள் மேலே வந்து ஒன்றோடொன்று மோதின. ஆனால், நிலைபெற்ற மகிமையோடு தெளிவான ஒரு இடம் காணப்பட்டது. திரளான தண்ணீர்களைப் போன்று அங்கிருந்து வந்த தேவனின் குரல் வானங்களையும் பூமியையும் அசைத்தது. மகா பெரிய பூமியதிர்ச்சி உண்டாயிற்று. கல்லறைகள் திறவுண்டன. அங்கேயிருந்த, மூன்றாம் தூதனின் செய்தியைக்கேட்டு, அந்த விசுவாசத்தில் மரித்த, ஓய்வுநாளை ஆசரித்திருந்த பிள்ளைகள், பூமியின் தூள் படுக்கைகளினின்று மகிமையடைந்தவர்களாக, ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டவர்களோடு அவர் செய்கிற சமாதான உடன்படிக்கையைக் கேட்கும்படி எழுந்து வந்தார்கள். கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தவர்கள், அவர்களுடைய சிறைகளிலிருந்து அழிவில்லாத மகிமைக்கு அழைக்கப்படுவார்கள்.... அவர்தாமே உயிர்த்தெழுந்திருக்கிறார். எனவே அன்பான நண்பர்களே, உங்களது நம்பிக்கையற்ற தருணத்திலே, உங்கள் அருகிலே அவர் நின்று, உங்களுக்குச் சமாதானம் அருளுவார்.

நான் பேசுகிறதைக்குறித்து நன்கு அறிந்திருக்கிறேன். எனது தலைக்குமேல் அலைகள் புரண்டுபோவதாக நினைத்த அந்த நேரத்தை நான் கண்டிருக்கிறேன். அச்சமயத்திலே என் இரட்சகரை எனக்கு மிகவும் அருமையானவராக உணர்ந்திருக்கிறேன். என் மூத்த குமாரன் என்னைவிட்டு எடுக்கப்பட்டபொழுது, எனது துக்கம் மிகவும் அதிகமாயிருந்ததை நான் உணர்ந்தேன். எனினும் இயேசு, என் அருகில் வந்தார். என் ஆத்துமாவிலே அவரது சமாதானத்தை நான் உணர்ந்தேன். ஆறுதலின் பாத்திரம் எனக்கு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் முப்பத்தாறு வருடங்களாக எனக்கு அருகாமையில் நின்றிருந்தவர்.... எடுத்துக்கொள்ளப்பட்டார். ஊழியத்திலே நாங்கள் இருவரும் சேர்ந்து உழைத்தோம். ஆனால், அந்த வீரனுடைய கரங்களை மடித்து, அமைதியான கல்லறையிலே அவரை இளைப்பாறச் செய்யவேண்டியதாயிற்று. அப்போது மீண்டும் என் துக்கம் அதிகரித்தது. அப்போது மீண்டும் அதே ஆறுதலின் பாத்திரம் என் உதடுகளில் வைக்கப்பட்டது. இயேசு எனக்கு மிகவும் அருமையானவர். அவர் என் அருகில் நடந்தார்.... அவர் உங்களுக்கு அருகிலும் நடப்பார். நமக்கு அன்பானவர்கள் மரணமடையும்பொழுது, அவர்கள் மிகவும் பிரியமானவர்களாக, அழகானவர்களாக நமக்கு இருக்கிறார்கள். அது நம்முடைய தாயாகவோ, அல்லது தகப்பனாகவோ இருக்கலாம். அவர்கள் உயிர்த்து வரும்பொழுது, அவர்கள் முகத்திலிருந்த சுருக்கங்கள் அனைத்தும் போய்விடும். அவர்கள் சாயலிலிருந்து நாம் அவர்களை அறிந்துகொள்வோம்.

உயிர்த்தெழுதலின் காலையிலே எழும்பிவருகிற நம் நண்பர்களைச் சந்திக்க நாம் ஆயத்தமாக வாஞ்சிக்கிறோம்.... “அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாக இருப்போம் என்று சுவிசேஷத்திலே கூறப்பட்ட நம்பிக்கையை நாம் உறுதியாய் பற்றிக்கொள்வோமாக.”★

# சிலருக்காக நிகழவிருக்கும் சிறப்பான ஓர் உயிர்த்தெழுதல்!

**“இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்.” —வெளிப்படுத்தல் 1:7.**

அவரைக் குத்தினவர்களும், (வெளி. 1:7) கிறிஸ்துவின் மரணத்தின் கடுந்துயர்களை பரிகாசம்பண்ணினவர்களும், ஏளனம் செய்தவர்களும், அவருடைய மக்களையும் அவருடைய சத்தியத்தையும் மிகவும் கோபாவேசத்தோடு எதிர்த்தவர்களும், அவருடைய மகிமையையும் அவருக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்திருந்த மக்களுக்குக் கிடைக்கும் கனத்தையும் காணும்படியாக எழுந்திருப்பார்கள்.

கிறிஸ்துவிற்காக நியமிக்கப்பட்ட வழக்கு விசாரணையின்போது காய்பா தன் வலதுகையை வானத்திற்கு நேராக உயர்த்தி, ஒரு பக்திவிநயமான சூளுரையோடு, இயேசுவை நோக்கி: “நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்” (மத்தேயு 26:63) என்றான்....

காதுகளெல்லாம் கவனித்திருக்க, கண்களெல்லாம் அவர்மேல் பதிந்திருக்க இயேசு : “நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்.26:64) என்றார். அப்போது, பரலோக ஒளி வெளுத்துப்போன அவருடைய முகத்தைப் பிரகாசிப்பித்தது.

ஒரு கணம், கிறிஸ்துவின் தெய்வீகம் அவருடைய மனுஷீகத்தில் பளிச்சிட்டது. ஊடுருவிப் பார்க்கின்ற இரட்சகரின் பார்வைக்குமுன், அந்தப் பிரதான ஆசாரியன் நடுங்கினான்.... நித்திய நியாயதிபதியின் முன்பாக தான்

நிற்கிறதைப்போன்று ஒருகணம் உணர்ந்தான். எல்லாவற்றையும் காண்கிற அவருடைய கண்கள் அவனுடைய எண்ணங்களை வாசிப்பதாகவும், மரித்தவர்களோடு புதைந்துபோகவேண்டிய இரகசியங்களை அவர் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதைப்போலவும் உணர்ந்தான்.

பிரதான ஆசரியனுடைய கவனத்திலிருந்து அந்த காட்சி மறைந்தது.... தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு.... தேவ தூஷ ணத்திற்காக அந்த கைதி தண்டிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தான். "இனி சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய் தோன்றுகிறது" (மத்தேயு 26:65,66) என்றான். எல்லாரும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தினார்கள்.

இவ்வாறாக, யூத அதிகாரிகள் தங்களுக்கான பங்கைத் தெரிந்துகொண்டார்கள். சிங்காசத்தின்மேல் வீற்றிருந்தவருடைய கைகளில் வைத்திருந்த, யோவான் கண்ட, ஒருவரும் திறக்கக்கூடாத அந்தப் புத்தகத்தில், அவர்களுடைய தீர்மானம் பதிவுசெய்யப்பட்டது. அந்தப் புத்தகம் யூத இராஜசிங்கத்தால் உடைக்கப்படும் அந்த நாளிலே, அவர்கள் முன்பாகப் பழிவாங்குகிற நிகழ்ச்சியாக, அவர்கள் தெரிந்துகொண்டது வெளிக்காட்டப்படும்.

கிறிஸ்து இரண்டாம் முறை வரும்போது, பொல்லாதவர்கள் கூட்டம் சுற்றி வளைத்திருந்த ஒரு கைதியாக அவரைக் காணமாட்டார்கள். அவரை பரலோகத்தின் இராஜாவாகக் காண்பார்கள்.... அப்போது நியாயவிசாரணை மன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை ஆசாரியர்களும் அதிகாரிகளும் தெளிவாக நினைவுகூருவார்கள். நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அக்கினி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டதுபோல அவர்களுக்குக் காணப்படும் .★

# கொடிய வெப்பத்தினால உருகிப்போகவிருக்கும மூலப்பொருட்கள்!

**“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.”**
**–2 பேதுரு 3:10.**

கிறிஸ்துவின் நாளிலே அவர் வருகைக்குச் சற்றுமுன்னதாக ஆண்டவர் வானத்திலிருந்து தமது கோபத்திலே மின்னல்களை அனுப்புவார். அது பூமியிலிருக்கிற அக்கினியோடு சேர்ந்துகொள்ளும். மலைகள் சூளையைப்போல எரியும். அவைகளிலிருந்த பயங்கரமான எரிமலைக் குழம்புகள் வெளியேறி, கிராமங்களையும், பட்டணங்களையும், வயல்களையும், தோட்டங்களையும் அழித்துப்போடும். உருகிப்போன குழம்புகளையும் பெரிய கற்களையும் சூடேறின மண்ணையும் ஆறுகளிலே அவைகள் கொட்டும்போது, அவைகளிலுள்ள தண்ணீர், பானையிலிட்ட நீரைப்போன்று பொங்கி கொதித்து, பெரிய பெரிய பாறைகள், விவரிக்கமுடியாத குமுறலோடு, உடைந்த துண்டுகளை நிலத்தின்மீது சிதறியடிக்கும். ஆறுகள் எல்லாம் வறண்டுபோகும். பூமி அதிர்ந்து நடுங்கும். ஆங்காங்கே பூமியதிர்ச்சிகளும் பயங்கரமான எரிமலை வெடிப்புகளும் உண்டாகும். பூமியின் குடிகளான துன்மார்க்கர் பூமியின்மீதிருந்து அழியும்வரை அவர்களை தேவன் வாதிப்பார்.

குடிகாரனைப்போல பூமி தள்ளாடி, கூடாரத்தைப்போல பெயர்ந்துபோகும். ஐம்பெரும் பூதங்கள் எல்லாம் தீயினால் உருகும். வானம் புத்தகத்தைப்போல சுருட்டப்படும்.

பூமியின் அடியிலே மறைத்துவைக்கப்பட்டிருந்த மூலகங்கள் வெடிப்பதினால், பூமியின் மேற்பரப்பு பிளந்துபோகும். அவைகள்

அவிழ்க்கப்படும்போது, தங்களுக்கடியில் வேலை செய்தவர்களை பட்டினிபோட்டு, தங்கள் சொத்துக்களோடு வருடக்கணக்காக சேர்த்துவைத்த ஏராளமான பொக்கிஷங்களனைத்தையும் துடைத்தொழித்துப்போடும்.

மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தும் பெரும் தீ நமக்கு சற்றுமுன்பாக இருக்கிறது. இச்சமயத்தில் வாழ்வின் வீணான உழைப்பு ஒரு இரவிலும்—பகலிலும் முற்றிலுமாக அடித்துச்செல்லப்படும்.

மனித உயிர்கள் அதிகமாக சேதமாகும். ஆனாலும், தேவன் ஆயத்தம்பண்ணியிருந்த பேழையிலே, ஜலப்பிரளயத்திலிருந்து நோவா காக்கப்பட்டதைப்போல, இந்த அழிவிலும் ஆபத்திலும், தம்மை நம்புகிறவர்களுக்கு ஆண்டவர் தாமே அடைக்கலமாயிருப்பார். சங்கீதக்காரன்மூலமாக: "எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது." "தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து" (சங். 91:9,10; 27:5) என்று வாக்குக் கொடுக்கிறார். அந்த ஆண்டவரை நமது நம்பிக்கையாக—பாதுகாப்பாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டாமா?

கிறிஸ்து தம்மை நேசிக்கிறவர்களுக்காக மாளிகைகளை ஆயத்தஞ்செய்யச் சென்றிருக்கிறார். அந்த மாளிகைகளுக்காக நாம் நம்மை ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கவேண்டும். உலகத்தின் போராட்டங்களிலிருந்து அங்கேதான் நமக்கு ஓய்வு உண்டு. ★

# ஏழாவது வாதையைப்பற்றி சித்திரம்போன்ற ஒரு விளக்கம்!

**“உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ? ... ஆபத்து வருங்காலத்திலும், ... பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன்.” –யோபு 38:22,23.**

ஆஸ்திரேலியாவிலுள்ள, புராஸ்பெக்ட் என்ற இடத்தில் எனக்காகக் காத்திருந்த பணியினிமித்தம் நான் செல்லும்போது பைரன் பெல்டன், சாரா பெல்டன், சகோதரி மே லேசி ஆகியோர் என்னுடன் வந்தார்கள். எங்களுடைய கூட்டத்தை முடித்துவிட்டு, அந்த வீட்டைவிட்டு வெளியேறும்போது, ஒரு புயல் வந்து கொண்டிருப்பதை நாங்கள் கண்டோம்.... எச்சரிக்கப்பட்டதால், எங்கள் குதிரைவண்டியில் துணிவுடன் வேகமாகச் சென்றுகொண்டிருந்தோம். ஏறக்குறைய வீட்டை அடைந்துவிட்ட நேரத்தில் பலமான புயல் காற்று எங்களைத் தாக்கியது. பெரிய பெரிய பனிக்கற்கள் விழத்தொடங்கின. ஒவ்வொன்றும் ஏறக்குறைய ஒருகோழிமுட்டையின் அளவில் இருந்தது.... அவைகள் குதிரைக்குட்டிகளின்மேல் பயங்கரமான வேகத்தோடு மோதியதால், அக்குட்டிகள் மிரண்டுபோயின.

நான் பைரனிடம், நீ கீழே இறங்கு.... குதிரையின் காதில் போய் பேசு. அதை அடித்துக்கொண்டிருப்பது நீ அல்லவென்று அவைகளுக்குத் தெரியட்டும் என்றேன். நான் சொன்னதுபோலவே அவர் செய்தார். அவ்வாறே சாராவையும் மே லேசியையும் பார்த்துச்சொன்னேன். அவர்களும் இறங்கினார்கள். பின்னதாக அவர்கள் உதவியோடு நானும் இறங்கினேன். காற்று மிகவும் பலமாக வீசினபடியினால், எங்கள் தொப்பிகளெல்லாம் பறந்துபோயின. நாங்கள் அமர்ந்திருந்த மெத்தைகளும் அங்கிருந்த குடைகளும் அந்த வண்டியின் கயிறுகளும் நாலாபுறமும் பறந்து வயல்களிலே விழுந்தன....

எப்படிப்பட்ட காட்சி அது! சகோதரி பெல்டனும், மே லேசியும் நானும் தொப்பியில்லாதவர்களாக வீடுபோய் சேர்ந்தோம்.... பயந்து போன புதிய குதிரையோடு பைரன் இருந்தார்.... ஆண்டவருடைய உதவிக்காக எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதுமட்டுமே எங்களால் அங்கே செய்யமுடிந்தது.

சாரட்வண்டியில் போகும்போது புயலில் மாட்டிக்கொண்ட ஒரு பெரிய அனுபவமாக இது எனக்கு இருந்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் உலகத்தின்மேல் ஊற்றப்படுகிற நாளை நான் நினைத்துப் பார்த்தேன். இருளும், பயங்கரமான காரிருளும் ரோமத்தால் செய்யப்பட்ட இரட்டுப் போர்வையைப்போல வானங்களை மூடிக்கொள்ளப்போகிற நாளை நினைத்தேன். நீங்கள் உங்கள் வழியேபோய், தேவனுடைய உக்கிரமாகிய கோபாக்கினையை பூமியின்மேல் ஊற்றுங்களென்று (வெளி. 16:1) ஆண்டவருடைய வல்லமையான சத்தம் தூதர்களுக்குக் கட்டளை கொடுக்கும்போது, எப்படி இருக்கும் என்பதை என் மனம் கற்பனை செய்துபார்த்தது....

வெளிப்படுத்தல் 6–ம், 7–ம் அதிகாரங்கள் மிகுந்த அர்த்தமுள்ளவை களாயிருக்கின்றன. ஆண்டவர் வெளிப்படுத்தி யிருக்கிற அவருடைய நியாயத்தீர்ப்புகள் மகா பயங்கரமானவைகள். ஏழு தூதர்களும் தங்களது கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்காக—உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்காக, ஆண்டவருக்கு முன்பாக நிற்கவேண்டும். அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டன. இப்பூமியின் குடிகளைத் தண்டிப்பதற்காக ஆண்டவர் போகிறார். (வெளி. 16:21).

அவருடைய வாதைகள் பூமியின்மேல் வரும்போது, தாலந்து நிறையான கல்மழை வானத்திலிருந்த துன்மார்க்கர்மேல் விழும். ★

அக்டோபர் 4

# பூமி தத்தளிக்கிறது!

**“இதினிமித்தம் சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தைவிட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன். துரத்தப்பட்ட வெளிமானைப்போலும், யாரும் சேர்க்காத ஆட்டைப்போலும் இருப்பார்கள்; அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குப் போக முகத்தைத் திருப்பி, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.” —ஏசாயா 13:13,14.**

அடர்ந்த மேகங்கள் இன்னமும் வானத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. சூரியன் அவ்வப்போது வெளிப்படுகிறது. பார்வைக்கு அது யேகோவாவின் பழிவாங்கும் கண்போன்று தோற்றமளிக்கிறது. பூமியையே அக்கினிஜுவாலையாக மாற்றுவதுபோன்ற கொடிய மின்னல்கள் வானங்களினின்று துள்ளி வருகின்றன. இடியின் பயங்கரமான குமுறலுக்கும்மேலாக வெவ்வேறு விதமாக—புரிந்துகொள்ளக்கூடாத—அச்சந்தரும் குரல்கள் துன்மார்க்கருக்கு வரும் அழிவை அறிவிக்கின்றது. நடுவிலே, அந்தச் சமயத்தில் கூறப்பட்ட வார்த்தைகளை எல்லாரும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், பொய்ப்போதகர்கள் அவைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறார்கள். கொஞ்ச நேரத்திற்குமுன்பு கவலையற்று பெருமையோடு தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற பிள்ளைகளை எதிர்த்து எக்களித்தவர்கள், இப்போது திகிலடைந்து, பயத்தால் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். மூலகங்களால் ஏற்படும் சத்தங்களுக்குமேல் அவர்களது புலம்பல் கேட்கப்படுகிறது. பிசாசுகளும் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஆமோதித்து, அவர் வல்லமைக்கு முன்பு நடுங்குகின்றன.... மனிதர்களோ அஞ்சி அஞ்சி, ஆதரவற்ற பயங்கரமான நிலையில், இரக்கத்திற்காகக் கெஞ்சி மன்றாடுகிறார்கள்....

மேகங்களின் நடுவிலே உண்டான ஒரு பிளவின் வழியாக சூழ்ந்திருக்கிற இருளுக்கு நான்கு பங்கு எதிரிடையான வெளிச்சத்தோடு ஒரு நட்சத்திரம் பிரகாசிக்கிறது. விசுவாசிகளுக்கு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் அது தந்தது. ஆனால் தேவனின் கற்பனைகளை

மீறினவர்களுக்கோ அது உக்கிர கோபத்தையும் கொடுமையையும் காட்டியது. கிறிஸ்துவிற்காக எல்லாவற்றையும் தியாகஞ்செய்தவர்கள், ஆண்டவருடைய கூடாரத்தின் மறைவிலே மறைக்கப்பட்டவர்கள்போன்று இப்பொழுது பத்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் சோதிக்கப்பட்டாயிற்று. உலகத்தாருக்கு முன்பாகவும், சத்தியத்தை அவமதித்தவர்களுக்கு முன்பாகவும், தங்களுக்காக மரித்தவருக்குத் தங்களது உத்தமத்தை நிரூபித்துக் காண்பித்தார்கள். மரண ஆபத்தின் நேரத்திலும் தங்களது நேர்மையை உறுதியாகக் காத்துக்கொண்ட அனைவர்மீதும் ஒரு அற்புதமான மாறுதல் ஏற்பட்டது. காரிருளிலிருந்தும், பிசாசுகளாக மாறிய மனிதர்களின் கொடூரச்செயல்களிலிருந்தும் திடீரென விடுதலையாக்கப்பட்டார்கள். இதுவரை வெளுத்துப்போய் வேதனையடைந்து சோர்வடைந்திருந்த முகங்கள், ஆச்சரியத்திலும், விசுவாசத்திலும் அன்பிலும் பிரகாசமடைந்தன. “தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்” (சங்கீதம் 46:1–3) என்று அவர்கள் வெற்றி முழக்கமிட்டனர்.

★

# வானத்தில் தேவனுடைய பிரமாணம் காணப்படுகிறது!

**“வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி.” —சங்கீதம் 50:6.**

மேகங்கள் விலகின, இருபக்கமும் நிலவிய இருண்ட சீற்றத்தோடு குமுறிய ஆகாயவிரிவிற்கு நேர்மாறாக, மிகுந்த மகிமையோடு நட்சத்திரங்கள் நிறைந்த வானம் காணப்பட்டது. பரலோகப் பட்டணத்தின் மகிமை, பாதியாகத் திறந்திருந்த அதின் வாசல்கள் வழியாகக் கடந்துவந்தது.

ஆலயத்தினுள்ளே, தேவனுடைய கைவிரலினால் எழுதப்பட்ட பத்துக் கற்பனைகள் அடங்கிய கற்பலகைகள் தங்கள் மறைவிடத்திலிருந்து எடுத்துவரப்படும். அதிலே தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகளும் காணப்படும். உடன்படிக்கைப்பெட்டிக்குள் இருக்கிற இந்த கற்பலகைகள், சத்தியத்திற்கும் தேவனுடைய சட்டங்களுக்கும் நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக இருக்கும்.

புனித காரியங்களின் மதிப்பைக் குலைத்துப்போட்ட எண்ணங்களும் இதயங்களும் தாங்கள் யேகோவாவின் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற வல்லமை படைத்தவர்கள் என்று எண்ணிக்கொண்டார்கள். ஆனால், ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட கட்டளைகள் இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டு, தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியினுள் பரலோக ஆவணக்கூடத்திலே பத்திரமாக இருக்கிறது. கிருபாசனத்திற்குக் கீழிருக்கிற அந்த பரிசுத்தமான மறைவிடத்திலிருந்து, பூமியிலிருக்கிற எந்த வல்லமையும் அவைகளை எடுக்கமுடியாது.

மடிக்கப்பட்ட இரண்டு கற்பலகைகளையும் பிடித்திருக்கிற ஒரு கை வானத்திலே காணப்படுகிறது. “வானங்கள் அவருடைய நீதியை

அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி" (சங். 50:6) என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். இடிமுழக்கங்களுக்கும் அக்கினிக்கும் நடுவே, வாழ்க்கையின் வழிகாட்டியாக, சீனாய் மலையிலே கொடுக்கப்பட்ட தேவனுடைய நீதியாகிய அந்த பரிசுத்த கற்பனைகள் இப்போது நியாயச் சட்டமாக மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அந்தக் கரம் அந்தக் கற்பலகைகளைத் திறக்கிறது. அக்கினியினாலே எழுதப்பட்ட பத்துக்கற்பனைகளும் அங்கே காணப்படுகின்றன. எல்லோரும் வாசிக்கத்தகுந்தவிதத்தில் அதின் வார்த்தைகள் தெளிவாக இருக்கின்றன. அவர்களுடைய நினைவின் சக்திகள் எழுச்சி அடைகின்றன. முரணான சமயக் கருத்துக்கள், மூடநம்பிக்கைகள் ஆகிய இருள் அவர்கள் மனதிலிருந்து அகன்றுபோகிறது. அங்கே, புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில்—சுருக்கமாக—அதிகாரத்தோடு—ஆண்டவருடைய பத்துக்கற்பனைகளும், பூமியின் குடிகள் அனைவருக்கும் முன்பாக காண்பிக்கப்படுகிறது.

தேவனுடைய பரிசுத்த கட்டளைகளை மிதித்துப்போட்ட மக்களுடைய பயத்தையும், அவர்கள் மனம் உடைந்தவிதத்தையும் விவரிக்க இயலாது.

ஊழியக்காரரிலிருந்து கடைசி மனிதன்வரை ஆண்டவருடைய கற்பனைகளுக்கு எதிரிகளாயிருந்தவர்கள் அனைவரும் சத்தியம் என்றால் என்ன? அதற்கு நாம் செய்யவேண்டிய கடமை என்ன? என்கிறதை உணருகிறார்கள். ஏழாம்நாள் கற்பனையாகிய ஓய்வுநாளே, ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையாயிருக்கிறது என்கிறதை மிகவும் தாமதமாகவே புரிந்துகொள்கிறார்கள். ★

# கிறிஸ்து வரப்போகும் நாளும் மணி நேரமும் எப்பொழுது அறிவிக்கப்படும்?!

**"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்." —மத்தேயு 24:36.**

இயேசு வரப்போகிற நாளையும் மணி நேரத்தையும் அறிவிக்கிற தேவனுடைய சத்தம் பரலோகத்திலிருந்து கேட்கப்படுகிறது. அவர் தமது மக்களோடு செய்கிற நித்திய உடன்படிக்கையையும் அறிவிக்கிறார். இடிமுழக்கத்தின் பேரோசைகளாக அவருடைய வார்த்தைகள் பூமி முழுவதிலும் உருண்டோடுகிறது.

அவர் ஒரு வாக்கியத்தைச் சொன்னபின்பு, சற்றுநேரம் நிதானித்தார். அந்த இடைவெளியிலே அவரது வார்த்தைகள் உலகமெங்கும் உருண்டோடின. தேவனுடைய இஸ்ரவேலர், மேலே நோக்கி கண்களைப் பதித்தவர்களாக, யேகோவா தேவனுடைய வாயிலிருந்து இடிமுழக்கத்தின் பேரோசையைப்போல பூமியெங்கும் உருண்டோடிய அந்த வர்த்தைகளை கவனித்துக் கேட்டனர். அது மிகவும் பக்திவிநயத்தோடும் அச்சந்தரக்கூடியதாகவுமிருந்தது. ஒவ்வொரு வாக்கியம் முடிவடைந்தபோதும், "மகிமை! அல்லேலூயா!" என்று சொல்லி பரிசுத்தவான்கள் ஆர்ப்பரித்தார்கள்.

உயிரோடிருந்த 1,44,000 பேரான பரிசுத்தவான்களும் அந்த சத்தத்தைப் புரிந்துகொண்டார்கள். துன்மார்க்கரோ, அதை இடிமுழக்கமென்றும் பூமியதிர்ச்சியென்றும் நினைத்துக்கொண்டார்கள்.

தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலர் மேலே பார்த்தபடி நின்றார்கள். மோசேயின் முகம் சீனாய் மலையிலிருந்து இறங்கியபோது பிரகாசித்ததைப்போல, அவர்கள் முகங்களும் அவருடைய மகிமையால் பிரகாசமடைந்தன. துன்மார்க்கரால் அவர்களை நோக்கிப்பார்க்க

முடியவில்லை. ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்ததின்மூலம் தேவனை கனம்பண்ணியவர்கள்மீது ஆசீர்வாதம் கூறப்பட்டபோது, அங்கே வல்லமையான வெற்றிமுழக்கம் எழுந்தது.

அதன் பின்னர் தேசம் ஓய்வெடுக்கிற யூபிலி ஆண்டு தொடங்கியது.

பரிசுத்தவான்கள்மேல் மகிமையான ஒரு ஒளி பிரகாசித்தது. அவர்கள் அப்போது எவ்வளவு அழகாகக் காணப்பட்டார்கள்! சோர்வு, கவலை ஆகியவைகளின் அனைத்து அடையாளங்களும் மாறிப்போயின. எல்லா முகங்களிலும் அழகும் ஆரோக்கியமுமே காணப்பட்டது. அவர்களைச் சுற்றிலுமிருந்த அவர்களது சத்துருக்களாகிய அஞ்ஞானிகள் செத்த மனிதரைப்போல் விழுந்தார்கள். பரிசுத்தவான்களின்மீது பிரகாசித்த ஒளியை அவர்களால் தாங்கிக்கொள்ளக்கூடாதிருந்தது. கிறிஸ்து வானத்தின் மேகங்கள்மேல் வரும் வரைக்கும் அந்த ஒளியும் மகிமையும் அவர்கள்மீது தங்கியிருந்தது.

இயேசு நின்றிருந்த இடத்திலே அக்கினி மேகம் ஒன்றை நான் கண்டேன். பின்பு.... கிறிஸ்து அந்த மேகத்திலே தமது இடத்தை எடுத்துக்கொண்டார். அந்த மேகம் அவரை கிழக்குத் திசைக்கு எடுத்துச்சென்றது. அங்கே மனுஷகுமாரனின் அடையாளமான—சிறிய கார்மேகமாக அது பூமியிலிருந்த பரிசுத்தவான்களுக்குக் காணப்பட்டது. பரிசுத்தமானவரிடத்திலிருந்து கிழக்கிற்குச்செல்ல அது எடுத்துக்கொண்ட அந்த சில நாட்களில், சாத்தானுடைய கூட்டத்தார் பரிசுத்தவான்களுடைய பாதத்திலே விழுந்து பணிந்துகொண்டார்கள். ★

# அந்தப் பொன்னான காலையில் பளிச்சிடும் ஒளிக்கதிர்கள்!

**"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்." —மத்தேயு 24:27.**

உலக முழுவதும் இருளில் மூழ்கியிருக்கும்போது, பரிசுத்தவான்களுடைய கூடாரங்களில் வெளிச்சம் இருந்தது. இரண்டாம் வருகையின் முதல் ஒளிக்கதிரை இவர்கள் பார்ப்பார்கள்.

விரைவில் மனிதனின் கையளவில் பாதியான ஒரு சிறிய கருத்த மேகம் கிழக்கிலே தோன்றுகிறது. அந்த மேகந்தான் நம் இரட்சகரைச் சூழ்ந்திருக்கிற மேகம். வெகுதூரத்திலிருந்து பார்க்கும்போது, அது இருளினால் மூடப்பட்டதுபோலத் தெரிகிறது. இதுதான் மனுஷகுமாரனுடைய அடையாளமென்று தேவனுடைய மக்கள் அறிவார்கள். பூமியை நோக்கி நெருங்கி வரும்போது, மாபெரும் வெண்மேகமாக மாறும்வரைக்கும் அந்த கருத்த சிறிய மேகம் ஒளியினால் நிறைந்து, மிகவும் மகிமைவாய்ந்ததாகக் காணப்பட்டது. பக்திவிநயமான அமைதியோடு அவர்கள் அதை உற்றுநோக்கிக்கொண்டிருந்தார்கள். அதின் அடிப்பாகம் பட்சிக்கிற அக்கினியைப்போன்ற ஒரு மகிமையோடு காணப்பட்டது. வெண்மேகத்திற்கு மேலாக உடன்படிக்கையின் வானவில் காணப்பட்டது. வல்லமையுள்ள வெற்றி வேந்தனாக இயேசு அதின்மேல் ஏறிவருகிறார். அவமானம், ஆபத்து ஆகிய கசப்பான பாத்திரத்தில் குடிக்கக்கூடிய "துக்கம் நிறைந்தவராக" இப்பொழுது அவர் இருக்கவில்லை. வானத்திலும் பூமியிலும் வெற்றிகொண்டவராக—உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கிறவராக வருவார். "உண்மையும் சத்தியமுமுள்ளவர்," "நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்." "அவரோடுகூட பரலோகத்திலுள்ள சேனைகளும் வரும்" (வெளி. 19:11,14). பரலோகப் பாடல்களைப் பாடியவாறு எண்ணக்கூடாத திரள்கூட்டமான பரிசுத்த தூதர்களும் அவரோடுகூட வருவார்கள். ஆயிரம் பதினாயிரமான பிரகாசமான தூதர்களால் ஆகாயம் நிறைந்தது. அந்தக்

காட்சியை எந்த மனிதனாலும் விவரிக்க முடியாது. அதின் சிறப்பை எந்த மனிதனாலும் புரிந்துகொள்ளமுடியாது. "அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது"–ஆபகூக் 3:3,4. அந்த ஜீவனுள்ள மேகம் இன்னும் அருகே வரவர, ஜீவாதிபதியை எல்லாக் கண்களும் காண்கின்றன. அவருடைய பரிசுத்த சிரசின் அழகை குறைக்கத்தக்கதாக இப்பொழுது அங்கு முள்முடியில்லை; மாறாக அவர் தலையின்மேல் மகிமையான ஒரு இராஜமுடி இருக்கிறது. நடுப்பகல் சூரியனின் ஜொலிக்கும் பிரகாசத்தைவிட அவரது முகம் பிரகாசமாகக் காணப்பட்டது. "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது"–வெளி. 19:16.

தலைகளை மேலே உயர்த்தி," நீதியின் சூரியனுடைய ஒளிக்கதிர்கள் தங்கள்மேல் பிரகாசிக்க, இரட்சிப்பு சமீபித்ததென்ற ஆனந்தத்தில் உயிரோடிருந்த பரிசுத்தவான்கள்: "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்"(ஏசாயா 25:9) என்கிற முழக்கத்தோடு மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார்கள்.

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை!

**“நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்.” —சங்கீதம் 50:3,4.**

வெகு சீக்கிரத்தில் கிழக்கு முகமாக எங்களுடைய கண்கள் திரும்பின. அங்கே மனித கைகளில் பாதி அளவான ஒரு சிறிய கருத்த மேகம் தோன்றிற்று. அது மனுஷ குமாரனுடைய அடையாளம் என்று நாங்கள் அனைவரும் அறிந்திருந்தோம். பூமியை நோக்கி வந்துகொண்டிருந்த அது மிகப்பெரிய வெண்மேகமாக ஆகும்வரை, பிரகாசத்திலும் மகிமையிலும் அதிகமாகிக்கொண்டிருந்ததை நாங்கள் அனைவரும் மிக பயபக்தியுடன் கவனித்துக்கொண்டிருந்தோம். அதின் அடிப்பாகம் அக்கினியைப்போலத் தோன்றியது அதின்மேலே ஒரு வானவில் காணப்பட்டது. பதினாயிரம் தேவதூதர்கள் அதைச்சுற்றிலும் மிக இனிமையான பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அதின்மேல் மனுஷ குமாரன் அமர்ந்திருந்தார்.

முதலாவது வெகுதூரத்தில் காணப்பட்டபொழுது, அந்த மேகம் மிகச் சிறியதாகத் தோன்றியது. அது மனுஷகுமாரனுடைய அடையாளம் என்று தேவதூதன் சொன்னான். அது பூமிக்குச் சமீபமாக வந்தபோது, அதின் மேலான மகிமையையும், வெற்றி வேந்தனாக பவனிவந்த கிறிஸ்துவின் கெம்பீரத்தையும் எங்களால் பார்க்கமுடிந்தது.

அவருடைய முடி வெண்மையாகவும், சுருண்டும் அவருடைய தோள்களின்மேல் தவழ்ந்துகொண்டுமிருந்தது. அவர் சிரசின்மேல் அநேகக் கிரீடங்களிருந்தன. அவருடைய பாதங்கள் அக்கினியைப்போலக் காணப்பட்டன. அவரது வலதுகரத்தில் கருக்கான அரிவாள் ஒன்றிருந்தது. அவரது இடது கரத்தில் வெள்ளி எக்காளம் ஒன்று இருந்தது. அவருடைய

கண்கள் எரிகிற அக்கினி ஜுவாலையைப்போலிருந்தன. அது அவருடைய பிள்ளைகளை ஊடுருவிப்பார்த்தது. தள்ளப்பட்டவர்களுடைய முகங்கள் கருத்துப்போயின. பின்பு நாங்கள் அனைவரும், "யார் நிலைநிற்கக்கூடும்? எனது அங்கி கறையற்றிருக்கிறதா?" என்று சத்தமிட்டோம். அப்போது, அந்தத் தூதர்கள் பாடுவதை நிறுத்தினர். சற்று நேரத்திற்கு அங்கு பயங்கர அமைதி நிலவியது. "கைகளில் சுத்தமுள்ளவர்களும் இருதயங்களில் மாசில்லாதவர்களும் நிலைநிற்க முடியும். என் கிருபை உனக்குப்போதும்" என்று இயேசு கூறினார். அந்த வார்த்தைகளை அவர் சொன்னபொழுது, எங்கள் முகங்கள் பிரகாசமாயின. மகிழ்ச்சி எங்கள் இருதயத்தை நிரப்பிற்று. மேகம் பூமிக்கு மிக அருகில் வந்தது. தூதர்கள் மேலும் உரத்த குரலில் பாடத்துவங்கினர்.

பூமி அவருக்கு முன்பாக நடுங்கியது. வானங்கள் சுருட்டப்பட்ட புத்தகத்தைப்போல சுருண்டு விலகிப்போயிற்று. எல்லா மலைகளும் தீவுகளும் தங்கள் ஸ்தானத்தைவிட்டு அகன்றுபோயின. பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும் சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளிந்துகொண்டார்கள். ★

# பூமியின் கெபிகளிலும்... குகைகளிலும்...!

**“பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும்போது, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள்.” —ஏசாயா 2:19.**

யேகோவாவின் பிரமாணத்திற்கெதிராக மனிதன் கொண்டிருந்த விரோதத்தினாலே, அங்கங்கே மறைந்திருந்த தேவ பிள்ளைகள் சிதறடிக்கப்பட்டார்கள். பூமியின் எல்லா வல்லமைகளாலும் ஒடுக்கப்பட்டார்கள். அவர்கள் யேகோவாவின் சட்டதிட்டங்களுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்திருந்தபடியால், சத்துருக்களின் கொடுமைக்குட்பட்டு, கன்மலைகளின் வெடிப்புகளுக்கும், குன்றுகளின் குகைகளுக்கும் சிதறடிக்கப்பட்டார்கள். ஆனாலும், தேவனுடைய மக்கள் விடுவிக்கப்படுவார்கள். அவர்களுடைய பகையாளிகளுக்கு தாம் நீதியைச் சரிக்கட்டும் தேவன் என்று அவர் தம்மை காண்பிப்பார்....

தேவ மக்களுடைய மறைவிடங்களாகிய கன்மலைகளின் வெடிப்புகளிலும் குகைகளிலுமிருந்து, அவருக்கு உண்மையும் உத்தமமுமான சாட்சிகளாயிருக்கும்படி அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

தங்கள் கலகத்திலே துணிந்துநின்ற மக்கள், வெளிப்படுத்தல் 6:15–17–ல் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை நிறைவேற்றுவார்கள். அதே குகைகளிலும் வெடிப்புகளிலுமிருந்து எடுக்கப்படும் கடிதங்களிலும் பிரசுரங்களிலும் தங்களுக்கு எதிரிடையான சாட்சிகளைக் காண்பார்கள். ஆடுகளைத் தவறான பாதையிலே நடத்தின மேய்ப்பர்கள், “சத்திய ஒளியை வெகு சாதாரணமாகக் காண்பித்தது நீங்கள்தான்; அடிமைத்தனத்தின் நுகங்களாயிருந்த தேவனுடைய சட்டங்கள் ஒழிக்கப்பட்டன என்று எங்களுக்குச் சொன்னதும் நீங்கள்தான். ஏழாம் நாள் சபையினர் சத்தியத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் உணர்ந்துகொண்ட

பொழுது, தவறான கொள்கைகளை எங்களுக்குப் போதித்தவர்களும் நீங்கள்தான். எங்களுடைய இரத்தமெல்லாம் உங்களுடைய ஆசாரிய உடையின்மேல் இருக்கிறது.... இப்போது எங்களுடைய ஆத்துமாக்களை உங்களால் மீட்கமுடியுமா?.... நீங்கள் வேதவாக்கியங்களை திரித்து உபதேசித்தபோது அதற்கு செவிகொடுத்தவர்களுக்காக என்னசெய்வோம்? சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தால் அது எங்களைக் காப்பாற்றியிருக்குமே, அதைப் பொய்யாக மாற்றிவிட்டீர்களே" என்று தங்களுக்கு எதிராக எழும்புகிற புலம்பல்களைக் கேட்பார்கள்.

தேவனுடைய ஓய்வுநாளை காலின்கீழ்ப்போட்டு மிதிக்கத்தக்கதாகவும், அவருடைய நினைவுச்சின்னத்தை குலைத்துப்போடத்தக்கதாகவும், அவரது மேய்ச்சலைத் தங்களது பாதங்களால் மிதிக்கத்தக்கதாகவும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து பயிற்சி கொடுத்த மக்களின்மீது பழிவாங்கத்தக்கதாக, கிறிஸ்து வரும்போது, புலம்பும் அவர்களது புலம்பல்கள் வீணாக இருக்கும். பொய்யான போதகர்களை உறுதியாக நம்பினவர்கள், தாங்களாகவே படித்து உணர்ந்துகொள்வதற்கேதுவாக வேத வாக்கியங்களைத் தங்கள் கைகளில் பெற்றிருந்தார்கள். சத்தியத்தை வைத்திருந்தபோதிலும், சுயத்தை மறுக்கவேண்டியிருந்ததாலும், சிலுவையைச் சுமக்கவேண்டியிருந்ததாலும், வெளிச்சத்தை விட்டு விலகின ஒவ்வொருவரையும் ஆண்டவர் நியாயந்தீர்ப்பார் என்பதை அவர்கள் அறிகிறார்கள். எந்த மலைகளாலும் கன்மலைகளாலும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய கோபத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய உக்கிரத்திற்கும் அவர்களை மறைத்து காப்பாற்ற முடியாது.★

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரது தோற்றம்!

**“நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.” —பிலிப்பியர் 3:20,21.**

கிறிஸ்து மானிட சாயலில்தான் பரலோகத்திற்கு ஏறிப்போனார். மேகம் அவரை எடுத்துக்கொண்டதை சீடர்கள் பார்த்தார்கள். அவர்களோடு பேசி, நடந்து, ஜெபித்த அதே இயேசு—அவர்களோடு அப்பம்பிட்ட அதே இயேசு—ஏரியிலும் படகுகளிலும் அவர்களோடு பிரயாணஞ்செய்த அதே இயேசு—அதே நாளில் அவர்களோடு சேர்ந்து ஒலிவ மலையின் உச்சிக்கு ஏறிச்சென்ற அதே இயேசு, இப்போது தமது பிதாவினுடைய சிங்காசனத்தைப் பகிர்ந்துகொள்ளும்படி அங்கே சென்றிருக்கிறார். அவர்களிடத்திலிருந்து பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த இயேசுவானவர் எப்படி பரமேறிச்சென்றாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்ற உறுதியை தூதர்கள் அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார்கள்.

கிறிஸ்து பூமியின்மீதிருந்தபோது, அவருடைய மானுடத்தின் மகிமை வெளிப்படவில்லை.... மகிமையின் உடையோடு—வெற்றி ஆரவாரத்தோடு—மிகவும் உயர்த்தப்பட்டவராக—பரலோகத்திலிருந்து இறங்கி வரும்பொழுது, அதே மானுடம் அப்பொழுது காணப்படுகிறது.

கிறிஸ்து தமது சொந்த மகிமையிலும், தம்முடைய பிதாவின் மகிமையிலும், பரிசுத்த தூதர்களின் மகிமையிலும் வருவார். ஆயிரமாயிரம் பதினாயிரம் பதினாயிரம் தூதர்கள், அதாவது அழகிய வெற்றியாளர்களாகிய

தேவகுமாரர்கள் (தூதர்கள்) மேம்பட்ட அழகும் மகிமையும் உடையவர்களாக அவரது பாதையிலே அவரை அழைத்து வருவார்கள். முட்கிரீடம் இருந்த இடத்திலே, ஒரு கிரீடத்தினுள் இன்னொரு கிரீடமாக மகிமையின் கிரீடத்தை அணிந்திருப்பார். அவருடைய அந்த பழைய சிவப்பான ஆடைக்குப் பதிலாக, "பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத" (மாற்கு 9:3) வெண்மையிலும் வெண்மையான ஆடையை அணிந்திருப்பார். அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும், "இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா" (வெளி. 19:16) என்னும் நாமம் எழுதப்பட்டிருக்கும்.

அனைத்து தூதர்களும் வந்துவிட்டபடியால், பரலோகம் முழுவதும் வெறுமையாக இருக்கும். கிறிஸ்து ஒலிவமலையிலிருந்து பரமேறினபொழுது, கலிலேய மனிதர்கள் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததுபோலவே , கீழேயிருக்கிற கர்த்திருக்கும் பரிசுத்தவான்கள், அவர் வருகைக்காக பரலோகத்தை அண்ணாந்து பார்த்து நோக்கிக்கொண்டிருப்பார்கள். அதன்பின்புதான், சாந்தத்தின் மொத்த உருவமான அவரை, முற்றிலுமாகப் பின்பற்றிய பரிசுத்தவான்கள், அடக்கமுடியாத ஆனந்தத்தோடு கண்டு: "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசாயா 25:9) என்று குதூகலிப்பார்கள். அவர்கள் "கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே ..." (1 கொரி. 15:51) மறுரூபமாக்கப்படுவார்கள். இந்த எக்காளம் மரித்த பரிசுத்தவான்களை எழுப்பி, மண்படுக்கைகளினின்று அவர்களை வெளியே வரும்படி அழைக்கிறது. அவர்கள் மகிமையான சாவாமையைத் தரித்தவர்களாக, மரணத்தின்மீதும் பாதாளத்தின்மீதும் வெற்றி! வெற்றி!! என முழக்கமிட்டவர்களாக வெளியே வருகிறார்கள்!★

# இரண்டாம் வருகையில் நியாயத்தீர்ப்பு!

**“நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர் களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது□.”**

**–2 தீமோத்தேயு 4:1.**

நியாயத்தீர்ப்பின் காட்சி, எல்லா உலகங்களுக்கு முன்பாகவும் நடைபெறும். இந்த நியாயத்தீர்ப்பிலே தேவனுடைய அரசாங்கத்தின் கொள்கைகள் மெய்ப்பிக்கப்பட்டு நிலைநாட்டப்படும். அவருடைய பிரமாணம், “பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும்” இறுதியில் நிலைநிற்கும். ஒவ்வொருவருடைய காரியமும் முடிவுசெய்யப்பட்டு, அனைவருக்கும் தீர்ப்பு வழங்கப்படும். அப்பொழுது பாவம் கவர்ச்சியாகத் தோன்றாது. மாறாக, அதின் அனைத்து பயங்கரமான பரிமாணத்திலும் காணப்படும்.

மனுஷகுமாரன் வானத்து மேகங்கள்மேல் வருகிற காட்சியை எந்த மானிட மொழியாலும் சித்தரித்துக்காட்ட முடியாது. அவர் தமது சொந்த மகிமையோடும், தமது பிதாவின் மகிமையோடும், தமது பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரவிருக்கிறார். நித்திய காலமுதல் அவர் அணிந்திருந்த அவருடைய ஒளியின் வஸ்திரத்தைத் தரித்தவராக வருவார். தூதர்கள் அவரோடுகூட வருவார்கள். பதினாயிரம் பதினாயிரமான தூதர்கள் அவரது வழியிலே அவரை அழைத்து வருவார்கள். எக்காளசத்தம் தொனிக்கும். அது மரித்தவர்களை அவர்களுடைய கல்லறைகளிலிருந்து வெளியே அழைக்கும். கிறிஸ்துவின் சத்தம் கல்லறைகளை ஊடுறுவும். மரித்தவர்களின் காதுகளைத் துளைக்கும். கல்லறைகளிலிருக்கிற அனைவரும் எழுந்து வருவார்கள்.

“அவருக்கு முன்னதாக எல்லா ஜாதிகளும் கூட்டப்படும்” மனிதனுக்காக மரித்த அதே நபர், கடைசி நாளிலே அவர்களை நியாயந்தீர்க்கப்போகிறார். “பிதாவானவர் நியாயத்தீர்ப்பு முழுவதையும் குமாரனிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்” கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள் தங்கள் பாவங்களால் துளைக்கப்பட்ட அவரைக் காணும்பொழுது, அந்த நாள் எப்படிப்பட்ட நாளாயிருக்கும்!

அவருடைய இரண்டாம் வருகையிலே, எல்லா இருதயமும் உணர்த்தப்படும். உலகின் அற்பமான காரியங்களுக்காகவும், சுயநலம் சார்ந்த ஆர்வங்களிலும் உலகப்பற்றோடுகூடிய மேன்மைகளிலும் நாட்டங்கொண்டு கிறிஸ்துவை விட்டுவிட்டவர்கள், அவருடைய வருகையிலே தங்கள் தவறுகளை ஒத்துக்கொள்வார்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் கண்டு புலம்புவார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷகனால் கூறப்பட்டவர்கள் இவர்களே.

“அவரைக் குததினவர்களும் அவரைக் காண்பார்கள்” என்ற சொற்றொடர், கிறிஸ்து கல்வாரியில் தொங்கும்போது, அவரைக் குத்தின மனிதரை மாத்திரம் குறிக்காது. மேலும் தங்களது பொல்லாத வார்த்தைகளினாலும் தவறான செயல்களினாலும் இன்றைக்குங்கூட அவரைக் குத்திக்கொண்டிருக்கிறவர்களையும் குறிக்கும். ★

அக்டோபர் 12

# அவரைக் குத்தியவர்கள்!

**"மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்."**
**—மாற்கு 14:62.**

யூத அதிகாரிகள் அவருடைய மகிமையை உற்று நோக்கும்போது, மனுஷகுமாரன் மனுஷீகத்தைத் தரித்திருந்தது அவர்கள் நினைவிலே பளிச்சென்று தோன்றும். அவரை நடத்தினவிதம், மறுத்தவிதம், பெரிய குற்றவாளிக்குச் சாதகமாக நடந்துகொண்ட விதமெல்லாம் அவர்கள் நினைவிற்கு வருகிறது. கிறிஸ்துவின் வாழ்க்கையின் காட்சிகள் அனைத்தும் மிகத் தெளிவாக அவர்களுக்குமுன் தோன்றும். அவர் செய்த அனைத்தும், சொன்ன அனைத்தும், அவர் எந்த அளவிற்கு தம்மைத் தாழ்த்தினார் என்பதும், அவர்களைக் கண்டனம் செய்யத்தக்க அளவிற்கு அவர்களுக்கு முன்பாகக் காணப்படுகிறது.

அவர் எருசலேமிற்கு பவனிவருவதைக் காண்கிறார்கள். அவருடைய செய்தியை ஏற்றுக்கொள்ளாத—மனந்திரும்பாத—அந்த பட்டணத்தைப் பார்த்து, மனம் உடைந்தவராக கடுந்துயரோடு கண்ணீர் சிந்தியதை காண்கிறார்கள். அவர்களை அழைத்தது, அவர்களிடத்தில் அவர் கெஞ்சி மன்றாடியது, மென்மையான உள்ளார்ந்த கவலையுள்ள குரலில் அவர்களிடம் பேசியது, ஆகிய அனைத்தும் மீண்டும் அவர்களுடைய காதுகளில் தொனித்ததுபோன்று காணப்பட்டது. கெத்சேமனே தோட்டத்தின் காட்சி அவர்களுக்கு முன்னாக எழும்புகிறது. பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீக்கக்கூடுமானால் நீங்கும்படிச் செய்யும் (மத்தேயு 26:39) என்கிற கிறிஸ்துவின் ஆச்சரியமான ஜெபம் அவர்களது செவிகளில் தொனிக்கிறது.

நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்கிற பிலாத்துவின் குரலை மீண்டும் அவர்கள் கேட்கிறார்கள். அந்த நியாயவிசாரணைக் கூடத்தில் கிறிஸ்துவின் பக்கத்திலே பரபாஸ் நிற்கின்ற அந்த வெட்கக்கேடான காட்சியை அவர்கள் காண்கிறார்கள். குற்றமற்றவனை தெரிவுசெய்யக்கூடிய

அந்த உரிமை அவர்களுக்கு இருந்தது. எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள், பரபாசையோ—கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ என்று பிலாத்து கூறும் வார்த்தைகளை மீண்டும் அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு மாறுத்தரமாக "இவனை அகற்றும்; பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று அவர்கள் சத்தமிட்டது கேட்கிறது. அப்படியானால், "கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?" என்று பிலாத்து கேட்ட கேள்விக்கு: "அவனை சிலுவையில் அறையவேண்டும்" என்று பதில் கொடுத்ததை அவர்கள் மீண்டும் கேட்டார்கள்.

மீண்டும், அவர்களுக்காகத் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தவர் சிலுவையின் நிந்தையைச் சுமக்கிறார். "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா; மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" என்று உரத்த—வெற்றியின் தொனியில் அவர் பழித்துரைக்கப்படுவதை அவர்கள் கேட்கிறார்கள்.

இப்பொழுது அவரை அவர்கள் கெத்செமனே தோட்டத்திலோ, நியாயவிசாரணைக்கூடத்திலோ, கல்வாரிச் சிலுவையிலோ காணவில்லை. அவரை அவமானப்படுத்திய அடையாளங்கள் மறைந்துபோய்விட்டன. தாங்கள் துப்பிய அந்த முகத்தை— ஆசாரியர்களும் அதிகாரிகளும் உள்ளங்கையினால் அறைந்த அந்த முகத்தை—அந்த தேவனுடைய முகத்தை, அவர்கள் நோக்கிப் பார்க்கிறார்கள். இப்பொழுது உண்மையானது அதின் தெளிவோடு அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ★

# துன்மார்க்கர் ஒருவரையொருவர் தாக்கி அழிக்கின்றனர்!

**“என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும்.”**

**—எசேக்கியேல் 38:21.**

துன்மார்க்கர் மிகவும் வருத்தத்தால் நிறைந்திருக்கிறார்கள். தேவனைத் தாங்களும் தங்களது சக மனிதர்களும் பாவத்தினால் அலட்சியப்படுத்திவிட்டதற்காக அல்ல, தேவன் வெற்றி பெற்றுவிட்டாரே என்பதற்காக வருந்தினார்கள். முடிவு இப்படியாகிவிட்டதே என்று புலம்புகிறார்கள். தங்களது துன்மார்க்கத்தைக்குறித்து அவர்கள் மனந்திரும்புகிறதில்லை. தாங்கள்மட்டும் வெற்றிபெறக்கூடுமானால் எந்த வழிமுறையையும் விட்டுவைக்கமாட்டார்கள்.

ஊழியக்காரரும் மக்களும் தாங்கள் தேவனிடத்தில் சரியான தொடர்பு வைத்திருக்கவில்லை என்கிறதைக் காண்கிறார்கள். எல்லா நியாயத்திற்கும் நீதிக்கும் முதல்வராயிருக்கிற ஆண்டவருக்கு விரோதமாகக் கலகஞ்செய்ததை அவர்கள் காண்கிறார்கள். தெய்வீக நியமங்களை புறம்பே தள்ளிவைத்துவிட்டதினால் ஏற்பட்ட ஆயிரமாயிரம் தீமைகள், பொல்லாப்பு, பிரிவினை, பகை, அக்கிரமம் ஆகியவற்றால் பூமி நிறைந்து, அது ஒரு யுத்தக்களமாகவும் ஊழல் நிறைந்த தொட்டியாகவும் மாறிவிட்டது. சத்தியத்தை மறுத்து, தீவினையில் களிகூர்ந்தவர்களுக்கு இப்பொழுது தென்படுகிற தெல்லாம் இந்தக்காட்சிகள்தான். என்றைக்குமாக இழந்துவிட்ட நித்திய ஜீவனுக்காக கீழ்ப்படியாதவர்களும் உண்மையில்லாதவர்களும் கொண்ட ஏக்கத்தை எந்த மொழியினாலும் விவரிக்கமுடியாது. பேச்சுத்திறமை, மற்ற வெவ்வேறு திறமைகளுக்காக இந்த உலகத்தாரால் யார் யாரெல்லாம் கனப்படுத்தப்பட்டிருந்தார்களோ, அவர்கள் அவைகளின் உண்மையான நிலையை சத்திய வெளிச்சத்தில் காண்கிறார்கள். மீறுதலினாலே தாங்கள் எதை இழந்துவிட்டோம் என்பதை உணர்ந்து பார்க்கிறார்கள். யாருடைய

விசுவாசத்தை அவர்கள் நிந்தித்துப் பரிகசித்து ஏளனம் செய்தார்களோ அவர்களுடைய பாதங்களிலேயே விழுந்து, ஆண்டவர் அவர்களை நேசித்ததை அறிக்கையிடுகிறார்கள்.

மக்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதைக் காண்கிறார்கள். தங்களை அழிவிற்கு நடத்தினவர்கள் நீங்கள்தான் என்று சொல்லி, ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டுகிறார்கள். அனைவரும் ஒன்றுகூடி தங்கள் கசப்பான கண்டனங்களை ஊழியக்காரர்மேல் குவிக்கிறார்கள். உண்மையற்ற போதகர்கள் சமாதான வார்த்தைகளையே தீர்க்கதரிசனமாக உரைத்துக்கொண்டிருந்தார்கள். தேவனுடைய கற்பனைகளை அலட்சியப்படுத்துவதற்கும், அவைகளை பரிசுத்தமாக கைக்கொள்ளுகிறவர்களை உபத்திரவப்படுத்துவதற்கும் தங்களுக்குச் செவிகொடுத்தவர்களை வழிநடத்தினார்கள். இப்பொழுதோ தங்களது நம்பிக்கையற்ற வேதனை நிறைந்த நிலையில், இந்தப் போதகர்கள் தாங்கள் செய்த ஏமாற்று வித்தையை இந்த உலகத்திற்கு முன்பாக அறிக்கைசெய்கிறார்கள். பெருங்கூட்டமாகிய மக்கள் வெறிகொண்டவர்களாக: "நாங்கள் இழந்துவிட்டோம்" "நீங்கள்தான் எங்கள் அழிவுக்குக் காரணம்" என்று கதறி, பொய்யான போதகர்களைத் தாக்கும்படி முனைகிறார்கள். ஒரு காலத்திலே அவர்களை மிகவும் மெச்சிக்கொண்ட அதே நபர்கள், இப்பொழுது அவர்கள்மேல் பயங்கரமான சாபங்களைச் சொல்லுகிறார்கள். அவர்களை மாலைகள் சூட்டி கௌரவப்படுத்தின அதே கரங்கள், அவர்களை அழிக்கத்தக்கதாக உயருகிறது. தேவனுடைய மக்களை அழிக்கும்படி வந்த அதே பட்டயங்கள் தங்கள் சத்துருக்களை அழிக்க உபயோகப்படுத்தப்படும். எல்லா இடங்களிலும் கலகமும் இரத்தஞ்சிந்துதலுமாக இருக்கும்.★

# ஆட்டுக்குட்டியானவரின் உக்கிரகோபம்!

**“பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்.”**

**—வெளிப்படுத்தல் 6:15–17.**

பரிகாசத்தோடுகூடிய எக்களிப்புகள் நின்றுபோயின! பொய் உதடுகள் அமைதியடையும்படி செய்யப்பட்டது. “அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்”—ஏசாயா 9:5. அவர்களுடைய ஆரவாரம் ஓய்கிறது. ஜெபவிண்ணப்பங்களின் குரலையும், அழுகை, புலம்பலின் சத்தத்தையும் தவிர வேறு எதுவும் கேட்கப்படவில்லை. சற்றுமுன்வரை கேலிசெய்துகொண்டிருந்த உதடுகளினின்று அழுகை பீறிட்டு வருகிறது. “அவருடைய கேபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்?” தாங்கள் நிந்தித்து உதறித்தள்ளினவருடைய முகத்தைப் பார்க்கக்கூடாதபடி, மலைகளும் பர்வதங்களும் தங்கள்மேல் விழுந்து மூடிக்கொள்ளவேண்டும் என்று துன்மார்க்கர் ஜெபிக்கிறார்கள்.

மரித்தோருடைய காதுகளில் ஊடுருவிச்செல்லுகின்ற அந்தக்குரல் எத்தனைமுறை தங்களிடம் துயரத்தோடு, மென்மையாகப் பேசி மனந்திரும்புவதற்கு தங்களை அழைத்திருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். அன்பான ஒரு நண்பனைப்போல, ஒரு சகோதரனைப்போல, ஒரு மீட்பரைப்போல எத்தனை முறை அவர் உருக்கமாகக் கெஞ்சி மன்றாடியதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். “உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத்

திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்?" (எசேக்கியேல் 33:11) என்று நெடுநாளாக தங்களோடு மன்றாடிக்கொண்டிருந்த அந்த சத்தமே சத்தியத்தை உதறினவர்களைக் கடிந்துகொள்ளுகிற—குற்றப்படுத்துகிற வார்த்தையாக இருக்கும். அது அவர்களுக்கு வழிப்போக்கனுடைய சத்தத்தைப் போலல்லவா இருந்தது! "நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள்" (நீதிமொழிகள் 1:24,25) என்று இயேசு சொல்லுகிறார். புறக்கணித்த எச்சரிப்புகள் மறுத்துவிட்ட அழைப்புகள், உதாசீனப்படுத்தின சிறப்புரிமைகள்.... இவைகளைப்பற்றின மறக்கமுடியாத நினைவுகளை அவருடைய சத்தம் அவர்கள் நினைவிற்குக் கொண்டுவருகிறது.

சத்தியத்தை மறுக்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், அவர்களுடைய மனசாட்சி விழிப்படைகிற வேளைகள் உண்டு. மாய்மாலமான வாழ்க்கையைக்குறித்து, சித்திரவதை செய்கின்ற நினைவுகள் மீண்டும் அவர்களது உள்ளத்தில் கொண்டுவரப்படும் வேளைகளும் உண்டு; ஆத்துமா வீணான கவலைகளால் நச்சரிக்கப்படுகிறது. "ஆபத்து சூறாவளிபோல் நேரிடும்" (நீதி. 1:27). அந்த நாளிலே ஏற்படுகின்ற மனவேதனையோடு ஒப்பிடும்பொழுது, இந்த வேதனைகளெல்லாம் ஒன்றுமில்லை! கிறிஸ்துவையும் அவருடைய மெய்யான மக்களையும் அழிக்கத் தேடினவர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்படும் மகிமையைக் காண்பார்கள். ★

# அர்மெகதோனில் தேவன் குறுக்கிடுகிறார்!

**"ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்." —எரேமியா 25:31.**

ஆறாயிரம் ஆண்டுகளாக, இந்தப் பெரிய போராட்டம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. மனிதர்களை எச்சரித்து, அறிவுறுத்தி, அவர்களைக் காப்பாற்றுவதற்காக, தேவனுடைய குமாரனும், அவருடைய பரலோகத் தூதுவர்களும் தீமையின் வல்லமையோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, அனைவரும் தீர்மானங்களை எடுத்துவிட்டார்கள். துன்மார்க்கர் சாத்தானோடு முழுமையாக இணைந்து, தேவனுக்கு விரோதமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மிதிக்கப்பட்டுப்போன தமது கற்பனைகளின் அதிகாரத்தை நிலைநாட்டத்தக்கதான வேளை தேவனுக்கு வந்துவிட்டது. இப்பொழுது போராட்டம் சாத்தானோடு மாத்திரமல்ல, அவனைச்சேர்ந்த மனிதர்களோடும் இருக்கிறது. "ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; ... துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார்"—எரேமியா 25:31.

"செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற" மனுஷரின் நெற்றிகளில் விடுதலையின் அடையாளம் போடப்பட்டாயிற்று. "முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சங்கரித்துக் கொன்றுபோடுங்கள்; அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள்" என்று கட்டளை பெற்ற, ஆயுதம் தாங்கிய மனிதர்களாக எசேக்கியேலுக்குக் காட்டப்பட்ட மரணதூதன் செல்லுகிறான். "அவர்கள் ஆலயத்துக்குமுன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம் பண்ணினார்கள்" (எசேக்கியேல் 9:1.2-6) என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார். மக்களுக்கு ஆவிக்குரிய

வழிகாட்டிகளாக தாங்கள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் மத்தியிலே அழிவு ஆரம்பமாகிறது. பொய் காவற்காரன்தான் முதலாவது விழுவான். பரிதாபப்படவும், காப்பாற்றவும் அங்கு எவருமில்லை. எவரையும் விட்டுவிடமாட்டார்கள். ஆண்களும் பெண்களும், கன்னியரும், குழந்தைகளும் அனைவரும் ஒன்றாக அழிந்துபோகிறார்கள்.

"இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்"–ஏசாயா 26:21. அவரவருடைய முரட்டு கோபத்தினாலும், ஆண்டவருடைய கலப்பில்லாத உக்கிரகோபம் பயங்கரமாக ஊற்றப்படுவதாலும், ஆசாரியர்களும், அதிகாரிகளும், மக்களில் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும், தனவந்தரும், வறியோருமாகிய துன்மார்க்கமான பூமியின் குடிகள் அனைவரும் ஏகமாய் அழிவார்கள். "அக்காலத்திலே பூமியின் ஒரு முனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்"– எரேமியா 25:33. ★

# இறுதி யுத்தத்தின் தன்மை!

**"கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக்கொண்டு வந்தார்"—எரேமியா 50:25.**

தேவன் தமது சுயசித்தத்தின்படியே தமது சத்துருக்களின் வல்லமையை முறியடிக்க இயற்கையின் சக்திகளுக்கு கட்டளையிடுவார். "அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே" (சங்கீதம் 148:8) என்று சங்கீதக்காரன் அதைக்குறித்துக் கூறுகிறார். அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடாதபடிக்கு இஸ்ரவேலருக்கு எதிரிகளாயிருந்த அஞ்ஞானிகளான எமோரியரை வானத்திலிருந்து கல்மழையை அனுப்பிச் சிதறடித்ததுபோல, தேவன் தலையிடுவார். "கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக்கொண்டு" (எரேமியா 50:25) வரும்பொழுது உலக வரலாற்றின் கடைசிக் காட்சிகளிலே நடைபெறப்போகும் ஒரு மாபெரும் யுத்தத்தைப்பற்றி நமக்கு கூறப்பட்டிருக்கிறது. "உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன்"—யோபு 38:22,23.

சம்பவிக்கப்போகின்ற அழிவைக்குறித்து வெளிப்படுத்தின விசேஷகன் "பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது." "தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது" (வெளி. 16:17,21) என்று வர்ணிக்கிறார்.

இந்த பூமியின் வரலாற்றின் கடைசிக் காட்சிகளில் யுத்தங்கள் குமுறி வெடிப்பதைக் காணலாம்.

ஒரு பெரிய யுத்தஞ்செய்யாமல் தீமையின் வல்லமையாளர்கள் தங்கள் போராட்டங்களை கைவிடமாட்டார்கள். ஆனால் அர்மெகதோன்

யுத்தத்திலே சர்வவல்லவர் செயல்படுத்தவேண்டிய ஒரு பங்கு உண்டு.

ஆண்டவருடைய சேனையின் அதிபதி, பரலோகத் தூதர் சேனையின் தலைவராயிருந்து யுத்தத்தை நடத்துவார்.

தமது வஸ்திரத்தின்மேல், “இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா” என்னும் நாமம் பொறிக்கப்பட்ட வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவராக வெள்ளைக் குதிரையின்மேல் ஏறிவருகிற பரலோக சேனைகளைத் தலைமையேற்று நடத்துவார்.

அவர் மீண்டும் பூமிக்கு வரும்போது, “பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசைப்பார்.” “வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்.” “வானங்கள் புத்தகச்சுருளைப்போல் சுருட்டப்படும்.” “பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.” “கர்த்தர் தமது ஜனத்திற்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்” எபிரெயர் 12:26; ஏசாயா 24:20; 34:4; 2 பேதுரு 3:10; யோவேல் 3:16. ★

அக்டோபர் 17

# நீங்களும் ஆயத்தமாயிருங்கள்!

**“நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.” —மத்தேயு 24:44.**

ஒருவேளை கிறிஸ்து வானத்து மேகங்கள்மீது வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது எத்தனைபேர் அவரை சந்திக்க ஆயத்தமாயிருப்போம். நாம் இருக்கிற இந்த நிலையிலேயே மறுரூபமாகி பரலோக இராஜ்யத்திற்குப் போவோமானால், அங்கிருக்கிற தேவனுடைய பரிசுத்தவான்களோடு சேர, அந்த இராஜரிக குடும்பத்தோடு இணைந்து வாழ, பரலோக இராஜாவுடைய குழந்தைகளோடு சேர்ந்திருக்க, நாம் ஆயத்தத்தோடிருப்போமா? நியாயத்தீர்ப்பிற்காக என்ன ஆயத்தங்களை நீங்கள் செய்திருக்கிறீர்கள்? தேவனோடு சமாதானமாயிருக்கிறீர்களா?... உங்களுடைய குடும்பத்திலுள்ளவர்கள், உங்களைச் சுற்றிலுமிருப்பவர்கள், உங்களது அண்டை அயலகத்தார், நீங்கள் தொடர்பு கொண்டுள்ள தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாத மக்கள் ஆகியோருக்கு நீங்கள் உதவிசெய்ய நாடுகிறீர்களா?... வெறுமனே நாங்கள் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொண்டு, அன்றாட வாழ்க்கையில் அதின் கொள்கைகளை செயல்படுத்தாதிருப்பது, ஒரு தகுதியற்ற நிலையென்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவருடைய கற்பனைகளை உண்மையாகவே நாம் கைக்கொள்ளுகிறோமா என்பதை தேவன் அறிந்திருக்கிறார். நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம், என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறோம், என்ன பேசிக்கொண்டிருக்கிறோம் என்பது அவருக்குத்தெரியும். இராஜாவைச் சந்திக்க நாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோமா? அவர் வானத்து மேகங்கள்மேல் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வரும்போது: “இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்” (ஏசாயா 25:9) என்று நம்மால் சொல்லமுடியுமா? அப்படிச் சொல்லமுடியும் என்கிறவர்களைப் பார்த்து: “மேலே வாருங்கள்; உலகத்திலே நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்தீர்கள்; என் சித்தத்தை நடப்பிப்பதில் விருப்பமாயிருந்தீர்கள்; இப்போது நீங்கள் பரிசுத்த நகரத்திற்குள்

பிரவேசித்து நித்திய ஜீவனுக்கான கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று கிறிஸ்து கூறுவார்....

நாம் இப்போது இருக்கிறவண்ணமாகவே பரலோகத்தில் அனுமதிக்கப்படுவோமானால் எத்தனை பேரால் நம் தேவனை நோக்கிப்பார்க்கமுடியும்? நம்மில் எத்தனைபேர் கலியாண வஸ்திரத்தைத் தரித்திருக்கிறோம்? எத்தனைபேர் கறைதிரை மற்றும் இதைப்போன்ற எதுவுமின்றி இருக்கிறோம்?...

இதுவே நம்மை சுத்திகரித்து காரியங்களைச் சரிப்படுத்தவேண்டிய நேரம். இதுவே நம் குணங்களாகிய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் தோய்த்து வெளுக்கின்ற நேரம். "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் கூறுகிறார். நமது பாவங்கள் வெளியேற்றப்பட நாம் அனுமதிக்கவேண்டாமா?...

சகோதராகளே, சகோதரிகளே, நித்தியஜீவனுக்கான கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஊக்கமாக உழையுங்கள் என்று உங்களை கெஞ்சி மன்றாடுகிறேன். நாம் போராடிக்கொண்டிருக்கிற போராட்டத்திற்கு ஏற்ற, நம்முடைய முயற்சிகளுக்குத் தகுதியான வெகுமதி நமக்கு இருக்கிறது.... நாம் ஓடிக்கொண்டிருக்கிற இந்தப் பந்தயத்திலே, எல்லாருக்கும் பரிசு உண்டு. அதுதான் நித்தியஜீவன் என்னும் ஒரு கிரீடம். எனக்கு இந்தக் கிரீடம் வேண்டும். தேவனுடைய உதவியினால் அதைப் பெற்றுக்கொள்வேன் என்று நான் கருதுகிறேன். இராஜாவை அவரது அழகிலே காணவேண்டுமென்று சத்தியத்தை உறுதியாகப் பற்றிப்பிடித்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணுகிறேன். ★

# நீதிமான்களின் பொதுவான உயிர்த்தெழுதல்!

**"...மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்." —ஏசாயா 26:19.**

இராஜாதி இராஜா, ஜுவாலித்து எரிகிற அக்கினியால் சூழப்பட்ட மேகத்தினின்று இறங்கிவருகிறார். வானங்கள் புத்தகச் சுருளைப்போல சுருண்டுபோகிறது. பூமி அவருக்கு முன்பாக நடுங்குகிறது. அனைத்து மலைகளும், தீவுகளும், அவைகளின் இடங்களைவிட்டு அகன்றுபோயின....

பூமியின் வேகமான சுழற்சிக்கு மத்தியில் மின்னல்மின்ன, இடிமுழங்க, தேவகுமாரனின் குரல் நித்திரையிலிருக்கும் (மரணத்தில்) பரிசுத்தவான்களை அழைக்கிறது. அதன்பிறகு அவர் நீதிமான்களின் கல்லறைகளை நோக்கிப்பார்த்து, வானங்களுக்கு நேராக தமது கரங்களை உயர்த்தி: "பூமியின் தூளில் நித்திரை செய்கிறவர்களே, விழித்தெழும்புங்கள், விழித்தெழும்புங்கள்!" என்று உரத்த சத்தமிட்டார். பூமியின் நாலாதிசையிலும் நித்திரையிலிருக்கும் பரிசுத்தவான்கள் அந்தக் குரலைக் கேட்பார்கள். அந்தக் குரலைக் கேட்பவர்கள் ஜீவனோடிருப்பார்கள். அனைத்து ஜாதிகளாலும் கோத்திரத்தாராலும் பாஷைக்காரராலும் உண்டான ஜனக்கூட்டத்தார், திடீரென்று எழும்பிய மிகப்பெரிய சேனையின் காலடியோசையால், பூமி முழுவதும் அதிர்ந்தது. மரணமென்னும் சிறைக்கூடத்தினின்று சாவாமை என்னும் மகிமையைத் தரித்தவர்களாக அவர்கள் வெளியே வந்து: "ஓ மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரிந்தியர் 15:55) என்று கெம்பீரிக்கிறார்கள். பின்பு உயிரோடிருக்கிற நீதிமான்களும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுஞ்சேர்ந்து, வெற்றியின் ஆனந்த முழக்கத் தொனியை நீண்ட நேரம்வரை முழங்கினார்கள்.

கல்லறைகளிலிருந்த வந்த அனைவரும், கல்லறைக்குள் போகும்பொழுது இருந்த அதே வளர்த்தியிலேயே இப்பொழுதும் இருந்தார்கள்.... ஆனால் நித்திய இளமையின் ஆற்றலோடும் புதுமலர்ச்சியோடும் எழும்பினார்கள். சாவுக்கேதுவான—அழியக்கூடிய—அழகற்ற—பாவத்தால் முன்பு கேடடைந்த—அந்த உடலமைப்பு, பூரணமாக—அழகாக—சாவாமையைத் தரித்ததாக மாறிற்று. அனைத்து கறைகளும் குறைபாடுகளும் ஊனங்களும் கல்லறையிலேயே விட்டுவிடப்பட்டன.

உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள், ஒருநொடியிலே—ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமடைகிறார்கள். தேவனுடைய குரலைக் கேட்டவுடனே அவர்கள் மகிமையடைந்தார்கள். இப்பொழுது சாவாமை தரிப்பிக்கப்பட்ட அவர்கள், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடுகூட, ஆகாயத்தில் ஆண்டவரைச் சந்திக்க எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். தூதர்கள் ஒருமுனை முதற்கொண்டு அதின் மறுமுனைமட்டும் வானத்தின் நான்கு திசைகளிலும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சேர்ப்பார்கள்.

சிறு குழந்தைகள் சாவாமையைத் தரித்தவர்களாக, தங்களது மண்படுக்கைகளிலிருந்து எழும்பி, உடனே சிறகடித்துப் பறந்து தங்களது தாய்மார்களின் புயங்களைச் சென்றடைந்தார்கள்.

மரணத்தினால் நெடுநாட்களாகப் பிரிந்திருந்த நண்பர்கள், இனி ஒருபோதும் பிரியக்கூடாதபடிக்குச் சேர்ந்தார்கள். பெரு மகிழ்ச்சியின் பாடலோடு, அனைவரும் சேர்ந்து மேலெழும்பி, தேவனுடைய பட்டணத்தை நோக்கிச் சென்றார்கள். ★

# நித்திரையிலிருந்த பரிசுத்தவான்களின் வெற்றி!

**“இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.” —யோவான் 5:28,29.**

ஜீவனளிக்கிற ஆண்டவர், கிரயத்தால் கொள்ளப்பட்டு தமக்கு உடைமையானவர்களை முதலாம் உயிர்த்தெழுதலிலே வெளியே வரும்படி அழைப்பார். இந்த வெற்றியின் மணிவேளைவரை, கடைசி எக்காளம் தொனித்து நித்திய வெற்றியை அடையத்தக்கதாக அந்த மாபெரும் சேனை உயிர்த்தெழுந்து வெளியே வரும்வரை, ஒவ்வொரு பரிசுத்தவானும் விலையுயர்ந்த பொக்கிஷத்தைப்போலப் பாதுகாக்கப்படுவான். அவர்களுடைய பெயர்களெல்லாம் தேவனுக்குத் தெரியும். அவர்கள் தெய்வீக சாயலுக்குப் பங்காளிகளாக இருந்ததினால், உயிரோடிருந்தபோது அவர்களுக்குள்ளே இருந்த இரட்சகரின் வல்லமையினாலே மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார்கள்.

“பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்” என்று கிறிஸ்து கூறினார். அந்தக் குரல் மரித்தோர் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற அனைத்து கல்லறைகளிலேயும் எதிரொலிக்கும். இயேசுவிலே நித்திரைசெய்கின்ற ஒவ்வொரு பரிசுத்தவானும் விழித்தெழும்பி, அவனது சிறைக்கூடத்தைவிட்டு வெளியேறுவான். பின்பு கிறிஸ்துவின் நீதியிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட குணம், உண்மையான மேன்மைக்கும் மிக உயர்வான தகுதிநிலைக்கும் நம்மைக் கூட்டிச்சேர்க்கும்.

உயிர்த்தெழுதலின் காலையிலே, மரித்த பரிசுத்தவான்களின் வெற்றி மகிமையுள்ளதாயிருக்கும்.... கல்லறைகளிலிருந்து புறப்படுகிற

அனைவரையும் ஜீவனுக்கதிபதியானவர் சாவாமை என்னும் கிரீடத்தைச் சூட்டி மகிழ்விப்பார்.

உயிர்த்தெழுந்த சேனையின் திரள் அங்கு நிற்கின்றது. அவர்கள் மரணமடையுமுன் அவர்களுடைய கடைசி நினைவு மரணத்தையும் அதன் வேதனைகளையும்பற்றியதாக இருந்தது. கல்லறையைக்குறித்த நினைவோடுதான் மரித்தார்கள். இப்போதோ மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயமெங்கே? என்று கூறி ஆர்ப்பரித்தார்கள். சாவாமையைப் பூரணமாகத் தரித்த அவர்கள் அங்கேயிருந்து தங்களது ஆண்டவரை ஆகாயத்தில் சந்திக்கத்தக்கதாக மேலெழும்பிச் செல்லுகிறார்கள்.... அவர்களுக்கு இருமருங்கிலும் தூதர்கள் கூட்டம் நிற்கிறது.... பின்பு பரலோக தூதர்களால் அமைந்த பாடல்குழு இசைக் குறியைக் கொடுத்தவுடன் இருபக்கங்களிலும் கூட்டமாக நின்ற தூதர்கள் அந்தப் பாடலைப்பாட, பூமியிலே இருக்கும்போது, பாடிக்கொண்டே இருந்ததைப்போன்று மீட்கப்பட்டவர்களும் சரளமாக அதைப் பாடத்தொடங்குகின்றனர். ஆ! அது எத்தகைய இனிமையான இசை!.... இசைந்திராத ஒரு தொனியும் அந்தப் பாடலில் கேட்கப்படவில்லை. தொனித்த ஒவ்வொரு சத்தமும், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரமுள்ளவர் என்று கூறியறிவித்தது. அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் காண்கிறார்—கண்டு திருப்தியடைகிறார். ★

# உயிர்த்தெழுதலைப்பற்றிய இரகசியங்கள்!

**“என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.” —யோபு 19:25-27.**

கல்லறைக்குள்போன அதே உயிரணுக்கள் இல்லாத போதிலும், உயிர்த்தெழுதலிலே நமது தனித்தன்மை காப்பாற்றப்படும். ஆண்டவருடைய ஆச்சரியமான கிரியைகள் மனிதனுக்கு இரகசியமாகவே இருக்கின்றன. ஆவி, அதாவது மனிதனின் குணம் பாதுகாக்கப்படும்படி தேவனிடத்திற்குச் செல்லுகிறது. உயிர்த்தெழுதலிலே ஒவ்வொரு மனிதனும் அவனுடைய சொந்த குணங்களைப் பெற்றுக்கொள்வான். ஆண்டவர் தாம் நியமித்த காலத்திலே மரித்தோரை அழைக்கும்போது, அவர்களுக்கு மீண்டும் ஜீவ சுவாசத்தைத் தருவார். உலர்ந்த எலும்புகளை உயிரடையச்செய்வார். அதே தோற்றம் எழுந்து வரும். ஆனால் வியாதியோ ஊனமோ அவர்களிடம் இருக்காது. நண்பர்கள், நண்பர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கேதுவாக அதே உருவங்களை அவர்கள் சரீரம் பெற்றிருக்கும். மரணத்திற்கு முன்னிருந்த அதே அழிந்துபோவதற்கேதுவான அணுக்களை சரீரத்திலே ஆண்டவர் கொடுப்பார் என்ற நியதி இல்லை. அவரை மகிமைப்படுத்துகிற, அவருக்குப் பிரியமான சரீரத்தையே மரித்த நீதிமான்களுக்கு அவர் வழங்குவார்.

நிலத்திலே விதைக்கப்பட்ட விதையை ஒப்புமைப்படுத்தி பவுலார் இந்தப் பொருளை விளக்குகிறார். விதைக்கப்பட்ட விதை அழிந்துபோகிறது. ஒரு புதிய முளை முளைத்து வெளியே வருகிறது. மக்கிப்போன விதையிலிருந்த அதே உயிரணுக்கள் மீண்டும் பழைய விதையாக மாறப்போவதில்லை. மாறாக, அதற்குரிய மேனியை தேவன் தமது விருப்பத்தின்படி அதற்குக்

கொடுக்கிறார். மேலும் மிகச் சிறப்பான மூலப்பொருளால் மனிதன் புதுப்பிக்கப்படுவான். ஏனெனில், அது ஒரு புதிய படைப்பு. அது ஒரு புதிய பிறப்பு. இயற்கையான சரீரம் விதைக்கப்பட்டு, அது ஒரு ஆவிக்குரிய சரீரமாக எடுக்கப்படுகிறது.

விசுவாசி கிறிஸ்து மரித்ததைப்போல மரிக்கலாம். ஆனால் இரட்சகரின் ஜீவன் அவனுக்குள் இருக்கிறது. அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. உங்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் நான் வந்தேன் என்று இயேசு சொன்னார். விசுவாசிகள் இவ்வாழ்க்கையிலே அவரோடுகூட ஒன்றாகவும், நித்தியம் முழுவதிலும் அவரோடு இணைந்திருக்கவும் தேவையான முறைமைகளை அவர் கொண்டிருக்கிறார்....

கடைசிநாளிலே, அவருடைய சரீரத்தின் ஒரு பகுதியாக அவர்களை அவர் எழுப்புவார். நாம் அவருடைய தெய்வீகத்தில் இணையும்படிக்கு, கிறிஸ்து தம்மை நமது மனுஷீகத்தோடு இணைத்துக்கொண்டார். ★

# நித்திய வாழ்வின் ஆரம்பம் எப்பொழுது...!

**“தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.”**

**–1 யோவான் 5:11.**

இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரிலே நித்திரைசெய்கிற அனைத்து மக்களின் உயிர்த்தெழுதலுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

கிறிஸ்தவன் மரிக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் ஜீவன் அவனுக்குள் இருக்கிறது. நீதிமான்களின் உயிர்த்தெழுதலிலே அவன் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ள எழும்புவான்.

“அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.” இங்கு சரீர வாழ்க்கை சுட்டிக்காட்டப்படவில்லை. மாறாக, முற்றிலும் தனிப்பட்டவிதத்தில் தேவனுக்குச் சொந்தமான ஜீவனாகிய சாவாமை என்னும் நிலை அதாவது நித்தியஜீவன் குறிப்பிடப்படுகிறது. வார்த்தையாகிய அவர் தேவனோடிருந்தார். அவர் தேவனாயிருந்தார். இந்த ஜீவன் அவருக்குள் இருந்தது. சரீரப்பிரகாரமான ஜீவன் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் பெற்றுக்கொள்ளும் ஒரு காரியமாகும். அது நித்தியமானதுமல்ல, சாவாமையுடையதுமல்ல. ஏனெனில் ஜீவனைக் கொடுத்தவராகிய தேவன் அதை மீண்டும் எடுத்துக்கொள்கிறார். மனிதனுக்கு அவனது ஜீவன்மேல் அதிகாரம் கிடையாது. ஆனால் கிறிஸ்துவின் ஜீவன் இரவலாகப் பெற்ற ஒன்றல்ல. அவரிடமிருந்து அந்த ஜீவனை எவரும் எடுத்துக்கொள்ள முடியாது. நான் என் ஜீவனைக் கொடுக்கிறேன் என்றார். இயேசுவில் இருந்த அவருடைய ஜீவன் தொடக்கமுதலே இருந்த ஜீவன். அது பிரிதொன்றை மூலமாகக் கொள்ளாததாகும். அவரது ஜீவன் இரவலாகப் பெற்றுக்கொள்ளப் பட்டதல்ல. மேலும் மற்றொன்றிலிருந்து தருவித்து உருவாக்கப்பட்டதுமல்ல. இந்த

ஜீவன் மனிதனின் உள்ளியல்பாக இருக்கவில்லை. கிறிஸ்துவின்மூலமாக மாத்திரமே அவன் இதை உடைமையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அவர் (கிறிஸ்து) மானிட இயல்பைக் கொண்டிருந்தபோது, தமது ஜீவனுக்காக சர்வவல்லவரைச் சார்ந்திருந்தார். அவர் தமது மானுடத்திலே தேவனுடைய தெய்வீகத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருந்தார். மானிட குடும்பத்தின் ஒவ்வொரு நபருக்கும் இதைச் செய்வதற்கான சிறப்புரிமையிருக்கிறது....

நம் மீறுதலுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும்போது, கிறிஸ்துவை ஜீவனளிக்கிறவராக ஏற்றுக்கொள்கிறோம்.... அவரோடுகூட இணைந்து ஒன்றாகிறோம். நம்முடைய சித்தம் தேவ சித்தத்தோடு இசைவாகக் கொண்டுவரப்படுகிறது. நித்தியமான கிறிஸ்துவின் ஜீவனை நாம் பெற்றுக்கொள்ளும் பங்காளிகளாக மாறுகிறோம். கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்றுக்கொள்வதின்மூலமாக, தேவனிடமிருந்து நாம் சாவாமையைப் பெற்றுக்கொள்கிறோம். ஏனெனில், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள்—கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. தெய்வீகம் மனுஷீகத்தோடு இணைந்து செயல்படுகிறது. இது ஒரு புரிந்துகொள்ளக்கூடாத இணைப்பாகும்.

நாம் அவரோடு ஒரே ஆவியில் இணைவதற்காக, கிறிஸ்து நம்மோடு ஒரே சரீரமானார். இந்த இணைப்பின் நற்பயனாக நாம் கல்லறையினின்று உயிர்த்தெழுந்து வெளியே வரவேண்டும். வெறுமனே கிறிஸ்துவின் வல்லமையின் வெளிப்பாடாக மாத்திரமல்ல. ஏனெனில் விசுவாசத்தின்மூலமாக, அவருடைய ஜீவன் நம்முடையதாகிவிட்டது. கிறிஸ்துவை அவரது உண்மையான குணத்தில் கண்டு, அவரை இருதயத்தில் ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. பரிசுத்த ஆவியானவரின்மூலமாக கிறிஸ்து நம்மிலே வாசம்செய்கிறார். பரிசுத்தஆவியானவரை விசுவாசத்தினாலே இதயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, அது நித்திய வாழ்வின் ஒரு ஆரம்பமாக இருக்கிறது. ★

# உயிர்த்தெழுதலுக்குப்பின், நாம் ஒருவரையொருவர் அடையாளங்கண்டுகொள்வோம்!

**“இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.” –2 கொரிந்தியர் 13:12.**

சீடர்கள் இயேசுவை அறிந்துகொண்டதுபோல நாமும் நம் நண்பர்களை அறிந்துகொள்வோம். அழிந்துபோகிற இந்த வாழ்க்கையிலே அவர்கள் ஊனமடைந்து, உருமாறி, வியாதிப்பட்டு இருந்திருக்கலாம். எனினும் அவர்கள் பூரண சுகத்தோடும் ஒத்திசைவான உடலோடும் எழுந்திருப்பார்கள். என்றாலும் மகிமையடைந்த அந்த சரீரத்திலும் அவர்களுடைய தனித்தன்மை பூரணமாகக் காக்கப்பட்டிருக்கும்.... இயேசுவின் முகத்தின் ஒளியால் பிரகாசமடைந்த அந்த முகங்களில் நாம் நேசித்தவர்களின் சாயலை கண்டுகொள்வோம்.

மீட்கப்பட்டவர்கள் யார் யாரையெல்லாம் உயர்த்தப்பட்ட இரட்சகரண்டைக்குத் திருப்பினார்களோ, அவர்களையெல்லாம் சந்தித்து, இன்னாரென்று அறிந்துகொள்வார்கள். அவர்கள் எப்படிப்பட்ட உரையாடலை நிகழ்த்தியிருப்பார்கள்! சிலர், “நான் பாவியாயிருந்தேன். உலகிலே தேவனற்றவனாகவும், நம்பிக்கையற்றவனாகவும் இருந்தேன். நீங்கள் என்னிடம் வந்து, அருமையான இரட்சகரை எனது ஒரே நம்பிக்கையாக வைக்கும்படி என்னுடைய கவனத்தை திருப்பினீர்கள்” என்பார்கள்.... வேறு சிலர், “நான் அந்நிய தேசத்திலே ஒரு அஞ்ஞானியாயிருந்தேன். நீங்கள் உங்களுடைய நண்பர்களையும் வசதியான உங்கள் வீட்டையும் விட்டுவிட்டு என்னிடம் வந்து, எப்படி இயேசுவைக் கண்டுகொள்வதென்றும், ஒன்றான மெய்த்தேவனாக அவரை எப்படி நம்புவதென்றும் கற்றுக்கொடுத்தீர்கள். நான் எனது

விக்கிரகங்களை உடைத்துப்போட்டு தேவனை ஆராதித்தேன். இப்பொழுது அவரை முகமுகமாகப் பார்க்கின்றேன். நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். நான் நேசிக்கிறவரை என்றும் பார்த்துக்கொண்டிருக்கத்தக்கதாக நான் நித்தியமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்" என்பார்கள்....

வேறு சிலர், பசியாயிருந்தவர்களைப் போஷித்த மக்களையும் வஸ்திரமில்லாதிருந்தவர்களுக்கு வஸ்திரங்கொடுத்தவர்களையும் பார்த்து, அவர்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்வார்கள். அவிசுவாசத்தினால் நம்பிக்கையற்ற நிலையில் எனது ஆத்துமா தத்தளித்துக்கொண்டிருந்தபோது, நம்பிக்கையின்—ஆறுதலின் வார்த்தையைப் பேசுவதற்காக, ஆண்டவர் உங்களை என்னிடத்தில் அனுப்பினார் என்பார்கள். எனது சரீரத் தேவைகளுக்கு நீங்கள் ஆகாரம் கொண்டுவந்தீர்கள். வேத வாக்கியங்களை எனக்கு விவரித்துக்காட்டினீர்கள். எனது ஆவிக்குரிய தேவைகளைக்குறித்து எனக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினீர்கள். என்னை உங்கள் சகோதரனைப்போல நடத்தினீர்கள். என் வேதனைகளிலே பரிவு காட்டினீர்கள். என்னை இரட்சிப்பதற்காக நீட்டப்பட்ட கிறிஸ்துவின் கரத்தை நான் பற்றிப்பிடித்துக்கெள்ளத்தக்கதாக, காயப்பட்ட— நொறுக்கப்பட்ட எனது ஆத்துமாவை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவந்தீர்கள். நான் அறியாமையில் மூழ்கியிருக்கும்போது என்னைப் பராமரிக்கின்ற ஒரு பிதா பரலோகத்தில் உண்டு என்பதை பொறுமையோடு கற்றுக்கொடுத்தீர்கள். வேதவார்த்தைகளிலிருந்த அருமையான வாக்குத்தத்தங்களை எனக்கு வாசித்துக் காட்டினீர்கள். என்னை அவர் இரட்சிப்பார் என்ற விசுவாசத்தை என்னிலே உருவாக்கினீர்கள். கிறிஸ்து எனக்காகச் செய்த தியாகத்தைப்பற்றி நான் தியானிக்கும்போது, எனது இதயம் மென்மையடைந்து அடங்கி நொருங்கியது. நான் இரட்சிக்கப்பட்டவனாக, நித்தியமாக இரட்சிக்கப்பட்டவனாக, எனக்காக ஜீவனைக் கொடுத்த அவரைத் துதிப்பதற்காக, எப்பொழுதும் அவர் பிரசன்னத்தில் வாழத்தக்கதாக இப்பொழுது பரலோகத்திலிருக்கிறேன்.

மீட்கப்பட்டவர்கள் தங்களுக்காகப் பாரங்கொண்டிருந்தவர்களைச் சந்தித்து, அவர்களை வாழ்த்தும்போது, எத்தகைய களிகூருதல் அங்கு உண்டாயிருக்கும்! தங்களுக்காக வாழாமல், வெகு சொற்ப ஆசீர்வாதங்களே பெற்றிருந்த மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக வாழ்ந்தவர்களைக் கண்டுகொள்ளும்பொழுது, எப்படிப்பட்ட திருப்தியோடு அவர்களுடைய மனங்கள் பரவசமடையும். ★

# பாக்கியமான நம்பிக்கை!

**"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது." —தீத்து 2:13.**

நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கும்படி, உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணபோகிறேன் என்று இயேசு சொன்னார். நாம் என்றைக்கும் அவரோடு குடியிருந்து, அவருடைய முகத்தின் ஒளியில் பூரிப்போம்.... வரப்போகும் அந்த உற்சாகமான நினைவுகளால் மகிழ்ச்சியோடு என் இருதயம் துள்ளுகிறது. நாம் வீட்டை அடைந்துவிட்டோம். பரலோகம், இனிமையான பரலோகம், அதுவே எங்களது நித்தியவீடு. இயேசு ஜீவிக்கிறார், அவர் ஜீவிக்கிறதினால் நாமும் ஜீவிப்போம் என்பதை எண்ணி ஒவ்வொரு கணமும் நான் மகிழ்ச்சியோடிருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று என் ஆத்துமா கூறுகிறது. கிறிஸ்துவிற்குள் சகல பரிபூரணமும் இருக்கிறது எல்லாருக்கும் தேவையானது அவரிடம் இருக்கிறது. இப்படியிருக்க, அப்பத்துக்காக மடிந்து அல்லது அந்நிய தேசங்களிலே நாம் ஏன் பட்டினியால் அவதிப்படவேண்டும்?

இரட்சிப்பின்மேல் நான் பசியாயிருக்கிறேன்— தாகமாயிருக்கிறேன். தேவனுடைய முழுச்சித்தத்தின்படி மாற வாஞ்சையாயிருக்கிறேன். கிறிஸ்துவின்மூலமாக ஒரு நல்ல நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அது நிச்சயமான—நிலையான—திரைக்குள்ளாக பிரவேசிக்கிற நம்பிக்கை. நம் உபத்திரவங்களில் அது நமக்கு ஆறுதலளிக்கிறது. வியாகுலங்களில் மகிழ்ச்சியளிக்கிறது. நம்மைச் சுற்றிலுமிருக்கிற சோர்வை நீக்குகிறது. அதின் வழியாக, அழியாமையையும் நித்திய ஜீவனையும் பார்க்கச்செய்கிறது.... உலகப் பொக்கிஷங்கள் நமக்கு பெரிய ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. இந்த நம்பிக்கை இருப்பதாலே அது கடந்துபோகிற உலகப் பொக்கிஷங்களுக்கு மேலாகச்சென்று, அழியாமையின் சுதந்தரத்தை நாம் பற்றிக்கொள்ளத்தக்கதாக நிலைக்கிறதும், கெடாததும், அசுசிப்படாததும்,

மங்கிப்போகாததுமான நித்தியத்தைப் பிடித்துக்கொள்ளும்படி நம்மைக் கொண்டுசெல்கிறது....

நம்முடைய இந்த சரீரம் மரித்து, கல்லறையிலே வைக்கப்படலாம். ஆனால் நித்திரையிலிருக்கிறவர்களை அழைக்கிற இயேசுவின் சத்தம் கேட்கப்படும் உயிர்த்தெழுதலின் காலைவரை அந்த பாக்கியமான நம்பிக்கை தொடர்ந்து ஜீவிக்கிறது. நாம் அப்பொழுது இந்த பாக்கியமான— மகிமையான நம்பிக்கையின் முழுமையை ருசிப்போம். நாம் யாரிடம் விசுவாசம் வைத்திருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். நாம் வீணாக ஓடவில்லை. வீணாகப் பிரயாசப்படவுமில்லை. செழிப்பான— மகிமையான ஒரு வெகுமதி நமக்கு முன்பாக இருக்கிறது. அந்தப் பரிசுக்காக நாம் ஓடுகிறோம். நாம் தைரியத்தோடு விடாமுயற்சி செய்வோமானால் அதை நிச்சயமாகப் பெற்றுக்கொள்வோம்....

நமக்கு இரட்சிப்பு இருக்கும்போது, ஏன் ஜீவ ஊற்றிலிருந்து விலகி நிற்கிறோம்? நம் ஆத்துமாக்கள் புத்துணர்ச்சியடைந்து, புது பெலனடைந்து தேவனுக்குள் செழிக்கும்படி, ஏன் வந்து பருகக்கூடாது? ஏன் உலகத்தோடு இவ்வளவு நெருக்கமாக ஒட்டிக்கொண்டிருக்கிறோம்? பேசிக்கொள்ளவும் யோசித்துப்பார்க்கவும் இப்பூமியைக்காட்டிலும் மேன்மையானது இருக்கிறது. பரலோக சிந்தையோடு நாம் இருக்கமுடியும். ஆ! இயேசுவின் கறையற்ற இனிமையான குணத்தைப்பற்றி தியானிப்போம். அவரை நோக்கிப் பார்ப்பதினால் அவருடைய சாயலுக்கு மாற்றப்படுவோம். பெலன் கொள்ளுங்கள். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். ★

# நீதிமான்களின் மறுரூபமாகுதல் எப்பொழுது நடைபெறும்?

**"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."**

**–1 தெசலோனிக்கேயர் 4:16,17.**

வெகுசீக்கிரத்தில் பெரிய வெண்மேகம் காணப்பட்டது. எப்போதையும்விட, அது இப்பொழுது வெகு அழகாக இருந்தது. அதின்மேல் மனுஷகுமாரன் அமர்ந்திருந்தார். முதலாவது அந்த மேகத்தின்மேல் இயேசுவை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் அது பூமிக்கருகில் நெருங்கி வந்தபொழுது "இனிய தோற்றத்தையுடைய அவரைப் பார்க்க முடிந்தது...." தேவகுமாரனுடைய சத்தம் நித்திரையிலிருந்த பரிசுத்தவான்களை அழைத்தது. அவர்கள் மகிமையுள்ள அழியாமையைத் தரித்துக்கொண்டவர்களாக வந்தனர். உயிரோடிருந்த பரிசுத்தவான்களும் ஒரு நொடியிலே மறுரூபமடைந்து அவரோடுகூட மேக ரதத்தினுள் எடுத்துக்கொள்ளப்பட்டனர். அது மேல்நோக்கி எழுந்தபொழுது, முழுவதுமாக மகிமையோடு காட்சியளித்தது. அந்த மேகரதத்தின் இருபுறமும் செட்டைகளிருந்தன. அதற்கடியில் சக்கரங்களிருந்தன. அது மேலே எழும்பும்பொழுது, சக்கரங்கள்: "பரிசுத்தம்" என்று சொல்லின. தூதர்களின் பரிவாரமும்: "சர்வ வல்லமையுள்ள தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று முழங்கின. மேகத்திலிருந்த பரிசுத்தவான்களும்: "மகிமை, அல்லேலூயா" என்று ஆர்ப்பரித்தார்கள்.

நாங்கள் அனைவரும் மேகத்திற்குள் ஒன்றாகப் பிரவேசித்தோம். அது கண்ணாடிக்கடலை நோக்கி ஏழு நாட்கள் மேல்நோக்கிச் சென்றது. இயேசு கிரீடங்களைக் கொண்டுவந்து, தமது சொந்த வலதுகரத்தால்

எங்கள் சிரசுகளில் சூட்டினார். எங்களுக்கு பொற்கின்னரத்தையும் வெற்றிக்குருத்தோலைகளையும் கொடுத்தார். அந்தக் கண்ணாடிக் கடல்மீது 1,44,000 பேரும் பூரண சதுரமாக நின்றார்கள். அவர்களில் சிலர் பிரகாசமான கிரீடங்களை அணிந்திருந்தனர். மற்றவர்களுடைய கிரீடங்கள் அவ்வளவு பிரகாசிக்கவில்லை. சிலருடைய கிரீடங்கள் நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டு கனமாயிருந்தன. சிலருக்கோ சில நட்சத்திரங்களே இருந்தன. அனைவரும் தங்கள் தங்கள் கிரீடங்களைக்குறித்து திருப்தியோடிருந்தனர். அவர்கள் மகிமையுள்ள வெண்மையான சால்வையை தோள்களிலிருந்து பாதம்வரைத் தரித்திருந்தனர். கண்ணாடிக்கடலிலிருந்து நகரத்தின் வாசலிற்கு நாங்கள் கடந்துசென்றபொழுது, தூதர்கள் எங்களைச் சுற்றிலும் இருந்தனர். இயேசு, தமது வல்லமையுள்ள, மகிமையான புயத்தை உயர்த்தி, முத்தாலான அதின் கதவைத் திறந்தார். ஜொலித்துக்கொண்டிருந்த பொன்னாலான கீல்களிலே இருந்த கதவு பின்நோக்கிச் சென்றது. பின்பு, அவர் எங்களைப் பார்த்து: "நீங்கள் என் இரத்தத்தினாலே உங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தவர்கள். என் சத்தியத்துக்காக உறுதியாக நின்றவர்கள். உள்ளே பிரவேசியுங்கள்" என்றார். நாங்கள் அனைவரும் உள்ளே பிரவேசித்தோம். அந்தப் பட்டணத்திலே எங்களுக்கு முழுமையான உரிமை இருப்பதை உணர்ந்தோம்.

எந்த மானிடரின் காதிலும் தொனித்திராத, கீதத்தைவிடவும் இனிமையான குரலில்: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதற்கொண்டு உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட இராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்ற சத்தம் கேட்கும். ★

# மக்கள் இல்லாமல் பூமி வெறுமையாயிருத்தல்!

**"பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமை யுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன. பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின." —எரேமியா 4:23–25.**

கிறிஸ்துவின் வருகையிலே, துன்மார்க்கர் பூமியின்மீதிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்கள் அவருடைய வாயின் சுவாசத்தினாலே அழிந்து, அவருடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசமடைவார்கள். கிறிஸ்து தமது மக்களை தேவனுடைய நகரத்திற்கு அழைத்துச்சென்றபின்பு பூமி குடிகளற்று வெறுமையாக காட்சியளிக்கும். "இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார்." "தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் வெறுமையாகும்; இது கர்த்தர் சொன்ன வார்த்தை;" "தேசம் தன் குடிகளின் மூலமாய்த் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள். இதினிமித்தம் சாபம் தேசத்தைப் பட்சித்தது, அதின் குடிகள் தண்டிக்கப்பட்டார்கள்; தேசத்தார் தகிக்கப்பட்டார்கள், சிலர்மாத்திரம் மீந்திருக்கிறார்கள்"—ஏசாயா 24:1,3,5,6.

பூமி முழுவதும் ஒரு பாழடைந்த வனாந்தரம்போன்று காட்சியளிக்கும். பூமியதிர்ச்சியினால் அழிந்த கிராமங்களும் நகரங்களும், வேரோடு சாய்ந்த மரங்களும், கடலிலிருந்து தெறிப்புண்டுபோன கரடுமுரடான பாறைகளும், மலைகளும், பூமியின் மேற்பரப்பிலே சிதறிக்கிடந்தன. மலைகள் விலகிப்போனதற்கு அடையாளமாக ஆழமான குழிகளும் குகைகளும் பூமியிலே தெரியும்.

பாவ நிவாரணநாளின் இறுதி பக்திவிநயமான ஆராதனையில் நிழலாட்டமாக முன்குறிக்கப்பட்ட சம்பவம் இப்பொழுது நடைபெறுகிறது. மகா பரிசுத்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஊழியம் முடிவடைந்து, பாவ நிவாரண காணிக்கையின் இரத்தத்தின் புண்ணியத்தினாலே, ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் நீக்கப்படும்பொழுது, போக்காடு உயிருள்ளதாக ஆண்டவருக்கு முன்பாகக் கொண்டுவரப்படும். சபையார் முன்பாக பிரதான ஆசாரியன் அதின் தலையின்மேல் இரண்டு கைகளையும் வைத்து, "அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும்" (லேவியராகமம் 16:21) அறிக்கையிடுகிறான். அதைப்போலவே பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே, பாவநிவாரணப்பணி முடிவடைந்து, தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாகவும், பரலோகத்தூதர்களுக்கு முன்பாகவும் மீட்கப்பட்ட கூட்டத்தார் முன்பாகவும் தேவனுடைய மக்களின் பாவங்கள் சாத்தானுடைய தலையின்மேல் வைக்கப்படும். அவர்கள் செய்த எல்லாப் பாவங்களுக்கும் அவனே காரணகர்த்தாவென்று தீர்க்கப்படுகிறான். ★

# சாத்தான் கட்டப்படுகிறான்!

**"ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து...." —வெளிப்படுத்தல் 20:1,2.**

சாத்தானை முற்றிலும் அகற்றிப்போடுவதைப்பற்றியும் இந்த பூமி பாழடைந்து தாறுமாறாகிப்போன நிலைக்கு வந்துவிட்டதுபற்றியும் வெளிப்படுத்தின விசேஷகன் முன்னறிவிக்கிறார். மேலும் இதே நிலை ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும் என்று உறுதிபடக் கூறுகிறார். ஆண்டவரின் இரண்டாம் வருகை, துன்மார்க்கரின் அழிவு, இவைகளைப்பற்றிய காட்சிகளை தீர்க்கதரிசனமாகச் சொன்னபின்பு, "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்" (வெளி. 20:1–3) என்று தொடர்ந்து எழுதுகிறார்.

பாதாளம் என்கிற வார்த்தை, குழப்பத்திலும் இருளான நிலையிலும் பூமி இருந்தது என்பதை மற்ற வேத வாக்கியங்களின் மூலமாகச் சுட்டிக்காட்டுகிறது. பூமியின் நிலைபற்றிக் கூறும்போது: "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது"(ஆதியாகமம் 1:2) என்று வேதாகமம் சொல்லுகிறது. ஓரளவிற்கு பூமி அதின் பழைய நிலைக்கே கொண்டுபோகப்படும் என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறது. தேவனுடைய மகா நாளை எதிர்பார்த்து நோக்கிக்கொண்டிருந்த எரேமியா தீர்க்கதரிசி: "பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன்,

அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன. பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின. பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோயின" (எரேமியா 4:23–26) என்கிறார்.

இந்த பாழடைந்த பூமிதான் சாத்தானுக்கும் அவனுடைய தீய தூதர்களுக்கும் ஆயிரம் வருடத்திற்கு வீடாக இருக்கும். பூமியைவிட்டு மற்ற பரிசுத்த உலகங்களுக்குச் சென்று மற்ற உலகங்களிலுள்ள பாவத்தில் விழுந்துபோகாத மக்களை சோதித்து தொல்லை கொடுக்காதபடி, அவ்விடங்களுக்கு செல்லாதவாறு இங்கேயே கட்டப்பட்டிருப்பான். இந்தப் பொருளில்தான் அவன் கட்டப்பட்டிருக்கிறான் என்கிறது. அவன் வல்லமையைச் செயல்படுத்த, பூமியின்மேல் எவரும் மீந்திருக்கவில்லை. அநேக நூற்றாண்டுகளாக அவனது ஒரே மகிழ்ச்சியாக இருந்த, அந்த வஞ்சகத்தின் அழிவின் வேலைகளைச் செய்யக்கூடாதபடி அவன் இப்போது முற்றிலும் கட்டப்பட்டிருக்கிறான். ★

# குடும்பங்கள் மீண்டும் இணைகின்றன!

**"நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." —எரேமியா 31:16,17.**

கிறிஸ்து மேகங்கள்மீது மிகுந்த மகிமையோடு வருகிறார். எண்ணிலடங்காத திரள்கூட்டமான பிரகாசமான தூதர்கள் அவரோடு கூட வருவார்கள். மரித்தவர்களை உயிரோடெழுப்பவும், உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களை மகிமையின்மேல் மகிமையடையச்செய்யவும் வருவார். அவரை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டவர்களைக் கனம்பண்ணி, தம்மோடு சேர்த்துக்கொள்ளத்தக்கதாக வருவார். அவர்களையும் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களையும் அவர் மறக்கவில்லை. குடும்பச் சங்கிலிகள் மீண்டும் ஒன்றோடொன்று இணைக்கப்படும்.

பயபக்தியான தாய்மார்களுக்கு இந்த உலகம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பதை தேவனுடைய நாள் வெளிப்படுத்தும்.

நியாயசங்கம் உட்கார்ந்து, புத்தகங்கள் திறக்கப்பட்டு, "நல்லது, உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியக்காரனே" என்று மகா நியாயாதிபதி தீர்ப்பை அழுத்தந்திருத்தமாக வழங்கும்போது, அழியாத, மகிமை பொருந்திய கிரீடம் ஜெயம்பெற்றவருடைய சிரசின்மீது வைக்கப்படுகிறது. அவர்களில் அநேகர் தங்கள் கிரீடங்களைக் கழற்றி, உயர்த்திக்காட்டி: "நான் இப்பொழுதிருக்கிற நிலைக்கு ஆண்டவருடைய கிருபையினால் என்னைக் கொண்டுவந்தவர்கள் எனது அன்னையே; அவர்களுடைய ஆலோசனைகளும் ஜெபங்களுமே இந்த நித்திய இரட்சிப்பை நான் பெற்றுக்கொள்ளக்

காரணமாயிருந்தது" என்று கூடியிருக்கும் அண்டசராசரத்தின் மகா சபைக்கு முன்பாக சாட்சி கூறுவார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிரீடம், அங்கி, சுரமண்டலம் இவைகளைக் கண்டு, விவரிக்கமுடியாத அளவிற்கு மகிழ்ச்சி அடைகிறார்கள். பயமும் எதிர்பார்ப்பும் நிறைந்த நாட்கள் முடிவிற்கு வந்தன. கண்ணீரோடும் ஜெபத்தோடும் விதைக்கப்பட்ட விதைகள் வீணாயின என்றுகூடத் தோன்றலாம். ஆனால் அதின் முடிவிலே மகிழ்ச்சியோடு அறுவடை செய்யப்பட்டது. அவர்களது குழந்தைகள் மீட்கப்பட்டுவிட்டார்கள்.

ஆ! அதிசயமான மீட்பு! நீண்டகாலம் பேசப்பட்ட—நீண்ட காலம் நம்பப்பட்ட—ஆவலோடு எதிர்பார்த்து சிந்தித்திருந்த—ஆனால் ஒருபோதும் முற்றிலுமாக விளங்கிக்கொள்ளப்படாத மீட்பு— ஆச்சரியமான மீட்பு!

கிறிஸ்து தம்மை உத்தமமாகப் பின்பற்றியவர்களுக்கு அனுதின தோழனாகவும் நன்றாகத் தெரிந்திருந்த நண்பனாகவும் இதுவரை இருந்திருக்கிறார். மிக நெருக்கமான தொடர்புகொண்டு அவரோடு வாழ்ந்திருக்கிறார்கள். தேவனோடு நிலையான ஆன்மீக உறவுகொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள்மீது ஆண்டவருடைய மகிமை உதித்திருக்கிறது. கிறிஸ்துவின் முகத்திலிருந்த தேவனுடைய மகிமையை அறிந்துகொள்ளுகிற அறிவின் ஒளி அவர்களிடத்தில் பிரதிபலித்திருந்தது. இராஜாவை அவருடைய மேன்மையின் மகிமையிலும், பிரகாசத்திலும் பிரகாசத்தின் மங்காத ஒளிக்கதிர்களிலும் கண்டு அவர்கள் களிகூருகிறார்கள். பரலோகத்துடன் இணைவதற்கு அவர்கள் ஆயத்தப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் உள்ளத்திலேயே பரலோகம் இருக்கிறது. ★

# நீதிமான்களுக்காக கிரீடம் ஆயத்தஞ்செய்யப்படுகிறது!

**“நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.”**

**–2 தீமோத்தேயு 4:7,8.**

ஆண்டவர் தமது சம்பத்தைச் சேர்க்கும்பொழுது, உண்மையான—நேர்மையான—கபடமில்லாத பிள்ளைகளை மகிழ்ச்சியோடு நோக்கிப்பார்ப்பார். அப்படிப்பட்டவர்களுக்காக கிரீடங்களை உண்டாக்கும்படி தூதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நட்சத்திரங்கள் பதிக்கப்பட்ட கிரீடங்களை, தேவனுடைய சிங்காசனத்திலிருந்து வருகிற ஒளி பிரதிபலிக்கும்.

பரலோக விஷயங்களைக்குறித்துப் பேசுங்கள். இயேசுவைக்குறித்துப் பேசுங்கள். அவருடைய இனிமையான பண்பு, மகிமை, உங்கள்மேல் அவர் வைத்திருக்கின்ற வற்றாத அன்பு இவைகளைக்குறித்துப் பேசுங்கள். உங்களை இரட்சிப்பதற்காக மரித்த அவரிடத்தில் நன்றியோடும் அன்போடும் உங்களது இதயங்கள் பொங்கி வழியட்டும். உங்கள் ஆண்டவரை சமாதானத்துடன் சந்திக்க ஆயத்தமாகுங்கள். ஆயத்தமாயிருக்கிறவர்கள், வாடாத ஜீவ கிரீடத்தை வெகுவிரைவில் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திலே, கிறிஸ்துவோடும், அவருடைய தூதர்களோடும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களோடும் சதாகாலமும் வசிப்பார்கள்.

மீட்பரின் வருகைக்காக காத்திருக்கின்ற—அவரை நேசிக்கின்ற—அவருக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்ற நமக்கு, ஒரு மகிமையின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவருக்காக காத்திருக்கிறவர்கள் மட்டுமே மகிமையினாலும் கனத்தினாலும் சாவாமையினாலும் முடிசூட்டப்படுவார்கள். இந்த உலகத்தின் மேன்மைகளைக் குறித்தோ அல்லது இவ்வுலகத்தின் மாபெரும் மனிதர்களின் பெருமைகளைக்குறித்தோ நீங்கள் பேசவேண்டிய அவசியமில்லை. இவையனைத்தும் மாயையே. ஆண்டவருடைய விரல் மாத்திரம் அவர்கள்மேல் பட்டால் அவர்கள் மண்ணுக்குப் போய்விடுவார்கள். என்றென்றும் நிலைக்கிற கனத்தையே நான் விரும்புகிறேன். ஒருபோதும் அழிந்துபோகாத கனத்தையே— ஒருபோதும் அழியாமையுள்ள கனத்தையே—நிலைத்து நிற்கும் கனத்தையே நான் வாஞ்சிக்கிறேன். இவ்வுலக இராஜாக்களுடைய சிரசுகளை அலங்கரித்த எந்த ஒரு கிரீடத்தைக்காட்டிலும் உயர்ந்த விலைமதிப்புள்ள கிரீடத்தையே நான் விரும்புகிறேன்.

அந்நாளிலே மீட்கப்பட்டவர்கள் பிதாவின் மகிமையோடும் அவரது குமாரனின் மகிமையோடும் ஜொலிப்பார்கள். வானதூதர்களும் கிறிஸ்துவிற்காக நின்று ஜெயித்தவர்களும் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தவர்களும் ஏகமாய் நின்று தங்கள் பொற்சுரமண்டலங்களை மீட்டு இராஜாவை வரவேற்பார்கள். ஒரு வெற்றியின் கீதம் பாடப்பட்டு பரலோகம் முழுவதையும் நிறைக்கும். கிறிஸ்து வெற்றி சிறந்தார். அவருடைய வேதனைகளும் தியாகபலியும் வீணாகவில்லை என்பதற்கான சாட்சிகளான மீட்கப்பட்டவர்களோடுகூட கிறிஸ்து பரலோக மன்றங்களில் பிரவேசிக்கிறார். ★

# தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு கிரீடம்!

**“சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.” —யாக்கோபு 1:12.**

திரள் கூட்டமான தூதர்கள் மகிமையுள்ள கிரீடங்களை, ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் கொடுக்கப்படப்போகிற, அவர்கள் பெயரெழுதப்பட்ட கிரீடங்களை நகரத்திலிருந்து எடுத்துவருவதை நான் கண்டேன். இயேசு கிரீடங்களைக் கேட்டபொழுது, தூதர்கள் அவரிடம் அவைகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இனிமையான இயேசு, தமது வலதுகரத்தினால் அவைகளைத் தமது மக்களுடைய சிரசுகளின்மேல் வைத்தார். அதைப்போலவே சுரமண்டலங்களையும் எடுத்துவந்தனர். இயேசு அவைகளையும் தமது பரிசுத்தவான்களுக்குக் கொடுத்தார். அதிகாரமுள்ள தூதர்கள் தங்களது சுரமண்டலத்தை முதலாவது மீட்ட, நன்றியோடு மகிழ்ச்சியான துதியுடன் ஒவ்வொரு குரலும் தொனித்தது. எல்லாருடைய கரங்களும் மிகத் தேர்ந்த கரங்களைப்போல சுரமண்டலங்களை வாசிக்க, பூரணமான—மிக இரம்மியமான இசை அங்கே இழைந்தோடியது....

அந்த நகரத்தினுள்ளே, கண்களுக்கு விருந்தளிக்கும் அத்தனையும் இருந்தன. அனைத்து பக்கங்களிலும் மகிமையின் நிறைவை அவர்கள் கண்டார்கள். பின்பு, இயேசு மீட்கப்பட்ட பரிசுத்தவான்களை நோக்கிப்பார்த்தார். அவர்களது முகங்கள் மகிமையால் பிரகாசித்தன. அவர்களை அன்போடு நோக்கிப்பார்த்து அவரது கீதம்போன்ற இனிய குரலில்: “என் ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு நான் திருப்தியடைந்தேன். இந்த மகிமையின் ஐசுவரியம் நித்தியத்திற்கும் நீங்கள் அனுபவிக்கவே! உங்கள் வருத்தமெல்லாம் முடிந்தது. இனி மரணமில்லை, வருத்தமில்லை, அழுகையில்லை, வேதனையும் இனி உண்டாகாது” என்றார்.

அதன் பின்பு ஜீவவிருட்சத்தினண்டையிலே இயேசு தமது மக்களை நடத்திச்செல்வதை நான் கண்டேன்.... ஜீவவிருட்சத்தின் மீது மிகவும் அழகான பழம் காணப்பட்டது. அதைப் பரிசுத்தவான்கள் தாராளமாகப் பறித்துப் புசிக்கலாம். நகரத்திலே மிகவும் மகிமையான சிங்காசனம் ஒன்று இருந்தது. அதிலிருந்து பளிங்கைப்போல தெளிவான ஜீவநதி புறப்பட்டது. அதின் இருபக்கங்களிலும் ஜீவ விருட்சம் இருந்தது. அதோடு அதின் இரு கரைகளிலும் கனிதரும் மற்ற அழகிய மரங்களும் இருந்தன....

பரலோகத்தை வார்த்தைகளால் விவரிக்கவேண்டுமானால், எந்த ஒரு மொழியும் போதாது. அந்தக் காட்சிகள் என்முன் வந்தபொழுது நான் ஆச்சரியத்தில் மூழ்கிப்போனேன். மிஞ்சுகிற அதின் மகிமையினாலும், காந்தியினாலும் கவரப்பட்ட நான், என் எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டு: "ஆ என்ன அன்பு! என்ன ஆச்சரியமான அன்பு!" என்று வியந்தேன். மிக நேர்த்தியான மொழிகூட பரலோகத்தின் மகிமையையும் இரட்சகருடைய இணையற்ற அன்பின் ஆழங்களையும் விவரிக்க முடியாது. ★

# நமது மீட்பு மிகவும் சமீபமாயிருக்கிறது!

**“இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்.” —லூக்கா 21:28.**

நாம் முந்தி நம்பியிருந்ததைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் வருகை சமீபமாயிற்று. மாபெரும் போராட்டம் அதின் முடிவை நெருங்குகிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் (தண்டனைகள்) பூமியின்மேல் விழுகின்றன. “நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்கள் ஆயத்தமாயிருங்கள்” (மத்தேயு 24:44) என்கிற பக்திவிநயமான எச்சரிப்பை அவைகள் நமக்குக் கொடுக்கின்றன.

இவ்வுலக சரித்திரத்தின் முடிவுகால காட்சிகளில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தீர்க்கதரிசனங்கள் வெகுவேகமாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. கிருபையின் காலம் வேகமாக முடிந்துகொண்டிருக்கிறது. இழந்துபோகக் காலமில்லை. ஒரு நொடிகூட இல்லை. காவலிலிருக்கிற நாம் தூங்குகிறவர்களாகக் காணப்படாதிருப்போமாக. “என் ஆண்டவன் வர நாள்செல்லும்” என்று ஒருவரும் வார்த்தையினாலாவது, செய்கையினாலாவது உலகத்திற்குக் காட்டாதிருப்போமாக. கிறிஸ்துவினுடைய அதிசீக்கிர வருகையைக்குறித்த செய்தி உண்மையான எச்சரிப்பின் வார்த்தைகளோடு முழங்கப்படவேண்டும். ஆண்களும் பெண்களும் மனந்திரும்பி, வரப்போகும் உக்கிர கோபத்திற்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக அறிவுறுத்தி இணங்கச்செய்வோம்....

நம் ஆண்டவர் வெகுசீக்கிரம் வரவிருக்கிறார். அவரை சமாதானத்துடன் சந்திக்க நாம் ஆயத்தமாகவேண்டும். நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்க, நமது எல்லா சக்திகளையும் பயன்படுத்த நாம் தீர்மானிக்கவேண்டும். நாம் வருத்தத்தோடிருக்கத் தேவையில்லை. நாம் சந்தோஷமாயிருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசுவை நாம் எப்பொழுதும்

நம்முன் வைத்திருக்கவேண்டும். அவர் வெகுசீக்கிரம் வருகிறார். நாம் அவரைச் சந்திக்க ஆயத்தத்தோடு காத்திருக்கவேண்டும். ஆ! அவரைப்பார்த்து, அவரால் மீட்கப்பட்டவர்களாக நாம் வரவேற்கப்படுவதைக் காண்பது எவ்வளவு மகிமையானதாயிருக்கும்! நீண்ட காலமாக நாம் காத்துக்கொண்டிருந்துவிட்டோம். என்றாலும் நமது நம்பிக்கை மங்கிப்போகக்கூடாது. இராஜாவை அவரது அழகிலே காண்போமானால் நாம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். "வீடு நோக்கிப் போய்க்கொண் டிருக்கிறோம்" என்று உரத்த சத்தமாகச் சொல்லவேண்டும் என்பதுபோல நான் உணருகிறேன். கிறிஸ்து தமது வல்லமையிலும் மாட்சிமிகு மகிமையிலும் வந்து, தமது மீட்கப்பட்டவர்களை நித்திய வீட்டிற்கு அழைத்துச்செல்லும் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்....

நமது இரட்சகருடைய வருகைக்காக வெகுகாலம் காத்து இருந்துவிட்டோம். எனினும் அவருடைய வாக்குத்தத்தம் உறுதியானது. வெகு சீக்கிரத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வீடுகளில் நாம் இருப்போம். அங்கே தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பாய்கிற ஜீவ தண்ணீர்களண்டையில் இயேசு நம்மை நடத்துவார். நமது குணங்கள் பரிபூரணமடைவதற்காக நம்மை அவர் நடத்திவந்த இருண்ட பாதைகளைக் குறித்து அவர் விவரிப்பார். மீண்டும் ஸ்தாபிக்கப்படுகிற ஏதேனின் அழகை, அதின் முழு மகிமையிலே நாம் பார்ப்போம். நமது தலைகள்மீது அவர் அன்பாக வைத்த கிரீடங்களை நமது மீட்பருடைய பாதப்படியிலே நாம் வைத்து, நம்முடைய பொற்சுரமண்டலங்களை மீட்டு, சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கிறவருக்கு துதியின் கீதங்களைப் பாடுவோம். அது பரலோகம் முழுவதையும் நிரப்பும்.★

# அவர் கொடுக்கும் வெகுமதி அவர் கரத்திலிருக்கிறது!

**“இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.”**
**—வெளிப்படுத்தல் 22:12.**

இங்கே நம்முடைய வேலை வெகு சீக்கிரத்தில் முடிவடைய இருக்கிறது. அவரவருடைய வேலைக்குத்தக்கதாக அவரவர் பலனைப் பெற்றுக்கொள்ளுவார்கள். பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படும் நித்திய சுதந்திரம் எனக்குக் காட்டப்பட்டது. சத்தியத்திற்காக மிக அதிகமான பாடுகளைச் சகித்தவர்கள் தாங்கள் மிகவும் அதிகமாக பாடுபட்டதாக நினைக்கமாட்டார்கள். மாறாக, பரலோகத்தை வெகு லகுவாகப் பெற்றுக்கொண்டோம் என்று எண்ணுவார்கள்.

நிறைவேற்றப்படாத கடமைகள், ஒதுக்கித்தள்ளின—சுயநலமான ஏமாற்றின—வஞ்சித்துப்போட்ட—மிதமிஞ்சின எல்லா விஷயங்களையுங்குறித்த ஒவ்வொரு நாளின் கணக்கும் பரலோகத்திலிருக்கிறது. இறுதி நியாயத்தீர்ப்புக்காக எத்தனை தீயசெயல்கள் சேர்ந்து குவிந்துகொண்டிருக்கின்றன. கிறிஸ்து வரும்பொழுது, “அவனவனுடைய கிரியைக்குத்தக்கதான பலன்” அவரோடுகூட வரும். அது எப்படிப்பட்ட வெளிப்பாடாக இருக்கும்! சரித்திரத்தின் பக்கங்கள், அவர்களுடைய வாழ்க்கையை வெளிப்படுத்தும்பொழுது, ஒரு சிலருடைய முகங்கள் எத்தனை குழப்பமடையும்!

செய்யப்படுகிற நன்மை—தீமையான செயல்கள், அதின்மூலம் பாதிக்கப்பட்டவர்கள், இவைகளைப்பற்றின அனைத்தையும் இருதயங்களை ஆராய்கிறவர் அறிந்து வெளிக்கொண்டுவருகிறார். ஏனெனில் அவருக்கு அனைத்து இரகசியங்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் செயலைத்தூண்டிய நோக்கங்களுக்கு ஏற்றவாறு வெகுமதி அளிக்கப்படும்.

கிறிஸ்துவின் வருகை அதிசீக்கிரம். அது வேகமாக சமீபித்துக்கொண்டிருக்கிறது. நாம் வேலைசெய்யக் கொஞ்ச காலமே இருக்கிறது. ஆண்களும் பெண்களும் அழிந்து கொண்டிருக்கிறார்கள்....

அழிந்துகொண்டிருக்கிற உலகத்தின் தேவைகளை நாம் புரிந்துகொள்வதற்கேதுவாக, ஆண்டவருடைய மாற்றும் வல்லமை நம்மை ஆட்கொள்ளவேண்டியது அவசியம். உங்களுக்கு நான் பாரத்தோடு அனுப்பும் செய்தியெல்லாம்: “ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள், ஆண்டவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்” என்பதே. உங்கள் விளக்குகளிலுள்ள திரிகளை வெட்டிச் சரிப்படுத்துங்கள், சத்திய ஒளி எல்லா ஒதுக்குத் தெருக்களிலும் புதர் வேலியோரங்களிலும் ஒளிரட்டும். எல்லாவற்றிற்குமான முடிவின் சமீபத்தைக்குறித்து உலகம் எச்சரிக்கப்படவேண்டும்.

ஒரு புதிய மன மாற்றத்தை நாம் நாடுவோம். நம்முடைய இருதயம் மென்மையாக மாறவும், முரட்டுத்தனமான ஆவியோடு வேலைசெய்யாதபடிக்கு மனம்மாறவுந்தக்கதாக பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தை முழுமையாக ஆட்கொள்ளவேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். ஆண்டவருடைய சித்தத்தைச் செய்கிறவர்களாகவும், ஆலோசனைக்காக ஆண்டவரை எதிர்பார்த்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளைப்போலவும், கொடுக்கப்படுகிற எவ்விடத்திலும் அவரது திட்டங்களைச் செயல்படுத்த ஆயத்தமாக இருக்கிறவர்களாகவும் நடந்துகொள்வோம். அப்படிப்பட்ட மக்கள் கூட்டத்தால் தேவன் மகிமைப்படுவார். அப்பொழுது, நம்முடைய பக்திவைராக்கியத்தைப் பார்க்கிற மற்றவர்கள் “ஆமென், ஆமென்” என்று சொல்லுவார்கள். ★

நவம்பர் 1

# சாத்தானுக்கும் அவனது தூதர்களுக்குமான சிறைவாசம்!

**“தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்.” –யூதா 1:6.**

பூமி பாழடைந்த ஒரு வனாந்தரம்போல் காட்சியளித்தது. நில நடுக்கங்களினால் தகர்ந்துபோன பட்டணங்களும் கிராமங்களும் குவியலாகக் கிடந்தன. மலைகள் அவைகளின் இடங்களைவிட்டு விலகி, மிகப்பெரிய ஆழமான பள்ளங்களை விட்டுச்சென்றிருந்தன. கடலினின்று வீசியெறியப்பட்ட அல்லது பூமியினின்று தெறிப்புண்டு விழுந்த கரடுமுரடான கற்பாறைகள் பூமியின் மேற்பரப்பு முழுவதும் சிதறிக்கிடந்தன. மிகப்பெரிய மரங்கள் வேரோடு பிடுங்கியெறியப்பட்டு நிலப்பரப்பின்மீது கிடந்தன. இங்குதான் சாத்தானுக்கும் அவனது தீயதூதர்களுக்கும் ஓராயிரம் ஆண்டுகளுக்குமான குடியிருப்பு அமைந்திருக்கும்.

பூமியின் மேற்பரப்பிலுள்ள உடைவுகளின்மீது மேலும் கீழுமாக அலைந்து திரிந்து, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு எதிராக அவன் நடத்திய கலகத்தின் விளைவுகளை காணும்படியாக, சாத்தான் இங்கு சிறைப்படுத்தப்பட்டிருப்பான். அவனது பொல்லாங்கினால் ஏற்பட்ட சாபத்தின் விளைவுகளை இந்த ஓராயிரம் ஆண்டுகளாக அவன் அனுபவிக்கவேண்டும். மற்ற உலகங்களில் உலாவித் திரிந்து, அங்குள்ள, பாவத்தில் விழுந்துபோகாத மக்களை சோதித்துத் தொல்லை கொடுக்கும்படி, அங்கு செல்லும் உரிமை அவனுக்கு இருக்காது. இந்தப் பூமியில் மாத்திரமே இருக்கத்தக்கதாகக் கட்டுப்படுத்தப்பட்டிருப்பான். இந்த காலத்தில் சாத்தான் கடுந்துன்பம் அனுபவிக்கிறான். அவனது வீழ்ச்சியின் நாளிலிருந்து தனது தீய குணங்களைத் தொடர்ந்து செயற்படுத்திக்கொண்டிருந்தான். இப்பொழுதோ,

அவனுடைய வல்லமை அவனிடமிருந்து பிடுங்கப்பட்ட நிலையில், விழுகையின் நாளிலிருந்து இதுவரை தான் செய்துவந்த செய்கைகளின் விளைவைச் சிந்திக்கவும், தான்செய்த அனைத்துத் தீமைகளுக்கான துன்பங்களையும் அனுபவித்து, மற்றவர்களை செய்யத்தூண்டிய அனைத்துப் பாவங்களுக்காவும் தண்டிக்கப்படும் தன்னுடைய பயங்கரமான எதிர்காலத்தை பயத்தோடும் நடுக்கத்தோடும் நோக்கிப்பார்க்கவும் விடப்பட்டான்.

இனி ஒருபோதும் சாத்தானால் சோதிக்கப்படவும் தொந்தரவு செய்யப்படவும் மாட்டார்கள் என்றும், அவனுடைய சமூகத்தினின்றும் அவனது சோதனைகளினின்றும் மற்ற உலகங்களிலுள்ள குடிமக்கள் விடுதலை பெற்றார்கள் என்றும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் தூதர்களும் முழங்கிய வெற்றிமுழக்கம் பதினாயிரம் இசைக்கருவிகளைக் கொண்டு, இசைவாக இசைக்கப்பட்ட கீதத்தைப்போல் இருந்ததை நான் கேட்டேன்.

தேவனுடைய மக்களுக்கு சாத்தானின் சிறையிருப்பு மிகுந்த மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். "கர்த்தர் உன் துக்கத்தையும், உன் தத்தளிப்பையும், நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான அடிமைத்தனத்தையும் நீக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும் அக்காலத்திலே, நீ பாபிலோன் ராஜாவின்மேல் (இங்கே சாத்தான்மேல்) சொல்லும் வாக்கியமாவது: ஒடுக்கினவன் ஒழிந்துபோனானே! பொன்னகரி ஒழிந்துபோயிற்றே! கர்த்தர் துஷ்டரின் தண்டாயுதத்தையும், அரசாண்டவர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார். உக்கிரங்கொண்டு ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் ஜாதிகளை அரசாண்டவன், தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப்படுகிறான்" (ஏசாயா 14:3-6) என்று ஏசாயா தீர்க்கன் கூறுகிறார். ★

நவம்பர் 2

# நாம் நமது காவல்தூதர்களை சந்திப்போம்!

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்." —சங்கீதம் 91:11.**

நித்தியத்தின வெளிச்சத்திலே ஆண்டவருடைய நடத்துதல்களையெல்லாம் காணும்வரை, அவருடைய தூதர்கள் நமக்குச்செய்த உதவிகள் அனைத்திற்கும் நாம் அவர்களுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. மனிதர்களுடைய காரியங்களில் பரலோக ஜீவிகள் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். மின்னலைப்போன்று பிரகாசிக்கிற உடையைத் தரித்தவர்களாக அவர்கள் காணப்பட்டிருக்கிறார்கள். வழிப்போக்கரைப்போன்ற மனிதர்களாக வந்திருக்கிறார்கள். மனிதர்களுடைய உபசரிப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இருளில் சிக்கிய பயணிகளுக்கு வழிகாட்டிகளாகச் செயல்பட்டிருக்கிறார்கள். அவர்களை அழிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் கலைத்து, அழிம்பனுடைய அடிக்கு விலக்கியிருக்கிறார்கள்.

உலகின் அதிபதிகள் அறியாமலிருந்தாலும் அவர்களுடைய ஆலோசனை மன்றங்களிலே தூதர்கள் பேச்சாளர்களாக இருந்திருக்கிறார்கள். மானிடக் கண்கள் அவர்களைக் கண்டிருக்கின்றன. அவர்கள் கோரிக்கைகளுக்கு மனிதர்கள் செவிசாய்த்திருக்கிறார்கள். ஆலோசனைக்கூடங்களிலும், நியாயவிசாரணை மன்றங்களிலும் ஒடுக்கப்பட்ட—உபத்திரவப்படுத்தப்பட்ட மக்களுக்காக பரலோக தூதுவர்கள் பரிந்துபேசியிருக்கிறார்கள். தேவனுடைய மக்களுக்கு தவறிழைக்கும்படி முயற்சித்த எல்லாத் தீமைகளையும் கட்டுப்படுத்தி, நோக்கங்களையும் முறியடித்திருக்கிறார்கள். பரலோகப் பள்ளிக்கூடத்திலே பயிலப்போகின்ற மாணவர்களுக்கு இவைகளெல்லாம் வெளியாக்கப்படும்.

மீட்கப்பட்ட ஒவ்வொரு நபரும் தங்கள் சொந்த வாழ்க்கையில் தூதர்கள் செய்த ஊழியங்களைப் புரிந்துகொள்வர். தனது ஆரம்ப நாட்களிலிருந்து தன்னைப் பாதுகாத்த தூதன் தனது நடைகளை விழிப்போடு பார்த்திருந்த தூதன்—ஆபத்து நாளிலே தன்னுடைய தலையை மறைத்த தூதன்—மரணஇருளின் பள்ளத்தாக்கிலே தன்னோடு இருந்த தூதன்—தான் இளைப்பாறின இடத்தைக் குறித்துவைத்த தூதன்—உயிர்த்தெழுதலின் காலையில் முதலாவது தன்னை வரவேற்ற தூதன்—அவனோடு உரையாடல் நிகழ்த்தி, தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலே தெய்வீக தலையீட்டையும் மானிடத்தின் ஒவ்வொரு வேலையிலும் பரலோகம் எவ்வளவு ஒத்துழைத்தது என்பதையுங்குறித்து அறிந்துகொள்வது எப்படியிருக்கும்!

ஒவ்வொரு மனிதனும் தனது கரங்களில் தேவனுடைய வார்த்தையை வைத்தவனாக, வாழ்விலே அவனது பங்கு எங்கு இருப்பினும், தெரிவு செய்துகொண்டால், இப்படிப்பட்ட தோழமையைப் பெற்றுக்கொள்ளலாம். அந்த வேதாகமத்தின் பக்கங்களிலே மனித இனத்தின் மேம்பட்ட, மிகச்சிறந்த மனிதனோடு அந்த நபர் உரையாடி, நித்தியமானவர் மனிதரோடு பேசுகிறதைக் கேட்கலாம். “தேவதூதர்களும் உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிற” (1 பேதுரு 1:12) அந்த வசனங்களைப் படித்துத் தியானிப்பதின்மூலம் அவர்களுடைய தோழமையைப் பெற்றுக்கொள்ளலாம். ★

நவம்பர் 3

# தேவனுடைய பட்டணத்திற்கு வரவேற்பு!

**"அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்." —மத்தேயு 25:23.**

விவரிக்கமுடியாத அன்போடு, இயேசு தம்முடைய உண்மையானவர்களை ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க அழைக்கிறார். அந்த இரட்சகருடைய சந்தோஷமெல்லாம் தம்முடைய வேதனையினாலும் சிறுமையினாலும் தாம் சம்பாதித்த ஆத்துமாக்களை மகிமையின் இராஜ்யத்தில் காண்பதே. ஆசீர்வதிக்கப்பட்ட அந்தக் கூட்டத்திலே, தங்களுடைய ஊழியத்தினாலும், ஜெபத்தினாலும், அன்பான தியாகத்தினாலும் சம்பாதித்த ஆத்துமாக்களைக் காணும்பொழுது, மீட்கப்பட்டவர்கள் அவருடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வார்கள். தாங்கள் கிறிஸ்துவிற்காக சம்பாதித்த ஆத்துமாக்களும் அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் சம்பாதித்த ஆத்துமாக்களுமாக, ஒரு பெரிய கூட்டம் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தைச் சூழ்ந்து நிற்கும். அதைக் காணும்போது, சொல்லமுடியாத ஆனந்தம் அவர்களுடைய இதயங்களை நிறைத்து, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கிரீடங்களைக் கழற்றி, கிறிஸ்துவின் பாதத்திலே வைத்து, என்றைக்கும் அவரைத் துதித்துக்கொண்டேயிருப்பார்கள்.

மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, பக்தியோடுகூடிய பரவசமான துதியின் சத்தம் அங்கு எழும்பும். இரண்டு ஆதாமும் சந்திக்கப்போகிறார்கள். தேவகுமாரன் தாம் உண்டாக்கின—தனக்கு விரோதமாகப் பாவஞ்செய்த மனிதகுலத்தின் தகப்பனான ஆதாமை வரவேற்கும்படி தமது கைகளை நீட்டுவார். அந்த ஆதாமுடைய பாவத்தினாலுண்டான சிலுவையின் தழும்பு அவர் மேனியிலே காணப்படும். அந்த கொடுமையான ஆணிகள் ஏற்படுத்திய கோரத்தழும்புகளை ஆதாம் தெளிவாகப் பார்க்கும்பொழுது, அவரது மார்பிலே சாய்வதற்குப் பதிலாக,

தன்னைத் தாழ்த்தியவனாக அவர் பாதத்தில் விழுந்து, “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரமானவர்” என்று கதறுகிறான். மிகவும் அன்போடு அவனைத் தூக்கியெடுத்து, நீண்ட காலமாக எந்த ஏதேன் வீட்டிலிருந்து அவன் வெளியேற்றப் பட்டிருந்தானோ அந்த ஏதேன் வீட்டை மீண்டும் நோக்கிப்பார்க்குமாறு அவனை வேண்டுகிறார்.

ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டதற்குப் பிறகு, இப்பூமியிலே ஆதாமுடைய வாழ்க்கை வருத்தம் நிறைந்ததாகவே இருந்தது. காய்ந்து விழுகிற ஒவ்வொரு இலையும், பலிசெலுத்தப்பட்ட ஒவ்வொரு உயிரும், அழகான இயற்கையின்மீது வந்த ஒவ்வொரு குறையும், மனிதனுடைய தூய்மையான குணத்திலே வந்த ஒவ்வொரு கறையும், தான் செய்த பாவத்தின் ஒரு புதிய நினைப்பூட்டுதலாக இருந்தது.... மிகவும் பொறுமையான தாழ்மையோடு, ஏறக்குறைய ஓராயிரம் வருடங்களாக, மீறுதலுக்கான தண்டனையை அவன் சகித்தான். தன் பாவங்களுக்காக உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்கரின் புண்ணியங்களிலே உறுதியான நம்பிக்கை வைத்தான். மறுபடியும் உயிர்த்தெழுவோம் என்கிற நம்பிக்கையிலேயே மரித்தான். தேவனுடைய குமாரன் மனுஷனுடைய தோல்வியினின்றும் விழுகையினின்றும் அவனை மீட்டார். இப்பொழுது, பாவநிவாரண ஊழியத்தினாலே, ஆரம்பத்தில் ஆதாமுக்குக் கொடுத்திருந்த ஆளுகையை மீண்டும் அவனுக்குக் கொடுத்தார். ★

# விவரிக்கமுடியாது மகிழ்ச்சி!

**"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்." —எபிரெயர் 12:2.**

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11) என்று இயேசு கூறினார்.

தம்முடைய ஊழியத்தின் பலன் தம்முன் இருக்கிறதை கிறிஸ்து எப்பொழுதும் பார்த்தார். அவர் பூமியிலே வாழ்ந்த வாழ்க்கை கடினமான வேலை, தியாகம் இவைகளாலேயே நிறைந்திருந்தது என்றாலும், இவைகளெல்லாம் வீணாகப்போகாது என்கிற எண்ணத்தினால் எப்போதும் உற்கசாகமடைந்தார். தமது ஜீவனை மனிதர்களுக்காகக் கொடுப்பதின்மூலம், தேவனுடைய சாயலை மனிதனில் உண்டுபண்ண அவரால் முடிகிறது. நம்மைப் புழுதியிலிருந்து எடுத்து, தமது குணத்தின்படியே நம்முடைய குணங்களையும் மாற்றி, தமது சொந்த மகிமையினால் அதை அலங்கரிக்க அவரால் முடிகிறது.

கிறிஸ்து தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியடைந்தார். நித்தியத்தின் விசாலத்தை அவர் பார்த்தார். பார்த்தபொழுது, தமது தாழ்மையினாலே மன்னிப்பையும் நித்தியஜீவனையும் பெற்றுக்கொண்டவர்கள் அதிலே மகிழ்ந்திருப்பதையும் கண்டார். அவர்களுடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார் அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; அவர்களுக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாக்கப்பட்டார்கள். மீட்கப்பட்டோரின் மகிழ்ச்சி ஆரவாரத்தை அவர்கள் கேட்டார்கள். மோசேயினுடைய பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் அவர்கள் பாடுகிறதை அவர் கேட்டார். முதலாவது அவர் இரத்தத்தில் ஸ்நானம் பண்ணவேண்டியதாக இருந்தபோதிலும், குற்றமற்ற

அவருடைய ஆத்துமாவின்மேல் உலகத்தின் பாரம் இறங்கவேண்டியதிருந்த போதிலும், சொல்லொண்ணா சாபம் அவர்மேல் நிழலிட்டபோதிலும், தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவர் அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார்.

இந்த மகிழ்ச்சியை அவரைப் பின்பற்றுகிற அனைவரும் பகிர்ந்துகொள்ளவேண்டும். என்னதான் மகா மேன்மையான பிரதி பலன் இந்த உலகத்தற்குப்பின்பு நமக்கிருக்கின்றபோதிலும், இங்கேயேதானே, விசுவாசத்தினாலே, இரட்சகருடைய சந்தோஷத்திற்குள் நாம் பிரவேசிக்கவேண்டும்.

நித்தியத்திற்கும் தம்மோடு தங்கியிருக்கும்படி, கடைசியில் தேவன் அவர்களை தம்முடையவர்களாக ஏற்றுக்கொள்ளுவதற் கேதுவாக தேவனுடைய குமாரர்களாகும் வல்லமையை, தம்மை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கொடுக்கிறார். இந்த வாழ்க்கையிலே அவர்கள் ஆண்டவருக்கு உண்மையாயிருப்பார்களானால், கடைசியிலே, “அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்”–வெளி. 22:4. ஆண்டவரைக் காண்கிறதைக்காட்டிலும் வேறு என்ன சந்தோஷம் பரலோகத்தில் நமக்கு இருக்கமுடியும்? கிறிஸ்துவின் கிருபையினாலே மீட்கப்பட்டவர்கள் அவருடைய முகத்தைப் பார்த்து, அவரைத் தங்களுடைய தகப்பனாக அறிந்துகொள்ளுகிறதைக் காட்டிலும் வேறு என்ன பெரும் மகிழ்ச்சி பாவிகளுக்கு கிடைக்கமுடியும்? ★

நவம்பர் 5

# மீட்கப்பட்டோருடைய நன்றியுணர்வு!

**“அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.” —மத்தேயு 25:40.**

தேவ மக்களுக்கு உதவும்படி நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் ஆண்டவருக்கே செய்ததுபோல கணக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பலனளிக்கப்படும்.

“வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” என்று இயேசு தமது தெளிவான—கீதம்போன்ற குரலினால், தம்முடையவர்களை அழைக்கும்பொழுது, அதை அறுவடை செய்கின்ற ஒவ்வொருவரும் அதைக்கேட்டு எப்படிப்பட்ட மனநிறைவை அடைவார்கள்.

வீணாக மரிக்கவில்லை என்பதினால் மீட்பர் மகிமைப்படுகிறார். அழிந்து மடிந்துகொண்டிருந்த பாவிகளுக்காக தாங்கள் அனுபவித்த ஆத்தும வருத்தத்தின் பலனைப் பார்க்கிற அவருடைய உடன்வேலைக்காரரும் மிகவும் ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த இதயங்களோடு திருப்தியடைவார்கள். அவர்கள் செலவிட்ட மனப்பாரம் நிறைந்த மணிவேளைகளும், அவர்கள் சந்திக்கநேரிட்ட குழப்பமான சூழ்நிலைகளும், சமாதானத்திற்கேதுவானவைகளைப் பார்க்கவும் ஏற்றுக்கொள்ளவும் சிலர் மறுத்துப்போட்டதால் அவர்களுடைய இதயம் அடைந்த துக்கமும்—எல்லாம் மறக்கப்பட்டுப்போகும். ஊழியத்தைத் தாங்குவதற்காக அவர்கள் செய்த தியாகமெல்லாம இனி நினைவில் இருப்பதில்லை. இயேசுவிற்காக இரட்சிக்க வேண்டுமென்று அவர்கள் தேடியலைந்த ஆத்துமாக்கள் தேவனின் இரக்கத்திற்கும் அன்பிற்கும் நினைவுச்சின்னங்களாக, நித்தியமாக

இரட்சிக்கப்பட்டார்கள் என்பதைக் காணும்பொழுது, பரலோகம் முழுவதும் துதியின் ஆரவாரங்களாலும், நன்றியறிதலின் பூரிப்புகளாலும் நிரம்பிவழியும்.

நம்முன்பாக ஒரு பரலோகம் இருக்கிறது. அதின் குடிகளுக்குள்ளே சச்சரவே உண்டாகாது.... "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று மீட்கப்பட்ட பரிசுத்த குடும்பத்தை வாழ்த்தி கிறிஸ்து சொல்லுகிற வார்த்தைகளை நாம் கேட்கலாம். நம்முடைய பொற்சுரமண்டலங்களை நாம் மீட்டுவோம். பரலோகம் முழுவதிலும் உன்னதமான இசை தொனிக்கும். ஜொலிக்கிற கிரீடங்களை அவர் பாதத்திலே வைத்து, நமது சார்பிலே வெற்றிகொண்ட அவருக்கு மகிமையைச் செலுத்தலாம்.

நாம் புரிந்துகொள்ளாத ஒரு சில காரியங்கள் இங்கே இருக்கலாம். நம்முடைய குறுகிய புரிந்துகொள்ளுதலுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட சில வேதாகமப் பகுதிகள் நமக்கு மிக விளக்கமற்றதாகத் தெரியலாம். ஆனால் நம் இரட்சகர் நம்மை ஜீவத்தண்ணீர்களண்டையில் நடத்திச் செல்லும்பொழுது, முன்பு நமக்குத் தெளிவாகப் புரியாதவைகளை அவர் தெளிவாக்குவார். ★

# பரலோகத்தை எவ்வாறு இலகுவாகப் பெற்றுக்கொண்டோம்!

**"... அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." —ஏசாயா 53:10,11.**

ஆண்டவருடைய அன்பு அளவில்லாதது. அது ஒப்பில்லாதது. அது முடிவில்லாதது.... கிறிஸ்துவுடைய மேன்மையையும் மகிமையையும் நாம் தியானஞ்செய்யும்பொழுது, தொலைந்துபோன உலகத்தை மீட்பதற்காக, கல்வாரிச் சிலுவையின்மீது செய்யப்பட்ட தியாகத்தைத் தூண்டிய அவருடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதைக் காணலாம். இந்த ஆய்வுப்பொருள் நித்திய காலங்கள் நெடுகிலும் பரிசுத்தவான்களை அதிசயத்தினாலும் வியப்பினாலும் நிறைக்கும். இப்படியிருக்க ஏன் அதை நாம் இந்த உலகத்திலேயே தியானிக்கக்கூடாது?...

ஆ! தேவத்துவத்தின் இரகசியம்.... தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்! அதைப் புரிந்துகொள்ள நாம் முயற்சிக்கும்பொழுது அதன் இரகசியம் மேலும் அதிகரிக்கிறது. இது புரிந்துகொள்ளக் கூடாததுதான் என்றாலும், இயேசுவைக்குறித்தும், ஒப்பிடமுடியாத அவருடைய அன்பைக்குறித்தும் மிகக் குறைவாகவே அறிந்துகொள்ளக் கிடைக்கிற சந்தர்ப்பங்களையுங்கூட உலகத்தையும் உலகக்காரியங்களையும் முன்னிருத்தி, மக்கள் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். கல்வாரியை—தேவனுக்கு அன்பான குமாரனுடைய அன்பு வெளிப்பட்ட கல்வாரியை, தியானிக்க விருப்பமில்லாமலிருக்கிற நமக்கு எப்படி சாதாரண உலகக்காரியங்களைக்குறித்து உற்சாகமாயிருக்கமுடிகிறது?....

பரதேசிகளும் நன்றியறியாதவர்களும், குற்றவாளிகளுமா யிருக்கிறவர்களை தகப்பனுடைய வீட்டிற்குக் கொண்டுசேர்க்கும் படிக்கே அத்தனை வேதனைகளையும் அவமானத்தையும் அவர் சகித்தார். ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் அந்த வீட்டை என்னால் இழக்கமுடியாது.

தேவனுடைய இராஜ்யத்திலே நான் சேர்க்கப்படுவேனேயாகில் இரட்சிப்பின் திட்டத்தை இன்னும் ஆழமாகத் தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்பேன். மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் எப்பொழுதுமில்லாத அளவிற்கு, பிதாவினுடைய அன்பையும் குமாரனுடைய அன்பையும் அறிந்து புகழுவார்கள். அவர்களுடைய நித்தியமான நாவுகளிலிருந்து துதியின் கீதங்கள் எழும்பும். அவர் நம்மை நேசித்தார். தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தார். மகிமையடைந்த சரீரங்களோடு, விரிவாக்கப்பட்ட தகுதிகளோடு சுத்தமாக்கப்பட்ட இருதயங்களோடு, கறையற்ற உதடுகளைக்கொண்டு, மீட்பின் உன்னத அன்பை நாம் பாடுவோம். பரலோகத்திலே வேதனைப்படுகிறவர்கள் இருக்கமாட்டார்கள். நித்தியமான காரியங்களைக்குறித்து உபதேசிக்கப்படவேண்டிய ஐயவாதிகள் (நாத்திகர்கள்) இருக்கமாட்டார்கள். பிடுங்கி எறியவேண்டிய தவறான எண்ணங்கள் இருக்காது. மாறாக, அறிவைக் கொடுக்கிற அன்பை எல்லோரும் பகிர்ந்துகொள்ளுகிறவர்களாகவே இருப்பார்கள். இளைப்பாறுதல்.... ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! அங்கே தேவனுடைய மக்களுக்கு ஓர் இளைப்பாறுதல் உண்டு. அங்கே இயேசு, மீட்கப்பட்டவர்களை புல்லுள்ள இடங்களுக்கு நடத்திச் செல்லுவார். தேவனுடைய நகரத்தை மகிழ்விக்கிற ஜீவத்தண்ணீர்களண்டையில் அவர்களைக்கொண்டுசெல்லுவார். அப்பொழுது: "நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்று கிறிஸ்து தமது பிதாவினிடத்தில் ஜெபித்த ஜெபத்திற்குப் பதிலளிக்கப்படும். ★

# இறுதியல் பரமவீட்டை அடைந்துவிட்டோம்!

**“அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.” –மத்தேயு 25:21.**

உங்கள் உணர்வுகள் இப்பூமியின் கவர்ச்சியான அழகினாலே மகிழ்ச்சியடையும்போது, பாவத்தினாலும் மரணத்தினாலும் கறைபட்டிராத, வரப்போகிற உலகத்தைக்குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். அங்கே இயற்கை, சாபத்தின் நிழலை ஒருபோதும் அணிந்துகொள்ளாது. மீட்கப்படுகிறவர்களின் வீடுகளை கற்பனை செய்துபாருங்கள். நீங்கள் எவ்வளவு அழகான கற்பனை செய்திருந்தாலும், அதைக் காட்டிலும் அது மிகவும் மகிமையுள்ளதாயிருக்கும். இயற்கையிலே தேவன் அளித்திருக்கும் பல்வேறு கொடைகளிலே, அவரது மகிமையின் மங்கலான ஒளிர்வையே நாம் காண்கிறோம். “எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை”–1கொரி. 2:9.

வருங்காலத்தில் தேவனுடைய பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பரலோகத்தின் கதவுகள் விரிவாகத் திறக்கப்படும். அப்பொழுது, மகிமையின் இராஜாவுடைய உதடுகளிலிருந்து பிறக்கிற “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” (மத்தேயு 25:34) என்கிற ஆசீர்வாதம் இனிமையான இசையாக அவர்கள் காதுகளில் தொனிக்கும்.

பின்பு மீட்கப்பட்டவர்களுக்காக இயேசு ஆயத்தம்பண்ணிக் கொண்டிருக்கிற அந்த வீட்டிற்குள் அவர்கள் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவார்கள்.

பின்னர், மீட்கப்பட்ட அந்த கூட்டத்தை இயேசு நகரத்தின் வாசலுக்கு அழைத்துச் சென்றதை நான் கண்டேன். அவர் அந்த கதவுகளைத் திறக்க, ஜொலிக்கின்ற கீல்களிலே அமைந்திருந்த கதவுகள் அசைந்து பின்னாகச் சென்றது. சத்தியத்தைக் கைக்கொண்ட ஜாதிகளை உள்ளே வரும்படி அவர் அழைத்தார். கண்களுக்கு விருந்தளிக்கும் அனைத்தும் அந்த நகரத்தினுள்ளே இருந்தது. எல்லா இடங்களிலும் மகிமை வாசமாயிருந்தது. பின்பு இயேசு மீட்கப்பட்ட பரிசுத்தவான்களைப் பார்த்தார். அவர்கள் முகங்கள் மகிமையினால் பிரகாசித்தன. தமது அன்பான பார்வையை அவர்கள்மேல் நிறுத்தி, கிதம்போன்ற இனிமையான குரலில், என் ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டேன்; திருப்தியடைந்தேன்; இந்த மேலான மகிமையெல்லாம் நித்தியத்திற்கும் நீங்கள் அனுபவிக்கும்படி உங்களுடையதே. உங்கள் வருத்தமெல்லாம் முடிவடைந்தது. “இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை”... என்றார்.

பரலோகத்தை வர்ணிக்க எந்த மொழியும் போதாது. அந்தக் காட்சிகள் என்முன் எழும்பும்பொழுது, நான் ஆச்சரியத்தினால் உறைந்துபோகிறேன். அதின் சிறந்த பிரகாசத்திலும் உன்னத மகிமையிலும் மூழ்கிப்போகிற நான் எழுதுவதை நிறுத்திவிட்டு, “ஆ! என்ன அன்பு, என்ன ஆச்சரியமான அன்பு என்று வியக்கிறேன்” மிக உயர்ந்த மொழிகூட, பரலோகத்தின் மகிமையையும், இணையற்ற இரட்சகருடைய அன்பையும் விவரிப்பதில் குறைவுள்ளதாகவே இருக்கிறது.★

# பரலோகத்தை அடைந்தவுடன் நமக்காகக் காத்திருக்கும் ஆச்சரியங்கள்...!

**"... மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." —1 சாமுவேல் 16:7.**

கிறிஸ்து தம்மிடம் ஈர்த்துக்கொண்டிருக்கும் நபர்களை அநேக சமயங்களில் நாம் நம்பிக்கையற்றவர்களென்று எண்ணுகிறோம். இவர்களெல்லாம் பரலோகத்திற்கு ஒருபோதும் வரமாட்டார்களென்று எந்த அண்டை அயலகத்தாரைப்பற்றி யூகித்திருந்தோமோ, அவர்களில் அநேகர் அங்கிருப்பார்கள். மனிதன் தோற்றத்தை வைத்து மதிப்பீடு செய்கிறான். தேவன் இருதயத்தைப்பார்த்து நியாயந்தீர்க்கிறார்.

மீட்கப்பட்டவர்களில் சிலர், தங்களுடைய வாழ்க்கையின் கடைசி மணி நேரங்களில் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டவர்களாக இருப்பார்கள். மரிக்கும்பொழுது இரட்சிப்பின் திட்டத்தை பூரணமாகப் புரிந்துகொள்ளாத இவர்களுக்கு, பரலோகத்திலே ஆலோசனை வழங்கப்படும்.

சிலுவையிலே கடுந்துயர் அனுபவித்துக்கொண்டிருந்த இயேசுவிற்கு ஒரு ஆறுதலின் ஒளிக்கதிர் கிடைத்தது. தவறுக்காக மனஸ்தாபப்பட்ட அந்தத் திருடனுடைய ஜெபந்தான் அது.... நெருக்கப்பட்டு—பரிகசிக்கப்பட்டு, சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுவிலே உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை அவன் காண்கிறான். ஆதரவற்றவனாக மரித்துக்கொண்டிருந்த அந்த ஆத்துமா இரட்சகர்மேல் சாய்ந்துகொண்டபொழுது, அந்த வேதனையான குரலிலே நம்பிக்கை கலந்திருந்தது. "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று கதறிய அவனுக்கு "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்கிற பதில் உடனடியாக வந்தது.

இந்த விசுவாசத்தை பதினொன்றாம் மணிநேரத்தில் வேலைக்கு வந்தவர்களுடைய விசுவாசத்தோடு ஒப்பிடலாம். அநேக மணி நேரங்கள் வேலை செய்தவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளத்தைப் போலவே, பதினொன்றாம் மணிநேரத்தில் வந்தவர்களுக்கும் கிடைக்கும். அந்தத் திருடன் மனஸ்தாபப்பட்டவனாக விசுவாசத்தோடு இருதயம் நொறுங்கி விண்ணப்பித்தான். கிறிஸ்து அவருக்குச் சித்தமானால், அவனை இரட்சிக்கமுடியும் என்பதை முழுவதும் உணர்ந்தவன்போல, உண்மையாகக் கேட்டான்.

கிறிஸ்து யார் யாருக்காக நியாயத்தீர்ப்பிலே பரிந்து பேசுகிறாரோ, அவர்கள் இறையியல்பற்றி ஒரு சிறிதும் அறியாதிருந்தபோதிலும், அவருடைய கொள்கைகளை நெஞ்சார நேசித்திருக்கிறார்கள்.... அஞ்ஞானிகளில், அறியாமலே ஆண்டவரைத் தொழுதுகொண்டவர்களும் இருப்பார்கள். மனிதர்கள்மூலமாக சத்தியத்தை ஒருபோதும் அறிந்திராதவர்கள் அழியாமல் காக்கப்பட்டிருப்பார்கள். எழுதப்பட்ட தேவனுடைய பிரமாணத்தை அறியாதவர்களாயிருப்பினும் இயற்கையின் வாயிலாக அவருடைய சத்தத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிற கிரியைகளை அவர்கள் நடப்பித்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயங்களைத் தொட்டார் என்பதற்கு, அவர்கள் கிரியைகள் சாட்சிகளாயிருக்கின்றன. அவர்கள் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தாழ்நிலையிலுள்ள மக்களிடத்திலும் அஞ்ஞானிகளுக்கு மத்தியிலும், "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்ற வார்த்தைகளை இரட்சகர் சொல்லக்கேட்கும்பொழுது, எத்தனை ஆனந்தமும் ஆச்சரியமும் அடைவார்கள். அவருடைய அங்கீகரிப்பைக்கேட்டு, மகிழ்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் அவர்கள் அவரைப் பார்க்கும்பொழுது, அளவில்லாத அன்பான அவருடைய உள்ளம் எத்தனை ஆனந்தமடையும்! ★

# மனநிறைவை வழங்கக்கூடிய பதில்கள்!

**“பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக் கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.”**

**—ஏசாயா 55:9.**

நம்முடைய திட்டங்கள் எப்போதும் ஆண்டவருடைய திட்டங்களாயிருப்பதில்லை....

நாம் நம்மைப் புரிந்துகொண்டிருக்கிறதைக்காட்டிலும் அதிகமாக நம்மைப் புரிந்துவைத்திருக்கிற ஆண்டவர், நம்மேல் வைத்திருக்கிற அக்கறையான அன்பு மற்றும் ஆர்வத்தின் காரணமாக, நம்முடைய சொந்த பேராவல்களை திருப்தி செய்யத்தக்கதாக நாம் சுயநலத்தோடு நாடுவதை அனுமதிக்க மறுக்கிறார். தேவன் நமக்காக வைத்திருக்கிற திட்டங்கள் நிறைவேறும்பொருட்டு, நம்முடைய திட்டங்கள் அநேக சமயங்களில் தோல்வியடைந்திருக்கின்றன....

இங்கே நம்மை வருத்தப்படுத்தின—ஏமாற்றின இரகசியங்களெல்லாம் வரப்போகிற வாழ்க்கையிலே தெளிவாக்கப்படும். பதில் வராத ஜெபங்களாக—ஏமாற்றமடைந்த நம்பிக்கைகளாகத் தோன்றினவைகளெல்லாம், மிகப்பெரிய ஆசீர்வாதங்களாக நமக்கு அமைந்ததை அங்கே நாம் பார்ப்போம்.

தேவனுடைய இரகசியங்களைப் புரிந்துகொள்ளத்தக்கதாக ஆவிக்குரிய வளர்ச்சிகளில் போதுமான அளவிற்கு இப்பொழுது நாம் முயற்சி செய்து முன்னேறவில்லை. எனவே, பரலோகக் குடும்பத்திற்குள் நாம் பிரவேசிக்கும்பொழுது, இந்த இரகசியங்களெல்லாம் நமக்குமுன் திறந்துகாட்டப்படும்....

இப்போது நமக்கு வெளியாக்கப்பட்டிருக்கிற தேவ இரகசியங்களை நாம் மேன்மையாக நினைத்து, அவைகளை திரட்டிக்கொள்ளவில்லை. எனவே

இப்பொழுது தேவன் அமைதி காக்கின்ற அநேக காரியங்களைக்குறித்து ஏராளமான விளக்கங்கள் பின்னர் வெளிப்படுத்தப்படும். தெய்வீகத் திட்டத்தின் வழிமுறைகள் தெளிவாகக் காட்டப்படும். கிருபையின் இரகசியங்கள் கிறிஸ்துவின் மூலமாகத் திறந்து காட்டப்படும். இப்பொழுது நம் அறிவிற்கு எட்டாத புரிந்துகொள்ளக் கடினமாயிருப்பது எல்லாம் விளக்கப்படும். விளக்கப்பட முடியாதிருந்ததிலெல்லாம் ஒழுங்கையும், தடுத்து நிறுத்திவைக்கப்பட்ட அனைத்துக் காரியங்களிலும் ஞானத்தையும், பங்களிக்கப்பட்ட அனைத்திலும் நன்மையையும் கிருபையின் இரக்கத்தையும் காண்போம். சத்தியம் அதின் தெளிவற்ற நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, மிகத் தெளிவாக மனதிற்குத் திறந்துகாட்டப்படும். அதின் வெளிச்சம் தாங்கக்கூடியதாயிருக்கும். உள்ளம் ஆனந்தத்தால் பாடும். என்றுமாக போராட்டங்கள் முடிவடையும். கஷ்டங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும்.

தேவனுடைய வழிநடத்துதல்களிலே நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்த அனைத்தும், வரப்போகிற உலகத்திலே தெளிவாக்கப்படும். புரிந்துகொள்ளக் கடினமாயிருந்தவைகள் அதின் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளும். கிருபையின் இரகசியங்கள் நம்முன் திறந்துவைக்கப்படும். எல்லைக்குட்பட்ட நமது மனங்களுக்கு குழப்பமும், காப்பாற்றப்படாத வாக்குறுதிகளுமாகத் தோன்றியவைக ளெல்லாம், மிகவும் பூரணமாக, நமது நன்மைக்கேதுவாக இசைந்து செயல்பட்டது என்பதை நாம் காண்போம். மிகவும் சோதனையாகத் தோன்றிய அனுபவங்களெல்லாம் எல்லையற்ற அன்பாகிய அவர் கட்டளையிட்டவைகள்தான் என்கிறதை நாம் அறிவோம். சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே அவருடைய அன்பு மாற்றிக் கொடுத்திருக்கிறது என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளும் பொழுது, சொல்லிமுடியாத, மகிமை நிறைந்த மகிழ்ச்சியால் நாம் களிகூருவோம்.★

நவம்பர் 10

# மேலானவைகளை நாடுங்கள்

**"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்."**
**—கொலோசெயர் 3:2.**

தேவனுடைய மக்கள் இந்த உலகத்திலிருந்து பரலோகத்தின் மேலும் அதற்கடுத்த காரியங்கள்மேலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களானால், விசேஷித்த ஜனமாக இருப்பார்கள். ஏனெனில், மனிதர்களுக்கு ஆண்டவர் காண்பித்த இரக்கம், நன்மை, பரிவு இவைகளை அவர்கள் காண்பார்கள். அவருடைய அன்பு அவர்களிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்கும். அவர்களது வாழ்க்கை பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறதையும், தங்களுடைய கவனத்தை பூமியிலுள்ளவைகளின் மேலல்லாது, பரலோகத்திலுள்ளவைகள்மேல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்களைச் சுற்றிலுமிருக்கிறவர்கள் காண்பார்கள்.

பரலோகத்தைக்குறித்து யோசிக்கும்பொழுது, எவ்வளவு உச்சக்கட்டவரை நமது கற்பனாசக்தியை நாம் விரிவாக்க முடியுமோ அதற்கேற்றவாறு செய்து, நமது திறனுக்கேற்றவாறு மிக உயர்வான சிந்தனைகளைச் சிந்திக்கவேண்டும். இந்தப் பொருளைப்பற்றி அதின் நீள—அகல—உயரத்தை புரிந்துகொள்ளும் நம் முயற்சியில் நமது உள்ளங்கள் சோர்வடையும். நித்தியத்தின் மிகப்பெரிய கருப்பொருட்களை நம் மனங்களால் எடுத்துக்கொள்ள இயலாது. நன்மைக்காக நமது உள்ளங்களில் ஒரு உயர்வான செல்வாக்கை ஏற்படுத்தி, நமது குணமனைத்திலும் தாக்கம் ஏற்படுத்தாமல், இந்தக் காரியங்களைப் புரிந்துகொள்ள ஒரு முயற்சியை எடுப்பதுகூட நமக்குக் கூடாத காரியமாகும். விழுந்துபோன மனிதனுக்காக மரிக்கும்படி கிறிஸ்து எப்படி இவ்வுலகிற்கு வந்தார் என்பதை நாம் நினைக்கும்பொழுது, நம்மீட்பிற்காக செலுத்தப்பட்ட கிரயத்தைக்குறித்து ஓரளவு புரிந்துகொள்கிறோம். அதோடு ஆண்டவருக்கு அப்பாற்பட்ட எந்த ஒரு உண்மையான நன்மையும் மேன்மையும் இல்லை என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொள்கிறோம்.

கல்வாரி சிலுவையிலிருந்து பிரகாசிக்கும் ஒளியைக்கொண்டு மாத்திரமே பாவத்தின்மூலமாக மானிட இனம் எத்தகைய ஆழமான பாவத்திற்குள்ளும் இழிநிலைக்கும் விழுந்துவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். நம்மை மீட்கத்தக்கதாக பரலோகத்திலிருந்திறங்கிய சங்கிலியின் நீளத்தைக்கொண்டு மாத்திரமே, எவ்வளவு ஆழம் மூழ்கிவிட்டோம் என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். அதைப்போலவே, பார்க்கக்கூடாத உண்மைகளை எப்போதும் நம் மனக்கண்முன் வைத்துப்பார்த்தினால் மாத்திரமே, மீட்பின் ஆச்சரியமான திட்டத்தைப்பற்றி நம்மால் புரிந்துகொள்ளமுடியும்.

நாம் ஏறக்குறைய வீட்டிற்குச் சமீபமாக வந்துவிட்டோம். “உங்கள் போராட்டம் முடிவடைந்துவிட்டது. உங்கள் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்” என்கிற நம் இரட்சகருடைய—எத்தகைய கீதத்தையும்விட இனிமையான சத்தத்தை நாம் வெகு சீக்கிரத்தில் கேட்போம். பாக்கியமான ஆசீர்வாதத்தை அழியாமையுள்ள அவரது உதடுகளிலிருந்து கேட்க நான் விரும்புகிறேன். அவரைத் துதிக்க ஆசைப்படுகிறேன். சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கும் அவரை நான் மேன்மைப்படுத்த விரும்புகிறேன். பரலோக மன்றங்களின் ஊடாக எனது குரல் மீண்டும்மீண்டும் எதிரொலித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீங்கள் அங்கே இருப்பீர்களா?.... வரப்போகிற உலகத்தின் சந்தோஷங்களை சிந்தித்துப்பார்க்கிறதற்கேதுவாக, நம்மை அனைத்து நிறைவாலும், வல்லமையாலும் நிரப்ப தேவன் நமக்கு உதவிசெய்வாராக. ★

நவம்பர் 11

# மீட்கப்பட்டோருக்கான வெகுமதி!

**"...ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்." –1 கொரிந்தியர் 3:14.**

தேவனுடைய சிங்காசனத்தையும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனத்தையும் சூழ்ந்துநிற்கிற உண்மையான ஊழியக்காரருக்குக் கொடுக்கப்படுகிற பரிசு மிகவும் மகிமையுள்ளதாயிருக்கும். அழிந்துபோகிற கண்களாலே தேவனுடைய மகிமையைப்பார்த்த யோவான், செத்தவனைப்போல கீழே விழுந்தான். அந்தக் காட்சியை அவன் சகிக்கக்கூடாதிருந்தான். ஆனால், தேவ மக்கள் அழியாமையைத் தரித்துக்கொள்ளும்போது, "அவர் இருக்கிறவண்ணமாகவே" (1 யோவான் 3:2) அவரை தரிசிப்பார்கள். நேசிக்கப்பட்டவருக்குள் ஏற்றுக்கொள்ளப் பட்டவர்களாக, சிங்காசனத்திற்கு முன்பாக அவர்கள் நிற்பார்கள். அவர்களுடைய பாவங்களெல்லாம் அழிக்கப்பட்டாயிற்று. அவர்களுடைய மீறுதல்களெல்லாம் அகற்றப்பட்டாயிற்று. இப்பொழுது, தேவனுடைய சிங்காசனத்தின் மங்காத மகிமையை அவர்கள் பார்க்கலாம். கிறிஸ்துவோடு அவருடைய பாடுகளிலே பங்கெடுத்திருக்கிறார்கள்; மீட்பின் திட்டத்திலே அவர்கள் அவரோடு உழைத்திருக்கிறார்கள்; எனவே நித்தியம் முழுவதும் தேவனைத் துதிக்கிறதற்கேதுவாக தேவனுடைய இராஜ்யத்திலே மீட்கப்பட்ட ஆத்துமாக்களை காணும் மகிழ்ச்சியில், கிறிஸ்துவோடு அவர்களும் பங்குகொள்கிறார்கள்.

அந்நாளிலே மீட்கப்பட்டவர்கள் பிதாவின் மகிமையிலும், குமாரனுடைய மகிமையிலும் ஜொலிப்பார்கள். தூதர்கள் தங்கள் பொற்சுரமண்டலங்களை மீட்டு, இராஜாவையும் அவருடைய வெற்றிச் சின்னங்களையும் வரவேற்பார்கள்.... வெற்றி முழக்கம் பரலோகத்தை நிரப்பும். கிறிஸ்து வெற்றி சிறந்தார். அவருடைய பாடுகளும் தியாகமும் வீணாகவில்லை என்கிறதற்கு சாட்சிகளாயிருக்கிற அவரால் மீட்கப்பட்டவர்களோடுங்கூட அவர் பரலோக மன்றங்களுக்குள் பிரவேசிப்பார்....

பூமியின் பரதேசிகளுக்கு அங்கே வீடுகளுண்டு. நீதிமான்களுக்கு வஸ்திரங்களுண்டு. அவர்களுக்கு மகிமையின் கிரீடமும் வெற்றியின் குருத்தோலைகளுமுண்டு. இந்த உலகத்திலே, தேவனுடைய வழிநடத்துதல்களிலே, நம்மை குழப்பத்தில் ஆழ்த்திய அனைத்தும் அங்கு தெளிவாக்கப்படும். விளங்கிக்கொள்ள கடினமாயிருந்த காரியங்கள் அனைத்தும் அச்சமயத்தில் விளக்கத்தைப் பெறும். கிருபையின் இரகசியங்களும் நம்முன் திறந்துவைக்கப்படும். எல்லைக்குட்பட்ட நமது மனங்கள் குழப்பத்தையும் மீறப்பட்ட வாக்குறுதிகளையுமே கண்டிருந்தன. ஆனால் இப்பொழுது நிறைவான நிலையையும் அழகான இசைவையுமே காண்போம். இப்பொழுது தோன்றியவைகளெல்லாம் பரிபூரண இசைவோடு நடந்திருப்பதைக் காணுவோம். மிகப்பெரிய சோதனைகளாக நமக்குத் தோன்றினவைகளை எல்லையற்ற அன்பு என்றழைக்கப்படும் தேவனே அனுமதித்திருந்தார் என்பதை நாம் அறிவோம். நமக்கு நன்மைக்கேதுவாக சகலத்தையும் நடத்தின அவருடைய விசாரிப்பை நாம் உணரும்பொழுது, சொல்லமுடியாத ஆனந்தத்திலும் நிறைவான மகிமையிலும் நாம் களிகூருவோம்.

மேகங்கள்மேல் வரப்போகிற கிறிஸ்துவைச் சந்திக்க நீங்கள் ஆயத்தப்படவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.... அவருடைய நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாகுங்கள். அப்பொழுது, கிறிஸ்து தம்மில் விசுவாசம்வைத்த அனைவராலும் பாராட்டுதலைப் பெறும்பொழுது, அவரை சமாதானமாகச் சந்திக்கிற அந்தக் கூட்டத்தில் நீங்களும் இருப்பீர்கள். ★

நவம்பர் 12

# கண் காணவுமில்லை! காது கேட்கவுமில்லை!!

**"...தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை."**

**–1 கொரிந்தியர் 2:9.**

உண்மையாகவே தேவனை நேசிக்கிற பிள்ளைகள், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி அவர் தங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளை மேம்படுத்திக்கொள்ள விரும்புவார்கள். எதிர்காலத்தில் அவர்களை அனுமதிக்கத்தக்கதாக பரலோகத்தின் வாசல்கள் விரிவாகத் திறக்கும். "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:34) என்று மகிமையின் இராஜா தமது மிக இனிமையான கீதம்போன்ற குரலில் கூறுவதை அவர்கள் காதுகள் கேட்கும். இவ்வாறாக கிறிஸ்து அவர்களுக்காக ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிற வாசஸ்தலங்களுக்கு மீட்கப்பட்டவர்கள் வரவேற்கப்படுவார்கள். அங்கே பூமியின் பொல்லாத மக்கள் அவர்களின் தோழர்களாக இருக்கமாட்டார்கள்; மாறாக, பூமியிலே தெய்வீக ஒத்தாசையோடு பூரணமான குணங்களை அமைத்துக்கொண்டவர்கள் இருப்பார்கள். பாவ சுபாவம் ஒவ்வொன்றும், குறைகள் ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நீக்கப்பட்டுவிட்டன. நடுப்பகல்வரை ஒளிரும் சூரியனுடைய பிரகாசத்திலும் சிறந்த அவரது மகிமையின்பிரகாசமும்மேன்மையும்அவர்களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது குணத்தின் பரிபூரணமும் அவரது ஒழுக்கத்தின் அழகு நிலையும் அவர்கள் மூலமாக ஜொலிக்கிறது. அவர்களிலே பிரகாசிக்கிற அவருடைய குணம், அவர்களது இந்த வெளித்தோற்றத்தைக் காட்டிலும் மிகவும் தகுதியுடையதாகக் காணப்படுகிறது. அந்த மாபெரும் வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக, குற்றமற்ற வர்களாகக் காணப்படுகிற அவர்கள்,

தூதர்களுடைய சிறப்புரிமைகளிலும் மேன்மையிலும் பங்குகொண்டவர்களாக நிற்கிறார்கள்.

“தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை”–(1 கொரி. 2:9). அவனுடையதாகப்போகிற மேன்மையான சுதந்தரத்தைப் பார்க்கும்பொழுது, “மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்” (மத். 16:26). அவன் ஏழையாயிருக்கலாம்; என்றாலும், உலகத்தால் ஒருபோதும் கொடுக்கப்படக்கூடாத சொத்தும் மேன்மையும் தன்னில் கொண்டிருக்கிறான். பாவத்திலிருந்த கழுவிச் சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமா, அதின் அனைத்து மேன்மையான வல்லமைகளோடும் தேவனுடைய சேவைக்காக அர்ப்பணிக்கப்படும்போது, உன்னதமான ஒரு தகுதியைப் பெற்றுக்கொள்கிறது.

ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் வீட்டிலே என்றுமாக குடியிருந்து, சரீர, மன, ஆத்துமத்திலே பாவத்தினுடைய சாபத்தின் இருண்ட சுவடுகளையல்ல தன்னை உண்டாக்கினவரின் பரிபூரண சாயலைப் பெற்றுக்கொண்டு, ஞானத்திலும் அறிவிலும், பரிசுத்தத்திலும் நித்திய நித்தியமாக முன்னேறி, எப்போதும் புதிய ஆச்சரியங்களையும் புதிய மகிமைகளையும் கண்டுபிடித்து, காரியங்களை அறிவதிலும் மகிழ்வதிலும் நேசிப்பதிலும் எப்போதும் வளர்ந்து, பெற்றுக்கொள்ளக்கூடிய எல்லையற்ற மகிழ்ச்சியும், அன்பும், ஞானமும் நமக்கப்பால் மேலும் இருக்கிறதென்று அறிவதைத்தான் கிறிஸ்தவத்தின் நம்பிக்கை சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறது. ★

# வாழ்வளிக்கும் கனி!

**"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்."**

**–வெளிப்படுத்தல் 22:2.**

ஏதேன் தோட்டத்திலிருந்த ஜீவவிருட்சத்தின் கனி, மனித சக்திக்கு அப்பாற்பட்ட குணாதிசயத்தைக் கொண்டிருந்தது. அதைப் புசித்தால் என்றென்றும் ஜீவிக்கலாம். அதின் கனி மரணத்தை முறிக்கும் மருந்தாகும்....!

பாவம் பிரவேசித்தபின்பு, பரலோகத்தோட்டக்காரர், ஜீவ விருட்சத்தை பரலோகத்திலே நாட்டிவைத்தார்.

தேவனை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள், நகரத்தின் வாசல்கள் வழியாகப் பிரவேசித்து, ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரம் உடையவர்களாக இருப்பார்கள். நம் முதல்பெற்றோர்கள் அவர்களது விழுகைக்குமுன்பாக சுதந்தரமாகப் புசித்ததுபோன்று, அவர்கள் அதைச் சுதந்தரமாகப் புசிப்பார்கள். பரந்து விரிந்த அழியாமையுள்ள அம்மரத்தின் இலைகள், மக்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். அந்த இலைகள் அவர்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதினால், வியாதி, வருத்தம், மரணம் இவைகளை யெல்லாம் அவர்கள் மறுபடியும் அனுபவிக்கமாட்டார்கள். ஏனெனில் ஜீவவிருட்சத்தின் இலைகள் அவர்களைக் குணமாக்கிவிட்டது. ஆண்டவருடைய கற்பனைகளை மீறினதினாலே, நம் முதல் பெற்றோர் இழந்துபோன அதிகாரத்தை, வருத்தம், கடும் உழைப்பு, வேதனை, உபத்திரவத்திற்குட்பட்டிருந்து, சாபத்திற்கடியில் வருத்தத்தோடிருந்த மீட்கப்பட்டவர்கள் மீண்டும் பெற்றுக்கொண்டு, அதின் கனியைப் புசிக்கும்படி ஜீவவிருட்சத்தைச் சுற்றிலும் கூடும்பொழுது, இயேசு தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியாவார். இனிமேல் அந்த அதிகாரம் அவர்களைவிட்டு ஒருபோதும் நீங்காது. ஏனெனில்,

பாவஞ்செய்யும்படி அவர்களைச் சோதித்த பிசாசானவன் இரண்டாம் மரணத்தினாலே அழிக்கப்பட்டான்.

ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு இருந்த ஒரே நிபந்தனை, தேவனுடைய அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும் என்பதே. கீழ்படியாமையினால்தான் ஆதாம் விழுந்துபோனான்....

இயேசு கிறிஸ்துவின்மூலம் கீழ்ப்படியும்பொழுது, அது மனுஷனுக்கு பரிபூரணமான குணங்களைக் கொடுத்து, ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாக்குகிறது. மீண்டும் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கான நிபந்தனைகள்: "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22:14) என்பதாக யோவானுக்கு இயேசு கிறிஸ்து கொடுத்த சாட்சியிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

நீண்ட காலமாக இழந்துபோன—ஏதேனிலுள்ள ஜீவவிருட்சம் மீண்டும் கிடைக்கப்பெற்று, மானிட இனத்தின் தொடக்ககால மகிமையின் முழுவளர்ச்சிக்கு மீட்கப்பட்டவர்கள் "வளருவார்கள்." நெடுநாட்களாகத் தங்கியிருந்த பாவத்தினுடைய சாபத்தின் சுவடுகள் அகற்றப்படும். கிறிஸ்துவின் உண்மையான பிள்ளைகள் "தேவனாகிய ஆண்டவருடைய அழகிலே" காணப்பட்டு, மனதிலும் ஆத்துமாவிலும், சரீரத்திலும் அவருடைய பரிபூரண சாயலைப் பிரதிபலிப்பார்கள். நீண்டகாலமாக நம்பப்பட்ட—மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து மனதிலே தியானித்த, ஆனால் முழுமையாக ஒருபோதும் புரிந்துகொள்ளக்கூடாத மீட்பு. ஆ! அதிசயமான மீட்பு! ★

# வானவில் வளையமிட்ட சிங்காசனம்!

**“...இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப் பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று.” –வெளிப்படுத்தல் 4:2,3.**

சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்த வானவில், “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” என்பதற்கு ஒரு நித்தியமான சாட்சியாக இருக்கிறது.

மேகத்திலே காணப்படுகிற வானவில், சூரிய ஒளி தண்ணீர் இவைகளின் கூட்டாக எப்படி அமைக்கப்படுகிறதோ, அப்படியே, சிங்காசனத்தைச் சுற்றியிருக்கிற வானவில், இரக்கம், நீதி ஆகியவைகள் இணைந்த ஒரு வல்லமையைச் சுட்டிக்காட்டுகிறது. ஆண்டவருடைய இராஜ்யத்தில் எப்பொழுதும் நீதிமாத்திரமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதாது. ஏனென்றால் சிங்காசனத்தைச் சுற்றிலுமிருக்கிற வாக்குத்தத்தமான வானவில்லின் மகிமையை அது மறைத்துவிடும். பிரமாணத்தின் தண்டனைகளை மட்டுமே மனிதர்கள் பார்ப்பார்கள். நீதியில்லாமலும் தண்டனையில்லாமலும் தேவனுடைய அரசாங்கம் இருக்குமானால், அது நிலைத்துநிற்க முடியாது. எனவே நீதியும் இரக்கமும் ஒன்று சேர்ந்து இரட்சிப்பைப் பூரணமாக்குகிறது....

தேவனுடைய நகரத்திற்குள் வாசல்கள் வழியாகப் பிரவேசிக்கும்படி இரக்கம் நம்மை அழைக்கிறது. கீழ்ப்படிகிற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் இராஜரீக குடும்பத்திற்குள் பிரவேசிக்கிற, பரலோக இராஜாவினுடைய பிள்ளையாகக்கூடிய சிறப்புரிமைகளை முழுமையாக கொடுப்பதின்மூலம் நீதி திருப்தியடைகிறது. நாம் குணங்களில் குறைவுள்ளவர்களாயிருந்தால்,

கீழ்ப்படிந்தவர்கள் பிரவேசிக்கும்படியாக இரக்கம் திறந்திருக்கிற வாசலில் நாம் பிரவேசிக்கமுடியாது. ஏனெனில் நீதி வாசலண்டை நின்று தேவனைப் பார்க்கிற ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைக்கும்.

ஒருவேளை நியாயம் அகன்றுபோய், எந்த ஒரு நிபந்தனையுமின்றி, எவ்வித குணத்தோடிருந்தாலும் எல்லாரும் அந்த நகரத்திற்குள் பிரவேசிக்கலாம் என்கிற உரிமையை தெய்வீக இரக்கம் கொடுக்குமானால், சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியேறுமுன் அங்கு நிலவிய வெறுப்பையும் கலகத்தையும்விட மோசமான அதிருப்தியும் மீறுதலுமே அங்கே இருக்கும். பரலோக சமாதானமும் சந்தோஷமும் இணக்கமும் சிதைந்துபோகும். பூமியிலிருந்து பரலோகத்திற்குச் செல்லும் மாற்றம், மனுஷனுடைய குணத்தை மாற்றாது. மீட்கப்பட்டவர்கள் பரலோகில் சந்தோஷமாயிருப்பதன் காரணமே, இந்த உலகில் அவர்கள் கிறிஸ்துவுடைய சாயலின்படி தங்கள் குணங்களை மாற்றிக்கொண்டதுதான். எனவே, பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்கள் முதலாவது பூமியிலே பரிசுத்தவான்களாக இருந்திருக்கவேண்டும்.

மனிதனை மீட்டுக்கொள்ள கிறிஸ்து அப்படிப்பட்ட தியாகம் செய்தார் என்கிற—இரட்சிப்பு மாத்திரமே மதிப்புவாய்ந்தது. ஏனெனில்அதுதான் பாவத்திலிருந்த காக்கிறது.... இவ்வாறு சுவிசேஷத்தினாலே தேவனுடைய பிரமாணம் பெலவீன மடையவில்லை. மாறாக, பாவத்தின் வல்லமை முறிக்கப்பட்டு, மனந்திரும்புகிற பாவிக்கு இரக்கத்தின் செங்கோல் நீட்டப்படுகிறது.... தீமைக்கெதிராக தமது மக்கள் போராடிக்கொண்டிருக்கிறதை தேவன் ஒருபோதும் மறக்கமாட்டார். இயேசு மாத்திரமே நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும்.★

# இராஜாவை நம் கண்களால் காண்போம்!

**"உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்." —ஏசாயா 33:17.**

இராஜாவை அவருடைய அழகிலே நாம் பார்க்க விரும்பினால், முதலாவது இங்கே அதற்குப் பாத்திரராக நடந்துகொள்ள வேண்டும். சிறுபிள்ளைத்தனத்தை முதலாவது விட்டுவிடவேண்டும். நம்மைக் கோபப்படுத்தும்பொழுது, நாம் அமைதலாக இருக்கக்கடவோம். மௌனமே சரியான பதிலாக அமைகிற சூழ்நிலைகளுமுண்டு. தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமென்று அழைக்கப்படுவதற்கேற்ப பொறுமையையும், சகிப்புத்தன்மையையும், தயவையும் நாம் காண்பிக்கவேண்டும். கிறிஸ்துவை முழுமையாக விசுவாசிக்கவேண்டும், நம்பவேண்டும். அவரைச் சார்ந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்"—லூக்கா 9:23. ஒருவேளை அமைதியாக இருக்கவேண்டிய நேரத்தில் அமைதியாக இருக்கக்கூடாதபடிக்கு அந்தச் சிலுவை ஒரு பாரமாக இருக்கலாம். அந்த சூழ்நிலையில் அமைதியாக இருப்பதும், மிக வேதனையான ஒழுங்குமுறையாக இருக்கலாம். ஆனாலும் தீமையை வெல்ல, கோபமான புயல் அடிப்பதைப்போன்ற வார்த்தைகளைவிட, மௌனமே அதிக வல்லமையுள்ளது என்று நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்.

பரலோக சபையிலே நாம் இருக்கவேண்டுமென்றால், இந்த உலகிலே நாம் கற்றுக்கொள்ளவேண்டியவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். நமது இரட்சகர் ஜீவத்தண்ணீரண்டைக்கு நம்மை நடத்திச்சென்று, நாம் புரிந்துகொள்ளாத அநேகக் காரியங்களை நமக்கு விளக்கிச் சொல்லவிருக்கிற மேலோகப் பள்ளிக்கு ஆயத்தப்படுவதற்கு,

எவைகளையெல்லாம் நமக்குச் கற்றுத்தர கிறிஸ்து விரும்புகிறாரோ, அவைகளை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.... இங்கே நாம் ஒருபோதும் பார்த்திராத வண்ணமாக, தேவனுடைய மகிமையை அங்கே நாம் காண்போம். ஆண்டவரை அறிந்துகொள்ளும்படி நாம் தொடர்ந்து செல்லாததால் அவரது மகிமையை மிகக் குறைவாகவே இங்கே நாம் பெற்றுக்கொள்கிறோம்.

இவ்வுலகப் பள்ளியிலே கற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு சரியான கொள்கையும் ஒவ்வொரு சத்தியமும், பரலோகப்பள்ளியிலே அந்த அளவிற்கு நம்மை முன்னேறச்செய்யும். இப்பூமியில் ஊழியஞ்செய்தபொழுது தமது சீடர்களோடு கிறிஸ்து நடந்து— பேசி—போதித்தவண்ணமாக, மேலோகப்பள்ளியிலும் நம்மை அவர் ஜீவத்தண்ணீர்களண்டையில் நடத்திச்சென்று, நம்மோடு பேசி, இவ்வுலக வாழ்க்கையிலே பாவத்தால் கெட்டுப்போய் வரையறுக்கப்பட்டிருந்த மனித மனதிற்கு மறைந்திருந்த இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்துவார். பரலோகப்பள்ளியிலே, படிப்படியாக மிக உயரிய படிப்புகளைப் படிக்கவும் நமக்குச் சந்தர்ப்பம் இருக்கும். அங்கே, பரலோக இராஜாவின் பிள்ளைகளாக எப்பொழுதும் இராஜரீகக் குடும்பத்தினரோடு வசிப்போம். அங்கே அவரது அழகிலே இராஜாவைக் காண்போம். ஈடு இணையற்ற அவது கவர்ச்சியான மேன்மைகளைக் காண்போம்.

வெகுகாலமாக நாம் காத்திருந்துவிட்டோம். எனினும் நமது நம்பிக்கை மங்கிப்போகக்கூடாது. இராஜாவை அவரது அழகிலே நாம் பார்க்கக்கூடுமானால் நாம் என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். ★

# இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்!

**“...நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.” –வெளிப்படுத்தல் 14:1.**

சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கும் கண்ணாடி கடலின்மீது அக்கினி கலந்த தோற்றமுடைய கண்ணாடிக்கடலிலே.... தேவனுடைய மகிமையினால் பிரகாசிக்கிற அதனண்டையிலே... மிருகத்திற்கும், அதின் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்ட கூட்டத்தார் கூடுகிறார்கள். ஆட்டுக்குட்டியானவர் சீயோன் மலையின் மேல் நின்றிருக்க, தேவ சுரமண்டலங்களைத் தங்கள் கைகளில் பிடித்தவர்களாக, மனிதரிலிருந்த மீட்கப்பட்ட 1,44,000 பேரும் நிற்கிறார்கள். பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், “சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலவும்” ஓசை கேட்டது. 1,44,000 பேர் தவிர வேறொருவரும் அறிந்திராத “ஒரு புதுப்பாட்டை” சிங்காசனத்திற்கு முன்பு பாடினார்கள். அது மோசேயின் பாட்டும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டுமாகும். அது அவர்களுடைய விடுதலையின் பாட்டுமாகும்.

1.44,000 பேர்மாத்திரமே அந்தப் பாட்டைக் கற்றுக்கொள்ள முடியும். ஏனெனில், அது அவர்களுடைய அனுபவத்தின பாடலாக இருக்கிறது. வேறெந்த கூட்டமும் என்றுமே பெற்றிராத அனுபவம் அது. “ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே.” இவர்கள் ஜீவனுள்ளோரிலிருந்து மறுரூபமாக்கப்பட்டவர்கள். “இவர்கள் ... தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள்”–வெளிப்படுத்தல் 15:2,3; 14:1–5. “இவர்கள்

மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்;" ஜாதிகள் உண்டானது முதல் ஒருபோதும் உண்டாயிராத இக்கட்டுக்காலத்தினூடாக கடந்துவந்தவர்கள். யாக்கோபுடைய இக்கட்டுக்காலத்தின் வேதனைகளை சகித்திருக்கிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் கடைசியாக பூமியின்மேல் ஊற்றப்பட்ட காலத்தில் பரிந்துபேசுகிறவர் இல்லாமல் இவர்கள் நின்றிருக்கிறார்கள். "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்த"தால் விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள். "இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களா யிருக்கிறார்கள்." ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

இந்த பூமி பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் வீணாகப்போனதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். சூரியன் மனிதர்களை மிகுந்த வெப்பத்தினால் தகிக்க அதிகாரம் பெற்றதைக் கண்டிருக்கிறார்கள். அவர்கள்தாமே பசியையும், தாகத்தையும் துன்பத்தையும் அனுபவித்தவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை"–வெளிப்படுத்தல் 7:14–17. ★

# மீட்கப்பட்ட திரளான கூட்டம்!

**“இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.” —வெளிப்படுத்தல் 7:9.**

எல்லா தரப்பினரும், அனைத்து தேசத்தாரும், ஜாதியாரும், பாஷைக்காரரும் ஜனங்களும், கறையற்ற வஸ்திரங்களோடும், அலங்கரிக்கப்பட்ட கிரீடங்களோடும் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்பார்கள். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் என்றும் தூதன் சொன்னான். ஆண்டவரைக்காட்டிலும் உலக சந்தோஷ ங்களை அதிகமாக நேசித்தவர்களும் சுயத்திற்காகவே வாழ்ந்து கீழ்ப்படியாமற்போனவர்களும் இரண்டு உலகங்களையும் இழந்துபோனார்கள். இவ்வாறாக, வாழ்க்கையின் காரியங்களையும் அனுபவிக்கவில்லை. நித்திய ஜீவனையும் அடையவில்லை.

ஜெயகீதத்தோடும், கிரீடம் சுரமண்டலங்களோடும் நிற்கிற ஜெயங்கொண்ட கூட்டத்தார், உலக உபத்திரவமாகிய சூளையிலே, மிக அதிக வெப்பத்தை மிதித்திருக்கிறார்கள். ஆதரவற்றவர்களாக பசியையும் உபத்திரவத்தையும் தாண்டிவந்த இவர்கள், சுயத்தை மறுத்து, கசப்பான ஏமாற்றங்களையும் சந்தித்திருக்கிறார்கள். இனி அவர்களை ஒருபொழுதும் ஏழைகளாகவோ, வருத்தத்திலிருக்கிற வர்களாகவோ, உபத்திரவப்படுகிறவர்களாகவோ, கிறிஸ்துவினிமித்தம் வெறுக்கப்பட்டவர்களாகவோ அல்ல, வெற்றியாளர்களாக நோக்கிப்பாருங்கள். இராஜாக்களின் உடைகளைக்காட்டிலும் வெண்மையான—பிரகாசமான அவர்களது பரலோக உடைகளை நோக்கிப்பாருங்கள். விசுவாசத்தினாலே அவர்களுடைய மாணிக்கக்கற்கள் பதித்த கிரீடங்களைப் பாருங்கள்.

அப்படிப்பட்ட இராஜ முடியை உலகின் எந்த அரசனும் ஒருபொழுதும் அணிந்திருக்கவில்லை.

அவர்கள் தங்கள் வெற்றியின் குறுத்தோலைகளை அசைத்து, தங்கள் குரல்களாலே சத்தமாக ஓசன்னாவென்று முழக்கமிடுவதைக் கேளுங்கள். அடிக்கப்பட்டு உயிர்த்தெழுந்த ஆட்டுக்குட்டியானவர் "பாத்திரமானவர், பாத்திரமானவர்" "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் இரட்சிப்பின் மகிமை உண்டாவதாக" என்ற இத்தகைய வார்த்தைகளால் பாடிய இனிமையான கீதம் பரலோகத்தை நிறைக்கிறது. தூதர் சேனையும், பிரதான தூதர்களும், பாதுகாக்கிற கேரூபீன்களும், மகிமையுள்ள சேராபீன்களும், "ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென்" (வெளி. 7:12) என்று மகிழ்ச்சியான வெற்றியின் கீதத்தை எதிரொலித்தார்கள்.

அந்த நாளிலே, நீதிமான்களே ஞானவான்களென்றும், பாவம் நிறைந்த கீழ்ப்படியாதவர்கள் முட்டாள்களென்றும் எல்லோருக்கும் வெளியரங்கமாகும். அவமானமும், நித்திய நிந்தையுமே அவர்கள் பங்காயிருக்கும். கிறிஸ்துவிற்கு உடன் வேலையாட்களாயிருந்த வர்கள் பரிசுத்தமும் நித்திய நீதியுமான ஆடையைத் தரித்தவர்களாக சிங்காசனத்தைச் சுற்றிலுமிருப்பார்கள். ★

# ஆத்தும ஆதாயம் செய்தவருக்கான வெகுமதி!

**"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."**

**—தானியேல் 12:3.**

தானியேலுடைய இந்த வார்த்தைகளை நான் யோசிக்கும்பொழுது, இராத்திரியிலே எழுந்து நடந்துகொண்டு, அந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லுகிறதைக் காண்கிறேன். "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்"—தானியேல் 12:3. வானத்திலே அணிவகுத்திருக்கிற சூரியனையும் நட்சத்திரங்களையும் பாருங்கள். அவைகளுடைய பெயரால் அவைகள் அறியப்பட்டிருக்கின்றன. அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போல என்றென்றும் பிரகாசிப்பார்களென்று ஆண்டவர் கூறுகிறார்.

ஆத்துமாவை தவறுகளினின்று சத்தியத்திற்கு மனந்திரும்பச் செய்கின்ற இந்தக் காரியங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை தீர்மானிக்கவேண்டுமானால் நித்திய வாழ்வின் மதிப்பை நாம் பாராட்டவேண்டும். இரண்டாம் மரணம் எத்தனை வேதனையானது எவ்வளவு பயங்கரமானது என்பதை நாம் நன்றாகப் புரிந்திருக்கவேண்டும். மீட்கப்பட்டவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற கனமும் மகிமையும் என்னவென்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். மனிதனை உயர்த்தி அவனை மேன்மையுடையவனாக்கவும், ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு இராஜ கிரீடத்தைத் தருவதற்காகவும், உயிர்கொடுத்த ஆண்டவருடைய சமூகத்தில் வசிப்பது என்றால் எப்படி என்கிறதைக்குறித்தும் நாம் புரிந்திருக்கவேண்டும்.

ஒரு ஆத்துமாவின் மதிப்பு எவ்வளவு என்பதை எல்லைக்குட்பட்ட மனங்களால் முழுமையாகக் கணக்கிடமுடியாது. தங்கள் இரட்சிப்பிற்காக உபயோகப்படுத்தப்பட்ட மனிதர்களை, மீட்கப்பட்ட மகிமையடைந்தவர்கள் நன்றியோடு நினைவுகூருவார்கள். கடமைகளைத் தவறவிட்டிருந்தாலோ அல்லது நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோயிருந்தாலோ இழந்துபோயிருக்கக்கூடிய ஆத்துமாக்களுக்காக, உண்மையான மனபாரத்தோடு சுயத்தை தியாகம் செய்த முயற்சிகளுக்காகவும், விடாமுயற்சியோடு செய்யப்பட்ட ஊழியங்களுக்காகவும், பொறுமைக்காகவும், சகித்துகொண்டதற்காகவும், எவரும் அப்பொழுது வருந்தமாட்டார்கள்.

இப்பொழுது வெள்ளை அங்கிகள் தரித்த அவர்கள் அனைவரும் பெரிய மேய்ப்பனுடைய மந்தையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையான ஊழியக்காரரும் அவர்களுடைய உழைப்பால் சம்பாதிக்கப்பட்ட ஆத்துமாக்களும் ஆட்டுக்குட்டியானவரால் சிங்காசனத்தின் மத்தியிலே வாழ்த்தப்பட்டு, ஜீவ விருட்சத்தினண்டைக்கும், ஜீவ ஊற்றிற்கும் நடத்திச்செல்லப்படுவர். மீட்பரின் மகிமையைப் பகிர்ந்துகொள்ளுகிற ஆத்துமாக்களை கிறிஸ்துவின் ஊழியக்காரர் எத்தனை ஆனந்தமாகப் பார்ப்பார்கள். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் ஊழியத்திலே உண்மையாயிருந்தவர்களுக்கு, பரலோகம் எத்தனை பெரிய பொக்கிஷமாகத் தோன்றும்! “ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.”

தேவனோடு மனிதன் இணைந்து செய்த வேலை, ஒருபொழுதும் அழியாததும் நித்திய நித்தியமாக நிலைத்திருக்கக் கூடியதுமாயிருக்கிறது. ★

நவம்பர் 19

# பரலோகக் காரியங்களைக்குறித்து சிந்தியுங்கள்!

**“இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.” —வெளிப்படுத்தல் 7:14.**

வெள்ளை அங்கிகள் தரித்திருந்த ஒரு கூட்டத்தாரை யோவான் தரிசனத்தில் பார்க்கிறார்.... அவர்கள் தேவனுடைய ஆலயத்திலே இருந்தார்கள். கிறிஸ்துவின் புண்ணியங்களைப் பற்றிக்கொண்டு, தங்கள் அங்கிகளை அவருடைய இரத்தத்தினாலே தோய்த்து வெளுத்த அனைவரும் பெறக்கூடிய பயன் இதுவே. கிறிஸ்துவோடு அவருடைய சிங்காசனத்தில் அமரத்தக்கதான எல்லா முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டாயிற்று. ஆனால் அதை அடைய தேவனுடைய பிரமாணத்தோடு இசைந்திருக்கவேண்டும் என்பது நிபந்தனையாகும்....

நாம் பரலோகத்தை இழந்துபோகக்கூடாது. பரலோகக் காரியங்களைக்குறித்தே நமது உரையாடல்கள் அமைந்திருக்க வேண்டும். அங்கே மரணமும் வேதனையுமில்லை. அப்படியிருக்க இக்காரியங்களைக்குறித்துப் பேச நாம் ஏன் தயங்குகிறோம்? ஏன் பூமிக்குரிய காரியங்களைக்குறித்தே பேசிக்கொண்டிருக்கிறோம்? பரலோகத்தோடு தோடர்புவைத்திருக்க வேண்டுமென்று பவுலார் அறிவுரை கூறுகிறார். “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்”—பிலிப்பியர் 3:20. ஆயத்தமாயிருக்கிறவர் களைத் தமது மகிமையுள்ள தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகும்படி கிறிஸ்து சீக்கிரம் வருவார். “கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்”—எபிரெயர் 9:28.

இந்த சம்பவத்தைக்குறித்து சிந்திக்க நாம் விரும்புகிறோமா? அல்லது இந்த சம்பவத்தைத் தள்ளிப்போட விரும்புகிறோமா?... இயேசுவைக்குறித்து எவ்வளவிற்கதிகமாகப் பேசுகிறோமோ அவ்வளவிற்கதிகமாக அவரது தெய்வீக சாயலைக்குறித்து மனதிலே தியானிப்போம். அவரை நோக்கிப்பார்த்து நாம் மாற்றமடைகின்றோம். கிறிஸ்துவை நம் ஆவிக்குரிய அனுபவத்திற்குள் கொண்டுவர வேண்டியது அவசியம். நீங்கள் ஒன்றாகக் கூடிவரும்பொழுது கிறிஸ்துவைக்குறித்தும் அவரது இரட்சிப்பைக்குறித்தும் உங்களது உரையாடல் அமைந்திருக்கட்டும். இயேசுவைக்குறித்து எவ்வளவிற்கதிகமாகப் பேசுகிறோமோ அவ்வளவிற்கதிகமாக அவரது ஈடுஇணையற்ற அழகை நோக்கிப்பார்ப்போம்.

அவரைக்குறித்து தியானிப்பதிலும், பேசுவதிலும் மகிழ்ச்சி பெறாதவர்கள், ஆண்டவர் தமது மக்களின் நடுவே என்றைக்கும் வசிக்கிற அந்த வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கமுடியாது. ஆனால் ஆண்டவரை தியானிக்க விரும்புகிற பிள்ளைகள், இங்கேயே பரலோகக் காற்றைச் சுவாசிக்கிறார்கள். இந்தப்பூமியிலே பரலோகத்தைக்குறித்த நினைவை நேசிக்கிறவர்கள், அதுபற்றிய பரிசுத்த தோழமையிலும் மகிழ்ச்சியிலும் சந்தோஷமடைவார்கள். “இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்”—வெளிப்படுத்தல் 22:3,4.★

நவம்பர் 20

# பரலோகத்தின் மகிமைகள்!

**“தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம்முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை.”**

**—ஏசாயா 64:4.**

எதிர்கால உலகத்தின் மகிமைகளை ஊடுருவிப்பார்க்க வேண்டுமென்று அநேகர் ஏக்கங்கொண்டிருக்கிறார்கள். நித்திய இரகசியங்கள்பற்றிய காரியங்கள் வெளிப்படுத்தப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் வீணாக தட்டிக்கொண்டிருக்கி றார்கள். வெளிப்படுத்தப்பட்டவைகள் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியவைகள்.... பரலோக மேன்மைகளை நாம் புரிந்துகொள்ளவும் மீட்கப்பட்டோரின் வெகுமதியை மதிக்கவும், இரகசியங்களை வெளிப்படுத்துகிற மகா தேவன் நமக்குத் தேவையான அநேகக் காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்....

இப்படி இயேசுவானவர் வெளிப்படுத்தியிருக்கிற பரலோகக் காரியங்களை ஆவிக்குரிய மனம் மாத்திரமே புரிந்து பாராட்டமுடியும். நம் கற்பனைத்திறன் அதன் ஞானத்தையெல்லாம் உபயோகித்து பரலோக மகிமையைக் கற்பனை செய்துபார்க்கலாம். ஆனால் “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை”–1 கொரிந்தியர் 2:9. பரலோகவாசிகள் நம்மைச் சுற்றிலுமிருந்துகொண்டிருக்கிறார்கள். ஒளியின் தூதர்கள் நம்மைச் சுற்றிலும் பரலோகச் சூழ்நிலையைக்கொண்டுவந்து, பார்க்கக்கூடாத நித்தியமானவைகளுக்கு நேராக நம் கவனத்தைத் திருப்புகிறார்கள். நம்முடைய இயற்கையான பார்வையின்மூலம் அவர்களைப் பார்க்கமுடியாது. ஆவிக்குரிய பார்வையிருந்தால் மாத்திரமே பரலோகக் காரியங்களை நன்றாக விளங்கிக்கொள்ளலாம். ஒளியின் தூதர்களுடைய சொல்லமுடியாத மகிமையான ஒளியை நாம் பார்த்தால், நம்மால் உயிரோடிருக்கமுடியாது. ஆவிக்குரிய காதுகளால்மாத்திரமே பரலோக ஓசைகளைப்

புரிந்துகொள்ளமுடியும். இப்படிப்பட்ட சிறந்த விளக்கங்களையெல்லாம் சொல்லி, நம்முடைய உணர்வுகளைத்தூண்டிவிடுவது கிறிஸ்துவின் திட்டமல்ல.... அவர்தாமே போதுமான அளவிற்கு தம்மை வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் வழியாகவே நமக்கு இரட்சிப்பு உண்டு என்பதைக் காண்பித்திருக்கிறார். இதைத்தவிர, வேறு எதுவும் நமக்கு அவசியமில்லை.

மானிட ஆத்துமாவை பரலோகத்தின் வாசல்கள் வரை கொண்டுசென்று, அங்கே திறந்திருக்கிற கதவின் வழியாக ஒளிருகிற பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகிமையையும் அவர் நமக்குக் காண்பிக்கலாம். ஆனால் நம் பாவக்கண்களாலல்ல, நமது விசுவாசத்தினாலேதான் நாம் அதைப் பார்க்கவேண்டும். நாம் அவரது மானிட செயல்துணைகள் என்பதையும், பாவத்தின் சாபத்தினால் நிலைகுலைந்து கெட்டுப்போன உலகத்திலே அவருக்கு ஊழியக்காரராயிருக்கிறோம் என்கிறதையும் அவர் மறக்கவில்லை. மரண இருள் கவ்வியிருக்கிற இவ்வுலகத்திலே, இருள் பூமியையும் காரிருள் மக்களையும் மூடியிருக்கிற இவ்வுலகத்திலேதானே பரலோகத்தின் ஒளியிலே நாம் நடக்கவேண்டும். ★

# நித்திய காரியங்களை நோக்கிப்பாருங்கள்!

**"...காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்." –2 கொரிந்தியர் 4:18.**

சபை, கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, உலகத்தின் பற்றுகளிலிருந்து விலகிக்கொள்ளுமானால் பிரகாசமான—மகிமையான காலைப்பொழுது, அதின் முன்பு இருக்கிறது. அதற்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தம் என்றென்றும் நிலைத்திருக்கும்.... தன்னைப் புறக்கணித்து தள்ளிப்போடுகிறவர்களை தாண்டிப்போகிற சத்தியம் ஜெயங்கொள்ளும். அவ்வப்பொழுது, அதன் முன்னேற்றம் தடைப்பட்டதுபோல் தோன்றினாலும் அதின் முன்னேற்றம் ஒருபோதும் தடைபட்டிருக்காது. தெய்வீக சக்தியைப்பெற்று, மிக உறுதியான தடைவேலிகளையும் துண்டித்து அனைத்து இடையூறுகள்மீதும் வெற்றிபெறும்.

கடுமையான ஊழியம் மற்றும் தியாகம் நிறைந்த அவரது வாழ்க்கையிலே தேவனுடைய குமாரனை தாங்கிப்பிடித்தது எது? அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டார். கண்டு திருப்தியடைந்தார். தான் சகித்த அவமானத்தின்மூலமாக, மன்னிப்பு பெற்று நித்திய ஜீவனைக் கண்டடைந்தவர்களுடைய ஆனந்தத்தை அவர் கண்டார். மீட்கப்பட்டவர்களின் ஆரவாரத்தை அவர் காதுகள் கேட்டன. மீட்கப்பட்டவர்கள் மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடுவதை அவர் கேட்டார்.

எதிர்காலத்தையும் பரலோக ஆசீர்வாதங்களையுங்குறித்த தரிசனங்களை நாமும் காணலாம். வேதாகமத்திலே வருங்கால மகிமை மற்றும் தேவனுடைய கரங்களால் வரையப்பட்ட காட்சிகள் பற்றிய தரிசனங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் அவருடைய சபைக்கு மிகவும் விருப்பமானவைகள். விசுவாசத்தினாலே நாமும் நித்தியத்தின் வாசலிலே நின்று, தங்கள் வாழ்க்கையிலே கிறிஸ்துவிற்காக

உபத்திரவப்படுவது தங்களுக்குக் கிடைத்த கனம் என்றெண்ணி, அவரோடு ஒத்துழைத்த மக்களுக்குக் கிடைக்கப்போகின்ற கிருபைபொருந்திய வரவேற்பின் வார்த்தைகளைக் கேட்கலாம். “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே” என்கிற சத்தத்தை அவர்கள் கேட்கும்பொழுது, தங்கள் கிரீடங்களை மீட்பரின் காலடிகளில்வைத்து, “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்;” “சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக” (மத்தேயு 25:34; வெளி. 5:12,13) என்று சொல்லுவார்கள்.

மீட்கப்பட்டவர்கள் தங்களை இரட்சகரண்டைக்கு நடத்தினவர்களை வாழ்த்துவார்கள். தேவனுடைய ஜீவனுக்கு ஏற்றதான ஜீவனை மானிடர்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதற்காக **மரித்தவரை** அனைவரும் இணைந்து துதிக்கின்றனர். போராட்டம் முடிவடைந்தது. உபத்திரவங்களும், யுத்தங்களும் முடிந்துபோயின. “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரமானவர், மீண்டும் ஜீவிக்கிறவர் பாத்திரமானவர், வெற்றிசிறந்தவர் துதிகளுக்குப் பாத்திரமானவர்” என்று மீட்கப்பட்டவர்கள் ஆனந்த கீதமாகப் பாடும்பொழுது, அந்த வெற்றியின் கீதங்கள் பரலோகம் முழுவதையும் நிரப்பும். ★

நவம்பர் 22

# வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்வர்களே!

**“ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.” —வெளிப்படுத்தல் 22:14.**

கடைசியிலே பரலோகம் சென்றடைந்து, அங்கிருக்கிற பாடல் குழுவிலே சேர்ந்துகொள்ள எதிர்பார்த்திருக்கின்றோமா? குணத்தைப் பொருத்தமட்டில், கல்லறைகளுக்குள் போகும்வண்ணமாகவே நாம் எழுந்து வருவோம்.... நம்மைக் கழுவி, சீர்படுத்த இதுவே நேரமாகும்....

தேவனுடைய சிங்காசனத்தையும் அதைச் சுற்றிலுமிருக்கிற பெருங்கூட்டத்தையும் யோவான் பார்த்தார்; “இவர்கள் யார்?” என்று கேட்டார். “இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்” (வெளி. 7:14) என்கிற பதில் வந்தது.... கிறிஸ்து அவர்களை ஜீவதண்ணீர்களண்டைக்கு நடத்திச்செல்கிறார். இங்கே தான் ஜீவவிருட்சம் இருக்கிறது. நமது அருமையான மீட்பரும் இருக்கிறார். தேவனுடைய ஜீவியத்தோடு அளவிடப்படும் அந்த வாழ்வு இங்குதான் நமக்கு அளிக்கப்படுகிறது. அங்கே வேதனை யில்லை, துக்கமில்லை, வியாதியில்லை, மரணமில்லை, அனைத்தும் சமாதானமாகவும் இணக்கமாகவும் அன்போடும் காணப்படுகிறது....

நித்தியஜீவனுக்காக நம் குணங்களைக் கட்டுவதற்காக நம்முடைய மானிட முயற்சிகளோடு சேர்ந்து பிரயாசப்படத் தேவையான கிருபையையும் பலத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளத்தக்கதான காலம் இதுவே. இந்த ஆயத்தத்தை நாம் செய்யும்பொழுது, தேவனுடைய தூதர்கள் நமக்கு ஊழியஞ்செய்வார்கள். நாம் தேவனுக்கு சுதந்தரரும் இயேசு கிறிஸ்துவிற்கு உடன் சுதந்தரருமாயிருப்போம். இப்படியிருக்க கடைசி எக்காளம் தொனித்து, மரித்தவர்கள் தங்கள் சிறைவீட்டிலிருந்து அழைக்கப்படும்போது, ஒரு

நொடியிலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாவார்கள். அழியாத நித்திய மகிமையின் கிரீடம் ஜெயங்கொள்கிற ஒவ்வொருவருடைய சிரசின்மீதும் வைக்கப்படும். சத்தியத்தைக் கைக்கொண்ட நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக, முத்தினாலான கதவுகள் திறந்துகொள்ளும். போராட்டம் முடிவடைந்தது.

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்"–மத்தேயு 25:34. இந்த ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டுமா? எனக்கு வேண்டும். நீங்களும் அதை விரும்புவீர்களென்று நான் நம்புகிறேன். இவ்வுலகப் போராட்டத்தைப் போராடவும், ஒவ்வொரு நாளும் வெற்றிபெறவும், உங்கள் கிரீடங்களை இயேசுவின் காலடியில் வைத்து, பெற்சுரமண்டலங்களை மீட்டு, பரலோகத்தை சந்தோஷ கீதங்களால் நிரப்பவும், ஆண்டவர் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக. என் இயேசுவை நீங்கள் நேசிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.... என் இரட்சகரைப் புறக்கணித்துவிடாதீர்கள். உங்களுக்காக முடிவில்லாத கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். நான் இயேசுவிலே இணையில்லாத அழகைக் காண்கிறேன். அதே அழகை, மகிமையை நீங்களும் காணவெண்டுமென்று விரும்புகிறேன். ★

# ஆயிரம் வருடங்களில் நடைபெறும் நியாயத்தீர்ப்பு!

**“தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக் கூடாதிருக்கிறது எப்படி?.” –1 கொரிந்தியர் 6:3.**

முதலாம் உயிர்த்தெழுதலிற்கும் இரண்டாம் உயிர்த்தெழுதலிற்கும் இடைப்பட்ட அந்த ஆயிரம் ஆண்டுகளில் துன்மார்க்கருடைய நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறது. இரண்டாம் வருகைக்கு அடுத்து நடக்கவிருக்கிற நிகழ்ச்சியாக அப்போஸ்தலனாகிய பவுல் இதைக் குறிப்பிடுகிறார். “ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்”–1 கொரி. 4:5. தானியேலும் நீண்ட ஆயுசுள்ளவர் வந்தபோது, “நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு” கொடுக்கப்பட்டது (தானியேல் 7:21) என்கிறார். இந்த காலத்திலே நீதிமான்கள் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும், ஆசாரியர்களுமாயிருப்பார்கள். “அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.... இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்” (வெளி. 20:4,6) என்று யோவான் எழுதுகிறார். இந்தச் சமயத்தில்தானே பவுலார் முன்னறிவித்தபடி “பரிசுத்தவான்கள் பூமியை நியாயந்தீர்ப்பார்கள்” 1 கொரி. 6:2.... இந்தக் காலத்தின்தான் துன்மார்க்கருடைய கிரியைகளை வேதாகமத்தோடு, வேதாகமச் சட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அவர்கள் சரீரத்தில்செய்த செய்கைகளுக்குத் தக்கதாக தீர்ப்பளித்து, கிறிஸ்துவோடு சேர்ந்து அவர்கள் நியாயந்தீர்ப்பார்கள். துன்மார்க்கர் குடிக்கவேண்டிய உக்கிரத்தின்

அளவு கிரியைகளுக்குத்தக்கதாக அளக்கப்படும். மரண புத்தகத்திலே அவர்களுடைய பெயர்களுக்கெதிராக அந்த தண்டனை எழுதப்படும்.

சாத்தானும் அவனுடைய தீய தூதர்களும் கிறிஸ்துவாலும் அவருடைய ஜனத்தினாலும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். "தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?" (வசனம் 3) என்று பவுலார் கூறுகிறார். யூதாவும் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" (யூதா 6) என்கிறார்.

ஆயிர வருடத்தின் முடிவிலே இரண்டாம் உயிர்த்தெழுதல் நடைபெறும். மரித்திருந்த துன்மார்க்கர் எழுந்து, எழுதப்பட்ட தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தேவனுக்குமுன்பாக நிற்பார்கள். நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலை விவரித்தபின்பு, "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்" (வெளி 20:5) என்று யோவான் எழுதுகிறார். துன்மார்க்கரைக்குறித்து ஏசாயா எழுதும்போது: "அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள்" (ஏசாயா 24:22) என்கிறார். ★

நவம்பர் 24

# கிறிஸ்து மீண்டும் பூமிக்குத் திரும்புகிறார்!

**“ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனேக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், □ ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.” —யூதா 14,15.**

ஆயிரவருட முடிவில், கிறிஸ்து மீண்டும் பூமிக்குத் திரும்புகிறார். மீட்கப்பட்டவர்களும், தூதர் சேனைகளும் அவரோடுகூட வருகிறார்கள். அச்சமடையச்செய்யும் கெம்பீரத்தோடு இறங்கி வருகிற அவர் துன்மார்க்கர்—மரித்த துன்மார்க்கர் தங்கள் தண்டனையைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களை எழுப்புகிறார். கடற்கரை மணலைப்போன்ற—எண்ணிலடங்காத—திரள்கூட்டமான பெரிய சேனை எழும்பி வருகிறது. முதல் உயிர்த்தெழுதலில் எழுந்தவர்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! நீதிமான்கள் அழியாத இளமையையும், அழகையும் தரித்திருந்தார்கள். துன்மார்க்கரோ, வியாதியையும் மரணத்தின் சாயலையும் கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் திரளான கூட்டத்தார் அத்தனைபேருடைய கண்களும் தேவகுமாரனுடைய மகிமையைக் காண்கிறது. “கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” என்று எல்லாரும் ஒரே குரலில் சொல்லுகிறார்கள். இயேசுவின்மேலிருக்கிற அன்பினாலே அப்படிச் சொல்லவில்லை. சத்தியத்தின் உந்துதல் அவர்களை அவ்வாறு சொல்லவைக்கிறது. துன்மார்க்கர் எப்படி கல்லறைகளுக்குப் போனார்களோ, அப்படியே—அதே கலகத்தின் ஆவியோடு—கிறிஸ்துவின்மேல் கொண்ட பகையோடு எழும்பிவருகிறார்கள். கடந்தகாலத்தில் உண்டாயிருந்த குணக்குறைகளை நிவிர்த்திசெய்யும்படி, அவர்களுக்குப் புதிதாக கிருபையின் காலம் கொடுக்கப்படாது. அப்படிக்கொடுத்தாலும் அதனால் எந்த ஒரு பிரயோஜனமும் இராது. வாழ்நாள் முழுவதும் அவர்கள் நடப்பித்த மீறுதல்கள் அவர்களது இருதயங்களை மென்மையாக்கவில்லை. எனவே

இரண்டாம் கிருபையின் காலம் கொடுக்கப்பட்டாலும் முதலாவதைப்போலவே தேவனுடைய கற்பனைகளை அவமாக்குகிறதற்கும், அவருக்கு எதிராகக் கலகஞ்செய்வதற்குமாக அது செலவழிக்கப்படுமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலுக்குப்பிறகு ஒலிவமலையின் மேலிருந்து பரலோகம் சென்றார். அங்கேதான் அவருடைய இரண்டாம் வருகைக்கான வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டது. அதே மலையின்மேல் அவர் இறங்குகிறார். “என் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.” “அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன்நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்” “அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்” (சகரியா 14:5,4,9) என்று தீர்க்கதரிசி சொல்லுகிறான். புதிய எருசலேம் ஜொலிக்கிற அதின் பிரகாசத்தோடு வானத்திலிருந்து இறங்கி வந்து, சுத்திகரிக்கப்பட்டு ஆயத்தஞ்செய்யப்பட்ட இந்த இடத்திலே நிற்கும். கிறிஸ்து, தமது மக்களோடும் தூதர்களோடும் அந்த பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்கிறார். ★

நவம்பர் 25

# சாத்தான் அவனது சிறையினின்று விடுவிக்கப்படுகிறான்!

**“அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், ... புறப்படுவான்.” —வெளிப்படுத்தல் 20:7,8.**

ஆயிரவருடங்களின் முடிவிலே, இரண்டாம் உயிர்த்தெழுதல் நடைபெறும். பின்னர் துன்மார்க்கர் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பின் முடிவைப்பெற்றுக்கொள்ளும்படி எழுப்பப்படுவார்கள். நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலை விவரித்தபின்பு, “மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்” (வெளி 20:5) என்று யோவான் சொல்லுகிறார். ஏசாயாவும் துன்மார்க்கரைக் குறித்து: “அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள்” (ஏசாயா 24:22) என்று கூறுகிறார்.

தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கான கடைசி மாபெரும் போராட்டத்திற்கு சாத்தான் இப்பொழுது ஆயத்தமாகிறான். ஏமாற்று வேலைகள் செய்யக்கூடாதபடிக்கு அடக்கப்பட்டிருந்த தீமையின் அதிபதி, மிகுந்த விசனமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டான். ஆனால் இப்பொழுதோ, மரித்த துன்மார்க்கர் எழுப்பப்பட்டு, பெரும் திரளான கூட்டம் தன்பக்கம் நிற்கிறதைக் கண்டு, மீண்டும் நம்பிக்கைகொண்டு, இந்தப் போராட்டத்திலே இழந்துபோகக்கூடாது என்று தீர்மானிக்கிறான். பரலோகத்தை இழந்துபோன அத்தனைபேரையும் தனது கொடியின் கீழ் சேர்த்துக்கொண்டு, அவர்கள்மூலம் தன் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறான். துன்மார்க்கர் சாத்தானின் கைதிகளாக இருக்கிறார்கள். கிறிஸ்துவைப் புறக்கணித்ததின்மூலமாக, கலகக்குணமுள்ள சாத்தானையே அவர்களுக்குத் தலைவனாகத் தெரிந்துகொண்டார்கள். எனவே, அவனுடைய

ஆலோசனையின்படி செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். இப்பொழுதுங்கூட ஆரம்பகாலத்தில் அவன் காட்டிய தந்திரத்திற்கு ஒப்பாக, தன்னை சாத்தான் என்று காட்டிக்கொள்ளவில்லை. மாறாக தான்தான் இந்த உலகத்தின் அதிபதி என்றும், சட்டவிரோதமாக அது அவனிடமிருந்த பிடுங்கப்பட்டிருக்கிறது என்றும் உரிமைபாராட்டுகிறான். ஏமாற்றமடைந்த அந்தக் கூட்டத்தாரை தான் மீட்கப்போவதாகவும், தன்னுடைய வல்லமைதான் அவர்களைக் கல்லறைகளிலிருந்து வெளிப்படப்பண்ணினதாகவும், தான் இவர்களை இப்பொழுது கொடூரமான ஆட்சியிலிருந்து காப்பாற்றப்போவதாகவும் அறிவிக்கிறான். கிறிஸ்து அங்கிருந்து சற்றுநேரம் சென்றுவிட்டதால், அவன் சில அற்புதங்களையுஞ்செய்து, தன்னுடைய ஆதிக்கத்தை நிரூபிக்கப்பார்க்கிறான். பெலவீனமானவர்களைப் பெலனடையச்செய்து, தனது ஆவியினாலும் பலத்தினாலும் அனைவரையும் ஊக்கப்படுத்துகிறான். பரிசுத்தவான்கள் தங்கியிருக்கிற பட்டணத்திற்கு எதிராக அவர்களை நடத்திச்சென்று, தேவனுடைய நகரத்தைப் பிடித்துக்கொள்ளப்பார்க்கிறான். பேய்த்தனமான ஆக்ரோஷத்தோடு தன்னோடிருக்கும் உயிர்த்தெழுந்த எண்ணிலடங்கா ஜனக்கூட்டத்தைக் காண்பித்து, அவர்களுக்குத் தான்தான் தலைவன் என்றும், இத்தனைபேர் இருப்பதினால் வெகு எளிதாக பட்டணத்தைப் பிடித்து, தனது அரசாட்சியை ஸ்தாபிக்கமுடியும் என்றும் கூறுகிறான். ★

# புதிய எருசலேமை தாக்குவதற்கு துன்மார்க்கர் ஆயத்தமாகிறார்கள்!

**"சாத்தான் ... மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்." —வெளிப்படுத்தல் 20:7,8.**

ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த சந்ததியாரும் நீண்ட காலம் வாழ்ந்திருந்தவர்களுமான அவர்களில் பெருந்திரளானோர் அந்தக் கூட்டத்தில் நிற்கிறார்கள். பிரம்மாண்டமான உருவமும், மிகுந்த அறிவும் கொண்டிருந்த அவர்கள், விழுந்துபோன தூதர்களின் கட்டுப்பாட்டிற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, தங்களது திறமை, அறிவு ஆகிய அனைத்தையும் தங்களை உயர்த்துவதற்காகவே முற்றிலும் பயன்படுத்தினார்கள். அவர்களுடைய கலைத்திறம் வாய்ந்த கொடுமையினாலும், தீய கண்டுபிடிப்புகளாலும், உலகத்தைத் தீட்டுப்படுத்தி, தேவனுடைய சாயலை பூமியிலிருந்து துடைத்து அழித்துப்போட்டார்கள். எனவே, தேவன் அவர்களை தமது படைப்பினின்று அகற்றி அழித்துப்போட்டார். இராஜ்யங்களை ஜெயித்த மன்னர்களும், தளபதிகளும், யுத்தங்களில் தோல்வியையே ஒருபோதும் சந்தித்திராத பெருமையான—பேராசையுள்ள— இராஜ்யங்களை நடுங்கவைத்த—வீர தீரமானவர்களும் இருந்தார்கள். மரணத்தினாலே அவர்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கல்லறைகளிலிருந்து வெளியேவந்தபொழுது, மரித்தபோது கொண்டிருந்த, தங்களை விழத்தள்ளியவர்களை வெற்றிகொள்ள வேண்டுமென்ற அதே விருப்பத்துடனே செயல்பட்டார்கள்.

சாத்தான் தன்னுடைய தூதர்களோடு ஆலோசனை செய்கிறான். பின்பு, இந்த இராஜாக்கள், வெற்றியாளர்கள் மற்றும் மாபெரும் மனிதர்களோடும் ஆலோசிக்கிறான். அவர்களெல்லாரும் தங்கள் பக்கம் நிற்கிற ஜனக்கூட்டத்தின் பலத்தையும் எண்ணிக்கையையும் பார்க்கிறார்கள். பட்டணத்திற்குள் இருக்கிற சேனையை தங்களுடைய சேனையோடு

ஒப்பிடும்போது, சிறியதாக இருந்ததால், அதை எளிதில் முறியடித்துவிடலாம் என்று உறுதிபடக் கூறினார்கள். புதிய எருசலேமின் மகிமையையும் ஐசுவரியங்களையும் எடுத்துக்கொள்ளத் திட்டந்தீட்டுகிறார்கள். எல்லோரும் உடனே யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். திறமையான தொழிலாளிகள், யுத்த ஆயுதங்களை ஆயத்தஞ்செய்கிறார்கள். வெற்றிக்குப் பெயர்பெற்ற இராணுவ அதிகாரிகள், யுத்த வீரர் குழுக்களை சிறு பிரிவுகளாகவும் பெரும் பிரிவுகளாகவும் அணிவகுக்கச் செய்கிறார்கள்.

இறுதியாக, முன்னேறிச் செல்வதற்கான கட்டளை கொடுக்கப்படுகிறது. எண்ணக்கூடாத திரள்கூட்டம்—பூமியிலே இதற்குமுன் ஒருபோதும் திரண்டிராத கூட்டம்—அனைத்துக் காலக்கட்டத்திலும் வாழ்ந்த, இணையற்ற திரள்கூட்டம் முன்னேறுகிறது. போர் வீரர்களிளெல்லாம் மாபெரும் வல்லமைவாய்ந்த சாத்தான் அவர்களை நடத்திச்செல்லுகிறான். அவனுடைய தூதர்கள் இந்தக் கடைசி யுத்தத்திற்கு தங்களது அணிகளை இணைத்துச்செல்கிறார்கள். அவனுடைய படையிலே, இராஜாக்களும் யுத்தவீரரும் இருந்தனர். திரளான கூட்டத்தார் மாபெரும் குழுக்களிலே, தங்களுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு அடியிலே அணிவகுத்துச் செல்கிறார்கள். இராணுவ அதிகாரிகளுக்குக்கீழ், ஒவ்வொரு கூட்டமும், வெடித்துப்போய் கரடுமுரடாயிருந்த பூமியின்மீது அணிவகுத்து, தேவனுடைய நகரத்தை நோக்கிச் சென்றது. இயேசுவின் கட்டளைகளுக்கிணங்கி, புதிய எருசலேமின் கதவுகள் பூட்டப்படுகின்றன. சாத்தானுடைய சேனைகள் அந்த நகரத்தைச் சுற்றிவளைத்து, யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். ★

நவம்பர் 27

# இறுதி நியாயத்தீர்ப்பு!

**“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ... அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.”**

**—வெளிப்படுத்தல் 20:12.**

இப்பொழுது கிறிஸ்து தமது எதிரிகள்முன்பு மீண்டும் காணப்படுகிறார். நகரத்திற்கு மேலே—மிகுந்த உயரத்தில்—தங்கத்தால் ஆன—மெருகிடப்பட்ட—ஒரு அஸ்திபாரத்தின்மேல், மிக உயர்ந்த உன்னதமான சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிங்காசனத்தின்மேல் தேவனுடைய குமாரன் வீற்றிருக்கிறார். அவரைச் சுற்றிலும், அவருடைய இராஜ்யத்தின் பிரஜைகள் இருக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய வல்லமையையும் மகிமையையும் எந்த மொழியாலும் விவரிக்கமுடியாது. அதை எந்தப் போனாவாலும் விவரித்துக்காட்டமுடியாது. நித்திய பிதாவினுடைய மகிமை அவருடைய குமாரனைச் சூழ்ந்திருந்தது. அவருடைய பிரசன்னத்தின் பிரகாசம் தேவனுடைய நகரத்தை நிரப்பி, அதின் வாசல்களைக் கடந்துவந்து, பூமி முழுவதையும் அதின் ஒளிக்கதிர்களால் பிரகாசமடையச்செய்தது.

ஒரு காலத்தில் சாத்தானுக்காக வைராக்கியமாயிருந்து, அக்கினியிலிருந்த பிடுங்கப்பட்ட கொள்ளியைப்போல இரட்சகருக்குத் தங்களை முழுவதுமாக அப்பணித்தவர்கள், சிங்காசனத்திற்கு மிக அருகில் இருந்தார்கள். பொய்களுக்கு நடுவில், தேவனுடைய கற்பனைகளை முழு உலகமும் ஒதுக்கித்தள்ளினபோதும், கிறிஸ்தவ குணங்களிலிருந்து சற்றும் விலகாமல், எல்லாக் காலங்களிலும் விசுவாசத்திற்காக இரத்தசாட்சியாக மரித்தவர்கள், அதற்கு அடுத்ததாகவும், அதைத்தாண்டி, எண்ணிலடங்காத திரள்கூட்டமான—ஒருவரும் எண்ணக்கூடாத மக்கள்—எல்லா ஜாதி, பாஷை, கோத்திரங்களிலுமிருந்து, சிங்காசனத்தின் முன்பாக, “வெள்ளை அங்கிகளைத்தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளை ஏந்தி நிற்பார்கள்”—வெளி. 7:9.

மீட்கப்பட்டவர்கள் "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" என்று பாட, அந்த சத்தம், பரலோகம் முழுவதும் எதிரொலிக்கும். தூதர்களும் சேராபீன்களும் அவர்களோடு சேர்ந்து அவரைத் துதிப்பார்கள்....

கூடியிருக்கும் விண்ணுலக—பூவுலகவாசிகளுக்கு மத்தியிலே தேவனுடைய குமாரனின் முடிசூட்டுவிழா நடைபெறுகிறது. இப்பொழுது சர்வல்லமையும் பெற்றவராக, கெம்பீரத்தோடு இராஜாதி இராஜாவாக தமது இராஜ்யத்திற்கு எதிராகக் கலகஞ்செய்தவர்கள்மேல் தீர்ப்பு வழங்கி, அவருடைய கற்பனைகளை மீறி, அவருடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்தினவர்களுக்கு நியாயஞ்செய்வார்....

புத்தகங்கள் திறக்கப்பட்டவுடனே, இயேசுவின் கண்கள் துன்மார்க்கரைப் பார்க்கும். தாங்கள் செய்த எல்லாத் தவறுகளையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ★

நவம்பர் 28

# அனைத்துச் செயல்களும் நியாயத்தீர்ப்பிற்குக் கொண்டுவரப்படும்!

**“ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.” —பிரசங்கி 12:14.**

ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் காரியத்திலும் ஒரு நடைமுறை செயல்படுத்தப்பட்டுவருகிறது. இக்காரியம் கலைஞனின் பளபளப்பான அந்தத் தகட்டிற்கு முகக்கூறுகளை இடமாற்றஞ்செய்யும் பணியைவிட, மிகவும் அதிசயமானது. புகைப்படம் எடுப்பவரின் கலைத்திறன் அழிந்துபோகக்கூடிய ஒரு சாதனத்திலே வெறுமனே சாயலைப் பதிவுசெய்கிறது. ஆனால் வாழ்வின் வரலாற்றில், குணம் உண்மையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகள் எவ்வளவு அழுத்தமாக இருந்தாலும், மீட்பின் இரத்தத்தைத்தவிர வேறொன்றினாலும் ஒருபோதும் அழிக்கப்படமாட்டாது.

படம் எடுப்பவன் எப்படி மனித உருவங்களை பாதரச ஆவியிலே படம் எடுக்கிறானோ, அதே போன்று, தேவனுடைய தூதர்கள் மானிடக் கூறுகளுக்கு ஒத்ததாக துல்லியமானவிதத்தில் குணத்தைப் படமெடுக்கிறார்கள். இந்தக் குறிப்புகளிலிருந்து நாம் நியாயந்தீர்க்கப்படுகிறோம்.

நியாயசங்கம் உட்கார்ந்து, புத்தகங்கள் திறக்கப்படும்பொழுது, ஆச்சரியமான அநேகக் காரியங்கள் வெளியரங்கமாகும். மனிதக் கண்களுக்கும் அவர்களுடைய நியாயத்தீர்ப்புகளுக்கும் தெரிகிறதைப்போல அப்பொழுது அவர்கள் காணப்படமாட்டார்கள். அவர்களுடைய இரகசியப் பாவங்கள் அனைவருக்கு முன்பாகவும் திறந்துவைக்கப்படும். இருதயத்தின் இருண்ட அறைகளிலே மறைத்துவைக்கப்பட்டிருந்த நோக்கங்களும் எண்ணங்களும் வெளிப்படுத்தப்படும்.

அனைத்தும் ஒரு உண்மையான வாழ்க்கைச் சித்திரமாகக் காணப்படும்.

அந்த பக்திவிநயமான பயங்கரமான வேளையிலே, கணவனின் நம்பிக்கைக்கேடான வாழ்க்கை மனைவிக்கும், மனைவி வாழ்ந்த பொய்யான வாழ்க்கை கணவனுக்கும் காட்டப்படும். தங்கள் பிள்ளைகளுடைய உண்மையான குணம் என்ன என்பதை முதன் முதலாகப் பெற்றோர்களும், பெற்றோர்களுடைய வாழ்க்கையிலிருந்த குறைகளையும் தவறுகளையும் பிள்ளைகளும் காண்பார்கள். பொய்யான மாறுபாடுகளின் மூலமாக, அயலகத்தாரின் பொருள்களை கொள்ளையடித்தவர்களும் தப்பவில்லை. அனைத்து அநியாயமான நடவடிக்கைகளையும், அனைத்துப் பொய்யான கணக்குகளையும்பற்றி தேவன் தமது புத்தகங்களிலே மிகச் சரியான குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார்.

அந்த நாளிலே, நிறுக்கப்பட்டு குறைவாகக் காணப்படுகின்ற குற்றவாளியான நபரைக்குறித்த கண்டனத்தைப்பற்றிய நினைவுகள் உண்மையாகவும் தெளிவாகவுமிருக்கும். கடந்த காலத்தின் நினைவுகளையும் செயல்களையும் அவர்கள் மனம் நினைவுகூரும். ஒரு பெரிய காட்சியைப்போல, அவர்கள் வாழ்க்கைமுழுவதும், அவர்கள் முன்பு தோன்றும். ★

# கிறிஸ்துவே நியாயாதிபதி!

**"...பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்." –யோவான் 5:22.**

கிறிஸ்து தாம் செய்த போதனைகளால், வரப்போகிற நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தை அனைவர் மனங்களிலே பதியவைக்க விரும்பினார். இது ஒரு சில நபருக்கு மாத்திரமோ அல்லது ஒரு நாட்டுக்கு மாத்திரமோ நடக்கப்போகிற நியாயத்தீர்ப்பு அல்ல. முழு உலகத்திற்கும்—கணக்குக்கொடுக்கவேண்டிய மனிதகுலத்துக்கே நடக்கவிருக்கிற நியாயத்தீர்ப்பாகும். மனிதன் தேவன்மேல் வைத்த அன்பும், அவனுடைய நேர்மையும், அவன் செய்த ஊழியமும், மிக உயர்ந்த அளவிற்கு கனப்படுத்தப்படும்படிக்கு, சகல உலகங்களின் முன்பாகவும் இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறும். கனத்திற்கும் மகிமைக்கும் குறைவிருக்காது.... தேவனுடைய கற்பனைகள் அதின் கெம்பீரத்தோடு வெளிப்படுத்தப்படும். பரிசுத்த பிரமாணங்களுக்கு எதிராக, அவைகளை ஏற்க மறுத்து கலகஞ்செய்துவந்தவர்கள், தாங்கள் புறக்கணித்த—கனவீனப்படுத்தின—காலின்கீழ்போட்டு மிதித்த—தேவனுடைய குணத்தின் படித்தரமாகிய அதே கற்பனைகள்தான் தங்களை நியாயந்தீர்த்த நியமமாயிருந்ததைப் புரிந்துகொள்வார்கள்....

இந்த உலகத்தின் காரியங்களில் பரலோக அண்டசராசரமும் மிகவும் கவனஞ்செலுத்திக்கொண்டிருக்கிறது. ஏனெனில் இயேசு, இந்த உலகத்தின் ஆத்துமாக்களை—குடிமக்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றுவதற்காக விலைமதிக்கமுடியாத கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார்....

தேவன் நியாயத்தீர்ப்பின் வேலை அனைத்தையும் தமது குமாரனிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார். எந்த தர்க்கிப்பிற்கும் இடமின்றி, அவரே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாயிருக்கிறார்.

மனித சரித்திரத்திலே அதிகமான பாடு அனுபவித்தவரே, உலகம் முழுவதையும் நியாயந்தீர்க்கவேண்டுமென்று தேவன் தீர்மானித்திருக்கிறார்.

அவர்தான் மனிதனை நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றும்படி பரலோக மன்றத்திலிருந்து இறங்கி வந்தவர்.... பூமியிலுள்ள நீதிமன்றத்தின்முன் நிற்கத்தக்கதாக தம்மை ஒப்புக்கொடுத்து, சிலுவை மரணத்தின் அவமானத்தை அனுபவித்த அவர் மாத்திரமே, வெகுமதி அல்லது தண்டனை என்ற தீர்ப்பை அறிவிக்கத் தகுதிபெற்றவர். துன்பத்திற்கும், சிலுவையின் அவமானத்திற்கும் இந்த பூமியிலே தம்மை ஒப்புக்கொடுத்தவர். அதற்கான முழு ஈட்டையும் தேவனுடைய ஆலோசனைக்கூட்டத்திலே பெற்றுக்கொள்வார். பரிசுத்தவான்களின் இராஜா என்று பரலோகமனைத்தும் அண்டசராசரமும் அவரை அங்கீகரிக்க அவர் சிங்காசனத்தில் அமருவார். இரட்சிப்பின் வேலையை அவர் துவக்கி வைத்தார். தாம் துவக்கின வேலையை அவரால் முடிக்கமுடியும் என்கிறதை பரலோகக் குடும்பத்துக்கும், விழுந்துபோகாத உலகங்களுக்கும் அவர் காட்டினார்....

கடைசி நியாயத்தீர்ப்பு நாளிலே, பரிசுத்தவான்களும் பாவிகளுமாக, அனைவரும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை உயிருள்ளோர் அனைவருடைய நியாயாதிபதியாகவும் அங்கிகரிப்பார்கள்.... கடைசி நியாயத்தீர்ப்பின் நாளாகிய அந்நாள் பயங்கரமாயிருக்கும்.... மேலும் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக்கொள்வதற்கான கிருபையின் காலமும், சந்தர்ப்பங்களும், சிறப்புரிமைகளும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நம்மேல், நாம் உண்மையான எஜமானர்களாயிருக்க தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகள் அனைத்தையும், இத்தகைய அருமையான நேரத்தையும் நாம் எப்படிப்பட்ட விதத்தில் மதிப்பீடு செய்யவேண்டும். ★

# வெகுமதிகளும் தண்டனைகளும்!

**“அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.” —மத்தேயு 25:34.**

வலதுபக்கம் நிற்கிறவர்களுக்கு வெகுமதியையும், இடதுபக்கம் நிற்கிறவர்களுக்கு கண்டனத்தையும் தீர்ப்பளிக்கிற இறுதி நியாயத்தீர்ப்பின் காட்சியை இரட்சகர் நமக்கு முன்பாக வைக்கிறார். இவ்வளவு தாராளமான வெகுமதி பெற்றுக்கொள்வதற்கு தாங்கள் அப்படி என்ன செய்துவிட்டோம் என்று எண்ணி ஆச்சரியப்படுகிறவர்களாக நீதிமான்கள் சித்தரிக்கப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பிரசன்னத்தை தங்கள் இருதயங்களில் எப்போதும் பெற்றிருந்தார்கள். அவருடைய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார்கள். எனவே, பெரும் முயற்சி இல்லாமலேயே அவருடைய பரிசுத்தவான்களுக்கு உதவுவதின்மூலமாக கிறிஸ்துவிற்காக ஊழியஞ்செய்துவந்திருக்கிறார்கள். இவ்வாறாக, அந்த நித்தியமான பரிசைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பெறப்போகிற பரிசை அவர்கள் நினைத்துக்கொண்டே இருக்கவில்லை. அதை எதிர்பார்த்து, அவர்கள் எந்த நற்கிரியையையும் செய்யவில்லை. கிறிஸ்துவின்மேலும் அவர்களது சகமனிதர்மேலும் வைத்திருந்த அன்பினாலே அந்த நற்காரியங்களைச் செய்தார்கள். துன்பம் அனுபவிக்கும் மானிட ஜாதியோடு கிறிஸ்து தம்மை இணைத்துக்கொண்டார். எனவே அன்போடும் பரிவோடும் செய்யப்பட்ட ஒவ்வொரு நன்மையும் தனக்காகவே செய்யப்பட்டதைப்போல எண்ணுகிறார்....

ஒரு தாழ்மையான உணர்வுடன் நாம் அனைவரும் அந்த வெகுமதியை மதித்துப்போற்றவேண்டும். ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்களை நாம் பாராட்டி பெற்றுக்கொள்ளும்போது, இயேசு கிறிஸ்து சரியானதைத்தான் செய்வார் என்றும், நம்முடைய கிரியைகளுக்குத்தக்க பலனை அவர் தருவார் என்றும் முழுமனதோடு நம்பவேண்டும். நித்திய ஜீவனே தேவன்

நமக்குக் கொடுக்கும் பரிசாகும். என்றபோதும் தேவனுடைய சித்தம் சரியாக இருப்பதினால் ஆதாயத்தை கணக்கில் வைக்காமல் அதைச் செய்வதைப்போல, நம் வேலையைச் செய்யவேண்டும். வெகுமதியை எதிர்பார்த்து செய்வதை இயேசு விரும்பவில்லை.

யாரெல்லாம் தங்களுடைய அன்றாட அலுவல்களுடன், விருப்பமுள்ள ஆர்வத்தோடும் இன்முகத்தோடும், ஏழைகளிடத்திலும், அனாதைகளிடத்திலும், ஒடுக்கப்பட்டவர்களிடத்திலும், துன்பப்பட்டவர்களிடத்திலும், மென்மையான பரிவோடு பழகி கலந்து உதவிசெய்கிறார்களோ, அவர்களே மிக ஏராளமான வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள்.... சாந்தமும் மனத்தாழ்மையுமான ஆவியோடு—கிறிஸ்துவின் ஆவியோடு, தங்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்கு, எந்த எதிர்பார்ப்புமின்றி அநேக சின்னஞ்சிறு உதவிகளைச் செய்து, அதைப்பற்றின எண்ணம் சிறிதும் இல்லாதவர்கள் நம்மைச் சுற்றிலுமிருக்கிறார்கள். மனஞ்சோர்ந்தவர்களிடம் தாங்கள் பேசின சிறிய அன்பின் வார்த்தைகளைக் கிறிஸ்து கவனித்திருக்கிறார் என்பதையும் மிகச்சிறிய தியாகம்செய்து ஏழை மக்களுக்குச் செய்த சிறிய நன்மைகளையும் கிறிஸ்து கவனித்திருக்கிறார் என்பதையும் இறுதியில் அறியும்பொழுது, அவர்கள் ஆச்சரியமடைவார்கள். ஆண்டவர் ஆவியை நிறுத்துப்பார்க்கிறார். அதற்கேற்ற பரிசுகளை அருளுகிறார். தூய்மையான—தாழ்மையான—குழந்தையைப்போன்ற—அன்பான ஆவியே அவர்களுடைய நற்கிரியைகளை அவரது பார்வையில் விலையேறப்பெற்றதாக்குகிறது. ★

டிசம்பர் 1

# பரிசுத்த பட்டணத்திற்குமேல பரந்துவிரிந்து காணப்பட்ட காட்சி!

**"...சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்." –2 கொரிந்தியர் 5:10.**

சிங்காசனத்திற்குமேலாக சிலுவை வெளிப்படையாகத் தெரிந்தது. ஆதாமின் சோதனை மற்றும் விழுகை, அதனையடுத்து மாபெரும் மீட்பின் திட்டத்தின் அடுத்தடுத்த செயற்பாடுகள், அனைத்தும் ஒரு பரந்துவிரிந்த காட்சிபோன்று காணப்பட்டது. இரட்சகரின் தாழ்மையான பிறப்புஇ அவரின் எளிய, கீழ்ப்படிதல் நிறைந்த ஆரம்ப வாழ்க்கை, யோர்தானில் அவர் ஞானஸ்நானம் பெற்றது, வனாந்தரத்தில் அவர் மேற்கொண்ட உபவாசம், அங்கே அவர் சந்தித்த சாத்தானின் சோதனைகள், பரலோகத்தின் விலையேறப்பெற்ற ஆசீர்வாதங்களை மக்களுக்கு திறந்தளித்த அவரது பொது ஊழியம், அன்பும் இரக்கமும் மிகுந்த செயல்களால் நிறைந்த அவரது நாட்கள், மலைகளில் தனியாக ஜெபித்து செலவிட்ட இரவுகள், அவர் செய்த நன்மைகளுக்குப்பதிலாக பொறாமையாலும், வெறுப்பு, காழ்ப்புணர்ச்சிகளாலும் அவருக்கு விரோதமாகத் தீட்டப்பட்ட சதிகள், உலகமனைத்தின் பாவ பாரமும் அழுத்த, தாங்கமுடியாமல் கெத்செமெனேயில் அவர் அடைந்த பயங்கரமான—விளங்கிக்கொள்ளமுடியாத கடுந்துயர், கொலைகாரக் கூட்டத்தின் கையில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது, பயம் நிறைந்த சம்பவங்கள் நடைபெற்ற அந்த இரவு, எதிர்ப்பைக் காட்டாத ஒரு கைதியாக, அன்பான அவர் சீடர்களாலும் கைவிடப்பட்டு, எருசலேமின் வீதிகளில் அங்குமிங்கும் அலைகழிக்கப்பட்டது, தேவகுமாரன் அன்னாவின்முன் எக்களிப்புடன் நிறுத்திவைக்கப்பட்டது, பிரதான ஆசாரியனின் அரண்மனையில் குற்றவாளியாகவும், கோழைத்தனம் மிகுந்த கொடுங்கோலனாகிய

ஏரோதின் விசாரணை மண்டபத்தில் பரிகசிக்கப்பட்டு—நிந்திக்கப்பட்டு—துன்புறுத்தப்பட்டு இறுதியில் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது—ஆகிய அனைத்துக் காட்சிகளும் தெள்ளத்தெளிவாக படம்போல் காட்டப்பட்டன.

மேலும் ஆதிக்கம் செலுத்தி நிற்கின்ற திரளான ஜனக்கூட்டத்திற்கு முன்பாக—நம் இரட்சகர் பொறுமையோடு பாடனுபவித்தவராக கல்வாரிப் பாதையில் நடந்தது, பரலோக அதிபதி சிலுவையில் தொங்கியது, பெருமைமிக்க ஆசாரியர்களும் ஏளனம்செய்த கும்பலும் அவரது மரணத்தின் கடைசி மணித்துளியின் கடுந்துயரின் வேளையில் அவரைக் கேலிசெய்தது, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் சூழ்ந்த இருள், பூமியதிர்ச்சி, பிளந்த கன்மலைகள், இவ்வுலக மீட்பர் தமது ஜீவனை விட்ட பொழுதைக் குறித்தத் திறந்த கல்லறைகள்—இத்தகைய இறுதிக்காட்சிகள் காணப்பட்டன.

இத்தகைய பயங்கரமான காட்சிகள் அவை நடைபெற்றது போலவே காணப்பட்டன. சாத்தானும் அவன் தூதர்களும் அவனைச் சேர்ந்த அவனது குடிமக்களும் தங்களது சொந்தக் கிரியைகளைக் காட்டும் காட்சிகளினின்று முகத்தைத் திருப்பிக்கொள்ள வல்லமையற்றிருந்தார்கள். இந்நிகழ்ச்சிகளில் பங்குபெற்றவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்கை நினைவுகூருகிறார்கள். அனைவரும் தங்கள் குற்றத்தின் கொடூரத்தன்மையை உணருகிறார்கள். சூரியனின் பிரகாசத்தைவிட மேலாக—தெய்வீக வல்லமையாக ஜொலிக்கும் நம் ஆண்டவரின் முகப்பிரசன்னத்திலிருந்து, தங்களை மறைத்துக்கொள்ள வீணாக முயல்கிறார்கள். ஆனால் மீட்கப்பட்டவர்களோ, தங்கள் கிரீடங்களை இரட்சகரின் பாதங்களில்வைத்து, “அவர் எனக்காக மரித்தார்!” என்று போற்றினார்கள். ★

# நியாயத்தீர்ப்பில் காணப்பட்ட வரலாற்றுப் பின்னணியை உடைய நபர்கள்!

**“முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன்; ... கர்த்தரிடத்தில்மாத்திரம் நீதியும் வல்லமையு முண்டென்று அவனவன் சொல்லி அவரிடத்தில் வந்து சேருவான்; அவருக்கு விரோதமாய் எரிச்சல்கொண்டிருக்கிற யாவரும் வெட்கப்படுவார்கள்.”**

**—ஏசாயா 45:23,24.**

மீட்கப்பட்ட கூட்டத்தின் மத்தியில் கிறிஸ்துவின் அப்போஸ்தல்களான வெற்றி நாயகனான பவுலும், துடிப்பான பேதுருவும், நேசம் பாராட்டிய அன்புள்ள யோவானும், மெய்விசுவாசங்கொண்ட அவர்களின் சகோதரர்களும் மற்றும் அவர்களோடு திரள்கூட்டமாகிய இரத்தசாட்சிகளும் காணப்பட, சுவர்களுக்கு வெளியே சகல இழிந்த அருவருப்புகளோடு, மீட்கப்பட்ட மக்களை துன்புறுத்தி, சிறைப்படுத்தி, கொன்றுகுவித்தவர்கள் இருந்தனர். கிறிஸ்தவர்களைக் கொடுமையாக சித்திரவதைசெய்து அவர்களது கடும்வேதனையைக்கண்டு சாத்தானைப்போன்று மகிழ்ச்சியடைந்த—தீமைக்கும் கொடூரத்திற்கும் மொத்த உருவமான **நீரோ மன்னன்**, தான் ஒரு காலத்தில் துன்புறுத்திய மக்கள் மகிழ்ச்சியோடு கனப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்தான். தனது சொந்த கிரியைகளின் பலனைப் பார்க்கத்தக்கதாக **அவன் தாயும்** அங்கிருந்தாள். தன் தீய குணங்கள் எப்படி தன் மகனைச் சென்றடைந்து, தன்செல்வாக்கும் உணர்ச்சிகளும் முன்மாதிரியும் அவனை எவ்வாறு தீயவழிப்படுத்தியது என்றும், அதின் விளைவு உலகையே நடுங்கவைத்த அவனது கொடுஞ்செயல்கள் என்றும் கண்டாள்.

தன் அணுகுமுறையால் இராஜ்யங்களை நடுங்கவைத்த பெருமைமிக்க—பேராசைகொண்ட **நெப்போலியனும்** அங்கிருந்தான்.

தங்களை கிறிஸ்துவின் தூதுவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அவரது பிள்ளைகளின் மனசாட்சியைக் கட்டுப்படுத்த, சித்திரவதைக் கருவிகளையும், பாதாளச் சிறையையும், தீக்கம்பங்களையும் உபயோகித்த **போப்புமார்க்க போதகர்களும் ஊழியர்களும்** அங்கிருந்தனர். தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்தி, **உன்னதமானவரின் கற்பனைகளை மாற்றிய பெருமைமிகுந்த போப்புகளும்** அங்கிருந்தனர். சபையின் பிதாக்கள் என்று சொல்லிக்கொண்ட மக்கள், தேவனிடம் தங்கள் கணக்கை ஒப்புவிக்கவேண்டும். அதிலிருந்து அவர்கள் தப்பவே முடியாது. எல்லாம் அறிந்த தேவன் தன் கற்பனைகளின்மேல் வைராக்கியமாக உள்ளார் என்பதையும், குற்றவாளியை குற்றமற்றவனாக விடார் என்பதையும், அவர்கள் மிகத் தாமதமாக உணர்ந்துகொண்டனர். தனக்காகத் துன்பப்படும் மக்களிடத்தில் கிறிஸ்து தன்னை வைத்துப்பார்க்கிறார் என்பதையும், "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்ற அவரது சொந்த வார்த்தையின் உண்மையான பொருளையும் அவர்கள் இப்போது அறிந்துகொண்டார்கள்.

துன்மார்க்க உலகம் முழுவதும், தேவனுடைய நியாயஸ்தலத்தில் பரலோக அரசாங்கத்திற்கு விரோதமாகச் செயல்பட்ட மிகவும் பயங்கரமான குற்றத்திற்காக குற்றவாளிகளாக நிற்கின்றனர். அவர்களுக்காகப் பரிந்துபேச ஒருவரும் இல்லை. அவர்களுக்கு சாக்குப்போக்குச் சொல்ல ஒரு காரணமும் இல்லை. நித்திய மரணமாகிய தீர்ப்பு அவர்களுக்கு எதிராக வழங்கப்பட்டது. ★

# துன்மார்க்கர் தேவனுடைய நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்!

**"...நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது." —ரோமர் 14:10,11.**

துன்மார்க்கர் மயக்க நிலைக்கு உட்பட்டவர்கள்போன்று தேவகுமாரன் முடிசூடுவதை நோக்கிப்பார்த்தனர். தாங்கள் வெறுத்து ஒதுக்கி மீறிப்போட்ட கற்பனைகளாகிய தேவ பிரமாணம், அவர் திருக்கரங்களில் இருப்பதைக் கண்டனர். மீட்கப்பட்டவர்கள் ஆச்சரியத்தாலும் மகிழ்ச்சியாலும் ஆர்ப்பரிப்போடு போற்றுவதைக் கண்ணால் கண்டனர். அந்தத் துதியின் நாதத்தை நகரத்திற்குப் புறம்பே இருந்த திரளான கூட்டத்தார் கேட்டபொழுது, முகங்குப்புற விழுந்து, "தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி. 15:3) என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, ஜீவனுக்கு அதிபதியை அவர்கள் தொழுதுகொள்கிறார்கள்.

கிறிஸ்துவின் மாட்சிமையையும் மகிமையையும் சாத்தான் கண்டு, செய்வதறியாது திகைத்து நின்றவன்போல் காணப்படுகிறான். ஒரு காலத்தில் பாதுகாப்பின் கேரூபீனாக இருந்தவன், எந்த இடத்திலிருந்து விழுந்துவிட்டான் என்பதை எண்ணிப்பார்க்கிறான். பிரகாசிக்கின்ற ஒரு ஒளியின் தூதனாக "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி" யாக இருந்தவன் எப்படி மாறிவிட்டான்! எத்தகைய இழிநிலையை அடைந்துவிட்டான்! முன்னொரு காலத்தில் கனம் பெற்றிருந்த சங்கத்திலிருந்து என்றென்றைக்குமாக தள்ளப்பட்டான்! அந்த இடத்தில்—பிதாவிற்கு அருகில்—அவர்

மகிமையை மறைத்தவனாக வேறொரு தூதன் இருப்பதைக் காண்கிறான்! கம்பீரமும் மகத்துவமுமான ஒரு தூதன் கிறிஸ்துவின் சிரசில் கிரீடம் அணிவிப்பதைக்கண்டு, இந்த பாக்கியமான உன்னத நிலை தன்னுடையதாக இருந்திருக்கும் என்று உணர்ந்தான்.

அவனது முந்தைய—பாவமறியாத—பரிசுத்த இருப்பிடத்தைப் பற்றிய நினைவலைகள் அவனுள் எழுந்தன.... தான் பாடுபட்டு சம்பாதித்துள்ள தன் இராஜ்யத்தை அவன் பார்த்தபொழுது, அதின் அழிவையும் தோல்வியையும் மாத்திரமே காண்கிறான்.

தேவனுக்கு விரோதமான கலகத்தை இறுதியில் தோற்கடித்து, சாத்தானின் குணத்தையும் அவன் வரலாற்றையும் வெளிப்படுத்தும் வேளை இப்பொழுது வந்திருக்கிறது. கிறிஸ்துவை சிங்காசனத்திலிருந்து தள்ளி, அவரது பிள்ளைகளை அழித்து, தேவனுடைய நகரத்தைக் கைப்பற்றும் சாத்தானுடைய கடைசி பெரிய முயற்சியில், மாபெரும் வஞ்சகனான அவனது முகமூடி முற்றிலுமாகக் கிழிக்கப்பட்டது. அவனது சகாக்கள் அவனது நோக்கத்தின் முழுத் தோல்வியையும் உணர்ந்தனர்.... சாத்தான் அண்டசராசரங்களின் வெறுப்பிற்கு ஆளானான்.

தேவனுக்கு விரோதமான தன் போராட்டம், தன்னை பரலோகத்திற்குத் தகுதியற்றவனாக்கிவிட்டதை சாத்தான் காண்கிறான். தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தன் சக்தியனைத்தையும் பயிற்றுவித்திருந்தான். பரலோகத்தின் தூய்மையும் சமாதானமும் ஒழுங்கும் அவனுக்கு மிகுந்த சித்தரவதையாக இருக்கும். தேவனின் இரக்கத்திற்கும் நீதிக்கும் விரோதமான அவனது குற்றச்சாட்டுகள் இப்பொழுது அடங்கிப்போயின. யேகோவாவின்மீது சாற்ற அவன் முயற்சித்த நிந்தனைகள் முற்றிலும் அவன்மீதே திரும்பின. சாத்தான் வேறுவழியின்றி குனிந்து—பணிந்து தனக்கு அளிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு நீதியானது என்று அறிக்கையிடுகிறான். ★

# தேவனுடைய பண்பு மெய்ப்பித்துக் காட்டப்பட்டது!

**“சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமு மானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.”**

**—வெளிப்படுத்தல் 15:3.**

இந்த நீண்ட—நெடிய போராட்டத்தில் சத்தியம், அசத்தியம் குறித்த ஒவ்வொரு கேள்விக்கும் விடை இப்பொழுது தெளிவானது. தேவனுக்கு விரோதமாகச் செய்த கலகத்தின் விளைவுகள், தேவ கட்டளைகளை ஒதுக்கிப்போட்டதின் பலன்கள் ஆகியவை அனைத்து சிருஷ்டிகளின் முன்பு, வெளிச்சமாக்கப்பட்டது. தேவனுடைய அரசாங்கத்திற்கு மாறாகச் செயல்பட்ட சாத்தானின் அரசாட்சி அண்டசராசரத்திற்கும் காட்டப்பட்டது. சாத்தானின் சொந்தக் கிரியைகளே அவனைக் கண்டனஞ்செய்தது. தேவனுடைய ஞானம், அவரது நீதி நியாயங்கள் மற்றும் நன்மைகள் முற்றிலுமாக நிலைநாட்டப்பட்டன. இந்த மாபெரும் போராட்டத்தில், தேவனுடைய செயல்பாடுகள் ஒவ்வொன்றும், அவரது மக்களின் நன்மைக்காகவும் அவர் சிருஷ்டித்த அனைத்து உலகங்களின் நன்மைக்காகவுமே நடைபெற்றன என்பதைக் காணமுடிந்தது. தேவனுடைய சிருஷ்டிகளின் மகிழ்ச்சி, அவரது பிரமாணத்தைக் கைக்கொள்வதிலேயே உள்ளது என்பதற்குச் சாட்சியாக, பாவத்தின் வரலாறு நித்தியமாக நிலைத்திருக்கும். மாபெரும் போராட்டத்தின் அனைத்து உண்மைகளையும் கண்ட, தேவனுக்கு உண்மையாகவிருந்த மற்றும் அவருக்கு எதிராக கலகஞ்செய்த பாவிகள் அடங்கிய அண்டசராசரமும் ஒரே தொனியில் “பரிசுத்தவான்களின் இராஜாவே! தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” என்று அறிக்கையிட்டது.

மனிதனுக்காக, பிதாவும் குமாரனும் செய்த மிகப்பெரிய தியாகம், அனைத்து உலகங்களுக்குமுன்னும் தெளிவாகக் காட்டப்பட்டது. கிறிஸ்து தமக்கே உரிய இடத்தைப் பெற்று, சகல அதிகாரங்களுக்கும்,

கர்த்தத்துவங்களுக்கும், நாமங்களுக்கும் மேலாக மகிமைப்படும் நேரம் வந்தது. அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவருவதற்காக, தமக்கு முன்னிருந்த அந்த ஆனந்தத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், அவர் சிலுவையைச் சகித்தார். அவர் பட்டபாடும், அவமானமும் எண்ணிப்பார்க்கமுடியாதது. ஆனால், மகிமையும் மகிழ்ச்சியும் அதனைவிட மேலானவையே! அவரது சாயலில் புதுப்பிக்கப்பட்டிருந்த மீட்கப்பட்ட மக்களைக் காண்கிறார். ஒவ்வொரு இருதயத்திலும் பரிபூரண தெய்வீகம் காணப்பட்டது. ஒவ்வொரு முகமும் தங்கள் அரசனின் சாயலைப் பிரதிபலித்தத. அவர்களில் தன் ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு அவர் திருப்தியானார். நீதிமான்களும் துன்மார்க்கரும் சேர்ந்த அந்த திரள்கூட்டம் கேட்கும்படியாக, “இதோ என் சொந்த இரத்தத்தாலே நான் விலைக்கு வாங்கியவர்கள்; என்னோடுகூட நித்தியகாலமும் என் சமூகத்தில் இவர்கள் வாசம்செய்ய இவர்களுக்காக நான் பாடுபட்டேன்; இவர்களுக்காக நான் மரித்தேன்” என்று கூறினார். சிங்காசனத்தைச் சுற்றி, வெள்ளை அங்கிகள் தரித்திருந்தவர் களிடத்திலிருந்து, “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்” (வெளி. 5:12) என்ற துதியின் கீதம் எழுந்தது. ★

# பாவமும் பாவிகளும் அழிக்கப்படுதல்!

**"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." —மல்கியா 4:1.**

தேவனின் நீதி நியாயங்களை அங்கீகரித்து, கிறிஸ்துவின் மேலாண்மைக்கு தலைவணங்கத்தக்கதாக வரம்பிற்கு உட்படுத்தப்பட்டவனாக இருந்தபோதிலும், சாத்தானின் குணம் மாறவில்லை. தேவ அதிகாரத்தை எதிர்க்கும் ஆவி மீண்டும் விசை நீரோடையின் வெள்ளம்போல அவனைத் தாக்கியது. வெறியினால் நிறைந்து, இந்த மாபெரும் போராட்டத்தை விட்டுவிடக்கூடாது என்று அவன் தீர்மானிக்கிறான். இறுதிக்கட்டத்தில் நம்பிக்கை இழந்து பரலோக இராஜாவிற்கு விரோதமாக துணிந்து போராடத்தக்கதான நேரம் வந்திருக்கிறது. தன்னைச் சார்ந்த மக்களிடையே அவன் சென்று அவர்களது ஆத்திரத்தைத் தூண்டிவிட்டு, உடனடி யுத்தத்திற்கு ஆயத்தமாகிறான். ஆனால், அவனைச்சார்ந்த—தேவனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்த கோடிக்கணக்கானோரில் அவனது தலைமையை ஏற்றுக்கொள்ள அப்பொழுது எவரும் முன்வரவில்லை. அவன் வல்லமை முடிவிற்கு வந்துவிடுகிறது. சாத்தானை கிளர்ந்து எழச்செய்த, தேவன்மீதான அதே வெறுப்பு துன்மார்க்கரையும் ஆட்டுவித்தது. ஆனால் அவர்களது காரியம் நம்பிக்கையற்றது என்றும், யேகோவாவிற்கு விரோதமாக அவர்கள் நிலைநிற்கமுடியாது என்றும் அவர்கள் காண்கிறார்கள். அவர்களது கோபம் சாத்தானுக்கு விரோதமாகவும், வஞ்சகத்தில் ஈடுபட்டிருக்கும் அவனது பிரதிநிதிகளுக்கு விரோதமாகவும் கிளர்ந்தெழுந்தது. பேய்தனமான வெறியோடு அவர்கள்மீது பாய்கிறார்கள்.

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ உன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல ஆக்குகிறபடியினால்,

இதோ, ஜாதிகளில் மகா பலவான்களாகிய மறுதேசத்தாரை உனக்கு விரோதமாய் வரப்பண்ணுவேன்; அவர்கள் உன் ஞானத்தின் அழகுக்கு விரோதமாய்த் தங்கள் பட்டயங்களை உருவி, உன் மினுக்கைக் குலைத்துப் போடுவார்கள். உன்னைக் குழியிலே விழத்தள்ளுவார்கள்" … "காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன்…. உன்னைத் தரையிலே தள்ளிப் போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்…. உன்னைப்பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன்…. மகா பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்"–எசேக்கியேல் 28:6–8, 16–19.

அக்கினி, பரலோகத்தின் தேவனிடமிருந்த இறங்கி வந்தது. பூமி சின்னாபின்னமானது. பூமியின் ஆழங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வெளியேவந்தன. ஒவ்வொரு பிளவுகளிலுமிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டு வந்தது. கன்மலைகளில் அக்கினி பற்றியெரிந்தது. சூளையைப்போல எரிகிற நாள் வந்தது. மிகுந்த வெப்பத்தால் மூலகங்கள் உருகின. பூமியும் அதிலுள்ள வேலைப்பாடுகளும் பற்றியெரிந்தன. ★

# பாவத்தின் ஒரேயொரு ஞாபகச்சின்னம்!

**“இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்.” —நீதிமொழிகள் 11:31.**

துன்மார்க்கர் தங்களுக்கான சரிக்கட்டுதலை பூமியிலே பெற்றுக்கொள்கிறார்கள் (நீதி. 11:31)…. அவர்கள் “துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும் … என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”—மல்கியா 4:1. சிலர் ஒரு நொடிப்பொழுதிலே அழிக்கப்படுவதுபோல அழிந்துபோகிறார்கள். ஆனால் மற்றவர்களோ பலநாட்கள் வேதனைப்படுகிறார்கள். “தங்கள் கிரியைக்குத் தக்கதாக” அனைவரும் தண்டிக்கப்படுகிறார்கள். நீதிமான்களின் பாவம் சாத்தான் மேல் சுமத்தப்படும். பரலோகத்தில் தான் செய்த கலகத்திற்கு மட்டுமல்லாது, தேவப்பிள்ளைகளை பாவஞ்செய்ய வைத்ததிற்காகவும் சாத்தான் பாடுபடவேண்டும். அவனால் ஏமாற்றப்பட்டவர்கள் அனுபவிக்கும் தண்டனையைவிட, அவனுடைய தண்டனை மிக அதிகமாக இருக்கும். அவனுடைய வஞ்சகங்களால் விழுந்தவர்கள் அனைவரும் அழிந்துபோன பின்புங்கூட சாத்தான் மேலும் உயிரோடு இருந்து வேதனையை அனுபவிக்கவேண்டும். சுத்திகரிக்கும் அக்கினியில் இறுதியாக துன்மார்க்கர் முற்றிலுமாக—வேரும் கொப்பும் இல்லாமல், அழிக்கப்படுவார்கள். வேர்—சாத்தான், கொப்புகள்— அவனைப் பின்பற்றியவர்கள்.

சாத்தானும் அவனைச் சார்ந்து—தேவனுக்கு விரோமாகக் கலகஞ்செய்தவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்…. “இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை” “இராதவர்களைப்போல் இருப்பார்கள்”—சங்கீதம் 37:10; ஒபதியா 1:16.

தேவ நீதி திருப்தியடைகிறது. பரிசுத்தவான்களும் தேவதூதர் சேனையும் உரத்த சத்ததமாக “ஆமென்” என்றனர்.

தேவனுடைய நியாயந்தீர்க்கும் அக்கினியால் இப்பூமி சூழப்பட்டு இருக்கும் தருணத்தில், நீதிமான்கள் பரிசுத்த பட்டணத்திலே பாதுகாப்பாகத் தங்கியிருக்கிறார்கள். “முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை”—வெளி. 20:6. துன்மார்க்கருக்கு பட்சிக்கிற அக்கினியாக இருக்கும் தேவன், தம்முடைய பிள்ளைகளுக்கு “சூரியனும் கேடகமுமானவர்”—சங்கீதம் 84:11.

துன்மார்க்கரைப் பட்சிக்கும் அக்கினி, பூமியைச் சுத்திகரிக்கும். சாபத்தின் ஒவ்வொரு சுவடும் இழக்கப்பட்டாயிற்று. மீட்கப்பட்டவர்களின் முன்பாக பாவத்தின் பயங்கர விளைவுகளை உணர்த்த நித்தியகாலமாக எரிந்துகொண்டிருக்கும் நரகம் இருக்கப்போவது இல்லை.

ஒன்றே ஒன்று, பாவத்தின் கோரத்தை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும். நம் மீட்பர் என்றும் சிலுவையின் தழும்புகளைச் சுமந்துகொண்டிருப்பார்....

பாவத்தால் இழக்கப்பட்ட அனைத்தும் மீட்கப்பட்டாயிற்று.... மீட்கப்பட்டவர்கள் இந்த பூமியைச் சுதந்திரிப்பதின்மூலம், தேவன் பூமியைச் சிருஷ்டித்ததின் உண்மையான நோக்கம் நிறைவேறியது. “நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்”— சங்கீதம் 37:29. ★

# நாம் இராஜரீக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்!

**"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." –1 யோவான் 3:2.**

தேவகுமாரர்களாக—பரலோக அரசனின் பிள்ளைகளாக—அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதைப்போன்ற கனத்தையும் மகிமையையும், உலகத்திலுள்ள பதவி உயர்வும் மேன்மையும் வழங்கமுடியுமா?.... இவ்வுலகத்தில் மேன்மைப்படுத்தப் பட்டவர்கள் வெறும் மனிதர்களே. அவர்கள் மரித்து மண்ணுக்குத் திரும்புவர். அவர்களின் புகழ்ச்சியிலும் கனத்திலும் எவ்வித நீடித்த திருப்தியும் கிடையாது. ஆனால் தேவனிடமிருந்து வரும் கனமும் மேன்மையும் என்றும் நிலைத்திருக்கும். தேவனுக்குச் சுதந்தரவாளிகளும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரவாளிகளும் என்பதும், தேடிக்கண்டுபிடிக்க முடியாத ஐசுவரியத்திற்கு நாம் பாத்திரவான்கள் என்பதும் எத்தனை மேன்மை! அந்த சிறந்த பொக்கிஷத்திற்குமுன் நம் தங்கம், வெள்ளி, இரத்தினங்கள், விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவை அற்பமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றன.

பிதாவோடும், அவரது குமாரனாகிய கிறிஸ்து இயேசுவோடுங்கூட நாம் தோழமையோடு உறவுகொள்ளத்தக்கதாக, மேன்மை அடையும்படி உயர்த்தப்படுவோம் என்பது எவ்வளவு பெரிய உன்னதமான நிலைமை! அந்தச் சொல்லிமுடியாத ஆனந்தத்திற்கும், மகிமைக்கும் நாம் பங்காளிகளாக்கப்படுவோம்! உணவு, உடை, பதவி, சொத்து ஆகியவற்றிற்கு மதிப்பு உண்டு. ஆனால் தேவனோடு தொடர்பு, அவரது தெய்வீக இயல்பில் ஒரு பங்காளியாவது என்பது விலைமதிப்புமிக்க ஒன்றாகும். கிறிஸ்துவோடு நமது ஜீவியங்கள் தேவனில் மறைந்திருக்கவேண்டும். "இனி எவ்விதமாய் இருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை" என்றாலும் "நம் ஜீவனாகிய

கிறிஸ்து வெளிப்படும்போது,” அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்! இராஜரீகமான கிறிஸ்தவ குணலட்சணங்கள் சூரியப்பிரகாசம்போல் ஜொலிக்கும். அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல தங்களைச் சுத்திகரித்துக்கொண்ட மக்களின் முகங்களில், கிறிஸ்துவின் முகத்திலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் பிரதிபலிக்கும். தேவனுடைய பிள்ளைகளாகும் சிறப்புரிமையைப் பெறுவதற்கு நாம் செலுத்தும் விலை—நம் ஜீவன் உட்பட, நமக்குண்டான யாவற்றையும் நாம் தியாகஞ்செய்திருந்தாலும், அவையெல்லாம் மிகவும் அற்ப—சொற்பமானதே!

யோவான் மனுஷீகத்தில், தேவமகிமையைக் கண்டபொழுது, அந்தக்காட்சியைக் காணமுடியாதவனாக, செத்தவனைப்போல விழுந்தான். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் சாவாமையைத் தரித்துக்கொள்ளும்பொழுது, அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிப்பார்கள். தங்கள் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப் பட்டவர்களாக சிங்காசனத்திற்குமுன் அவர்கள் நிற்பார்கள். அவர்கள் பாவங்கள் அகற்றப்பட்டுவிட்டன. அவர்கள் மீறுதல்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டாயிற்று. தேவ சிங்காசனத்தின் பூரண மகிமையை அவர்களால் இப்பொழுது காணமுடியும். அவர்கள் கிறிஸ்துவோடு அவரது பாடுகளுக்கு பங்காளிகளாகவும் மீட்பின் திட்டத்தில் அவரது உடன்ஊழியர்களாகவும், தேவ இராஜ்யத்தில் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களைக்கண்டு அவரோடு மகிழவும், நித்திய நித்தியமாக தேவனைத் துதிக்கவும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். ★

# மனநிறைவளிக்கும் உழைப்பு!

**"இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்." –யோவான் 5:17.**

பரலோகம் உற்சாகமான செயல்பாடுகள் நிறைந்த ஓர் இடம். மேலும், வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களுக்கும் களைத்துப் போனவர்களுக்கும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடியவர்களுக்கும் அது ஒரு மகிமையான இளைப்பாறுதலின் இடமாக இருக்கும். இனி அவர்கள் நித்திய இளமையோடும் ஆற்றலோடும் இருப்பார்கள். பாவத்தோடும், சாத்தானோடும் இனி ஒருக்காலும் அவர்கள் போராடவேண்டியதில்லை. இப்படி புத்துணர்ச்சியோடு இருப்பவர்களுக்கு, நித்திய காலமாக சோம்பலாயிருப்பது வெறுப்பூட்டுவதாயிருக்கும்.... அவர்களுக்கு அது பரலோகமாக இருக்காது.

ஆதியிலே தேவன் ஏதேன் தோட்டத்தில் வாசஞ்செய்தவர்களை, "அதைப் பண்படுத்தவும் அதைக் காக்கவும்" வைத்தார். அவர்கள் வேலை களைப்பூட்டுவதாக இல்லாமல், இனிமையாகவும் புத்துணர்ச்சியளிப்பதாகவும் இருந்தது. மனிதனின் மனநிறைவிற்காகவும், உடல் பெலத்திற்காகவும், திறனை வளர்ப்பதற்காகவும், உழைப்பை ஒரு ஆசீர்வாதமாக தேவன் ஏற்படுத்தினார். தன் பரிசுத்த வாழ்க்கையின் உன்னத மகிழ்ச்சிகளில் ஒன்றாக, தன் சரீர மற்றும் மனதின் செயற்பாடுகளை ஆதாம் உணர்ந்தான்.

உழைப்பு வேதனையையும் களைப்பையும் தருவதாக இருந்தாலும், அதைச் சாபமாக எண்ணுவது தவறு. ஐசுவரியவான்களின் பார்வையில், பெரும்பாலும் உழைப்பாளிகள் கீழ்த்தரமாக தோன்றுவர். ஆனால் தேவன் மனிதனை உண்டாக்கிய நோக்கத்திற்கு அது முற்றிலும் முரணானது. உலகத்தில் மிகுந்த செல்வந்தர்களுடைய உடைமைகளை பெருமகனான ஆதாமின் சுதந்திரவீதத்தோடு ஒப்பிடமுடியுமா? இருப்பினும், ஆதாம் சோம்பலாயிருக்க அனுமதியில்லை. மனிதனின் மகிழ்ச்சிக்கு எது தேவை என்பதை உணர்ந்திருந்த நம் சிருஷ்டிகர், ஆதாமிற்கு அவனது வேலையை

நியமித்தார். உழைக்கும் ஆண்களாலும் பெண்களாலும் மட்டுமே, வாழ்க்கையின் மெய்யான மகிழ்ச்சியைக் கண்டுகொள்ளமுடியும்.

பரலோகத்தில் இடைவிடாது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோம்பேறிகள் அங்கு இல்லை. "என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார். நானும் கிரியை செய்துவருகிறேன்" என்றார் கிறிஸ்து. நாம் இறுதி வெற்றிவாகை சூடி, நமக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட மாளிகைகளை சுதந்தரித்துக் கொள்ளும்பொழுது, வேலை ஒன்றுமில்லாமல் சோம்பி இருக்கும் நிலை நமது பங்காக இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது.

தேவன் அனைவரையும் உழைப்பவர்களாக உருவாக்கியிருக் கிறார். பாரஞ்சுமந்து கடினவேலைசெய்யும் மிருகம் சோம்பேறியான மனிதனைவிட மேன்மையாக, தான் உண்டாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுகிறது. தேவன் இடைவிடாது கிரியை செய்கிறார். தூதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக மனுப்புத்திரருக்கு வேலை செய்கிறார்கள். பரலோகத்தில் வேலை எதுவுமின்றி இருக்கலாமென்ற எதிர்பார்ப்போடு செல்பவர்களுக்கு அங்கு ஏமாற்றமே. ஏனென்றால் பரலோகத்தின் ஒழுங்கான நடைமுறையிலே, சோம்பேறிகளுக்கு இடமில்லை. ஆனால் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களுக்கு இளைப்பாறுதல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனுக்கு, அவன் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கு வரவேற்பு காத்திருக்கும். ★

# புதிய வானமும் புதிய பூமியும்!

**“இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிற படியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.” –2 பேதுரு 3:11–13.**

துன்மார்க்கரின் பாதங்கள் புதிதாக்கப்பட்ட பூமியை ஒருபோதும் தீட்டுப்படுத்துவதில்லை. பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து அக்கினி புறப்பட்டுவந்து, வேரும் கொப்புமின்றி அவர்களைச் சுட்டெரித்துப்போடும். சாத்தான்—வேராகவும், அவன் பிள்ளைகள்—கொப்புகளாகவும் இருக்கிறார்கள்.

துன்மார்க்கரைப் பட்சித்துப்போட்ட அதே அக்கினி, பூமி அனைத்தையும் சுத்திகரித்தது. உடைந்த, கரடுமுரடான, ஒழுங்கற்ற மலைத்தொடர்கள் அதிக வெப்பத்தால் உருகிப்போயிற்று. வளிமண்டலமும், முள்ளும் குருக்குமாகிய அனைத்தும் எரிந்துபோயிற்று. பின்னர் நம் சுதந்தரவீதம் அழகோடும் மகிமையோடும் நமக்குமுன் காணப்பட்டது. புதிதாக்கப்பட்ட முழு பூமியையும் நாம் சுதந்தரித்துக்கொண்டோம். “நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று”–வெளி. 21:1. பாவிகளைப் பட்சிக்கிற அக்கினி பூமியையும் சுத்திகரிக்கிறது. சாபத்தின் அனைத்துச் சுவடுகளும் துடைக்கப்பட்டுவிடுகின்றன. பாவத்தின் பயங்கர விளைவுகளை உணர்ந்த மீட்கப்பட்டவர்கள்முன் நித்தியமாக எரியும் நரகம் வைக்கப்படுவதில்லை.

கடல், நண்பர்களைப் பிரிக்கிறது. நமக்கும் நாம் நேசிப்பவர்களுக்குமிடையே ஒரு தடையாக அது இருக்கிறது அகன்ற மிக ஆழமான சமுத்திரங்களால் நம் தொடர்புகள் சிதைந்துபோகின்றன. புதிய பூமியில் கடல் காணப்படாது. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளால் இயக்கப்படுகின்ற துடுப்புகளுடன் கூடிய படகு அங்கு கடந்து செல்வதில்லை, கடந்த காலத்தில் தேவனை நேசித்து, அவருக்கு ஊழியஞ்செய்த அநேகர், சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, பெரிய கப்பல்களில் துடுப்புப்போடுவதற்காக, கொடூரமான முறையில் கடின இருதயமுள்ள மனிதர்களால் கட்டப்பட்டு, நிர்பந்திக்கப்பட்டனர். தேவன் அவர்கள் வேதனையையும் பாடுகளையும் பரிவோடும் இரக்கத்தோடும் நோக்கிப் பார்த்தார். தேவனுக்கு ஸ்தோத்திரம்! புதிய பூமியில் கொடிய விசை நீரோடைகள் இல்லை. பெரிய சமுத்திரங்கள் இல்லை. இடையறாது ஆர்ப்பரிக்கும் அலைகள் இல்லை.

இவ்வுலகில் தற்போது அழகானவைகளாகத் தோன்றும் ஒவ்வொன்றும், புதிய பூமியாகிய நம் பரம வீட்டிலுள்ள பளிங்கு நதியையும், பசுமையான வயல்களையும், அசைந்தாடும் மரங்களையும், ஜீவ ஊற்றுகளையும், பிரகாசமான நகரத்தையும் வெள்ளை அங்கியணிந்த பாடகர்களையும் நமக்கு நினைப்பூட்டட்டும். அப்புதிய பூமியின் அழகை எந்த ஓவியனாலும் வரையமுடியாது. எந்த மனிதனுடைய நாவினாலும் வர்ணிக்கவே இயலாது. “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை”–1 கொரிந்தியர் 2:9. ★

# இனி என்றுமே மரணமில்லை!

**“அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.”**

**—வெளிப்படுத்தல் 21:4.**

நித்தியத்தைக் கழிப்பதற்காக, தேவனுடைய இராஜ்யத்தில் நாம் நுழையும்பொழுது, இவ்வுலகில் நாம் அனுபவித்த சோதனைகளும் பாடுகளும் வேதனைகளும் முக்கியத்துவத்தை இழந்துவிடும்.

மீட்கப்பட்டோரின் வீட்டில், கண்ணீரில்லை, இறுதி மரண ஊர்வலங்கள் இல்லை. துக்கத்தைக் காட்டும் அடையாளக் குறிகளில்லை. “வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்”—ஏசாயா 33:24. நிறைந்த ஆழமான மகிழ்ச்சி அலைகளே என்றென்றும்—சதாகாலமும் புரண்டுகொண்டிருக்கும்.

பாக்கியமான நித்திய வாழ்வை மிகவும் கவனமாக கருத்தில் கொள்வோம். இருளின் ஒவ்வொரு மேகத்தின் வழியாகவும் நம் விசுவாசக்கண்களால் ஊடுருவி உலகத்தின் பாவங்களுக்காக மரித்தவரை நோக்கிப்பார்ப்போம். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்காக பரதீசின் கதவுகளை அவர் திறந்திருக்கிறார். அவர்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளும் ஆவதற்கு அதிகாரமும் கொடுத்திருக்கிறார். நம்மை அதிகமாக வேதனைப்படுத்தும் பாடுகள், கிறிஸ்துவிற்குள் நாம் அழைக்கப்பட்ட உயரிய அழைப்பை சென்றடைவதற்கு, புகட்டும் பாடங்களாக அமையட்டும். தேவன் சீக்கிரமாக வருகிறார் என்ற எண்ணம் நம்மை உற்சாகமூட்டட்டும். அந்த நம்பிக்கை நம் இருதயங்களை மகிழ்ச்சியாக்கட்டும்....

நாம் நம் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். நம்மை அதிகமாக நேசித்து நமக்காக மரித்தவர், நமக்காக ஒரு நகரத்தைக்

கட்டியிருக்கிறார். புதிய எருசலேம் நாம் இளைப்பாறும் இடமாகும். தேவனுடைய நகரத்தில் துக்கமேயில்லை; அலறுதலில்லை. ஒடுக்கப்பட்ட நம்பிக்கையாலும், புதைக்கப்பட்ட பாசத்தாலும் எழும் சோககீதம் அங்கு கேட்கப்படுவதில்லை. பாரமான ஆடைகளுக்குப் பதிலாக கலியாண வஸ்திரம் தரிப்பிக்கப்படும். நம் இராஜாதி இராஜாவின் முடிசூட்டு விழாவைப் பார்ப்போம். யாருடைய ஜீவியங்கள் கிறிஸ்துவில் மறைக்கப்பட்டிருந்ததோ, இந்த பூமியிலே யாரெல்லாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடியிருந்தார்களோ, அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் மீட்பரின் மகிமையோடு பிரகாசிப்பார்கள்.

நமது நித்திய வாழ்வின் நம்பிக்கைக்குக் காரணகர்த்தாவான கிறிஸ்துவை நாம் தரிசிக்கப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை. அவரது சமூகத்தில் இவ்வாழ்க்கையின் துன்பங்களும் பாடுகளும் ஒன்றுமில்லாதது போலாகிவிடும்.... மேல்நோக்கிப் பாருங்கள்! மேல்நோக்கிப் பாருங்கள்! உங்களது விசுவாசம் தொடர்ந்து பெருகட்டும். அந்த விசுவாசம் நம்மைக் குறுகலான பாதை வழியாக தேவனுடைய நகரத்தின் வாசல்கள் வழியே பரந்து விரிந்து மீட்கப்பட்டவருக்காக காத்திருக்கிற, அந்த மகிமையான எதிர்காலத்திற்கு வழிநடத்திச்செல்லட்டும். ★

# மீட்கப்பட்டோரின் சுதந்திரம்!

**“என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்.”**

**—ஏசாயா 32:18.**

வேதாகமத்தில் மீட்கப்பட்டோரின் சுதந்திரவீதம், “ஒரு நாடு” (எபிரெயர் 11:14–16) என்று அழைக்கப்படுகிறது. அங்கே பரலோக மேய்ப்பன் தன் மந்தையை, ஜீவத்தண்ணீர்களுள்ள ஊற்றுகளண்டை வழிநடத்துகிறார். ஜீவவிருட்சம் மாதந்தோறும் தன் கனிகளைக் கொடுக்கும். அதின் இலைகள் மக்கள் நலனுக்கு பயனுள்ளதா யிருக்கும். பளிங்கிற்கு ஒப்பான தெளிந்த—வற்றாத நீரோடைகள் அங்குண்டு. அதன் கரைகளில் அசைந்தாடும் மரங்கள், தேவனால் மீட்கப்பட்டோர் நடந்து செல்லும் பாதைகளில் நிழல் பரப்பிடும். அங்கே பரந்துவிரிந்த சமவெளிகள், அழகான குன்றுகளாகவும், உயரிய கொடுமுடிகளோடுகூடிய தேவ பர்வதங்களாகவும் காணப்படும். அந்த ஜீவஊற்றுகளண்டையில், அமைதியான சமவெளியில், இதுகாறும் அந்நியரும் பரதேசிகளுமாயிருந்த தேவ மக்கள் தாங்கள் தங்கித் தாபரிக்கும் ஒரு வீட்டைக் கண்டடைவார்கள்....

அங்கே, “வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்.” “முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்;” “ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்;... ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.” “என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாரு மில்லை; கேடுசெய்வாருமில்லை”—ஏசாயா 35:1; 55:13; 11:6,9. அங்கே மனிதன் தான் இழந்த ஆளுகையைத் திரும்பப் பெற்றுக்கொள்வான். ஏனைய ஜீவராசிகள் அவன் அதிகாரத்தை அங்கீகரித்து அடங்கும். கொடூரமானவை சாந்தமாகவும், பயந்த சுபாவம் கொண்டவை நம்பிக்கையோடும் நடமாடும்.

பரலோகச் சூழ்நிலையில் வேதனைக்கு இடமில்லை. அங்கே கண்ணீர் இல்லை. மரண ஊர்வலங்கள் இல்லை. துக்கத்தின் அடையாளங்கள்

இல்லை. "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, … முந்தினவைகள் ஒழிந்துபோயின" "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்"–வெளி. 21:4; ஏசாயா 33:24.

தோட்டத்திலும், வயலிலுமான ஏதேனின் வாழ்க்கையை அங்கு வாழ்வார்கள். "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்"–ஏசாயா 65:21,22. ★

டிசம்பர் 12

# ஏதேன் தோட்டம் மீட்டளிக்கப்பட்டது!

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்..."**
**—வெளிப்படுத்தல் 2:7.**

மனிதன் ஏதேனின் இனிமையிலிருந்து துரத்திவிடப்பட்டபின்பும், வெகுநாட்கள் அத்தோட்டம் பூமியிலிருந்தது. அதின் வாசல் தூதர்களால் காக்கப்பட்ட நிலையில், விழுந்துபோன மானிடர், பாவமற்ற நிலைமையில் தங்கள் குடியிருப்பாக இருந்த அந்தத் தோட்டத்தை ஆவலாக நோக்கிப்பார்க்க வெகுகாலம் தேவன் அனுமதித்திருந்தார். கேரூபீன்களால் காவல் காக்கப்பட்ட அந்தப் பரதீஸின் வாசலில் தேவமகிமை வெளிப்பட்டது. அங்கே ஆதாமும் அவன் குமாரரும் தேவனைத் தொழுதுகொண்டனர். எந்த தேவ கற்பனையை மீறியதால் ஏதேனைவிட்டுத் தாங்கள் துரத்தப்பட்டார்களோ, அந்தக் கற்பனைக்குக் கீழ்ப்படிவோம் என்ற தங்கள் உறுதிமொழியை அவ்விடத்திலே புதுப்பித்துக்கொண்டார்கள். அக்கிரமம் இவ்வுலகை நிரப்பி, மனிதனின் துன்மார்க்கம் மிகவும் பெருகியதால், ஜலப்பிரளயத்தால் உலகம் அழிக்கப்படவிருந்த பொழுது, ஏதேனை இப்பூமியில் வைத்த ஆண்டவரின் கரம், அதனை அவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டது, ஆனால் இறுதியில் எல்லாவற்றையும் மீட்டு மனிதனிடம் ஆண்டவர் ஒப்படைக்கும்பொழுது, "புதிய வானமும் புதிய பூமியும்" (வெளி. 21:1) உண்டாகும்பொழுது, ஆதியில் இருந்ததைவிட, மிகவும் அதிக மகிமையோடு அலங்கரிக்கப்பட்டு, மீண்டும் திரும்பக் கொடுக்கப்படும்.

அப்பொழுது தேவனுடைய கற்பனைகளைக் காத்துக்கொண்டவர்கள் ஜீவவிருட்சத்தின் கீழே சாவாமை என்னும் புதிய ஆற்றலை சுவாசிப்பார்கள். யுகங்கள் நெடுகிலும், பாவமற்ற ஏனைய உலகங்களில் வாழ்பவர்களும் நோக்கிப்பார்க்கும்வண்ணம் இந்த மனமகிழ்ச்சியின் தோட்டம், பாவத்தின் சாபமில்லாமல் தேவனுடைய சிருஷ்டிப்பின் பரிபூரணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும். சிருஷ்டிகரின் மகிமையான திட்டத்தை மனிதன்

நிறைவேற்றியிருந்தால், பூமி அனைத்தும் எப்படி இருந்திருக்கும் என்பதற்கும் அது ஒரு எடுத்துக்காட்டாக இருந்திருக்கும்.

ஆதியில் பெற்றிருந்த ஆளுகையை ஆதாம் மீண்டும் பெற்றான். தனக்கு முன்பு இன்பமளித்த மரங்களை ஆனந்தத்தோடு அவன் நோக்கினான். பாவமற்ற நிலையில் இருந்தபொழுது, அம்மரங்களின் கனிகளை அவன் பறித்ததை நினைவுகூர்ந்தான். தன் கரங்காளல் பண்படுத்திப் பாதுகாத்த திராட்சைக்கொடிகளையும் தான் ஒரு காலத்தில் அன்போடு பராமரித்துவந்த அதே மலர்களையும் பார்த்தான். மீட்டளிக்கப்பட்ட ஏதேன் இதுதான் என்பதையும் எல்லா நிகழ்வுகளின் யதார்த்த நிலையையும் அவன் புரிந்துகொள்ளலானான்.

வெகுகாலமாக இழந்திருந்த ஏதேனின் ஜீவவிருட்சத்தை மீண்டும் பெற்றபின்பு, மீட்கப்பட்டவர்கள் ஆதியிலிருந்த மகிமைக்கு ஒப்பாக, மானிட இனத்தின் முழுவளர்ச்சியைப் பெறுவார்கள் (மல்கியா 4:2). பாவத்தின சுவடுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டபின்பு கிறிஸ்துவின் உண்மையான மக்கள் நம் கர்த்தரின் பூரண சாயலைப் பிரதிபலிப்பவர்களாக, ஆத்துமா, சரீரம், சிந்தை ஆகியவற்றில் நம் கர்த்தராகிய ஆண்டவரின் அழகோடு மிளிருவார்கள். நீண்டகாலமாக பேசப்பட்ட—நீண்ட காலமாக நம்பியிருந்த—ஆவலாக எதிர்பார்த்து வாஞ்சித்திருந்த—ஒருபோதும் முற்றுமாக புரிந்துகொள்ளப்படாத மீட்பு—ஆ! எத்தனை அற்புதமான மீட்பு! ★

# நித்திய உலகின் மகிமைகள்!

**“ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.” —சங்கீதம் 16:11.**

எனக்குமுன் நித்திய உலகின் மகிமை திறந்துவைக்கப்பட்டது. நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பரலோகம், நாம் போராடி ஜெபித்துப் பெற்றுக்கொள்ளவேண்டிய இடம். மீட்கப்பட்டோரோடும், பரிசுத்த தூதர்களோடும், இவ்வுலக மீட்பராகிய இயேசுவோடும் சேர்ந்து வாழ நம்மைத் தகுதிப்படுத்திக்கொள்வதே நம் வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அந்த மகிமையான பரலோக நகரத்தின் காட்சியை நாம் ஒருதரம் கண்டால், இந்த பூமியில் வாழ ஒருபோதும் விரும்பமாட்டோம். இப்பூமியில் அழகான இடங்கள் உண்டு. இயற்கை எழில் கொஞ்சும் அந்த இடங்களைக் கண்டு, மகிழ்ந்து, சிருஷ்டிகரோடு அந்த இயற்கையை இணைத்துப்பார்த்து, அவரைத் துதித்திருக்கிறேன். ஆனால் நான் தேவனை நேசித்து, அவரது கற்பனைகளைக் கைக்கொண்டால், அதைவிட பன்மடங்கு சிறந்ததும், நித்திய மகிமைகொண்டதுமான இடம் எனக்காக பரலோகத்தில ஆயத்தமாக வைக்கப்பட்டுள்ளது என்று அறிவேன்.

இந்த பூமி ... நெருப்பால் சுத்திகரிக்கப்பட்டபின்,... மிக அழகானதாக விளங்கும். பச்சைப்பசேல் என்று காணப்படும் பசுமலை வாடிப்போகவில்லை. அழகான ரோஜா மலர்களும் லீலி மலர்களும் மற்றும் பலவகையான மலர்களும் அங்கு உண்டு. ஒருபோதும் மங்காத—வாடாத—தங்களது அழகையும், வாசனையையும் இழந்துபோகாத மலர்கள் அவை.

தற்போது நாம் பயந்து நடுங்கும் சிங்கம், ஆட்டுக்குட்டியுடன் படுத்துக்கொள்ளும். புதிய பூமியில் எங்கும் அமைதியும் ஒருமைப்பாடும் இருக்கும். எவ்வித பழுதுமின்றி புதிய பூமியின் மரங்கள் நேராகவும் உயரமாகவும் ஓங்கி நிற்கும்.

பரிசுத்தவான்கள், மகிமையின் கிரீடத்தை தலைகளில் சூடியவர்களாக, கரங்களில் பொன்சுரமண்டலங்களை ஏந்தி அவற்றை

மீட்டிக்கொண்டு, மீட்பரின் அன்பைப்பற்றி தேவனைத் துதித்து பாடுவர். புதிய பூமியின் மகிமைகளுக்கு மத்தியில், அவர்கள் உலகில் அடைந்த முந்தைய வருத்தங்களும் சோதனைகளும் பாடுகளும் மறக்கப்பட்டுப்போகும்.

இந்தப் பூவுலகின் அழகானவைகள் எல்லாம் நமக்கு அந்த—வரப்போகிற உலகின் பளிங்கு நதியையும், பச்சைப்பசேலென்று இருக்கும் வயல்களையும், அசைந்தாடும் நெடிய மரங்களையும், ஜீவ ஊற்றுகளையும், ஜொலிக்கும் நகரத்தையும், நம் பரலோக வீட்டில் வெள்ளை அங்கி தரித்த பாடகர்களையும் நினைவுபடுத்தட்டும். அந்த அழகை எந்த ஓவியனாலும் தீட்டமுடியாது. எந்த மனித நாவாலும் வர்ணிக்க இயலாது. இரட்சிக்கப்பட்டவர்களின் இருப்பிடத்தைக் கற்பனைசெய்து பார்ப்போம். ஆனால் அதன் மகிமை நம் சிறந்த கற்பனையைவிட மிகமிக மகிமையானது என்பதை நினைவிற்கொள்ளுதல் அவசியம்.

நீதிமான்கள் பெறப்போகும் பலன் மகத்துவமானது. அதை விவரிக்க மனித வார்த்தைகள் போதாது. அதைப் பார்த்தால்மட்டுமே அறிந்துகொள்ளமுடியும். ★

# புதிய எருசலேமிலே....! நமது வீட்டிலே!

**"நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்." —ஏசாயா 65:18.**

மகிமைப்படுத்தப்பட்ட பதிய பூமியின் மாநகரமாகிய புதிய எருசலேம், "கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்"—ஏசாயா 62:3; "அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது"—வெளி. 21:11. "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்"—வெளி. 21:24 "நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்" (ஏசாயா 65:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"தேவனுடைய நகரத்தில் இராக்காலம் இராது." இளைப்பாறுதலை விரும்புவோரும், தேவைப்படுவோரும் அங்கே இல்லை. தேவனுடைய சித்தத்தின்படிச் செய்து அவரது நாமத்தைத் துதித்துக்கொண்டிருப்பதில் களைப்பு தோன்றாது. எப்பொழுதும் முடிவில்லாமல் அதிகாலையின் புத்துணர்ச்சியோடு காணப்படுவோம். "விளக்கும், சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்." மத்தியான வேளையிலுள்ள சூரியப்பிரகாசத்தைவிட பன்மடங்கு மேலான பிரகாசம்—நம் சூரியனைப்போல, உக்கிரமாகச் சுட்டெரிக்காத—சிறந்த பிரகாசம் காணப்படும். தேவனுடைய மகிமையும் ஆட்டுக்குட்டியானவருடைய மகிமையும், பரிசுத்த நகரத்தை மங்காத வெளிச்சத்தால் நிரப்பும். மாறாத பகற்காலத்தில், சூரியனற்ற மகிமையிலே மீட்கப்பட்டோர் நடப்பார்கள்.

"அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்."

தேவனுடைய மக்கள் பிதாவோடும் குமாரனோடும், நேரடித் தொடர்புகொள்ளும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். “இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்” இயற்கையிலும், மனிதனோடு தேவனின் செயல்பாடுகளிலும் தேவசாயலை கண்ணாடியிலே காண்பதைப்போல, பிரதிபலிக்கப் பார்க்கிறோம். ஆனால் அப்பொழுதோ மங்க வைக்கும் எவ்விதத் திரையும் நடுவில் இராமல், முகமுகமாக நாம் அவரைக் காண்போம். நாம் அவரது சமூகத்தில் நின்று, அவரது முகத்தின் மகிமைப் பிரகாசத்தை நோக்கிப் பார்ப்போம்.

அங்கே அறியப்பட்டிருக்கிறபடியே நாம் அறிந்துகொள்வோம். அங்கே, தேவன் ஆத்துமாவில் நாட்டியுள்ள அன்பு, இரக்கம் ஆகிய குணங்கள், உண்மையான—இனிமையான செயல்திறன் பெறும். பரிசுத்த ஜீவன்களோடு தூய தொடர்பு, பரிசுத்த தூதர்களோடும் யுகங்கள் நெடுகிலும் வாழ்ந்த உண்மையான மக்களோடும் ஒன்றிணைந்த சமூகவாழ்வு, “பரலோகத்திலும் பூலோகத்திலுமிருக்கும் முழு குடும்பத்தோடும்” கட்டப்பட்ட பரிசுத்த ஐக்கியம் ஆகியவை இனி நாம் பெறும் அனுபவங்களில் சிலவாகும். ★

# நித்திய சுதந்திரம்!

**“ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமா யிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.”**

**—கொலோசெயர் 1:12,13.**

மீட்பின் கிரயம் செலுத்தப்பட்டுவிட்டது. நித்திய வாழ்வைப் பெறுவதற்கு, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதின்மூலம், அனைவரும் தேவனிடம் வரலாம், ஆனால் இத்தகைய அழியாத சுதந்தரவீதத்தை மனிதன் ஒதுக்கிவிட்டு, பெருமை, சுயநலம், பகட்டு நிறைந்த வாழ்க்கையின்மூலம் திருப்தியடைவதற்காக வாழ்கிறான். ஆனால், இம்மைக்கும் புதிய பூமிக்குமான ஆசீர்வாதத்தை இழந்துபோகிறான். மனிதன் பரலோகத்தின் மாளிகைகளில் நுழையலாம். கிறிஸ்துவோடும் பரலோகத் தூதர்களோடும் தேவனுடைய பிரபுக்களோடும் சமத்துவமாகப் பழகலாம். இருப்பினும், அவர்கள் இத்தகைய பரலோகத்தின் கவர்ச்சிகளைவிட்டு விலகுவது நம்பக்கூடாததாக தோன்றுகிறது.

அனைத்து உலகங்களின் சிருஷ்டிகர், தாம் தன் குமாரனை நேசிப்பதைப்போன்று, தன் ஒரேபேறான குமாரனைத் தங்கள் சொந்த இரட்சகராக நம்புகிறவர்களையும் நேசிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். இப்பொழுதே இங்கேயே அவரது கிருபையின் அனுகூலம் ஆச்சரியமான அளவில் நம்மீது பொழியப்படுகிறது. பரலோகத்தின் ஒளியும் மகத்துவமுமானவரை மனிதர்களுக்கு ஈவாகக் கொடுத்ததின்மூலம், பரலோகப் பொக்கிஷங்கள் அனைத்தையும் தேவன் நம்மேல் பொழியப்பண்ணியிருக்கிறார். இனிவரப்போகும் வாழ்வை நமக்கு வாக்குப்பண்ணினதோடுமட்டுமில்லாமல், இந்த வாழ்விலும் மேன்மையான ஈவுகளால் தேவன் நம்மை நிரப்புகிறார். அவரது கிருபைக்குப் பாத்திரவான்களாகிய நாம், சிறந்து—பரந்த—உன்னதமான குணநலங்களைப்பெற்று மகிழ விரும்புகிறார். பரலோகத்தின் மேன்மையான வாழ்விற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குவதே அவரது திட்டம்.

ஆனால் மனித ஆத்துமாக்களுக்காக சாத்தான் போராடிக்கொண்டிருக்கிறான்.... பரலோகத்தின் மகிழ்ச்சியை ருசிபார்க்கும் அனுபவங்களை மனிதன் பெற்றுக்கொள்ளாதபடியும், பரலோகவாசிகளுக்குக் காத்திருக்கிற நித்திய மகிமையையும் கனத்தையும்பற்றிய ஒரு சிறுகண்ணோட்டத்தைக்கூட மனிதன் பெற்றுவிடக்கூடாது என்பதிலும் அவன் கவனமாக இருக்கிறான்.

கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு இந்த வாழ்வும் வரப்போகிற வாழ்வும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சீடர்களில் மிகச்சிறியவன்கூட பரலோகவாசியாகவும் தேவனுக்கு சுதந்தரவாளியாகவும் அழியாததும் வாடாததுமாகிய சுதந்தரவீதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆ! அனைவரும் பரலோக ஈவைத் தெரிந்துகொண்டு, தேவனுடைய சுதந்தரவாளிகளாக, யாராலும் அழிக்க இயலாத— முடிவில்லாத உலகத்தின் சுதந்தரவீதத்தைப் பெற்றுக்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆ! இந்த உலகத்தைத் தெரிந்தெடுக்கவேண்டாம். மேன்மையான சுதந்தரவீதத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்! கிறிஸ்து இயேசுவினுள் அழைக்கப்பட்ட உன்னத அழைப்பிற்கு இலக்கை நோக்கி பிரயாசப்பட்டு முன்னேறுங்கள்! ★

# வெற்றியுள்ள சபை!

**“அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங் களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.” —வெளிப்படுத்தல் 15:2.**

இப்பொழுது சபை போராடிக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ முழுவதும் விக்கிரகாராதனைக்குச் சாய்ந்த நிலையில், இருளினுள் உள்ள உலகத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம். ஆனால் போராடி வெற்றி பெறும் நாள் விரைவில் வருகிறது. தேவசித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்களின் இராஜ்யத்தில் பரலோகப் பிரமாணத்தைத் தவிர, வேறே பிரமாணம் இல்லை. அனைவரும் மகிழ்ச்சியோடு ஒரே குடும்பமாக, துதியின்—ஸ்தோத்திரத்தின் உடைகளை அணிந்தவர்களாகக் காணப்படுவார்கள். அவ்வஸ்திரம் கிறிஸ்துவின் நீதியே! இயற்கை தன் மேலான அழகுடன் தேவனைத் துதித்துப் போற்றும். உலகம், பரலோக ஒளியால் நிறைந்திருக்கும். நிலவின் ஒளி—சூரிய ஒளியைப்போன்றும், சூரிய ஒளி—தற்போது உள்ளதைவிட ஏழுமடங்கு அதிகமாகவும் இருக்கும். வருடங்கள் மகிழ்ச்சியில் உருண்டோடும். அப்பொழுது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாகப்பாடி , தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரிப்பார்கள். “இனி ஒரு பாவமுமிராது, இனி மரணமுமில்லை....” என்று தேவனும் கிறிஸ்துவும் ஒன்றாக விளம்புவார்கள்.

இவ்வுலகில் கிறிஸ்துவிற்காக பாடனுபவிப்பது பாக்கியம் என்றும், சிலாக்கியம் என்றும் கருதி, அவரோடு ஒத்துழைத்து வாழ்க்கை நடத்தியவர்களுக்குக் கொடுக்கப்படும் கிருபையின் வரவேற்பை, நித்தியத்தின் வாசலில் நின்று கேளுங்கள். தூதர்களோடு சேர்ந்து, தங்கள் கிரீடங்களை மீட்பரின் பாதங்களில் வைத்து, அவர்கள்: “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும்

பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் ... சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக" (வெளி. 5:12,13) என்று மகா சத்தமிட்டுத் துதிப்பார்கள்.

அங்கே மீட்கப்பட்டவர்கள், இரட்சகரிடம் தங்களை வழிநடத்தியவர்களைக்கண்டு வாழ்த்தினர். தேவனுக்கு ஒப்பான வாழ்வை மனிதர்கள் பெற்றுக்கொள்வதற்காக மரித்த கிறிஸ்துவை அவர்கள் ஒன்று சேர்ந்து துதித்தனர். போராட்டம் முடிந்தது. எல்லா உபாத்திரவமும் பாடுகளும் முடிவிற்கு வந்தன. தேவ சிங்காசனத்தைச் சூழ்ந்து மீட்கப்பட்டவர்கள் நிற்க, ஜெயகீதம் பரலோகத்தை நிரப்பிற்று. "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்; எங்களை தேவனுக்கென்று மீட்டுக்கொண்டார்" என்று ஆனந்த கீதம் பாடினர். ★

# உங்கள் உழைப்பு வீண்போவதில்லை!

**“அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.” —எபேசியர் 6:7,8.**

இவ்வுலகில் தேவனுக்காக நாம் செய்யும் செயல்கள் பெரும்பாலும் பலனற்றவைபோலத் தோன்றுகிறது. ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் நன்மைசெய்ய நாம் படும் பிரயாசத்தின் பலனை ஒருவேளை நாம் காணமுடியாதவர்களாக இருக்கலாம். அது வீணான முயற்சி என்றுகூட நமக்குத் தோன்றலாம். ஆனால் பரலோகத்தில் அதற்கெல்லாம் கணக்கு உண்டு. அதற்குரிய பலன் நமக்கு ஒருபோதும் தவறுவதில்லை.

தேவனுக்கு இரண்டு காசுகள் காணிக்கை செலுத்திய ஏழை விதவை, தான் செய்வது இன்னது என்று அறியாதிருந்தாள். ஆனால் அவளது தற்தியாகம் ஒரு முன்மாதிரியாக, ஆண்டாண்டுகளாக உலகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான இதயங்களில் கிரியை செய்துவருகிறது. இச்சம்பவத்தால் தேவனுடைய பொக்கிஷசாலைக்கு உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரர் போன்ற பரலதரப்பினரிடமிருந்தும் வந்த பொருட்கள் ஏராளம்! மிஷனரி ஊழியங்கள் தழைக்க, மருத்துவமனைகள் ஏற்படுத்த, பசியுற்றோர்க்கு உணவும் நிர்வாணிகளுக்கு ஆடையும் வியாதியுள்ளவர்களுக்கு சுகமும் தரித்திரருக்கு சுவிசேஷமும் கொடுக்கப்பட அச்சம்பவம் உதவியிருக்கிறது. அந்த ஏழை விதவையின் தன்னலமற்ற செயலால் மிகத் திரளானோர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். தேவனுடைய நாளில், அந்த விதவைக்கு, தன்செயலின் விளைவை—செல்வாக்கைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதைப்போன்றுதான் மரியாள் இரட்சகருக்கு அளித்த மேன்மையான வெகுமதியும் ஆகும். அந்த உடைக்கப்பட்ட பரிமள தைலக்குப்பியைப்பற்றி நினைப்பதின்மூலம் உற்சாகப்படுத்தப்பட்டு, எத்தனைபேர் ஆண்டவருக்கு

அன்போடு சேவைபுரிந்துள்ளனர். அதை எல்லாம் காணும்பொழுது, அவள் எத்தகைய மகிழ்ச்சி அடைவாள்!

"இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"(மத்தேயு 26:13) என்று கிறிஸ்து கூறினார். எதிர்காலத்தை எண்ணியவராக, தன் சுவிசேஷத்தின் நிச்சயத்தோடு இரட்சகர் இவ்வார்த்தைகளைக் கூறினார். சுவிசேஷம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படவேண்டும். சுவிசேஷம் செல்லுமிடமெல்லாம் மரியாளின் வெகுமதியான பரிமளதைலம் தன் வாசனையை வீசும்! அவள் இயல்பாகச் செய்த செயலின்மூலமாக அநேக இருதயங்கள் ஆசீர்வதிக்கப்படும். இராஜ்யங்கள் தோன்றலாம், மறையலாம்; பேரரசர்கள் மற்றும் வெற்றியாளர்களின் பெயர்கள் மறக்கப்படலாம்; ஆனால் அந்தப் பெண்ணின் செயல் பரிசுத்த வரலாற்றில் அழியாத இடம்பெற்று, என்றைக்குமாக அந்த உடைக்கப்பட்ட பரிமள தைலக்குப்பி, விழுந்துபோன ஒரு மனுக்குலத்தின்மீது தேவன்கொண்ட அளவற்ற அன்பின் கதையைக் கூறிக்கொண்டே இருக்கும்.

பரிசுத்த ஆவியின் ஒவ்வொரு தூண்டுதலும் மனிதரை நன்மைக்கும் தேவனிடத்திற்கும் வழிநடத்திச்சென்ற காரியம் பரலோகப் புத்தகங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய நாளில், பரிசுத்த ஆவியானவரின் கருவியாகச் செயல்பட்ட ஒவ்வொருவரும், தங்கள் வாழ்க்கையில் செய்த செயல்களால் ஏற்பட்ட பலன்களைக் காண்பார்கள். ★

# புதிய பூமியின் செயல்பாடுகள்!

**“வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.” —ஏசாயா 65:21,22.**

நாம் இறுதி வெற்றியைப் பெறும்பொழுது, நமக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட வாசஸ்தலங்களை பெற்றுக் கொள்ளும்பொழுது, சோம்பலாக, ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்து, இனிமையாக இளைப்பாறுவோம் என்று எண்ணக்கூடாது.

ஆதாமிற்கும் ஏவாளிற்கும் ஆதியில் மகிழ்ச்சியைக் கொடுத்த அந்த வேலையிலும் இன்பத்திலுந்தான் புதிய பூமியில் மீட்கப்பட்டவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். தோட்டத்திலும் வயல்வெளிகளிலுமாயிருந்த ஏதேனின் வாழ்க்கை, மீண்டும் வாழப்படும். “வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்”—ஏசாயா 65:21,22.

முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட, நான்கு தூண்களை ஆதாரமாகக்கொண்ட வெள்ளிபோன்று பிரகாசமான தோற்றமுடைய மிகவும் மகிமையான வீடுகளை அங்கே நான் கண்டேன். பரிசுத்த வான்கள் அவற்றைச் சுதந்தரிப்பார்கள். ஒவ்வொன்றிலும் ஒரு தங்க அலமாரி இருந்தது.

அநேக பரிசுத்தவான்கள் வீடுகளுக்குள் சென்று, ஜொலிக்கும் தங்கள் கிரீடங்களை அந்த அலமாரியில் கழற்றிவைத்துவிட்டு, தங்கள் வீடுகளுக்கு அருகேயிருந்த வயல்வெளிகளில் வேலைசெய்யச் சென்றனர். நாம் இப்போது செய்கிற வேலையைப்போல அல்ல, அல்லவே அல்ல. அவர்கள் தலைகளைச் சுற்றி மகிமையான ஒளி பிரகாசித்தது. அவர்கள் தொடர்ந்து தேவனுக்கு துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுத்துக்கொண்டிருந்தார்கள்.

நமது ஒவ்வொரு செயல்திறனும் விருத்தி செய்யப்படும். ஒவ்வொரு ஆற்றலும் வளர்ந்து பெருகும். அதிக அறிவாற்றல் பெறுவதால், நாம் களைப்படைவதுமில்லை; சக்தியிழந்து சோர்ந்து போவதுமில்லை. அங்கே மகத்துவமான வேலைகள் நடத்தப்படும். உயரிய நாட்டங்கள் எட்டப்படும். மேலான நோக்கங்கள் நிறைவடையும். இன்னும், இதற்கும் மேலான புது உயரங்களை அடைய, புது மகத்துவங்களை இரசிக்க, இன்னமும் அறியாத உண்மைகளை விளங்கிக்கொள்ள புதுப்புது காரியங்கள் சிந்தைக்கும்—ஆத்துமாவிற்கும்—சரீரத்தின் வல்லமைகளுக்கும் அழைப்பு விடுக்கும். ★

# ஈடு இணையற்ற இசை!

**“கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.” —ஏசாயா 35:10.**

தேவனுடைய வெளிப்பாடுகளில் மட்டுமின்றி, எந்த மானிட செவியும் கேட்டிராத, மனித சிந்தையில் தோன்றியிராத அத்தனை சிறப்புமிகு இசையும் பாடலும் அங்கு கேட்கும்.

பாடகர்கள் மட்டுமின்றி இசைக்கருவிகள் வாசிப்பவர்களும் அங்குண்டு. அவர்கள் தங்கள் குரலை உயர்த்தி, கர்த்தரின் மாட்சிமையைப் பாடுவார்கள். ஏனெனில் கர்த்தர் சீயோனைத் தேற்றுவார்.... அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் பாழ்நிலங்களை கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் ஆக்குவார். இனிமையான பாடல் சத்தத்தோடு துதித்தலும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அதற்குள் காணப்படும்.

பரலோகத்திலுள்ள ஒழுங்கு—பூரண ஒழுங்கு எனக்குக் காண்பிக்கப்பட்டது. அதைப்போலவே பூரண இசையையும் அங்கே கேட்டு பரவசம் அடைந்தேன். தரிசனத்திலிருந்து வெளியேவந்த போது, இப்பூமியின் பாடல்கள் ஒழுங்கற்றும், ஒருங்கிணைப்பு இன்றியும் காணப்பட்டது. ஒரு பள்ளமான சதுக்கத்தில் தேவ தூதர்கள் குழுக்களாக, ஒவ்வொருவரும் கரங்களில் பொற்சுரமண்டலங்களை ஏந்தியவர்களாக நிற்பதைக் கண்டிருக்கிறேன். அந்த சுரமண்டலங்களின் கடைசியில் ராகங்களை மாற்ற அல்லது சுரமண்டல இசையைச் சரிப்படுத்த ஒரு கருவி இருந்தது. அவர்கள் விரல்கள் அந்த சுரமண்டல நாண்களை கவனக்குறைவோடு மீட்டவில்லை. ஆனால் பல்வேறு நாண்களையும் வெவ்வேறு ஒலி உண்டாக்கத்தக்கதாக மீட்டினார்கள். அந்த இசைக்குழுவை நடத்திச்செல்ல எப்பொழுதும் ஒரு தூதன் இருந்தான். அவன் அந்த சுரமண்டலத்தை முதலில் வாசித்து, இசைமீட்ட, அனைவரும் இணைந்து ஒரு தலைசிறந்த முழுமையான பரலோக இசை உருவாயிற்று. அதின் இனிமையை விவரிக்க என்னால்

இயலவில்லை. அது மிகமேலானதும், இனிமையானதும், தெய்வீகமானதும், பரலோகத்திற்கு அடுத்ததுமாயிருந்தது. ஒவ்வொரு முகத்திலிருந்தும் இயேசுவின் உருவத்தின் ஒளிக்கதிர், சொல்லொண்ணா மகிமையோடு பிரகாசித்தது.

கர்த்தரால் மீட்கப்பட்டோர் கூடுகையில் எப்பேர்ப்பட்ட நேர்த்தியான பாடல் இருக்கும்....! ஆட்டுக்குட்டியானவரைத் துதித்துப் பாடும் பாடல்களோடுகூடிய இனிய இசையால், பரலோகம் முழுவதும் நிறைந்திருக்கும். இரட்சிக்கப்பட்டோர்—முடிவில்லாத காலத்திற்கும் மகிமையான இராஜ்யத்தில் காணப்படுவர். தேவனுடைய வாழ்க்கைக்கு ஒத்த வாழ்வு—அதுதான் நாம் அடையப்போகும் பலன்.

பரலோகத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அந்தக் காட்சி என்முன் தோன்றியபொழுது, பிரம்மிப்பில் மெய்மறந்தேன். அந்த உன்னதமான அழகையும், சிறந்த மகிமையையும் பார்த்து மெய்மறந்துபோன நான் என் எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டு, "ஆ! எத்தகைய அன்பு! எத்தகைய அதிசயமான அன்பு!" என்று வியந்தேன். மிக உயரிய மொழியிலும் பரலோக மகத்துவத்தையும், இரட்சகரின் ஈடு இணையற்ற அன்பின் ஆழங்களையும் விவரிக்க வார்த்தைகள் இல்லை. ★

# நமது மீட்பருக்கான மிக உயரிய மேன்மை!

**“அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி: உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்.” —சகரியா 13:6.**

“நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று”—வெளி. 21:1. துன்மார்க்கரைப் பட்சித்துப்போடும் அக்கினி, பூமியைச் சுத்திகரிக்கும். பாவத்தின் ஒவ்வொரு சுவடும் துடைக்கப்பட்டுப்போகும்....

ஒன்றே ஒன்று மட்டுமே பாவத்தின் நினைவுச்சின்னமாக நிலைத்து நிற்கும். அது—நம் மீட்பர் சிலுவையில் தொங்கிய காயங்களின் தழும்புகளே! அவரது காயப்பட்ட தலையிலும், விலாவிலும், கால்களிலும், பாதங்களிலும், பாவத்தின் கோர விளைவுகளின் தழும்புகள் காணப்படும். “அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது”(ஆபகூக் 3:4) என்று கிறிஸ்துவை அவரது மகிமையில் தரிசித்த தீர்க்கதரிசி கூறுகிறார். அந்த குத்தப்பட்ட விலாவிலிருந்து புறப்பட்ட செந்நீர் நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியது. அந்தக் குருதியில்தான் இரட்சகரின் மகிமை இருக்கிறது. “அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருக்கும்!” அவரைச் சிறுமைப்படுத்திய அடையாளங்கள் ஒவ்வொன்றும் அவருடைய ஒப்பற்ற மகத்துவங்களைக் காட்டுகிறது. யுகங்கள் நெடுகிலும் கல்வாரியின் காயங்கள், அவரது துதியையும் அவரது பராக்கிரமத்தையும் உறுதிபட எடுத்துக்கூறும்.

கிறிஸ்துவின் சிலுவையே மீட்கப்பட்டவர்கள் நித்திய காலமும் பாடும் பாட்டும், படிக்கும் அறிவியல் பாடமுமாகும். மகிமையடைந்த கிறிஸ்துவில், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் காண்பார்கள்.

தனது சக்தியால் எண்ணிமுடியாத உலகங்களை அகன்று பரந்த மாபெரும் வெளியில் சிருஷ்டித்து தாங்கியவர், தேவனின் ஒரே பேறான நேசகுமாரன், பரலோகத்தின் மகத்துவமானவர், கேரூபீன்களும், சேராபீன்களும் போற்றி வணங்கும் பெருமைக்குரிய உன்னதமானவர், தன்னைத்தாழ்த்தி, விழுந்துபோன மனுக்குலத்தை மீட்க, பாவத்தின் சாபத்தையும், அவமானத்தையும் சுமந்ததோடல்லாமல், பிதா தமது முகத்தை மறைத்துக் கொண்டதையும் சகித்து, கல்வாரி சிலுவையில் பாவத்தில் மூழ்கிப்போன உலகத்தின் சாபங்கள் அனைத்தும் அவரை நெறுக்கிப்பிழிய உயிர் நீத்ததை ஒருபோதும் ஒருவரும் மறக்க இயலாது. அனைத்து உலகங்களையும் உண்டாக்கியவர், அனைவருடைய முடிவுக்கும் மத்தியஸ்தராயிருந்தவர், தன் மகிமையைக் களைந்துவிட்டு, மனிதன் மேலுள்ள அன்பினால் தன்னைத் தாழ்த்தியதை, அண்டசராசரங்களின் சிருஷ்டிகளும் ஆச்சரியத்தோடு வியந்து வியந்து போற்றுவார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் மீட்பரின் முகத்தில் பிதாவின் நித்திய மகிமை பிரகாசிப்பதையும் அவரது நித்திய நித்தியமான சிங்காசனத்தையும் கண்டு, அவரது இராஜ்யத்திற்கு முடிவில்லை என்பதை உணர்ந்து, மகிழ்ந்து களிகூர்ந்து: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்... எங்களை தேவனுக்கென்று தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டாரே" என்று பாடினார்கள். ★

# வருங்கால பள்ளிக்கூடம்!

**“இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்.” —வெளிப்படுத்தல் 21:3.**

ஏதேனில் ஆதியில் நிறுவப்பட்ட பள்ளிக்கும் இனி வரவிருக்கிற உலகத்தின் பள்ளிக்கும் இடைப்பட்ட காலத்தில், இவ்வுலகின் நெடிய வரலாறு விரிந்து காணப்படுகிறது. மனிதனின் மீறுதல்களும் பாடுகளும், தேவனின் தியாகமும், மரணத்தின்மீதும் பாவத்தின்மீதும் அவர் கொண்ட வெற்றியும் இதில் அடங்கும். முதல் பாடசாலையான ஏதேனில் காணப்பட்ட அநேகக் காரியங்கள் இனி வரவிருக்கும் பாடசாலையில் இராது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் சோதனைக்கு உட்படுத்தும்வண்ணம் அங்கிராது. சோதனைக்காரன் அங்கு இல்லை; தீமைசெய்யும் சாத்தியக்கூறு அங்கில்லை; ஒவ்வொருவரும் தீமையினாலுண்டான சோதனையை வெற்றிகரமாகக் கடந்துவந்தவர்கள். இனி ஒருபோதும் பாவத்தின் வல்லமைக்கு இவர்களால் உட்படமுடியாது. தேவனுடைய சமூகத்திற்கு மீட்கப்பட்டவர்களாக, ஆதியிலிருந்ததுபோல, மனிதன் மீண்டும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பான்.

இந்த வாழ்க்கையிலே நமது வேலை, நித்திய வாழ்விற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. இவ்வுலக வாழ்வில் நாம் தொடங்கி யிருக்கும் பாடம் இவ்வாழ்க்கையோடு முடிந்துவிடுவது இல்லை. நித்திய வாழ்வு நெடுகிலும் அது ஒருபோதும் முற்றுப்பெறாமல் தொடர்ந்து முன்னேறிக்கொண்டேயிருக்கும்.

இந்த பூமியாகிய பள்ளியில் நாம் கற்றுக்கொண்ட ஒவ்வொரு நல்ல கொள்கையும், ஒவ்வொரு சத்தியமும், அதே அளவிற்கு முன்னேறிச் செல்லத்தக்கதாக நம்மை பரலோகப்பள்ளியில் நடத்தும். இந்தப் பூவுலகில் தமது ஊழியத்தின்பொழுது, இயேசு எவ்விதம் தம் சீடர்களோடு பேசி நடந்தாரோ, அதே போன்று மேலோகப் பள்ளியிலும் நம்மை ஜீவ நதியண்டை நடத்தி, சத்தியங்களை நமக்கு விளக்கிக் காட்டுவார். இவ்வாழ்க்கையில், பாவத்தின் காரணமாக நம் மூளையால் புரிந்துகொள்ள இயலாத, மீதமிருக்கும் புதிரான மறைவான காரியங்களை அவர் விளக்குவார்.

பாவம் தோன்றிய வரலாறு, சாவிற்கேதுவான பொய்மையின் கோணலான வேலைகள், சத்தியம் அசத்தியத்தின்மீது வெற்றிகண்ட விதம்—இவை அனைத்தும் விளக்கப்படும். காணக்கூடிய உலகத்திற்கும் காணக்கூடாத உலகத்திற்கும் இடையிலான திரை அகற்றப்பட்டு, ஆச்சரியமான காரியங்கள் வெளிப்படுத்தப்படும்.

நமது ஒவ்வொரு செயல்திறனும் முன்னேற்றுவிக்கப்படும். ஒவ்வொரு ஆற்றலும் வளர்ந்து பெருகும். அதிக அறிவாற்றல் பெறுவதால் நாம் களைப்படைவதுமில்லை; சக்தி இழந்து சோர்ந்துபோவதுமில்லை. அங்கே மகத்துவமான வேலைகள் நடத்தப்படும். உயரிய நாட்டங்கள் எட்டப்படும். மேலான நோக்கங்கள் நிறைவடையும். மேலும், இதற்கும்மேலான புதிய புதிய உயரங்களை அடைய, புதிய மகத்துவங்களை இரசிக்க, புதிய சத்தியங்களை விளங்கிக்கொள்ள, புதுப்புது காரியங்கள் சிந்தையின்—ஆத்துமாவின்—சரீரத்தின் வல்லமைகளுக்கு அழைப்பு விடுக்கும். ★

# கிறிஸ்துவே நமது ஆசிரியர்!

**“இதினிமித்தம், என் ஜனங்கள் என் நாமத்தை அறிவார்கள்; இதைச் சொல்லுகிறவர் நானே என்று அக்காலத்திலே அறிவார்கள்; இதோ, இங்கே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” —ஏசாயா 52:6.**

ஆதியில் இருந்ததைப்போலவே—மனிதன் மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்கு கொண்டுவரப்பட்டு, அவரால் போதிக்கப்படுவான்.

நமக்கு முன்பாக என்ன வெளிப்படுத்தப்படும் என்று நாம் இப்பொழுது சிறிதுகூட எண்ணிப்பார்க்க முடியாது. கிறஸ்துவோடு ஜீவ தண்ணீர்களண்டையில் உலாவுவோம். இயற்கையின் மகத்துவங்களையும் அழகையும் அவர் நமக்குக் காண்பிப்பார். நமக்கு அவர் எப்படியிருக்கிறார் நாம் அவருக்கு எப்படியிருக்கிறோம் என்பதை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். நாம் தற்போது அறிவில் குறைவுள்ளவர்களாதலால், நம்மால் அறிந்துகொள்ள இயலாத சத்தியங்களை, நித்தியத்தில் அறிந்துகொள்வோம்.

இனி வரப்போகிற உலகத்தில் மீட்கப்பட்டவர்களை கிறிஸ்துவானவர் ஜீவ நதியண்டை நடத்திச்சென்று சத்தியத்தின் மகத்துவமான பாடங்களைப் போதிப்பார். இயற்கையின் புதிர்களை— இரகசியங்களை அவர் வெளிப்படுத்துவார். தலைமை நிலைக்குறிய அவரது கரம் உலகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது என்பதை அவர்கள் காண்பார்கள். வயல்வெளியின் வண்ணமலர்களில் தலைசிறந்த கலைஞரான நம் ஆண்டவரின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பார்கள். ஒவ்வொரு ஒளிக்கதிரையும் சிதறிப் பிரகாசிக்கச்செய்யும் நம் இரக்கமுள்ள பிதாவின் நோக்கங்களை அறிந்துகொள்வார்கள். எனவே, பரிசுத்த தூதர்களோடு மீட்கப்பட்டவர்களும் சேர்ந்து, இந்த நன்றியற்ற உலகத்தின்மேல் தேவன் பாராட்டிய உன்னத அன்பை, நன்றியோடு நினைவுகூர்ந்து, போற்றிப் பாடுவார்கள்.

சொல்லிமுடியாத ஐசுவரியத்தைப்பற்றியும் எல்லையற்ற வாய்ப்புகளின் வரலாறுபற்றியும் ஒவ்வொரு மாணவனுக்கும் வெளிப்படுத்தப்படும். பாவம் ஊடுருவிய வரலாறு, மரணத்திற்கேதுவான பொய்மையின் கோணலான செயற்பாடுகள் நேர்கோடுகளிலிருந்து பிசகாத சத்தியம் எப்படி தவறுகளைச் சந்தித்து ஜெயித்தது என்பதெல்லாம் வெளிப்படுத்தப்படும். நாம் காண்கின்ற உலகத்திற்கும், நம்மால் காணக்கூடாத உலகத்திற்கும் ஊடாக இருக்கும் திரை அகற்றப்பட்டு, அற்புதமான காரியங்கள் வெளிப்படுத்தப்படும்.

சொல்லொண்ணா ஆனந்தத்தோடு விழுந்துபோகாத சிருஷ்டிகளின் மகிழ்ச்சியிலும், ஞானத்திலும் பங்கேற்போம். தேவனுடைய கரங்களின் கிரியைகளை யுகங்கள் நெடுகிலும் தியானித்ததினால் பெற்றுக்கொண்ட பொக்கிஷத்தில் பங்குகொள்வோம். நித்தியத்தின் ஆண்டுகள் உருண்டோட, நாம் தொடர்ந்து இன்னும் மேலான மகத்துவமான வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டே இருப்போம். நித்திய நித்திய காலமாக, நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவிருக்கும் ஈவுகள், “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்” (எபேசியர் 3:20) இருக்கும்.

தேவனோடு நித்திய காலமாக நாம் வாழ, நம்மைத் தகுதிப்படுத்துவதற்கேற்ற கல்வியை நாம் இங்கே பெற்றிருக்க வேண்டும். இங்கே நாம் ஆரம்பிக்கும் கல்வி, பரலோகத்தில் பூரணமாக்கப்படும். நாம் இங்கிருப்பதைவிட மேலான நிலைக்கு மட்டுமே செல்வோம். ★

# யுகம் நெடுகிலும்... நமது கல்வி!

**“கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.” —எபேசியர் 2:7.**

மீட்பின் அறிவியல் மற்றெல்லா அறிவியல்களைக்காட்டிலும் மேலானது. தேவதூதர்களைப்பற்றிய பாடங்கள், வீழ்ந்துபோகாத உலகங்களில் வாழும் அறிவுஜீவிகளைப்பற்றிய பாடங்கள், நம் கர்த்தரும் மீட்பருமானவரை கவர்ந்திழுக்கும் விஷயங்கள், முடிவில்லாத நம் தேவனின் மனதில் உருவெருக்கும் நோக்கங்கள், திட்டங்களைப்பற்றி நித்தியகாலமாக பாதுகாக்கப்பட்ட காரியங்கள் ஆகியவை மீட்கப்பட்டோர் யுகங்கள் நெடுகிலும் படிக்கப்போகும் பாடங்களாகும். மனிதன் தொடரப்போகும் கல்விகளில் இது தலைசிறந்தது. வேறு எந்தக் கல்வியையும் விட, இது ஆத்துமாவை உயர்த்தி, சிந்தையை ஊக்குவிக்கும்.

மீட்பின் பொருளை தேவதூதர்களும் அறிந்துகொள்ள வாஞ்சையாக உள்ளனர். முடிவில்லாத நித்தியகாலமாக மீட்கப்பட்டோர் பாடும் பாடல்களும், படிக்கும் பாடங்களும் மீட்பைப்பற்றியதே. அப்படியென்றால், இப்பொழுதே அதை கருத்தில்கொண்டு நாம் படிக்கவேண்டாமா?

கிறிஸ்துவின் மானிட அவதாரம், அவர் நமக்காகச் செய்த பாவ நிவாரண பலி, மத்தியஸ்த ஊழியம் ஆகியவைகள் ஆராய்ந்து படிப்பவர்களுக்கு காலங்கள் இருக்கும் வரையிலும் மனதை ஈடுபடுத்திக்கொள்ள தகுந்த பொருளாக இருக்கும். அவன் பரலோகத்தையும் அதின் எண்ணிறந்த ஆண்டுகளையும் ஏறிட்டுப்பார்த்து, “தேவத்துவத்தின் இரகசியம் மகா பெரியது” என்று ஆச்சரியமடைவான்.

பூலோகத்தில் பெற்றிருக்கக்கூடிய சில வெளிப்பாடுகளை நாம் பெற்றிருந்திருப்போமானால், நம் அறிவுக்கண்கள் திறந்திருக்கக்கூடும் என்ற காரியத்தை நித்தியத்தில் நாம் அறிந்துகொள்ளலாம். முடிவில்லாத யுகங்கள் நெடுகிலும், மீட்பைக்குறித்த ஆய்வுப்பொருள் மீட்கப்பட்டோரின்

இருதயங்களிலும் சிந்தைகளிலும் நாவுகளிலும் நிறைந்து விளங்கும். கிறிஸ்து தமது சீடர்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று ஏங்கிய, ஆனால் சீடர்கள் தங்கள் விசுவாசக்குறைபாட்டால் புரிந்துகொள்ளத் தவறிய சத்தியங்களை மீட்கப்பட்டோர் அறிந்துகொள்வார்கள். சதாகாலங்களிலும் கிறிஸ்துவின் பூரணமும் மகிமையும் புதிது புதிதாக வெளிப்படும். யுகங்கள் நெடுகிலும் நம் உண்மையுள்ள எஜமானர் தம் பொக்கிஷத்திலிருந்து, புதிதும் பழையதுமான காரியங்களை வெளிக்கொண்டுவருவார்.

தேவனைப்பற்றியும், அவரது சத்தியத்தைப்பற்றியும் முழுமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் நமக்கு இருந்திருக்கக்கூடுமானால், சத்தியத்தை இன்னும் தோண்டி கண்டுபிடிக்கவோ, சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்ளவோ, இன்னும் மேலான வளர்ச்சியடையவோவேண்டிய அவசியம் நமக்கு இருக்காது. ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! அப்படியல்ல. தேவன் முடிவில்லாதவராயிருப்பதுபோன்று, அவருக்குள் எல்லா ஞானமான பொக்கிஷங்களும் முடிவில்லாமல் இருக்கிறது. எனவே, நாமும் நித்திய காலமும் ஆராய்ந்து பார்க்கிறவர்களாகவும், எப்போதும் கற்றுக்கொள்கிறவர்களாகவும் இருப்போம். அவரது ஞானம், நன்மை, வல்லமை, ஆகியவற்றின் ஐசுவர்யம் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. ★

# நிறைவான வளமுடைய ஆய்வுப்பொருட்கள்!

**"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.... இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்." –1 பேதுரு 1:10–12.**

மகத்துவமான மீட்பின் பொருளைப்பற்றி இவ்வாழ்க்கையில் புரிந்துகொள்வதற்கு ஆரம்பிக்க மாத்திரமே நம்மால் முடியும். நமது எல்லைக்குட்பட்ட புரிந்துகொள்ளும் தன்மையோடு சிலுவையில் சந்திக்கும் அவரது அவமானமும், மகிமையும், ஜீவனும், மரணமும், நீதியும், இரக்கமும்பற்றி மிகுந்த கவனத்தோடு நாம் ஆழ்ந்து ஆராயலாம். ஆனால், நாம் எவ்வளவு தான் நம் மூளையைக் கசக்கிப்பிழிந்தாலும், அதின் முக்கியத்துவத்தையும் மேன்மையையும் முழுமையாக நம்மால் புரிந்துகொள்ள இயலாது. நம்மை மீட்ட அன்பின் நீளம், அகலம், ஆழம், உயரம் ஆகியவை மங்கலாகவே விளங்கிக்கொள்ளப்படுகிறது. காணப்படும்விதமாகக் கண்டாலும், அறியப்படும்விதமாக அறிந்தாலும், மீட்கப்பட்டவர்களால், மீட்பின் திட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் நித்தியகாலம் நெடுகிலும், அவர்களுக்கு புதிய சத்தியங்கள் தொடர்ந்து வெளிப்படுத்தப்படும். அவர்கள் வியந்து மகிழ்வார்கள்.

இப்பூமியின் வேதனைகளும் சோதனைகளும் துக்கங்களும் முடிவிற்கு வந்து, அதற்கான காரணம் அகற்றப்பட்டாலும், தங்கள் இரட்சிப்பின் உன்னத விலையைப்பற்றிய தெளிந்த அறிவும் புத்தியும் தேவ மக்களிடம் காணப்படும்.

சிலுவையின் இரகசியம் மற்ற எல்லா இரகசியங்களையும் விளக்குகிறது. கல்வாரியிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களில் நம்மை பயத்தால் நிறைத்து பிரமிப்படையச்செய்த தேவனின் குணாதிசயங்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் காணப்படுகின்றன. இரக்கம், மென்மை, பெற்றோரின் அன்பு ஆகிய குணாதிசயங்கள் பரிசுத்தம், நீதி, வல்லமை ஆகியவற்றோடு இணைந்து தோற்றமளிக்கிறது. மேலாக உயர்த்தப்பட்ட மகத்துவமான அவரது சிங்காசனத்தை நாம் நோக்கிப்பார்க்கும்பொழுது, அவரது குணத்தின் கிருபையின் இனிய வெளிப்பாடுகளை நாம் கண்டு, "எங்கள் பிதாவே" என்று பிரியமுடன் நாம் அவரை அழைக்கும் பதத்தின் முழு அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் முன் ஒருபோதும் இல்லாதவண்ணம், உணர்ந்துகொள்வோம்.

எல்லையற்ற ஞானத்தின் ஊற்றாகிய ஆண்டவர், நம்மை மீட்பதற்கு தம் குமாரனை பலியாக ஈவதைத்தவிர, வேறு எந்தத் திட்டத்தையும் உத்தேசிக்கவில்லை என்பதைக் காணமுடியும். முன் ஒருபோதும் இல்லாதவண்ணம், பரிசுத்தமும், மகிழ்ச்சியும் சாவாமையும் உடைய மீட்கப்பட்ட மக்களால் இப்பூமியை நிரப்புவதிலுள்ள சந்தோஷமே அந்த தியாகத்திற்குச் செய்யப்படும் பதிலீடாகும். நம் இரட்சகர், இருளின் வல்லமைகளோடு போராடியதின் விளைவாக, மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் தேவமகிமையில் சதாகாலமும் திளைத்திருப்பார்கள். ஆத்துமாவின் விலை அப்பேர்ப்பட்டது. எனவே, பிதா அதற்காகச் செலுத்தப்பட்ட விலைக்கிரயத்தைக்குறித்து திருப்தியடைந்தார். கிறிஸ்துவும் தன் மாபெரும் தியாகத்தின் பலனைக்கண்டு திருப்தியாவார்.

நித்திய கால முழுவதும், மீட்கப்பட்ட திரள்கூட்டமே அவரது தலையாய மகிமையாக இருக்கும்.★

# அண்டசராசரத்தையும் ஆராய்வதற்கான ஓர் வாய்ப்பு!

**“கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக் கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.” —சங்கீதம் 104:24.**

இந்த உலகில் தேவனுடைய கிரியைகளையும் வழிகளையும் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிக்க மாத்திரமே நம்மால் கூடும். அந்த கல்வி நித்திய காலம் முழுவதும் தொடரும். மனிதனின் ஒவ்வொரு சக்தியும் திறம்பட வேலைசெய்யத்தக்கதாக சிந்தனைக்கான ஆய்வுப்பொருட்களை தேவன் மனிதனுக்காக வழங்கியிருக்கிறார். இதயத்தை நன்றியாலும் ஸ்தோத்திரங்களாலும் நிறைக்கத்தக்கதாக நமது சிருஷ்டிகரின் குணாதிசயங்களை மேலே வானத்திலும் கீழே பூமியிலும் நாம் படிக்கலாம் . தேவனுடைய மட்டற்ற அன்பை அவரது மகத்துவமான கிரியைகளில் கண்டு, நம் ஒவ்வொரு நரம்பும் அதை வெளிப்படுத்திக் காட்டும்.

நம் பார்வையை மறைக்கும் திரை நீக்கப்படும்பொழுது, அந்த அழகிய உலகை நம் கண்கள் காணும். தற்போது அக்காட்சியில் சிறிதளவே நாம் நுண்நோக்கியின்மூலமாகப் பெற்றுக்கொள்கிறோம். வானமண்டலங்களின் மகத்துவத்தை தற்போது தொலைநோக்கி வாயிலாக நாம் காண்கிறோம். ஆனால் பாவத்தின் சாபம் நீக்கப்பட்டபின்பு, இந்த ஒரு உலகமும் கர்த்தராகிய தேவனின் மகிமையில் தோன்றும். நமது ஆராய்ச்சிக்காக எத்தகைய களம் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது! அங்கே அறிவியல் படிக்கும் மாணவன் சிருஷ்டிப்பின் பதிவேடுகளை வாசித்து, தீமையின் பிரமாணங்களை நினைவூட்டும் வகையில் எதுவும் இல்லை என்பதைக் காண்பான். புலம்பலின் தொனியையோ அல்லது துக்கத்தின் அடங்கிய குரலையோ அங்கு கேட்கமாட்டான். இந்த பரந்தகன்ற பிரபஞ்சத்திலுள்ள சகலவிதமான படைப்பிலும் தேவனுடைய நாமம் பெரிய

எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். பூமியிலோ அல்லது சமுத்திரத்திலோ அல்லது வானத்திலோ தீமையின் அடையாளம் ஒன்றும் மீந்திருக்காது.

மீட்கப்பட்ட கூட்டத்தார், ஒவ்வொரு உலகமாகப் பார்த்துக்கொண்டே வருவார்கள். அவர்கள் தங்கள் நேரத்தின் பெரும்பகுதியை, மீட்பின் இரகசியத்தை ஆராய்வதிலேயே செலவழிப்பார்கள். நித்திய வாழ்வு நெடுகிலும் இந்த ஆய்வுப்பொருளே அவர்கள் சிந்தைக்குத் தொடர்ந்து வெளிப்படும். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலும் அவர்களது சாட்சியின் வசனத்தாலும் ஜெயம்பெற்றவர்களுடைய சிறப்புரிமைகள் விளங்கிக்கொள்ளுவதற்கும் மேம்பட்டதாக இருக்கும்.

அண்டசராசரங்களின் பொக்கிஷங்கள் அனைத்தும் தேவ பிள்ளைகள் படிப்பதற்காக திறந்துவைக்கப்படும். வீழ்ந்துபோகாத உலகத்து மக்களின் மகிழ்ச்சியிலும், ஞானத்திலும், சொல்லொண்ணா களிப்போடு நாம் பிரவேசிப்போம். யுகங்கள் நெடுகிலும், தேவனுடைய கரங்களின் கிரியைகளைத் தியானித்ததின் விளைவாக சம்பாதித்த பொக்கிஷங்களை நாம் பகிர்ந்துகொள்வோம். நித்தியத்தின் ஆண்டுகள் உருண்டோடும்போது, நமக்கு இன்னும் மேன்மையான— மகிமையான வெளிப்பாடுகள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கும். "நாம் நினைப்பதற்கும் கேட்பதற்கும் மிகவும் அதிகமாக" என்றென்றைக்கும் தேவனின் ஈவுகள் நமக்கு அளிக்கப்படும். ★

# ஒவ்வொரு உலகத்தையும் சென்று பார்ப்போம்!

**“கர்த்தர் சொல்லுகிறதாவது: ... என் கரங்கள் வானங்களை விரித்தன; அவைகளின் சர்வசேனையையும் நான் கட்டளையிட்டேன்.”**
**—ஏசாயா 45:11,12.**

இந்த உலகமும், பரலோக வாசஸ்தலங்களும்மட்டுமே தேவனின் அண்டசராசரம் என்ற கருத்தை அநேகர் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அது அப்படியல்ல!

தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் அநேக உலகங்கள் தேவனுக்கு உண்டு. சிருஷ்டிகரின் மகிமைக்கு ஏற்றதாக இந்த உலகங்கள் இயக்கப்படுகின்றன. இந்த உலகத்தின் குடிமக்கள் மனிதனின் மீட்புக்காக செலுத்தப்பட்ட மாபெரும் கிரயத்தைப்பார்த்து வியப்பினால் நிறைந்திருக்கிறார்கள்.

மற்ற உலகங்களைப்பற்றிய ஒரு காட்சியை கர்த்தர் எனக்குக் கொடுத்திருக்கிறார். எனக்குச் செட்டைகள் கொடுக்கப்பட்டன. நகரத்திலிருந்த ஒரு தூதன் என்னை மகிமையும் பிரகாசமுமான ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றான். பச்சைப்பசேலென்று புல்வெளிகள் இருந்தன. பறவைகள் இனிமையான ஒரு கீதத்தை இசைத்துக் கொண்டிருந்தன. பல்வேறு அளவுகளில், அந்த இடத்திலுள்ள குடிமக்கள் இருந்தனர். அவர்கள் மேன்மையாகவும், கெம்பீரமாகவும், இனிமையாகவும் காணப்பட்டனர். இயேசுவின் சாயலை அப்பட்டமாகத் தரித்திருந்தனர். பரிசுத்த மகிழ்ச்சியோடு முகங்கள் பிரகாசிக்க, விடுதலையோடும் மகிழ்ச்சியோடும் அவ்விடத்தில் காணப்பட்டனர்.

பூமியில் இருப்பவர்களைவிட, எப்படி அவர்கள் இவ்வளவு அழகாக இருக்கிறார்கள் என்று அவர்களில் ஒருவனிடத்தில் நான் கேட்டேன். அதற்கு அவன்: “நாங்கள் தேவனுடைய கற்பனைகளுக்கு சரியாகக் கீழ்ப்படிந்து வாழ்ந்திருக்கிறோம். பூமியில் இருப்பவர்களைப்போன்று நாங்கள்

கீழ்ப்படியாமையில் விழுந்துவிடவில்லை'' என்று பதிலளித்தான். பிறகு நான் இரு மரங்களைக் கண்டேன். அதில் ஒன்று நகரத்திலுள்ள ஜீவ விருட்சம் போன்றிருந்தது. இரண்டு விருட்சங்களின் கனிகளும் அழகாக இருந்தன. ஆனால், ஒன்றை அவர்களால் புசிக்கமுடியாது. இரண்டையும் புசிக்க அவர்களுக்கு வல்லமை உண்டு. ஆனால் ஒன்றைப் புசிக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது. என்னுடன் வந்த தூதன் என்னிடம், "இவ்விடத்தில் ஒருவரும் அந்த விலக்கப்பட்ட மரத்தின் கனியை ருசிபார்க்கவில்லை. அவர்கள் புசித்தால் வீழ்ச்சியடைவார்கள்'' என்றான்.

ஏழு சந்திரன்கள்கொண்ட ஒரு உலகிற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட **ஏனோக்கை**க் கண்டேன். பூமியிலிருந்து அவ்விடத்திற்குத்தான் எடுத்துக்கொள்ளப்பட்டீர்களா என்று நான் அவரை வினவினேன். "இல்லை; பட்டணம்தான் என் வீடு. இவ்விடத்தைப் பார்க்க வந்தேன்'' என்று கூறினார். ஏதோ சொந்த வீட்டில் இருப்பதைப் போன்று அங்கே அவர் நடந்து திரிந்தார்.

நான் அங்கேயே தங்கிவிடுகிறேன் என்று என்னுடன் வந்த தூதனிடம் கெஞ்சினேன். இந்த இருண்ட உலகிற்குத் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணத்தை என்னால் தாங்கமுடியவில்லை; ஆனால் தூதனோ, "நீ திரும்பிச்செல்லவேண்டும்; நீ உண்மையாக இருப்பாயென்றால், 1,44,000 மக்களோடு நீயும் சேர்ந்து, தேவனுடைய கரங்களின் கிரியைகளைப் பார்க்கத்தக்கதாக, அனைத்து உலகங்களுக்கும் செல்லும் சிறப்புரிமையைப் பெறுவாய்'' என்று கூறினான். ★

டிசம்பர் 27

# புதிய பூமியைப்பற்றிய யூகங்கள்!

**“மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும் போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவதூதரைப்போலிருப்பார்கள்.” —மாற்கு 12:25.**

திருமணங்களும் குழந்தை பிறப்பும் புதிய பூமியில் உண்டு என்று நம்பும் மக்கள் இன்று உள்ளனர். ஆனால் வேதத்தை நம்பும் மக்கள் இத்தகைய கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. புதிய பூமியில் பிள்ளைகள் பிறக்கும் என்ற கோட்பாடு, “உறுதியான தீர்க்கதரிசன” வார்த்தையின் ஒரு பகுதி அல்ல. தவறாகப் புரிந்துகொள்ளமுடியாதவகையில் கிறிஸ்துவின் வார்த்தைகள் மிகத்தெளிவாக உள்ளன. புதிய பூமியில் திருமணம், பிள்ளைப்பேறு போன்ற கேள்விகளை அவர்கள் என்றைக்குமாக தீர்த்து முடிவுகட்டிவிட்டால் நல்லது. மரித்தோரிலிருந்த எழுந்தவர்களிடமும், மரணத்தைக் காணாமல் மறுரூபமாக்கப்பட்டவர்களிடமும், ஒருபோதும் “கொள்வனையும் கொடுப்பனையும்” கிடையாது. அவர்கள் இராஜரீக குடும்பமாக, தேவ தூதர்களைப்போல இருப்பார்கள்.

கிறிஸ்துவானவரின் இந்தத் தெளிவான அறிக்கைக்கு விரோதமான கருத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் அமைதியாக இருப்பது மிகவும் நல்லது. தேவன் தமது வார்த்தைகளின்மூலம் தெரியப்படுத்தாத காரியங்களில் நம் யூகங்களையும் கொள்கைகளையும் நுழைப்பது துணிகரமான செயல். நம் எதிர்கால நிலைமையைப்பற்றி எந்த யூகங்களுக்கும் உள்ளாக நாம் செல்ல அவசியமில்லை....

“சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு.” அஸ்திபாரத்திற்கு, மரம், வைக்கோல், காய்ந்த புல் போன்ற நமது சொந்த சந்தேகங்களையும் யூகங்களையும் கொண்டுவரவேண்டாம். அதனால் ஒருவருக்கும் எந்த நன்மையும் இல்லை.

நம் இரட்சிப்பிற்குத் தேவையான எந்த சத்தியத்தையும் கிறிஸ்து மறைத்து வைக்கவில்லை. வெளிப்படுத்தப்பட்டவைகள் நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் உரியது. வெளிப்படுத்தப்படாதவைகள்பற்றிய நம் சொந்த கருத்துக்களையும், கோட்பாடுகளையும் உருவாக்கத்தக்கதாக நமது கற்பனா சக்தியை நாம் அனுமதிக்கக் கூடாது.

ஆவிக்குரிய கட்டுக்கதைகள் அநேகரை சிறைப்பிடித்து வைத்திருக்கிறது என்ற காரியம் எனக்குக் காட்டப்பட்டது.... இத்தகைய பரிசுத்தமற்ற தற்புனைவுகளில் திளைக்கும் அனைவருக்கும் நான் சொல்லவேண்டுவது "போதும் நிறுத்துங்கள்." கிறிஸ்துவிற்காக, நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்களோ, அங்கேயே நிறுத்துங்கள். நீங்கள் இருப்பது தடைசெய்யப்பட்ட இடத்தில் என்பதை உணருங்கள்.

நாம் எதிர்கால வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க தேவன் எல்லா முன்னேற்பாடுகளையும் செய்துவைத்திருக்கிறார். இத்தகைய திட்டங்கள்குறித்து அவர் எந்தவிதமான வெளிப்பாடுகளையும் கொடுக்கவில்லை. எனவே நாம் அவைகளைக்குறித்து யூகிக்கவேண்டாம். இவ்வுலகின் நடைமுறைகளைக்கொண்டு, எதிர்கால நித்திய வாழ்வின் நடைமுறைகளையும் நாம் அளந்துகொண்டிருக்கவேண்டாம். ★

டிசம்பர் 28

# கிறிஸ்துவின் அன்பின் அரசு!

**“வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.” —தானியேல் 7:27.**

கிறிஸ்து இராஜ்யத்தின் அரசாங்கம், இப்பூமியின் அரசாங்கத்தைப்போன்றது அல்ல. அந்த இராஜ்யத்திலுள்ள மக்களின் குணாதிசயங்களை அது பிரதிபலிப்பதாக இருக்கும்.... அவரது நியாயசனத்தில் பரிசுத்த அன்பு தலையாயதாக விளங்கும். அவருடைய அலுவலகங்களும் நியமனங்களும் அன்பின் வெளிப்பாட்டோடு கிருபை பொருந்தியதாக சிறப்பிக்கும். அவரது குணநலன்களைப்போன்றே அவரது ஊழியக்காரரும் தங்கள் அலுவல்களிளெல்லம், அன்போடும், பரிவோடும், இரக்கத்தோடும் நடந்துகொள்ளவேண்டுமென்றே தேவன் அறிவுறுத்துகிறார்.

தேவனுடைய இராஜ்யத்தின் நல வாழ்வில், அவரோடு பங்குகொள்ளும் ஒவ்வொருவரின் இருதயமும் சிந்தையும் அடையவேண்டிய மாறுதலை கிறிஸ்துவின் வல்லமைமட்டுமே ஏற்படுத்தமுடியும்.... அவரை உண்மையாக சேவிக்க வேண்டுமென்றால், தெய்வீக ஆவியில் பிறந்தவர்களாக நாம் இருக்கவேண்டும். அது நம் இருதயத்தைச் சுத்திகரிக்கும். மனதைப் புதுப்பிக்கும். தேவனை நேசிப்பதற்கும், அறிந்துகொள்ளுவதற்கும் புதிய திறனை அளிக்கும். அவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் முழுமனதோடு கீழ்ப்படிய உதவி செய்யும். அதுவே மெய்யான தொழுகையாகும்.

“உன் கண்கள் எருசலேமை அமரிக்கையான தாபரமாகவும், பெயர்க்கப்படாத கூடாரமாகவும் காணும்; இனி அதின் முளைகள் என்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, அதின் கயிறுகளில் ஒன்றும் அறுந்துபோவதுமில்லை. மகிமையுள்ள கர்த்தர் அங்கே நமக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம்போலிருப்பார்; ... கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.... வியாதிப்பட்டிருக்கிறேன்

என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்"—ஏசாயா 33:20–24.

"நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.... வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.... என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார்"—ஏசாயா 65:18–25. ★

# புதிய பூமியிலும் ஓய்வுநாள் ஆசரிப்பு!

**"நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்." —ஏசாயா 66:22,23.**

ஆதியிலே சிருஷ்டிப்பின் கிரியையை முடித்துவிட்டு பிதாவும் குமாரனும் ஓய்வுநாளிலே ஓய்ந்திருந்தனர். "வானமும் பூமியும் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்த" (ஆதி. 2:1) போது, சிருஷ்டிகரும் பரலோகவாசிகளும் அந்த மகிமையான காட்சியின் தியானத்தில் களிகூர்ந்தனர். "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே"—யோபு 38:7. "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" (அப். நடபடி. 3:21) வருமளவும், சிருஷ்டிப்பின் ஓய்வுநாள், யோசேப்பின் கல்லறையில் இயேசு ஓய்வெடுத்த அந்த நாள், மாறாமல், களிகூரும் நாளாகவும், ஓய்வுகொள்ளும் நாளாகவும் விளங்கும். "ஓய்வுநாள்தோறும்" இரட்சிக்கப்பட்ட ஜாதிகள் தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் மகிழ்ச்சியோடு தொழுதுகொள்ளப் பணியும்போது, பரலோகமும் பூமியும் இணைந்து அவரைத் துதிக்கும்.

இரட்சிக்கப்பட்ட ஜாதிகள் பரலோகப்பிரமாணங்களைத்தவிர வேறு பிரமாணங்களை அறியமாட்டார்கள். துதித்தல் நன்றி செலுத்துதலின் உடைகளைத் தரித்தவர்களாக அனைவரும் மகிழ்ச்சியோடு ஒரே குடும்பமாக ஐக்கியத்தோடு காணப்படுவர். இந்தக் காட்சியால் விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடும். தேவபுத்திரர் எல்லோரும் கெம்பீரிப்பார்கள்....

“அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார் களென்று கர்த்தர் சொல்லுகிறார்.” “கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்;” “கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.” “அக்காலத்திலே சேனைகளின் கர்த்தர் தமது ஜனத்தில் மீதியானவர்களுக்கு மகிமையான கிரீடமாகவும், அலங்காரமான முடியாகவும்” இருப்பார்.

பூமியும் வானங்களும் நிலைநிற்குமளவும், ஓய்வுநாளும் தொடர்ந்து சிருஷ்டிகரின் வல்லமைக்கு ஒரு அடையாளமாக விளங்கும். ஏதேன் மீண்டும் இப்பூமியில் மலரும்பொழுது, தேவனின் பரிசுத்த ஓய்வுநாள் சூரியனுக்கு கீழே யாவராலும் கனப்படுத்தப்படும். “ஓய்வுநாள்தோறும்” மகிமையான புதிய பூமியில் வாசம்பண்ணுகிற யாவரும், “எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்”—ஏசாயா 66:23. ★

# நித்தியமான பாதுகாப்பு!

**“அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.” –சகரியா 14:9.**

மீட்பின் மாபெரும் திட்டத்தின் விளைவாக, இவ்வுலகம் மீண்டும் தேவனுக்கு உகந்தநிலைக்கு முழுவதுமாகக் கொண்டுவரப்படும். பாவத்தினால் இழந்தவை அனைத்தும் திரும்பப் பெறப்படும். மனிதன் மட்டுமல்ல, இந்த பூமியுங்கூட மீட்கப்பட்டு, கீழ்ப்படிந்து நடப்பவர்களின் நித்திய வாசஸ்தலமாக அமையும். ஆறாயிரம் ஆண்டுகளாக இந்த பூமியை சொந்தங்கொண்டாட சாத்தான் போராடியிருக்கிறான். ஆனால் சிருஷ்டிப்பின்பொழுது, ஆண்டவர் கொண்டிருந்த அநாதி நோக்கம் தற்போது நிறைவேறும். “உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்”–தானியேல் 7:18.

“சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக”–சங்கீதம் 113:3; “அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்;” “கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்”–சகரியா 14:9; “அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவை கள்”– சங்கீதம் 111:7,8. சாத்தான் வெறுத்து அழிக்கவகைதேடிய பரிசுத்தக் கற்பனைகள், பாவமற்ற அண்டசராசரம் அனைத்திலும் கனப்படுத்தப்படும்.

கிறிஸ்துவின் மீட்பின் கிரியைமூலம் தேவனின் அரசாங்கம் நியாயமானது என்று நிரூபிக்கப்படுகிறது. சர்வவல்லவர், அன்பின் தேவனாக அறியப்படுவார். சாத்தானின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி கொடுக்கப்பட்டு, அவனது இயல்பின் தன்மைகள் தோலுரித்துக் காட்டப்பட்டது. இனி ஒருபோதும் எதிர்ப்போ, கிளர்ச்சியோ எழாது. இந்த அண்டசராசரத்திற்குள், பாவம் இனி ஒருபோதும் நுழைய முடியாது. மறுதலித்தலிலும், வழிவிலகலிலுமிருந்த

அனைவரும், நித்தியகாலமும் பாதுகாப்பாக இருப்பார்கள். அன்பின் தற்தியாகத்தினால், பூலோகம் மற்றும் பரலோகத்தின் குடிமக்கள் தங்கள் சிருஷ்டிகரோடு, பிரிக்க முடியாத ஐக்கியத்தில் பிணைக்கப்படுவர்.

பாவம் பெருகிய இடத்தில் தேவனுடைய கிருபை மிக அதிகமாகப் பெருகிற்று. சாத்தான் தன்னுடையது என்று வாதிட்ட இப்பூமி, கிரயஞ்செலுத்தி மீட்கப்படுவதுமட்டுமின்றி உயர்த்தவும்படும். பாவத்தின் சாபத்தால், தேவனுடைய மகத்துவமான சிருஷ்டிப்பில் ஒரு கரும்புள்ளியாக அமைந்த நம் சிறு உலகம் அண்டசராசரங்களிலுமுள்ள அனைத்து உலகங்களுக்கும்மேலாக உயர்த்தப்பட்டு கனமடையும். தேவகுமாரன் மானிடனாக வசித்த இந்த இடத்தில், மகிமையின் இராஜா வாழ்ந்து பாடுபட்டு மரித்த இவ்விடத்தில், அவர் சகலத்தையும் புதிதாக்குகின்றபொழுது, மனிதர்களோடு தேவனுடைய வாசஸ்தலம் அமையும். “அவர்களோடு அவர் வாசம்பண்ணுவார். அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடிருந்து, அவர்கள் தேவனாயிருப்பார்.” சதாகாலங்களிலும் மீட்கப்பட்டவர்கள் கர்த்தரின் வெளிச்சத்தில் நடக்கும்பொழுது, அவரது சொல்லிமுடியாத ஈவாகிய இம்மானுவேலிற்காக—தேவன் நம்மோடிருப்பதற்காக தேவனைத் துதிப்பார்கள். ★

# மீட்கப்பட்டவர்கள் அடையும் பலன் என்ன?

**“நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.” —சங்கீதம் 91:16.**

தேவனால் மீட்கப்பட்டோர் படிப்பதற்காகப் பரலோகப் பொக்கிஷங்களெல்லாம் திறந்திருக்கும். அவர்கள் மரணக்கட்டுகளிலிருந்து விடுதலைபெற்றவர்களாக தூரமான உலகங்களுக்கும் களைப்பின்றி பறந்து திரிவர். இந்த உலகங்கள் தாம் மனிதனின் சாபத்தைக்கண்டு வருந்தியவைகளும், ஒரு பாவி மனந்திரும்பிய செய்தியைக்கேட்டு மகிழ்ந்தவைகளுமாகும். சொல்ல முடியாத களிப்போடு, இப்பூமியின் மக்கள் விழுந்துபோகாத ஜீவன்களின் ஞானத்திலும், மகிழ்ச்சியிலும் பிரவேசிப்பார்கள். தேவனுடைய கரத்தின் கிரியைகளை, காலாகாலங்களாக தியானித்ததின் விளைவாக ஏற்பட்ட, தெளிந்த அறிவாகிய பொக்கிஷத்தைப் பங்கிட்டுக்கொள்வார்கள். தெய்வீக சிம்மாசனத்தைச் சுற்றி தங்களுக்குக் குறிக்கப்பட்ட பாதையில் ஓடுகின்ற, தேவனுடைய மகிமையான படைப்பாகிய, சூரியன்களையும் நட்சத்திரங்களையும் அதன் அமைப்புகளையும் மங்காத பார்வையோடு பிரமித்து நோக்குவார்கள். சிறியவற்றிலிருந்து பெரியவைவரை அனைத்தின்மேலும் படைத்தவரின் நாமம் எழுதப்பட்டிருக்கும். அவருடைய வல்லமையின் ஐசுவரியம் வெளிப்பட்டிருக்கும்.

நித்தியத்தின் ஆண்டுகள் ஒவ்வொன்றாக உருண்டோட, தேவனைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் இன்னும் மகிமையான வெளிப்பாடுகள் வந்துகொண்டேயிருக்கும். அறிவு பெருகிக்கொண்டே செல்வதுபோல அன்பும், பயபக்தியும், மகிழ்ச்சியும் பெருகும். தேவனைப்பற்றிய அறிவு மனிதனுக்கு வளரும்பொழுது, மேலும் அதிகமதிகமாக, அவரது குணாதிசயங்களை எண்ணி பிரமிப்பான். மீட்பின் ஐசுவரியத்தையும் சாத்தானுடனான மாபெரும் போராட்டத்தில் அவர் அடைந்த வியப்பூட்டும் சாதனைகளையும், அவர்களுக்கு முன்பாக இயேசுவானவர் திறந்து வெளிப்படுத்தும்பொழுது, ஆண்டவரை

உண்மையாகச் சேவிக்கவேண்டுமென்று மீட்கப்பட்டோரின் இருதயங்கள் அவர்களை உந்த, ஆனந்தக் களிப்போடு அவர்கள் தங்களின் பொன்னாலான சுரமண்டலங்களை மீட்டி, ஆயிரம்பதினாயிரமான தங்கள் குரல்களை ஒருங்கிணைத்து மாபெரும் துதியின் கீதத்தை எழும்பப்பண்ணுவர்.

“அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக” (வெளி. 5:13) என்று சொல்லக்கேட்டேன்.

மாபெரும் போராட்டம் முடிவடைந்தது. பாவமும் பாவிகளும் இனி இருக்கமாட்டார்கள். அண்டசராசரம் முழுவதும் தூய்மை அடைந்துவிட்டது. பரந்து விரிந்த படைப்பு முழுவதிலும் மகிழ்ச்சியும் ஒருமைப்பாடும் நாடித்துடிப்புபோல ஒரே சீராக விளங்கும். எல்லையில்லா விண்வெளி எங்கும் சிருஷ்டி கர்த்தாவாகிய அவரிடமிருந்து ஜீவனும் ஒளியும் மகிழ்ச்சியும் புறப்பட்டுப் பாய்ந்தோடும். நுண்ணிய அணுவிலிருந்து, மிகப்பெரிய உலகம் வரை உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தும் தங்கள் பூரண மகிழ்ச்சியிலும் அழகிலும் தேவன் அன்பாயிருக்கிறார் என்பதைப் பறைசாற்றுகிறது. ★